# எம்.ஏ. (தமிழ்) முதலாமாண்டு

# *DKT12* : இடைக்கால இலக்கியம்

## பக்தி இலக்கியம் - சிற்றிலக்கியம்

## உள்ளுறை


| கூறு | பாடம் | பக்கம் |
|---|---|---|
| அ. | **பக்தி இலக்கியம்** | |
| 1. | திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை (முதல் இருபதிகங்கள்)<br>திருநாவுக்கரசர் - நாலாம் திருமுறை (முதல் இருபதிகங்கள்) | 1-10<br>11-19 |
| 2. | சுந்தரர் - ஏழாம் திருமுறை (முதல் இருபதிகங்கள்)<br>மாணிக்கவாசகர் - திருவெம்பாவை | 20-28<br>29-34 |
| 3. | ஆண்டாள் - நாச்சியார் திருமொழி<br>தொண்டரடிப் பொடியாழ்வார் - திருப்பள்ளி எழுச்சி | 35-96<br>97-101 |
| 4. | பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி - முதல் பத்து மட்டும்<br>நம்மாழ்வார் - திருவாய்மொழி - முதல் பத்து மட்டும் | 102-144<br>145-189 |
| 5. | சிவவாக்கியார் - சிவவாக்கியார் பாடல் (முதல் 20 பாடல்கள்)<br>திருமூலர் - அன்புடைமை (முதல் பத்து மட்டும்) | 190-199<br>200-201 |
| ஆ. | **சிற்றிலக்கியம்** | |
| 6. | செயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி | 202-221 |

| | | |
|---|---|---|
| 7. | பகழிக்கூத்தர் - திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் | 222-285 |
| 8. | முக்கூடற்பள்ளு | 286-332 |
| 9. | நந்திக்கலம்பகம் | 333-366 |
| 10. | தமிழ்விடுதூது | 367-428 |
| | வினாவங்கி | 429-430 |

## முன்னுரை

# இடைக்கால இலக்கியம்

### பக்தி இலக்கியம்

'ஆங்கிலம் வணிகத்தின் மொழி; இலத்தீன் சட்டத்தின் மொழி; கிரேக்கம் இசையின் மொழி; செருமன் தத்துவத்தின் மொழி; பிரெஞ்சு தூதின் மொழி; இத்தாலி காதலின் மொழி என்று கூறுவது பொருந்தும். எனின் **தமிழ் பக்தியின் மொழி** என்று கூறுவதும் பொருந்தும்' என்று தனிநாயக அடிகளார் தெளிவுபடுத்துகிறார்.

களப்பிரர் காலத்திற்குப் பிறகு சோழர் ஆட்சியில் கி.பி.7,8,9-ஆம் நூற்றாண்டுகளில் 'ஆலயப் பணியே ஆண்டவன் பணி' என்னும் சிந்தனை வேரூன்றியது. சங்க இலக்கியங்கள் மன்னரையும் மக்களையும் பாடின. பக்தி இலக்கியங்கள் இறைவனையும் இறையடியாரையும் சிறப்பித்தன. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''திருநீறில்லாத நெற்றி பாழ்' என்னும் எண்ணம் மக்கள் மனத்தியில் ஊன்றப்பட்டது. நாடெங்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன. இயற்றப்பட்ட இலக்கிய வகைமைகளுள் அனைத்தும் சைவ சமயம் சார்ந்ததாகவே உருவாக்கப்பட்டன.

இறைவனைப் பற்றி சைவ அடியார்கள் பாடியுள்ள திருநூல்கள் 'திருமுறை' என வழங்கப்படுகின்றன. மொத்தம் பன்னிரு திருமுறைகள் உள்ளன.

## சிற்றிலக்கியம்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனையும் உணர்த்தி மக்களை நன்னெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும். உறுதிப்பொருள்கள் நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து கற்பனை, தெய்வப் போற்றல், தனிமனிதப் போற்றல், முதலானவற்றிற்கு மிகுதியும் இடம் தருவன சிற்றிலக்கியங்கள்.

சோழ, பாண்டியர் ஆட்சிக் காலங்களுக்குப் பிறகு தமிழகச் சூழலில் பல மாற்றங்கள் நேர்ந்தன. கி.பி.14-ஆம் நூற்றாண்டில் மாலிக்கபூர் தெற்கு நோக்கிப் படையெடுத்த காலச்சூழலில் பல அரசியல் குழப்பங்களைத் தோற்றுவித்தது. பின்னர் தோன்றிய விஜயநகரப் பேரரசு, நாயக்கர் ஆட்சிக் காலங்களில் தமிழ்ப்புலவர்களைத் தனிமனிதப் போற்றல் நிலைக்குத் தள்ளின. எனவே காப்பியங்களாகிய பேரிலக்கியங்கள் தோன்றாமல் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின.

சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை ஆகிய நூல்கள் கூறுகின்றன. வடமொழியாளர் சிற்றிலக்கியங்களைப் பிரபந்தங்கள் என்பர். பொதுவாக, நாயக்கர் காலம் சிற்றிலக்கிய காலம் என்பர். சிற்றிலக்கியக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பாட்டியல் நூல்கள் தொண்ணூற்று ஆறு என்னும் வரையறைக்குள் கொண்டு வருகின்றன. சிற்றிலக்கிய வகைகளுள் பள்ளு, குறவஞ்சி, தூது, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம் முதலானவை புகழ்பெற்றவை.

## இடைக்கால இலக்கியம்

## பக்தி இலக்கியம்

## திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை (முதல் இருபதிகங்கள்)

### தேவாரம்

### 1. திருப்பிரமபுரம்

**தல விளக்கம்:** காவிரி வடகரைத் தலம் -சீகாழி என்று வழங்கப்படுவது. திருஞான சம்பந்தர் திருஅவதாரம் செய்த பதி. ஞானப்பால் அருந்திப் பாடியது. இதற்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

**1. தோடுடைய செவியன்விடை யேறியோர்**
**தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப்பொடி பூசியென்**
**உள்ளங்கவர் களவன்**
**ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து**
**ஏத்தஅருள் செய்த**
**பீடுடைய பிரமாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

தோடு என்னும் அணியை அணிந்துள்ள, உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி, தூய வெண்மதியைக் சூடி திருவெண்ணீறு மேனியில் பொலிய என் உள்ளத்தைக் கவர்ந்தவன். அப்பெருமான், ஒரு காலத்தில் நான்முகனுடைய வழிபாட்டினை ஏற்று அருள்செய்தவன். அவனே எனக்குக் காட்சி தந்தருளியவன். அவன் இவனே அல்லவா!

**2. முற்றல்ஆமையினை நாகமோடுஏனம்**
**முளைக்கொம்பு அவை பூண்டு**
**வற்றரோடுகல னாப்பலி தேர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**கற்றல்கேட்டல்உடை யார்பெரியார்கழல்**
**கையால்தொழுது ஏத்தப்**
**பெற்றம்ஊர்ந்தபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

ஆமையோடு. நாகம் முதலானவைகளை ஆபரணமாகக் கொண்டு திருஓடு ஏந்தி பிச்சை கொள்ளும் சிவபெருமான், என் உள்ளத்தைக் கவர்ந்தவன். நல்ல நூல்களைக் கற்றுத்தேர்ந்தவர்களும், கேள்வி ஞானம் பெற்றவர்களும், திருத்தொண்டு செய்யும் பெரும்மக்களும் கரங்கூப்பி வணங்கி நிற்க இடபவாகனத்தில் காட்சி தரும் பெருமான் இவனல்லவா?

3. **நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்**
   **நிலாவெண் மதிசூடி**
   **ஏர்பரந்தஇன வெள்ளைசோரஎன்**
   **உள்ளம்கவர் கள்வன்**
   **ஊர்பரந்தஉல கின்முதலாகிய**
   **ஓரூர்இது என்னப்**
   **போர்பரந்தபிர மாபுரமேவிய**
   **பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

கங்கை தங்கும் சடையில் குளிர்ந்த வெண்ணிலவைச் சூடி, அழகிய வளைகள் கைகளிலிருந்து நழுவிச் செல்லுமாறு என் உள்ளத்தையும் மேனியையும் உருகச்செய்து கவர்ந்தவன் சிவபெருமான். உலகிலுள்ள ஊர்கள் யாவும் பிரளய காலத்தில் அழிந்தாலும், அழியாது எப்போதும் நிலவும் பிரமபுரத்தில் இருக்கும் பெருமான் இவனல்லவா!

4. **விண்மகிழ்ந்தமதில் எய்ததும்அன்றி**
   **விளங்குதலை யோட்டில்**
   **உண்மகிழ்ந்துபலி தேரியவந்தெனது**
   **உள்ளம்கவர் கள்வன்**
   **மண்மகிழ்ந்தஅர வம்மலர்க் கொன்றை**
   **மலிந்தவரை மார்பில்**
   **பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய**
   **பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

வானத்தில் பரந்து சென்று துன்புறுத்தும் தன்மையில் மகிழ்ச்சி கொண்ட முப்புரக்கோட்டைகளை எரித்ததும் அன்றி, பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்று என் உள்ளத்தைக் கொள்ளை

கொண்டு,அரவமும் கொன்றை மலரும் மார்பினில் பொலிய உமாதேவியை மகிழ்ந்து இடப்பாகத்தில் வைத்து பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

**5. ஒருமைபெண்மை உடை யன்சடையன்விடை**
**ஊரும்இவன் என்ன**
**அருமையாகஉரை செய்யஅமர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**கருமைபெற்றகடல் கொள்ள மதிந்ததோர்**
**காலம்இது என்னப்**
**பெருமைபெற்றபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில் அமரும் சிவபெருமான் அருமையான உரைகளைச் சொல்லும் பொருட்டு எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன். ஊழிக்காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

**6. மறைகலந்தஒலி பாடலோடு ஆடவர்**
**ஆகிமழு வேந்தி**
**இறைகலந்தஇன வெள்ளைசோரஎன்**
**உள்ளம்கவர் கள்வன்**
**கறைகலந்தபடி யார்பொழில்நீடுயர்**
**சோலைக்கதிர் சிந்தப்**
**பிறைகலந்தபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

வேத ஒலி முழங்க, பாடலுடன் ஆடலும் செய்து மழு ஏந்தி இருப்பவன் ஈசன். அவன் என்னுடைய கைகளில் உள்ள வளைகள் தாமே கழன்று விழும்படி என் உள்ளத்தைக் கவர்ந்து உருகச் செய்தவன். அடர்ந்த சோலைகள் திகழ்ந்து நறுமணம் வீசு நிலவின் தன்மையுடைய பிரம்மபுரத்தில் மேவிய பெருமான் இவனல்லவா!

**7. சடைமுயங்குபுன லன்அனலன்எரி**
**வீசிச்சதிர் வெய்த**
**உடையமுயங்குஅர வோடுஉழிதந்துஎனது**
**உள்ளம்கவர் கள்வன்**

**கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம்**

**பொன்னஞ்சிறகு அன்னம்**

**பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய**

**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

சடையில் கங்கையும் கரத்தில் நெருப்பும் ஒளிதந்து பெருமை கொள்ளவும், நாகமானது இறுகப்பற்றி உடலின் மீது திரியவும் காட்சி தந்து என் உள்ளத்தைக் கவர்ந்த சிவபெருமான், உப்பங்கழி பொருந்திய சோலையில் அன்னப்பறவைகள் தம் பேடைகளுடன் கூடியுள்ள பிரமாபுரத்தில் இருப்பவன். அவன் இவனல்லவா!

8. **வியர்இலங்குவரை உந்திய தோள்களை**

**வீரம்விளை வித்த**

**உயர்இலங்கைஅரை யன்வலிசெற்றுஎனது**

**உள்ளம்கவர் கள்வன்**

**துயர்இலங்கும்உல கில்பலஊழிகள்**

**தோன்றும்பொழுது எல்லாம்**

**பெயர்இலங்குபிர மாபுரமேவிய**

**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில் கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை அழித்து எனது உள்ளத்தைக் கவர்ந்த ஈசன், வினையின் கன்மத்தைச் சேர்த்துத் துயரை விளைவிக்கும் இந்த உலகில் ஊழிக்காலத்திலும் அழியாமல் நிலைத்து நின்று தனது சிறப்பினை நல்கும் பதியாகிய பிரமபுரத்தில் மேவியவன் அவன் இவனல்லவா!

9. **தாள்நுதல் செய்துஇற காணியாமலொடு**

**தண்தாமரை யானும்**

**நீணுதல்செய்துஒழிய நிமிர்ந்தான் எனது**

**உள்ளம்கவர் கள்வன்**

**வாள்நுதல்செய்மக ளிர்முதலாகிய**

**வையத்துவர் ஏத்தப்**

**பேணுதல்செய்பிர மாபுரமேவிய**

**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

திருவடியைப் காணத் திருமாலும் திருமுடியைக் காணப் பிரமனும் முயற்சி செய்ய, அவர்கள் செயல் பயனற்றவாகச் செய்யும் வகையில் நீண்டு வளர்ந்தவனாகிய ஈசன் எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். வாள்போன்ற நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் ஏத்தப் பேணிக்காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவன் அல்லவா!

**10. புத்தரோடுபொறி யில்சமணும்புறம்**
**கூறநெறி நில்லா**
**ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**மத்தயானைமறுக அவ்உரிபோர்த்ததோர்**
**மாயம்இது என்னப்**
**பித்தர்போலும்பிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே.**

**உரை:**

புலன் உணர்வுகளை நீத்த புத்தரும் சமணரும் நன்னெறியில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறிடினும் பிச்சையேற்று எனது உள்ளத்தைக் கவர்ந்து, செருக்குற்ற யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டு பின்னர் மாயை காட்டிப் பித்தனைப் போன்று பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

**11. அருநெறியமறை வல்லமுனியகன்**
**பொய்கையலர் மேய**
**பெருநெறியபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் தன்னை**
**ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்**
**பந்தன்உரை செய்த**
**திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை**
**தீர்தல்எளி தாமே.**

**உரை:**

மறைவல்ல பிரமன் பூசித்த பிரமாபுரும் மேவிய பெருமானை ஒன்றிய மனத்தினால் உணர்ந்து ஞானசம்பந்தன் உரைத்த திருநெறிய இத்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவருடைய தொல்வினை எளிதாகத் தீரும்.

## 2. திருப்புகலூர்

**தல விளக்கம்:**காவிரி தென்கரைத்தலம். திருநாவுக்கரசர் முத்தித்தலம். அக்னி பகவான் பூசித்தது. முருகநாயனார் திருஅவதாரம் செய்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கல்லைப் பொன்னாக்கி அற்புதம் நிகழ்த்திய இடம் இதுவே.

**12. குறிகலந்தஇசை பாடலினான்நசை**
**யால்இவ்உலகு எல்லாம்**
**நெறிகலந்ததொரு நீர்மையனாய்எருது**
**ஏறிப்பலி பேணி**
**முறிகலந்தொரு தோல்அரைமேல்உடை**
**யான்இடம்மொய்ம் மலரின்**
**பொறிகலந்தபொழில் சூழ்ந்துஅயலேபுயல்**
**ஆரும்புக லூரே.**

**உரை:**

பேரின்பத்தை நோக்கமாகக் கொண்டு இசைப்பாடலில் பொருந்தும் ஒருவனாய் இந்த உலகில் நன்னெறியை இழைக்கும் விருப்பத்தினாலும் தன்மையினாலும் இடப வாகனத்தில் வீற்றிருந்தும், பிச்சையேற்றும் தோலாடையை உடையவனாகிய ஈசன் விளங்கும் இருப்பிடமானது நறுமணம் கமழும் நீர்நிலை சூழ்ந்த திருப்புகலூர் ஆகும்.

**13. காது இலங்குகுழை யன்இழைசேர்திரு**
**மார்பன்ஒரு பாகம்**
**மாது இலங்குதிரு மேனியினான்கரு**
**மானின்உரி யாடை**
**மீதுஇலங்க அணிந்த தான்இமையோர்தொழ**
**மேவும்இடம் சோலைப்**
**போதுஇலங்குநசை யால்வரிவண்டுஇசை**
**பாடும்புக லூரே.**

**உரை:**

ஒரு காதில் குழையை உடையவன். பூணூல் இழையும் மார்பினன். உமாதேவியார் ஒரு பாகத்தில் விளங்கும் திருமேனி யுடையவன். யானையின் தோலை உரித்து மேலாடையாகக் கொண்டவன். அத்தகைய ஈசன் தேவர்கள் எல்லாம் தொழுது வணங்க இருப்பிடமாகக் கொண்ட இடம் சோலைகள் விளங்க வண்டுகள் இசைபாடும் புகலூர் ஆகும்.

14. **பண்நிலாவும்மறை பாடலினான்இறை**
**சேரும்வளை அங்கைப்**
**பெண்நிலாவஉடை யான்பெரியார்கழல்**
**என்றும்தொழுது ஏத்த**
**உள்நிலாவியா் சிந்தையுள்நீங்கா**
**ஒருவன் இடம் என்பர்**
**மண்நிலாவும்அடி யார்குடிமைத்தொழில்**
**மல்கும்புக லூரே.**

**உரை:**

பண் திகழும் வேதத்தினன். முன்கையில் வளையணிந்த அழகிய கரத்தையுடைய உமையம்மையை இடப்பாகத்தில் உடையவன். திருத்தொண்டர்களின் திருவடிகளைத் தொழுது போற்றும் சிந்தையுடையவர்களின் சிந்தையில் நீங்காது விளங்குபவன் ஈசன். அவன் விளங்கும் இடமானது வேளாண்மைத் தொழில் வளரும் புகலூர்.

15. **நீரின்மல்குசடை யன்விடையன்அடை**
**யார்தம்அரண் மூன்றும்**
**சீரின்மல்குமலை யேசிலையாக**
**முனிந்தான்உலக உய்யக்**
**காரின்மல்குகடல் நஞ்சமதுஉண்ட**
**கடவுள்இடம் என்பர்**
**ஊரின்மல்கிவளர் செம்மையினால்உயர்வு**
**எய்தும்புக லூரே.**

**உரை:**

நீரின் மேலதாகிய கங்கையைச் சடைமுடியில் கொண்டவன். இடப வாகனத்தை உடையவன். நன்மையடைய மாட்டாதவர்களாகிய மூன்று கோட்டைகளை உடைய அசுரர்களை, மேரு மலையை வில்லாகக் கொண்டு முனிந்தவன். உலகம் உய்தி பெறும் பொருட்டு பாற்கடலில் அமுதம் கடையும்போது தோன்றிய நஞ்சினை உண்டு கண்டத்தில் இருத்திக் காத்தவன். அவனுடைய இடம் ஊர்களில் திகழ்ந்து நல்லொழுக்கத்தினால் உயர்வு அடையம் புகலூர்.

16. **செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர்**
**சேரும்அடி யார்மேல்**
**பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத்து**
**என்றும்பணி வாரை**

**மெய்யநின்றபெரு மான்உறையும்இடம்**
**என்பர்அருள் பேணிப்**
**பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ**
**ருந்தும்புக லூரே.**

**உரை:**

தனது சிவந்த திருமேனியில் வெண்மை தோன்றுமாறு திருநீற்றைப் பூசுவர். தன்னை வணங்கும் அடியாரிடம் மெள்ள மெள்ளச் சேர்ந்து நின்ற தீவினையைச் சிதறி வெளியேறுமாறு செய்வர். தன்னைப் பணிந்து போற்றிப் பாடல்களால் துதி செய்யும் அடியார்பால் மெய்யாய் நின்றருளும் அப்பெருமான் உறையும் இடம், வாக்காலும் மனத்தாலும் பொய்மை கொள்ளாத மனத்தினர் பொருந்தி வாழும் புகலூர் ஆகும்.

17. **கழலின்ஓசைசிலம் பின்ஒலியோசை**
**கலிக்கப்பயில் கானில்**
**குழலின்ஓசைகுறள் பாரிடம்போற்றக்**
**குனித்தார்இடம் என்பர்**
**விழவின்ஓசைஅடி யார்மிடையுற்று**
**விரும்பிப்பொலிந்து எங்கும்**
**முழவின் ஓசைமுந் நீர்அயர்வுஎய்த**
**முழங்கும்புக லூரே.**

**உரை:**

ஒரு காலில் கழலொலியும் பிறிதொரு காலில் சிலம்பின் ஒலியும் எழுமாறு, குழலோசையைப் பூதங்கள் எழுப்ப நடனம் புரியும். சிவபெருமான் விளங்கும் இடமானது, திருவிழாக்களால் உண்டாகும் ஓசை அடியார்களை மகிழ்ச்சியுறுமாறு செய்கிறது. முழவின் ஓசை கடல் அலைகள் முழங்கும் ஓசையை வெல்லும் தன்மை கொண்டது புகலூர் ஆகும்.

18. **வெள்ளம் ஆர்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல்**
**விளங்கும்மதி சூடி**
**உள்ளம் ஆர்ந்தஅடி யார்தொழுதேத்த**
**உகக்கும்அருள் தந்துஎம்**
**கள்ளம்ஆர்ந்துகழி யப்பழிதீர்த்த**
**கடவுள்இடம் என்பர்**
**புள்ளைஆர்ந்தவய வின்விளைவால்வளம்**
**மல்கும்புக லூரே.**

**உரை:**

கங்கை பொருந்தி விளங்கும் சிவந்த சடை முடியின்மேல் பிறைமதி சூடிய ஈசன், பொருந்திய உள்ளத்தால் வணங்கிப் போற்றும் அடியவர்களுக்கு அவர்கள் மகிழுமாறு அருள்புரிபவன். அவன் எம் மருங்கும் மறைந்து நின்று துன்பத்தைத் தரும் மும்மலத்தை நீக்குபவன். அவனுடைய இடம் பறவைகள் தங்கும் நீர்வளம் நிலவளம் பெருகும் புகலூர் ஆகும்.

**19. தென்னிலங்கையரை யன்வரைபற்றி**
**எடுத்தான்முடி திண்தோள்**
**தன்இலங்குவிர லால்நெரிவித்துஇசை**
**கேட்டுஅன்றுஅருள் செய்த**
**மின்இலங்குசடை யான்மடமாதொடு**
**மேவும்இடம் என்பர்.**
**பொன்இலங்குமணி மாளிகைமேல்மதி**
**தோயும்புக லூரே.**

**உரை:**

தென்னிலங்கையின் அதிபதியாகிய இராவணன் கயிலாயமலையைப் பெயர்த்தெடுக்கும் போது அம்மலையின் மீது எழுந்தருளியுள்ள ஈசன், மலையைப் பெயர்த்த அரக்கனுடைய ஈசன், உறுதியான தோள்களும் நெரிய அடர்த்து, பின்னர் அவ்வரக்கன் பக்தியால் எழுப்பிய இசையில் மகிழ்ந்து அருள் புரிந்தான். அப்பெருமான் உமாதேவியுடன் மேவும் இடம் பொன்னும் மணியும் திகழும் மாளிகையின் மேல் குளிர்ந்த நிலவு தோயும் புகலூர்.

**20. நாகம் வைத்தமுடி யான்அடிகைதொழுது**
**ஏத்தும்அடி யார்கள்**
**ஆகம்வைத்தேபெரு மான்பிரமன்னொடு**
**மாலும்தொழுது ஏத்த**
**ஏகம் வைத்தளரி யாய்மிகவோங்கிய**
**எம்மான்இடம் போலும்**
**போகம்வைத்த பொழி லின்நிழலால்மது**
**ஆரும்புக லூரே.**

**உரை:**

நாகத்தைத் தரித்த ஈசன், தனது திருவடியைப் பணியும் அடியவர்களைத் தன்பால் பொருத்திக் கொள்பவன். அவன் பிரமனும் திருமாலும் போற்றுமாறு ஜோதி வடிவாய் வளர்ந்து ஓங்கியவன். அப்பெருமான் விளங்கும் இடமானது மகிழ்ச்சியைத் தரும் சோலைகள் திகழும் புகலூர் ஆகும்.

21. செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர்
செப்பில்பொருள் அல்லாக்
கைதவத்தர் மொழி யைத்தவிர்வார்கள்
கடவுள்ளிடம் போலும்
கொய்துபக்தர்மல ரும்பினலும்கொடு
தூவித்துதி செய்து
மெய்தவத்தின்முயல் வார்உயர்வானகம்
எய்தும்புக லூரே.

**உரை:**

நல்ல தவம் செய்தவர்களும், நன்றாகத் தேர்ந்து அறியும் பாங்குடையவர்களும், சாக்கியர்கள் கூறும் மெய்ப்பொருள் இல்லாத மற்றும் வஞ்சித்துத் துன்பம் தரும் மொழிகளை மனத்தில் கொள்ள மாட்டார்கள். பக்தர்கள் நன்னீரால் பூசித்தும், மென்மலரால் அருச்சித்தும் தோத்திரம் செய்து மெய்த்தவத்தில் விளங்க உயர் வானகம் எய்துவர். அதற்கு இடமாக இறைவன் உள்ள இடம் புகலூர்.

22. புற்றில்வாழும்அர வம்அரைஆர்த்தவன்
மேவும்புக லூரைக்
கற்றுநல்லஅவர் காழிஉண்ஞானசம்
பந்தன்தமிழ் மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர்
பரமன்அடி சேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழி யாப்புகழ்
ஓங்கிப்பொலி வாரே.

**உரை:**

நாகத்தைத் தரித்தவனாகிய ஈசன் மேவிய புகலூரை, கல்வியில் தேர்ந்த ஊராகிய சீர்காழியில் வாழும் ஞானசம்பந்தரின் திருப்பதிகத்தை விரும்பி எக்காலத்திலும் இசையுடன் பாடும் மக்கள் சிவபெருமான் திருவடியில் சேர்ந்து பொலிவார்கள். அத்தகையோர் குற்றம் இல்லாதவராகவும், குறைபாடு நீங்கியவராகவும் இருப்பார்கள். மேலும் அவர்கள் பெருகும் புகழுடன் விளங்குவார்கள்.

## திருநாவுக்கரசர் - நான்காம் திருமுறை (முதல் இருபதிகங்கள்)

### 1. திருவதிகைவீரட்டானம்

1. **கூற்றாயின வாறு விலக்ககிலீர்**
**கொடுமைபல செய்தன நான்அறியேன்**
**ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

வீரட்டானத்திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே! யான் இப்பிறப்பில் என் அறிவு அறியப் பல கொடுஞ்செயல்களைச் செய்தேனாக எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறாகச் சூலைநோய் யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றுனுள் டலாடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவளைப் போல அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர். அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன்.

2. **நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன**
**நினையாதொரு போதும் இருந்தறியேன்**
**வஞ்சம்இது வொப்பாது கண்டறியேன்**
**வயிற்றொடு துடக்கி முடக்கியிட**
**நஞ்சாகிவந் தென்னை நலிவதனை**
**நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்**
**அஞ்சேலும்என் னீர்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே! என் நெஞ்சத்தை உம்மிடத்திலேயே உறைவிடம் பெறுமாறு பண்படுத்திவிட்டேன். இதில் ஒருபொழுதும் உம்மை நினையாமல் இருக்கமாட்டேன். இச்சூலைநோயைப் போலக் காரணத்தைப் புலப்படுத்தாமல் காரியத்தில் செயற்படும் கொடுநோயை அடியேன் இதுகாறும்

அனுபவித்தறியேன். வயிற்றினொடு ஏனைய உள்ளுறுப்புக்களைக் காட்டி அவை செயற்படாமல் மடக்கியிடுவதற்கு விடம்போல வந்து என்னைத் துன்புறுத்தும் நோயை விரட்டியோ செயற்பாடு இல்லாமல் மறைத்தோ என்னைக் காப்பீராக. அஞ்சேல் என்று எனக்கு அருளுவீராக.

**3. பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்**
**படுவெண்டலை யிற்பலி கொண்டுழ்வீர்**
**துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற்**
**சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்**
**பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்**
**பெற்றம் ஏற்றுகந் தீசுற்றும்**
**வெண்டலைகொண்**
**டணிந்தீர்அடி கேள்கதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகை அம்மானே! உலகப் பற்றுக்களோடு இணைந்து இறந்தவர்களை எரித்த சாம்பலை உடலில் பூசிக்கொள்ள வல்ல பெருமானே! காளையை இவர்தலை விரும்புகின்றவரே! வெண்தலைமாலை அணிகின்றவரே! உம்மை வழிபடுபவர்களுடைய பாவங்களைப் போக்க வல்லீரே! இறந்துபட்டவருடைய மண்டையோட்டில் பிச்சை ஏற்றுத்திரிபவரே! உம்மையே பரம்பொருளாகத் துணிந்து உமக்கு அடிமை செய்து அடியேன் வாழக்கருதுதலின், துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக.

**4. முன்னம்அடி யேன்அறி யாமையினான்**
**முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்**
**பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன்**
**சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்**
**தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ**
**தலையாயவர் தங்கடன் ஆவதுதான்**
**அன்னநடையார் அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அன்னம்போன்ற நடை அழகை உடைய இளமகளிர் நிறைந்த அதிகை எம்மானே! இதற்குமுன் அடியேன் உம்மைப் பரம்பொருளாக அறிந்து உம் தொண்டில் ஈடுபடாமையால் தேவரீர் அடியேனை வெகுண்டமையால், சூலைநோய் என்னை வருத்திச் செயற்பட முடியாமல் செய்யவே, அதன் நலிவுக்கு ஆளாகிய பின்னர்

அடியேன் உமக்கு அடிமையாகி விட்டேன். அடியேனை வருத்தும் சூலைநோய்த் தவிர்த்து அருளவேண்டும். மேம்பட்டவர்களது கடமை தம்மைச் சரணமாக அடைந்துவர்களுடைய வினையைப் போக்குவது அன்றோ!

**5. காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்**
**கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி**
**நீத்தாய கயம்புக நூக்கியிட**
**நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்**
**வார்த்தையிது வொப்பாது கேட்டறியேன்**
**வயிற்றோடு துடக்கி முடக்கியிட**
**ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

ஆரவாரித்துப் பெருகும் கெடிலக் கரையிலமைந்த அதிகை வீரட்டானப் பெருமானே! குளத்தில் பிறர் இறங்காமல் பாதுகாத்துச் செயற்படுபவர் தம் காவலில் சோர்வு பட்டமையால், கரையில் நின்றவர்கள் இக்குளத்தின் ஆழத்தைக் கண்டு அனுபவிப்பாயாக என்று ஆழமான குளத்தில் விழுமாறு தள்ளிவிட, அக்குளத்தில் ஆழத்தில் நிலையாக நீந்திக் கொண்டிருக்கும் வழிமுறை என்றும் அறியாதேனாகிய அடியேன், சூலைநோய் வயிற்றோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டி என்னைச் செயற்பட முடியேனாகச் செய்ய, பெருமானாகிய நீயே எல்லாவினைகளையும் போக்கி அருளுவாய் என்ற வார்த்தையை இதற்குமுன் கேட்டு அறியாதேனாய் நாளை வீணாக்கினேன்.

**6. சலம்பூவொட தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்**
**உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்**
**உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்**
**அலந்தேன்அடி யேன்அதி கைக்கொடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகை.. அம்மானே! இறந்தவர் மண்டையோட்டில் பிச்சை எடுத்துத் திரியும் பெருமானே! என் உடலின் உள்ளாய் வருத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவாயாக, இனி அபிடேகத்தீர்த்தத்தையும் பூவையும் உனக்கு சமர்ப்பிப்பதனை

மறவேன். தமிழோடு இசைப்பாடலை மறவேன். இன்புறும் பொழுதிலும் துன்புறும் பொழுதிலும் உன்னை மறவேன். உன் திருநாமத்தை என் நாவினால் ஒலிப்பதனை மறவேனாய் இனி இருக்கிறேன்.

**7. உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்**
**ஒருவர் தலைகாவல் இலாமையினால்**
**வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்**
**வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்**
**பயந்தேயென் வயிற்றின் அகம்படியே**
**பறித்துப்புரட் டிஅறத் தீர்த்திடநான்**
**அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகை... அம்மானே! அடியேனுக்குத் தலைவராக இருந்து அடியேனை நெறி பிறழாமல் காப்பவர் ஒருவரும் நும்மையல்லாது இல்லாத காரணத்தினால் மனையிலிருந்து வாழும் இல்லற வாழ்க்கையிலும் அதற்கு வேண்டியதாய் நன்னெறியில் ஈட்டப்படும் பொருள் தேடும் செயலிலும் நீங்கினேன். என் வயிற்றினுள்ளே யான் அஞ்சுமாறு குடலைப் பறித்தெடுத்துப் புரட்டி அறுத்துச் சூலை நோய் உள் உறுப்புக்களை இழுக்க, அடியேன் தாங்க முடியாதவனாகி விட்டேன். இனி, உமக்குத் தொண்டனாகி நான் வாழக் கருதினால், அதற்கு ஏற்ப என்னைத் துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக,

**8. வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்**
**வஞ்சம் மனம்ஒன்றும் இலாமையினால்**
**சலித்தால்ஒரு வர்துணை யாருமில்லைச்**
**சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்**
**கலித்தேயென் வயிற்றின் அகம்படியே**
**கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன**
**அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகை.. அம்மானே!வெண்ணிறச் சங்கினால் ஆகிய குழை என்னும் காதணியை அணிந்துள்ள பெருமானே! அடியேன் மனத்தில் வஞ்சனை ஒன்றும் இல்லாமையினால் மனையின்கண் மகிழ்ந்துவாழும் வாழ்க்கையைக் காய்ந்தேன். சூலைநோய் அடியேன் வயிற்றகத்தே செருக்கிக் கலக்கி வயிற்றின் பகுதிகளை

மயக்கிக் கைக்கொண்டு துன்புறுத்தலால் அடியேன் உயிர் வாழ்தலை வெறுத்துவிட்டேன். வருந்தும்போது அடியேனுக்குத் துணையாவார் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. அடியேனை நோயினின்றும் காத்தருள்க.

**9. பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்**
**புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்**
**துன்பேகவ லைபிணி யென்றிவற்றை**
**நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்**
**என்போலிகள் உம்மை யினித்தெளயார்**
**அடியார்படு வதிது வேயாகில்**
**அன்பேஅமை யும்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

அதிகை.. அம்மானே! பொன்னார் மேனியினீர்! முறுக்குண்ட செஞ்சடையீர்! கலைகுறைந்த பிறையை உடையீர்! துன்பம் கவலை பிணி என்னும் இவை அடியேனை அணுகாமல் அவற்றை விரட்டுதலையும் மறைத்தலையும் செய்யீராயின் அடியேனைப் போன்றவர்கள் இப்பொழுது உங்களைத் துன்பம் துடைக்கும் பெருமானாராகத் தெளயமாட்டார்கள். எனினும்,உங்கள் அன்பே எங்கள் துயர்துடைத்து எங்களை அமைவுறச் செய்யும்.

**10. போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்**
**புறங்காடரங்காநட மாடவல்லாய்**
**ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ்**
**அடர்த்திட் டருள்செய்த அதுகருதாய்**
**வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்**
**என்வேதனை யான விலக்கியிடாய்**
**ஆர்த்தார்புனல் சூழ்அதிகைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

**உரை:**

ஆரவாரித்து நிரம்பும் நீரை உடைய கெடிலக் கரையிலமைந்த திருவதிகை வீரத்தானத்து உகந்தருளி உறையும் அம்மானே! பண்டு ஓர் யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தவனே! சுடுகாட்டையே கூத்தாடும் அரங்காகக் கொண்டு கூத்து நிகழ்த்துதலில் வல்லவனே! ஆரவாரித்துக் கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனை அப்பெரியமலையின் கீழ் நசுக்கிப்பின் அருள்செய்த

அதனை நினைத்துப்பார்த்து, வியர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தும் அடியேன் சூலை நோயினால் அனுபவிக்கும் துன்பங்களை நீக்கி அருள்வாயாக.

**11. சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும்பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம்வளாய அரவும் தமர்நாம்**
**அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

பொடியாக அமைந்த திருநீறாகிய வெள்ளிய சந்தனச்சேறும் முடிமணியாகிய ஒளிவீசும் பிறையும், அழகிய புலித்தோல் ஆடையும், வளர்கின்ற பவளக்கொடி போன்ற நிறமும், தலைமை பொருந்திய பாதுகாவலாக அமைந்த, பகைவரோடு மாறுபடும் காளையும், மார்பில் பரவியிருக்கின்ற பாம்புகளும், திண்ணிய கரையைக் கொண்ட பெரிய நீர்ப்பரப்பினதாகிய கெடிலயாற்று அபிடேகத்திற்குரிய தீர்த்தமும் உடைய ஒப்பற்ற அதிகை வீரட்டருடைய அடியேன் யாம். ஆதலின் எங்களுக்கு அஞ்சுதற்குரிய பொருள் யாதும் இப்பொழுது இல்லை. இனித் தோன்றப்போவதும் இல்லை.

**12. பூண்டதொர் கேழ லெயிறும்பொன்றிக ழாமை புரள**
**நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்துநிலாக்கதிர் போல**
**வெண்ணூலும் காண்டகு புள்ளின் சிறகுங்கலந்த கட்டங்கக் கொடியும்**
**ஈண்டு கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவது யாதொன்று மில்லைஅஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

அணிகலனாக அணிந்த மகாவராகத்தின் கொம்பும், நீண்ட திண்ணிய இடத்தோள் மீது வலப்புறமாகச் சுற்றி, பொன்போல் விளங்கும், ஆமை ஓட்டின் மீது புரண்டவாறு, நிலாப்போல் ஒளிவீசும் வெள்ளிய பூணூலும், காண்டற்கினிய கொக்கின் இறகும், தம்மொடு பொருந்திய மழுவின் வடிவம் எழுதப்பெற்ற கொடியும், பெருகிவரும் கெடிலயாற்றுத் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்சவருவதும் இல்லை.

**13. ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்**
**முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்**
**சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து**
**தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

தோளில் மாலையாக அணிந்த இளைய மார்பும், இரண்டாகிய தோள் பட்டிகையும், பலவடங்களாக அமைந்த முத்துமாலையினை இணைந்த உருத்திராக்கக் கண்டிகையும், மூன்று இலை வடிவாக அமைந்த முத்தலைச் சூலமும், சித்தவடம் என்ற பெயரிய சைவமடம் ஒன்றுடைய திருத்தலமும், மதில்கள் உயரமாக உடைய அதிகை நகரை ஒருபுறம் சூழ்ந்து இயங்கும் விரைந்து செல்வதும் கெடில நதித் தீர்த்தமும் உடைய பெருமானுடைய அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை.

**14. மடமான் மறிபொற் கலையு மழுப்பாம் பொருகையில் வீணை**
**குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயிலவும்**
**இடமால் தழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்**
**தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

ஒரு கையில் மான்குட்டி, ஒரு கையில் மான் தோல் ஆடை, ஒரு கையில் மழுப்படை, மற்றொரு கையில் பாம்பு, மற்றொரு கையில் வீணை இவற்றை உடையவராய், மேற்றிசைப் பெருமலையை ஒத்த திண்ணிய தோள்களும், வில் போல் வளைந்து ஆடுகின்ற கூத்தின் பயிற்சியும், பெரிய உலகங்களைத் தானமாக ஏற்ற சுவடுடைய திருமால் தழுவிப் பொருந்தியிருக்கும். இடப்பாகமும், நீர்த்துறைகள் அமைந்த கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிக வீரட்டரின் அடியேம் யாங்கள், ஆதலால் அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை.

**15. பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே**
**கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்**
**வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்**
**நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

பலப்பல விருப்பங்களை உடையவராய் அவற்றைச் செயல்படுத்தத்துடித்து விரையும் மக்களின் உள்ளத்தில் கலந்து பிறழச் செய்யும் கணபதியாகிய ஆண் யானையையும், இருளைப் போக்கும் வலிமை மிக்க சூரியன் சந்திரன் ஆகிய இரண்டு ஒளிகளையும், மேம்பட்ட கயிலை மலையையும், நன்மைகள் நிறைந்த கெடில நதித்தீர்த்தத்தையும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை.

16. **கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்**
**பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்**
**அரங்கிடை நூலறி வாள ரறியப் படாததொர் கூத்தும்**
**நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை.**

**உரை:**

உயிர்கள் அறியாதவாறு மறைந்து நின்று அடியார்க்கு ஒளிவீசும் திருவருளாகிய விளக்கின் ஒளியும், சுழலுகின்ற துடி என்ற இசைக்கருவியின் ஓசையும், எங்கும் பரவிய தேவகணத்தர் பதினெண்மரும் வேற்றிடங்களில் பழகி அறியாதன வாகிய பாட்டின் ஒலியும், கூத்துவல்லார் கூத்தாடும் அரங்கங்களில் கண்டு அறியப்படாததாகிய கூத்து நிகழ்ச்சியும், முறையாக ஓடிவரும் கெடில நதித் தீர்த்தத்தின் புனிதமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள் ஆதலின் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

17. **கொலைவரி வேங்கை யதளுஞ் குலவோ டிலங்குபொற் றோடும்**
**விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்**
**மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணியார்ந்த திலங்கு மிடறும்**
**உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

தம்மால் கொல்லப்பட்ட கோடுகளை உடைய புலித்தோலும், திரட்சியோடு விளங்கும் பொலிவுடைய தோடும், பெருவிலையுடைய சங்கினாலாகிய காதணியும், விலையே இல்லாத மண்டையோடாகிய உண்கலனும், பார்வதி தங்குமிடமாகக் கொண்ட மார்பும், நீலமணியின் நிறங்கொண்டு விளங்கும் கழுத்தும், ஒழுகுகின்ற கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேன் பாங்கள், ஆதலால் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

18. **ஆடல் புரிந்த நிலையும் அரையி லசைத்த அரவும்**
**பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி**
**நாடற் கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து**
**ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

கூத்தாடுதலை விரும்பிச் செய்த நிலையும், இடுப்பில் இறுக்கிக் கட்டிய பாம்பும், இசைக்கருவிகளை கைகளில் கொண்டு, பல ஆயிரக்கணக்கில் சூழ்ந்த பாடல்களில்

பழகிய பூதங்கள் பலவும், ஆராய்ந்து, அறியமுடியாத கூத்தும், மிக உயர்ந்த வீரட்டக் கோயிலை ஒரு பக்கத்தில் சுற்றி ஓடும் கெடில நதித்தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் யாங்கள், ஆதலில் அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

19. **சூழ மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்**
**யாழின் மொழியவ ளஞ்ச அஞ்சா தருவரை போன்ற**
**வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து**
**தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

பாம்பினால் சுற்றப்பட்ட ஆடையும், துணியிலிருந்து கிழித்தெழுக்கப்பட்ட அரைஞாணோடு கூடிய கோவணமும், யாழ் ஒலி போன்ற இனிய குரலை உடைய பார்வதி அஞ்சுமாறு அச்சமின்றிப் பெரிய மலை போன்று வந்த வேழத்தின் தோலை உரித்த காட்சியும், சோலைகள் மிகுந்த வீரட்டத்தை ஒருபுறம் சுற்றிப் பள்ளத்தில் பாயும் கெடில நதித் தீர்த்தமும் உடைய அதிகை வீரட்டரின் அடியேம் பாங்கள், ஆதலின் எங்களுக்கு அஞ்சுதற்குரிய பொருள் யாதும் இப்பொழுது இல்லை. இனித் தோன்றப் போவதும் இல்லை.

20. **நரம்பெழு கைகள் பிடித்து நங்கைநடுங்க மலையை**
**உரங்களெல் லாங்கொண்டெடுத்தானொன்பது மொன்று மலற**
**வரங்கள் கொடுத்தருள் செய்வான்வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து**
**நிரம்பு கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**உரை:**

பார்வதி நடுங்கும்படியாக நரம்புகளால் செயற்படும் கைகளைக் கோத்து தன் வலிமையை எல்லாம் ஒன்று சேர்த்துக் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனுடைய பத்துத் தலைகளும் கதறும்படியாக முதலில் அழுத்திப் பின் அவன் பாடிய சாமகானம் கேட்டு அவனுக்கு வரங்கள் கொடுத்து அருள் செய்த பெருமானாய், வளருகின்ற சோலைகளை உடைய வீரட்டக் கோயிலை ஒரு புறம் சுற்றி நீர் நிரம்பியுள்ள கெடில நதித் தீர்த்தத்தை உடைய அதிக வீரட்டரின் அடியேம் பாங்கள், அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை.

## சுந்தரர் - ஏழாம் திருமுறை (முதல் இருபதிகங்கள்)

### 1. திருவெண்ணெய்நல்லூர்

**1. பித்தாபிறை சூடிபெரு**
**மானேஅரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக்**
**கின்றேன்மனத்(து) உன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**அத்தாஉனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

பித்தனே! பிறையணிந்தவனே! பெருமையுண்டவனே! அருளாளனே! என் மனத்துள் எவ்வகையாலும் மறவாது உன்னை வைத்தாய்! பெண்ணையாற்றின் தென்திசையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் 'அருள்துறை' என்னும் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அத்தனே! முன்பே உனக்கு அடிமையாகி இப்பொழுது 'உனக்கு அடிமை அல்லன்' எனக் கூறுவது நன்றோ!

**2. நாயேன்பல நாளும்நினைப்**
**பின்றிமனத்(து) உன்னைப்**
**பேயாய்த்திரிந்(து) எய்த்தேன்பெற**
**லாகாவருள் பெற்றேன்**
**வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட் டுறையுள்**
**ஆயாஉனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

மூங்கில்கள் நெருங்கி வளரப் பெற்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய்நல்லூரிலுள்ள அருள்துறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தலைவனே! நாயனைய கீழ்மையான யான் உன்னை நீண்ட நாட்கள் மனத்தில் நினையாது பேய் போல் திரிந்து இளைத்தேன். (ஆனால் இன்றோ) பெறற்கரிய உன் திருவருளைப் பெற்றேன். இந்நிலையை எனக்கு அளித்த உனக்கு முன்பே அடிமையாகி, இனி 'உன் அடிமையல்லேன்' என எதிராடல் கூடுமோ?

3. **மன்னேமற வாதேநினைக்**

**கின்றேன்மனத்(து) உன்னைப்**

**பொன்னேமணி தானேவயி**

**ரம்மேபொரு நுந்தி**

**மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**

**நல்லூர்அருட் டுறையுள்**

**அன்னேஉனக்(கு) ஆளாய்இனி**

**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

கரையை மோதும் பொன்னையும், மணியையும், வயிரத்தையும் தள்ளிக்கொண்டு வரும் ஒளி மிகுந்த பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய்நல்லூரின் கண் அமைந்துள்ள அருள்துறையுள் எழுந்தருளியுள்ள தாயை ஒத்தவனே! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனக் கூறல் அழகோ! இனி உன்னை ஒருபோதும் என் மனத்தில் மறவாமல் நினைப்பேன்.

4. **முடியேன்இனிப் பிறவேன்பெறின்**

**மூவேன்பெற்றம் ஊர்தீ**

**கொடியேன்பல பொய்யேஉரைப்**

**பேனைக்குறிக் கொள்நீ**

**செடியார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**

**நல்லூர்அருட் டுறையுள்**

**அடிகேள்உனக்(கு) ஆளாய்இனி**

**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

இடப வாகனனே! (கரையில்) செடியில் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள திருவெண்ணெய்நல்லூர் அருள்துறையுள் எழுந்தருளியுள்ள தலைவரே! உனக்கு நான் பண்டே அடிமையாகி, இப்பொழுது ‘அடியேன் அல்லேன்’ என எதிர் வழக்காடல் முறையோ? (என் அறியாமையை நீ அகற்றித் தெளிவித்தமையால்) இனி நான் இறவேன். பிறவேன். (ஒரு வேளை பிறவியைப் பெறினும்) மூப்படைந்து வருந்தேன். பல பொய்யுரைக்கும் கொடியவனை என்னை நீ வெறாத குறி வைத்துக் காப்பாயாக.

5. **பாதம்பணி வார்கள்பெறும்**

**பண்டம்மது பணியாய்**

**ஆதன்பொருள் ஆனேன்அறி**

**வில் லேன்அரு ளாளா**
**தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆதீஉ னக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

அருளாளனே! மகரந்தம் நிறைந்த மலர்கள் கொண்ட பெண்ணை யாற்றின் தென்பால் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள அருள்துறையுள் வீற்றிருக்கும் முதல்வனே! உனக்கு நான் முன்பே அடிமையாகி இப்பொழுது 'அடிமை அல்லேன்' என எதிர் வழக்காடல் பொருந்துமோ! அப்பொருந்தாச் செயலைச் செய்தமையால் மூடன் என்னும் சொல்லுக்குப் பொருளானேன். அறிவற்றவனானேன். ஆயினும் உன் திருவடியை வணங்குவோர் பெறுதற்குரிய அறிவர் பெறும் பேற்றை அளிந்தருள்வாயாக.

6. **தண்ணார்மதி குடிதழல்**
**போலும்தரு மேனீ**
**எண்ணார்புரம் மூன்றும்எரி**
**உண்ணநகை செய்தாய்**
**மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**அண்ணாஉ னக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

தன்மை மிகுந்த பிறையைச் சூடியவனே! அனல் போன்ற திருமேனியை யொத்தவனே! உன்னை மதியாதவனின் முப்புரங்களையும் எரியுண்ணும்படி நகைத்தவனே! அணி செய்யப்பெற்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய்நல்லூர் அருள்துறையுள் எழுந்தருளியுள்ள அண்ணலே! இப்பொழுது உனக்கு யான் 'அடியேன் அல்லேன்' எனக் கூறல் பொருந்துமோ?

7. **ஊனாய்உ யிர் ஆனாய்உ டல்**
**ஆனாய்உல கானாய்**
**வானாய்நிலன் ஆனாய்கடல்**
**ஆனாய்மலை ஆனாய்**
**தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆனாய்உ னக்(கு) ஆளாய்இனி**

**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

தேன்நிறைந்த மலர்களைக் கொண்ட பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள திருவெண்ணெய்நல்லூர் அருள்துறையுள் அமர்ந்தோய்! தசையாய், உயிராய், தசையும் உயிரும் கொண்ட உடலாய், உலகமாய், வானாய், நிலனாய், கடலாய், மலையாகியும் நிற்கின்றாய். இப்பேராளனான உனக்கு யான் 'அடியவன் அல்லேன்' எனக கூறல் பொருந்துமோ?

**8. ஏற்றார்புரம் மூன்றும்எரி**
**உண்ணச்சிலை தொட்டாய்**
**தேற்றாதன சொல்லித்திரி**
**வேனோசெக்கர் வான்நீர்**
**ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆற்றாய்உனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

பெண்ணையாற்றின் தென்பால் திருவெண்ணெய்நல்லூர் அருள்துறையுள் குடிகொண்ட சிறப்புடையோய்! நின்னைப் பகையாகக் கொண்டு எதிர்த்தோரின் முப்புரங்களையும் எரி உண்ண விற்பிடித்தவனே! செவ்வானம்போல் சிவந்த சடையில் ஆகாய கங்கைத் தாங்கினாய். இப்பெருமைகளை அறியாயான் அறியாமையால் தெளிவற்ற சொற்களைச் சொல்லி வீணே உழலலாமோ? அடிமைக்கு மாறாது 'அடியவன் அல்லேன்' எனக் கூறல் இழுக்கல்லவா?

**9. மழுவாள்மலர் ஏந்தீமறை**
**ஓதிமங்கை பங்கா**
**தொழுவார்அவர் துயர்ஆயின**
**தீர்த்தல்உன் தொழிலே**
**செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**அழகாஉனக்(கு) ஆளாய்இனி**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

மழுவாகிய வாளினை வலப்பக்கத்தில் ஏந்தியவனே! செழுமையாய் ஒழுகின்ற பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய்நல்லூர் அருள்துறையுள் அமைந்த

அழகனே! மறைய ஓதுபவனே! உமையைப் பாகமாகக் கொண்டவளே! உன்னைத் தொழுவாரின் துன்பங்களை ஒழித்தலையே தொழிலாகக் கொண்டவனே! இத்தகு பெருமை பெற்ற உன்னிடம் 'யான் அடிமையல்லேன்' எனக் கூறல் பொருந்துமோ?

10. **காரூர்புனல் எய்திக்கரை**
**கல்லித்திரைக் கையால்**
**பாரூர்புகழ் எய்தித்திகழ்**
**பான்மாமணி உந்திச்**
**சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**ஆரூரன்எம் பெருமாற்காள்**
**அல்லேன்எனல் ஆமே.**

**உரை:**

மேகத்தினின்றும் வீழ்கின்ற நீரானது திரண்டு வந்து, அலைகளாகிய கைகளால் கரையைத் தோண்டி, உலகம் முழுவதும் பரவிப் புகழ்கொண்டு, ஒளிமிகுந்த பலவாகிய பெரிய மணிகளைத் தள்ளி, சிறப்புப் பொருந்திய பெண்ணையாற்றின் தென்பால் அமைந்துள்ள அருள்துறை எனும் திருக்கோயிலிற் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு ஆரூரனாகிய 'யான் அடிமையல்லேன்' என எதிர் வழக்காடல் சிறந்ததோ?

### 3. திருத்துறையூர்

1. **மலையார் அருவித் திரள்மா மணிஉந்திக்**
**குலையாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**கலையார் அல்குற்கன் னியர்ஆடும் துறையூர்த்**
**தலைவா உனைவேண்டிக் கொள்வேன்தவ நெறியே.**

**உரை:**

மலைகளில் பொருந்தியுள்ள அருவிக் கூட்டங்கள் பெரிய மணித்திரள்களைக் கொண்டு வந்து எறியும் ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபால், மேகலை அணியப்பெற்ற அல்குலைக் கொண்ட இளம்பெண்கள் நீராடும் துறைகள் சூழ்ந்த திருத்துறையூரில் எழுந்தருளியுள்ள தலைவனே! உன்னையடைதற்குரிய தவநெறியையே உன்னிடம் வேண்டிக் கொள்வேன்.

2. **மத்தம் மதயா னையின்வெண் மருப்புந்தி**
**முத்தங் கொணர்ந் தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**பத்தர் பயின்றேத்திப் பரவும் துறையூர்**

**அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

**உரை:**

மிகுந்த மதங்கொண்ட யானைகளின் வெண்மையான கொம்புகளிலுள்ள முத்துக்களைக் கொண்டுவந்து எறிவதாகிய ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபால், அடியார்கள் பக்தியால் நெருங்கி நின்று போற்றி வணங்குகின்ற, திருத்துறையூர்த் தந்தையே! உன்னையடைதற்குரிய தவநெறி ஒன்றையே உன்னிடம் வேண்டுவேன்.

**3. கந்தங் கமழ்கா ரகில்சந்த தனம்உந்திச்**
**செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால்**
**மந்தி பலமா நடமாடும் துறையூர்**
**எந்தாய் உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

**உரை:**

நல்மணம் கமழ்கின்ற அகில்கட்டைகளையும், சந்தனமரங்களையும் தள்ளிக்கொண்டு வருகின்ற சிவந்த குளிர்ச்சி பொருந்தி பெண்ணையாற்றின் வடபால், பெண் குரங்குகள் பெரு நடனம் செய்கின்ற திருத்துறையூர் எந்தாய்! தவநெறி ஒன்றையே உன்னிடம் வேண்டிக்கொள்வேன்.

**4. அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச்**
**சுரும்பாரக் கொணர்ந் தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**கரும்பார் மொழிக்கன் னியர் ஆடும் துறையூர்**
**விரும்பா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

**உரை:**

அரும்புகள் நிறைந்த மல்லிகை, சண்பக மலர்கள் மலரும் மரங்களை முரித்து, அவற்றில் வண்டுகள் நிறைந்திருக்கும் நிலையில் கொணர்ந்து வீசும் பெண்ணையாற்றின் வடபால், கருப்பஞ்சாற்றினையொத்த மொழிகளையுடைய கன்னி மகளிர் மூழ்கித் திளைக்கின்ற திருத்துறையூர் விருப்பனே! உன்னை அடைதற்குரிய தவநெறி ஒன்றியையே வேண்டுவேன.

**5. பாடாந் தனமாவும் பலாக்க ளும்சாடி**
**நாடார வந்தேற்றி யோர்பெண்ணை வடபால்**
**மாடார்ந் தனமா ளிகைசூழுந் துறையூர்**
**வேடா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

உரை:

பக்கங்களில் நிறைந்து இருப்பவனாகிய மா, பலா மரங்களையும், முரித்து, நாடுநிறையும்படி வீசும் பெண்ணையாற்றின் வடபால், செல்வச் செழிப்பால் அமையப்பெற்ற மாளிகைகள் சூழ்ந்த திருத்துறையூர் வேடனே! உன்னை யான் வேண்டிக் கொள்வது தவநெறி ஒன்றினையேதான்.

**6. மட்டார் மலர்க்கொன் றையும்வன்னி யுஞ்சாடி**
**மொட்டாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**கொட்டாட் டொடுபாட் டொலிஓவாத் துறையூர்ச்**
**சிட்டா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

உரை:

தேன் நிரம்பியுள்ள மலர்களையுடைய கொன்றை, வன்னி ஆகிய மரங்களை முரித்து, அவற்றின் அரும்புகளை மிகுதியாகக் கொண்டு வந்து வீசும் பெண்ணையாற்றின் வடபால், கொட்டாட்டுடன், பாட்டொலியும் இடைநீங்காது ஒலிக்கும் திருத்துறையூர்ச் சிட்டானே! உன்னை யான் வேண்டுவது தவநெறி ஒன்றினையேதான்.

**7. மாதார் மயிற்பீ லியும்வெண் ணுரைஉந்தித்**
**தாதாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**போதார்ந்தன் பொய்கைகள் சூழுந் துறையூர்**
**நாதா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

உரை:

விருப்பத்தைத் தருகின்ற மயில் இறகினையும், வெண்மையான நுரையையும் தள்ளி மகரந்தத்தை நிறையக் கொணர்ந்து எறிவதாகிய வெண்பெண்ணையாற்றின் வடபால் மலர்கள் மிகுந்த பொய்கைகள் சூழப்பெற்ற திருத்துறையூர் நாதா! உன்னை யான் வேண்டுவது தவநெறி ஒன்றியையேதான்.

**8. கொய்யா மலர்க்கோங் கொடுவேங் கையுஞ்சாடிச்**
**செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்**
**மையார் தடங்கண் ணியர்ஆடும் துறையூர்**
**ஐயா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

உரை:

பறிப்பதற்கு அரிய மலர்களையுடைய கோங்கு, வேங்கை ஆகிய மரங்களை முரித்து வயல்கள் நிரம்பும்படி கொண்டுவந்து வீசும் பெண்ணையாற்றின் வடபால் மை தீட்டப்பெற்ற பெருங்கண்களைக் கொண்ட மகளிர் நீராடும் திருத்துறையூர் ஐயா! உன்னை யான் வேண்டுவது தவநெறி ஒன்றினையேதான்.

**9. விண்ணார்ந்தன மேகங்கள் நின்றுபொழிய**
**மண்ணாரக் கொணர்ந்தெற்றி யோபெண்ணை வடபால்**
**பண்ணார்மொழிப் பாவையர் ஆடும் துறையூர்**
**அண்ணா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

**உரை:**

விண்ணகத்தே நிரம்பவனவாகிய மேகங்கள் மேல் நின்று பொழிய, அதனால் வரும் பொருள்களை நிரம்பக் கொண்டுவந்து நிலத்தில் எறிவதாகிய பெண்ணையாற்றின் வடபால் பண்போலும் சொற்களைப் பேசும் மகளிர் நீராடுகின்ற திருத்துறையூர் அண்ணா! உன்னை யான் வேண்டுவது தவநெறி ஒன்றினையேதான்.

**10. மாவாய்ப் பிளந்தாலும் மலர்மிசை யானும்**
**ஆவா அவர்தேடித் திரிந்தல மந்தார்**
**பூவார்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்த்**
**தேவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.**

**உரை:**

மலர்கள் மிகுந்த பொய்கைகள் சூழப்பெற்ற திருத்துறையூர்த் தேவா! குதிரையின் வாயினைப் பிளந்தவனான திருமாலும், மலர் மேல் இருப்பவனாகிய நான்முகனும் ஆகிய அவ்விருவரும் அந்தோ! தேடித்திரிந்து தவித்தனர். மலர்கள் நிறைந்ததாகிய பொய்கைகள் சூழ்ந்த திருத்துறையூர்த் தேவனே! உன்னிடம் தவநெறி ஒன்றினையே நான் வேண்டுவேன்.

**11. செய்யார் கமலம் மலர்நாவலூர் மன்னன்**
**கையால் தொழுதேத்தப் படுந்துறை யூர்மேல்**
**பொய்யாத் தமிழ்ஊரன் உரைத்தன வல்லார்**
**மெய்யே பெறுவார்கள் தவநெறி தானே.**

**உரை:**

வயல்களில் மிகுதியான தாமரை மலர்கள் நிரம்பிய திருநாவலூர்ச் சுந்தரனும், மெய்ம்மையே கூறும் தமிழ்ப்பாடல்களை உரைக்கும் நம்பியாரூரனும், அனைவராலும் கையால் தொழுது ஏத்தப்படும் திருத்துறையூரிலுள்ள இறைவன் மீது பாடிய பாடல்களை நன்கு பயில்வார்கள் தவநெறியைப் பிறழாது பெறுவர்.

## மாணிக்கவாசகர் - திருவெம்பாவை

திருவண்ணாமலையில் அருளியது

(துயிலுணர்த்துதல்)

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏகம்இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூக மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகைகாய் முன்வந் தெறிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவர்ய வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டர்ற பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை யெல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

4. ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கோ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்.

5. மால்அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க யேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குள் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடலோர் எம்பாவாய்.

7. அன்னே இவையுஞ் சிலவோ பலஅமர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னாங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோர் எம்பாவாய்.

நீராடச் செல்லுதல்

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரனாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

11. பொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

நீராடுதல்

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
        தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
  கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
        காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
  வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
        ஆர்ப்பர வஞ்செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
  பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
        ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
        அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
  தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
        எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
  பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
        சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
  கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
        பங்கப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
        கோதை குழலாட வண்டின் குழாமாடச்
  சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
        வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
  சோதி திறம்பாடிக் சூழ்கொன்றைத் தார்பாடி
        ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
  பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
        பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமாள்
        சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
  நீரொருகால் ஓவா நெடுந்தாை கண்பனிப்பப்
        பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
  பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
        ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
  வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி

ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17. செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கம் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கும் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

18. அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ ற்றார்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

வேண்டுகோள்

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமாள் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க

கங்கும்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

வாழ்த்து

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றயெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

## ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

## நாச்சியார் திருமொழி

### 1-ஆம் திருமொழி தையொரு திங்களும்

### ‘கண்ணனை இணக்கு’ எனக் காமனைத் தொழுதல்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### (சாவேரி ராகம் - ஆதி தாளம்)

**1. தையொரு திங்களும் தரைவிளக்கித்**
**தண்மண் டலமிட்டு மாசிமுன்னாள்**
**ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து**
**அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா!**
**உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி**
**உன்னையும் உம்பியையும் தொழுதேன்**
**வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை**
**வேங்கட வற்குஎன்னை விதிக்கிற்றியே!**

**தெளிவுரை:**

காம தேவனே! தை மாதம் முழுவதும் நீ எழுந்தருள வேண்டிய இடத்தைச் சோதித்துக் குளிர்ந்த மண்டலகாரத்தை இட்டு மாசி மாதத்தின் முதல் பட்சத்தில் (முதல் இரண்டு வாரங்கள்) நுண்ணிய மணலால் நீ எழுந்தருளும் வீதிகளை நன்றாய் அலங்காரம் செய்து, காமனைத் தொழுதால் நாம் நற்கதி பெறுவோமா எனக் கருதி, காமனாகிய உன்னையும் உன் தம்பியான சாமனையும் வணங்கினேன். நெருப்புப்பொறிகளை உமிழும் ஒப்பற்ற சக்கரத்தைக் கையில் அணிந்துள்ள திருவேங்கடம் உடையானுக்கு என்னைத் தொண்டு செய்ய விதிப்பாயாக!

**2. வெள்ளைநுண் மணற்கொண்டு தெரு அணிந்து**
**வெண்வரைப் பதன்முன்னம் துறைபடிந்து**
**முள்ளும்இல் லாச்சுள்ளி எரிமடுத்து**
**முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!**
**கள்ளவழிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு**
**கடல்வண்ணன் என்பதோர் பேர்எழுதி**
**புள்ளினை வாய்பிளந் தான்என்பது ஓர்**
**இலக்கினில் புகஎன்னை எய்கிற்றியே!**

**தெளிவுரை:**

மன்மததேவனே! வெள்ளை நுண்மணல் கொண்டு, தெருவை அலங்கரித்து, கிழக்கு வெளுப்பதற்கு முன் நீர்த்துறைகளில் மூழ்கி முள் இல்லாத கள்ளிகளை நெருப்பிவிட்டு முயற்சி செய்து உன்னைக் குறித்து நோன்பு நோற்கின்றேன். தேன் பொருந்திய மலர் அம்புகளைத் தொடுத்துக் கொண்டு கடல்வண்ணன் என்ற பெயரை அம்மலர் அம்பில் எழுதிக்கொண்டு பகாசுரனுடைய வாயைப் பிளந்தவன் பக்கலில் நான் சென்று அடையும்படி என்னை நீ சேர்ப்பாயாக.

**3. மத்தநன் னறுமலர் முருக்கமலர்**
**கொண்டுமுப் போதும்உன் அடிவணங்கி**
**தத்துவம் இலியென்று நெஞ்செரித்து**
**வாசகத்து அழித்துன்னை வைதிடாமே**
**கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு**
**கோவிந்தன் என்பதோர் பேர்எழுதி**
**வித்தகன் வேங்கட வாணன் என்னும்**
**விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே!**

**தெளிவுரை:**

காமதேவா! நறுமணமுள்ள ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு மூன்று காலங்களிலும் உன் அடியை வணங்கி உன் பெருமைகளை அறியாமல் உன்னை நிந்திக்காதபடி மலர் அம்புகளை வில்லில் தொடுத்துக் கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி அற்புதமான திருவேங்கடமுடையான் என்ற விளக்கில் நான் சேரும்படி என்னை நீ விதிப்பாயாக!

**4. சுவரில் புராண! நின் பேர் எழுதிச்**
**சுறவநற் கொடிக்களும் துரங்கங்களும்**
**கவரிப் பிணாக்களும் கருப்புவில்லும்**
**காட்டித்தந் தேன்கண்டாய் காமதே வா!**
**அவரைப் பிராயம் தொடங்கி என்றும்**
**ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுதுவைத் தேன் ஒல்லை விதிக்கிற்றியே!**

**தெளிவுரை:**

நெடுநாள்களாக எனக்கு உபகாரம் செய்பவனே! மன்மதனே! சுவரில் உன் பெயர்களை எழுதி சுறா மீன் கொடிகளையும் குதிரைகளையும் சாமரம் வீசுகின்ற பெண்களையும் கரும்பு வில்லையும் உனக்கு உரியவையாகத் தந்தேன். இளம்பருவம் முதல் அந்தக் கண்ணபிரானையே விரும்பி, கிளர்ந்த எனது பருத்த தனங்கள் துவாரகைக்குத் தலைவனான அக்கண்ணபிரானுக்கே உரியவை என்று எண்ணங்கொண்டு உன்னைத் தொழுதேன். இந்த விருப்பத்தை நீ விரைவில் நிறைவு செய்வாயாக!

**5. வானிடை வாழும்அவ் வானவர்க்கு**
**மறையவர் வேள்வியில் வகுத்தஅவி**
**கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து**
**கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப**
**ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று**
**உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்**
**மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்**
**வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!**

**தெளிவுரை:**

மன்மதனே! சுவர்க்க லோகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்கு என்று மறையவர் வேள்வியில் கொடுத்த அவிசைக் காட்டில் திரிகின்ற ஒரு நரி புகுந்து கடந்தும் மோந்தும் கொடுப்பது போல, தனது திருமேனியில் சக்கரத்தையும் சங்கையும் அணிந்துள்ள உத்தமர்க்கு என்று ஆதரவுடன் கிளர்ந்த எனது பருத்த தனங்களை அவரைத் தவிர மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் நான் உயிருடன் இருக்க மாட்டேன்.

அவி-அவிக தேவர் உணவு, வேள்விப்பொருள்.

**6. உருவுடையார்இளை யார்கள்நல்லார்**
**ஓத்துவல் லார்களைக் கொண்டு வைகல்**
**தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்**
**திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!**
**கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன்**
**கருவிளை போல்வண்ணன் கமலவண்ணத்**
**திருவுடை முகத்தினில் திருக்கண்களால்**
**திருந்தவே நோக்கெனக்கு அருள்கண்டாய்**

**தெளிவுரை:**

மன்மதனே! அழகும் இளமையும் உள்ளவர்களை முன்னிட்டு நாள்தோறும் நீ வரும் வழியில் எதிரே நின்று பங்குனி மாதத்துப் பெரிய திருநாளில் நல்ல அறிவுடனே உன்னைக் குறித்து நோன்பு நோற்கின்றேன். கருவுடை முகில் வண்ணனும், காயாவண்ணனும், கருவிளைபோல் வண்ணனுமான, கண்ணபிரான் தன் திருக்கண்களால் என் பொருட்டு அருள்பாவிக்கும்படி செய்வாயாக.

**7. காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்**
**கட்டி அரிசி அவல்அமைத்து**
**வாயுடை மறையவர் மந்திரத்தால்**
**மன்மதனே உன்னை வணங்குகின்றேன்**
**தேயமுன் அளந்தவன் திரிவிக்கிரமன்**
**திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்**
**சாயுடை வயிறும் என் தடமுலையும்**
**தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே!**

**தெளிவுரை:**

மன்மதனே பசுங்காய் நெல்லும் கரும்பும் சமைத்து அதனோடு கூட கரும்புக் கட்டியும் பச்சரிசியும் அவலும் ஆகிய இவற்றையும் சமைத்து, வாயுடை மறையவர் மந்திரத்தால் உன்னை வணங்குகின்றேன். மூவுலகும் மாவலிபால் அபகரிக்கப்பட்ட காலத்தில் எல்லா உலகங்களையும் திருவடிகளால் அளந்தவனும் திருவிக்கிரமன் என்னும் பெயருடையவனுமான கண்ணபிரான் என்னுடைய ஒளியை யுடைய வயிற்றையும் மென்தடம் தனங்களையும் தனது கைகளால் தொட்டுப்பார்த்து இவ்வுலகில் நிலைக்கின்ற புகழை நான் பெறும்படி தந்தருள்வாயாக.

**8. மாசுடை உடம்பொடு தலையுலறி**
**வாய்ப்புறம் வெளுத்தொரு போதும் உண்டு**
**தேசுடைத் திறலுடைக் காமதேவா!**
**நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்**
**பேசுவது ஒன்றுண்டு இங்கு எம்பெருமான்!**
**பெண்மையைத் தலையுடைத் தாக்கும் வண்ணம்**
**கேசவ நம்பியைக் கால்பிடிப்பான்**
**என்னும்இப் பேறுஎனக்கு அருள்கண்டாய்**

**தெளிவுரை:**

தேசுடையவனும் திறல் உடையவனும் எனக்குத் தலைவனுமான மன்மதனே! அழுக்குப் படிந்த உடம்போடு கூட தலைமயிரை விரித்துக் கொண்டு வாய்புறம் வெளுத்து ஒருவேளை உண்டு நான் தோற்கின்ற நோன்பை நீ ஞாபகத்தில் வைக்க வேண்டும். இப்போது சொல்ல வேண்டுவது ஒன்று உள்ளது. அதைச் சொல்லுகிறேன் கேள். என்னுடைய பெண்மையைத் தலையுடைத்து ஆக்கும் வண்ணம் கண்ணபிரானுக்குக் கால்பிடிப்பவன் இவள் என்ற இந்தப் பேற்றை எனக்கு அருள் செய்வாயாக.

**9. தொழுதுமுப் போதும்உன் அடிவணங்கித்**
**தூமலர் தூய்த்தொழுது ஏத்துகின்றேன்**
**பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே**
**பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்**
**அழுதுஅழுது அமைந்துஅம் மாவழுங்க்**
**ஆற்றவும் அதுஉனக்கு உறைக்கும் கண்டாய்**
**உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து**
**ஊட்டமின் றித்துரந் தால்ஒக்குமே.**

**தெளிவுரை:**

காலை நண்பகல் மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் உன்னைத் தொழுது வணங்கி, உன் பாதங்களில் மலர் இட்டுப் போற்றி நான் துதிக்கிறேன். பார்கடல் வண்ணனுக்குக் குற்றம் ஒன்றும் இல்லாமல் பணிசெய்து வாழப்பெறாவிடில் அழுது அழுது தடுமாறி 'அம்மா!' என்று கதறிக்கொண்டு திரிய, அப்படி என்னைத் துடிக்க விடுவது மிகவும் உன் தலை மேல் ஏறும். உன்னை விட்டுவிட்டு ஏர் உழுகின்ற ஓர் எருதை நுகத் தடியால் தள்ளித் தீனியில்லாமல் ஒட்டுவதைப் போல் ஆகும்.

**10. கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்**
**கழலினை பணிந்தங்கோர் கரியலற**
**மருப்பினை ஒசித்துப்புள் வாய்பிளந்த**
**மணிவண்ணற்கு என்னை வகுத்திடென்று**
**பொருப்பன்ன மாடம்பொ விந்துதோன்றும்**
**புதுவையார் கோன்விட்டு சித்தன்கோதை**
**விருப்புடை யின்தமிழ் மாலைவல்லார்**
**விண்ணவர் கோனடி நண்ணுவரே.**

**தெளிவுரை:**

கரும்பு வில்லையும் மலர் அம்புகளையும் உடைய மன்மதனுடைய இரண்டு பாதங்களையும் வணங்கிக் குவலயாபீடம் என்ற யானையின் கொம்பை முறித்தவனும் பகாசுரனுடைய வாயைக்கீண்டு எறிந்தவனும், நீலமணி போன்ற நிறத்தவனுமான கண்ணபிரானுக்கு என்னை அடிமைப்படுத்த வேண்டும் என்று, மாடங்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளவர்களுக்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளாகிய ஆண்டாள் அருளிச்செய்த விருப்பம் அடியாகப் பிறந்த இனிய தமிழ் மாலையாகிய இப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளை அடைவர்.

## 2-ஆம் திருமொழி – நாமம் ஆயிரம்

## சிறுமியர் மாயனைத் தம் ‘சிற்றில் சிதையேல்’ எனல்

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## (யமுனா கல்யாணி ராகம் - திரிபுடை தாளம்)

**1. நாமம் ஆயிரம் எத்தநின்ற நாராயணா! நரனே! உன்னை**
**மாமிதன்மக னாகப் பெற்றால் எமக்குவாதை தவிருமே**
**காமன்போதரு காலம் அன்று பங்குனி நாள்கடை பாரித்தோம்**
**தீமைசெய்யும் சிரீதரா! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே.**

**தெளிவுரை:**

நாமத்தால் ஆயிரம் பெயர்களால் தேவர்கள் துதிக்கும்படி நின்ற நாராயணனே! மானிட உடல் கொண்டவனே! உன்னைக் கணவனாகப் பெற்றால் நாங்கள் நலிவு படாதிருக்க முடியுமோ? மன்மதன் வருங்காலமென்று பங்குனி மாதத்தில் அவன்வரும் வழியைக் கோடித்தோம். குறும்புகளைச் செய்கின்ற ஸ்ரீய: பதியான கண்ணபிரானே! நாங்கள் இழைக்கின்ற மணற் சிற்றிலை வந்து நீ அழிக்க வேண்டா.

(சிற்றில் - இளம்பெண்கள் மணலில் கட்டும் சிறுவீடு)

**2. இன்று முற்றும் முதுகுநோவ இருந்திழைக்க இச்சிற்றிலை**
**நன்றும்கண்ணுற நோக்கிநாங்கொளும் ஆர்வந்தன்னைத் தணிகிடாய்**
**அன்று பாலக னாகி ஆலிலை மேல்துயின்றஎம் ஆதியாய்!**
**என்றும் உன்தனக்கு எங்கள் மேலிரக் கம்எழாததுஎம் பாவமே.**

**தெளிவுரை:**

இன்று முழுவதும் முதுகு நோகும்படி உட்கார்ந்து கொண்டு செய்த இந்தச் சிற்றிலை நன்றாக நீ பார்த்து எங்கள் விருப்பத்தைத் தணியச் செய்வாயாக. பிரளய காலத்தில் பாலகனாகி ஆலந்தளிரின் மேல் கண்வளர்ந்தருளிவனும் எமக்குத் தலைவனுமான கண்ணபிரானே! எக்காலத்திலும் உனக்கு எம்மிடத்தில் இரக்கம் எழாதது நாங்கள் செய்த பாவத்தின் பயனேயாகும்.

**3. குண்டு நீருறை கோளரீ! மத யானை கோள்விடுத் தாய்! உன்னைக்**
**கண்டுமாலுறுவோங்களைக் கடைக் கண்ணகளால் இட்டு வாதியேல்**
**வண்டல் நுண்மணல் தெள்ளியாம் வளைக் கைகளால்சிரமப்பட்டோம்**
**தெண்திரைக்கடல் பள்ளியாய்! எங்கள் சிற்றில்வந்து சிதையேலே.**

**தெளிவுரை:**

மிக்க ஆழமுடைய கடலில் பள்ளிகொண்டுள்ள சிங்கம் போன்றவனே! கஜேந்திரன் என்னும் யானைக்கு முதலையால் நேர்ந்த துன்பத்தைத் தொலைத்தவனாகிய கண்ணபிரானே! உன்னைப் பார்த்து ஆசைப்படுகின்ற எங்களைக் கடைக்கண்களால் பார்த்து இம்சிக்க வேண்டா. நாங்கள் வண்டலில் உள்ள சிறிய மணல்களை வளையல்கள் அணிந்த கைகளால் புடைத்து மிகவும் துன்புற்றோம். தெளிந்த அலைகளையுடைய திருப்பாற்கடலைப் படுக்கையாக உடையவனே! எங்கள் சிற்றிலைச் சிதைக்காதே!

4. **பெய்யுமாமுகில் போல்வண்ணா! உன்றன் பேச்சும் செய்கையும் எங்களை**
   **மைய வேற்றி மயக்கஉன் முகம் மாயமந்திரந் தான்கொலோ?**
   **நொய்யர் பிள்ளைகள் என்பதற்குன்னை நோவநாங்கள் உரைக்கிலோம்**
   **செய்யதாமரைக் கண்ணினாய்! எங்கள் சிற்றில்வந்து சிதையேலே.**

**தெளிவுரை:**

பெய்யும் மாமுகில் போல் வண்ணா! உன்னுடைய மாயச்சொல்லும் செயலும் எங்களை மயங்க வைத்து அறிவு மயங்குவதற்கு உன்னுடைய முகம் மாயமோ மந்திரமோ? இவர்கள் சிறுமியர் என்று நீ சொல்லுவாய் என்று பயப்பட்டு நாங்கள் உன்னைக் குறித்து நெஞ்சு புண்படும்படி ஒன்றும் சொல்லவில்லை. செய்யதாமரைக் கண்ணினாய்! வந்து எங்கள் சிற்றிலைச் சிதைக்காதே.

5. **வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில் விசித்திரப்பட வீதிவாய்த்**
   **தெள்ளிநாங்கள் இழைத்த கோலம் அழித்தியாகிலும் உன்றன்மேல்**
   **உள்ளம்ஓடி உருகல் அல்லாமல் உரோடம் ஒன்றும் இலோம்கண்டாய்**
   **கள்ள மாதவா! கேசவா! உன் முகத்தன கண்கள் அல்லவே.**

**தெளிவுரை:**

கபடச் செயல்களையுடைய கண்ணபிரானே! கேசவனே! நாங்கள் வெளுத்து சிறுத்த மணல்களைக் கொண்டு தெருவில் அனைவரும் கண்டு அதிசயப்படும்படி தெளிந்து கட்டின சிற்றிலாகிற கோலத்தை அழித்துவிட்டாய். என்றாலும் உன்மீது எங்களுக்குச் சினம் இல்லை. உன் முகத்தில் உள்ளவை கண்கள் அல்லவா!

6. **முற்றிலாதபிள் ளைகளோம் முலைபோந்திலா தோமை நாள்தொறும்**
   **சிற்றில் மேலிட்டுக் கொண்டு நீசிறிது உண்டு திண்ணென நாமது**
   **கற்றிலோம் கடலையடைத்துஅரக் கர்குலங்களை முற்றவும்**

**செற்று இலங்கையைப் பூசலாக்கிய சேவகா! எம்மை வாதியேல்.**

**தெளிவுரை:**

கடலை அடைத்து, அரக்கர் குலம் முழுவதையும் களைந்து ஒழித்து இலங்கையை அழித்த செயல்வீரனே! இளம் சிறுமியர்களாய்த் தனங்களும் தோன்றாத எங்களை நாள்தோறும் சிற்றில் சம்பந்தமாய் நீ செய்யும் அற்பச் செயல்களை நாங்கள் பெரிதாகப் பாராட்டவில்லை. எங்களை நீ துன்பப்படுத்த வேண்டா.

7. **பேதம் நன்கறிவார்க ளோடுஇவை பேசினால் பெரிதின்சுவை**
 **யாதும் ஒன்றறி யாதபிள்ளை களோமை நீ நலிந்து என் பயன்?**
 **ஓதமா கடல்வண்ணா! உன்மண வாட்டிமாரொடு சூளுறும்**
 **சேதுபந்தம் திருத்தினாய்! எங்கள் சிற்றில்வந்து சிதையேலே.**

**தெளிவுரை:**

உன் பேச்சின் தன்மையை நன்றாக அறிய வல்லவர்களோடு வைத்துக்கொண்டால் நல்லது, ஒன்றும் அறியாத சிறு பெண்களான எங்களை வருந்துவதனால் என்ன பயன்? அலைகளையுடைய பெரிய கடலை யொத்த நிறமுடைய கண்ணபிரானே! சேதுபந்தனம் செய்தவனே! உன்னுடைய பத்தினிகளின் மேல் ஆணை. எங்கள் சிற்றிலைச் சிதைக்காதே.

சூழறும் என்றொரு பாடமும் உண்டு.

8. **வட்டவாய்சிறு தூதையோடு சிறுகளகும்மண லும்கொண்டு**
 **இட்டமா விளையாடு வோங்களைச் சிற்றில் ஈடழித்து என்பயன்!**
 **தொட்டு தைத்து நலியேல் கண்டாய்ச்சுடர்ச் சக்கரம்கையில் ஏந்தினாய்!**
 **கட்டியும் கைத்தால் இன்னாமை அறிதியே கடல் வண்ணனே!**

**தெளிவுரை:**

பிரகாசமான சக்கராயுதத்தைக் கையில் ஏந்திய கண்ணபிரானே! வட்டமான வாயையுடைய சிறிய மட்டகலத்தோடு சிறிய முச்சிலையும் மணலையும் கொண்டுவந்து விரும்பியவாறு விளையாடுகிற எங்களுடைய சிற்றிலைக் கலைத்து விடுவதால் என்ன பயன்? கையால் தொட்டும் காலால் உதைத்தும் எங்களுக்குத் துன்பம் செய்யாதே, மனம் கசந்து போனால், கருப்புக்கட்டியும் ருசியாது என்பதை அறிவாய் அன்றோ?

9. **முற்றத்தூடு புகுந்துநின் முகம்காட்டிப் புன்முறு வல்செய்து**
 **சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ? கோவிந்தா!**

**முற்ற மண்ணிடம் தாவிவிண்ணுற நீண்டளந்து கொண்டாய்! எம்மைப்**
**பற்றி மெய்ப் பிணக்கு இட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவர் என்சொல்லார்?**

**தெளிவுரை:**

கோவிந்தா! ஒரு திருவடியினால் பூமண்டலம் முழுவதையும் தாவியளந்து, பரமபதத்து அளவும் ஓங்கி, மற்றொரு திருவடியினால் மேல் உலகங்களை அளந்து கொண்டவனே! நாங்கள் தனியாக விளையாடுகிற முற்றத்தில் நுழைந்து உனது திருமுகத்தைக் காண்பித்து, புன்முறுவல் செய்து எங்கள் சிற்றிலையும் நெஞ்சையும் அழிக்கலாமோ? அதோடு அல்லாமல் எங்களோடு மெய்ப்பிணக்கு இட்டக்கால் அருகில் இருப்பவர்கள் என்ன சொல்ல மாட்டார்கள்?

(மெய்ப்பிணக்கு இட்டக்கால் - தொட்டுப் பழகினால்)

**10. சீதைவாய் அமுதம் உண்டாய்! எங்கள் சிற்றில்நீ சிதையேல் என்று**
**வீதிவாய் விளையாடும் ஆயர் சிறுமியர்மழ லைச்சொல்லை**
**வேதவாய்த் தொழிலாளர்கள் வாழ்வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன்தன்**
**கோதைவாய்த் தமிழ் வல்லவர் சூறை வின்றிவை குந்தம் சேருவரே.**

**தெளிவுரை:**

சீதா பிராட்டியினுடைய வாய் அமுதத்தைப் பருகியவனே! எங்கள் சிற்றிலைச் சிதைக்காதே என்று வீதியில் விளையாடுகின்ற ஆயர்குலப் பெண்களுடைய மழலைச் சொல்லை உட்கொண்டு, வேதம் ஓதுகின்றவர்கள் வாழ்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வாருடைய திருமகளான ஸ்ரீஆண்டாளுடைய தமிழ்ப்பாசுரங்களை ஓத வல்லவர்கள் குறைவில்லாமல் வைகுந்தம் சேரப்பெறுவர்.

## 3-ஆம் திருமொழி – கோழி யழைப்பதன் முன்னம் கன்னியரோடு கண்ணன் விளையாடல்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### (செஞ்சுருட்டி ராகம் - அட தாளம்)

1. **கோழியழைப்பதன் முன்னம் குடைந்துநீர் ஆடுவான்போந்நோம்!**
**ஆழியஞ் செல்வன் எழுந்தான் அரவணை மேல்பள்ளி கொண்டாய்**
**ஏழைமை மாற்றவும் பட்டோம் இனியென்றும் பொய்கைக்கு வாரோம்**
**தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித்தரு ளாயே.**

**தெளிவுரை:**

பாம்புப் படுக்கையின்மேல் பள்ளிகொண்டாய். குளத்தில் மூழ்கி நீராடுவதற்காகக் கோழி கூவுவதற்கு முன் இவ்விடம் வந்தோம். இப்போது சூரியன் உதித்தான். ஆற்றவும் ஏழைமைப்பட்டோம். இனிமேல் என்றைக்கும் குளத்திற்கு நாங்கள் வரப்போவதில்லை. தோழியும் நானும் தொழுதோம். எங்களுடைய சேலைகளைத் தந்தருள்வாயாக!

2. **இதுஎன் புகுந்தது இங்கு அந்தோ! இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்!**
**மதுவின் துழாய்முடி மாலே! மாயனே! எங்கள் அமுதே!**
**விதியின்மையால் அது மாட்டோம் வித்ததகப் பின்னாய்! விரையேல்**
**குதிகொண்டு அரவில் நடித்தாய்! குருந்திடைக் கூறை பணியாய்.**

**தெளிவுரை:**

இங்கே நீ வந்ததற்குக் காரணமென்ன? இக்குளத்திற்கு எவ்வழியால் வந்தாய்! திருத்துழாய் மாலையணிந்த பெரியோனே! மாயனே! எங்கள் அமுதே! விதி இன்மையால் சேர்க்கைக்கு இசைய மாட்டோம். வித்தகப் பிள்ளாய்! அவசரப்பட வேண்டா. காளிய நாகத்தின் மேல் குதித்துக் கொண்டு நர்த்தனம் செய்தவனே! அந்தக் குருந்த மரத்தின்மேல் வைத்திருக்கிற சேலைகளைக் கொடுத்தருள்வாயாக!

3. **எல்லே! ஈதுஎன்ன இளமை? எம்மனை மார்காணில் ஒட்டார்**
**பொல்லாங்குஈ தென்று கருதாய் பூங்குருந் தேறியிருத்தி**
**வில்லால் இலங்கை அழித்தாய்! நீ வேண்டியது எல்லாம் தருவோம்**
**பல்லாரும் காணாமே போவோம் பட்டைப் பணித்தரு ளாயே.**

**தெளிவுரை:**

வில்லால் இலங்கையை நாசம் செய்தவனே! என்னே! இது என்ன பிள்ளைத்தனம்! எங்களுடைய தாய்மார்கள் கண்டால் எங்களை வீட்டில் சேர்க்கமாட்டார்கள். நீயோ என்றால் கண்டார் எல்லாம் ஏகம்படி எங்களை நிர்வாணமாக்கி நிறுத்தி யிருக்கிற இதனைப் பொல்லாத காரியமென்று நினைக்கவில்லை. குருந்த மரத்தின்மேல் ஏறியுள்ளாய். நீ வேண்டியது எல்லாம் கொடுக்கிறோம். ஊரார் காணாதபடி போகிறோம். எங்களுடைய பட்டுச் சேலைகளைக் கொடுத்தருள்வாயாக.

4. **பரக்க விழித்தெங்கும் நோக்கிப் பலர்குடைந்து ஆடும்சுனையில்**
   **அரக்க நில்லா கண்ணநீர்கள் அலமரு கின்றவா பாராய்**
   **இரக்கமேல் ஒன்றும் இலாதாய்! இலங்கை அழித்த பிரானே!**
   **குரக்க அரசு ஆவது அறிந்தோம் குருந்திடைக் கூறை பணியாய்!**

**தெளிவுரை:**

இலங்கையை அழித்த பிரானே! பல பெண்கள் படிந்து நீராடும் இப்பொய்கையின் கரையில் கண்ணீர்த் தாரைகள் அடக்கினாலும் நிற்க மாட்டாதவையாய்த் தளும்புகிறநிலையை நாற்புறத்திலும் நன்றாக விழித்து உற்று நோக்கு. சிறிதும் தயவு இல்லாதவனே! நீ குரங்கு அரசு ஆவது அறிந்தோம். குருந்த மரத்தின் மேலுள்ள எங்கள் சேலைகளைக் கொடுப்பாயாக.

(குரக்கரசு – மாமேறுயல்லார்க்குத் தலைவன்)

5. **காலைக் கதுவிடு கின்ற கயலொடு வாளை விரவி**
   **வேலைப் பிடித்தென்ன மார்கள் ஓட்டில்என் னவிளையாட்டோ?**
   **கோலச் சிற்றாடை பலவும் கொண்டுநீ யேறி இராதே**
   **கோலங் கரிய பிரானே குருந்திடைக் கூறை பணியாய்.**

**தெளிவுரை:**

கருநிறமுள்ள கண்ணபிரானே! கயல்மீன்களும் வாளை மீன்களும் ஒன்றாய்க் கூடி எமது கால்களைக் கடிக்கின்றன. இதைக் கேள்விப்பட்டு எங்கள் தமையன் மார்கள் வேலைப்பிடித்துக் கொண்டு உன்னைத் துரத்திவிட்டால் அது என்ன விளையாட்டாய் முடியும்? நீ அழகிய சிற்றாடைகளையெல்லாம் வாரிக்கொண்டு குருந்த மரத்தின்மேல் எறியிராமல் எங்கள் சேலைகளைத் தருவாயாக!

6. **தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் தாள்கள் எங்காலைக்கதுவ**
**விடத்தேன் எறிந்தாலே போல வேதனை யாற்றவும் பட்டோம்**
**குடத்தை எடுத்தேற விட்டுக் கூத்தாட வல்லஎங் கோவே!**
**படிற்றைஎல் லாம் தவிர்ந்து எங்கள் பட்டைப் பணித்தருளாயே.**

**தெளிவுரை:**

விசாலமான தாமரைப் பொய்கையில் தாமரைத் தண்டுகள் எங்கள் கால்களைக் கடிக்கத் தேள் கொட்டினாற்போல மிகவும் வேதனைப்பட்டோம். குடங்களைத் தூக்கி உயர எறிந்த இப்படிக் குடக்கூத்தை ஆடுவதற்கு வல்ல எம் தேவனே! நீ செய்கிற குறும்புகளை யெல்லாம் விட்டு எங்கள் பட்டைத்தருவாயாக!

7. **நீரிலே நின்றயர்க் கின்றோம் நீதியல் லாதன செய்தாய்**
**ஊரகம் சாலவும் சேய்த்தால் ஊழிஎல்லாம் உணர்வானே!**
**ஆர்வம் உனக்கே யுடையோம் அம்மனை மார்காணில் ஒட்டார்**
**போரவிடாய் எங்கள் பட்டைப் பூங்குருந் தேறியி ராதே.**

**தெளிவுரை:**

ஊழிக்காலத்தில் எல்லாம் உணர்ந்திருப்பவனே! நீரில் நின்று இன்னல்படுகின்றோம். அநீதியான செயல்களைச் செய்கின்றாய். இதைவிட்டுச் செல்லலாம் என்றால் எங்கள் ஊராகிய ஆய்ப்பாடியும் மாளிகைகளும் மிகவும் தொலைவில் இருக்கின்றன. நீ இப்படிச்செய்த போதிலும் உன்மீது அன்புடையோம். எங்கள் தாய்மார் காணில் இசைய மாட்டார்கள். எங்களுடைய சேலைகளைத் தந்தருளாய்! குருந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டு தீமைகளைச் செய்யாதே!

8. **மாமிமார் மக்களே யல்லோம் மற்றும் இங்கு எல்லாரும் போந்தார்**
**தூமலர்க் கண்கள் வளரத் தொல்லை யிராத்துயில் வானே!**
**சேமமேல் அன்றிது சாலச் சிக்கென நாம்இது சொன்னோம்**
**கோமள ஆயர்கொ ழுந்தே! குருந்திடைக் கூறை பணியாய்.**

**தெளிவுரை:**

பழையஇரவுகளில் தூமலர் கண்கள் துயல்வோனே! இப்பொய்கைக் கரையில் நிற்பவர்கள் உனக்குத் தேவிமாராகும் முறையில் உள்ளார் மாத்திரம் அல்லோம். மற்ற முறையில் உள்ளவர்களும் வந்துள்ளார்கள். நீ செய்கிற இந்தக் குறும்பு மிகவும் தகுதியில்லாதது. இளங்கொழுந்து போன்றவனே! குருந்த மரத்தின் மேல் உள்ள சேலைகளைத் தருவாயாக! (மாமிமார் மக்கள் - மனைவிகள்)

9. **கஞ்சன் வலைவைத்த அன்று காரிருள் எல்லில் பிழைத்து**
**நெஞ்சுதுக் கம்செய்யப் போந்தாய் நின்றஇக் கண்ணியரோமை**
**அஞ்சு உரப்பான் அசோதை ஆணாட விட்டிட்டு இருக்கும்**
**வஞ்சகப் பேய்ச்சிபால் உண்ட மகிமையிலீ! கூறை தாராய்.**

**தெளிவுரை:**

கம்சன் உன்னை அழிக்க நினைத்தபோது, மிகவும் இருண்ட இரவில் தப்பிப்பிழைத்து, நிர்வாணமாக நிற்கின்ற இளம்பெண்களான எங்களுக்கு மிக்க துன்பத்தைச் செய்ய வந்துபிறந்தாய். யசோதையோ என்றால் நீ அஞ்சுமாறு உன்னைக் கண்டிக்க மாட்டாள். உன்னை வம்பனாய் வளரவிட்டிருக்கிறார்கள். வஞ்சனையாக வந்த பூதனையின் தனத்தில் கரந்த பாலையும் அவள் உயிரையும் உறிஞ்சியுண்ட நேர்மை யில்லாதவனே! சேலைகளைத் தந்தருள்.

(மகிமை இலீ - வெட்கங் கெட்டவனே!)

10. **கன்னிரோடு எங்கள் நம்பி கரிய பிரான்விளை யாட்டை**
**பொன்னியல்மாடங்கள் சூழ்ந்த புதுவையர் கோன்பட்டன் கோதை**
**இன்னிசை யால்சொன்ன மாலை ஈரைந்தும் வல்லவர் தாம்போய்**
**மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பாரே.**

**தெளிவுரை:**

எங்கள் நம்பி கரியபிரான் ஆயர் சிறுமியரோடு செய்த லீலைகளைக் குறித்து ஒளிமிக்க மாடங்களால் சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருக்குத் திருமகளான ஆண்டாள் இனிய இசையால் அருளிச் செய்த சொல்மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்க வல்லவர்கள் வான்வழி சென்று வைகுந்தத்தை அடைந்து அங்குமன்னிய மாதவனோடு இருக்கப்பெறுவர்.

**4-ஆம் திருமொழி – தெள்ளியார் பலர்**

**கூடல் குறிப்பு**

**கலிவிருத்தம்**

**(கேதார ராகம் - அட தாளம்)**

1. **தெள்ளி யார்பலர் கைதொழும் தேவனார்**
   **வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனார்**
   **பள்ளி கொள்ளும் இடத்தடி கொட்டிட**
   **கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே.**

**தெளிவுரை:**

கூடல் தெய்வமே! தெளிவுடைய பக்தர்கள் பலர் கைதொழும் தேவனார் வள்ளல் திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளி யிருக்கின்ற மணவாளப் பிள்ளையாகிய பரமபுருஷன் பள்ளி கொண்டிருக்கும் இடத்தில் அவனுடைய திருவடிகளை நான் பிடிக்கும் படியாக அவன் திருவுள்ளம் பற்றுவானாகில் நீ கூட வேண்டும்.

2. **காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்**
   **வாட்டம் இன்றி மகிழ்ந்துறை வாமனன்**
   **ஓட்டரா வந்தென் கைப்பற்றி தன்னொடும்**
   **கூட்டு மாகில்நீ கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

கூடலே! காட்டிலுள்ள திருவேங்கட மலையிலும் நகரமாகிய திருக்கண்ணபுரத்திலும் மனக்குறையில்லாமல் திருவுள்ளம் உகந்து உறைகின்ற வாமனாவதாரம் செய்த எம்பெருமாள் ஓடி வந்து என்னுடைய கையைப் பிடித்துத் தன்னோடு அணைத்துக் கொள்வானாகில் நீ கூட வேண்டும்.

3. **பூம கன்புகழ் வானவர் போற்றுதற்கு**
   **ஆம்ம கன் அணி வாணுதல் தேவகி**
   **மாமகன் மிகு சீர்வக தேவர்தம்**
   **கோம கன்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

பூவிற் பிறந்த பிரமனும் தேவர்களும் கீர்த்தியைப் பாடித் துதிப்பதற்குத் தகுந்த புருஷோத்தமனாய், தேவகியினுடைய சிறந்த புத்திரனாய் நற்குணங்களையுடைய வசுதேவர் மகனாகிய கண்ணபிரான் என்னை அணைக்க வருவானாகில் கூடலே! கூடிடு.

4. **ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிட**
   **பூத்த நீள்கடம்பு ஏறிப் புகப்பாய்ந்து**
   **வாய்த்த காளியன் மேல்நட மாடிய**
   **கூத்தனார்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

ஆயர்குல மங்கையரும் ஆயரும் அஞ்சும் படியாக மலர்ந்து உயர்ந்துள்ள கடப்ப மரதின் மேல் ஏறி அங்கிருந்து எழும்பிக் குதித்துக் காளிய நாகத்தின் மேல் நர்த்தனம் செய்த கண்ணபிரான் வருகை தருவானாகில் கூடலே! கூடிடு.

5. **மாட மாளிகை சூழ்மது ரைப்பதி**
   **நாடி நந்தெருவின் நடுவே வந்திட்டு**
   **ஓடை மாமத யானை உதைத்தவன்**
   **கூடு மாகில் நீ கூடிட கடலே!**

**தெளிவுரை:**

நெற்றிப்பட்டத்தையுடைய மதங்கொண்ட குவலாய பீடம் என்னும் யானையை உதைத்தவனாகிய கண்ணபிரான் மாட மாளிகை சூழ் மதுரை மாநகரில் நம் வீட்டைத் தேடிக்கொண்டு நம்முடைய வீதியின் நடுவில் வந்து நம்மொடு கூடுவானாகில் கூடலே! கூடிடு.

6. **அற்றவன்மரு தம்முறி யநடை**
   **கற்றவன் கஞ்சனை வஞ் சனையின்**
   **செற்றவன் திகழும் மதுரைப்பதி**
   **கொற்றவன்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

ஏற்கனவே எனக்கு அற்றுத் தீர்ந்தவனாய் மருத மரங்கள் முறிந்து விழும்படியாகத் தவழ்நடை நடக்கக் கற்றவனாய், கம்சனை வஞ்சனையினால் கொன்று முடித்தவனாய் விளங்கும் மதுரைப்பதி கொற்றவன் வருவானாகில் கூடலே! கூடிடு.

7. **அன்றுஇன் னாதன செய்சிசு பாலனும்**
**நின்ற நீள் மருதும் எருதும்புள்ளும்**
**வென்றி வேல்விறல் கஞ்சனும் வீழ முன்**
**கொன்ற வன்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

முன்பு தீய செயல்களைச் செய்துவந்த சிசுபாலனும், வழியிடையே நின்ற இரட்டை மருத மரங்களும், ஏழு காளைகளும், பகாசுரனும், வென்றி வேல் விறல் கம்சனும் முடிந்து விழும்படியாக எல்லார் கண் எதிரிலும் கொன்று ஒழித்த கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

8. **ஆவலன்புடை யார்தம் மனத்தன்றி**
**மேவலன் விரை சூழ்துவ ராபதிக்**
**காவலன் கன்றுமேய்த்து விளையாடும்**
**கோவ லன்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

ஆவலையும் அன்பையும் உடையவர்களுடைய நெஞ்சம் தவிர மற்ற எந்த இடத்திலும் பொருந்தாதவனும், விரைசூழ்துவராபதிக் காவலனும், கன்று மேய்த்து விளையாடும் கோவலனுமாகிய கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

9. **கொண்ட கோலக் குறள் உருவாய்ச் சென்று**
**பண்டு மாவலி தன்பெரு வேள்வியில்**
**அண்டமும் நிலனும் அடி யொன்றினால்**
**கொண்ட வன்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

முற்காலத்தில் வாமன உருவங்கொண்டு மகாபலியினுடைய சிறந்த யாக சாலைக்குச் சென்று மேல் உலகங்களையும் கீழ் உலகங்களையும் ஒவ்வோர் அடியால் அளந்து கொண்ட திரு விக்கிரமன் வருவானாகில் கூடலே! கூடிடு.

10. **பழகு நான்மறையின் பொருளாய் மதம்**
**ஒழுகு வாரணம்உய்ய அளித்த எம்**
**அழகனாற் அணியாய்ச் சியர் சிந்தையுள்!**
**குழக னார்வரில் கூடிடு கூடலே!**

**தெளிவுரை:**

நான்கு வேதங்களின் உட்பொருளாய் இருப்பவனும், மதநீர் ஒழுகிக் கொண்டிருந்த கஜேந்திரன் என்னும் யானையைக் காப்பாற்றியவனும், எம்மை ஈடுபடுத்த வல்ல அழகனும், ஆய்ச்சியர்களின் உள்ளங்கையில் நிறைந்திருப்பவனுமான கண்ணபிரான் வருவானாகில் கூடலே! கூடிடு.

11. **ஊடல் கடல் உணர்தல் புணர்தலை**
    **நீடுநின்ற நிறைபுகழ் ஆய்ச்சியர்**
    **கூட லைக்குழற் கோதைமுன் கூறிய**
    **பாடல் பத்தும் வல் வார்க்கு இல்லை பாவமே.**

**தெளிவுரை:**

ஊடல் கூடல் உணர்தல் புணர்தல் என்னும் செயல்களில் அநாதியாக நீடித்துப் பொருந்திநின்ற ஆயர்குலப் பெண்கள் இழைத்த கூடலைப் பற்றி கோதையான ஆண்டாள் அருளிச்செய்த பத்துப்பாட்டுகளையும் ஓதவல்லவர்களுக்குப் பாவம் இல்லையாம்.

**5-ஆம் திருமொழி – மன்னு பெரும் புகழ்**

**குயிற் பத்து**

**எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**(ஆனந்த பைரவி ராகம் - ஆதி தாளம்)**

**1. மன்னு பெரும் புகழ் மாதவன்**
**மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்**
**தன்னை உகந்தது காரணமாக**
**என் சங்குஇழக் கும்வழக்கு உண்டே?**
**புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்**
**பொதும்பினில் வாழும் குயிலே!**
**பன்னிப் போதும் இருந்து விரைந்து என்**
**பவளவா யன் வரக்கூவாய்.**

**தெளிவுரை:**

புன்னை மரங்களும் குருக்கத்தி மரங்களும் கோங்கு மரங்களும் சுரபுன்னை முதலிய மரங்களும் நிறைந்த சோலையில் வாழ்கின்ற குயிலே! நிலைபெற்ற பெரும் புகழையுடைய வனாய்த் திருமகள் கேள்வனாய் மாமணிவண்ணனாய் மணிமுடி அணிந்தவனான எம்பெருமானை ஆசைப்பட்டது காரணமாக என்னுடைய கைவளையல்கள் கழலுவானேன்? என்பவள வாயன் என்னிடம் வந்து சேரும்படி இரவும் பகலும் அவன் திருநாமங்களைக் கூவுவாயாக.

**2. வெள்ளை விளிசங்கு இடங்கையிற் கொண்ட**
**விமலன் எனக்குஉருக் காட்டான்**
**உள்ளம் புகுந்தென்னை நைவித்து**
**நாளும் உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்**
**கள்ளவழி செண்பகப் பூமலர் கோதிக்**
**களித்திசை பாடும் குயிலே!**
**மெள்ள இருந்து மிழற்றிமிழற்றாதுஎன்**
**வேங்கட வன்வரக் கூவாய்.**

**தெளிவுரை:**

தேன் பெருகுகின்ற செண்பகப் பூவைக் கோதிக்களித்து இசை பாடும் குயிலே! சங்கை இடக்கையில் ஏந்திக் கொண்டிருக்கிற விமலன் தனது உருவை எனக்குக் காட்டவில்லை. அதுவும் அல்லாமல் என்னுடைய உள்ளத்தில் புகுந்து என்னை நைந்து

போகும்படி செய்து, நாள்தோறும் உயிரைப் பெருகச்செய்து வேடிக்கைப் பார்க்கிறாள். நீ என் அருகில் இருந்துகொண்டு உன்மழலைச் சொற்களைச் சொல்லி வருத்தாமல், எனக்காகத் திருவேங்கட மலையில் உள்ள எம்பெருமானை இங்கே வருகை தந்து போமாறு கூப்பிடுவாயாக.

**3. மாதலி தேர்முன்பு கோல்கொள்ள**
**மாயன் இராவணன் மேல் சரமாரி**
**தாய்தலை யற்றற்றுவீழத் தொடுத்த**
**தலைவன் வரவெங்குங் காணேன்**
**போதலர் காவில் புதுமணம் நாறப்**
**பொறிவண்டியின் காமரம் கேட்டு உன்**
**காதலியோடுடன் வாழ்குயிலே! என்**
**கருமாணிக் கம்வரக் கூவாய்.**

**தெளிவுரை:**

சிறந்த பூக்கள் மலர்கின்ற சோலையில் புதுமணம் வீசு, அழகிய வண்டினுடைய காமரம் என்ற பண்ணைக் கேட்டுக் கொண்டு உன் பெடையுடன் வாழ்கின்ற குயிலே! மாதிலி, இராவணனுடைய தேரின் முன்னே கோலைக் கொண்டு ஒச்சித் தேரைச் செலுத்த, மாயாவியான இராவணன் மேல் சராமரி பெய்து, அவன் தலைபூமியில் வீழச்செய்த எம்பெருமானுடைய வரவை எப்பக்கம் நோக்கிலும் காணேன். ஆதலால் என் கருமாணிக்கம் இங்கே வருகை தருமாறு நீ கூவுவாயாக!

**4. என்புரு கிஇன வேல்நெடுங் கண்கள்**
**இமைபொருந் தாபலநாளும்**
**துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்**
**தோணி பெறாதுஉழல் கின்றேன்**
**அன்புடை யாரைப் பிரிவுறு நோயது**
**நியும் அறிதி குயிலே!**
**பொன்புரை மேனிக் கருளக்கொடியுடைப்**
**புண்ணியனை வரக்கூவாய்.**

**தெளிவுரை:**

ஓ குயிலே! எலும்புகள் உருகிப்போனதும் அல்லாமல் சிறந்த வேல் போன்ற விசாலமான கண்களும் மூடவில்லை. நெடுங்காலமாகத் துன்பக்கடலில் அழுந்தி வைகுந்தன் என்ற ஒரு தோணியை அடையாளம் பெறாமல் அக்கடலுக்குள்ளேயே

உழல்கின்றேன். அன்பர்களைப் பிரிவதானல் உண்டாகின்ற துக்கத்தை நீயும் அறிவாய் அன்றோ? பொன் போன்ற மேனியை உடையவனாய்க் கருட உருவம் பொறித்த கொடியை உடையவனான புண்ணியனை இங்கே வரும்படி கூவுவாயாக.

5. **மென்னடை அன்னம்பரந்து விளையாடும்**
**வில்லிபுத்தூர் உறைவான் தன்**
**பொன்னடி காண்பதோர் ஆசையி னால்என்**
**பொருகயற் கண்ணினை துஞ்சா**
**இன்னடி சிலொடு பாலமுது ஊட்டி**
**எடுத்த என் கோலக்கிளியை**
**உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!**
**உலகளந் தான்வரக் கூவாய்.**

**தெளிவுரை:**

மென்னடை அன்னங்கள் எங்கும் பரவி விளையாடுவதற்கு இடமான ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய அழகிய திருவடிகளைக் காணவேண்டும் என்ற ஆசையினால் என் கண்கள் உறங்கவில்லை. ஓ, குயிலே! உலகங்களை அளந்த பெருமான் இங்கே வரும்படி கூவு. அப்படிக் கூவினால் கன்னல் அமுதையும் பால் அமுதையும் ஊட்டி வளர்க்கப்பட்ட என்னுடைய அழகிய கிளியை உன்னோடு தோழமை கொள்ளச் செய்வேன்.

6. **எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும்**
**இருடீகே சன்வலி செய்ய**
**முத்தன்ன வெண்முறு வல்செய்ய வாயும்**
**முலையும் அழகழிந் தேன்நான்**
**கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை**
**கொள்ளும் இளங்குயிலே! என்**
**தத்துவ னைவரக் கூகிற்றி யாகில்**
**தலையல்லால் கைம்மாறி லேனே.**

**தெளிவுரை:**

பூங்கொத்துகள் மலரும் இடமான சோலையில் அழகான ஓர் இடத்தில் உறங்குகின்ற சிறுகுயிலே! எல்லா திசைகளிலும் தேவர்கள் வணங்கித் துதிக்கும்படி உள்ள எம்பெருமான் தன்னை எனக்குக் காட்டாமல் வலி செய்ய அதனால் என் முத்துப்போல் வெளுத்த முறுவலும் சிவந்த அதரமும் தனங்களும் ஆகிய இவை

அழகு ஒழிந்தன. என் தத்துவனை இங்கே வரும்படி கூவவல்லமையேயானால் என் தலையை உன் காலடியில் வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**7. பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்**
**புணர்வதோர் ஆசையினால் என்**
**கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து**
**ஆவியை ஆகுலம் செய்யும்**
**அங்குயிலே! உனக்கு என்ன மறைந்துறைவு?**
**ஆழியும் சங்கும் ஒண் தண்டும்**
**தங்கிய கையவ னைவரக் கூவில்நீ**
**சாலத் தருமம் பெறுதி.**

**தெளிவுரை:**

அழகிய குயிலே! திருப்பாற்கடலில் பள்ளிக்கொண்டிருக்கும் எம்பெருமானோடு புணர்வதோர் ஆசையினால் எனது தனங்கள் பருத்துக் குதூகலித்து என் உயிரை உருக்கத் துன்புறுத்துகின்றன. நீ மறைந்து உறைவதனால் உனக்கு என்ன நன்மை? சக்கரமும் சங்கமும் கதையும் பொருந்திய திருக்கைகளையுடைய பெருமான் இங்கே வரும்படி கூவினால் மிகவும் தர்மம் செய்ததாய் ஆவாய்.

**8. சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச்**
**சதுரன் பொருத்தம் உடையன்**
**நாங்கள்எம் இல்லிருந்து ஒட்டிய கச்சங்கம்**
**நானும் அவனும் அறிதும்**
**தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும்**
**சிறுகுயிலே! திருமாலை**
**ஆங்கு விரைந்தொல்லைக் கூகிற்றி யாகில்**
**அவனைநான் செய்வன காணே.**

**தெளிவுரை:**

இனிய பழங்களையுடைய மாந்தோப்பில் செந்தளிர் கோதும் இளங்குயிலே! தனது வில்லை வளைத்து வலிக்கும் ஆற்றல்மிக்க பெரிய திருக்கைகள் உடையவனான எம்பெருமான் பொருத்தம் உடையவன். நாங்கள் மட்டும் தான் அறிவோம். வேறு யாரும் அறியார். திருமாலை மிகவும் சீக்கிரமாக நீ கூவவில்லையாகில் அவன் இங்கு வந்த பின்பு நான் செய்யப்போவதைக் காண்பாய்.

9. **பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்**
**பாசத்து அகப்பட்டு இருந்தேன்**
**பொங்கொளி வண்டிரைக் கும்பொழில் வாழ்**
**குயிலே! குறிக்கொண்டுஇது நீ கேள்**
**சங்கொடு சக்கரத் தான்வரக் கூவுதல்**
**பொன் வளைகொண்டு தருதல்**
**இங்குள்ள காவினில் வாழக் கருதில்**
**இரண்டத்துஒன் றேல் திண்ணம் வேண்டும்.**

**தெளிவுரை:**

ஒளியுடைய வண்டுகள் இசைபாடும் சோலையில் களித்து விளையாடுகிற குயிலே! நான் சொல்லுவதை நீ ஞாபகமாய்க் கேள். நான் பைங்கிளி வண்ணன் ஸ்ரீதரன் என்கிற வலையில் சிக்கிக் கொண்டு கிடக்கிறேன். இந்தச் சோலையில் நீ வாழ நினைத்தால் சங்கு சக்கரம் உடையவனான பெருமான் வரும்படி கூவுதல், நான் இழந்த பொன்வளைகளைக் கொண்டுவந்து கொடுத்தல் ஆகிய இவை இரண்டுள் ஏதாவது ஒன்றை நீ அவசியம் செய்துதீர வேண்டும்.

10. **அன்றுல கம்அளந் தானை உகந்து**
**அடிமைக்கண் அவன்வலி செய்ய**
**தென்றலும் திங்களும் ஊடறுத்து**
**என்னை நலியும் முறைமை யறியேன்**
**என்றும்இக் காவில் இருந்திருந்து என்னைத்**
**ததர்த் தாதேநீயும் குயிலே!**
**இன்றுநா ராயண னைவரக் கூவாயேல்**
**இங்குத்தை நின்றும் துரப்பேன்.**

**தெளிவுரை:**

அக்காலத்தில் மூவுலகங்களையும் அளந்து கொண்டவனான எம்பெருமான் பக்கல் நான் தொண்டு செய்ய ஆசைப்பட்டு அப்பெருமான் அதை வஞ்சனை செய்ய அதற்கு நான் வருந்தியபோது தென்றலும் நிலவும் என்னைத் துன்புறுத்தாதே. இன்று நாராயணனை இங்கே வரும்படி நீ கூவாமற் போனால், இந்தச் சோலையிலிருந்து உன்னைத் துரத்தி விடுவேன்.

11. **விண்ணுற நீண்டடி தாவிய மைந்தனை**
**வேற்கண் மடந்தை விரும்பி**

**கண்ணுற என் கடல் வண்ணனைக் கூவு**
**கருங்குயிலே! என்ற மாற்றம்**
**பண்ணுறு நான்மறை யோர்புது வைமன்னன்**
**பட்டர்பிரான் கோதை சொன்ன**
**நண்ணுறு வாசக மாலைவல்லார்**
**நமோ நாராய ணாயஎன் பாரே.**

**தெளிவுரை:**

வேற்கண் மடந்தையாய் நான்கு வேதங்களையும் ஓதின வைணவர்கள் வாழ்கிற ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளான ஸ்ரீ ஆண்டாள் உலகளந்த எம்பெருமானை விரும்பி ‘ஓ! கரிய குயிலே என் காதலனை நான் காண நீ கூவு’ என்று அருளிச்செய்த நண்ணுறு வாசக மாலையை ஓதவல்லவர்கள் எம்பெருமானுடைய எட்டை மந்திரமாகிய ஓம் நமோ நாராயணா, என்று ஓதும் புண்ணியத்தைப் பெறுவார்கள்.

**6-ஆம் திருமொழி – வாரணம் ஆயிரம்**

**மாயவன் தன்னை மணம் செய்யக் கண்ட தூயநற் கனவைத்**

**தோழிக்கு உரைத்தல்**

**(கல்யாணி ராகம் - ரூபக தாளம்)**

**கலிவிருத்தம்**

**(இந்தப் பாசுரங்கள் திருமணக் காலங்களில் பாடும் சீர்பாடல்கள்)**

1. **வாரணம் ஆயிரம் சூழவ லம்செய்து**
   **நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்**
   **பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**
   **தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

என் உயிர்த்தோழியே! சகல குணபூரணனான ஸ்ரீமந் நாராயணன் ஆயிரம் யானைகள் சூழ்ந்துவர வலஞ்செய்து எழுந்தருளுகின்றான். நகர் முழுவதும் தோரணக் கம்பங்கள் நாட்ட இந்த நிலைமையை நான் கனவில் அனுபவித்தேன்.

2. **நாளை வதுவை மணமென்று நாளிட்டு**
   **பாளை கழுகு பரிசுடைப் பந்தற்கீழ்**
   **கோளரி மாதவன் கோவிந்தன் என்பான்**
   **காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! நாளைக்கு வதுவை மணம் என்று நிச்சயித்து, பாளைகளோடு கூடின பாக்கு மரங்கள் கட்டிய மணப்பந்தலின் கீழ் நரசிம்மன் என்றும் மாதவன் என்றும் கோவிந்தன் என்றும் பெயர்களையுடைய ஒரு காளை வர நான் கனாக்கண்டேன்.

3. **இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்**
   **வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து**
   **மந்திரக்கோடி உடுத்தி மணமாலை**
   **அந்தரி சூட்டக் கனாக்கண்டேன்.**

**தெளிவுரை:**

இந்திரன் முதலான தேவர்கள் எல்லாரும் இந்தப் பூமிக்கு வந்திருந்து என்னைக் கல்யாணப் பெண்ணாகச் சொல்லி யோசித்து முடிவு செய்து, பின்னர் ‘துர்க்கை’ என்ற

நாத்தனார் கல்யாணப் புடவையை எனக்கு உடுத்தி மணமாலை சூட்ட, தோழீ நான் கனாக்கண்டேன்.

**4. நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி**
**பார்ப்பனச் சிட்டார்கள் பல்லார் எடுத்தேத்தி**
**பூப்பனை கண்ணிப் புனிதனோடு என் தன்னை**
**காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! சிட்டர்களான பல அந்தணர்கள் நான்கு திசைகளிலும் இருந்து தீர்த்தங்களைக் கொண்டு வந்து, நன்றாகத் தெளித்து வாழ்த்தி மலரணிந்த கண்ணபிரானோடு என்னை இணைத்து, கங்கணங்கட்ட நான் கனாக்கண்டேன்.

**5. கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்தி**
**சதிரிள மங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள**
**மதுரையார் மன்னன் அழநிலை தொட்டு எங்கும்**
**அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்**

**தெளிவுரை:**

தோழீ! அழகிய இளம்பெண்கள் மங்கள தீபத்தையும் பொற்கலசங்களையும் கையில் ஏந்திக்கொண்டு, எதிர்கொண்டு வர, மதுரையில் உள்ளார்க்கு அரசனான கண்ணபிரான் பாது கைகளைச் சாத்திக்கொண்டு பூமி எங்கும் அதிரும்படியாக எழுந்தருளியுள்ளதாக நான் கனாக் கண்டேன்.

**6. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தல்கீழ்**
**மைத்துனன் நம்பிமதுசூதுன் வந்து என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! மத்தளங்கள் அடிக்கவும், சங்குகள் முழங்கவும் மைத்துன முறையுடைய கண்ணபிரான். முத்துமாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழே வந்து என்னைக் கைத்தலம் பற்ற நான் கனாக்கண்டேன்.

7. **வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்**
**பாசிலை நாணல் படுத்துப்பரிதி வைத்து**
**காய்சின மாகளிறு அன்னான் என் கைப்பற்றி**
**தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! நன்றாக ஓதின வைதிர்கள் சிறந்த வேத வாக்கியங்களை உச்சரிக்க அதற்குரிய மந்திரங்களைக் கொண்டு பசுமையான தருப்பையைப் பரப்பி, சமித்துக்களை வைத்து மிக்க சினத்தையுடைய பராக்கிரமமம் மிக்க மதக்களிறு போன்ற கண்ணபிரான் என் கையைப் பிடித்துக் கொண்டு தீவலம் செய்ய நான் கனாக்கண்டேன்.

தீ வலம் வருதல் மங்கலச் சடங்குகளுள் ஒன்று. திருமாங்கல்ய தாரணத்திற்குப் பிறகு இது நடைபெறும். தம்பதிகள் தங்களுடைய அன்பை அக்கினிசாட்சி யாக்குதல்.

8. **இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்**
**நம்மை உடையவன் நாராயணன் நம்பி**
**செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! இப்பிறவிக்கும் மேலுள்ள பிறவிகள் எல்லாவற்றுக்கும் சரண்யனாய் இருப்பவனாயும் நமக்குப் பாதுகாவலனாய் இருப்பவனாயும் உள்ள நாராயணனை கண்ணபிரான் செம்மையுடைய தனது திருக்கையால் எனது காலைப் பிடித்து ஏழடிகள் வைத்து அம்மியின் மேல் எடுத்து வைக்க நான் கனாக்கண்டேன்.

9. **வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம்வந்திட்டு**
**எரிமுகம் பாரித்து என்னைமுன்னே நிறுத்தி**
**அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கைவைத்து**
**பொரிமுகந்து அட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! வரிசிலை வாள்முகத்து எனது தமையன் மார்கள் வந்து அக்கினியை நன்றாக எரியச் செய்து அதன்முன்னால் என்னை நிறுத்தி நரசிம்மனாய் அவதரித்த

கண்ணபிரானுடைய திருக்கையின் மேல் என்னுடைய கையை வைத்துப் பொரிகளை அள்ளிப் பரிமாற நான் கனாக்கண்டேன்.

**10. குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து**
**மங்கல வீதி வலம்செய்து மணநீர்**
**அங்குஅவ னோடும் உடன் சென்றங்கு ஆனைமேல்**
**மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.**

**தெளிவுரை:**

தோழீ! குங்குமக் குழும்பை உடம்பெல்லாம் பூசி குளிர்ந்த சந்தனத்தைக் கனக்கத் தடவி மத்த கஜத்தின் மேல் அந்தக் கண்ணபிரானோடு கூடியிருந்து அலங்கரிக்கப்பட்ட வீதிகளில் ஊர்வலம் வந்து, அதன் பின்னர் வாசனைப் பொடிகள் கலந்த நல்ல மணநீரால் எங்கள் இருவரையும் நீராட்டுவதாக நான் கனாக்கண்டேன்.

**11. ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை**
**வேயர்புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதைசொல்**
**தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்**
**வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே.**

**தெளிவுரை:**

வேயர் குலத்தவரால் புகழப்பட்டவராய் ஸ்ரீவில்லிபுத்தூழ்க்குத் தலைவரான பெரியாழ்வருடைய திருமகளான ஆண்டாள் தான் கோபால கிருஷ்ணனுக்கு வாழ்க்கைப் பட்டதாகக் கனாக்கண்ட விதத்தைக் குறித்து அருளிச் செய்த தூய தமிழ்த்தொடையான இப்பத்துப் பாசுரங்களையும் ஓத வல்லவர்கள். நற்குணங்கள் அமைந்த நல்மக்களைப் பெற்று மகிழ்வர்.

## 7-ஆம் திருமொழி – கருப்பூரம் நாறுமோ
## பாஞ்ச சன்னியத்தைப் பதும நாபனோடும் சுற்றம் ஆக்கல்
## கலிவிருத்தம்
## (வராளி ராகம் - ரூபக தாளம்)

1. **கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ?**
   **திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ?**
   **மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
   **விருப்புற்றுச் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!**

**தெளிவுரை:**

கம்பீரமாய் வெளுத்திருக்கும் சங்கே! குவலயாபீடம் என்னும் யானையின் கொம்பை முறித்த கண்ணபிரனர் வாயின் சுவையையும் நறுமணத்தையும் விரும்பி உன்னைக் கேட்கின்றேன். அப்பெருமானுடைய செவ்வாய்தான் பச்சைக் கர்ப்பூரம் போல் மணம் வீசுமோ! தாமரைப் பூப்போல மணம் வீசுமோ! சுவையில் தித்தித்திருக்குமோ? எவ்வாறு இருக்குமென்று எனக்குச் சொல்.

2. **கடலில் பிறந்து கருதாது பஞ்சசனன்**
   **உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்**
   **திடரில் குடியேறித் தீய அசுரர்கள்**
   **நடலைப் பட முழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே!**

**தெளிவுரை:**

அழகிய சங்கே! நீ கடலில் பிறந்து அங்கிருந்து பஞ்சஜனன் என்ற அசுரனுடைய உடலிற் சென்று வளர்ந்து, இப்படிப் பிறந்த இடத்தையும் நினையாமல் எம்பெருமானுடைய கைத்தலமாகிய உன்னத ஸ்தானத்தில் குடிபுகுந்து கொடியவர்களான அசுரர்கள் துன்பம்படும்படி ஒலி செய்யும் மேன்மையைப் பெற்றிருக்கின்றாய்! உன் பெருமையே பெருமை!

3. **தடவரையின் மீதே சரற்கால எந்திரன்**
   **இடையுவாவில் வந்தெழுந் தாலேபோல் நீயும்**
   **வடமதுரை யார் மன்னன் வாசுதேவன் கையில்**
   **குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கே!**

**தெளிவுரை:**

அழகிய பெரிய சங்கே! சரத்கால சந்திரன் பௌர்ணமியன்று பெரிய உதயகிரியில் வந்து உதித்தாற்போ நீயும் வட மதுரையில் உள்ளார்க்கு அரசனான கண்ணபிரானுடைய திருக்கையில் குடிப்புகுந்து உன் மேன்மையெல்லாம் தோற்ற இருக்கின்றாய்.

4. **சந்திர மண்டலம் போல் தாமோதரன் கையில்**
   **அந்தரம் ஒன்றின்றி ஏறியவன் செவியில்**
   **மந்திரம் கொள்வாயெ போலும் வலம்புரியே!**
   **இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கு ஏலானே.**

**தெளிவுரை:**

வலம்புரிச்சங்கே! கண்ணபிரான் திருக்கையில் சந்திரமண்டலம் போல் இடைவிடாது இருந்துகொண்டு அவனுடைய காதில் ஏதோ ரகசியம் பேசுகிறாய் போல் இருக்கிறாய். இந்திரனும் செல்வத்தில் உனக்கு இணையாக மாட்டான்.

5. **உன்னோடு டனேயொரு கடலில் வாழ்வாரை**
   **இன்னார் இனையா ரென்று எண்ணுவார் இல்லை காண்**
   **மன்னாதி நின்ற மதுசூதன் வாயமுதம்**
   **பன்னாளும் உண்கின்றாய் பாஞ்ச சன்னியமே!**

**தெளிவுரை:**

சங்கே! ஒரே கடலில் உன்னோடு கூடவே வாழப் பிறந்தவர்களான மற்றும் பலரை மதிப்பார் இல்லை. நீ ஒருவன் மாத்திரம் மன்னனாகி நின்ற கண்ணபிரான் திருவாய் அமுதத்தைப் பல காலமாக உண்கின்றாய். ஆகையால், நீயே பாக்கியசாலி.

6. **போய்த் தீர்த்தம் ஆடாதே நின்ற புணர் மருதம்**
   **சாய்த்தீர்த்தம் கைத்தலத்தே ஏறிக் குடிகொண்டு**
   **சேய்த்தீர்த்தம் மாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய**
   **வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே!**

**தெளிவுரை:**

வலம்புரிச் சங்கே! வெகுதூரம் வழிநடந்து போய் கங்கை முதலிய தீர்த்தங்களில் நீராடாமல் நாரத சாபத்தால் மரமாய் நின்ற இரட்டை மருத மரத்தை முறித்துத் தள்ளின கண்ணபிரானுடைய திருக்கைத் தலத்தின் மீதேறி அங்கே குடி

கொண்டு சிறந்த தீர்த்தமாகிய செங்கண்மால் வாய்த்தீர்த்தத்தில் நீராடும் பாக்கியம் பெற்றாய்.

**7. செங்கமல நாண் மலர்மேல் தேன் நுகரும் அன்னம்போல்**
**செங்கண் கருமேனி வாசுதே வனுடைய**
**அங்கைத் தலமேறி அன்ன வசஞ் செய்யும்**
**சங்கரையா! உன் செல்வம் சால அழகியதே.**

**தெளிவுரை:**

அப்போது அலா்ந்த செந்தாமரைப் பூவில் தேனைப் பருகுகின்ற அன்னப் பறவையைப் போன்று செங்கண் கருமேனி வாசுதேவனுடைய அழகிய கைத்தலதின் மீதேறி கண்வளா்கின்ற சங்குகளிற் சிறந்த பாஞ்ச சன்யமே! உன்னுடைய செல்வமானது மிகவும் சிறந்ததுதான்.

**8. உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்**
**கண்படை கொள்ளல் கடல் வண்ணன் கைத்தலத்தே**
**பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்**
**பண்பல செய்கின்றாய் பாஞ்ச சன்னியமே!**

**தெளிவுரை:**

சங்கே! நீ உண்பது என்னவென்றால் உலகங்களை அளந்தவனான எம்பெருமானுடைய திருவாயிலுள்ள அமிர்தம். நீ படுத்துக் கொள்வது எங்கேயென்றால் கடல் போன்ற நிறத்தையுடையவனான அந்த எம்பெருமானுடைய திருக்கையில், இப்படி உனக்கு ஊணும் உறக்கமும் அங்கே இருப்பதனால் பெண்குலத்தவர்கள் அனைவரும் உன்விஷயமாக பெரிய கூச்சல் போடுகிறார்கள். இப்படி அவர்கள் வருந்தும்படி அநியாயமான காரியத்தைச் செய்கின்றாய். இ∴து உனக்குத் தகுதியன்று.

**9. பதினாறாம் ஆயிரவர் தேவிமார் பார்த்திருப்ப**
**மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்தன் வாயமுதம்**
**பொதுவாக உண்பதனைப் புக்குநீ உண்டக்கால்**
**சிதையாரோ உன்னோடு? செல்வப் பெருஞ்சங்கே!**

**தெளிவுரை:**

பெரிய செல்வம் படைத்த சங்கமே! பதினாறாயிரம் தேவிமார்கள் எதிர்பார்த்திருக்கையில் பொதுவாக உண்ண வேண்டுவதான அந்த எம்பிரானது வாய்

அமுதத்தை நீ ஒருவனே ஆக்கிரமித்து, தேனை உண்பது போல் உண்டால் மற்றவர்கள் உன்னோடு விவாதப்படமாட்டார்களா?

சிதையாரோ – பிணங்காதிருக்க முடியுமோ? நரகாசுரன் திரட்டி வைத்திருந்த எண்ணிக்கைகள் பதினாறாயிரத்து ஒரு நூறு பேரையும் கண்ணபிரனா் அவ்அசுரனைக் கொன்றொழித்துத் தானே மணஞ்செய்து கொண்டான்.

**10. பாஞ்ச சன்னியத்தைப் பற்ப நாபனோடும்**
**வாய்த்த பெருஞ்சுற்ளம் ஆக்கிய வண்புதுவை**
**ஏய்ந்த புகழ்ப்பட்டார் பிரான் கோதைதமிழ் ஈரைந்தும்**
**ஆய்ந்தேத்த வல்லார் அவரும் அணுக்கரே.**

**தெளிவுரை:**

சங்கை எம்பிரானோடு வாய்த்த பெருசுற்றம் ஆக்கியவளும் வண்புதுவை ஏய்ந்த புகழ் பட்டபிரான் அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும் ஆய்ந்து துதிக்கவல்லவர்களும் சங்கைப்போல் அந்தரங்களாப் பெறுவார்கள்.

**8-ஆம் திருமொழி – விண்ணீல மேலாப்பு**

**மேகவிடு தூது**

**தரவு கொச்சகக் கலிப்பா**

**(துசாவந்தி ராகம் - ஆதி தாளம்)**

1. **விண்ணீல மேலாப்பு பிரித்தாற்போல் மேகங்காள்!**
   **தெண்ணீர் பாய் வேங்கடத்தென் திருமாலும் போந்தானே!**
   **கண்ணீர்கள் முலைக் குவட்டில் நுளிசோரச் சோர்வேனை**
   **பெண்ணீர்மை ஈடழிக்கும் இதுதமக்கோர் பெருமையே.**

**தெளிவுரை:**

ஆகாயம் முழுவதிலும் நீல நிறமான விதானம் விரித்துக் கட்டினாற்போல் இருக்கின்ற மேகங்களே! தெளிந்த தீர்த்தங்கள் பாயும் இடமான எம்பெருமானும் உங்களுடன் எழுந்தருளினானோ? தனங்களின் நுனியில் கண்ணீர் அரும்ப வருந்துகிற என்னுடைய பெண்மையை உருவழிக்கிற இது அவருக்கு ஒரு பெருமையாயய் இருக்கின்றதோ?

2. **மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்**
   **சாமத்தின் நிறங்கொண்ட தாடாளன் வார்த்தையென்ன**
   **காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டு, இடைக்கங்குல்**
   **ஏமத்தோர் தென்றலுக்கு இங்கு இலக்காய் நான் இருப்பேனோ.**

**தெளிவுரை:**

சிறந்த முத்துக்களையும் பொன்னையும் கொண்டு பொழிகிற காள மேகங்களே! திருமலையில் எழுந்தருளியிருக்கின்ற நீல நிறம் உடையவனான எம்பெருமானுடைய செய்தி எதாகிலும் உண்டோ, காமத்தீ உள்புகுந்து கவ்வ, அதனால் வருந்தி இரவில் நடுயாமத்தில் ஒரு தென்றற் காற்றுக்கு நான் இலக்காகி இங்கு இருப்பனோ? இது தகுதியோ?

3. **ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்**
   **எளிமையால் இட்டென்ன ஈடழியப் போயினவால்**
   **குளிர்அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம்பாடி**
   **அளியத்த மேகங்காள்! ஆலிகாத்து இருப்பேனே.**

**தெளிவுரை:**

அருள்புரியக்கூடிய மேகங்களே! உடலின் ஒளியும் நிறமும் வளைகளும் நெஞ்சும் உறக்கமும் ஆகிய இவையெல்லாம் என்னுடைய எளிமையின் காரணமாக என்னைக் கைவிட்டு என்சீர் குலையும்படி போய்விட்டன. அந்தோ! குளிர்ந்த அருவிகளையுடைய திருமலையில் எழுந்தருளியிருக்கிற என் கண்ணபிரானுடைய திருக்கல்யாண குணங்களை வாயாரப் பாடிக்கொண்டு உயிரை வைத்துக் கொண்டாவது இருப்பேன்.

**4. மின் ஆகத்து எழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்**
**தன்னாகத் திருமங்கை தங்கியசீர்! மார்வர்க்கு**
**என் ஆகத்து இளங்கொங்கை விரும்பித்தானம் நாள்தோறும்**
**பொன்னாகப் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே.**

**தெளிவுரை:**

சரீரத்தில் மின்னல் தோன்றப் பெற்ற மேகங்காள்! என் மார்பகங்களை அவ் எம்பெருமாள் விரும்பி அழகிய தம் மார்போடு அணைய வேண்டும் மென்னும் எண்ணத்தில் நாள்தோறும் எனக்குள்ள விருப்பத்தைத் திருமலையில் தன் திருமேனியில் திருமகள் எழுந்தருளியிருக்கப் பெற்ற பெருமானுக்குச் சொல்லுங்கள்.

**5. வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்துத்**
**தேன்கொண்ட மலர்சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்!**
**ஊன்கொண்ட வள்ளுகி ரால்இரணியனை உடல் இடந்தான்**
**தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.**

**தெளிவுரை:**

திருமலையில் தேன் நிறைந்துள்ள மலர்கள் சிதறும்படி திரள் திரளாக ஆகாயத்தில் ஏறி, மழையைப் பொழிந்தும் ஆகாயத்தை அபகரித்துக் கிளம்புகின்றதுமான காளமேகங்களே! ஊன் கொண்ட கூர்மையான உகிரால் இரணியனுடைய உடலைப் பிளந்து எறிந்த பெருமாள் என்னிடமிருந்து அபகரித்துச் சென்ற கைவளைகளைத் திருப்பிக் கொடுப்பதாய் இருந்தால் எனது துன்பநிலையை அவருக்குத் தெரிவியுங்கள்.

**6. சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! மாவலியை**
**நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!**
**உலங்குண்ட விளங் கனிபோல் உள்மெலியப் புகுந்து என்னை**

**நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே.**

**தெளிவுரை:**

கடல் நீரை முகந்து கொண்டு மேல் கிளம்பி விளங்குகின்ற குளிர்ந்த மேகங்களே! மகாபலியிடமிருந்து நிலங்கொண்டான் எழுந்தருளியிருக்கும் திருமலையில் பரவியிருந்து பொழிகின்ற மேகங்களே! பெருங்கொசுக்கள் உண்ட விளாம்பழம்போல நான் உள் மெலியும்படி என்னுள்ளே நுழைந்து என்னுடைய நலங்கொண்ட நாராயணனுக்கு என் துன்பநோயைத் தெரிவியுங்கள்.

**7. சங்கமா கடல் கடந்தான் தண்முகில்காள் வேங்கடத்துச்**
**செங்கண்மால சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்**
**கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள்**
**தங்குமேல் என்னாவி தங்குமென்று உரையீரே.**

**தெளிவுரை:**

சங்குகளையுடைய பெருமை வாய்ந்த கடலைக் கடைந்த பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமலையில் திரிகிற குளிர்ந்த மேகங்களே! செங்கண்மால் சேவடிக்கீழ் அடியேனுடைய விண்ணப்பம் என்னவென்றால் என் மார்பகங்களின்மீது பூசப்பட்ட குங்குமக் குழம்பு அழிய ஒரு நாளாகிலும் புகுந்து தங்குவானாகில் என் ஆவி தங்கும் என்று சொல்லுங்கள்.

**8. கார்காலத்து எழுகின்ற கார்முகில்காள்! வேங்கடத்துப்**
**போர்காலத்து எழுந்தருளியப் பொருதவனார் பேர்சொல்லி**
**நீர்காலத்து எருக்கில் அம்பழ இலைபோல் வீழ்வேனை**
**வார்காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்து அருளாரே.**

**தெளிவுரை:**

வேங்கடத்துக் கார்காலத்து எழுகின்ற கார்முகில்காள்! போர்க்களத்தில் எழுந்தருளிப் போர்செய்து வெற்றிபெற்ற இராமபிரானுடைய திருநாமங்களைச் சொல்லி, மழைக்காலத்தில், எருக்கம் பருப்புகள் அற்று விழுவதுபோல் ஒசிந்து விழுகின்ற எனக்கு ஒரு நாளாகிலும் தன்னுடைய ஒரு வார்த்தையை அருள மாட்டாரோ?

**9. மதயானை போலெழுந்த மாமுகில் காள்! வேங்கடத்தைப்**
**பதியாக வாழ்வீர் காள்! பாம்பணையான் வார்த்தையென்னே!**
**கதியென்றும் தானாவான் கருதாது ஓர் பெண்கொடியை**

**வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே.**

**தெளிவுரை:**

திருமலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்கின்ற மேகங்களே! மதயானை போல் எழுந்து, பாம்பணையான் வார்த்தை என்னே! என்று கூறுங்கள். அந்த எம்பெருமான் எப்போதும் அடியார்களுக்குக் கதியாவான். அதை மறந்து ஒரு பெண்பிள்ளையைக் கொலை செய்தான் என்ற சொல்லை இந்தப் பூமியில் உள்ளவர்கள் கேட்டால் மதிக்க மாட்டார்களோ?

10. **நாகத்தின் அணையானை நன்னுதலாள் நயந்துரைசெய்**
**மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்**
**போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்**
**ஆகத்து வைத்துரைப்பார் அவரடியார் ஆகுவரே.**

**தெளிவுரை:**

அழகிய முகத்தை உடையவளும் பெரியாழ்வாருடைய திருமகளுமான ஸ்ரீ ஆண்டாள் நாகத்தின் அணையானாகிய திருவேங்கடமுடையானை விரும்பி அருளிச் செய்ததாய் மேகத்தைத் தூதுவிடுவதாக அமைந்த விண்ணப்பமாகிய இத்தமிழ்ப் பாசுரங்களை மனத்தில் வைத்து ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு அடியார்கள் ஆவார்கள்.

**9-ஆம் திருமொழி – சிந்துரச் செம்பொடி**

**திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வழிபடல்**

**கலிநிலைத்துறை**

**(கல்யாணி ராகம் - ரூபக தாளம்)**

1. **சிந்துரச் செம்பொடிப் போல் திருமாலிருஞ் சோலையெங்கும்**
   **இந்திர கோபங்களே எழுந்தும் பரந்திட்டனவால்**
   **மந்தரம் நாட்டியன்று மதுரக் கொழுஞ் சாறுகொண்ட**
   **சுந்தரத் தோளுடையான் கழலையில்நின்று உய்துங்கொலோ.**

**தெளிவுரை:**

திருமாலிருஞ் சோலையில் எல்லா இடங்களிலும் பட்டுப்பூச்சிகள் சிவந்த சிந்துரப் பொடிபோல மேல் எழுந்து பரவிக்கிடக்கின்றன. அந்தோ! தேவர்கள் சரணமடைந்து வேண்டியபோது மந்திரமாலையைப் பாற்கடலில் மத்தாக நாட்டி, கடல் கடைந்து மிகவும் மதுரமான அமிர்தத்தை எடுத்த சுந்தரத் தோள் உடையான் சூழ்வலையில் நின்றும் பிழைப்போமோ?

2. **போர்க்களிறு பொரும்மா விருஞ்சோலையம் பூம்புறவில்**
   **தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற**
   **கார்க்கொள் பிடாக்கள்நின்று கழறிசிரிக்கத் தரியேன்**
   **ஆர்க்கிடு கோ? தோழி! அவன் தார் செய்த பூசலையே.**

**தெளிவுரை:**

போர்க்களிறுகள் பொருது விளையாடுகின்ற திருமாலிருஞ்சோலை மலையின் தாழ்வரைகளில் அரும்புகளையுடைய கொடிகள் பூத்து நின்று சிரிப்பது போல இருப்பதைத் தரியேன். தோழீ! அவன் தார் செய்த பூசலை யாரிடத்து முறையிட்டுக் கொள்வது?

3. **கருவிள ஒண்மலர்காள்! காயமலர் காள்! திருமால்**
   **உருவொளி காட்டுகின்றீர் எனக்கு உய்வழக்கு ஒன்றுரையீர்!**
   **திருவிளை யாடுதிண்தோள் திருமாலிருஞ் சோலைநம்பி**
   **வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே!**

**தெளிவுரை:**

அழகிய கருவிளை பூக்களே! காயா மலர்களே! நீங்கள் எம்பெருமானுடைய திருமேனியின் நிறத்தை நினைப்பூட்டுகிறீர்கள். அதனை நினைத்து வருந்துகின்ற எனக்குப பிழைக்கும் வழியொன்றைச் சொல்லுங்கள். திருமகள் விளையாடும் இடமான திண்ணிய திருத்தோளை உடையவரான அழகர் எனது வீட்டில் புகுந்து எனது அழகிய வளைகளை அபகரித்தது நியாயமோ?

4. **பைம்பொழில் வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண் கருவிளைகாள்!**
   **வம்பக் களங்கனிகாள் வண்ணப்பூவை நறுமலர்காள்!**
   **ஐம்பெரும் பாதகர்காள்! அணிமாலிருஞ் சோலைநின்ற**
   **எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என்செய்வதே?**

**தெளிவுரை:**

பரந்த சோலையில் வாழ்கின்ற குயில்களே! மயில்களே! ஒண் கருவிளைகளே! புதிய களாப்பழங்களே! அழகிய நிறத்தையும் நறுமணத்தையும் உடைய காயாம் பூக்களே! பஞ்சமகா பாதகர்களே! உங்களது திருமாலிருஞ் சோலையிலுள்ள அழகருடைய திருமேனி நிறமானது எதுக்காக? அதாவத அந்த நிறத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டது என்னைத் துன்புறுத்துவதற்காகவே என்பதாம்.

5. **துங்க மலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற**
   **செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்**
   **தொங்கிய வண்டினங்காள் தொகுபூஞ்சனை காள்! சுனையில்**
   **தங்குசெந் தாமரைக்காள்! எனக்கோர் சரண் சாற்றுமினே.**

**தெளிவுரை:**

ஓங்கிய மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ் சோலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கிற செங்கண், கருமுகிலின் அழகிய வடிவம் போல மலர்மேல் தங்கியிருக்கும் வண்டுக்கூட்டங்களே! நெருங்கியிருக்கின்ற அழகிய சுனைகளே! அச்சுனைகளில் உள்ள செந்தாமரை மலர்களே! எனக்கு ஒரு பற்றுக்கோடு சொல்லுங்கள்.

6. **நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்குநான்**
   **நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்**
   **நூறு தடாநிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்**
   **ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ?**

**தெளிவுரை:**

நறுமணமுள்ள பொழில்கள் நிறைந்த திருமாலிருஞ் சோலையில் பானைகளில் நிறைந்த வெண்ணெயை வாயால் சொல்லி சமர்ப்பித்தேன். இன்னமும் நூறு பானைகளில் நிறைந்த அக்கார அடிசிலும் சொல்லால் சமர்ப்பித்தேன். இவற்றை பொங்கி வருகிற சம்பத்தை உடையவரான அழகர் இன்று வந்து திருவுள்ளம் பற்றுவாரோ?

7. **இன்று வந்து இத்தனையும் அமுதுசெய் திடப்பெறில் நான்**
   **ஒன்று நூறு ஆயிரமாக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்**
   **தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ் சோலை தன்னுள்**
   **நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே.**

**தெளிவுரை:**

தென்றல் காற்று நறுமணத்தைக் கொண்டு வீசுகின்ற திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளி யிருக்கிற அழகர் இன்று இங்கு வந்து நூறுபானை நிறைந்த வெண்ணெயையும் அக்கார அடிசிலையும் அமுது செய்யப்பெற்றால் அவ்வளவும் அன்றி அடியேன் மனத்தில் வந்து தங்கினால் அடியேன் ஒரு பானைக்கு நூறாயிரம் பானைகளாகச் சமர்ப்பித்து அதற்கு மேலும் எல்லா சேவைகளையும் புரிவேன்.

8. **காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்**
   **மாலின் வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மை கொலோ?**
   **சோலை மலைப் பெருமான் துவராபதி எம்பெருமான்**
   **ஆலின் இலைப்பெருமான் அவன்வார்த்தை உரைக்கின்றதே.**

**தெளிவுரை:**

கரிய குருவிக் கூட்டங்கள் விடியற் காலையில் எழுந்து திருமாலிருஞ் சோலை மலைக்கும் துவாரகைக்கும் தலைவனாயும் ஆலிலையில் வளர்ந்த பெருமானுமாயும் உள்ள இந்த ஸர்வேஸ்வரன் செய்திகளைச் சொல்லிக்கொண்டு மருள் என்கிற பண்ணைப் பாடுவதானது மெய்யாக இருக்குமா?

9. **கோங்கலரும் பொழில்மால் இருஞ்சோலையில் கொன்றைகள்மேல்**
   **தூங்குபொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்**
   **பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்**
   **சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்பது எஞ்ஞான்று கொலோ?**

**தெளிவுரை:**

கோங்கு மரங்கள் மலரப் பெற்ற சோலைகளையுடைய திருமாலிருஞ்சோலை மலையில் கொன்றை மரங்களின் மேல் தொங்குகின்ற பொன்னிறமான பூமாலைகளோடு சமமாக வாளா கிடக்கின்றேன். அழகு பொருந்திய திருமுகத்தில் வைத்து முழங்கப்படுகிற சங்கினுடைய ஒலியும் சார்ங்கமென்னும் வில்லின் நாணோசையும் தலைப்பெய்வது என்றைக்கோ? கொன்றைமலர் திருமாலுக்கு ஏற்புடையதன்று. அது பயன்படாமல் வீணே கிடப்பதுபோல இவளுடைய பிறவியும் வீணாகிவிடுமோ என்று வருந்துகிறான்.

**10. சந்தொடு காரகிலும் சுமந்து தடங் கள்பொருது**
**வந்திழியும் சிலம்பாறு உடைமாலிருஞ் சோலைநின்ற**
**சுந்தரனை சுரும்பார் குழல்கோதை தொகுத்துரைத்த**
**செந்தமிழ் பத்தும் வல்லார் திருமால் அடிசேர்வார்களே.**

**தெளிவுரை:**

சந்தனக்கட்டைகளையும் காரகிற் கட்டைகளையும் அடித்துக்கொண்டு பல குளங்களையும் அழித்துக் கொண்டு ஓடிவருகின்ற சிலம்பாற்றை யுடைய திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற அழகரைக் குறித்துக் சுரும்பார்குழல் கோதை அழகாக அருளிச்செய்த செந்தமிழாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளைச் சேர்வார்கள்.

## 10-ஆம் திருமொழி – கார்க்கோடல் பூக்காள்

## பிரிவாற்றாமையால் வருந்திக் கூறல்

## கலிநிலைத்துறை

## (காம்போதி ராகம் - திரிபுடை தாளம்)

**1. கார்க்கோடல் பூக்காள்! கார்க்கடல் வண்ணன்என் மேல் உம்மைப்**
**போர்க்கோலம் செய்து போர விடுத்தவன் எங்குற்றான்?**
**ஆர்க்கோ இனிநாம்பூசு விடுவது? அணிதுழாய்த்**
**தார்க்கோடும் நெஞ்சம் தன்னைப் படைக்கவல் லேன் அந்தோ!**

**தெளிவுரை:**

கறுத்த காந்தள் பூக்களே! உங்களைப் போர்க்காலம் செய்து எம்மேல் பாயும்படி அனுப்பிய கார்கடல் வண்ணனான கண்ணபிரான் எங்கேயிருக்கிறான்? உங்களால் மிகவும் நலிவுபட்ட நான் இனிமேல் யாரிடத்தில் போய் முறையிட்டுக் கொள்வதோ? அறியேன். அழகிய திருத்துழாய் மாலைக்கு ஆசைப்பட்டு ஓடுகின்ற நெஞ்சை யுடையவளாய் இருக்கின்றேனே! ஐயோ!

**2. மேல் தோன்றிப் பூக்காள்! மேல்உல கங்களின்மீது போய்**
**மேல்தோன்றும் சோதி வேத முதல்வர் வலங்கையில்**
**மேல்தோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போலச் சுடாது எம்மை**
**மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக்கொள் கிற்றிரே.**

**தெளிவுரை:**

உயரப் பூத்திருக்கிற காந்தள் பூக்களே! மேல் உலகங்களைக் கடந்து அவற்றிற்கு மேற்பட்டுப் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிற வேத முதல்வனுடைய வலக்கையின் மேல் தோன்றும் சக்கரத்தின் வெஞ்சுடர் மேல் சுடாமல் என்னை இங்கிருந்த நீங்கினவர்களின் கூட்டத்தில் கொண்டு சேர்க்க வல்லீகளோ?

**3. கோவை மணாட்டி! நீயுன் கொழுங்கனி கொண்டு எம்மை**
**ஆவி தொலைவியேல் வாயழ கர்தம்மை யஞ்சுதும்**
**பாவி யேன்தோன்றிப் பாம்பணை யார்களுக்குதம் பாம்புபோல்**
**நாவும் இரண்டுள வாய்த்து நாணிலி யேனுக்கே.**

**தெளிவுரை:**

அம்மா! கோவைக் கொடியே! உன்னுடைய அழகிய பழங்களால் என்னுடைய உயிரைப் போக்கலாகாது. பவளவாய் அழகர் தம்மைப் பற்றிப் பயப்படுகின்றேன். பாவியான நான் பிறந்த பின்பு நாணம் இல்லாதவளான என்னிடத்தில் பாம்பணையை யுடைய பெருமாளுக்கும் தமது படுக்கையான பாம்பு போல் இரண்டு நாக்குகள் உண்டாயின.

4. **முல்லைப் பிராட்டி! நீயுள் முறுவல்கள் கொண்டு எம்மை**
   **அல்லல் விளைவியேல் ஆழிநங் காய்! உன் அடைக்கலம்**
   **கொல்லை அரக்கியை மூக்கரிந் திட்ட குமரனார்**
   **சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே.**

**தெளிவுரை:**

அம்மா! முல்லைக் கொடியே! கம்பீரமான இயல்பை உடையாய்! நீ எம்பெருமானுடைய முறுவல் போன்ற பேரொளியால் எனக்கு வருத்தத்தைச் செய்ய வேண்டா. இதற்காக உன்னைச் சரணடைகிறேன். வரம்பு கடந்தவளான சூர்ப்பணகையை மூக்கறுத்துத் துரத்தின சக்கரவர்த்தித் திருமகனாருடைய சொல்லும் பொய்யானால் நான் பெரியாழ்வார் வயிற்றில் பிறந்ததும் பொய்யாகக் கடவதன்றோ?

5. **பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல்? நல் வேங்கட**
   **நாடர் நமக்கொரு வாழ்வுந் தால்வந்து பாடுமின்**
   **ஆடும் கருளக் கொடியுடை யார்வந்து அருள்செய்து**
   **கூடுவ ராயிடில் கூவிநும் பாட்டுக்கள் கேட்டுமே.**

**தெளிவுரை:**

பாடுகின்ற குயில்களே! இந்தப் பெருஞ்கூச்சல் என்ன பாட்டு? திருவேங்கட மலையை இருப்பிடமாக உடைய பெருமான் எனக்காக ஒரு வாழ்வு தந்தால் அப்போது இங்கே வந்து பாடுங்கள். ஆனந்தத்தால் ஆடுகின்ற கருட உருவத்தைக் கொடியில் பொறித்துக் கொண்டிருக்கிற அப்பெருமான் அருள்கூர்ந்து இங்கே வந்து சேர்வானாகில் அப்போது உங்களை வரவழைத்து உங்களுடைய பாட்டுக்களைக் கேட்போம்.

6. **கணமா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று**
   **அணிமா நடம்பயின்று ஆடுகின் றீர்க்குஅடி வீழ்கின்றேன்**
   **பணமாடு அரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்**
   **மணவாளர் நம்மை வைத்த பரிசிது காண்மினே.**

**தெளிவுரை:**

கூட்டமாய் இருக்கின்ற சிறந்த மயில்களே! கண்ணபிரானுடைய திருக்கோலம் போன்று அணிமா நடம் பயின்று ஆடுகின்ற உங்களுடைய திருவடிகளில் வீழ்கின்றேன். இந்த ஆட்டத்தை நிறுத்துங்கள். பாம்புப்படுக்கையில் பலகாலமும் பள்ளி கொள்கின்ற அழகிய மணவாளப் பெருமான் எனக்குச் செய்து தந்த பரிசு இப்படி உங்கள் காலில் விழும்படியாயிற்று.

இதன்பொருள், அடிமை கொண்டு சிறப்பிக்கும் அவர் என்னை உங்கள் காலில் விழும்படி செய்த பின்பு நான் செய்யலாவது உண்டோ என்கிறாள்.

**7. நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்! உம்மை**
**நடமாட்டங் காணப்பாவியேன் நானோர் முதல்இலேன்**
**குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறை செய்து எம்மை**
**உடைமாடு கொண்டான் உங்களுக்கு இனியொன்று போதுமே?**

**தெளிவுரை:**

கூத்தாடிக் கொண்டு தோகைகளை விரிக்கின்ற சிறந்த மயில்களே! உங்களுடைய கூத்தைப் பார்ப்பதற்குப் பாவியான நான் கொடுத்து வைக்கவில்லை. குடக்கூத்து ஆடினவனான கண்ணன் இரக்கம் இல்லாமல் என்னை அடிமை கொண்டான். இப்படியிருக்க என் முன்னே கூத்தாடி என்னைத் துன்பப்படுத்துகிற இச்செயல் உங்களுக்குத் தகுமோ?

**8. மழையே! மழையே! மண்புறம் பூசியுள்ளாய் நின்று**
**மெழுகூற்றினாய் போல் ஊற்றுநல் வேங்கடத் துள்நின்று**
**அழகப் பிரானார் தம்மையென் நெஞ்சத்து அகப்படத்**
**தழுவிநின்று என்னைத் ததைத்திக் கொண்டு ஊற்றவும் வல்லையே?**

**தெளிவுரை:**

ஓ மேகமே! மேற்புறத்தில் மண்ணைப் பூசிவிட்டு உள்ளேயிருக்கும் மெழுகை உருக்கி வெளியில் தள்ளுவது போல என்னை அணைத்து ஆத்மாவை உருக்கி அழிப்பவராய் அழகிய திருவேங்கட மலையில் நிற்கின்ற அழகிய பெருமானை என்னை அவரோடு நெருக்கி வைத்துப் பிறகு பெய்யவல்லையோ? வெண்கலப் பாத்திரம் முதலியன செய்பவர்கள் முதலில் அதுபோல மண்ணால் உருவம் செய்து அதன்பிறகு உருகிய உலோகத்தை ஊற்றுவார்கள். அதைக் குறிப்பிடுகின்றார் ஆண்டாள்.

**9. கடலே! கடலே! உன்னைக் கடந்து கலக்குறுத்து**
**உடலுள் புகுந்துநின்று ஊறல் அறுத்துவற்கு என்னையும்**
**உடலுள் புகுந்து நின்று ஊறல் அறுக்கின்ற மாயற்கு என்**
**நடலைகள் எல்லாம் நாயகனைக் கேசென்று உரைத்தியே.**

**தெளிவுரை:**

ஓ கடலே! தனக்குப் படுக்கையிடமாக வாய்த்த உன்னை மலையைக் கொண்டு கடைந்து கலக்கி உனது உடம்பில் புகுந்திருந்து சாரமான அமுதத்தை அபகரித்தவராய் அவ்வாறாகவே என் உடலிலும் புகுந்திருந்து என் துயரங்களையெல்லாம் அவர் படுக்கையான அனந்தனுக்கு நீ போய் சொல்வாயா? அனந்தன் தன் தலைவனாகிய பகவானிடம் சொல்லுவான் என்ற நம்பிக்கையால் கூறினாள் என்க.

**10. நல்லஎன் தோழி! நாக ணைமிசை நம்பரர்**
**செல்வர் பெரியர் சிறுமா னிடவர்நாம் செய்வதென்?**
**வில்லி புதுவை விட்டுசித் தர்தங்கள் தேவரை**
**வல்ல பரிசு வருவிப்ப ரேல்அது காண்டுமே.**

**தெளிவுரை:**

எனது உயிர்த்தோழியே! பாம்புப் படுக்கையிலுள்ள நம்பெருமான் பெருஞ்செல்வம் படைத்தவர். எல்லாரினும் மேம்பட்டவர். நாமோ சிறு மானிடவர். இத்தகைய நாம் என்ன செய்யலாம்? வில்லிப்புதுவை விட்டு சித்தர் தம்மால் இயன்றவரையில் அழைப்பாராகில் அப்போது அவனை நாம் வணங்க முடியும்.

இத்திருமொழிக்குப் பலன் சொல்லவில்லை. இப்பாட்டே அந்த இடத்தைப் பெற்றது என்க. பெரியாழ்வார் சுவாமிகளின் திருவருளால் ஸ்ரீமந் நாராயணனின் திருவருள் வாய்க்கப் பெறும் என்பதாம். குருவருளும் இறையருளும் பாலிக்கும் திருமொழி எனவும் கொள்க.

**11-ஆம் திருமொழி - தாம் உகக்கும்**
**திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்**
**தரவு கொச்சகக் கலிப்பா**
**(ஸாவேரி ராகம் - திரிபுடை தாளம்)**

1. **தாமுகக்கும் தம் கையில் சங்கமே போலாவோ?**
**யாமுகக்கும் எங்கையில் சங்கமும் ஏந்திழையீர்!**
**தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்**
**ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே!**

**தெளிவுரை:**

ஆபரணங்களை அணிந்துள்ள மாதர்களே! நான் விரும்பி அணிந்துள்ள என் கையில் உள்ள வளைகள் தாம் விரும்பிக் கையில் வைத்துக் கொண்டிருக்கிற சங்கோடு ஒவ்வாதோ? குரூரமான முகங்களையுடைய பாம்புப் படுக்கையின் மேல் பள்ளி கொண்டிருக்கிற திருவங்கர் என்னுடைய முகத்தை நோக்கினார் இல்லை. அந்தோ! அந்தோ!

2. **எழிலுடைய அம்மனையீர்! என் அரங்கத்து இன்னமுதர்**
**குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்**
**எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய**
**கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே.**

**தெளிவுரை:**

எழிலுடைய அம்மனையீர்! திருவரங்கத்தில் இருக்கின்ற என்னுடைய இனிய அமுதம் போன்றவராய்க் குழல் ஊதும் அழகுடையவராய் அழகிய வாயையும் கண்களையும் உடையவராய்த் திருநாபியில் உண்டான தாமரைப் பூவால் அழகு பெற்றவராய் உள்ள என மணவாளர் என்னுடைய கைவளையைக் 'கழன்று விழுமாறு' கழல் வளையாக வைத்துவிட்டார்.

3. **பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்**
**அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்**
**செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார்**
**எங்கோல் வளையால் இடர்தீர்வர் ஆகாதே?**

அலைவீசுகின்ற கடலால் சூழப்பட்ட இப்பூமியும் பரமபதமும் சிறிதும் குறைவுபடாதபடி ஆள்கின்ற எம்பெருமான் செங்கோல் செலுத்த வல்லவராய்த் திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் செல்வனார் என்னுடைய கைவளையால் தம் குறைகள் எல்லாவற்றையும் தீர்த்து நிறைவு பெறுவர் அன்றோ!

4. **மச்சணி மாடம் அரங்கர் வாமனனார்**
   **பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற**
   **பிச்சைக் குறையாகி என்னுடைய பெய்வளைமேல்**
   **இச்சை உடையரேல் இத்தெருவே போதாரே?**

**தெளிவுரை:**

மேல்தளங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடங்களையும் மதில்களையும் உடைய திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவர் முன்பு வாமன அவதாரம் எடுத்தபோது பசுமை தங்கிய தேவரான பெரிய பெருமாள் தாம் முன்பு மகாபலி நீர் வார்த்துக் கொடுத்த பிட்சையில் குறையுண்டாகி, அக்குறையைத் தீர்ப்பதற்காக என்னுடைய கையில் இடப்பட்டுள்ள வளைமேல் விருப்பம் உடையவராக இத்தெரு வழியாக எழுந்தருள மாட்டாரோ?

5. **பொல்லாக் குறள் உருவாய்ப் பொற்கையில் நீரேற்று**
   **எல்லா உலகும் அளந்து கொண்ட எம்பெருமான்**
   **நல்லார்கள் வாழும் நளிர் அரங்க நாகணையான்**
   **இல்லாதோம் கைப்பொருளும் எய்துவான் ஒத்துளனே.**

**தெளிவுரை:**

வாமன ரூபியாய் அழகிய கையால் பிட்சை ஏற்று எல்லா உலகங்களையும் தன் வசப்படுத்திக் கொண்ட எம்பெருமான் நல்லவர்கள் வாழ்கின்ற திருவரங்கத்தில் நாகணையாகி ஏழையான என்னுடைய கைப்பொருளையும் கொள்ளை கொள்ள முடிவு செய்துள்ளான்.

6. **கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்**
   **செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்**
   **எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான் மறையின்**
   **சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.**

**தெளிவுரை:**

காவிரிநீர் விளைநிலங்களில் பாய்ந்து ஓடுகின்ற வளமுள்ள திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள செல்வனார் எல்லாப் பொருள்களிலும் மறைந்து நின்று ஒருவர்க்கும் அகப்படாமல் நான்கு வேதங்களின் பொருளாய் இருப்பவர். அந்தப் பெரிய பெருமாள் ஏற்கனவே கையிலுள்ள பொருள்களையெல்லாம் கொள்ளை கொண்டு இப்போது என்னையும் கொள்ளை கொண்டார்.

7. **உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்து**
   **பெண்ஆக்கை யாப்புண்டு தாமுற்றபேது எல்லாம்**
   **திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்**
   **எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே.**

**தெளிவுரை:**

வலிமையுடைய மதில்களால் சூழப்பட்ட திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற செல்வனார் இராமனாய் அவதரித்தபோது சீதையின் உடலுக்கு ஆசைப்பட்டு உண்ணாமலும் உறங்காமலும் வருந்தி ஒலிகடலின் நடுவே அணைகட்டி, தாம் அடைந்த வருத்தத்தையெல்லாம் மறந்து இப்போது தம்முடைய பெருமைகளையே எண்ணுகிறார்.

8. **பாசிதூர்த் துக்கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்**
   **மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியாம்**
   **தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்**
   **பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.**

**தெளிவுரை:**

முன்னொரு காலத்தில் பாசி படர்ந்து கிடந்த பூமிப் பிராட்டிக்காக அழுக்கேறின உடம்போடு இழிந்தவராக உருவம் கொண்ட தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார். முன்பு சொல்லியிருக்கும் பேச்சுக்கள் நெஞ்சில் இருந்து பேர்க்க மாட்டாதவை.

9. **கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்**
   **திண்ணார்ந்து இருந்த சிசுபாலன் தேசழிந்து**
   **அண்ணாந்து இருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த**
   **பெண்ணாளன் பேணும் ஊர் பேரும் அரங்கமே.**

**தெளிவுரை:**

கல்யாண ஏற்பாடுகளைச் செய்து முடித்து, மணப்பெண்ணாகிய ருக்மிணிப் பிராட்டியைக் கைப்பிடிக்க நினைத்திருந்த சிசுபாலன் அவமானப்பட்டு ஏமாந்துபோன அச்சமயத்தில் அந்த ருக்மிணிப் பிராட்டியைக் கைப்பிடித்த பெண்ணாளன் விரும்பி எழுந்தருளியிருக்கிற ஊர்பேரும் திருவரங்கமாம்.

**10. செம்மை யுடைய திருவரங்கர் தாம் பணித்த**
**மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர்**
**தம்மை யுகப்பாரைத் தாம்உகபப்ர் என்னும் சொல்**
**தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர்இனியே?**

**தெளிவுரை:**

செம்மைக் குணமுடைய திருவரங்கர் முன்பு தாம் அருளிச்செய்த மெய்ம்மையானதும் பெருமை பொருந்தியதுமான வார்த்தையை என் தந்தையாகிய பெரியாழ்வார் குருமுகமாகக் கேட்டபடி நிற்பவர். தம்மை விரும்பினவர்களைத் தாமும் விரும்புவர் என்ற பழமொழியானது தம் இடத்திலேயே பொய்யாய்ப் போய்விட்டால் அதற்கு மேல் அவர் தம்மை நியமிப்பார் யார்? யாருமிலர். நிஷ்டையுடையவராய் இருப்பவர் பெரியாழ்வார். அவருடைய மகளான தனக்கும் அந்த அருளையே புகல் என்றவாறு கண்ணபிரான் அர்ச்சுனனை ஆதரித்து அவனுடைய தேர்த்தட்டில் நின்று கொண்டு சிலாக்கியமான ஒரு வார்த்தையை அருளிச்செய்தார். உன் செயல்களையெல்லாம் குறையற நிறைவேற்றி வைக்க நான் இருக்கிறேன். நீ கவலைப்பட வேண்டியதில்லை. உனது பாரங்களையும் என்பக்கல் சமர்ப்பித்து நிர்ப்பரனாய் இரு. அதன்படியே நிட்டையுடையவராய் இருப்பவர் பெரியாழ்வார் என்பதாம்.

கண்ணபிரான் எந்தத் தேரில் இருந்துகொண்டு கீதையை அருளிச்செய்தனனோ அந்தத் தேர் கருடனுடைய அம்சம் என்பது சம்பிரதாயம், விட்டு சித்தரும் கருடனுடைய அவதாரபூதர். ஆகவே விட்டு சித்தர் அப்போது நேராக இருந்துகொண்டு கீதையைக் கேட்டவர் என்ற கருத்துப்பட இப்பாசுரத்தில் இரண்டாம் அடி அமைந்திருக்கிறது எனலாம்.

## 12-ஆம் திருமொழி – மற்றிருந்தீர்

**‘சீதரன் இருந்துழிச் செலுத்துவீர் எனை’ எனக்கோதை தமர்க்குக் கூறிய துணிபு**

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**(நாதநாமக் கிரியை ராகம் - ஆதி தாளம்)**

1. **மற்றிருந் தீர்கட்கு அறியலாகா**
   **மாதவன் என்பதோர் அன்புதன்னை**
   **உற்றிருந் தேனுக்கு உரைப்ப தெல்லாம்**
   **ஊமைய ரோடு செவிடர் வார்த்தை**
   **பெற்றிருந் தாளை ஒழியவே போய்ப்**
   **பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி**
   **மற்பொருந் தாமல் களமடைந்த**
   **மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

என்னுடைய துணிவுக்கு மாறுபாடாக இருக்கின்ற உங்களுக்கு அறிய முடியாததாய் மாதவன் சம்பந்தமான அன்பை அடைந்திருக்கிற எனக்கு நீங்கள் சொல்வதெல்லாம் ஊமையும் செவிடனும் கூடி பேசிக் கொள்வதுபோல் வீண். இப்போது எனக்குச் செய்யத்தக்கது எதுவென்றால் மெய் நொந்து பெற்ற தாயான தேவகியை விட்டொழித்து வேறொரு தாயாகிய யசோதையின் மாளிகையில் வளர்ந்தவனும் மல் யுத்தத்திற்குச் சென்றவனுமாகிய கண்ணபிரானுடைய நகரமாகிய மதுராபுரியின் அருகே என்னைக் கொண்டுபோய் சேர்த்துவிடுங்கள்.

பழைய ஏட்டுப்பிரதிகளில் ‘செகுடர்’ என்றே உள்ளது. அதற்குச் செவிடர் என்றே பொருள் கூறுகிறார் பெரியவாச்சான் பிள்ளை அவர்கள்.

2. **நாணி இனியோர் கருமமில்லை**
   **நாலய லாரும் அறிந்தொழிந்தார்**
   **பாணியாது என்னை மருந்துசெய்து**
   **பண்டுபண் டாக்கஉறுதிராகில்**
   **மாணியுருவாய் உலகளந்த**
   **மாயனைக் காணில் தலைமறியும்**
   **ஆணையால் நீரென்னக் காக்க வேண்டில்**
   **ஆய்ப்பாடிக் கேஎன்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

இனிமேல் ஒரு பயனும் இல்லை. ஏனெனில் ஊரில் உள்ளவர் எல்லாரும் எனது நிலையை அறிந்து கொண்டார்கள். காலதாமதமின்றி வேண்டும் பரிகாரங்களைச் செய்து, என்னை முன்போல் இருக்கச்செய்ய நினைப்பீர்களாகில், நீங்கள் என்னை உண்மையாகக் காப்பாற்ற விரும்புகிறீர்களாகில், என்னைத் திருவாய்ப்பாடியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள். அவ்விடத்தில் எம்பெருமானைக் காணில் இந்த நோயானது தீரும்.

**3. தந்தையும் தாயும்உற் றாரும்நிற்கத்**
**தனிவழி போயினாள் என்னும் சொல்லு!**
**வந்தபின் னைப்பழி காப்பரிது**
**மாயவன் வந்துருக் காட்டுகின்றான்**
**கொந்தன மாக்கிப் பரக்கழித்துக்**
**குறும்புசெய் வானோர் மகனைப் பெற்ற**
**நந்தகோ பாலன் கடைத்தலைக்கே**
**நள்ளிருட் கண்என்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

தந்தையும் தாயும் உற்றாரும் இருக்கும்போது இவன் தனிவழி போயினாள் என்னும் சொல் உலகில் பரவின பிறகு அப்பழியைத் தடுப்பது முடியாது. நான்தனிவழி போகாதிருக்கவும் முடியவில்லை. ஏனெனில், கண்ணபிரான் எதிரே வந்து தன் வடிவைக் காட்டி இழுக்கின்றான். இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் பெண்களைக் குடிகெடுத்துக் குறும்பு செய்யும் பிள்ளையைப் பெற்றவளான நந்தகோபாலருடைய திருமாளிகை வாசலில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள்.

**4. அங்கைத் தலத்திடை ஆழிகொண்டான்**
**அவன்முகத்து அன்றி விழியேன் என்று**
**கெங்கச்சுக் கொண்டுகண் ஆடையார்த்துச்**
**சிறுமானிடவரைக் காணில் நாணும்**
**கொங்கைத் தலம்இவை நோக்கிக் காணீர்**
**கோவிந்த னுக்கல்லால் வாயில்போகா**
**இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்**
**யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

அழகிய திருக்கைத் தலத்தில் சக்கரத்தை ஏந்தியிருப்பவனான கண்ணபிரானுடைய முகத்தைத் தவிர மற்றவர்களுடைய முகத்தில் விழிக்க மாட்டேன் என்று நல்ல கஞ்சுகமாகிய ஆடையினால் கண்களை மூடிக் கொண்டு சிறு மானிடவரைக் காணில் நானும் இங்கொங்கைகளைத் தாய்மார்களே! நீங்கள் உற்று நோக்குங்கள். இவை கண்ணபிரானைத் தவிர்த்து மற்ற ஒருவருடைய வீட்டு வாசலை நோக்கமாட்டா. ஆகையால் நான் இவ்விடத்தில் வாழ்வதை விட்டு என்னை யமுனை நதிக்கரையில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள்.

**5. ஆர்க்கும்என் நோயிது அறியலாகாது**
**அம்மனை மீர்! துழ திப்பட்டாதே!**
**கார்க்கடல் வண்ணன்என் பான் ஒருவன்**
**கைகண்ட யோகம் தடவத்தீரும்**
**நீர்க்கரை நின்ற கடம்பையேறிக்**
**காளியன் உச்சியில் நட்டம்பாய்ந்து**
**போர்க்கள மாக நிருத்தம் செய்த**
**பொய்கைக் கரைக்கு என்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

தாய்மார்களே! என்னுடைய இந்த நோய் யாராலும் அறிய முடியாதது. ஆனால், நீங்கள் வருந்தாமல் காளிங்க மடுவின் கரையில் உள்ள கடம்ப மரத்தின்மேல் ஏறி அங்கிருந்து காளிய நாகத்தின் படத்தின் மேல் ஒரு நர்த்தன வகையாகப் பாய்ந்து அப்பொய்கை போர்க்களமாக நர்த்தனம் செய்த மடுவின் கரையில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். கடல்வண்ணனாகிய கண்ணபிரான் என்னைத் தடவினால் இந்த நோய் தீர்ந்துவிடும். இது தான் கை கண்ட உபாயம்.

**6. கார்த்தண் முகிலும் கருவிளையும்**
**காயா மலரும் கமலப்பூவும்**
**ஈர்த்திடு கின்றன என்னை வந்திட்டு**
**இருடீ கே சன்பக்கல் போகேயென்று**
**வேர்த்துப் பசித்து வயிறசைந்து**
**வேண்டிசில் உண்ணும்போது ஈதென்று**
**பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்**
**பத்தவி லோசனத்து உய்த்திடுமின்**

**தெளிவுரை:**

கார்கால மேகமும் கருவிளைப் பூவும் தாமரை மலருமாகிய இவை எதிரே வந்துநின்று 'கண்ணபிரானிடம் நீயும் போ' என்று என்னை இழுக்கின்றன. ஆகையால், வேர்த்துப் பசியால் வருந்தி வயிறு தளர்ந்து உண்ணும் காலம் இது என்று முனிவர்களின் பத்தினிகள் கொண்டு வரும் உணவை எதிர்பார்த்திருந்து உண்டு நெடுநாளாக அருள்பாலிக்கும் அந்த இடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

**7. வண்ணம் திரிவும் மனங்குழைவும்**
**மானம்இ லாமையும் வாய்வெளுப்பும்**
**உண்ணல் உறாமையும் உள்மெலிவும்**
**ஓதநீர் வண்ணன்என் பான்ஒருவன்**
**தண்ணந் துழாயென்னும் மாலைகொண்டு**
**குட்டத்தணியும் பிலம்பன் தன்னைப்**
**பண்ணழி யப்பல தேவன்வென்ற**
**பாண்டி வடத்துஎன்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

என் உடல்நிறத்தின் மாறுபாடும், மனத்தளர்ச்சியும் மானம் இல்லாமையும் வாய்வெளுப்பும் உணவில் விருப்பம் இல்லாமையும் உள்மெலிவும் ஆகிய இவையெல்லாம் கடல் வண்ணனாகிய கண்ணபிரானுடைய திருத்துழாய் மாலையைக் கொண்டுவந்து சூட்டினால் நீங்கும். அது செய்ய முடியாதாகில் பலராமன் பிரலம்பாசுரனைக் கொான்றுமுடித்த இடமாகிய பாண்டீரமென்னும் ஆலமரத்தின் அருகில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

**8. கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்**
**காடுவாழ் சாதியும் ஆகப்பெற்றான்**
**பற்றி உரலிடை யாப்பும் உண்டான்**
**பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக்கொலோ?**
**கற்றனபேசி வசைவுணாதே**
**காலிகள் உய்ய மழைதடுத்து**
**கொற்றக் குடையாக ஏந்திநின்ற**
**கோவர்த் தனத்துஎன்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

கண்ணபிரான் கன்றுகளை மேய்த்தவன். காடுவாழ் சாதியும் ஆகப்பெற்றான். வெண்ணெய்க் களவில் பிடிபட்டு உரவில் கட்டப்பட்டான் என்று குணத்தையும் குற்றமாகக் கொள்ளும் பாவிகளே! உங்களுக்குக் கேலிப்பொருளாயிற்று. இனியாகிலும் நீங்கள் கற்ற கல்விகளைப் பேசி உன்னிடத்தில் வசவு கேட்டுக்கொள்ளாமல் பசுக்கள் பிழைக்கும்படி பெருமழையைத் தடைசெய்து, வெற்றிக்குடையாகக் கண்ணபிரான் ஏந்தி நின்ற கோவர்த்தன மலையருகே என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

**9. கூட்டில் இருந்து கிளி எப்போதும்**
**கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்**
**ஊட்டக்கொடாது செறுப்பனாகில்**
**உலகளந்தான்! என்று உயரக்கூவும்**
**நாட்டில் தலைப்பழி எய்தியுங்கள்**
**நன்மை யிழந்து தலையிடாதே**
**சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்**
**துவரா பதிக்குஎன்னை உய்த்திடுமின்.**

**தெளிவுரை:**

நான் வளர்த்த கிளியானது கூட்டில் இருந்து கொண்டு எப்பொழுதும் 'கோவிந்தா கோவிந்தா' என்று கூறுகின்றது. உணவு கொடாமல் துன்பப்படுத்தினால் 'உலகளந்த பெருமானே' என்று உரக்கக் கூவுகின்றது. இவ்வுலகில் நீங்கள் பெருத்த அபவாதத்தைச் சம்பாதித்து உங்களுடைய நல்ல பேரைக் கெடுத்துக்கொண்டு தலை கவிழ்ந்து நிற்காதபடி உயர்ந்த மாடங்களையுடைய துவாரகையில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்.

**10. மன்னு மதுரை தொடக்கமாக**
**வண்துவ ராபதி தன்னளவும்**
**தன்னைத் தமருய்த்துப் பெய்ய வேண்டித்**
**தாழ்குழ லாள் துணிந்ததுணிவை**
**பொன்னியல் மாடம் பொலிந்து தோன்றும்**
**புதுவையார் கோன்விட்டு சித்தன்கோதை**
**இன்னிசை யால் சொன்ன செஞ்சொல்மாலை**
**ஏத்தவல் லார்க்குஇடம் வைகுந்தமே.**

**தெளிவுரை:**

தாழ்ந்த குழலை உடையவளாய், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளவர்க்குத் தலைவராகிய பெரியாழ்வாருடைய திருமகளாகிய ஸ்ரீ ஆண்டாள், மதுரை முதற்கொண்டு துவாரகை வரைக்கும் சொல்லப்பட்ட சில திவ்விய தேசங்களில் தன்னைத் தன் உறவினர் கொண்டு போய்ச் சேர்க்கும்படி கொண்ட துணியை இன் இசையால் சொன்ன இத்திருமொழியை ஓதவல்லவர்களுக்கு வாழும் இடம் பரமபதமேயாம்.

## 13-ஆம் திருமொழி – கண்ணன் என்னும்
## ‘அச்சுதன் அணிபொருட்கொண்டு அவலம் தணிமின்’ எனல்
## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
## (பைரவி ராகம் - ஆதி தாளம்)

1. **கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனை**
   **புண்ணில் புளிப்பெய் தாற்போலப் புறம்நின்று அழகுபேசாதே**
   **பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில் பீதக**
   **வண்ண ஆடை கொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே.**

**தெளிவுரை:**

கண்ணன் என்னும் கருந்தெய்வத்தினுடைய காட்சியில் பழகிக் கிடக்கிற என்னைக் குறித்து, ஓ! தாய்மார்களே! நீங்கள் தூரஇருந்து கொண்டு புண்ணில் புளிப் பெய்தாற்போலப் பேசுவதைத் தவிர்த்து, பெண்ணின் வருத்தம் அறியாத கண்ணபிரானுடைய அரையில் கட்டிய பீதாம்பரத்தைக் கொண்டு வந்து என்னுடைய காதல் நோய் தீரும்படி என் மேல் வீசுங்கள்.

2. **பால்ஆ லிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட்டிருந்தேனை**
   **வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே**
   **கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி**
   **நீலார் தண்ணந் துழாய்கொண்டுஎன் நெறிமென் குழல்மேல் சூட்டீரே.**

**தெளிவுரை:**

பால் வடியும் ஆலந்தளிரில் கண் வளர்ந்தருளின பெருமானுடைய வலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிற என்னைக் குறித்து வேல் கொண்டு துறைத்தாற்போல உங்களுக்குத் தோன்றினபடியெல்லாம் சொல்வதைவிட்டு, ஆயர்குலப்பிள்ளையாய்க் கோலைக் கொண்டு பசுக்கூட்டங்களை மேய்த்தவனாய்த் திருக்குடந்தையில் கண் வளர்ந்தவனும் குடக்கூத்து ஆடினவனுமான கண்ணபிரானுடைய திருத்துழாயைக் கொண்டு வந்து என் கூந்தலில் சூட்டுங்கள்.

3. **கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக்கண் என்னும் சிறைக்கோலால்**
   **நெஞ்சூடு உருவ வேவுண்டு நிலையும் தளர்ந்து நைவேனை**
   **அஞ்சேல் என்னான் அவன்ஒருவன் அவன்மார்பு அணிந்த வனமாலை**
   **வஞ்சியாதே தருமாகில் மார்வில் கொணர்ந்து புரட்டீரே.**

**தெளிவுரை:**

கம்சனைத் தொலைத்தவனும் வில்போன்ற புருவத்தை உடையவனுமான கண்ணபிரான் கடைக்கண் ஆகிய சிறகையுடைய அம்பால் நெஞ்சு முழுவதும் வெந்து நிலைகுலைந்து வருந்துகின்ற என்னை நோக்கிப் 'பயப்படாதே' என்று ஒரு சொல்லையும் சொல்லாத அப்பெருமான், வனமாலையை வஞ்சியாமல் தருவானாகில் அதைக் கொண்டு வந்து என் மார்பில் வெப்பம் தணியுமாறு புரட்டுங்கள்.

4. **ஆரே உலகத்து ஆற்றுவார்? ஆயர் பாடி கவர்ந்துண்ணும்**
   **காரேறு உழக்க உழக்குண்டு தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை**
   **ஆரா அமுதம் அனையான்தன் அமுதவாயில் ஊறிய**
   **நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி இளைப்பை நீக்கிரே.**

**தெளிவுரை:**

திருவாய்ப்பாடி முழுவதையும் கொள்ளை கொண்டு அனுபவிக்கிற ஒரு கறுத்த காளை போன்ற கண்ணன் துன்புறுத்த அதனால் துன்பப்பட்டுத் தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை இவ்வுலகில் ஆறுதல் சொல்பவர் எவரும் இலர். ஆரா அமுதம் அனையான்தன் அமுதவாயில் ஊறிய நீரையாவது உலராமல் கொண்டு வந்து அதை நான் பருகும்படி செய்து என் இளைப்பை நீக்குவீர்களாக.

5. **அழிலும் தொழிலும் உருக்காட்டான் அஞ்சேல் என்னான் அவனொருவன்**
   **தழுவி முழுசிப் புகுந்தென்னைச் சுற்றிச் சுழன்று போகானால்**
   **தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே நெடுமால் ஊதி வருகின்ற**
   **குழலின் தொளைவாய் நீர்கொண்டு குளிர முகத்துத் தடவீரே.**

**தெளிவுரை:**

அழுதாலும் தொழுதாலும் தன் உருவைக் காட்டாதவனும் 'அஞ்சேல்' என்று சொல்லாதவனுமாகிய அந்தக் கண்ணன் இங்கே வந்து என்னை நெருக்கி அணைத்துச் சுற்றிச் சுழன்று போகாமல் இருக்கிறான். சோலையின் கீழ் பசுக் கூட்டங்களின் பின் செல்லும் கண்ணபிரான் ஊதிக்கொண்டு வருகின்ற குழலின் துளைவாய் சிந்துகின்ற நீரைக்கொண்டு வந்து என் முகத்தில் தடவுங்கள்.

6. **நடையொன்று இல்லா உலகத்து நந்தகோபன் மகன் என்னும்**
   **கொடிய கடிய திருமாலால் குளப்புக்கூறு கொளப்பட்டு**
   **புடையும் பெயர கில்லேன் நான் போட்கன் மிதித்த அடிப்பாட்டில்**
   **பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள் போகா உயிர் என் உடம்பையே.**

**தெளிவுரை:**

நடையொன்று இல்லா இவ்வுலகில் 'நந்தகோபாலன் மகன்' என்று பிரசித்தனாய் இரக்கம் இல்லாதவனாய் கடியவனான திருமாலால் அபலையான நான் மிகவும் துன்புறுத்தப்பட்டு எளிமையாய் உள்ளேன். வெட்கமில்லாத அக்கண்ணபிரான் மிதித்த இடத்தில் உண்டான பாத தூளியையாவது கொண்டு வந்து உயிர் போகாத என் உடம்பில் பூசுங்கள்.

7. **வெற்றிக் கருளக் கொடியான்தன் மீமீது ஆடா உலகத்து**
   **வெற்ற வெறிதே பெற்றதாய் வேம்பே யாக வளர்த்தானே**
   **குற்றமற்ற முலை தன்னைக் குமரன் கோலப் பணைத்தோளோடு**
   **அற்ற குற்றம் அவை தீர அணைய அமுக்கிச் சுட்டீரே.**

**தெளிவுரை:**

கருடனை வெற்றிக் கொடியாக உடைய எம்பெருமானுடைய ஆணையை மீறிச் செல்ல முடியாத இவ்வுலகத்தில் அவனைப் பெற்ற யசோதை தனது புத்திரனை ஒருவர்க்கும் பயன் இன்றியே வேப்பங்காய் போல் கசக்கும்படியாக வளர்க்கின்றாள். குற்றமற்ற என் தனங்களைத் தீண்டக்கூடிய அப்பெருமானுடைய கோலப்பணைத்தோளோடு அணைத்துக் கட்டிவிடுங்கள்.

8. **உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத**
   **கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த் தனனைக் கண்டக்கால்**
   **கொள்ளும் பயனொன்று இல்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்**
   **அள்ளிப் பறித்திட்டு அவன்மார்வில் எறிந்தென் அழலைத் தீர்வேனே.**

**தெளிவுரை:**

உள்ளுக்கு உள்ளேயே கரைந்து நைந்து போகிற என்னைப் பற்றி உயிருடன் இருக்கிறாளா இறந்தனளா என்றும் கேளாதவனாய்க் கொள்ளை கொள்ளும் குறும்பனாய் உள்ள கண்ணபிரானை ஒருகால் நான் காணப்பெற்றேனாகில் உபயோகமற்ற என்னுடைய இந்த தனங்களை வேர் முதலோடு பற்றிப் பிடுங்கி அந்தக் கண்ணன் மார்பில் எறிந்துவிட்டு என் துக்கத்தைப் போக்கிக் கொள்ளப் பெறுவேன்.

9. **கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்த தற்கோர் குற்றேவல்**
   **இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவந்தான் என்**
   **செம்மை யுடைய திருமார்வில் சேர்த்தா னேலும் ஒருஞான்று**
   **மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி விடைதான் தருமேல் மிக நன்றே.**

**தெளிவுரை:**

என் பருத்த தனங்களினுடைய குமைச்சல் தீரும்படி கண்ணபிரானுக்கு அந்தரங்கமான கைங்கரியத்தை இந்தப் பிறவியில் செய்யப் பெறாமல் கழிந்த பின்பு வேறு இடத்தில் சென்று செய்யக்கூடியதான தவந்தான் எதற்கு? செம்மையுடைய திருமார்பில் என்னை அவன் சேர்த்துக் கொண்டானாகில் நல்லது. ஒரு நாள் என் முகத்தைப் பார்த்து மெய்யே சொல்லி ''நீ எனக்கு வேண்டாம் போ'' என்று தள்ளிவிட்டமை தோன்ற விடை கொடுப்பானாகில் அது மிகநன்று.

**10. அல்லல் விளைத்த பெருமானை ஆயர்பாடிக்கு அணிவிளக்கை**
**வில்லிபுதுவை நகர்நம்பி விட்டு சித்தன் வியன்கோதை**
**வில்லைத் தொலைத்த புருவத்தான் வேட்கையுற்று மிக விரும்பும்**
**சொல்லைத் துதிக்க வல்லார்கள் துன்பக் கடலுள் துவனாரே.**

**தெளிவுரை:**

வில்லைத் தோற்கடித்த புருவத்தை உடையவளாய் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரனா பெரியாழ்வாருடைய மகளாய் ஆச்சர்ய குணசாலியான ஆண்டாள் திருவாய்ப்பாடி முழுவதும் குறும்பு விளைத்து அதனால் பெருமை பெற்றவனும் ஆயர்பாடிக்கு அணிவிளக்காய் இருப்பவனுமான கண்ணபிரான அடைய ஆசைப்பட்டு அருளிச்செய்த இப்பாசுரங்களைப் புகழ்ந்து ஓத வல்லவர்கள் துன்பக்கடலுள் துவண்டு வருந்தமாட்டார்கள்.

**14-ஆம் திருமொழி - பட்டி மேய்ந்து**
**விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை கூறுதல்**
**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**
**(கல்யாணி ராகம் - ரூபக தாளம்)**

1. **பட்டி மேய்ந்தோர் காரேறு பலதே வற்கோர் கீழ்க்கன்றாய்**
   **இட்டீ றிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே**
   **இடமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி**
   **விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

கண்ணபிரான் என்ற கறுத்த காளையொன்று காவல் இல்லாமல் எதேச்சையாய்த் திரிந்து கொண்டும், பலராமனுக்கு ஒப்பற்ற தம்பியாய்ப் பலவகையான ஆடம்பரங்களைச் செய்து, விளையாடிக் கொண்டும் இப்படி வரப் பார்த்தீர்களா? பசுக்களைத் திருப்தியாக மடக்கி மேய்த்துத் தண்ணீர் குடிக்கச் செய்து, அவற்றை மேயவிட்டுக் கொண்டு அப்பெருமான் விளையாடுவதைப் பிருந்தாவனத்தில் கண்டோம்.

2. **அனுங்க என்னைப் பிரிவுசெய்து ஆயர்பாடி கவர்ந்துண்ணும்**
   **குனுங்கு நாறிக் குட்டேற்றைக் கோவர்த் தன்னைக் கண்டீரே?**
   **கணங்களோடு மின்மேகம் கலந்தாற்போல வனமாலை**
   **மினுங்க நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

நான் வருந்தும்படியாக என்னைப் பிரியவிட்டுப் போய்த் திருவாய்ப்பாடியைக் கவர்ந்து அனுபவிக்கின்றவனும் வெண்ணெய் நாற்றம் வீசும் இளைய காளை போன்றவனுமான கண்ணபிரானைப் பார்த்தீர்களா? மின்னலும் மேகமும் கலந்தாற்போல் வனமாலை திகழப் பெற்றுத் தோழர்களோடு விளையாடுவதைப் பிருந்தாவனத்தில் கண்டோம். ஆயர்பாடியில் பல உற்பாதங்கள் நேர்ந்தன. அதனால் ஆயர்கள் பிருந்தாவனம் என்ற இடத்திற்கு சென்று குடியேறினர். கண்ணன் சென்ற பிறகு அங்கு வளம் பெருகியது.

3. **மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை**
   **ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே?**
   **மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும்**
   **மேலாப் பின் கீழ் வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

பெண்கள் விரும்பும்படிக் கவர்ச்சியாகப் பிறந்த பெருமானாய், மோகம் கொள்ளும்படி செய்கின்ற மணவாளப் பிள்ளையாய்ப் பொருந்தாத பொய்களைச் சொல்லுகின்ற கண்ணபிரானை இங்கே வரப் பார்த்தீர்களா? மேலே பரவின வெய்யிலைத் திருமேனியில் படாமல் தடுப்பதற்காக கருடனுடைய சிறகாகிற விதானத்தின்கீழ் வரும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

**4. கார்த்தண் கமலக் கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை**
**ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே**
**போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக் கன்றேபோல்**
**வேர்த்து நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

காளமேகத்தில் குளிர்ந்த தாமரை பூத்தாற்போன்றுள்ள திருக்கண்கள் என்ற பாசத்தில் என்னை அகப்படுத்தி என் நெஞ்சையும் கூடவே இழுத்துக் கொண்டுபோய் விளையாடும் ஈசனைக் கண்டீர்களோ? போர்வையாகப் போர்த்த முத்துச் சட்டையை யுடையதாய் அழகிய பெரிய யானைக் குட்டிபோல வேர்த்து நின்ற பெருமான் விளையாடுவதைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

**5. மாதவன் என் மணியினை வலையில் பிழைத்த பன்றிபோல்**
**ஏதும் ஒன்றும் கொளத்தாரா ஈசன் தன்னைக் கண்டீரே?**
**பீதக ஆடை உடைதாழப் பெருங்கார் மேகக் கன்றேபோல்**
**வீதியார வருவானை விருந்தாவனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

திருமகள் கேள்வனாய் என் மணி போன்றவனாய் வலையிலிருந்து தப்பிப்பிழைத்த ஒரு பன்றி போல் செருக்குற்று ஒருவர் கைக்கும் எட்டாதவனான ஈசனைக் கண்டீரோ? பீதாம்பரமாகிய உடை தொங்கப் பெரு கார்மேகக்கன்று போல திருவீதி நிறைய எழுந்தருளும் பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

**6. தருமம் அறியாக் குறும்பனைத் தன்கைச் சார்ங்கம் அதுவே போல்**
**புருவ வட்டம் அழகிய பொருத்தம் இலியைக் கண்டீரே?**
**ஊருவு கரிதாய முகம் செய்தாய் உதயப் பருப்ப தத்தின்மேல்**
**விரியும் கதிரே போல்வானை விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

இரக்கம் இல்லாதவனாய்க் குறும்புகளைச் செய்பவனாய்த் தன் கையிலுள்ள சார்ங்க வில்லைப் போன்ற புருவ வட்டம் அழகு பெற்றவனாய்ப் பொருந்தி வாழப் பெறாதவனான அப்பெருமானைப் பார்த்தீர்களா? உடல் கருமை நிறமாய் முகம் சிவந்தும் இருப்பதால் உதய மலையின்மேல் எழுகின்ற சூரியன்போல் விளங்கும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே பார்த்தோம்.

**7. பொருத்த முடையநம்பியைப் புறம்போல் உள்ளும் கரியானை**
**கருத்தைப் பிழைத்து நின்றஅக் கருமா முகிலைக் கண்டீரே?**
**அருத்தித் தாரா கணங்களால் ஆரப்பெருகு வானம்போல்**
**விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

பொருத்தம் உடைய நம்பியை, உடம்பும் உள்ளமும் கறுத்தவனை, என் எண்ணத்தை ஏற்றுக் கொள்ளாதவனுமான அக்கருமையான முகிலைப் பார்த்தீர்களா? விரும்பப்படுகின்ற நட்சத்திரக் கூட்டங்களால் நிறைந்துள்ள ஆகாயம் போலப் பெருங்கூட்டமாய் எழுந்தருளியுள்ள அப்பெருமானைப் பிருந்தாவனத்தில் பார்த்தோம்.

**8. வெளிய சங்கொன்று உடையானைப் பீதக ஆடையுடைய யானை**
**அளிநன் குடைய திருமாலை ஆழி யானைக் கண்டீரே?**
**களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ்பூங் குழல்கள் தடந்தோள்மேல்**
**மிளிர நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

வெளுத்த சங்கை உடையவனாய்ப் பீதாம்பரத்தை உடுத்தியிருப்பவனாய்க் கருணை உடையவனாய்ச் சக்கரத்தை உடையவனாய் அக்கண்ணபிரானைக் கண்டீர்களா? களிவண்டு எல்லாப் பக்கங்களிலும் கலந்தாற்போல் மணம் வீசுகின்ற மலரணிந்த கழல்கள் பெரிய திருத்தோள்களில் மேல் தாழ்ந்து நின்று விளையாட அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

**9. நாட்டைப் படையென்று அயன்முதலாத் தந்த நளிர்மாமலர் உந்தி**
**வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் தன்னைக் கண்டீரே?**
**காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளும் உடன்மடிய**
**வேட்டையாடி வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.**

**தெளிவுரை:**

உலகங்களைப் படைப்பாயாக என்று பிரமன் முதலான பிரஜாபதிகளை உண்டாக்கின திருநாபிக் கமலமான வீட்டை உண்டாக்கி விளையாடும் மேலான பெருமானைக் கண்டீர்களா? தேனுகாசுரனும் குவலயாபீட யானையும் பகாசுரனும் உடனே மாளும்படியாகக் காட்டிற் சென்று வேட்டையாடி வரும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

**10. பருந்தாட் களிற்றுக்கு அருள்செய்த பரமன் தன்னை பாரிமேல்**
**விருந்தா வனத்தே கண்டமை விட்டு சித்தன் கோதைசொல்**
**மருந்தாம் என்று தம் மனத்தே வைத்துக்கொண்டு வாழ்வார்கள்**
**பெருந்தா ளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியா தென்றும் இருப்பாரே.**

**தெளிவுரை:**

பருத்த கால்களையுடைய கஜேந்திரன் என்னும் யானைக்கு அருள்செய்த திருமாலை இந்நிலத்தில பிருந்தாவனத்தில் கண்டமை பற்றிப் பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் அருளிச்செய்த இப்பாசுரங்களைப் பிறவிநோய்க்கு மருந்தாம் என்று தங்கள் நிலையில் வைத்து வாழ்பவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளின் மீது எப்போதும் பிரியாது இருப்பார்கள்.

**ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.**
**நாச்சியார் திருமொழி ஸம்பூர்ணம்**

# தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த
# திருப்பள்ளியெழுச்சி

### எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### (பூபாள ராகம் - ஆதி தாளம்)

1. **கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்**
**கனை இருள் அகன்றது காலையம் பொழுதாய்**
**மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்**
**வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி**
**எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்து**
**இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்**
**அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே**

**உரை:**

அரங்கத்தம்மா! சூரியன் கிழக்கில உதய கிரியின் உச்சியில் வந்து சேர்ந்தான். அடர்ந்திருந்த இருள் அகன்றது. அழகிய தேவர்களும் அரசர்களும் ஒருவருக்கொருவர் முற்பட வந்து திரண்டு, தெற்குத் திசையில் நிறைந்து நின்றார்கள், இவர்களோடு வந்து இவர்களது வாகனமாகிய பெரிய ஆண் யானைத் திரள்களும் பெண் யானைத் திரள்களும் பெரிய வாத்தியங்களும் ஒலிக்கும்போது எல்லாத் திசைகளிலும் அலை எறிகின்ற கடல் ஒலியை ஒத்திருக்கிறது. ஆதலால், திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக.

2. **கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்**
**கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ**
**எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்**
**ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிறகு உதறி**
**விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்**
**வெள்ளெயிறு உறஅதன் விடத்தினுக்கு அனுங்சி**
**அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த**
**அரங்கத்தமா! பள்ளி எழுந்தரு ளாயே.**

**உரை:**

கீழ்க்காற்று, கெழுங் கொடிகளையுடைய முல்லையின் அழகிய மலர்களை அணைந்து கொண்டு இதோ வீசுகின்றது. மலர் அணையில் பள்ளிகொள் அன்னங்கள் பனியால் நனைந்து தம்முடைய அழகிய சிறகுகளை உதறிக்கொண்டு உறக்கம் விட்டு

எழுந்தன. தன் காலை விழுங்கின முதலையினுடைய பிலம்புரை பேழ்வாய் வெள் எயிறு உற அதன் துன்பத்திற்கு மிகவும் ஆட்பட்ட கஜேந்திரனுடைய அருந்துயரைப் போக்கிய அரங்கத்தம்மா, பள்ளியெழுந் தருளாயே!

**3. சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்**
**துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி**
**படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ**
**பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின்**
**மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற**
**வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ**
**அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

எல்லா இடங்களிலும் சூரிய கிரகணங்கள் பரவிவிட்டன. ஆகாயத்தில் நெருங்கிய நட்சத்திரங்களினுடைய மின் ஒளி சுருங்கி மிக்க ஒளியையுடைய இக்குளிர்ந்த சந்திரனும் ஒளி மழுங்கினான், இருள் அகன்றது. இந்த விடியற் காற்று பசுமையான சோலைகளிலுள்ள பாக்குமரங்களின் மடலைக் கீற அதனால் அழகிய பாளைகள் மணம் வீச அதை முகந்து கொண்டு வீசுகின்றது. வலிய ஒளியுடைய சக்கரத்தை ஏந்திய அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே!

**4. மேட்டின மேதிகள் தளைவிடும் ஆயர்கள்**
**வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்**
**ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்**
**இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை**
**வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!**
**மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம்**
**ஆட்டிய அடுதிறல் அயோத்திஎம் அரசே**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

உயர்த்தியும் இளைமையும் தங்கிய எருமைகளை மேய்க்கக் கட்ட விழ்த்து விடுகிற ஆயர் ஊதுகிற புல்லாங் குழலின் நாதமும் எழுதுகளின் கழுத்திற் கட்டியுள்ள மணிகளின் ஓசையும் ஆகிய இவ்விரண்டும் கூடின ஓசை, திசையெங்கும் பரவியது. கழனிகளிலுள்ள வண்டுகளின் திரள் ஆரவாரித்துக் கொண்டு கிளம்பின. இலங்கயைர்

குலத்தை வாட்டிய வரிசிலை வானவர்ஏறே! விசுவாமித்திர முனிவருடைய யாகத்தை நிறைவேற்றி முடிவில் அவபிரதம் எனும் மங்கள ஸ்நானம் செய்வித்தருளின விரோதிகளை ஒழிக்கவல்ல வீரமுடையவனாய் அயோத்தி யாளும் எம் அரசே! அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

**5. புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்**
**போயிற்றுக் கங்குல் புகந்தது புலரி**
**கலந்தது குணதிசைக் கனைகளடல் அரவம்**
**களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த**
**அலங்கலம் தொடையல் கொண்டு அடியினை பணிவான்**
**அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா**
**இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்**
**எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

சோலையிலுள்ள பறவைகளும் ஆரவாரம் செய்கின்றன. இரவு கழிந்தது. விடியற் காலம் வந்தது கீழ்த்திசையில் செய்கின்ற கடலினுடைய ஓசை வியாபித்தது. தேனைப் பருகிக் களிக்கின்ற வண்டுகள் ஒலிசெய்யும் பலவகைப் பூக்களால் தொடுக்கப் பெற்ற அழகிய மாலைகளைக் கொண்டு தேவர்கள் தேவரீருடைய திருவடிகளைப் பணிய வந்துள்ளனர். ஆகையால், எம்பெருமானே! விபீடணன் வழிபாடு செய்கிற கோயிலில் எழுந்தருளியிருக்கிற பெருமானே! பள்ளியெழுந்தருளாயே.

**6. இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரொ?**
**இறையவளர் பதினொரு விடையரும் இவரோ!**
**மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?**
**மருதமும் வசுக்களும் வந்துவந்து ஈண்டி**
**புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்**
**குமரதண் டம்புகுந்து ஈண்டிய வெள்ளம்**
**அருவரை யனையநின் கோயில்முன் இவரோ?**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

அழகிய பெரிய தேரொடு கூட பன்னிரண்டு ஆதித்தர்களும், உலகக் காலவர்களான ஏகாதச ருத்திரர்களும், மயில்வாகனனான சுப்பிரமணியனும், மருத் கணங்களான ஒன்பதின்மரும், அஷ்ட வசுக்களும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு

வந்து நெருங்கி நிற்க, இவர்களுடைய வாகனங்களான குதிரைகள் பூட்டிய தேர்களும் பாட்டும் கூத்துமாய்த் தேவர்கள் வந்துபுகுந்து நெருங்கியிருக்கிறார்கள். பெயரி மலை போன்ற கோயிலில் எழுந்தருளியுள்ள அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

**7. அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ?**
**அருந்தவ முனிவரும் மருதமும் இவரோ?**
**இந்திரன் ஆனையும் தானும்வந்த திவனோ?**
**எம்பெரு மான்!உன் கோயிலின் வாசல்**
**சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க**
**இயக்கமும் மயங்கினர் திருவடி தொழுவான்**
**அந்தரம் பாரிடம் இல்லைமற் றிதுவோ?**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

எம்பெருமானே! உன் கோயிலின் வாசலில் தேவேந்திரனும் அவனுடைய வாகனமான ஐராவதமும் வந்திருப்பதோடு அண்டத்துள் இருக்கின்ற தேவர்களும் அவர்களுடைய பரிவாரங்களும் தவசிகளும் மருத்கணங்களும் யட்சர்களும் கந்தர்வர் நெருக்கவும் வித்தியாதரர்கள் தள்ளவும் திருவடி தொழுவான் மயங்கினர். ஆகாயமும் பூமியும் இடமில்லாமல் நிரம்பி உள்ளன. அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

**8. வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க**
**மாநிதி கபிலைஒண் கண்ணா முதலா**
**எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு**
**ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்**
**தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ?**
**தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி**
**அம்பர தலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்**
**அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

தேவருக்குச் சமர்ப்பிப்பதற்காக மணமுள்ள அறுகம்புல்லும் சிறந்த சங்கநிதி பதுமநிதிகளும் கொண்டுவந்து தேவர்களும் காமதேனுவும் ஒளி பொருந்திய கண்ணாடி முதலாக எம்பெருமான் பார்ப்பதற்குத் தகுதியான உபகரணங்கள் எல்லாவற்றையும் கொண்டு முனிவர்களும் தும்புரு நாரதர்களும் வந்து நின்றார்கள். இதுவும் அன்றி

சூரியனும் துலங்கொளி பரப்பி உதயமானான். இருள் ஆகாயத்தினின்றும் நீங்கிப்போயிற்று. அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

**9. ஏதமில் தண்ணுமை எக்கம்மத் தளி**
**யாழ்குழல் முழவமொடு இசைதிசை கெழுமி**
**கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்**
**கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம்**
**மாதவர் வானவர் சாரணர் இயக்கர்**
**சித்தரு் மயங்கினர் திருவடி தொழுவான்**
**ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள**
**அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

குற்றமற்ற சிறுபறையும் ஒற்றைத் தந்தியுடைய எக்கமும் மத்தளமும் வீணையும் புல்லாங்குழல்களுமாய் எல்லாத் திசைகளிலும் இவற்றின் முழக்கத்தோடு இசை கெழுமி கீதங்கள் பாடினர். அவர்கள் கின்னரர்களும் கருடர்களும் கந்தவர்களும் மற்றுமுள்ளவர்களும் ஆவர். மாதவர்களும் தேவர்களும் சாரணர்களும் இயக்கர்களும் சித்தர்களும் தேவரீருடைய திருவடிகளைத் தொழுவதற்காக இரவெல்லாம் வருந்திக்கொண்டு இருக்கின்றனர். ஆகையால் அவர்களுக்குப் பகல் ஓலக்கம் அருள அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. (ஓலக்கம் - காட்சி தருதல்)

**10. கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?**
**கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ!**
**துடியிடையார்சுரி குழல்பிழிந் துதறித்**
**துகிலுடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா!**
**தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து**
**தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி யென்னும்**
**அடியனை அளியன் என்று அருளிஉன் அடியார்க்கு**
**ஆட்படுத்தாய்! பள்ளி எழுந்தருளாயே.**

**உரை:**

திருக்காவேரியால் சூழப்பட்ட திருவரங்கத்தில் கண் வளர்ந்தருளும் பெருமானே! மணமுள்ள தாமரை மலர்கள் மலர்ந்து விட்டன. சூரியனும் கடலில் உதய கிரியில் வந்து தோன்றினான். மாதர்கள் சுருண்ட மயிர்முடியை நீர்ப்பசையறப் பிழிந்து உதறிவிட்டு, துகில் உடுத்துக் கரையேறிவிட்டார்கள். திருத்துழாய் மாலையும் பூக்குடலையும் ஏந்தி விளங்கும் அடியேனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு ஆளாக்குவாய். அதற்காக, திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக.

## பெரியாழ்வர்

## பெரியாழ்வார் திருமொழி

### முதல் பத்து

### 1-ஆம் திருமொழி – வண்ண மாடங்கள்

### கண்ணன் திரு அவதாரச் சிறப்பு

### கலிவிருத்தம்

### (அபரூப ராகம் - அடதாளம்)

1. **வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்**
   **கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்**
   **எண்ணெய் கண்ணம் எதிரெதிர் தூவிடக்**
   **கண்ணன் முற்றம் கலந்துஅளறு ஆயிற்றே.**

**உரை:**

அழகிய மாடங்கள் சூழ்ந்த திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமான் நந்தகோபர் திருமாளிகையில் பிறந்தருளியபோது அங்குள்ளார் எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஒருவருக்கொருவர் எதிர்த்துத் தூவியதனால் அத்திருமுற்றம் முழுவதும் சேறாய் விட்டது. (கண்ணன் முற்றம் - கண் + நல் + முற்றம்)

2. **ஓடுவார்விடு வார்உகந்து ஆலிப்பார்**
   **நாடு வார்நம்பி ரான்எங்குற் றான்என்பார்**
   **பாடு வார்களும் பல்பறை கொட்டநின்று**
   **ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.**

**உரை:**

திருவாய்ப்பாடியனாது ஓடுவாரும், வழுக்கி விழுவாரும், கூச்சலிடுவாரும், பிள்ளையைத் தேடுவாரும், நமது கண்ணன் எங்கே! என்பாரும், பாடுவாரும், பலவகை வாத்தியங்கள் முழங்க நின்று கூத்தாடுவாருமாக ஆய்விட்டது.

3. **பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்**
   **காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்**
   **ஆணொப் பார்இவன் நேரில்லை காண்திரு**
   **ஓணத் தான்உல காளும்என் பார்களே.**

**உரை:**

கண்ணன் கம்சாதிகள் கண்படாதபடி தன்னைக் காத்து வந்து பிறந்த அளவில் ஆயர்கள் அவனைக் காண்கைக்கா உள்ளே நுழைவாரும் உள்ளே போய்க்கண்டு, வெளியே புறப்படுவாரும் இவனோடு ஒத்திருக்கும் ஆண்கள் யாரும் இல்லை. ‘‘இவன் திருவோண நட்சத்திரத்திற்கான திருமாலாகிற சர்வேஸ்தவரனுடைய விபூதிகளையெல்லாம் ஆளக்கடவன்’’ என்பாருமாக ஆனார்கள்.

**4. உறியை முற்றத்தது உருட்டிநின்று ஆடுவார்**
**நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்**
**செறிமென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்**
**அறிவ ழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே.**

**உரை:**

ஆனிரை மேய்ப்பவர்கள் அல்லது ஆயர்கள் உறிகளை முற்றத்திலே உருட்டி விட்டுக் கூத்தாடுவார் சிலரும், நெய்யையும் பாலையும் தயிரையும் தானம் பண்ணுவார் சிலருமாகச் சேரியடங்கலும் அறிவு கேடராயினர் - தம்மை மறந்தனர்.

**5. கொண்ட தாளுறி கோலக் கொழுமழு**
**தண்டினர்பறி யோலைச் சயனத்தர்**
**விண்டின் முல்லை அரும்பன்ன பல்லினர்**
**அண்டர் மிண்டிப் புகுந்துநெய் ஆடினார்.**

**உரை:**

உறிகளையும் கூர்மையான மழுக்கையும் துடிகளையும் உடையராய் ஓலைகளினாற் செய்த படுக்கையை உடையராய் முல்லையரும்பு போன்ற பற்களை உடையரான ஆனிரை மேய்ப்பவர்க்ள அல்லது ஆயர்கள் நெருங்கிப் புகுந்து மகிழ்ச்சியால் நெய்யாடல் ஆடினார்கள்.

**6. கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்**
**பைய ஆட்டிப்பசுஞ்சிறு மஞ்சளால்**
**ஐய நாவழித் தாளுக்கங் காந்திட**
**வையம் ஏழும் கண் டாள்பிள்ளை வாயளே.**

**உரை:**

கைகளையும் அடிகளையும் நீட்டி நிமிர்த்துக் கடாரத்தில் காய்ச்சின நீரி நீராட்டிப் பசு மஞ்சளால் மெல்லிதான நாக்கை வழிக்க யசோதைக்குக் கண்ணன் வாயைத் திறக்க, அவள் அவனுடைய வாயினுள் உலகங்களையெல்லாம் கண்டாள். (கடாரம் - பெரிய வாய் அகன்ற பாத்திரம்.)

7. **வாயுள் வையகங் கண்ட மடநல்லார்**
   **ஆயர் புத்திரன் அல்லன் அருந்தெய்வம்**
   **பாய சீருடைப் பண்புடைப் பாலகன்**
   **மாயன் என்று மகிழ்ந்தனர் மாதரே.**

**உரை:**

பிள்ளையின் வாயினுள் உலகங்களைக் கண்ட மாதர்கள்,“மிக்க குணசாலியான இப்பிள்ளை ஆயர்குலப் பிள்ளையல்லன், பெறுதற்கரிய தெய்வம்” என்று கூறிக் களித்தனர்.

8. **பத்து நாளும் கடந்த இரண்டாம்நாள்**
   **எத்தி சையும் சயமரம் கோடித்து**
   **மத்த மாமலை தாங்கிய மைந்தனை**
   **உத்தா னஞ்செய்து உகந்தனர் ஆயரே.**

**உரை:**

பன்னிரண்டாம் நாளான பெயரிடுஞ்சடங்கில் எங்கும் ஜயதோரண கம்பங்களை நாட்டி அலங்கரித்த யானைகள் தங்கியிருக்கிற கோவர்த்தன பர்வதத்தைக் குடையாக எந்தி நின்ற குழந்தையாகிய கண்ணனை ஆயர்கள் கைத்தலத்தில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் களித்தனர்.

9. **கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்**
   **எடுத்துக்கொள்ளில் மருங்கை யிறுத்திடும்**
   **ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்**
   **மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்!**

**உரை:**

நங்காய்,“இப்பிள்ளை தொட்டிலில் கிடந்தால் தொட்டில் சிதலம் ஆம்படி கால்களாய் உதைக்கின்றான். இவனை இடுப்பில் வைத்துக்கொண்டால் இடுப்பை

முறிக்கின்றான். ஒடுக்கி மார்பில் அணைத்துக் கொண்டால் வயிற்றில் பாய்கின்றான். இச்சேஷ்டைகளைப் பொறுக்கும் சக்தி இல்லாமையால் தாயாகிய நான் மிகவும் இளைத்தேன்'' என்றாள்.

**10. செந்நெல் ஆர்வயல் சூழ்திருக் கோட்டியூர்**
**மன்னு நாரணன்நம்பி பிறந்தமை**
**மின்னு நூல்லிட்டு சித்தன் விரித்த இப்**
**பன்னு பாடல்வல வார்க்கு இல்லை பாவமே.**

**உரை:**

செந்நெல் பயிர்மலிந்த கழனிகளால் சூழப்பட்ட திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமான் பண்டு திருவாய்ப்பாடியில் அவதரித்ததைக் குறித்து அந்தணர் தலைவரான பெரியாழ்வர் அருளிய இப்பதிகத்தை ஓதவல்லவர்களுக்குப் பாவம் அனைத்தும் நீங்கும்.

**2-ஆம் திருமொழி – சீதக்கடல்**

**திருப்பாதாதி கேசாந்தமாக அனுபவித்தல்**

**கலித்தாழிசை**

**(தன்யாசி ராகம் - ஆதி தாளம்)**

**1. சீதக் கடலுள் அமுதன்ன தேவகி**
**கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த**
**பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்**
**பாதக் கமலங்கள் காணீரே பவளவாயீர்! வந்துகாணீரே.**

**உரை:**

குளிர்ந்த கடலில் அமுதமாகப் பிறந்த பிராட்டியோடு ஒத்த தேவகியால், மலரணிந்த யசோதைப் பிராட்டிக்கு அனுப்பப்பட்ட குழந்தையான கண்ணன் தன் கைகளால் தான் திருபாதக் கட்டை விரலைச் சுவைக்கிறான். பவளம் போன்ற வாயுடைய பெண்களே! அவன் திருப்பாதத தாமரைகளைக் காணுங்கள்.

**2. முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்**
**தத்திப்பதித்துத் தலைப்பெய்தாற் போல் எங்கும்**
**பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்**
**ஒத்திட்டு இருந்தவா காணீரே ஒண்ணுதவீர்! வந்து காணீரே.**

**உரை:**

மணிவண்ணனான கண்ணனுடைய திருவடிகளில் முத்துக்களையும் இரத்தினங்களையும் வயிரங்களையும் நல்ல பொன்னையும் மாறிமாறிப் பதித்துச் சேர்ந்தாற் போல் விரல்கள் பத்தும் ஒன்றோடொன்று ஒத்து அமைத்திருக்கும்படி அழகிய நெற்றியையுடைய மாதர்கள் வந்து காணீர்.

**3. பணைத்தோள் இளவாய்ச்சி பால்பாய்ந்த கொங்கை**
**அணைத்தார உண்டு கிடந்தஇப் பிள்ளை**
**இணைக்காலில் வெள்ளித் தளைநின் றிலங்கும்**
**கணைக்கால் இருந்தவா காணீரே காரிகையீர்! வந்து காணீரே.**

**உரை:**

மூங்கில் போன்ற தோள்களையுடைய யசோதையின் பால்சொரிகின்ற முலையைத் திருக்கையல் அணைத்துக் கொண்டு, வயிறு நிரம்ப பால் அமுது செய்து

களித்துக் கிடக்கின்ற இந்தக் கண்ணனுடைய திருவடிகளில் வெள்ளித்தண்டை விளங்கும் கணைக்கால் இருந்தபடியை அழகிய பெண்காள்! வந்து காணீர்!

**4. உழந்தாள் நறுநெய்யோர் ஓர்தடா உண்ண**
**இழந்தாள் எரிவினால் ஈர்த்து எழில்மத்தின்**
**பழந்தாம்பால் ஓச்சப் பயத்தால் தவழ்ந்தான்**
**முழந்தாள் இருந்தவா காணீரே முகிழ் முலையீர்! வந்து காணீரே.**

**உரை:**

முயன்று சேர்த்த நறுநெய்யை ஒவ்வொரு பானையாகக் கண்ணன் அமுதுசெய்த அளவில் பிள்ளையைத் தான் இழந்தவளாக நினைத்த யசோதை வயிற்று எரிச்சலால் கையைப்பிடித்து இழத்து மத்தினுடைய காம்பைக் கொண்டு அடிப்பதாகக் கையில் எடுக்க அச்சத்தால் தவழ்ந்த அக்கண்ணனுடைய முழங்கால்கள் இருந்தபடியை மாதர்காள்! வந்த பாருங்கள்.

**5. பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத்து உண்டிட்டு**
**உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை**
**மறங்கொள் இரணியன் மார்பைமுன் கீண்டான்**
**குறங்குகளை வந்து காணீரே குவிமுலையீர்! வந்து காணீரே.**

**உரை:**

பகைவனான இரண்யனுடைய மார்பை முன்பு பிளந்தவனும் நிலைமாறி வந்த பூதனுடைய முலையைச் சுவைத்துண்டு ஒன்றும் அறியாமே உறங்குபவனைப் போலப் படுத்திருப்பவனுமான இக்கண்ணனுடைய திருத்தொடைகளை மாதகர்கள் வந்து காணுங்கள். (குறங்கு-தொடை)

**6. மத்தக் களிற்று வசுதேசர் தம்முடை**
**சித்தம் பிரியாத தேவி தன்வயிற்றில்**
**அத்தத்தின் பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்**
**முத்தம் இருந்தவா காணீரே முகிழ் நகையீர்! வந்து காணீரே.**

**உரை:**

மதயானைகளை நிர்வகிக்கின்ற வசுதேவருடைய மனத்தை விட்டுப் பிரியாத தேவகியினுடைய வயிற்றில் அஸ்த நட்சத்திரத்திற்குப் பத்தாவதான திருவோணத் திருநாளில் திருஅவதரித்த கண்ணனுடைய முத்துக்கள் முகர்ந்த அரைஞாணைப்

புன்முறுவல் கொண்ட மாதர்கள்! வந்து காணுங்கள்! (முத்தம்-மூத்திரக்கருவி என்பது மருவி முத்தம் என்றாயிற்று என, அச்சொல் கண்ணபிரானின் சின்னஞ்சிறு ஆண்குறியைச் சுட்டுவதாக வியாக்யான கர்த்தாக்கள் கூறுவர்.)

**7. இருங்கை மதகளிறு ஈர்க்கின் றவனை**
**பருங்கிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்தன்**
**நெருங்கு பவளமும் நேர்காணும் முத்தும்**
**மருங்கும் இருந்தவா காணீரே வாணுதவீர் வந்து காணீரே.**

**உரை:**

அழகிய நெற்றியையுடைய மாதர்கள் குவலயாபீடம் என்னும் மதயானையைத் தன்வசமாக்கிக் கொண்ட பாகனைக் கொன்று யானையின் கொம்புகளை முறித்துக்கொண்டு கம்சன் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு பாய்ந்தோடிய கண்ணனின் நகையணிந்த திருவரையை வந்து பாருங்கள்.

**8. வந்த மதலைக் குழாத்தை வலிசெய்து**
**தந்தக் களிறு போல் தானே விளையாடும்**
**நந்தன் மதலைக்கு நன்றும் அழகிய**
**உந்தி யிருந்தவா காணீரே ஒளியிழையீர்! வந்து காணீரே.**

**உரை:**

தன்னோடு விளையாட வந்த சிறுபிள்ளைகளின் கூட்டத்தில் தன், வல்லமையைக் காட்டிக்கொண்டு கொம்பு முளைத்த யானைக்குட்டி போல் தானே முக்கியனாய் நின்று விளையாடும் நந்தகோப குமாரனுடைய மிக அழகிய நாபியை, அழகிய ஆபரணங்களை அணிந்த மாதர்காள்! வந்து பாருங்கள்.

**9. அதிரும் கடல்நிற வண்ணனை ஆய்ச்சி**
**மதுர முலையூட்டி வஞ்சித்து வைத்து**
**பதறப் படாமே பழந்தாம்பால் ஆர்த்த**
**உதரம் இருந்தவா காணீரே ஒளிவளையீர்! வந்து காணீரே.**

**உரை:**

கடல் வண்ணனாகிய கண்ணனுக்கு யசோதையானவள் இனிய முலைப்பாலையூட்டி, இவனைக் கட்டப் போகிறதை இவன் அறிய வொண்ணாதபடி

ஏமாற்றித் தன் எண்ணம் தப்பாதபடி பழகின கயிற்றால் கட்டி வைத்த வயிறு இருந்த படியை, ஒளிவளையீர்!. வந்து பாருங்கள்.

10. **பெருமா உரலில் பிணிப்புண்டு இருந்து அங்கு**
    **இருமா மருதம் இறுத்த இப்பிள்ளை**
    **குருமா மணிப்பூண் குலாவித் திகழும்**
    **திருமார்பு இருந்தவா காணீரே சேயிழையீர்! வந்து காணீரே.**

**உரை:**

மிகப்பெரிய உரலோடு கட்டுண்டிருந்து அந்த வலிமையில் இரண்டு பெரிய மருத மரங்களை முறித்த இக்கண்ணபிரானுடைய சிறந்த கௌஸ்துப ஆபரணம் அசைந்து விளங்கும் திருமார்பை பெண்களே! வந்து பாருங்கள்.

11. **தாங்கள் ஓர் நாலைந்து திங்கள் அளவிலே**
    **தானை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்**
    **வான்கொள் வனைஎயிற்று ஆருயிர் வவ்வினான்**
    **தோள்கள் இருந்தவா காணீரே கரிகுழலீர்! வந்து காணீரே.**

**உரை:**

ஒரு நாலைந்து மாதத்தளவில் காலைத் தூக்கிச் சகடாசுரனை உதைத்துவிட்டு வளைந்த கோரப் பற்களையுடைய பூதனையின் உயிரையும் முடித்த கண்ணன் தோள்கள் இருக்கும்படியைக் கருங்குழல் கொண்ட மாதர்காள்! வந்து பாருங்கள்.

12. **மைத்தடங் கண்ணி யயோதை வளர்க்கின்ற**
    **செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை**
    **நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய**
    **கைத்தலங்கள்ந்து காணீரே கனங்குழையீர்! வந்து காணீரே.**

**உரை:**

மையணிந்த கண்களையுடை யயோதைப் பிராட்டியால் வளர்க்கப்படுகின்ற நீலோற்பல சாமளனான இக்கண்ணன் திருவாழியும் திருச்சங்கும் அமைந்த உள்ளங்களை வந்து காணீர்! பொற் காதணிகள் அணிந்த பெண்காள்! வந்து காணீரே.

13. **வண்டமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்**
    **கொண்டு வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு**

**அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய**
**கண்டம் இருந்தவா காணீரே காரிகையீர்! வந்து காணீரே.**

**உரை:**

அழகிய மாதர்கள்! வண்டுபடித்த பூமாலையை யணிந்த யசோதைப் பிராட்டி தன் மகனாகக் கொண்டு வளர்க்கப் பெற்ற ஸ்ரீநந்தகோப குமாரனுடைய பிரளய காலத்தில் அனைத்தையும் கபளீகரித்ததான கழுத்து இருந்தபடியே வந்து காணீர்.

14. **எந்தொண்டை வாய்ச்சிங்கம் வாவென்று எடுத்துக்கொண்டு**
**அந்தொண்டை வாயமுது ஆதரித்து ஆய்ச்சியர்**
**தந்தொண்டை வாயால் தருக்கிப் பருகும் இச்**
**செந்தொண்டை வாய்வந்து காணீரே சேயிழையீர்! வந்து காணீரே.**

**உரை:**

ஆயர் குலப் பெண்கள்! "கொவ்வைக் கனிபோன்ற அதரத்தையுடைய எமது சிங்கக் குருகே! எம் பக்கம் வா" என்று புகழ்ந்து இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு கொவ்வைக் கனிபோன்ற கண்ணனுடைய அதரத்தில் ஊறுகிற அமுதத்தை விரும்பித் தங்களுடைய கோவைக்கனி வாயைக் கண்ணன் வாயோடு நெருக்கிப் பானம் பண்ணப் பெற்ற இந்தச் சிவந்த கோவை வாயை வந்து காணீர்!

15. **நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சனால்**
**நாக்கு வழித்துநீராட்டும்இந் நம்பிக்கு**
**வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்**
**மூக்கும் இருந்தவா காணீரே மொய்குழலீர்! வந்து காணீரே.**

**உரை:**

யசோதைப் பிராட்டி ஆராய்ந்து அரைத்த மஞ்சட்காப்பால் நாக்கு வழித்து நீராடல் பெறும் இக்கண்ணபிரானுடைய திருவாக்கும் திருக்கண்களும் வாயும் புன்சிரிப்பும் மூக்கும் இருந்தபடியை அழகிய நெருக்கமான கூந்தலையுடைய மாதர்காள்! வந்து காண்மின்.

16. **விண்கொள் அமரர்கள் வேதனை தீர முன்**
**மண்கொள் வசுதேவர் தம்மக னாய்வந்து**
**திண்கொள் அசுரரைத் தேய வளர்க்கின்றான்**
**கண்கள் இருந்தவா காணீரே கணவனை யீர்! வந்து காணீரே.**

**உரை:**

தேவர்களுடைய துன்பங்கள் தீரும்படி பூமியில் வசுதேவர்க்குப் பிள்ளையாய் வந்துபிறந்து வலிய அசுரர்கள் அழியும்படி வளர்கின்ற கண்ணனுடைய கண்கள் இருந்த படியைக் கனவளையீர்! வந்து பாருங்கள்.

17. **பருவம் திரம்பாமே பாரெல்லாம் உய்ய**
**திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற**
**உருவு கரிய ஒளிமணி வண்ணன்**
**புருவம் இருந்தவா காணீரே பூண்முலையீர்! வந்து காணீரே.**

**உரை:**

வயது முதிர்வதற்கு முன்னமே பூமியில் உள்ளார் எல்லோரும் பிழைக்கும் படியாகத் திருமகள் போன்ற தேவகி பிராட்டியால் பெறப்பட்ட நீலமணி வண்ணனானக் கண்ணபிரானுடைய புருவம் இருந்தபடியைப் பாருங்கள்.

18. **மண்ணும் மயலயம் கடலும் உலகேழும்**
**உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு**
**வண்ணம் எழில்கொள் மகரக் குழையிவை**
**திண்ணம் இருந்தவா காணீரே சேயிழை யீர்! வந்து காணீரே.**

**உரை:**

பூமியையும் மலைகளையும் கடல்களையும் ஏழு உலகங்களையும் விரும்பி, திருவயிற்றில் வைத்த இக்கண்ணபிரானுடைய அழகிய இம்மகர குண்டலங்களின் அமைப்பு இருந்தபடியை மாதர்காள்! வந்து பாருங்கள்.

19. **முற்றிலும் தூதையும் முன்கைம் மேல் பூவையும்**
**சிற்றில் இழைத்துத் திரிதரு வோர்களை**
**பற்றிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்தன்**
**நெற்றி யிருந்தவா காணீரே நேரிழை யீர்! வந்து காணீரே.**

**உரை:**

மணலால் சிறுவீடுகளை அமைத்துக் கொண்டு விளையாடித் திரியும் சிறுபெண்களின் கையைப் பிடித்துக்கொண்டு, அவர்களுடைய மணல் கொழிக்கிற சிறு களகுகளையும் மணற்சோறு ஆக்குகிற சிறுபானைகளையும் முன்கைமேல்

வைத்துக்கொண்டு போகின்ற நாகணவாய்ப் புள்ளையும் அபகரித்துக் கொண்டு ஓடுகின்ற கண்ணனுடைய நெற்றியை நேரிழையீர்! வந்து பாருங்கள்.

**20. அழகிய பைம்பொன்னின் கோலம்கைக் கொண்டு**
**கழல்கள் சதங்கை கலந்தெங்கும் ஆர்ப்ப**
**மழகன்று இனங்கள் மறித்துத் திரிவான்**
**குழல்கள் இருந்தவா காணீரே, குவிமுலை யீர்! வந்து காணீரே.**

**உரை:**

அழகிய பசும்பொன்னால் செய்த மாடுமேய்க்கும் கோலைக் கையில் பிடித்துக்கொண்டு வீரக்கழல்களும் சதங்கைகளும் போகும் இடம் எல்லாம் சேர்ந்து ஒலிக்க நடந்து இளங்கன்றுகளின் திரள்களைக் கை கழியப் போகாமல் மடக்கித் திரியும் கண்ணனுடைய திருக்குழல்களை சுருள் கேசங்களை மாதர்கள் வந்து பாருங்கள்.

**தரவு கொச்சகக் கலிப்பா**

**21. சுருப்பார் குழலி யசோதை முன்சொன்ன**
**திருப்பாத கேசத்தைத் தென்புதுவைப் பட்டன்**
**விருப்பால் உரைத்த இருபதோடு ஒன்றும்**
**உரைப்பார் போய் வைகுந்தத்து ஒன்றுவர் தாமே.**

**உரை:**

வண்டுகள் படிந்த கூந்தலை யுடைய யசோதைப் பிராட்டியால் கிருஷ்ணாவதார சமயத்தில் கொல்லப்பட்ட பாதாதி கேசாந்த வர்ணனைப் பாசுரங்களைப் பெரியாழ்வார் அன்போடு அருளிச் செய்ததான இவ்இருபத்தொன்றையும் ஓதுபவர் காலக் கிரமத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் பொருந்துவர்.

**3-ஆம் திருமொழி – மாணிக்கங்கட்டி**

**திருத்தாலாட்டு**

**கலித்தாழிசை**

**(நீலாம்புரி ராகம் - அட தாளம்)**

**1. மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுத்தொட்டில்**
**பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக் குறளனே! தாலே லோ வையம் அனந்தானே!**
**தாலேலோ.**

**உரை:**

மாணிக்கத்தை இரண்டு பக்கமும் பதித்தும் நடுவில் வயிரத்தை இழைத்தும் மாற்றுயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட அழகிய சிறிய தொட்டிலை நான்முகன் ஆசையோடு உனக்கு அனுப்பினான். பிரமசாரியாக வாமனாவதாரம் செய்த கண்ணனே! தாலேலோ! உலகங்களை அளந்தவனே தாலேலோ.

**2. உடையார் கனமணியோடு ஒண்மா துளம்பூ**
**இடைவிரவி கோத்த எழில்தெழ்கி னோடு**
**விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்**
**உடையாய்! அழேல் அழேல் தாலேலோ உலகம் அளந்தானே!**
**தாலேலோ.**

**உரை:**

கண்ணா! திருஅரைக்குச் சேரும்படியான பொன்மணியையும் நடுநடுவே கலந்து கோக்கப்பட்ட அழகிய இடைச்சுரிகையையும், அழகிய மாதுளம் பூக்கோவையான அரைவடத்தையும் இடைபவாகனனாய்க் கபாலதாரியான ருத்திரன் அனுப்பினான். உலகளந்தவனே, அழாதே, தாலேலோ.

**3. எந்தம் பிராணார் எழில்திரு மார்வர்க்கு**
**சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு**
**இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி**
**தந்து உவனாய் நின்றான் தாலேலோ தாமரைக் கண்ணனே**
**தாலேலோ.**

**உரை:**

தாமரைக் கண்ணனே! எமக்குச் சுவாமியாய், அழகிய திருமார்வை உடையராய் நிறத்தால் அழகிய தாமரை போன்ற திருவடிகளை யுடையவரான தேவரீருக்குத் தேவேந்திரன் அழகிய கிண்கிணியைக் கொண்டுவந்து சமர்ப்பித்து நின்முன்னிலையில் அதோ இருக்கின்றான்! தாலேலோ.

**4. சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்**
**அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்**
**அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்**
**செங்கட்கரு முகிலே! தாலேலோ தேவகி சிங்கமே!**
**தாலேலோ.**

**உரை:**

சங்குகளில் சிறந்த வலம்புரிச்சங்கையும் திருவடிகளில் சாத்தத் தகுந்த சதங்கையும் முன்கை வளைகளையும் தோள்வளைகளையும் பொன்னரை நாணையும் அரைவடத்தையும் சுவர்க்கத்திலுள்ள தேவர்கள் அனுப்பினார்கள். சிவந்த கண்களையுடைய காளமேக வண்ணனே! தேவகி பெற்றெடுத்த சிங்கக் குட்டியே, தாலேலோ, தாலேலோ.

**5. எழிலார் திருமார்வுக்கு ஏற்கும் இவையென்று**
**அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு**
**வழுவில் கொடையான் வயிச்சி ரவணன்**
**தொழுது உவ னாய் நின்றான் தாலேலோ தூமணி வண்ணனே!**
**தாலேலோ.**

**உரை:**

“அழகிய திருமார்புக்கு இவை பொருந்தும்” என்று பஞ்சாயுதங்களையும் முத்து வடத்தையும் எடுத்துக்கொண்டு உதாரகனான குபேரன் அஞ்சலி செய்துகொண்டு அதோ நிற்கிறான். தாலேலோ.

**6. ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்**
**சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்**
**மாதக் களன்று வருணன் விடுதந்தான்**
**சோதிச் சுடர்முடியாய்த் தாலேலோ**
**சுந்தரத் தோளனே! தாலேலோ.**

**உரை:**

கடலில் உண்டான முத்துக்களால் கோக்கப்பட்ட மாலையையும் நல்ல சாதியில் உண்டான பவழ வடத்தையும், அழகிய முன்கை வளைகளையும், தோள் வளைகளையும் மிகவும் தகுதியாய் இருந்துள்ளவை என்று வருணதேவன் அனுப்பியுள்ளான். சுடர்மிக்க முடியணிந்த சுந்தரத் தோளனே, தாலேலோ.

**7. கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்**
**வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்**
**தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தான்**
**கோனே! அழேல் அழேல் தாலேலோ.**
**குடந்தைக் கிடந்தானே தாலேலோ.**

**உரை:**

தேன் நிறைந்த செந்தாமரை மலரில் உறைகின்ற பெரிய பிராட்டியர் நாட்டில் உண்டான மணமுள்ள துளசியால் தொடுத்த மாலையையும் சுவர்க்கலோகத்தில் நிறைய வளர்ந்துள்ள கற்பகப்பூக்களால் தொடுத்த திருநெற்றி மாலையையும் அனுப்பினான். குடந்தைக் கோனே! அழாதே, தாலேலோ.

**8. கச்சொடு பொற்சரிகை காம்பு கனகவளை**
**உச்சி மணிச்சுட்டி ஒண்தாள் நிரைப்பொற்பூ**
**அச்சுதனுக்கென்று அவனியாள் போத்தந்தாள்**
**நச்சுமுலையுண்டாய்! தாலேலோ**
**நாராயணா! அழேல், தாலேலோ.**

**உரை:**

கச்சப்பட்டையையும் பொன் உடைவாளையும், கரைகட்டிய சேலையையும், கனகமயமான தோள்வளைகளையும், உச்சியில் சாத்தத் தக்க சுட்டியையும் அழகிய காம்புகளையுடையதாய் ஒழுங்கான பொற்பூவையும் கண்ணபிரானுக்குக் கொடுங்கள் என்று பூமிப் பிராட்டி அனுப்பினாள். நஞ்சுடைய பூதனையின் கொடுங்கள் என்று பூமிப் பிராட்டி அனுப்பினாள். நஞ்சுடைய பூதனையின் முலைப்பால் உண்ட கண்ணனே! அழாதே, தாலேலோ.

**9. மெய்திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும்**
**செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்துரமும்**
**வெய்ய கலைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்**

**ஐயா! அழேல் அழேல் தாலேலோ அரங்கத்து அணையானே!**
**தாலேலோ.**

**உரை:**

திருமேனியில் பூசுதற்குரிய கஸ்தூரி, கா்ப்பூரம், சந்தனம் முதலிய மணப்பொடிகளையும், மஞ்சள் பொடியையும், கண்களில் சாத்த மையையும் திருநெற்றியில் சாத்துகைக்குச் சிந்தூரத்தையும் ஆண்மானை வாகனமாகவுடைய துா்க்கையானவள் எடுத்துக்கொண்டு வந்த முன்னே இருக்கின்றாள். சுவாமியான கண்ணனே! சீரங்கசாயியே! அழாதே, தாலேலோ.

## தரவு கொச்சகக் கலிப்பா

**10. வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலையுண்ட**
**அஞ்சன வண்ணனை ஆய்ச்சிதா லாட்டிய**
**செஞ்சொல் மறையவா் சோ்புதுவைப் பட்டன் சொல்**
**எஞ்சாமை வல்லவா்க்கு இல்லை யிடா்தானே**

**உரை:**

வஞ்சகப்பூதனையை முலையுண்டு முடித்தவனும், மை போன்ற நிறத்தை உடையவனுமான கண்ணனை யசோதை தாலாட்டினதைப் பற்றி வைதிகா்கள் வாழும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வாா் அருளிய இப்பாசுரங்களைக் குறைவுபடாமல் ஓதவல்லவா்களுக்குத் துன்பம் ஒன்றும் இல்லையாம்.

## 4-ஆம் திருமொழி – தன்முகத்து

## அம்புலிப்பருவம் (நிலாவை அழைத்தல்)

## கலிநிலைத்துறை

## (மோகன ராகம் - அட தாளம்)

**1. தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்**
**பொன்முகக் கிண்கிணி யார்ப்பப் புழுதி யளைகின்றான்**
**என்மகன் கோவிந்தன் கூத்தி னைஇள மாமதீ!**
**நின்முகம் கண்ணுள வாகில் நீயிங்கே நோக்கிப் போ.**

**உரை:**

இளஞ்சந்திரனே! என் மகனான கண்ணன் தன் முகத்தில் உள்ள சுட்டி பலகாலும் தாழ்ந்து அசையவும், அழகிய சதங்கைகள் கிண்கிண் என்று ஒலிக்கவும், முற்றத்தில் தவழ்ந்து போய்ப் புழுதி மண்ணை அளைகின்றான். உள் முகத்தில் கண்கள் இருந்தால், இவனது குறும்புகளை நீ இங்கே வந்து பார்த்துப்போ.

**2. என்சிறுக் குட்டன் எனக்கோர் இன்னமுது எம்பிரான்**
**தன் சிறுக்கைகளால் காட்டிக் காட்டி அழைக்கின்றான்**
**அஞ்சன வண்ணனோடு ஆடல் ஆடஉறுதியேல்**
**மஞ்சில் மறையாதே மாமதி மகிழ்ந்து ஓடிவா.**

**உரை:**

சந்திரனே! எனக்கு விருப்பமான அமுதம் போன்ற என் மகனான கண்ணன் தன்சிறிய கைகளால் பலகாலும் உன்னையே காட்டி அழைக்கின்றான். இவனோடு விளையாட நீ கருதினால் மேகத்தில் மறைந்து கொள்ளாமல் ஆசையோடு ஓடிவா.

**3. சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்**
**எத்தனை செய்யிலும் என்ம மகன்முகம் நேர்ஒவ்வாய்**
**வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற**
**கைத்தலம் நோவாமே அம்புலி கடிது ஓடிவா.**

**உரை:**

சந்திரனே! நீ எப்போதும் காசநோய் இல்லாமல் பூர்ண மண்டலமாகவே இருந்து இன்னமும் செயற்கை யழகு எவ்வளவு கொண்டு விளங்கினாலும் எனது மகனான கண்ணன் முகத்திற்குச் சிறிதும் ஒப்பாக மாட்டாய். வித்தகனும் திருவேங்கட மலையில்

வாழ்பவனுமான இக்கண்ணன் உன்னை அழைக்கின்ற கைகள் இன்னமும் நோவாதபடி விரைந்து ஓடின.

**4. சக்கரக் கையன் தடங்கண்ணால் மலர விழித்து**
**ஒக்கலை மேலிருந்து உன்னையே சுட்டிக் காட்டுங்காண்**
**தக்கது அறிதியேல் சந்திரா! சலம் செய்யாதே**
**மக்கள் பெறாத மலடன் அல்லையேல் வாகண்டாய்.**

**உரை:**

சந்திரனே! திருவாழியைக் கையிலேந்திய கண்ணன் என் இடுப்பில் இருந்து கொண்டு தடங்கண்களால் மலரப் பார்த்து உன்னையே குறித்துக் காட்டுகின்றான். உனக்குத் தகுதியானதை நீ அறிவாயாகில் அன்றியும் பிள்ளை பெறாத மலடன் அல்லையாகில் கபடம் செய்யாமல் இங்கே வந்த நில்.

**5. அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுறா**
**மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்**
**குழகன் சிரீதரன் கூவநீ போதியேல்**
**புழையில வாகா தேநின் செலிபுகர் மாமதீ!**

**உரை:**

அழகிய சந்திரனே! இரசிகனான கண்ணன் அழகிய திருப்பவளவாயில் ஊறுகின்ற அமுதம் கொட்டுவதும் எழுத்துப் புலப்படாதபடி மழலைத்தனம் பொருந்தியதுமான இளம் பேச்சால் உன்னைக் கூவுகின்றான். இவன் இப்படி பலகாலும் அழைக்கவும் நீ ஓடிப் போவாயானால் உன் காதுகள் துளையில்லாதவையாக எண்ணப்படாவோ? அப்படி எண்ண இடந்தராமல் ஓடிவா!

**6. தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் தடக்கையன்**
**கண்துயில் கொள்ளக் கருதிக் கொட்டாவி கொள்கின்றான்**
**உண்ட முலைப்பால் அறாகண் டாய்உறங் காவிடில்**
**விண்டனில் மன்னிய மாமதீ விரைந்தோடிவா.**

**உரை:**

ஆகாயத்திலுள்ள சந்திரனே! கதையையும் சக்கரத்தையும் வில்லையும் கொண்ட கைகளையுடைய இக்கண்ணபிரான் தூங்க நினைத்துக் கொட்டாவி

விடுகின்றான். இப்போது இவன் உறங்காவிட்டால் உண்ட முலைப்பால் செரிக்காது. ஆதலால் விரைந்து ஓடிவா.

**7. பாலகன் என்ற பரிபவஞ் செய்யேல் பண்டொருநாள்**
**ஆலின் இலைவ ளர்ந்த சிறுக்கன் அவன் இவன்**
**மேலெழுப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல்**
**மாலைமதியாதே மாமதீ! மகிழ்ந் தோடிவா.**

**உரை:**

சந்திரா! இவன் ஒரு சிறு பையன் அன்றோ? என்று அவமதியாதே! முன்னொரு காலத்தில் ஆலந்தளிரில் துயின்ற அந்தச் சிறுபிள்ளை இவன் காண்: இவன் சீறினால் உன்மேல் ஒரு பாயலாகப் பாய்ந்து உன்னைப் பிடித்துக் கொள்வான். ஆகையால், இவனை அவமதியாமல் மகிழ்ந்து ஓடிவா.

**8. சிறியன் என்று என்இளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்**
**சிறுமையின் வார்த்தையை மாவலி யினிடைச் சென்றுகேள்**
**சிறுமைப் பிழைகொள்ளில் நீயும் உன் தேவைக்கு உரியைகாண்**
**நிறைம தீ! நெடு மால்விரைந்து உன்னைக் கூவுகின்றான்.**

**உரை:**

பூர்ண சந்திரனே! சிங்கக்குட்டி போன்ற என் கண்ண பிரானைச் சிறுவன் என்று அவமதியாதே. இவனுடைய இளமையில் நடந்த செய்கையை மகாபலியிடம் போய்க் கேட்டுக்கொள். இப்படியுள்ளவனைப் பற்றி சிறுமை நினைத்த இது மகா அபராதம் என்று நினைத்தாயாகில், அப்போது நீயும் இவனிடம் அடிமை செய்யத் தகுந்தவன் ஆவாய். அது எல்லாம் அப்படியிருக்க, மேலான இவன் விரைந்து உன்னை அழைக்கின்றான். ஆதலால், மகிழ்ந்து ஓடிவா.

**9. தாழியில் வெண்ணெய் தடங்கை யார விழுங்கிய**
**பேழை வயிற்றெம் பிரான் கண்டாய் உன்னைக் கூவுகின்றான்**
**ஆழிகொண்டு உன்னை எறியும் ஐயுற வில்லை காண்**
**வாழ உறுதியேல் மாமதீ! மகிழ்ந்து ஓடிவா.**

**உரை:**

சந்திரா, தாழியில் சேமித்திருக்கிற வெண்ணெயைக் கைநிறைய அள்ளி அமுது செய்த பெருவயிற்றை உடையவனான என் கண்ணபிரான் உன்னை அழைக்கின்றான்.

இப்படி அழைத்ததும் வாராதிருந்தால் சக்கரத்தால் உன்னை வெட்டி விடுவான். சந்தேகமில்லை. இதில் நின்றும் தப்பி வாழக் கருதினாயாகில், மகிழ்ந்து ஓடிவா.

**10. மைத்தடங் கண்ணி யசோதை தன்மகனுக்கு இவை**
**ஒத்தன சொல்லி யுரைத்த மாற்றம் ஒளிபுத்தூர்**
**வித்தகன் விட்டு சித்தன் விரித்த தமிழிவை**
**எத்தனை யும்சொல்ல வல்ல வா்க்குஇடா் இல்லையே.**

**உரை:**

மையணிந்த கண்களையுடைய யயோதை தன் மகனான கண்ணனுக்கு விருப்பமானவற்றைச் சொல்லிச் சந்திரனை நோக்கிச் சொன்னதையுட் கொண்டு பெரியாழ்வாரால் விரித்தருளிச் செய்யப்பட்ட இப்பாசுரங்கள் பத்தையும் ஏதேனும் ஒருபடியாக ஓதவல்லவா்களுக்கு எந்தத் துன்பமும் எக்காலத்திலும் இல்லையாம்.

## 5-ஆம் திருமொழி – உய்யவுலகு

## செங்கீரைப் பருவம்

**குறிப்பு**

குழந்தை தன் இரண்டு கைகளையும் முழந்தாளையும் தரையில் ஊன்றித் தலையை நிமிர்த்திக் கொண்டு ஆடுவதற்குச் செங்கீரை யாடுதல் என்று பெயர்.

**எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**(முகாரி ராகம் - ஆதி தாளம்)**

1. **உய்ய உலகுபடைத்து உண்ட மணிவயிறா!**
**ஊழிதோறு ஊழிபல ஆலின் இலையதன்மேல்**
**பையஉயோகுதுயில் கொண்ட பரம்பரனே!**
**பங்கய நீள்நயனத்து அஞ்சன மேனியனே!**
**செய்யவன் நின்னகலம் சேமம் எனக் கருதிச்**
**செலவுபொலிமகரக் காது திகழ்ந்திலக**
**ஐய! எனக் கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

ஆன்மாக்கள் கடைத்தேற, உலகங்களைப் படைத்துப் பின்பு பிரளயம் வந்தபோது அவற்றை உள்ளே வைத்துக் காத்தவனே! பல யுகங்கள் தோறும் ஆலிலையின் மேல் மெல்லயோக நித்திரை செய்தருளின பரமனே! செந்தாமரைக் கண்ணனே! அஞ்சன வண்ணனே! கோபால புங்கவனே! பிராட்டிக்கு இருப்பிடமான உன்திருமார்பு இந்த நர்த்தனத்தால் அசையாமல் பாங்காய் இருக்க அழகிய மகாக் குழைகளோடு கூடின காதுகள் மிகவும் விளங்கும்படி எனக்காக ஒரு முறை செங்கீரை யாடுவாயாக!

2. **கோளிரியின் உருவம் கொண்ட அவுணன்உடலம்**
**குருதி குழம்பியெழக் கூருகி ரால்குடைவாய்!**
**மீளஅவன் மகனை மெய்ம்மை கொளக்கருதி**
**மேலைஅ மரர்பதி மிக்குவெ குண்டுவர**
**காளநன் மேகம்அவை கல்லொடு கால்பொழியக்**
**கருதி வரைக்குடையாக் காலிகள் காப்பவனே!**
**ஆள! எனக்கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் பேரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

வலிமை கொண்ட நரசிம்ம மூர்த்தயாகி இரணியன் உடலில் இரத்த வெள்ளம் எழும்படியாகவும் அவனுடைய மகனான பிரகலாதனைச் சத்தியவாதி என்று நினைக்கும்படியாகவும் திருஉள்ளம் பற்றிக் கூர்மையான நகங்களால் அவ்அசுரன் உடலைக் கிழித்தவனே! தேவேந்திரனுடைய பெருங்கோபத்தின் பலனாகக் காள மேகங்கள் மழைபொழிய அன்புடன் கோவர்த்தனகிரியை குடையாகக் கொண்டு பசுக்களைக் காத்தவனே! எனக்காக ஒரு தடைவ செங்கீரையாடுக.

**3. நம்முடை நாயகனே! நான்மறை யின்பொருளே!**
**நாவியுள் நற்கமல நான்முக னுக்கு ஒருகால்**
**தம்மனை யானவனே! தரணி தலமுழுதும்**
**தாரகை யின்னுலகம் தடவி அதன்புறமும்**
**விம்மவ ளர்ந்தவனே! வேழமும் ஏழ்விடையும்**
**விரவிய வேலைதனுள் வென்றுவரும் அவனே!**
**அம்ம! எனக்கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

எங்களுக்கு நாதனே! நான்கு வேதங்களின் பொருளாய் இருப்பவனே! திருநாபியில் உள்ள மலரில் பிறந்த பிரம்மனுக்கு அவன் வேதங்களைப் பறிகொடுத்துத் திகைத்த காலத்தில் தாய்போல் பரிந்து அருளியவனே! பூமி முழுவதும் நட்சத்திரங்களும் திருவடிகளால் தடவி அதற்குப் புறம்பாய் உள்ள தேசமும் பூர்ணமாம்படி திருவிக்ரமனாய் வளர்ந்தவனே! குவலயாபீடம் என்ற யானையும் ஏழு காளைகளும் உன்னோ வந்து மோதியபோது அவற்றை வெற்றி கொண்டவனே! சுவாமியானவனே! செங்கீரை ஆடுக.

**4. வானவர் தாம்மகிழ வன்சகடம் உருள**
**வஞ்சமு லைப்பேயின் நஞ்சம துஉண்டவனே!**
**கானக வல்லிளவின் காயுதி ரக்கருதிக்**
**கன்றது கொண்டெறியும் கருநிற என்கன்றே!**
**தேனுக னும்முரனும் திண்டிரல் வெந்நரகன்**
**என்பவர் தாம்மடியச் செருவதி ரச்செல்லும்**
**ஆனை! எனக் கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் பேரேறே! ஆடுக. ஆடுகவே.**

**உரை:**

தேவர்கள் மகிழும்படியாகவும் வலிமையுள்ள சகடாசுரன் உருண்டு உருமாய்ந்து போகும்படியாகவும் செய்து பூதனையின் மலை நஞ்சை அமுதம்போல உண்டவனே! விளாமரத்தின் காய்கள் உதிரும்படி கன்றாக வந்த அசுரனைக் கையால் பற்றி அந்த மரத்தின்மீது எறிந்த என் இளங்கொழுந்தே! தேனுகனும் முரனும் நரகாசுரனும் மாளும்படி யுத்தம் செய்த ஆனை போன்ற கண்ணனே! செங்கீரை ஆடுக.

**5. மத்தள வும்தயிரும் வார்குழல் நன்மடவார்**
**வைத்தன நெய்களவால் வாரிவி ழுங்கி ஒருங்கு**
**ஒத்த இணைம ருதம் உன்னிய வந்தவரை**
**ஊருக ரத்தினொடும் உந்திய வெந்திற லோய்!**
**முத்தின்இ ளமுறுவல் முற்றவ ருவதன் முன**
**முன்னமு கத்தணியார் மொய்குழுவல்கள் அலைய**
**அத்த! எனக்கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

நீண்ட கூந்தலையடைய பெண்கள் சேமித்து வைத்த மத்தால் அளாவிக் கடைகின்ற தயிரையும் நெய்யையும் விழுங்கிய, உன்னைத் தண்டிக்க விரும்பி நெருங்கிவா, கண்ணன் தான் கட்டுண்ட உரலுடனே ஊர்ந்து சென்று இரட்டை மருதமாய் இருந்த அசுரர்களை வீழ்த்திய வலிமையுடையவனே! அப்பனே! முத்துக்கள் தோன்றும்படி உன்முகத்தில் குழல்கள் தாழ்ந்து அசையும்படி செங்கீரை ஆடுக.

**6. காயமலர் நிறவா! கருமுகில் போல் உருவா!**
**கானக மாமடுவில் காளியன் உச்சியிலே**
**தூயநடம்பயிலும் சுந்தர என்சிறுவா!**
**துங்கம தக்கரியின் கொம்புப றித்தவனே!**
**ஆயம்அறிந்துபொரு வான்எதிர் வந்தமல்லை**
**அந்தரம் இன்றியழித்து ஆடிய தாளிணையாய்!**
**ஆய! எனக்கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

காயா மலர் போன்ற நிறமுடையவளே! கருமேகம் போன்ற உருவுடையவனே! மடுவில் கிடந்த காளியன் என்னும் நாகத்தினுடைய தலைவியின் மேல் நர்த்தனம்

செய்த அழகுடையவனே! எனக்குப் பிள்ளையானவனே! எதிர்த்து வந்த மல்லர்களை அழித்து ஆடிய திருவடிகளை உடையவனே! ஆயனே! செங்கீரை ஆடுக.

**7. துப்புடை யாயர்கள்தம் சொல்வழு வாது ஒருகால்**
**தூய கருங்குழல்நல் தோகைமயில் அனைய**
**நப்பினை தன்திறமா நல்விடை யேழ்அவிய**
**நல்லதிறலுடைய நாதனும் ஆனவனே**
**தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத்**
**தனியொருதேர்கடவித் தாயொடு கூட்டிய என்**
**அப்ப! எனக்கொருகால் ஆடுக செங்கீரை**
**ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

ஆயர்களுடைய சொற்களைத் தப்பாமல் ஏற்று ஒரு காலத்தில் நப்பின்னை பிராட்டிக்காக ஏழு காளைகளையும் அடக்கி ஆயர்களுக்குச் சுவாமியானவனே! தன்னுடைய பரமபதத்தில் செல்லும் படியாகத் தனியே ஒப்பற்ற தேரை நடத்திக் கைவிட்டுப் போன வைதிகள் பிள்ளைகளைத் தாயோடு கூட்டின என் அப்பனே ஆடுக.

**8. உன்னை ஒக்கலையிற் கொண்டுதம் இல்மருவி**
**உன்னொடு தங்கள்கருத்து ஆயின செய்துவரும்**
**கன்னியரும் மகிழக் கண்டவா கண்குளிரக்**
**கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கு அருளி**
**மன்னுகு றுங்குடியாய்! வெள்ளறை மதில்சூழ்**
**சோலைம லைக்கரசே! கண்ணபு ரத்தமுதே!**
**என்அவ லங்களைவாய்! ஆடுக செங்கீரை**
**ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

பிரளயத்திலும் அழியாமல் பொருந்தியிருக்கும் திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருப்பவனே! திருவெள்ளறையில் எழுந்தருளி இருப்பவனே! திருமாலிருஞ்சோலை மலைக்கு அதிபதியானவனே! திருக்கண்ணபுரத்தில் நிற்கிற அமுதம் போன்றவனே! என் துன்பங்களை நீக்குபவனே! உன்னை இடுப்பில் எடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்று மகிழும் படியாகவும் கண்டவர் கண்குளிரக் கற்றவர்கள் பாடிவர உன்னை மகனாகப் பெற்ற எனக்காக ஆடுக! ஏழ் உலகும் உடையாய்! ஆடுக.

**9. பாலொடு நெய்தயிர் ஒண் சாந்தொடு சண்பகமும்**
**பங்கயம் நல்லகருப் பூரமும் நாறிவர**
**கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்**
**கோமள வெள்ளிமுனைப் போல்சில பல்இலக**
**நீலநி றத்தழகார் ஐம்படை யின்நடுவே**
**நின்கனி வாயமுத்ம இற்றுமு றிந்து விழ**
**ஏலும் மறைப்பொருளே! ஆடுகெ செங்கீரை**
**ஏழுலகும் உடையாய்! ஆடுக செங்கீரை.**

**உரை:**

வேதப்பொருளே! பாலோடு நெய்யும் தயிரும் அழகிய சந்தனமும் செண்பகம் முதலிய மலர்களும் தாமரைப் பூவும் நல்ல கருப்பூரமும் கலந்து பரிமளிக்கச் சிவந்த வாயினுள்ளே வெள்ளி முளைபோல் பற்கள் விளங்கப் பஞ்சாயத்தின் நடுவில் உன்கனிவாய் அமுதம் சிந்த ஆடுக.

(ஐம்படைத்தாலி திருமாலின் ஐந்து ஆயுதங்கள் போன்ற பொன்னால் செய்யப்பட்ட அணிகலம்: குழந்தைப் பருவத்தில் பாதுகாப்புக் கருதிக் கழுத்தில் அணிவிப்பது வழக்கம்) திருமாலின் ஐந்து ஆயுதங்களாவன: சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம், கட்கம்.

**10. செங்கம லக்கழலில் சிற்றிதழ் போல் விரலில்**
**சேர்திகழ் ஆழிகளும் கிண்கிண்யும் அரையில்**
**தங்கிய பொன்வடமும் தாளநன் மாதுளையின்**
**பூவொடு பொன்மணியும் மோதிரமும் கிறியும்**
**மங்கல ஐம்படையும் தோள்வளையும் குழையும்**
**மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திகை**
**எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை**
**ஏழுல கும்உடையாய்! ஆடுக ஆடுகவே.**

**உரை:**

எங்கள் குடிக்கு அரசே! செங்கமல மலர் போன்ற பாதங்களில் உள்ள சிறுவிரல்களில் சேர்ந்து விளங்குகின்ற திரு ஆழி மோதிரங்களும், சதங்கைகளும் அரையில் கட்டியிருக்கிற பொன் அரைஞாணும், மாதுளம்பூக்கோவையும், பொன்மணிக் கோவையும், திருக்கைவிரல் மோதிரங்களும் மணிக்கட்டில் கட்டிய சிறு பவளவடமும், மங்கல ஐம்படைத்தாலியும், திருத்தோள் வளைகளும், காதணிகளும், மகர

குண்டலங்களும், திருச்செவி மடல்மேல் சாத்தின வாளிகளும் திருநெற்றிச் சுட்டியம் அமைந்து விளங்கும்படி ஆடுக.

11. **அன்னமும் மீன்உருவும் ஆளரி யும்குறளும்**
**ஆமையும் ஆனவனே! ஆயர்கள் நாயகனே!**
**என்அவ் வம்களைவாய்! ஆடுக ஆடுக என்று**
**ஏழல கும்உடையாய்! ஆடுக ஆடுகஎன்று**
**அன்ன நடைமடவாள் அசோதை உகந்த பரிசு**
**ஆனபுகழ்ப் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ்**
**இன்னிசை மாலைகள் இப்பத்தும்வல் லார் உலகில்**
**எண்டிசை யும்புகழ்மிக்கு இன்பமது எய்துவரே**

**உரை:**

அன்னமாகவும் மீனாகவும் நரசிம்மாகவும், வாமனனாகவும், ஆமையாகவும் அவதரித்தவனே! ஆயர்களுக்குத் தலைவனே! என் துன்பங்களைக் களைபவனே! செங்கீரை ஆடுவாயாக! ஏழ் உலகும் உடையாய்! செங்கீரை ஆடுவாயாக என்று யசோதை பிராட்டியால் விரும்பிச் சொன்னபடி, பொருந்திய புகழுடையவரான பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் இந்த உலகில் எட்டுத்திசைகளிலும் கீர்த்தியையும் மிக்க இன்பத்தையும் பெறுவார்கள்.

## 6-ஆம் திருமொழி – மாணிக்கக் கிண்கிணி

## சப்பாணிப் பருவம்

**(ஒருகையோடு மற்றொரு கையையும் சேர்த்துக் கொட்டும் விளையாட்டு)**

**கலித்தாழிசை**

**(யமுனா கல்யாணி ராகம் - ஆதி தாளம்)**

**1. மாணிக்கக் கிண்கிணி யார்ப்ப மருங்கின்மேல்**
**ஆணிப்பொன் னாற்செய்த ஆய்பொன் உடைமணி**
**பேணிப்பவளவாய் முத்திலங்க பண்டு**
**காணிகொண்ட கைகளால் சப்பாணி**
**கருங்குழற் குட்டனே! சப்பாணி.**

**உரை:**

மாற்றுயர்ந்த பொன்னால் செய்த பொன்மணிக் கோவையை உடைய இடுப்பின்மேல், உள்ளே மாணிக்கத்தையிட்ட அரைச் சதங்கை ஒலி செய்யவும், பவளம் போன்ற வாயில் முத்துப்போன்ற பற்கள் விளங்கவும், முன்பு பூமியைப் பலிச் சக்கரவர்த்தியிட மிருந்து வாங்கிக்கொண்டே கைகளால் விரும்பி சப்பாணி கொட்டுவாயாக!

கருநிறக் கூந்தலையுடைய பிள்ளாய்! சப்பாணி கொட்டியருள்க!

**2. பொன்னரை நாணொடு மாணிக்கக் கிண்கிணி**
**தன்னரை யாடத் தனிச்சுட்டி தாழ்ந்தாட**
**என்னரை மேல்நின்ற இழந்துங்கள் ஆயர்தம்**
**மன்னரை மேல்கொட்டாய் சப்பாணி**
**மாயவனே! கொட்டாய் சப்பாணி.**

**உரை:**

பொன் அரை ஞாணோடு உள்ளே மாணிக்கமிட்ட அரைச்சதங்கை, அரையில் அசைந்து ஒலிக்கவும், சுட்டி, நெற்றியில் அசைந்து விடவும், என்னுடைய மடியிலிருந்து இறங்கிப்போய் உன் தந்தையின் மடியில் அமர்ந்து சப்பாணி கொட்டுக. அற்புதச் செயல்களை உடையவனே! சப்பாணி கொட்டுக!

**3. பன்மணி முத்தின் பவளம் பதித்தன்ன**
**என்மணி வண்ணன்! இலங்குபொற் றோட்டின்மேல்**
**நின்மணி வாய்முத்து இலங்கநின் அம்மைதன்**

**அம்மணி மேல்கொட்டாய் சப்பாணி**
**ஆழியங்கையனே! சப்பாணி**

**உரை:**

என்னுடைய நீலமணி போன்ற நிறமுடையவனே! பலவகைப்பட்ட இரத்தினம், முத்து, பவளம் முதலியவை பதிக்கப்பட்ட பொன்னாற் செய்த தோடு என்னும் காதணியின் அழகுக்கு மேல் உன்னுடைய பற்கள் விளங்கும்படி சிரித்துக் கொண்டு என்னுடைய இடையிலிருந்து சப்பாணி கொட்டுக! திருவாழி மோதிரத்தை அழகியகையில் உடையவனே! சப்பாணி கொட்டுக. (ஆழி- சக்கரம்)

4. **தூநிலா முற்றத்தே போந்து விளையாட**
**வானிலா அம்புலீ! சந்திரா! வாவென்று**
**நீநிலா நின்பு கழாநின்ற ஆயர்தம்**
**கோநிலா வக்கொட்டாய் சப்பாணி**
**குடந்தைக் கிடந்தானே! சப்பாணி.**

**உரை:**

ஆகாயத்தில் விளங்குகின்ற அம்புலியே! சந்திரனே! இந்த நிலா முற்றத்தில் வந்து நான் விளையாடும்படி நீ வருவாயாக என்று சந்திரனை அழைத்து நின்று கொண்டு உன்னைப் புகழ்கின்ற நந்தகோபர் மகிழும்படி சப்பாணி கொட்டுவாயாக!

5. **புட்டியிற் சேறும்புழுதியும் கொண்டுவந்து**
**அட்டி அமுக்கி அகம்புக்கு அறியாமே**
**சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும்உண்**
**பட்டிக்கன்றே! கொட்டாய் சப்பாணி**
**பற்பநாபா! கொட்டாய் சப்பாணி.**

**உரை:**

திருஅரையிற் சேற்றையும் புழுதி மண்ணையும் கொண்டு வந்து என் மேல் இட்டு உறைக்கப் பூசி வீட்டினில் புகுந்து எனக்குத் தெரியாதபடி சட்டியில் வைத்திருக்கும் தயிரையும் இருக்கிற வெண்ணெயையும் உண்ணுகின்ற பட்டி மேய்ந்து திரியும் கன்று போன்றவனே! சப்பாணி கொட்டாய்! தாமரை மலர் போன்ற நாபியை உடையவனே! சப்பாணி கொட்டுக.

**6. தாரித்து நூற்றுவர் தந்தைசொற் கொள்ளாது**
**போருய்த்து வந்து புகுந்தவர் மண்ணாள**
**பாரித்த மன்னர் படப்பஞ் சவர்க்கு அன்று**
**தேருய்த்த கைகளால் சப்பாணி**
**தேவகி சிங்கமே! சப்பாணி.**

**உரை:**

உன் பேச்சை மனத்திற் கொண்டு அங்கீரிக்காமல், யுத்தத்தை நடத்துவதாகப் போர்க்களத்திற்கு வந்த நாட்டையாளும் ஆசையுடைய மன்னர்களாகிய நூற்றுவரனா துரியோதனாதியர் மாண்டு போகும்படி பார்த்தசாரதியாய்த் தேரையோட்டிய திருக்கைகளால் சப்பாணி கொட்டுக! தேவகியின் வயிற்றில் பிறந்த இளஞ் சிங்கமே! சப்பாணி கொட்டுக.

**7. பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை**
**இரந்திட்ட கைம்மேல் எறிதிரை மோத**
**கரந்திட்டு நின்ற கடலைக் கலங்க**
**சரந்தொட்ட கைகளால் சப்பாணி**
**சார்ங்கவிற் கையனே! சப்பாணி.**

**உரை:**

ஆழமான கடற்கரையில் அவை வீசியடிக்க மறைந்து கிடந்த வருணன் கலங்கும்படி அம்புகளைத் தொடுத்துவிட்ட கைகளால் சப்பாணி கொட்டுக! சார்ங்கமென்னும் வில்லை அப்போது கையில் தரித்தவனே! சப்பாணி கொட்டுக!.

**8. குரக்கினத தாலே குரைகடல் தன்னை**
**நெருக்கி அணைகட்டி நீணீர் இலங்கை**
**அரக்கர் அவிய அடுகணை யாலே**
**நெருக்கிய கைகளால் சப்பாணி**
**நேமியங் கையனே! சப்பாணி**

**உரை:**

சப்தமிடுகின்ற கடலைத் தேங்கும்படி செய்து, குரங்குகளைக் கொண்டு அணையைக் கட்டி முடித்து, இலங்கையிலுள்ள அரக்கர்கள் அழியும்படி அம்புகளைக் கொண்டு நெருங்கப் போர் செய்த கைகளால் சப்பாணி கொட்டுக! சக்கரத்தைக் கையில் ஏந்தியவனே! சப்பாணி கொட்டுக!.

**9. அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே**
**வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்**
**உளந்தொட்டு இரணியன் ஒண்மார் வகலம்**
**பிளந்திட்ட கைகளால் சப்பாணி**
**பேய்முலை யுண்டானே! சப்பாணி.**

**உரை:**

இரணியன் கம்பத்தைத் தட்ட, அந்த இடத்திலேயே கூர்மையான நகங்களையுடைய நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி அவன் மனத்தைப் பரிசோதித்துப் பார்த்துப் பிறகு அவனுடைய மார்பைப் பிளந்த கைகளால் சப்பாணி கொட்டுக. பேய் மகளான பூதனையின் முலையை உண்டவனே! சப்பாணி கொட்டுக.

**10. அடைத்திட்டு அமரர்கள் ஆழ்கடல் தன்னை**
**மிடைந்திட்டு மந்தரம் மத்தாக நாட்டி**
**வடம் சுற்றி வாசுகி வன்கயி றாக**
**கடைந்திட்ட கைகளால் சப்பாணி**
**கார்முகில் வண்ணனே! சப்பாணி.**

**உரை:**

துருவாச முனி சாபத்தால் இழந்த செல்வத்தைப் பெறுவதற்காக, தேவர்கள் உன்னைச் சரணடைய நீ ஆழமான திருப்பாற்கடலை உன்னுடைய படுக்கும் இடமென்று கருதாமல் மந்தர மலையைக் கடைவதற்குரிய மத்தாகும்படி நேராக நிறுத்தி வாசகி என்னும் பாம்பைக் கடைகயிறாகக் கொண்டு கடைந்த கைகளால் சப்பாணி கொட்டுக! காளமேகம் போன்ற நிறமுடையவனே! சப்பாணி கொட்டுக!

**தரவு கொச்சகக் கலிப்பா**

**11. ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோவினை**
**நாட்கமழ் பூம்பொழில் வில்லிபுத் தூர்ப்பட்டன்**
**வேட்கையாற் சொன்ன சப்பாணி ஈரைந்தும்**
**வேட்கையி னால்சொல்லு வார்வினை போமே.**

**உரை:**

அனைவரையும் ஆட்கொள்ள அவதாரம் செய்த ஆயர்குல மக்கள் தலைவனான கண்ணனைக் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார் ஆசையோடு

அருளிச்செய்த சப்பாணி கொட்டுதலைக் கூறிய பத்துப் பாசுரங்களையும் விருப்பத்தோடு ஓதுகிறவர்களுடைய பாவங்கள் அழிந்துபோகும்.

## 7-ஆம் திருமொழி - தொடர்சங்கிலிகை

### தளர்நடைப் பருவம்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### (அடாணா ராகம் - ஆதி தாளம்)

**1. தொடர்சங் கிலிகை சலார்பிலார்என்னத்**
**தூங்குபொன் மணியொலிப்ப**
**படுமும் மதப்புனல் சோர வாரணம்**
**பையநின்று ஊர்வதுபோல்**
**உடன்கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப**
**உடைமணி பறை கறங்க**
**தடந்தாள் இணைகொண்டு சார்ங்க பாணி**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

இரும்புச் சங்கிலியின் தொடர் ஒன்று சப்திக்கவும், தொங்குகின்ற மணிகள் ஒலிக்கவும், மூன்று வகையான மதநீர் பெருக்கவும், இருந்து கொண்ட யானை மெல்ல நடந்துபோவது போல் காற் சதங்கைகள் சப்திக்கவும், திருவரையில் கட்டிய சிறுமணிகளும் பறை போல் சப்திக்கவும், சாரங்கமென்னும் வில்லைக் கையிலேந்திய இவன் தன் பாதங்கள் இரண்டினால் இளநடையை நடக்க மாட்டானோ? நடக்க வேண்டும் என்பது குறிப்பு. தளர்நடை – தட்டுத் தடுமாறி நடத்தல். சலார் பிலார் - ஒலிக்குறிப்பு.

**2. செக்கர் இடைநுனிக் கொம்பில் தோன்றும்**
**சிறுபிறை முளைபோல்**
**நக்க செந்துவர் வாய்த்திண்ணை மீதே**
**நளிர்வெண்பல்முளை இலக**
**அக்கு வடம்உடுத்து ஆமைத் தாலிபூண்ட**
**அனந்த சயனன்**
**தக்க மாமணி வண்ணன் வாசுதேவன்**
**தளர்நடை நடவானோ**

**உரை:**

செவ்வானத்தில் கொம்பின் நுனியில் காணப்படுகிற சிறிய பிறைச் சந்திரனைப் போல சிவந்த வாயாகிய மேட்டிடத்தில் பல்லின் முளைகள் விளங்க, சங்குமணி

வடத்தைத் திருவரையில் தரித்து ஆமையின் வடிவாகச் செய்யப்பட்ட தாலியைக் கழுத்தில் அணிந்து கொண்டவனும் திருவனந்தாழ்வான் மேல் படுப்பவனும், நீலமணி போன்ற நிறத்தையுடையவனும் வாசுதேவர் மகனுமான இவன் தளர்நடை நடவானோ.

**3. மின்னுக் கொடியும்ஓர் வெண்திங் களும்**
**சூழ் பரிவே டமுமாய்**
**பின்னல்துவங் கும் அரசியலையும்**
**பீதகச் சிற்றாடை யொடும்**
**மின்னிற்பொலிந்த தோர்கார் முகில்போலக்**
**கழுத்தினிற் காலையொடும்**
**தன்னில் பொலிந்த இருடீ கேசன்**
**தளர்நடை நடவோனோ.**

**உரை:**

கொடி மின்னலும் வெண்மையான ஒரு சந்திரனும், இரண்டையும் சுற்றிக் கொண்டிருக்கும் பரிவேடத்தையும் போல திருவரையில் உள்ள பொற் பின்னலும் விளங்குகிற அரசிலை போன்ற திரு ஆபரணமும், இவ்விரண்டையும் சூழ்ந்த பொன்னாலாகிய சிற்றாடையோடும் மின்னலினால் விளங்கும் காளமேகம் போல கழுத்தில் அணிந்த காறையென்னும் ஆபரணத்தோடும் தனது அழகினால் விளங்குகின்ற ரிஷிகேசன் என்ற திருநாமம் உடைய இவன், தளர்நடை நடவானோ!

**4. கன்னற் குடம்திறந் தால்ஒத்து ஊறிக்**
**கணகண சிரித்து வந்து**
**முன்வந்து நின்று முத்தம் தரும்என்**
**முகில்வண்ணன் திருமார்வன்**
**தன்னைப் பெற்றேற்குத் தன்வாய் அமுதம்தந்து**
**என்னைத் தளிர்ப்பிக் கின்றாள்**
**தன்னெற்று மாற்றலர் தலைகள் மீதே**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

கருப்பஞ்சாறு நிறைந்த குடத்தின் துளை வழியாகச் சாறு ஒழுவதைப் போன்று வாயிலிருந்து நீர் கசிந்து வடிய கணகண வென்று சப்தம் உண்டாகச் சிரித்து மகிழ்ந்து என் முன்னே வந்து நின்று எனக்கு முத்தம் கொடுக்கும் என் முகில் வண்ணனும், பெரிய பிராட்டியை மார்பில் உடையவனுமான இவன், எனக்கு வாய்

அமுதத்தைத் தந்து என்னைத் தழைக்கச் செய்கின்றான். இவன் தன் பகைவர்களின் தலைமகளின் மேல் தளர்நடை நடவானோ!

5. **முன்னலோர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்**
**மொடுமொடு விரைந்தோட**
**பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக் குட்டன்**
**பெயர்ந்தடி யிடுவது போல்**
**பன்னி யுலகம் பரவி ஒவாப்புகழ்ப்**
**பலதேவன் என்னும்**
**தன்நம்பி ஓடப்பின் கூடச் செல்வான்**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

முன்னால் பெரிய வெள்ளிமைல போன்ற குட்டி ஓடிக்கொண்டிருக்க அதன் பின்னே அதைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்ததாகிய கருநிறமான குட்டி போவதைப் போல் உலகமெல்லாம் துதித்து முடிவுகாண முடியாத புகழையுயைட பலராமன் என்கிற தன்னுடைய தமையன் முன்னே ஓடிக் கொண்டிருக்க, அவனைப் பிடிக்க ஓடும் இக்கண்ணபிரான் தளர்நடை நடவானோ? (மொடுமொடு – ஒலிக்குறிப்பு)

6. **ஒருகா விற்சங்கு ஒருகாலிற் சக்கரம்**
**உள்ளடி பொறித்தமைந்த**
**இருகா லும்கொண்டு அங்குஅங்கு எழுதினாற்போல்**
**இலச்சினை படநடந்து**
**பெருகா நின்ற இன்பவெள் ளத்தின்மேல்**
**பின்னையும் பெய்துபெய்து**
**தருகார்க் கடல்வண்ணன் காமர் தாதை**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

கடல்நிற முடையவனும் காமனுக்குத் தந்தையுமான இப்பிள்ளை ஒரு பாதத்தில் சங்கும் மற்றொரு பாதத்தில் சக்கரமும் ரேகைகளாகப் பெற்ற இரண்டு திருவடிகளாலும் நடக்கும் இடங்களில் அடையாளம் உண்டாகும்படி அடிவைத்து இன்ப வெள்ளத்தின் மேல் மிகுதியாக மகிழுமாறு தளர்நடை நடவானோ?

**7. படர்பங் கயமலர் வாய்நெகிழப்**
**பனி படுசிறு துளிபோல்**
**இடங்கொண்ட செவ்வாய் ஊறி ஊறி**
**இற்றுஇற்று வீழநின்று**
**கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல்போல்**
**உடைமணி கணகணென**
**தடந்தாள் இணைகொண்டு சார்ங்கபாணி**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

தாமரை மலர் மலர அதிலிருந்து பெருகும் தேன் துளியைப் போல் தனது சிவந்த வாயினின்று நீர் இடைவிடாமற் சுரந்து கீழே விழும்படி நின்று, காளையின் கழுத்தில் கட்டியுள்ள மணியினுடைய ஒலிபோலத் தனது இடுப்பில் கட்டியுள்ள மணிகள் ஒலிக்கத் தளர்நடை நடவானோ. கையில் சாரங்கம் என்னும் வில்லை ஏந்தியவன் நடவானோ என்க. (கணகண- ஒலிக்குறிப்பு)

**8. பக்கம் கருஞ்சிறுப் பாறை மீதே**
**அருவிகள் பகர்ந்தனைய**
**அக்கு வடமிழிந்து ஏறித்தாழ**
**அணியல்குல் புடைபெயர**
**மக்கள் உலகினில் பெய்து அறியா**
**மணிக்குழ லியுருவின்**
**தக்க மாமணி வண்ணன் வாசுதேவன்**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

கரிய சிறிய மலையின் பக்கத்தில் நீர் அருவிகள் பாய்வதைப் போல இடையிலுள்ள சங்கு மணி வடம் ஏறி இறங்கிப் பிரகாசிக்க இடையின் பக்கங்களில் அசைய உலக மக்கள் பெற்றிராத அழகிய குழந்தை வடிவத்தை உடையவனும் வசுதேவருடைய மகனுமான இவன் தளர்நடை நடவானோ?

**9. வெண்புழுதி மேற்கொண்டுஅளைந்ததோர்**
**வேழத்தின் கருங்கன்று போல்**
**தெண்புழுதி யாடித் திரிவிக் கிரமன்**
**சிறுபுகர் படவியர்த்து**

**ஒண்போது அலர்கம லச்சிறுக் காலுறைத்து**
**ஒன்றும் நோவாமே**
**தண்போது கொண்ட தவிசின் மீதே**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

தனது மூவடிகளால் உலகத்தை அளந்த இவன் வெளுத்த புழுதியை மேலே போட்டுக்கொண்டு அலைந்ததாகிய ஒரு கரிய குட்டி யானை போல தெளிவான புழுதியில் விளையாடி வேர்த்துப்போய் தாமரை மலர் போன்ற பாதங்கள் உறுத்த அதனால் சிறிதும் நோவாதபடி மெத்தையின் மேல் தளர்நடை நடவானோ?

10. **திரைநீர்ச் சந்திர மண்டலம்போல்**
**செங்கண்மால் கேசவன் தன்**
**திருநீர் முகத்துத் துலங்கு சுட்டி**
**திகழ்ந்து எங்கும் புடைபெயர**
**பெருநீர்த் துரையெழு கங்கை யிலும்**
**பெரிய தோர் தீர்த்தபலம்**
**தருநீர் சிறுச்சண்ணம் துள்ளம் சோராத்**
**தளர்நடை நடவானோ.**

**உரை:**

சிவந்த கண்களையும் கருநிறத்தையும் கொண்ட இவன் கடலின் நடுவில் அசைந்து தோன்றுகிற பிரதிபிம்பச் சந்திர மண்டலத்தைப் போல தன்னுடைய முகத்தில் விளங்குகின்ற சுட்டி எல்லா இடங்களிலும் திகழ்ந்து அசையவும், கங்கையைக் காட்டிலும் சிறந்த தீர்த்த பலனைத் தருகின்ற நீரை உடைத்தான சிறிய சண்ணமானது துளித்துளியாகச் சொட்டவும் தளர்நடை நடவானோ? (சண்ணம் - ஆண்குறி)

11. **ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய**
**அஞ்சன வண்ணன் தன்னை**
**தாயர் மகிழ ஒன்னார் தளரத்**
**தளர்நடை நடந்ததனை**
**வேயர் புகழ்விட்டு சித்தன் சீரால்**
**விரித்தன உரைக்கவல்லார்**
**மாயன் மணிவண்ணன் தாள் பணியும்**
**மக்களைப் பெறுவர்களே.**

**உரை:**

ஆயர் குலத்தில் வந்து அவதரித்த கருநிறமுடைய கண்ணன் தன்னைக் கண்டு தாய்மார்கள் மகிழவும் பகைவர்கள் வருத்த மடையவும் தளர்நடை நடந்ததை வேயர் குலத்தாரால் புகழப்படும் பெரியாழ்வார் சொன்ன பாசுரங்களைச் சொல்ல வல்லவர்கள், எம்பெருமானுடைய திருவடிகளை வணங்க வல்ல பிள்ளைகளைப் பெறுவார்கள்.

**8-ஆம் திருமொழி – பொன்னியற் கிண்கிணி**

**அச்சோப் பருவம்**

**(ஆழ்வார் தம்மை வந்து அணைத்துக் கொள்ள வேண்டுமென்று குழந்தையை வேண்டுதல்.)**

**கலித்தாழிசை**

**(தேசிய ராகம் - ஆதி தாளம்)**

**1. பொன்னியற் கிண்கிணி சுட்டி புறங்கட்டி**
**தன்னியல் ஓசை சலன்சலன் என்றிட**
**மின்னியல் மேகம் விரைந்தெதிர் வந்தாற்போல்**
**என்னிடைக்கு ஒட்டாரா அச்சோ அச்சோ**
**எம்பெருமான்! வாராய் அச்சோ அச்சோ.**

**உரை:**

பொன்னாற் செய்த அரைச் சதங்கை பாதச் சதங்கைகளையும் சுட்டியையும் அதற்குரிய இடங்களில் அணிந்து சலசல என்று ஒலிக்க, மின்னலோடு பொருந்திய மேகம் எதிரே வந்தாற் போல என் இடையில் இருக்க விரும்பி ஓடிவந்து என்னை அணைத்துக் கொள்ள வேண்டும். எங்களுடைய தலைவனே! வந்து அணைத்துக் கொள்வாயாக.

**2. செங்கம லப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல்**
**பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப**
**சங்குவில் வாள்தண்டு சக்கரம் ஏந்திய**
**அங்கைக ளாலேவந்து அச்சோ அச்சோ**
**ஆரத் தழுவாய் வந்து அச்சோ அச்சோ.**

**உரை:**

செந்தாமரைப் பூவில் தேன் உண்ணும் வண்டுகளைப் போல உன் தலைமயிர் பவளம் போன்ற உன் வாயில் வந்து மொய்க்க பஞ்சாயுதங்களைத் தரிக்க உன் கைகளால் இறுகத் தழுவிகொள். ஓடிவந்து தழுவிக்கொள். சங்கு, வில், வாள், தண்டு, சக்கரம் இவை திருமாலின் பஞ்சாயுதங்கள் ஆகும்.

**3. பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து**
**நஞ்சுமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்கு**
**அஞ்சப் பணத்தின் மேல் பாய்ந்திட்டு அருள்செய்த**

**அஞ்சன வண்ணனே அச்சோ அச்சோ**
**ஆயர் பெருமானே! அச்சோ அச்சோ.**

**உரை:**

ஆர்ய பெருமானே அச்சோ அச்சோ, பாண்டவர்களுக்காகத் துரியோதனாதிகளிடம் தூதனாய்ச் சென்று அவர்கள் ஒத்துவராமையால் பாரத யுத்தத்தை அணிவகுத்துச் செய்து காளியன் என்னும் பாம்பு இருந்த கொடிய மடுவில் புகுந்து பலரும் அஞ்ச அப்பாம்பின் படத்தின் மேல் குதித்துப் பிறகு அதை விட்டுவிட்ட அஞ்சனவண்ணனே தழுவிக்கொள். ஆயர் பெருமானே தழுவிக்கொள்.

**4. நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன**
**தேறி அவளும் திருவுடம் பில்பூச**
**ஊயி கூனினை உள்ளே ஓடுங்க அன்று**
**ஏற உருவினாய்! அச்சோ அச்சோ!**
**எம்பெருமான்! வாராய் அச்சோ அச்சோ.**

**உரை:**

சந்தனத்தை எங்களுக்குக் கொஞ்சம் கொடு என்று நீ கூனியைக் கேட்க, அவளும் மனம் தெளிந்து உனது திருமேனியில் பூச, அவள் கூனை உள்ளே ஒடுங்கும்படி நிமிர்ந்து நிற்கச் செய்தாய், என்னைத் தழுவிக்கொள். எம்பெருமானே! வந்து தழுவிக்கொள்.

**5. கழல் மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி**
**எழலுற்ற மீண்டே இருந்துன்னை நோக்கும்**
**அழல விழித்தானே! அச்சோ அச்சோ!**
**ஆழியங் கையனே! அச்சோ அச்சோ.**

**உரை:**

கழல் மன்னர் தன்னைச் சுற்றியிருக்க, அவர்கள் நடுவில் சூரியன் போல் விளங்கி, முதலில் எழுந்திருந்து மறுபடியும் உட்கார்ந்து கொண்டு, உன்னைக் கொல்லப் பார்த்த மிகவும் வஞ்சனையுள்ள துரியோதனனைக் கோபித்துப் பார்த்தவனே, என்னைத் தழுவிக்கொள். ஆழியங் கையனே! தழுவிக்கொள்.

**6. போரொக்கப் பண்ணிஇப் பூமிப் பொறைதீர்ப்பான்**
**தேரொக்க ஊர்ந்தாய்! செழுந்தார் விசயற்காய்**

**காரொக்கு மேனிக் கரும்பெருங் கண்ணனே!**
**ஆரத் தழுவாய் வந்து அச்சோ அச்சோ!**
**ஆயர்கள் போரேறே! அச்சோ அச்சோ.**

**உரை:**

பூமிபாரம் தீர்ப்பதற்காக யுத்தத்தைச் சமமாகச் செய்து அர்ச்சுனனுக்காக அவனுடைய தேரைச் செலுத்தியவனே! மேகத்தோடு ஒத்த திருமேனியையும் கண்களையும் உடையவனே! ஓடிவந்து நன்றாகத் தழுவிக்கொள். ஆயர்கள் போர் ஏறே! தழுவிக்கொள்.

**7. மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்**
**தக்கது இதன்றுஎன்று தானம் விலக்கிய**
**சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய**
**சக்கரக் கையனே அச்சோ அச்சோ!**
**சங்கம் இடைத்தானே! அச்சோ அச்சோ.**

**உரை:**

மிக்க புகழையுடைய மகாபலி செய்த யாகத்தில் ‘நீ கொடுப்பது தகுதியானதன்று’ என்று முறையிட்டு, பூமி தானத்தைத் தடுத்து சுக்கிராச்சாரியினுடைய ஒரு கண்ணைத் தருப்பையால் கலக்கின சக்கரக் கையனே! தழுவிக்கொள். சங்கம் இடத்தானே! என்னை வந்து தழுவிக்கொள்.

**8. என்னிது மாயம்! என் அப்பன் அறிந்திலன்**
**முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் என்ன**
**மன்னு நமுசியை வானிற் சுழற்றிய**
**மின்னு முடியனே! அச்சோ அச்சோ!**
**வேங்கட வாணனே! அச்சோ அச்சோ.**

**உரை:**

மாவலியின் புத்திரனான நமுசி ஓடிவந்து பேருருவத்தைக் கண்டு இது என்ன மாயச்செய்கை! என் தகப்பன் நீ செய்யும் இந்த மாயத்தை அறியவில்லை. முன்னைய வண்ணமே கொண்டு அளப்பாயாக, என்று சொல்ல, அவளை ஆகாயத்தில் சுழலச் செய்த ஒளிரும் முடியுடையவனே! என்னைத் தழுவுக. வேங்கட வாணனே! தழுவுக.

**9. கண்ட கடலும் மயலயம் உலகேழும்**
**முண்டத்துக்கு ஆற்றா முகில்வண்ணா ஓ! என்று**
**இரண்டைச் சடைமுடி ஈசன் இரக்கொள்ள**
**மண்டை நிறைத்தானே அச்சோ அச்சோ!**
**மார்வில் மறுவனே! அச்சோ அச்சோ.**

**உரை:**

கண்ணனால் கண்ட கடல்களும், மலைகளும் உலகு ஏழும் என் கையில் இருக்கிற பிரம்ம கபாலத்துக்குப் போதாவாம். மேகவண்ணனே, ஓ, ஓ, என்று கூப்பிட்டு சிவன் பிச்சை எடுக்க, கபாலத்தை நிறையச் செய்தவனே! என்னைத் தழுவிகொள். மார்வில் மறுஉடையவனே! தழுவிக்கொள்.

**10. துன்னிய பேரிருள் சூழ்ந்துல கைமூட**
**மனனிய நான்மறை முற்றும் மறைந்திட**
**பின்னிவ் உலகினில் பேரிருள் நீங்க அன்று**
**அன்னமது ஆனானே! அச்சோ அச்சோ!**
**அருமறை தந்தானே! அச்சோ அச்சோ.**

**உரை:**

சதுர்வேதங்களும் மறைந்துவிட அதனால் இருள் சூழ்ந்து உலகை மூட, பின்பு இந்த உலகங்களில் அந்த இருள் நீங்கும்படி அக்காலத்தில் அன்னமாய் அவதரித்தவனே! என்னைத் தழுவிக் கொள். அருமறை தந்தவனே! தழுவிக்கொள்.

## தரவு கொச்சகக் கலிப்பா

**11. நச்சுவார் முன்னிற்கும் நாரா யணன் தன்னை**
**அச்சோ வருக என்று ஆய்ச்சி உரைத்தன**
**மச்சனிமாடப் புதுவைக்கோன் பட்டன்சொல்**
**நிச்சலும் பாடுவார் நீள்விசும்பு ஆள்வரே.**

**உரை:**

தன்னை விரும்பிப் பக்தி பண்ணுகிறவர்களுடைய முன்னேவந்து நிற்கும் தன்மையுள்ள நாராயணனாகிய கண்ணனை, யசோதை தழுவிக்கொள்ளும் விருப்பத்தை அச்சோ வருக என்று சொன்னதாகிய பெரியாழ்வார் சொன்ன இப்பத்துப் பாசுரங்களைப் பாடுகிறவர்கள் பரமபதத்தை ஆள்வர்.

## 9-ஆம் திருமொழி – வட்டுநடுவே

### (தன் முதுகைக் கட்டிக்கொள்ளும்படி கண்ணனை அழைத்தல்)

### வெண்டளைக் கழித்தாழிசை

### (உசேனி ராகம் - ரூபக தாளம்)

**1. வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க**
**மொட்டு நுனியில் முளைக்கின்ற முத்தேபோல்**
**சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க என்**
**குட்டன் வந்து என்னைப் புறம்புல்குவான்**
**கோவிந்தன் என்னைப் புறம்புல்குவான்.**

**உரை:**

என் பிள்ளை, வட்டுக்களின் நடுவே வளர்ந்து கொண்டிருக்கும் இந்திர நீலமான அரும்பினுடைய நுனியல் உண்டாகின்ற முத்தைப் போல, சொட்டுச் சொட்டென்று உண்டாகும்படி பலதரம் துளியாநிற்க ஓடிவந்து என்னுடைய முதுகைக் கட்டிக் கொள்வான். கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான்.

(குறிப்பு: வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க மொட்டு என்றது கண்ணபிரானது சின்னஞ்சிறிய ஆண்குறியை என்க. முளைக்கின்ற முத்து என்றது அதில் நின்று வருகின்ற சிறுநீர்.)

**2. கிங்கிணி கட்டிக் கிறிகட்டி கையினில்**
**கங்கணம் இட்டுக் கழுத்தில் தொடர்கட்டி**
**தன்கணத் தாலே சதிரா நடந்து வந்து**
**என்கண்ணன் என்னைப் புறம் புல்குவான்**
**எம்பிரான் என்னைப் புறம் புல்குவான்.**

**உரை:**

என் கண்ணபிரான் அரைச் சதங்கையைக் கட்டிக்கொண்டும், சிறுபவளத்தைக் கையில் தட்டிக்கொண்டும், தோள்வளையைத் தோள்களில் சாத்திக்கொண்டும், திருக்கழுத்தில் சங்கிலியை அணிந்து கொண்டும், திரு ஆபரணங்களின் திரளோடு கூட அழகாக நடந்து வந்து என்னைப் புறம் புல்குவான். எம்பிரான் என்னைப் புறம் புல்குவான்.

**3. கத்தக் கதித்துக்கிடந்த பெருஞ்செல்வம்**
**ஒத்துப் பொருந்திக் கொண்டு உண்ணாதுமண் ஆள்வான்**
**கொத்துத் தலைவன் குடிகெடத் தோன்றிய**
**அத்தன் வந்து என்னைப் புறம்புல்குவான்**
**ஆயர்கள் ஏறுஎன் புறம்புல்குவான்.**

**உரை:**

மிகவும் கொழுத்திருந்த பெருஞ்செல்வத்தைப் பாண்டவர்களோடு ஒத்து மனம் பொருந்தி யிருந்து அனுபவியாமல் பூமியைத் தாமே ஆள வேண்டுமென்று நினைத்தவனான துரியோதனன் தன் குடும்பத்தோடு பாழ் ஆகும்படி திரு அவதாரம் செய்த சுவாமி வந்து என்னைப் புறம் புல்குவான்.

**4. நாந்தகம் ஏந்திய நம்பி சரண்என்று**
**தாழ்ந்த தனஞ்சயற்கு ஆகி தரணியில்**
**வேந்தர்கள் உட்கவிசயன் மணித்திண்தேர்**
**ஊர்ந்தவன் என்னைப் புறம்புல்குவான்**
**உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான்.**

**உரை:**

நாந்தகம் என்னும் வாளைக் கையில் ஏந்தியவனே! நீயே எனக்குக் கதி என்று வணங்கிய அருச்சுனனுக்கு உதவியாய் இருந்து இப்புவியில் அரசர்கள் அஞ்சிக் கலங்கும்படி அவனது தேரைச் செலுத்தியவன் என்னைப் புறம் புல்குவான். தேவர்களுக்குத் தலைவனாகிய இவன் என்னைப் புறம் புல்குவான். தனஞ்சயன் - சயத்தையே தனமாக உடைய அருச்சுனன்.

**5. வெண்கலத்துக் பத்திரங் கட்டிட விளையாடி**
**கண்பல செய்த கருந்தழைக் காவின்கீழ்**
**பண்பல பாடிப் பல்லாண்டு இசைப்ப பண்டு**
**மண்பல கொண்டான் புறம்புல்குவான்**
**வாமனன் என்னைப் புறம்புல்குவான்**

**உரை:**

முன்னொரு காலத்தில் வெண்கலப் பாத்திரத்தை அரையிற்கட்டிக் கொண்டு விளையாடி பெரியகுடையாகிற சோலையின்கீழ் இருந்து பலவித ராகங்களைப் பாடிக்கொண்டு பல்லாண்டு இசைப்ப, மாவிலிடமிருந்து எல்லா உலகங்களையும்

அளந்து தனதாக்கிக் கொண்ட இவன் புறம் புல்குவான், வாமனன் என்னைப் புறம் புல்குவான்.

**6. சத்திரம் ஏந்தித் தனியொரு மாணியாய்**
**உத்தர வேதியில் நின்ற ஒருவனை**
**கத்திரியர் காணக் காணிமுற் றுங்கொண்ட**
**பத்திரா காரன் புறம்புல்குவான்**
**பாரளந் தான் என்புறம் புல்குவான்.**

**உரை:**

உத்தர வேதியிலிருந்த மகாபலியிடத்தில் குடையைக் கையில் பிடித்துக்கொண்டு பிரம்மச்சாரி வாமனனாய் அரசர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உலக முழுவதையும் தனதாக்கிக் கொண்ட அழகிய வடிவையுடைய இவன், புறம்புல்குவான் பூமியை அளந்த இவன் என்னைப் புறம்புல்குவான்.

**7. பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேலறி**
**தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்**
**மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய**
**அத்தன் வந்தென்னைப் புறம்புல்குவான்**
**ஆழியான் என்னைப் புறம்புல்குவான்.**

**உரை:**

ஓட்டையாய் விட்ட உரலைக் கவிழ்த்துப் போட்டு, அவ்வுரலின் மேலேறி மிடாக்களிலுள்ள இனிய மாலையும் வெண்ணெயையும் வயிறு நிரம்ப மிகுதியாக விழுங்கின தலைவன் வந்து என்னைப் புறம் புல்குவான். இவ்வாறு களவில் ஆழ்ந்து தேறியவன் என்னைப் புறம்புல்குவான். ஆலிலை மேல் பாற்கடலில் பயணம் கொண்டவனும், சக்ராயுதத்தைக் கையில் ஏந்தியவனுமான கண்ணன் என்னைப் புறும் புல்குவான்.

**8. மூத்தவை காணமுது மணற் குன்றேறி**
**கூத்துவந்து ஆடிக்குழலால் இசைபாடி**
**வாய்த்த மறையோர் வணங்க இமையவர்**
**எத்தவந்து என்னைப் புறம் புல்குவோன்**
**எம்பிரான் என்னைப் புறம்புல்குவான்.**

**உரை:**

மிகுதியான ஆயர்மக்கள் காணும்படியாக மணற் குன்றின் மேலிருந்து மறையோர் தன்னைக் கண்டு வணங்கவும், தேவர்கள் தோத்திரம் செய்யவும் வேய்ங்குழலில் இசைபாடிக்கொண்டும், மகிழ்ந்து கூத்தாடியும் நின்று வந்து என்னைப் புறம்புல்குவான். எம்பிரான் என்னைப் புறம் புல்குவான்.

**9. கற்பகச் சாவு கருதிய காதலிக்கு**
**இப்பொழுது ஈவன் என்று இந்திரன் காவினில்**
**நிற்பன செய்து நிலாத்திகழ முற்றத்துள்**
**உய்த்தவன் என்னைப் புறம்புல்குவான்**
**உம்பர்கோன் என்னைப் புறம்புல்குவான்.**

**உரை:**

இந்திரனுடைய சோலையில் இருந்த கற்பக மரத்தை விரும்பிய சத்திய பாமைக்கு இப்போதே கொண்டுவந்து தருவேன் என்று சொல்லி அவள் வீட்டு முற்றத்தில் இருக்கச் செய்தவன் என்னைப் புறம் புல்குவான். தேவர்களின் தலைவன் என்னைப் புறம்புல்குவான்.

## தரவு கொச்சகக் கலிப்பா

**10. ஆய்ச்சியன்று ஆழிப் பிரான்புறம் புல்கிய**
**வேய்த்தடந் தோளிசொல் விட்டுசித்தன் மகிழ்ந்து**
**ஈத்த தமிழிவை ஈரைந்தும் வல்லவர்**
**வாய்த்தநன் மக்களைப் பெற்று மகிழ்வரே.**

**உரை:**

மூங்கில் போன்ற தோள்களையுடைய யசோதை, சக்கரத்தை யுடைய கண்ணன் அக்காலத்தில் புறம் புல்கியதைக் கூறிய சொல்லைப் பெரியாழ்வார் மகிழ்ந்து அளித்த தமிழ்ப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் நல்ல மக்களை அடைந்து மகிழ்வார்கள்.

ஸ்ரீ

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

## முதலாம் பத்து

### 1-ஆம் திருவாய்மொழி – உயர்வற உயர் நலம்

### ஆன்ம உபதேசம்

### கலிவிருத்தம்

(கமாஸ் ராகம் - ஆதி தாளம்)

**1. உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்**
**மயர்வற மதி நலம் அருளினன் எவன் அவன்**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்**
**துயரது சுடரடி தொழுது எழு என் மனனே.**

**தெளிவுரை:**

மனமே! தன்னைவிட உயர்வு உடையவர் எனவும், நலம் உடையவர் எனவும் எவரும் இலர் என்னும் பெருமையுடையவரும், அஞ்ஞானத்தை விலக்கித் தெளிந்த ஞானத்தை அருளிச் செய்தவரும், எத்தன்மையிலும் குற்றவற்றகர்களாகி நித்தியப் பிரகாசம் உடைய தேவர்களின் தலைவரும் ஆகிய, பரம்பொருளின் ஒளிமிக்க திருவடியைத் தொழுது பிறவியாகிய துயரத்தைத் தீர்த்துக்கொள். அப்பரம்பொருளின் திருவடியைத் தொழுது அஞ்ஞான இருளிலிருந்து மீண்டெழுக.

இவண், உயிர்கள் கொண்டுள்ள அஞ்ஞானமாகிய இருளை இறைவனின் ஒளிமயமான திருவடியானது விலக்கிக் காக்கும் எனச் சுட்டப்பெற்றது.

**2. மனனக மலமற மலர்மிசை யெழுதரும்**
**மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்**
**இனனுணர் முழுநலம் எதிர் நிகழ் கழிவினும்**
**இனனிலன் எனன் உயிர் மிகுநரை யிலனே.**

**தெளிவுரை:**

பரமாத்மாவானவர், காமம் கோபம் முதலான அழுக்காகிய மலங்களை நீக்கிய ஞானிகளின் இதயமாகிய தாமரையில் விளங்குபவர். மனத்தால் உணரப்படுவதற்கு அரியவர். மெய், வாய், கண், நாசி, செவி என்னும் ஐம்புலன்களாலும் உணர்வதற்கு அரியவர். பரிபூரண ஞானானந்த வடிவினராகவும், கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என எல்லாக் காலங்களிலும் திகழ்பவராகவும், தனக்கு நிகராக ஒருவரும் இன்றித் தனிப்பொருளாகவும் ஒப்புயர்வு அற்றவராகவும் இருப்பவர். தன்னினும் மிக்கவர்

என யாரும் இல்லாத சிறப்புடன் திகழ்பவர். அப்பரமன், என்னுடைய நல்லுயிராகத் திகழ்பவர் ஆவர்.

**3. இலனது வுடையனி தெனநினை வரியவன்**
**நிலனிடை விசும்படை உருவினன் அருவினன்**
**புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்த அந்**
**நலனுடை யொருவனை நணுகினம் நாமே.**

**தெளிவுரை:**

பரமாத்மாவானவர், ஒரு பொருளைப் பெறாதவர் எனவும், ஒரு பொருளைப் பெற்று விளங்குபவர் எனக் கூறப் பெறாதவரும் எல்லாப் பொருளிலும் கலந்து விளங்கியும் பற்றின்றியும் வியாபித்துள்ளவர். நினைக்கும் நினைவுக்கும் அரியவர். நிலவுலகத்திலும், ஆகாயத்திலும் வடிவம் கொள்ளும் வகையிலும், வடிவத்திற்கு அப்பாற்பட்ட அருவப் பொருளாகவும் விளங்குபவர். புலன்களால் அறியப்படுமாறு தோன்றினாலும் அப்புலன்களுடன் கலவாது விளங்குபவர். எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளவர். அத்தகைய அருங்குணச் சிறப்புடைய பரமனுடன் நாம் சேரப் பெற்றோம்.

பரமாத்மாவின்பால் மருவிய ஆழ்வாரின் அனுபவமான பேரின்ப நிலையானது,‘‘நணுகினம் நாமே’’ என உணர்த்தப் பெற்றது. மற்றும், புலன்களின் சிறுமையில் கலவாத பரம்பொருளின் மேன்மையானது,‘‘புலனொடு புலனலன்’’ என ஏத்தப்பெற்றது.

**4. நாமவன் இவன் உவன் அவள் இவள் உவள் எவள்**
**தாமவர் இவர் உவர் அது இது உது எது**
**வீமவை இவை உவை அவை நலம் தீங்கவை**
**ஆமவை ஆயவை ஆய் நின்ற அவரே.**

**தெளிவுரை:**

பரமாத்மாவானவர், நாம் என்னும் பன்மையாகவும், இவன், நீ, அவள், இவள் என்னும் சுட்டுப் பெயர்களாகவும் மற்றும் தாம், அவர், இவர், நீவிர், அது, இது, இவை, அவை எனப்படும் குறியீடுகளாகவும், நல்லவை, தீயவை, சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மேவும் யாவுமாகவும் விளங்குபவர்.

5. **அவரவர் தமதம தறிவறி வகை வகை**
**அவரவர் இறையவர் எனஅடி யடையவர்கள்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விதி வழி யடைய நின் றனரே.**

**தெளிவுரை:**

உலகில் உள்ள மாந்தர்கள், அவரவர்களுடைய அறிவுக்கேற்ற அளவில் அறிந்து, தெய்வம் ஒன்றை வழிபட்டு வணங்குவார்கள். ஆயினும் அவ்வாறு வணங்கும் பக்தர்கள் குறைவின்றி நன்மைகளை நன்கு பெறுபவராவர். இதற்குக் காரணமாக இருப்பது ஸ்ரீமன் நாராயணனே முன்னின்று அந்தந்த தெய்வத்தின் பால் கலந்து மேவி அருள் பாவிப்பதே யாகும்.

6. **நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்**
**நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்**
**என்றுமோர் இயல்வினர் என நினை வரியர்**
**என்றுமோர் இயல் வொடு நின்ற எம் திடரே.**

**தெளிவுரை:**

பரம்பொருளானவர், நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல் என்னும் செயலுக்கு உரியவராகவும், அவ்வாறு மேவும் தன்மைக்கு அல்லர் எனவும் இயம்பும் தன்மையில் திகழ்பவர். அப்பரம்பொருள் திடமாக எம்மிடம் மேவுபவரே.

7. **திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவை மிசை**
**படர் பொருள் முழுவதும் ஆயவை யவை தொறும்**
**உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்**
**சுடர் மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.**

**தெளிவுரை:**

உறுதிமிக்கமாக விளங்கும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என எல்லாவற்றுள்ளும் கலந்தும் மற்றும் உள்ள யாவற்றிலும் முழுமையாகத் தோன்றுமாறு புரிந்தும், உடலின் கண் பொருந்திச் செயல் மேவும் உயிரைப்போன்று வியாபித்தும், கண்ணனுக்குப் புலனாகாதபடி மறைந்து விளங்கியும், திகழும் வேதத்தில் பொலிந்தும் உள்ளவரான அப்பரம் பொருளானவர், ஊழிக் காலத்தில் யாவற்றையும் திருவயிற்றிலே அடக்கி ஆலிலையில் விளங்குபவராவர்.

**8. சுரர் அறி வருநிலை விண்முதல் முழுவதும்**
**வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்**
**புரமொரு மூன்றெறித் தமரர்க்கும் அறிவியந்து**
**அரன் அயன் என உல கழித்தமைத் துளனே.**

**தெளிவுரை:**

பரம்பொருளானவர், தேவர்களும் அறிதற்கு அரியவராகவும், ஆகாயம் முதலான யாவற்றையும் படைத்தவராகவும், அவற்றைப் பிரளய காலத்தில் உட்கொண்டு தனது வயிற்றிலே ஏற்றுப் பாதுகாப்பவராகவும் விளங்குபவர். அவர், முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கியும் உலகங்களை அழித்தல் செய்தும் மேவும் அரனாகவும், தேவர்களும் நல்லறிவைத் தருபவரும் உலகங்களைப் படைப்பவரும் ஆகிய நான்முகக் கடவுளாகவும் விளங்குபவர்.

**9. உளன் எனில் உளன் அவன் உருவம் இவ் வுருவகள்**
**உளன் அலன் எனில் அவன் அருவம் இவ் வுருவகள்**
**உளன்என இலன்என இவை குணம் உடைமையில்**
**உளள்இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே.**

**தெளிவுரை:**

பரமாத்மா வானவர், உண்டு என்று கூறுபவர்களுக்கு, அவ்வாறே விளங்குபவர். ஈச்சுவரனை இல்லை என்று நாத்திகம் பேசினாலும், அப்பரமன், உண்டு என்பதே மெய்ம்மை. இவ்வாறு பேசப்படுவதற்கு, உருவம் அடைய உலகப் பொருள்யாவும் அப்பரம்பொருளின் தூல சரீரமாகவும், உருவம் இல்லாத பொருள்கள் யாவும் சூக்கும சரீரமாகவும் உடையது. அப்பெருமான் இவ்விரு தன்மையாலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவராவார்.

**10. பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்**
**பரந்தஅண் டமிதென நிலவிசும்பு ஒழிவற**
**கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும்**
**கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே.**

**தெளிவுரை:**

பிரளய காலத்தில் உலகம் யாவையும் தமது வயிற்றில் அடக்கி ஆலிலை மேல் பள்ளி கொள்ளும் நாராயணன், விரிந்து கடலின் துளிகள் தோறும் பரந்து விளங்குபவர், நிலத்திலும், ஆகாயத்திலும் நீக்கமற நிறைந்துள்ளார்.

11. **சுரவிசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை**
**வரன் நவில் திறல்வலி யளிபொறை யாய் நின்ற**
**பரன் அடி மேல்குரு கூர்ச்சட கோபன் சொல்**
**நிரல் நிறை யாயிரத் திவைபத் தும்வீடே.**

**தெளிவுரை:**

உறுதிமிக்க ஆகாயத்தின்பால் பொருந்தும் ஓசையும், நெருப்பின்பால் பொருந்தும் சக்தியும், காற்றின்பால் பொருந்தும் வலிமையும், நீரின்பால் பொருந்தும் குளிர்ச்சியும், நிலத்தின்பால் பொருந்தும் பொறுமையும் ஆகி அவற்றைத் தமது வயமாகப் பெற்றுள்ள பரம்பொருளைப் போற்றிக் குருகூரில் விளங்கும் நம்மாழ்வார் அருளிய பாசுரங்களில் இத்திருப்பாசுரங்களான பத்தினைச் சேவிப்பவர்கள், வீட்டின்பத்தைப் பெறுவார்கள்.

(வீடு – மோட்சம், முத்தியுலகம்)

**குறிப்பு:**

பாசுரங்களின் அடியை இரண்டு முறை சேவித்தலையும், நிறுத்திச் சேவித்தலையும் உணர்த்தும் மரபிற் கேற்ப. என்னும் குறியானது இடப்பட்டுள்ளது. இது மேற்கொண்டு வரும் எல்லாப் பாசுரங்களுக்கும் பொருந்தும்.

**உயர்வேபரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு**
**உயர்வேதநேர் கொண்டுரைத்து – மயர்வேதும்**
**வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன்சொல்**
**வேராகவே விளையும் வீடு.**

## 2-ஆம் திருவாய்மொழி – வீடுமின் முற்றவும்

## உலகிற்கு உபதேசம்

**பண்: முதிர்ந்த குறிஞ்சி**

**தாளம்: ஏழொத்து)**

### வஞ்சிவிருத்தம்

**(செஞ்சுருட்டி ராகம் - அட தாளம்)**

**1. வீடுமின் முற்றவும்**
**வீடுசெய்து உம்முயிர்**
**வீடுடை யானிடை**
**வீடு செய்ம் மினே.**

**தெளிவுரை:**

மாந்தர்களே! மாயாகாரியமாக விளங்கும் உலகப் பந்தத்திலிருந்து விடுபட்டுச் சாந்தத்தைப் பெறுங்கள். அப்படிச் செய்து உம்முடைய ஆத்மாவை வீட்டுலகத்திற்கு உரிய ஸ்ரீமந் நாராயணனுடைய பாத தாமரையில் சரணமாகச் செய்யுங்கள்.

இத்திருமொழி முழுவதும் கோயில் திருவாய்மொழியைச் சேர்ந்ததாகும்.

**2. மின்னின் நிலையில**
**மன்னுயிர் ஆக்கைகள்**
**என்னும் இடத்து இறை**
**உன்னுமின் நீரே.**

**தெளிவுரை:**

இவ்வான்ா பெற்றுள்ள தேகமானது மின்னலைப் போன்று தோன்றி மறையும் தன்மையில் நிலையில்லாதது. எனவே, இதனை நொடிப் பொழுதாவது எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுக. இறை – நொடிப்பொழுது.

**3. நீர்நும தென்றிவை**
**வேர்முதல் மாய்த்து இறை**
**சேர்மின் உயிர்க்கு அதன்**
**நேர் நிறை இலலே.**

**தெளிவுரை:**

யான் எனது என்னும் அகப்பற்றையும் புறப்பற்றையும் வேருடன் அகற்றி அமைதி கொண்டு ஸ்ரீமந் நாராயணனைச் சரணம் அடைக. ஆன்மாவுக்கு அதைவிட நிறைவு தரக்கூடியது வேறு எதுவும் இல்லை.

**4. இல்லதும் உள்ளதும்**
**அல்லது அவனுரு**
**எல்லையில் அந்நலம்**
**புல்குபற் றற்றே.**

**தெளிவுரை:**

எம்பெருமானுடைய திவ்விய சொரூபமானது, இல்லை என்று சொல்லக் கூடிய மாயும் பொருளாகவோ அன்றி உள்ளது என்னும் தன்மையில் மேவும் ஜீவாத்மாவைப் போன்றோ உடையதன்று. அது எல்லை வகுத்து மொழிதலுக்கு அப்பாற்பட்ட பேரானந்தமாகும். நெஞ்சமே! நீ எத்தகைய உலகப் பற்றினையும் சாராது பற்று அற்று அப்பரம்பொருளையே சரணாகதியாக அடைக.

(புல்கு – சரணாகதியாகி இரண்டறக் கலத்தல்)

**5. அற்றது பற்றெனில்**
**உற்றது வீடுஉயிர்**
**செற்றது மன்னுறில்**
**அற்றிறை பற்றே.**

**தெளிவுரை:**

பற்றினை அற்று இருக்க உயிரானது வீட்டினை யடையக்கூடும். ஆயினும் எம்பெருமானையே சரணாக அடைந்து தியானித்துப் பேரானந்தத்தில் நிலைகொள்வாயாக. அதுவே சிறப்புடையது.

**6. பற்றிலன் ஈசனும்**
**முற்றவும் நின்றனன்**
**பற்றிலை யாய் அவன்**
**முற்றி லடங்கே.**

**தெளிவுரை:**

எம்பெருமான் எத்தகைய பொருளையும் பற்றி நிற்பதில்லை. எனினும் அவர் முழுவதுமாய் விளங்கி நிற்பதால், அப்பரமாத்மாவைச் சரணாக அடைதலே உயிர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

**7. அடங்கெழில் சம்பத்து**
**அடங்கக் கண்டு ஈசன்**
**அடங்கெழில் அ∴தென்று**
**அடங்குக உள்ளே.**

**தெளிவுரை:**

மணமே! உலக்பொருள்கள் எல்லாவற்றுள்ளும் பரமாத்வாவானவர் எழிலுடன் விளங்குவதை நன்கு தெளிவு பெறுக. ஆதலால் எல்லா எழிலும் அப்பரமாத்வாவே ஆகம் எனக் கண்டு அகம் மகிழ்ந்து இலயித்து இருக்க.

(சம்பத்து – உலகப்பொருள்கள், செல்வம்)

**8. உள்ளம் உலர செயல்**
**உள்ள இம் மூன்றையும்**
**உள்ளிக் கெடுத்து இறை**
**யுள்ளில் ஒடுங்கே.**

**தெளிவுரை:**

மனம் வாக்கு செயல் ஆகிய மூன்று காரணங்களாலும் பரமாத்மாவைக் கருதித் தியானித்தும், பாசுரங்களைச் சேவித்துத் திருநாமங்களைப் பஜனை செய்தும், புண்ணியத் தலங்களுக்குச் சென்று சேவித்து பாகவத சேவை புரிந்தும் விளங்குக. அதுவே ஸ்ரீமந் நாராயணனை உடனிருந்து சேவிப்பதாகும்.

**9. ஒடுங்க அவன்கண்**
**ஒடுங்கலும் எல்லாம்**
**விடும் பின்னும் ஆக்கை**
**விடும் பொழுது எண்ணே.**

**தெளிவுரை:**

மனமே! பரமாத்மாவின்பால் இலயித்துச் சரணாகதி செய்து நிற்கும் போது, எல்லாக் குற்றங்களும் தாமாகவே விலகும். அத்தன்மையில் அழியக் கூடிய இச்சரீரத்தைத் துறப்பதற்குக் கருதுவாயாக.

**10. எண் பெருக்கு அந் நலத்து**
**ஒண் பெருமாள் ஈறில**
**வண் புகழ் நாரணன்**
**திண் கழல் சேரே.**

**தெளிவுரை:**

உலகமாகிய மாயாபந்தத்திலிருந்து விடுபட்டு எண்ணற்ற பேரானந்தப் பாங்குடைய ஒண்பொருளானதும் அழிவற்றதானதும் ஆகிய ஜீ வாத்மாவை, அடியவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளலாகிய புகழ் மிகுந்த ஸ்ரீமந்நாராயணனின் திருக்கழலைச் சரணமாக்கிப் பொருந்தி இன்புறுக.

திண்கழல் - அடியவர்களை உறுதியுடன் காப்பதாகிய திருவடி, பாத சேவையினையும் சரணாகதியையும் உணர்த்துவதாகும்.

**11. சேர்த்தடத் தென் குரு**
**கூர்ச் சட கோபன் சொல்**
**சீர்த்தொடை யாயிரத்து**
**ஓர்த்த இப் பத்தே.**

**தெளிவுரை:**

புண்ணியத்தடாகங்கயையுடைய குருகூரில் மேவும் சடகோபனாகிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியான ஓராயிரங்களுள் இத்திருப்பாசுரங்கள் பத்தும் நன்கு ஆய்ந்து விளம்பப் பெற்றதாகும்.

(தென்குருகூர்-ஆழ்வார் திருநகரி, ஓர்த்த-ஆய்ந்து சீவர்களுக்கு உகந்த நிலையானது அறிவுறுத்தியது.)

**வீடுசெய்துமற்றெவையும் மிக்கபுகழ் நாரணன்தான்**
**நாடு நலத்தாலடைய நன்குரைக்கும் நீடுபுகழ்**
**வண்குருகூர்மாறினிந்தமா நிலத்தோர்தாம் வாழ**
**பண்புடனே பாடியருள்பத்து.**

## 3-ஆம் திருவாய்மொழி – பத்துடையடியவர்

## அடியவர்க்கு எளியவன்

**பண்: நட்டபாடை**

**தாளம்: ஏழொத்து**

**கலிநிலைத்துறை**

**(அபரூப ராகம் - ரூபக தாளம்)**

1. **பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய**
   **வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள்**
   **மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு**
   **எத்திறம் உரலினொடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே.**

**தெளிவுரை:**

தன்னலமற்று பக்தி செலுத்தும் அடியவர்களுக்கு எளியவராகவும் ஏனையவர்களுக்கு அரியவராகவும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளான பெரிய பிராட்டியாரால் விரும்பப்படுபவராகவும், பேரறிவின் பூரணமாகவும், திகழும் ஸ்ரீமந் நாராயணன், வெண்ணெயைக் களவு செய்ததற்காக உரலோடு சேர்த்து வலிமையுடன் கட்டுண்டவர். பரமாத்வானி எளிமை தான் என்னே!

(உரவு – வலிமை, மார்பு எனவும் விளம்பப்பெறும், யாப்பு – ஆப்பு, கட்டு)

2. **எளிவரும் இயல்வினன் நிலைவரம் பிலபல பிறப்பாய்**
   **ஒளிவரு முழுநலம் முதலில கேடில வீடாம்**
   **தெளி தரு நிலைமைய தொழிலிலன் முழுவதும் இறையோன்**
   **அளிவரும் அருளினோ(டு) அகத்தனன் புறத்தனன் அமைந்தே.**

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணனாகிய பரம்பொருளானவர், தன்னை வரம்புக்குள் பதித்துக் கொள்ளாத அகண்ட கருணையுடைவராகி பலவகையான பிறப்புகளைக் கொண்டு திரு அவதாரம் செய்பவர்; ஆதியும் அந்தமும் கடந்தவர்; பேரின்ப நிலையானவர்; பேரொளிவண்ணமாகியவர்; அன்பர்களுக்கு எளியவர்; மன்னுயிர்களுக்கு வீடு எனப்படும் முத்தி நலத்தை அளிக்கும் கருணையுடையவர். அப்பரமன், அன்புறு பேரருளாளனாகி, அடியவர்களின் உள்ளத்தில் மேவியும், புறத்தே நின்று பாதுகாத்தும் ஒளிர்பவர்.

(அளி-அன்பு)

3. **அமைவுடை அறநெறி முழுவதும் உயர்வற உயர்ந்து**
**அமைவுடை முதல் கெடல் ஒடிவிடை அறநிலம் அதுவாம்**
**அமைவுடை அமரரும் யாவையும் யாவரும் தானாம்**
**அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே?**

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணன், நன்கு விளங்கும் அறநெறிகளைப் பரிபாலித்தும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிற்கும் அதிபதியாகவும் சிறப்புடைய பிரமன் முதலான தேவர்களும், மற்றும் விளங்கும் யாவையும் தானேயாகவும் விளங்குபவர். அப்பரம்பொருளின் திருவுள்ளத்தை அறிபவர் தான் யாரே? எவரும் இலர் என்பது குறிப்பு.

4. **யாருமோர் நிலைமையன் எனவறி வரிய எம்பெருமான்**
**யாருமோர் நிலைமையன் எனவறி எளியஎம் பெருமான்**
**பேருமோர் ஆயிரம் பிறபல உடைய எம்பெருமான்**
**பேருமோர் உருவமும் உளதில்லை இல தில்லை பிணக்கே.**

**தெளிவுரை:**

எம்பெருமானாகிய ஸ்ரீமந் நாராயணன், எல்லோராலும் அறிவதற்கு அரியவராக விளங்குபவர். அன்பர்களுக்கு எளியவராக விளங்குபவர். ஆயிரக்கணக்கான திருநாமங்களையுடையவர். அப்பரம்பொருளின் திருவடிவமானது, இன்ன தன்மையுடையது எனவும் இன்ன தன்மையுடையதில்லை எனவும் அறுதியிட்டு விளக்கமுடியாததாகும்.

இறைவனுடைய திருஉருவமானது பிணக்கின்றி மேவும் அன்பின் வடிவமாகும் என்பதும் குறிப்பு. பிணக்கின்றி – சண்டை சச்சரவு இன்றி, ஐயத்துடக்கிடமின்றி.

5. **பிணக்கற வறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த**
**கணக்கறு நலத்தனன் அந்தமில் ஆதியம் பகவன்**
**வணக்குடைத் தவநெறி வழிநின்று புறநெறி களைகட்டு**
**உணக்குமின் பசையற அவனுடை உணர்வுகொண் டுணர்ந்தே.**

**தெளிவுரை:**

அந்தமும் ஆதியும் இல்லாத பரம்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணன், ஆறு வகையான சமயப் பிணக்குகளையும் நீக்கும் நன்னெறிகளை அருளிச்செய்தவர், எண்ணற்ற மங்கல குணங்களையுடையவர். அப்பரம்பொருளின் மீது பற்றுக்கொண்டு

ஏத்தி வணங்குக. பிறமார்க்கங்களை ஒதுக்கிப் பகவானாகிய அப்பரமாத்வாவைப் போற்றுக. உலகப் பொருளின்மீது கொள்ளும் பந்த பாசத்தை நீக்கிப் பரமனை நெஞ்சுள் இருத்துக. இதுவே மேன்மையடையும் நெறியாகும்.

**6. உணர்ந்துணர்த் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்த இந் நிலைமை**
**உணர்ந்துணர்ந் துணரிலும் இறை நிலை யுணர்வரி துயிர்காள்**
**உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரிஅயன் அரன் என்னும் இவரை**
**உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சமின் மனப்பட்ட**
**தொன்றே**

**தெளிவுரை:**

மன்னுயிர்கள்! எல்லா நிலையிலும், ஆழ்ந்தும், விரிந்தும், உயர்ந்தும் மேவும் தெய்வ நிலையானது, உணர்வால் ஆராய்ந்து அறிதற்கு அரிதாகும். எனவே அரி, அயன், அரன் என்னும் இவர்களுடைய குணங்களை நன்கு உணர்ந்து அவர்களின் திருநாமங்களை ஓதி ஏத்துக.

மூன்று திருநாமங்களையுடையதாயினும் மனத்தில் பொருந்தும் பரம்பொருள் ஒன்றே என இவண் சாற்றப் பெறுதலை ஓர்க.

**7. ஒன்றெனப் பலவென அறிவரும்வடிவினுள் நின்ற**
**நன்றெழில் நாரணன் நான்முகன்அரன் என்னும் இவரை**
**ஒன்றநும் மனத்து வைத்து உள்ளிநும் இருபசை யறுத்து**
**நன்றென நலம்செய்வது அவனிடை நம்முடை நாளே.**

**தெளிவுரை:**

ஒன்று எனவும், பல எனவும் அறிதற்கு அரிய வடிவமான எழில் மிக்க நாராயணன், நான்முகன், உருத்திரன் என்னும் இவர்களை மனத்துள் ஏகரூபமாகப் பதித்துப் பிறவற்றின்மீது கொள்ளும் பற்றினை விலக்குக. அதுவே இப்பிறவியில் நன்மையடையத்தக்க தாகும்.

இத்திருப்பாசுரமானது, ஸ்ரீமந் நாராயணனை மனத்தில் பதித்து விளங்குதலின் நலத்தைக் குறிப்பால் உணர்த்திற்று.

**8. நாளுநின் றடுநம பழமையங் கொடுவினை யுடனே**
**மாளும் ஓர்குறைவில்லை மனனக மலமறக் கழுவி**
**நா ளுநந்திருவுடை யடிகள்தம் நலங்கழல் வணங்கி**
**மாளுமோர் இடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.**

**தெளிவுரை:**

மனத்தில் ஏற்படும் குற்றங்களை நீக்கித் திருமகளைத் திருமார்பில் கொண்டு விளங்கும் ஸ்ரீமந்நாராயணனின் நலந்திகழும் திருவடிகளை வணங்குக. அந்திமக் காலத்திலும் அப்பெருமானை வணங்குக. அவ்வாறு செய்தால் நாள்தோறும் பெருகிச் சேரும் தீவினை யாவும் மாயும். குறைவற்ற தன்மையில் பரமாத்மாவின் பேரருள் கைகூடும்.

**9. வலத்தனன் திரிபுரம் எரித்தவன் இடம்பெறத் துந்தித்**
**தலத்து எழு திசைமுகன் படைத்தநல் லுகலமும் தானும்**
**புலப்படப் பின்னும்தன் உலகத்தில் அகத்தனன் தானே**
**சொலப்புகில் இவைபின்னும் வயிற்றுள இவையவன்**
**துயக்கே.**

**தெளிவுரை:**

முப்புரங்களை எரித்த உருத்திரன் வலதுபக்கமும், உலகங்களைப் படைத்த நான்முகன் அவ்வுலகங்களுடன் தனது உந்திக் கமலத்திலும் திகழ்ந்து மேவ, ஸ்ரீமந்நாராயணன், தமது உலகத்துள் விளங்குபவராவர். இவையனைத்தும் பிரளய காலத்தில் அப்பரமாத்மாவின் வயிற்றினுள் பாதுகாப்புடன் திகழ்வதாகும்.

இத்திருபாசுரானது ஸ்ரீமந் நாராயணனின் பேராற்றலை உரைப்பதாயிற்று.

**10. துயக்கறு மதியில்நல் ஞானத்துடன் அமரரைத் துயக்கும்**
**மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன்**
**புயற்கரு நிறத்தனன் பெருநிலங் கடந்தநல் லடிப்போது**
**அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே.**

**தெளிவுரை:**

தெளிந்த அறிவுடன் திகழும் தேவர்களையும் அயர்வடையச் செய்யும் எம்பெருமானின் அலகிலா விளையாட்டானது, வானினும் பெரிய வல்லமை உடையதாகும். சூல்கொண்ட மேகம் போன்ற கரிய நிறத்தையுடையவரும், உலகத்தை அளந்தவருமான ஸ்ரீமந்நாராணனுடைய திருவடித் தாமரையை மறவாது உரைப்பேன். அப்பரமாத்வாவைத் தழுவுவேன். வேறு பற்றின்றி வணங்குவேன்.

**11. அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடந்தவன் றன்னை**
**அமர்பொழில் வளங்குரு கூர்ச்சட கோபன்குற் றேவல்**
**அமர் சுவை யாயிரத் தவற்றினுள் இவை பத்தும் வல்லார்**
**அமரரோடு உயர்வில்சென்று அறுவர்தம் பிறவியஞ் சிறையே.**

**தெளிவுரை:**

தேவர்கள் தொழுது ஏத்தப்பாற் கடலைக் கடைந்து, அமிர்தத்தை அளித்த ஸ்ரீமந்நாராயணனைப் போற்றிக் குருகூர் என்னும் பதிக்குரிய நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆயிரம் பாசுரங்களுள், அமுதமெனத் திகழும் இப்பத்தினையும் சேவிக்க வல்லவர்கள், தேவர்களுடன் இனிது விளங்கியும், பரமபதத்திற்குச் செல்பவராயும் திகழ, இப்பிறவியாகிய பந்தத்திலிருந்து விடுபடுவார்கள்.

**பத்துடையோர்க்கென்றும் பரனெனியனாம் பிறப்பால்**
**முத்திதரும் மாநிலத்தீர்! மூண்டவன்பால் - பத்திசெய்யும்**
**என்றுரைத்தமாறந்த னின்சொல்லால்போம் நெடுகச்**
**சென்ற பிறப்பாமஞ்சிறை.**

## 4-ஆம் திருவாய்மொழி – அஞ்சிறைய மடநாராய்

## தலைமகள் தூதுவிடல்

**பண்: நட்டபாடை**

**தாளம்: ஏழொத்து**

### தரவு கொச்சகக் கலிப்பா

### (கண்டா ராகம் - ஆதி தாளம்)

**1. அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய்! நீயும் நின்**
**அஞ்சிறைய சேவலுமாய் ஆவா! வென்றெனக் கருளி**
**வெஞ்சிறைப்புள் உயர்த்தாற்கென் விடுதூ தாய்ச் சென்றக்கால்**
**வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால்**
**என் செய்யுமொ!**

**தெளிவுரை:**

அழகிய சிறகுகளை யுடைய நாரையே! என் பால் அன்புடைய பறவையே! நீயும் நின் ஆண் துணையாகிய நாரையும் எனக்காக இரக்கம் கொண்டு, வலிமையான சிறகுகளையுடைய கருடாழ்வாரைக் கொடியாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீமந்நாராயணனிடம் தூது சென்றால் உனக்கு என்ன நிகழும்? உன்னைச் சிறை வைத்தாலும் அது பெருஞ்செல்வம் அல்லவா!

இப்பத்தானது அகத்துறையில் அமையப்பெற்றது.

**2. என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க் கென்தூதாய்**
**என்செய்யும் உரைத்தக்கால் இனக்குயில்கான்? நீரலிரே!**
**முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல்**
**முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ! விதியினமே.**

**தெளிவுரை:**

குயில்களே! செந்தாமரை போன்ற கண்களையுடைய எம்பெருமானாகிய ஸ்ரீமந் நாராயணனிடம் எனக்காகத் தூது சென்றால் உங்களுக்கு என்ன குறை நேரும்? நீங்கள் அன்புடையவர்களல்லவா! முற்பிறவியில் செய்த தீவினையால் அப்பரமாத்மாவுக்குக் குற்றேவல் புரியாதவனானேன். இப்பொழுது அவ்வாறு இருத்தல் முறையன்று. எனக்காகத் தூது செல்க.

**3. விதியினால் பெடை மணக்கும் மென்னடைய அன்னங்காள்**
**மதியினால் குறள் மாணாய் உலகிரந்த கள்வற்கு**

**மதியிலேன் வல்வினையே மாளாதோ! என்று ஒருத்தி**
**மதியெலாம் உள்கலங்கி மயங்குமால் என்னீரே.**

**தெளிவுரை:**

பெடையுடன் மகிழ்ந்து விளங்கும் மென்மையான நடையின் பாங்குடைய அன்னப் பறவைகளே! வாமன வடிவத்தில் மேவும் பிரமசாரியாகி, மூன்று அடி மண்ணை யாசித்த கள்வராகிய பெருமானிடம் சென்று,"இங்கு ஒருத்தி கொடிய வினையால் வாடுகின்றாள். மதியிழந்து கிடக்கின்றாள். அருள் புரிக" என்று உரைப்பீரோ?

4. **என் நீர்மை கண்டிரங்கி இது தகா தென்னாத**
   **என்நீல முகில் வண்ணற்கொன் சொல்லியான் சொல்லுகெனோ**
   **நன்னீரமை யினியவர்கண் தங்காதென் றொரு வாய்ச்சொல்**
   **நன்னீல மகன்றில்காள்! நல்குதிரோ! நல்கீரோ!**

**தெளிவுரை:**

நல்ல நீல நிறமுடைய மகன்றில் பறவைகளே! என்னுடைய அன்பின் தன்மையைக் கண்டும் மேகம் போன்ற கரியவண்ணம் உடைய ஸ்ரீமந்நாராயணன், என்மீது இரக்கம் கொள்ளாது இருக்கும் நிலையில், நான் எதைச் சொல்லப்போகிறேன். ஆயினும்,"இத்தன்மையினை இனி அவன் தாங்க மாட்டாள்" என்று மட்டும் உரைப்பீராக.

5. **நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே**
   **நல்கத்தான் ஆகாதோ! நாரணனைக் கண்டக்கால்**
   **மல்குநீர்ப் புனற்படப்பை இரைதேர் வண் சிறுகுருகே!**
   **மல்கு நீர்க் கண்ணேற்கோர் வாசகங் கொண்டருளாயே.**

**தெளிவுரை:**

நீர் மல்கும் பூந்தோட்டங்களில் மேவி இரையைத் தேர்ந்து விளங்குகின்ற சிறிய குருகே! ஏழு உலகங்களையும் காத்தருள்கின்ற ஆற்றல் உடைய ஸ்ரீமந்நாராயணன், அடியேற்கு அருள் செய்யலாகாதோ! நீ அப்பெருமானைக் கண்டு எனக்காக ஒரு வாசகத்தைப் பெற்று வந்து உதவுக.

(பொழில்-உலகம்)

**6. அருளாத நீரருளி யவராவி துவராமுன்**
**அருளாழிப் புட்கடவீா் அவர் வீதி யொருநாள் என்று**
**அருளாழி யம்மானைக் கண்டக்கால் இது சொல்லி**
**யருள் ஆழிவரி வண்டே! யாமும் என் பிழைத்தோமே?**

**தெளிவுரை:**

வட்டமாகசக் கழன்று விளங்கும் அழகிய வண்டே! அருட் கடலான எம்பெருமானைக் கண்டு, என்னுடைய உயிரானது உள்ள போது, காட்சி தருவதற்குக் கருணை புரியாத தேவரீர், உயிரானது பிரிவதற்கு முன்னராகிலும் பெரிய திருவடியாகிய கருடாழ்வாரைத் திருவீதி வழியாகச் செலுத்துவீராக என்று உரைப்பாயாக.

**7. என்பிழை கோப்பது போலப் பனிவாடையீாகின்றது**
**என்பிழையே நினைந்தருளி அருனாததிருமாலார்க்கு**
**என்பிழைத்தான் திருவடியின் தகவினுக் கென்றொருவாய்ச் சொல்**
**என்பிழைக்கும் இளங்கிளியே! யான் வளா்த்த நீயலையே.**

**தெளிவுரை:**

என்பும் உரியர் பிறர்க்கு என்று சொல்லப்படுகின்ற அன்பின் வயத்தால் இழைய, யான் வளர்த்த இளமையான கிளியே! நான. எலும்பைத் துளைசெய்து வருத்தி நூலிழை கோப்பது போலப் பனிக்காற்றின் வாடை வருத்ததற் துன்புறுகின்றேன். என்னுடைய பிழையைக் கருத்தில்கொண்டு அருளாதவராகிய திருமாலிடம் சென்று,"இவன் தேவரீருடைய திருவடியின் தகவினுக்கு வேறாக என்ன பிழையைச் செய்தாள்?" என ஒரு சொல்லைச் சொல்வாயோ!

**8. நீயலையே சிறு பூவாய் நெடுமாலாா்க் கென்தூதாய்**
**நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்**
**சாயலொடு மணிமாமை தளா்ந்தேன் நான் இனியுனது**
**வாயலகில் இன்னடிசில்வைப்பாரை நாடாயே.**

**தெளிவுரை:**

நாகணவாய்ப் பறவையே! என்னுடைய தலைவனாகிய ஸ்ரீமந் லட்சுமி நாராயணனிடம் தூது சென்று என்னுடைய ஆற்றாமையைத் தெரிவிக்குமாறு சொன்ன சொல்லையும் நீ அவ்வாறு சொல்லாது வாளாள் இருந்தனை.

இப்போது நான் என்னுடைய அழகிய வண்ணத்தை இழந்து இளைத்தனன். இனி உனது உணவை நின் வாயருகில் கொண்டு அளிப்பவரை நீயே தேடிக்கொள்.

**9. நாடாத மலர் நாடி நாடோறும் நாரணன்றன்**
**வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று**
**வீடாடி வீற்றிருத்தல் வினையற்ற தென் செய்வதோ!**
**ஊடாடு பனிவாடாய்! உரைத்தீராய் எனதுடலே.**

**தெளிவுரை:**

எல்லா இடங்களிலும் பரவி வீசுகின்ற காற்றே! உயர்ந்த மலர்களைக் கொண்டு ஸ்ரீமந்நாராயணனின் வாடாத மலர்ப் பாதத்தில் சாற்றி மகிழ்வதை விட்டுப் பயனின்றி வாளாய் இருப்பது எதனால் உண்டானதோ! இதனை அப்பெருமானிடம் உரைப்பாயாக. அவ்வாறு உரையாத நிலையில், என்னுடைய உடலை வாட்டி இரண்டாகப் பிளந்துவிடு.

**10. உடலாழிப் பிறப்புவீடு உயிர்முதலா முற்றுமாய்**
**கடலாழி நீர் தோற்றி அதனுள்ளே கண்வளரும்**
**அடலாழி அம்மானைக் கண்டக்கால் இது சொல்லி**
**விடலாழி மடநெஞ்சே! வினையோ மொன்றாமளவே.**

**தெளிவுரை:**

மடமையுள் ஆழ்ந்த நெஞ்சமே! சரீரத்தின் தொடர்பால் பிறவிக்கடலிலும் அவற்றை அடைகின்ற ஆன்மாவிலும் பற்றி விளங்கினும், யாவற்றையும் ஆள்பவர் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பெருமானும் சக்கராயுதத்தையுடையவருமான ஸ்ரீமந் நாராயணன் அல்லவா! அப்பரமனைக் கண்டதும் அவனுடன் இலயித்து ஒன்றுபட்டு மகிழும் வரை நீங்காது பற்றுக.

ஆழிப்பிறப்பு – பிறவியாகிய கடல், கடலாழி நீர் - பாற்கடல், ஆழி அம்மான் - சக்கராயுதத்தையுடைய பெருமான், ஸ்ரீமந் நாராயணன், ஆழிமட நெஞ்சே – மடமையுள் ஆழ்ந்த நெஞ்சமே. ஆழி என்னுஞ்சொல் பயன்படுத்தப்படும் அழகு போற்றற்குரியது.

**11. அளவியன்ற ஏழுலகத் தவர் பெருமான் கண்ணனை**
**வளவயல் சூழ் வன்குரு கூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த**
**அளவியன்ற அந்தாதி ஆயிரத்துள் இப்பத்தின்**
**வளவுரையால் பெறலாகும் வானோங்கு பெருவளமே.**

**தெளிவுரை:**

அளவிடற்கு அரியவரும் ஏழுலகங்களுக்கும் தலைவராகியவருமான எம்பெருமானைக் குறித்துக் குருகூர்ச் சடகோபன் அருளிச்செய்த, திருவாய் மொழியாகிய அந்தாதி ஆயிரத்துள் மேலும் இப்பத்துப் பாசுரங்களையும் வளமாக உரைப்பவர்கள். பரமபதத்தில் மேலும் பெருவளத்தைப் பெறுவார்கள்.

**அஞ்சிறையபுட்கள்தமை யாழியானுக்கு நீர்**
**என்செயலைச் சொல்லுமெனவிரந்து விஞ்ச**
**நலங்கிய தும்மாறனிங்கே நாயகனைத் தேடி**
**மலங்கியதும் பத்திவளம்.**

**5-ஆம் திருவாய்மொழி – வளவேழ் உலகு**
**மாறனை மால் சீல குணத்தால் சேர்த்தல்**

**பண்: செருந்தி**
**தாளம்: ஏழொத்து**

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**
**(கல்யாணி ராகம் - ஆதி தாளம்)**

1. **வளவே முலகின் முதலாய வானோர் இறையை அருவினையேன்**
   **களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா! என்பன பின்னையும்**
   **தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லான் ஆயர் தலைவனாய்**
   **இளவே றேழும் தழுவிய எந்தாய்! என்பன் நினைந்து நைந்தே.**

**தெளிவுரை:**

வளமை திகழும் ஏழு உலகங்களுக்கும் முதற்பொருளாக விளங்குபவரும், நித்திய சூரியர்களாகிய வானவர்களின் தலைவரும் ஆகிய எம்பெருமானை, வினையுடைவனாகிய அடியேன், கண்ணபிரானாகத் திருஅவதாரம் செய்து வெண்ணெய் யுண்ட கள்கனே எனவும், முல்லையரும்பு போன்ற புன்னகை புரியும் நடப்பின்னைப் பிராட்டிக்காகச் சிறந்த ஆன்ஆயர் தலைவனாகி ஏழு எழுதுகளைத் தழுவி அடக்கிய எந்தையே எனவும் மனங்கசிந்து உருகி ஏத்துவேன்.

2. **நினைந்து நைந்துள் கரைந்துருகி இமையோர் பருவம் முனிவரும்**
   **புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால்**
   **நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே**
   **மனஞ்செய ஞானத் துன்பெருமை மாசூ ணாதோ? மாயோனே!**

**தெளிவுரை:**

மாயொனாகத் திகழும் எம்பெருமானே! பிரமன் முதலான தேவர்களும், முனிவர்களும் தேவரீரை நினைந்து மனங்கசிந்து உருகி மாலைகள், திருமஞ்சன நீர், சந்தன மணம் கமழும் அலங்காரங்கள், தூபம் எனக் கொண்டு ஏத்தி வணங்கினால் சகல ஜீவன்களுக்கும் நற்கதி யுண்டரிக, மல உபாதைகளும் பிறவிகளும் சிதைந்துவிடும் அல்லவா! அவ்வாறு ஆகிய அனைத்தும் ஞானம் பெற்றுத் திகழத் தேவரீருடைய பெருமையானது மாசு பெறாதோ?

இத்திருப்பாசுரமானது பரமாத்வரின் கருணையை வியந்து போற்றுதலாயிற்று.

**3. மாயோ னிகளாய் நடைகற்ற வானோர் பலரும் முனிவரும்**
**நீயோ னிகளைப் படையென்று நிறைநான் முகனைப் படைத்தவன்**
**சேயோன் எல்லா அறிவுக்கும் திசைகள் எல்லாம் திருவடிகளால்**
**தாயோன் எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன் தானோர் உருவனே.**

**தெளிவுரை:**

பெருமை விளங்குகின்ற வானவர்கள், முனிவர்கள் முதலான யாவரையும் மற்றும் உள்ள பொருள்களையும் படைப்பதற்காக, நான்முகனைப் படைததவர். அவர், பெருமையடைவரும், அறிவுக்கு எட்டாதவரும், எல்லா உலகங்களையும் திருவடிகளால் அளந்தவரும், யாவற்றுக்கும் தாயாகுபவருமான ஸ்ரீமந்நாராயணன் ஆவார். இத்தகைய பரிபூரணராகிய இறைவன் ஓர் உருவத்தில் விளங்குபவராகவும் உள்ளவர்.

**4. தானோர் உருவே தனிவித்தாய்த் தன்னில் மூவர் முதலாய**
**வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்**
**தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண் வளரும்**
**வானோர் பெருமான் மாமாயன் வைகுந் தன்எம் பெருமானே.**

**தெளிவுரை:**

தான் ஒருவனேயாகி, ஏக ரூபம் கொண்டவராகித் தமது சங்கல்பத்தால் பிரமன், உருத்திரன், இந்திரன் முதலான தேவர்களையும், முனிவர்களையும் மற்றும் உள்ள அனைத்தையும் தோன்றுமாறு செய்தும், தமக்குள்ளே ஒப்பற்றதாகிய பாற்கடலைத் தோற்றுவித்தும், அதிலே யோக நித்திரைக் கோலத்தில் கண் வளரும் ஸ்ரீமந்நாராயணனே எனக்குப் பெருமான் ஆவார். அவரே வைகுந்தன் எனவும், மாமாயன் எனவும் திகழ்பவர்.

**5. மானேய் நோக்கி மடவாளை மார்வில் கொண்டாய்! மாதவா!**
**கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்! கோவிந்தா!**
**வானார் சோதி மணி வண்ணா! மதுசூதா! நீ யருளாய் உன்**
**தேனே மலரும் திருப்பாதம் சேரு மாறு வினையேனே.**

**தெளிவுரை:**

மானைப் போன்ற விழியின் சிறப்புடைய திருமகளைத் திருமார்பில் கொண்டு விளங்கும் மாதவா! கூனியொருத்தியின் கூன் நிமிரும்படி செய்த அருளாளரே! கோவிந்தா! சோதி வடிவமான மணிவண்ணா! மதுசூதனா! தேவரீருடைய திருப்பாத மலரில் இவ்வினையேன் சேர்ந்து மகிழுமாறு கருணை புரிக!

**6. வினையேன் வினைதீர் மருந்தானாய்! விண்ணோர் தலைவா! கேசவா!**
**மனைசேர் ஆயர் குலமுதலே மாமாயனே! மாதவா!**
**சினையேய் தழைய மராமரங்கள் ஏழும் எய்தாய்! சிரீதரா!**
**இணையாய் இணைய பெயரினாய்! என்று நைவன் அடியேனே.**

**தெளிவுரை:**

பாவத்தைச் செய்த அடியேனின் தீவினைகளைத் தீர்த்தருளும் அருமருந்தாக விளங்கும் எம்பெருமானே! தேவர்களின் தலைவனே! கேசவா! ஆயர்குலத்தில் உதித்து முதற்பொருளாய் விளங்கும் பெருமையுடைய மாயவனே! மாதவா! வலிமையான ஏழு மாமரங்களை ஒரே அம்பால் வீழ்த்திய ஶ்ரீதரனே! இத்தகைய அருட்செயல்களைப் புரிந்து பெருமை விளங்கும் திரு நாமங்களையுடைய கருணாலயனே! என்று பலவாறாக அடியேன் மனம் உருகி ஏத்துகின்றேன். கருணை புரிக.

**7. அடியேன் சிறிய ஞானத்தன் அறித வார்க்கும் அரியானை**
**கடிசேர் தண்ணந் துழாய்க் கண்ணி புனைந்தான் றன்னைக் கண்ணனை**
**செடியார் ஆக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை**
**அடியேன் காண்பான் அலற்றுவன் இதனில் மிக்கோர் அயர்வுண்டே?**

**தெளிவுரை:**

எத்தகைய பேரறிவிற்கும் அப்பாற்பட்டு அறிதற்கு அரியவராக விளங்குபவரும், நறுமணம் திகழும் துளப மாலை அணிந்துள்ளவரும், கண்ணபெருமானாக மேவுபவரும், தேச சம்பந்தம் கொண்டு மலத்துள் சேரும் பிறவிப் பிணியைத் தீர்ப்பரும், திருமகளைத் திருமார்பில் கொண்டு விளங்குபவருமான ஶ்ரீமந்நாராணனை, ஆற்ப அறிவுடையவனாகிய அடியேன் தரிசிக்க வேண்டும் என்று அரற்றுகின்றேன். இதனினும் மேலான மடமை வேறு உண்டோ?

இப்பாசுரமானது, ஶ்ரீமந்நாராயணனின் பேராற்றலையும் உயிர்களின் சிறுமையையும் புலப்படுத்திற்று.

**8. உண்டாய் உலகேழ் முன்னமே உமிழ்ந்து மாயை யால்புக்கு**
**உண்டாய் வெண்ணெய் சிறுமணிசர் உவைல யாக்கை நிலையெய்தி**
**மண்தான் சோர்ந்த துண்டேலும் மனிசர்க் காகும் பீர சிறிதும்**
**அண்டா வண்ணம் மண் கரைய நெய்யூண் மருந்தோ? மாயோனே!**

**தெளிவுரை:**

மாயவனே! ஏழுலகங்களையும் உண்டு வயிற்றில் அடக்கிப் பாதுகாத்துப் பின்னர் உமிழ்ந்து வெளிப்படுத்திய பரம்பொருளே! தேவரீர், சிறுமையுடைய மானிட சரீரத்தைக் கொண்டு கண்ணபிரானைத் திருஅவதாரம செய்து வெண்ணெய் உண்டீர்! மண்ணையும் உண்டீர்! மனித தேகத்தில் மண்கட்டியானது சேர்தலால் உண்டாகும் நோயைத் தீர்க்க நெய்யானது மருந்தாகுமோ?

இவண், பரமாத்வாவின் எளி வந்த தன்மையானது விநயத்துடன் சேவிக்கப்பெற்றது.

**9. மாயோம் தீய அலவலைப் பெருமா லஞ்சப் பேய்விய**
**தூய குழவி யாய்விடப்பாடல் அமுதா அமுது செய்திட்ட**
**மாயன் வானோர் தனித்தலைவன் மலரான் மைந்தன் எவ்வுயிர்க்கும்**
**தாயோன் தம்மான் என்னம்மான் அம்மா மூர்த்தியைச் சார்ந்தே.**

**தெளிவுரை:**

தீய செயலைப் புரிவதைத் தொழிலாக உடையவளும், வஞ்சனை கொண்டவளுமான பூதனை என்பவளைக் குழந்தை வடிவில் மேவி நச்சுப்பாலை அமுதமாகுமாறு அருந்தி அவ்வரக்கியை மாய்த்த மாயோனே! தேவர்களின் தலைவனே! திருமகளின் நாயகனே! எல்லா உயிர்களுக்கும் தாயாய் விளங்கியும், தானே யாவற்றுக்கும் நாயகமாக மேவியும், எனக்குத் தனி நாயகனாகவும் சார்ந்து விளங்கும் இவ்வடியோம் மாயமாட்டோம்.

இத்திருப் பாசுரமானது, பரமாத்மாவின் பெருமையையும் அடியவர்களுக்குக் கருணையுடன் அருளும் பாங்கினையும் நன்கு உரைப்பதாயிற்று.

**10. சார்ந்த இருவல் வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து**
**தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்**
**ஆர்ந்த ஞானச் சுடராகி அகலம் கீழ்மேல் அளவிறந்து**
**நேர்ந்த வுருவாய் அருவாகும் இவற்றின் உயிராம் நெடுமாலே!**

**தெளிவுரை:**

நன்கு திகழும் ஞான ஒளியாகி அளவுக்கடங்காத நிலையில் விரிந்தும், ஆழ்ந்தும், மேலோங்கியும் பரந்தும், உருவப்பொருளாய் விளங்கியும், உருவமற்ற அருவமாகத் திகழ்ந்தும் இவற்றிற்கெல்லாம் உயிர்ப்பொருளாகவும் விளங்குபவர் நெடுமாலான ஸ்ரீமந்நாராயணன் ஆவார். என்னைச் சார்ந்த நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் அழித்தும் மாயவலைப்படும் உலக பந்தமாகிய பற்றினை

அறுத்தும்,தன்பால் என் மனத்தைப் பதியுமாறு செய்வித்தவர் அப்பரமன் அவரே. அவரே வீட்டின்பத்தை அருளிச் செய்பவருமாவார்.

11. **மாலே மாயப் பெருமானே மா மாயவனே என்றென்று**
**மாலே யேறி மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்**
**பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்**
**பாலே பட்ட இவை பத்தும் வல்லார்க்கில்லை பரிவதே**

**தெளிவுரை:**

திருமாலே! மாயவனே! எம்பெருமானே! எனப் பரமாத்வாவின்பால் பேரன்பு கொண்டு போற்றும் குருகூர்ச் சடகோபனின் ஓராயிரம் பாசுரங்களுள் இப்பத்தையும் பக்தியுடன் இசைத்துப் பாடுபவர்களுக்கு எத்தகைய துன்பமும் இல்லை.

**வளம்மிக்கமால் பெருமை மன்னுயிரின்தன்மை**
**உளமுற்றங்கூடுருவஓழ்ந்து தளர்வுற்று**
**நீங்கநினைமாறனைமால் நீடிலகுசீலத்தால்**
**பாங்குடனே சேர்த்தான் பரிந்து.**

**6-ஆம் திருவாய்மொழி – பரிவதில் ஈசனை**

**ஆராதனைக் கெளியவன்**

**பண்: முதிர்ந்த குறிஞ்சி**

**தாளம்: ஏழொத்து**

**வஞ்சி விருத்தம்**

**(நாத நாமக் கிரியை ராகம் - அட தாளம்)**

1. **பரிவதில் ஈசனைப் பாடி**
   **விரிவது மேவல் உறுவீர்**
   **பிரிவகை யின்றி நன் னீர்தூய்**
   **புரிவதுவும்புகை பூவே.**

**தெளிவுரை:**

பக்தி சிரத்தையுடன், சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமந்நாராயணனைப் பாடிப் போற்றும் பக்தர்களே! மனத்தில் அப்பெருமானைப் பிரிவின்றி இலயிக்கச் செய்தும், திருமஞ்சன நீர் ஆட்டியும், மலர் தூவி ஏத்தியும், நறுமணப் புகையை இட்டும் ஆராதனை செய்க.

2. **மதுவார் தண்ணத் துழாயான்**
   **முதுவேத முதல்வனுக்கு**
   **எதுவேதுஎன்பணி! என்னாது**
   **அதுவே ஆட்செய்யும் ஈடே.**

**தெளிவுரை:**

தேன் ஒழுகும் திருத்துழாய் மாலையணிந்தவரும், வேத முதல்வருமான ஸ்ரீமந் நாராணனுக்குத் தாம் செய்யக்கூடிய பணி யாது எனக் சிந்திக்காமல் அடியவர்கள் அப்பரமனுக்குச் சரணாகதியாய் இருத்தலே அடிமை பூண்டு ஒழுககின்ற பேறுடையதாகும்.

3. **ஈடும் எடுப்புமில் ஈசன்**
   **மாடு விடாதென் மனனே**
   **பாடுமென் நாஅவன் பாடல்**
   **ஆடுமென் அங்கம் அணங்கே.**

**தெளிவுரை:**

ஈடு இணையற்று விளங்கும் சர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி நின்று, எனது மனமானது மகிழும் நாவானது அப்பரமனின் புகழைப்பாடும், என் தேகமானது தெய்வத்தன்மை சார்ந்ததனால் தன்னை மறந்து ஆடும். (எடுப்பு- பலபொருள்களிலிருந்து சிறந்த ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்தல், இத்தகைய தன்மையுறாத பரம்பொருளின் சிறப்பானது இச்சொல்லால் சேவிக்கப்பெற்றது.)

(சேவித்தல் - உரைத்தல், அணங்கு – தெய்வம்)

**4. அணங்கென ஆடும் என்அங்கம்**
**வணங்கி வழிபடும் ஈசன்**
**பிணங்கி அமரர் பிதற்றும்**
**குணங்கெழு கொள்கையினானே.**

**தெளிவுரை:**

தெய்வ ஆசேவம் கொண்டு என் தேகமானது ஆட, நான் வழிபடும் சர்வேஸ்வரனானவர், தேவர்களால் பாராட்டவும், வாசகங்களால் போற்றவும் விளங்கும் உன்னத குணச்சிறப்புகளை உயைவர் ஆவார்.

**5. கொள்கை கொளாமை யிலாதான்**
**எள்கல் இராகம் இலாதான்**
**விள்கை விள்ளாமை விரும்பி**
**உள்கலந் தார்க்கோர் அமுதே.**

**தெளிவுரை:**

அரிய குணங்களைப் பார்த்து ஏற்றுக்கொள்வதும்,அவ்வரிய குணங்கள் இன்மை கண்டு ஒதுக்குதலும், என்கிப் பழித்தலும் ஆகிய நெகிழ்ச்சியின் வயப்படாத பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணன், ஆதாயத்தினை நாடிப் போற்றுவதும், அவ்வாறு ஆதாயம் இல்லாத தன்மையில் விலக்குவதும் ஆகிய குணபேதமற்ற அடியவர்களின் உள்ளத்தில், அப்பரமன் அமுதமென விளங்கி மகிழ்விப்பவராவார்.

(எள்கல் - பழித்தல்)

**6. அமுதம் அமரர்கட்கு ஈந்த**
**நிமிர்சுட ராழி நெடுமால்**
**அமுதிலும் ஆற்ற இனியன்**
**நிமிர்திரை நீள்கடலானே.**

**தெளிவுரை:**

தேவா்களுக்கு அமுதத்தைக் கொடுத்தவரும், ஒளி மிகும் சக்கராயுதத்தையுடைவருமான நெடிய திருமால், பாற்கடலில் பள்ளிகொண்டு விளங்குபவா். அவா், தமது அடியவா்களுக்கு அமுதத்தினும் இனிமை யானவராக விளங்குபவா் ஆவாா்.

**7. நீள்கடல் சூழ் இலங்கைக்கோன்**
**தோள்கள் தலை துணி செய்தான்**
**தாள்கள் தலையில் வணங்கி**
**நாள் கடலைக் கழிமினே.**

**தெளிவுரை:**

கடல் சூழ்ந்த இலங்கையின் அதிபதியாகிய இராவணின் தோள்களையும் தலைகளையும் துணித்த ஸ்ரீராமபிரானுடைய திருப்பாதங்களைத் தலையால் ஏத்தி வணங்கிப் பிறவிக் கடலைக் கடந்து வீட்டின்பத்தை அடைக.

(நாள் கடல் - பிறவிக்கடல்)

**8. கழிமின் தொண்டீர்கள்! கழித்துத்**
**தொழுமான் அவனைத் தொழுதால்**
**வழி நின்ற வல்வினை மாள்வித்து**
**அழிவின்றி ஆக்கம் தருமே.**

**தெளிவுரை:**

திருத்தொண்டா்களே! உலகத்தில் மேவும் பாசத்தைக் கைவிடுக. ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது ஏத்துக. அப்பரமனைத் தொழுது போற்றுவதால் வழிவழியாக நேர்ந்த பிறவிகளின் வாயிலாகத் தொடா்ந்து பற்றியுள்ள கொடிய வினைகள் யாவும் அழியும். நீங்கள் அழிவற்றதாகிய முத்தி உலகத்தை அடையுமாறு அப்பரமன் அருள்புரிவாா்.

**9. தரும அரும்பல னாய**
**திருமக னார்தணிக் கேள்வன்**
**பெருமை யுடைய பிரானாா்**
**இருமை வினை கடி வாரே.**

**தெளிவுரை:**

திருமகளின் நாயகரான ஸ்ரீமந் நாராயணன் மிகவும் பெருமையுடையவர். அவர் அடியவர்கள் வணங்குவதை ஏற்று இருவகையான வினைகளையும் அறுத்து அரிய பயனாய் விளங்குகின்ற முத்தி இன்பத்தைத் தந்தருள்பவர்.

அடியவர்களுக்கு அருளும் பரமாத்மாவின் கருணையானது இவண் சுட்டப்பெற்றது.

**10. கடிவார் தீய வினைகள்**
**நொடியாரும் அளவைக் கண்**
**கொடியாஅடு புள்உயர்த்த**
**வடிவார் மாதவனாரே.**

**தெளிவுரை:**

கருடாழ்வாரைக் கொடியாகக் கொண்டு விளங்கும் மாதவனாகிய ஸ்ரீமந்நாராயணன், அடியவர்களுடைய தீய வினைகளை ஒரு நொடிக்குள் அகற்றி அருள்புரிபவர்.

**11. மாதவன் பால் சடகோபன்**
**தீதவமின்றி உரைத்த**
**ஏதமில் ஆயிரத்திப் பத்து**
**ஓத வல்லார் பிறவாரே.**

**தெளிவுரை:**

ஸ்ரீமந்நாராயணனின் திவ்விய கல்யாண குணங்களைக் குற்றமின்றியும், குறைவின்றியும் போற்றி உரைத்த நம்மாழ்வாரின் திருவாய்மொழியான ஓராயிரத்துள் மேவும் இப்பத்துப் பாசுரங்களையும் ஓத வல்லவர்கள், மீண்டும் பிறவியாகிய துன்பத்தை அடையமாட்டார்கள்.

இது, முத்தி நலனையடைந்து மகிழ்ந்து விளங்குவார்கள் என உணர்த்துதலாயிற்று.

ஏதுமில் ஆயிரம் - மன்னுயிர்களின் குற்றங்களை இல்லாமையாக்கும் திருவாய்மொழி.

**பரிவதிலீசன்படியைப் பண்புடைனே பேசி**
**அரியனலனாராதனைக்கென்று உரிமையுடன்**
**ஓதியருள்மாற னொழிவித்தா னிவ்வுலகில்**
**பேதையர்கள் தங்கள் பிறப்பு.**

## 7-ஆம் திருவாய்மொழி – பிறவித் துயர் அற
## ஆராதிப்பவர்க்கு மிக இனியன்

**பண்: வியந்தம்**

**தாளம்: ஏழொத்து**

**கலிவிருத்தம்**

**(மத்தியமாவதி ராகம் - அட தாளம்)**

1. **பிறவித் துயரற ஞானத்துள் நின்று**
   **துறவிச் சுடர்விளக் கம்தலைப் பெய்வார்**
   **அறவனை யாழிப் படையந் தணனை**
   **மறவியை யின்றி மனத்துவைப் பாரே.**

**தெளிவுரை:**

பிறப்பு இறப்பு ஆகிய துயரத்திலிருந்து விடுபட்டு விளங்க வேண்டும் என்னும் ஞானத்தை உடையவர்கள், உலகப் பொருள்களின்மீது பற்றின்றி எல்லாப் பணிகளையும் ஆற்றுவார்கள். மேலும் அறத்தின் வடிவாகியவரும், சக்கராயுதத்தை ஏந்தியவரும், தூயவரும் ஆகிய ஸ்ரீமந் நாராயணனை மறவாது சிந்தித்து மகிழ்ந்திருப்பார்கள்.

2. **வைப்பாம் மருந்தாம் அடியரை வல்வினைத்**
   **துப்பரம் புலனைந்தும் துஞ்சக் கொடானவன்**
   **எப்பால் யவர்க்கும் நலத்தால் உயர்ந்துயர்ந்து**
   **அப்பாலவன் எங்களாயர் கொழுந்தே.**

**தெளிவுரை:**

ஸ்ரீமந்நாராயணன், தமது அடியவர்கள் கொடிய வினைகளாலும், ஐம்புலன்களின் சேட்டைகளாலும் துன்பம் கொள்ளாதவாறு பெருஞ்செல்வமாக விளங்கிக் காப்பவர். அவர், எல்லோருக்கும் குணநலத்தால் உயர்ந்தவராகயி விளங்குபவரும் ஆயர்குலக் கொழுந்தாகவும், மேவும் எங்கள் கண்ணபிரானேயாவார்.

3. **ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்**
   **மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியை**
   **தூய அமுதைப் பருகிப் பருகி என்**
   **மாயப் பிறவி மயர்வறுப் தேனே.**

**தெளிவுரை:**

ஆயர் பாடியில் தோன்றிய குழந்தையாக வளர்ந்து, அவ்வாயர்களால், வெண்ணெய் திருடினான் என்னும் நிலையில் அடியுண்ணும் மாயவனாகிய கண்ணபிரான், என் உள்ளத்தில் மேவும் சோதியானவர். அப்பெருமானின் கருணை மேவும் திருவிளையாடல்களை நினைந்து மகிழ்ந்து பேரானந்தம் கொண்டேன். அதனால் இந்த மாயையாகிய பிறவியின் துயரை அறுத்து நலம் பெற்றேன்.

4. **மயற்வற என்மனத்தே மன்னினான் தன்னை**
   **உயர்வினை யேதரும் ஒண்சுடர்க் கற்றையை**
   **அயர்வில் அமரர்கள் ஆதிக் கொழுந்தை என்**
   **இசைவினை என்சொல்லி யான் விடுவேனோ?**

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணன்,என் மனத்தில் மேவும் அஞ்ஞானத்தை அழித்துப் பேரொளியுடன் திகழ்பவர். எனக்கு உயர்ந்ததாகயி முத்தியின்பத்தைத் தருகின்ற பேரொளியாக விளங்குபவர். மயக்கத்திலிருந்து நீங்கிய நித்திய சூரியர்களான தேவர்களாய் தொழப்படும் தலைவர். அப்பெருமான் எனக்கு இசையுமாறு நவின்ற பெருங்கருணையை என்சொல்லி விட்டு நீங்குவேனோ?

5. **விடவேனோ என் விளக்கைஎன் னாவியை**
   **நடுவே வந்து உய்யக் கொள்கின்ற நாதனை**
   **தொடுவே செய்து இனவாய்ச் சியர் கண்ணினுள்**
   **விடவே செய்து விழிக்கும் பிரானையே.**

**தெளிவுரை:**

என்னுடைய உயிர்போன்றவரும், வாழ்வின் ஒளியாக மேவுபவரும், நடுநாயகனாக விளங்கி என்னுள் மேவி உய்யுமாறு புரியும் தலைவரும், ஆய்ச்சியர்கள் தமது கண்களால் மகிழ்ந்து பருகியும் கைகளால் தொட்டுப் பேரானந்தம் கொண்டும் விளங்க அருள் செய்தவருமான கண்ணபிரானை, அடியேன் விட்டு நீங்கி இருப்பனோ?

6. **பிராஅன் பெரு நிலங் கீண்டவன் பின்னும்**
   **விராஅய் மலர்த் துழாய் வேய்ந்த முடியன்**
   **மராமரம் எய்த மாயவன் என்னுள்**
   **இரானெனில் பின்னையான் ஒட்டுவேனோ?**

**தெளிவுரை:**

என்னுடைய தலைவனும், வராக அவதாரம் கொண்டு பூமியைக் குடைந்த பெருமை உடையவனும், நறுமணம் கமழும் துளப மாலை அணிந்தவனும், மலர் சூடிய திருமுடியுடைய பெருமானும், ஏழு மராமரங்களைத் தொளைத்த ஸ்ரீராம பிரானும் ஆகிய ஸ்ரீமந் நாராயணன், என்னுள் மேவி நிலைத்தவராகி இல்லையெனில், யான் தரித்திருக்கும் பேறுதான் வாய்க்குமோ?

பரமாத்மாவானவர் உள்ளத்தின் கண் மேவி விளங்கும் சிறப்பானது இவண் நன்கு உரைக்கப்பெற்றது.

**7. யானொட்டி யென்னுள் இருத்துவம் என்றிலன்
தானொட்டி வந்து என் தனி நெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்று என்னுயிரில் கலந்து இயல்
வானொட்டு மோ? இனியென்னை நெகிழ்க்கவே.**

**தெளிவுரை:**

நானே விழைந்து என் இச்சையால் பரமாத்மாவை என்னுள்ளே இருத்தி வைத்துள்ளேன் என்பது இல்லை. அப்பெருமான், தானாக வந்து என் நெஞ்சினுள் தன்னுடைய உரிமையால் புகுந்து நின்றும், என்னுடைய உயிரில் கலந்தும், தேகமெல்லாம் வியாபித்தும் என்னை இயக்கும் பேரருளாளன் ஆயினான். அப்பெருமான், இனி என்னிலிருந்து பிரிவதற்கு ஒல்லுமோ?

**8. என்னை நெகிழ்க்கிலும் என்னுடைய நன்னெஞ்சந்
தன்னை அகல்விக்கத் தானும் கில்லானினி
பின்னை நெடும்பணைத் தோள் மகிழ் பீடுடை
முன்னை அமரர் முழுமுத லானே.**

**தெளிவுரை:**

நப்பின்னைப் பிராட்டியாரின் நெடிய தோள்களைத் தழுவும் ஆற்றல் மிக்க கண்ணபெருமானும், தேவர்களுக்கெல்லாம் முழுமுதலாய் விளங்குபவருமான ஸ்ரீமந் நாராயணன், என்னை விட்டு அகல்வதற்குக் கூடுமாயினும், என்னுடைய உயிரிலிருந்து விடுபட்டுச் செல்கின்ற தன்மையுடையவன் அல்லன்.

தேக சௌந்தரியம் அழிந்து கெடும் தன்மையும், சீவனான உயிர் அழியாது நிற்றலையும் இவண் குறிப்பால் சுட்டப்பெறுதலாம்.

**9. அமரா் முழு முதல் ஆகிய ஆதியை**
**அமரா்க் கமுநீந்த ஆயா்கொழுந்தை**
**அமர அழும்பத் துழாவிஎன் னாவி**
**அமரத் தழுவிற்று இனி யகலுமே!**

**தெளிவுரை:**

பிரமன் முதலான தேவா்களுக்கு முழுமுதற்பொருளாகவும், தேவா்களுக்கு அமுதத்தை அளித்த நாதராகவும் மேவும் ஸ்ரீமந் நாராயணனை, என்னுடைய ஆன்மாவானது நன்கு கலந்த, பிரிக்க முடியாதபடி விளங்குவதாயிற்று. இனி தனித்துப் பிரிவதற்கு வழியேதும் இல்லை.

**10. அகலில் அகலும் அணுகில் அணுகும்**
**புகலும் அரியன் பொருவல்லன் எம்மான்**
**நிகரில் அவன்புகழ் பாடி இளைப்பிலம்**
**பகலும் இரவும் படிந்து குடைந்தே.**

**தெளிவுரை:**

தன்னை நெஞ்சினுள் இருக்காதவா்களிடம் அகன்றும், சாா்ந்தும் பற்றியும் ஏத்தும் அன்பா்களிடத்தில் அணுகிக் கலந்தும், ஓதுவதற்கு அரியனாகவும் நட்பு கொண்டு எல்லா நன்மைகளும் புரிபவனும், என் தலைவனும் ஆகிய நிகரில்லாத எம்பெருமானைப் பகலும் இரவும் பாடியும் உள்ளத்தில் பதித்துத் தியானித்தும் மேவித் துன்பத்திலிருந்து நீங்கினம்.

**11. குடைந்து வண்டுண்ணும் துழாய் முடியானை**
**அடைந்த தென்குரு கூா்ச் சடகோபன்**
**மிடைந்த சொல்தொடை ஆயிரத்திப்பத்து**
**உடைந்து நோய்களை ஓடுவிக்குமே.**

**தெளிவுரை:**

துளப மாலை யணிந்து விளங்கும் ஸ்ரீமந் நாராயணனை அடைந்த குருகூா்ச் சடகோபன் அருளிச் செய்த திருவாய் மொழியாகிய ஓராயிரத்துள், இப்பத்துப் பாசுரங்களும் இப்பிறவியில் தோன்றும் பிணிகளை ஒடுவி செய்யும். ஆகவே, ஓதுக என்பது குறிப்பு.

இது, எல்லாப் பிணிகளையும் விலக்கி நல்வாழ்வைத் தரும் என்பதாம்.

பிறவியற்று நீள்விசும்பிய பேரின்பமுய்க்கும்
திறமளிக்கும் சீலத்திருமால் அறவினியன்
பற்றுமவர்க்கென்று பகர்மாறன்பாதமே
உற்றதுணையென்றுள்ளமே! ஒடு.

**8-ஆம் திருவாய்மொழி – ஓடும் புள்ளேறி**

**ஈஸ்வரன் ஆர்ஜவ குணமுடையவன்**

**(ஆர்ஜவ குணம் - மனம் மொழி மெய் ஆகிய யாவும் பேதமின்றி யாவரிடமும் ஒருப்படும் குணம்)**

**பண்: இந்தளம்**

**தாளம்: ஏழொத்து**

**வஞ்சித்துறை**

**(தேசிய ராகம் - ஆதி தாளம்)**

1. **ஓடும் புள்ளேறி**
   **சூடும் தண்டுழாய்**
   **நீடு நின்றவை**
   **ஆடும் அம்மானே.**

**தெளிவுரை:**

எம்பெருமான், கருடாழ்வாரை வாகனமாகக் கொண்டு, துளப மாலையைத் தரித்து, நித்திய சூரியர்கள் முதலான தேவர்கள் சூழ விளங்கித் திருவிடையாடலால் உலகைக் காத்தருள்பவர்.

2. **அம்மானாய்ப் பின்னும்**
   **எம்மாண்பு மானான்**
   **வெம்மாவாய் நீண்ட**
   **செம்மா கண்ணனே.**

**தெளிவுரை:**

அன்புக்குகந்த தலைவனாகியும், கொடிய குதிரை வடிவத்தில் வந்த கேசி என்னும் அசுரனின் வாயைக் கிழித்தவனமான செந்தாமரைக் கண்ணன், எல்லாச் சிறப்புகளையும் உடைய பெருமான் ஆவார்.

(மா-குதிரை வடிவம் கொண்ட கேசி என்னும் அசுரன்)

3. **கண்ணா வானென்றும்**
   **மண்ணோர் விண்ணோர்க்கு**
   **தண்ணார் வேங்கட**
   **விண்ணோர் வெற்பனே.**

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணன், மண்ணுலகத்தவர்களுக்கும் விண்ணுலகத்தவர்களுக்கும் கண்போன்று மேவிப் பரிபாலிப்பவர். அவர் குளிர்ச்சி மிக்க திருவேங்கடம் என்னும் திருமலைக்கு உரியவர்.

4. **வெற்பை யொன்றெடுத்து**
   **ஒற்க மின்றியே**
   **நிற்குமம்மான் சீர்**
   **கற்பன் வைகலே.**

**தெளிவுரை:**

கோவர்த்தனம் என்கிற மலையைப் பெயர்த்து எத்தகைய தளர்வும் இன்றி உயிர்களைக் காத்தருளிய ஸ்ரீ கண்ணபிரானின் பெருமைகளை, யான் நாள்தோறும் ஏத்திப்போற்றுவன்.

5. **வைகலும் வெண்ணெய்**
   **கைகலந்துண்டான்**
   **பொய்கலவாது**
   **என் மெய் கலந்தானே.**

**தெளிவுரை:**

நாள்தோறும் கையால் வெண்ணெயை அள்ளி உண்டு மகிழ்ந்த கண்ணபிரான், பொய்மையின்றியும் மெய்ம்மை விளங்குமாறும் என் மேனியில் கலந்து, மகிழ்ச்சியை அளித்தனன்.

மனம் முதலான அந்தக்கரணங்களின் வழியாக எம்பெருமான் ஒருவனுட் கலந்து, ஐம்புலன்பாலும் விளங்கி, இப்பிறப்பின் வழித் தோன்றும் தேகத்தைப் புளகாங்கிதம் அடையச் செய்யும் ஸ்ரீமந் நாராயணனின் அருட்பேறானது, இவண் கூட்டப்பெற்றது.

6. **கலந்தென னாவி**
   **நலங்கொள் நாதன்**
   **புலன் கொள் மாணாய்**
   **நிலங்கொண்டானே.**

**தெளிவுரை:**

என்னுடைய உயிரிற் கலந்து, என்னை அடிமை கொண்டு பேரின்பத்தை வழங்கும் நாதனாகிய எம்பெருமான், பிரமசாரியாகி மனித வடிவம் தாங்கியும், வாமன

அவதாரத்தில் விளங்கி மூன்று அடி மண்ணை யாசித்தும் உலகம் யாவையும் தமதாக்கிக் கொண்டவர்.

நலங்கொள் நாதன் - உயிரை கொண்டு தனதாக்கித் தனது சொரூபமான பேரானந்தத்தை அளித்தருளும் பெற்றியை உணர்த்துதலாம். இது இறைவனின் கருணாமிர்தமாகும் - உலகோரிடம் கொண்ட வாத்சல்யம் ஆகும்.

**7. கொண்டானேழ்விடை**
**உண்டானேழவையம்**
**தண்டாமம் செய்து என்**
**எண்தனர் ஆனானே.**

**தெளிவுரை:**

ஏழு எருதுகளை அடக்கி நப்பின்னைப் பிராட்டியை மணங்கொண்ட வரும், ஏழு உலகங்களையும் உண்டு வயிற்றிடை வைத்துப் பாதுகாத்த வருமான எம்பெருமான், குளிர்ச்சி மிக்கவராகி என்னைத் தானாக பாவித்து எனது எண்ணத்தில் மருவி, யாவும் தனது என ஆயினான்.

**8. ஆனான் ஆனாயன்**
**மீனோடு ஏனமும்**
**தானானான் என்னில்**
**தானாய சங்கே.**

**தெளிவுரை:**

எம்பெருமான், பசுக்களை மேய்க்கும் ஆயனாக விளங்கியவர். மீன் அவதாரமும், வராக (பன்றி) அவதாரமும் கொண்டு அருள் புரிந்தவர் எனில், அவருடைய திருஅவதாரங்களின் சிறப்பானது எண்ணற்றவை எனலாகும்.

இத்திருப் பாசுரத்தில் ஸ்ரீகிருஷ்ணாவதாரம், மச்சாவதாரம், வராக அவதாரம் ஆகியவை சுட்டப்பெற்றன.

**தெளிவுரை:**

பஞ்சஜனன் எனும் அசுரனுடைய உடலில் - கர்ப்பத்தில் - வளர்ந்து கனித்த பாஞ்சஜன்யம் எனும் வலம்புரிச் சங்கை, இடபேதம் நோக்காமல் தானே அதைத் தனதாக்கிக் கொண்டு, வலக்கையில் ஏந்தி, அசுரர்களை அழிக்கும் பொருட்டுச் சங்கநாதம் செய்தருளும் கண்ணபிரான் என்று வியாக்யானம் கூறுவர் பெரியோர்.

(சங்கு – ஒரு பேரெண், அழகு எனவும் சுட்டும்)

**9. சங்கு சக்கரம்**
**அங்கையில் கொண்டான்**
**எங்கும் தானாய**
**நங்கள் நாதனே.**

**தெளிவுரை:**

எல்லா இடங்களிலும் தாமே வியாபித்துப் பரந்து மேவும் எங்கள் பெருமான், சங்கும், சக்கரப் படையும் அழகிய கையில் ஏந்தியுள்ளவர்.

**10. நாதன் ஞாலங்கொள்**
**பாதன் என்னம்மான்**
**ஓதம் பேல் கிளர்**
**வேத நீரனே.**

**தெளிவுரை:**

என் அன்புக்குரிய பெருமான், உலகத்தை அளந்த திருப்பாதங்களை உடையவர். கடலைப் போல் முழங்குகின்ற வேதங்களால் ஏத்தப்பெறும் சிறப்புடையவர். (ஓதம்-கடல்)

**11. நீர்புரை வண்ணன்**
**சீர் சடகோபன்**
**நேர்தல் ஆயிரத்து**
**ஓர்தல் இவையே.**

**தெளிவுரை:**

இனிமையுடைய எம்பெருமானை ஏந்திச் சீர்மிக்க சடகோபன் உரைசெய்த திருவாய்மொழி ஓராயிரத்துள், இப்பத்துப் பாசுரங்களும் மனத்தில் நன்கு பதித்துச் சேவித்தலுக்கு உரியவையாகும்.

**ஓடுமனம்செய்கை உரையொன்றின் இல்லா தாருடனே**
**கூடிநெடுமாலடிமைகொள்ளும் நிலை நாடறிய**
**ஓர்ந்தவன்தன்செம்மை உரைசெய்தமாறனென**
**ஏய்ந்துநிற்கும் வாழ்வாமிவை.**

## 9-ஆம் திருவாய்மொழி - இவையும் அவையும்
## ஆழ்வாரோடு எம்பெருமான் கலந்த வகை

**பண்: கொல்லி**

**தாளம்: ஏழொத்து**

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**
**(மோகன ராகம் - ஆதி தாளம்)**

1. **இவையும் அவையும் உவையும் இவரும்அவரும் உவரும்**
   **எவையும் எவரும்தன் னுள்ளே ஆகியும் ஆச்சியும் காக்கும்**
   **சுவையுள் தனிமுதல் எம்மான் கண்ண பிரான் என்னமுதம்**
   **சுவையன் திருவின் மணாளன் என்னுடைச் சூழலு னானே.**

**தெளிவுரை:**

அண்மையிலும், தொலைவிலும் முன்னிலையுள்ளும் உள்ள எல்லாப் பொருள்களும், உயிர்வகையும் என யாவையும் தன்னுள்ளே இருக்குமாறு புரிந்தும், காத்தும் அதனுள் மேவியும் விளங்கும் தனிமுதலாகிய எம்பெருமான் கண்ணபிரானைத் திருஅவதாரம் செய்தவர். திருமகளின் மணவாளர். என்னைச் சுற்றிலும் விளங்குபவராவார்.

2. **சூழல் பலபல வல்லான்தொல்லையங் காலந் துலகை**
   **கேழலொன் றாகி யிடந்த கேசவன் என்னுடை யம்மான்**
   **வேழ மருப்பை யொசித்தான் விண்ணவர்க் கெண்ண வரியான்**
   **ஆழ நெடுங்கடல் சேர்ந்தான் அவனென் னருகலிலானே.**

**தெளிவுரை:**

பலவகையான திரு அவதாரங்களை எடுக்க வல்லவராகிய எம்பெருமான், உலகத்தைக் காப்பதற்காக, வராக அவதாரம் புரிந்தவர், கேசவன் என்னும் திருநாமம் கொண்டவர். குவலயா பீடம் எனும் மதம் கொண்ட கொடிய யானையின் கொம்புகளை ஒடித்து, அவ்யானையை மாய்த்தவர், தேவர்களாலும் அறிதற்கு அரியவர். பாற்கடலுள் பள்ளி கொண்டுள்ளவர். அப்பரமன் எனக்கு எளிமையாகி உவந்து அருள்பவர்.

இரண்யகசிபுவின் சோதரனான இரண்யாட்சன் என்னும் அசுரன், உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கடலில் சென்றபோது, ஸ்ரீமந்நாராயணன், பன்றி அவதாரம் கொண்டு, அவ்வசுரனைக் கொன்று, உலகத்தைக் காத்தருளினார் என்பது புராண வரலாறு.

(கேழல் - பன்றி)

**3. அருகலியலாய பெருஞ்சீா் அமரா்கள் ஆதி முதல்வன்**
**கருகிய நீலநன் மேனி வண்ணன்செந் தாமரைக் கண்ணன்**
**பொருசிறைப் புள்ளுவந் தேறும் பூமகளாா் தனிக்கேள்வன்**
**ஒருகதி யின்சுவை தந்திட்டு ஒழிவிலன் என்னோடுடனே.**

**தெளிவுரை:**

குறைவற்ற நற்குணங்களையுடைய தேவா்களின் தலைவரும், கருநீல வண்ணத் திருமேனியுடையவரும், செந்தாமரைப் போன்ற கண்ணுடையவரும், வலிமையான சிறகுகளை உடைய கருடாழ்வாரை வாகனமாகக் கொண்டவரும், திருமகளின் மணவாளரும் ஆகிய ஸ்ரீமந்நாராயணன், என்னைத் தன்னுடைமையாக ஆக்கிக்கொண்டு, பேரின்பத்தை யருளி, நற்கதியின் பால் அமைத்தனா்.

**4. உடனமா் காதல் மகளிா் திருமகள் மண்மகளாயா்**
**மடமகள் என்றிவா் மூவா் ஆளும் உலகமும் மூன்றே**
**உடனவை யொக்க விழுங்கி ஆலிச் சோ்ந்தவன் எம்மான்**
**சுடல்மலி மாயப் பெருமான் கண்ணன் என்னொக் கலையானே.**

**தெளிவுரை:**

உடன் திகழும் அன்புடையவா்களாகிய திருமகள், மண்மகள் (பூமாதேவி), ஆயா் மகளாகிய நப்பின்னை, ஆகிய மூவரும் தேவியராக விளங்க, மூன்று உலகங்களையும் ஆளும் எம்பெருமான். அவ்வுலகங்களை உண்டு, வயிற்றின் பாதுகாத்துப் பாற்கடலில் ஆலிலையின்மீது பள்ளி கொள்பவராவாா். அத்தகைய மாயத்தைப் புரியும் பரமன், கண்ணன் என்னும் அவதார சீலத்தடுன் எனக்கு உறவாக மேவுபவா்.

**5. ஒக்கலை வைத்து முலைப்பால் உண்ணென்று தந்திட வாங்கி**
**செக்கஞ் செகவன் றவன்பால் உயிா்செக வுண்ட பெருமான்**
**நச்சு பிரானோ டயனும் இந்திர னும்முத லாக**
**ஒக்கவும் தோற்றிய ஈசன் மாயனென் னெஞ்சினு னானே.**

**தெளிவுரை:**

தனது இடுப்பில் எடுத்து வைத்த விடம் பொருந்திய பாலை அருந்தும்படிச் செய்து, குழந்தை வடிவத்திருந்த கண்ணபிரானை அழிக்க வேண்டும் என்னும் தன்மையில் வந்த பூதனை என்கிற அரக்கியை மாளச் செய்த எம்பெருமான், பிட்சாடனராக வந்த சிவபிரானாகிய உருத்திரன், பிரமன், இந்திரன் முதலான

யாவரையும் படைத்தவா். அத்தகைய பெருமையுடைய இறைவன், என்னுடைய நெஞ்சினுள் விளங்குபவா்.

6. மாயன் என் நெஞ்சில் உள்ளான் மற்றும் யவா்க்கும் அஃதே
காயமும் சீவனும் தானே காதலும் எரியும் அவனே
சேயன் அணியன் யவா்க்கும் சிந்தைக்கும் கோசர மல்லன்
தூயன் துயக்கன் மயக்கன் என்னுடைத் தோளிணை யானே.

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணன் என்னுடைய நெஞ்சினுள் விளங்குபவா். மற்றும் ஏனைய அடியவா்களிடமும் அவ்வாறே விளங்குபவா் அவா். அப்பரமன், சரீரம், ஜீவன், காற்று, நெருப்பு எனவும் விளங்குபவா். தொலைவிலும், அண்மையிலும் இருப்பவா். ஐம்புலன்களின் உணா்வுக்கு அரியவா். தூய்மையானவா். யாவற்றையும் இயக்குபவராகவும் மயங்கச் செய்பவராகவும் விளங்குபவா். அவா் எனது இரு தோள்களிலும் விளங்கி மேவி அருள் பாவிக்கின்றாா்.

7. தோளிணை மேலும்தன் மாா்பின் மேலும் சுடா்முடி மேலும்
தாளிணை மேலும் புனைந்த தண்ணந் துழாயுடை யம்மான்
கேளிணை யொன்றும் இலாதான் கிளரும் சுடரொளி மூா்த்தி
நாளணைந் தொன்றும் அகலான் என்னுடை நாலினு னானே

**தெளிவுரை:**

தோள்,திருமாா்பு, சுடா்முடி, திருப்பாதங்கள் ஆகியவற்றில் குளிா்ச்சியான துளசி மாலையை அணிந்துள்ள அன்பின மிக்க தலைவனாகிய ஸ்ரீமந் நாராயணன், தன்னொப்பு இல்லாதவா். ஒளிவடிவம் உடையவா். எப்பொருளிலிருந்தும் எக்காலத்திலும் பிரிதல் இன்றி, ஒன்றி விளங்குபவா். அப்பெருமனா், என்னுடைய நாவில் உறைபவா். (கேள்-உறவு)

8. நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக் கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே அழிப்போ டளிப்பவன் தானே
பூவியல் நால்தடந் தோளன் பொருபடை யாழிசங் கேந்தும்
காவிநன் மேனிக் கமலக் கண்ணன் என் கண்ணின் உளானே.

**தெளிவுரை:**

ஸ்ரீமந் நாராயணன், நாவினால் ஓதப்பெறும் அருங்கலைகளாக என்பால் நிற்பவர். அவர், உயிரும் உடலும் ஆகவும் அழித்தலும் ஆக்கலும் நிகழ்த்துபவராகவும், மாலைகள் அணிந்து சங்கு சக்கரம் ஏந்தும் நான்கு பெரிய தோள்களை யுடையவராகவும், கரிய வண்ணம் உடைய அழகராகவும், தாமரைக் கண்ணுடையவராகவும் திகழ்பவர். அப்பரமன் என் கண்ணொளியாக விளங்குபவர்.

(அழிப்பு – தீவினையழிதல்)

**9. கமலக்கண் ணன்என்கண் ணினுள்ளான் காண்பன் அவன்காண்கனாலே**
**அமலங்க ளாக விழிக்கும் ஐம்புலனும் அவன் மூர்த்தி**
**கமலத் தயன்நம்பி தன்னைக் கண்ணுத வானொடும் தோற்றி**
**அமலத் தெய்வத்தொ டுலகம் ஆக்கியென் நெற்றியுளானே.**

**தெளிவுரை:**

செந்தாமரைக் கண்ணனாகிய எம்பெருமான், என் கண்ணில் உள்ளவர். யான் அப்பெருமானுடைய அருட்கண் வழியாக யாவற்றையும் காண்பவன். அது, அஞ்ஞான இருளை அகற்றும் ஐம்புலன்களுக்கும் அப்பரமனே! தலைவனாவார். அவர், நான்முகனையும், உருத்திரனையும் தோற்றுவித்துக் தெய்வத் தன்மையுடன் ஆக்கியவர். அப்பரம்பொருள் என்னுடைய நெற்றியில் உள்ளவர்.

**10. நெற்றியுள் நின்றென்னை யாளும் திரைமலர்ப் பாதங்கள் சூடி**
**கற்றைத் துழாய்முடிக் கோலக் கண்ணபிரானைத் தொழுவார்**
**ஒற்றைப் பிறையணிந்தாலும் நான்முக னும் இந்திரனும்**
**மற்றை யமரரும் எல்லாம் வந்தெனது உச்சியு னானே.**

**தெளிவுரை:**

பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானும், பிரமனும், இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் வந்து எனது உச்சியில் திருப்பாத மலரைச் சூட்டியும், நெற்றியில் விளங்கியும், திகழ்ந்து, துளசி மாலையை அணிந்துள்ள கண்ணபிரானைத் தொழுகின்றனர். அத்தகைய பெருமையுடையவர், என் உச்சியில் உள்ளவர்.

**11. உச்சியுள் ளேநிற்கும் தேவ தேவற்குக் கண்ணபிராற்கு**
**இச்சையுள் செல்ல வுணர்த்தி வண்குரு கூர்ச்சட கோபன்**
**இச்சொன்ன ஆயிரத்துள் இவையுமோர் பத்தெம்பி ராற்கு**
**நிச்சலும் விண்ணப்பம் செய்ய நீள்கழல் சென்னி பொருமே.**

**தெளிவுரை:**

என் உச்சியின்மீது விளங்கும் தேவாதி தேவனாகிய கண்ணபிரானுக்கு வண்குருகூர்ச் சடகோபன் விருப்பத்துடன் உரைத்த ஓராயிரம் பாசுரங்களுள்,இப்பத்தினை விண்ணப்பம் செய்யும் அடியவர்களின் சென்னியில், எம்பெருமானின் திருவடிக் கமலங்களானவை வந்து சேரும்.

**இவையறிந்தோர் தம்மளவி லீசனுவந்தாற்ற**
**அவயங்கள் தோறுமணையும் சுவையதனைப்**
**பெற்று ஆர்வத்தால்மாறன் பேசின சொல்பேச மால்**
**பொற்றாள் நம்சென்னி பொருள்.**

## 10-ஆம் திருவாய்மொழி – பொருமா நீள்படை

## ஈஸ்வரன் காரணம் இன்றிச் செய்யும் உபகாரம்

**பண்: தக்க ராகம்**

**தாளம்: ஏழொத்து**

**கலிவிருத்தம்**

**(பைரவி ராகம் - ஆதி தாளம்)**

1. **பொருமா நீள்படை யாழிசங் கத்தொடு**
   **திருமா நீள்கழல் ஏழுல கும்தொழ**
   **ஒருமா ணிக்குற ளாகிநிமிர்ந்த அக்**
   **கருமா ணிக்கமென் கண்ணுள தாகுமே.**

**தெளிவுரை:**

போர் செய்வதற்குரிய வல்லமையுடைய சக்கரமும் சங்கும் கொண்டு, ஏழுலகமும் தொழும் திருவடியின் பெருமையுடன் விளங்கும் ஸ்ரீமந்நாராயணன், வாமன அவதாரம் கொண்டு, பின்னர் நெடிது உயர்ந்தவர். கருமை வண்ணமுடைய மணி போன்று விளங்கும் அப்பரமன் என் கண்ணுள் கருமணியாக இருப்பவர்.

2. **கண்ணுள்ளே நிற்கும் காதன்மை யால்தொழில்**
   **எண்ணிலும் வரும் என்னினி வேண்டுவம்**
   **மண்ணும் நீரும் எரியும்நல் வாயுவும்**
   **விண்ணுமாய் விரியும் எம்பிரானையே.**

**தெளிவுரை:**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என விரிந்து மேவும் எம்பிரானாகிய ஸ்ரீமந் நாராயணனைப் பக்தியுடன் தொழுது போற்ற, அப்பெருமான் நம் கண்ணுக்குள் விளங்கி நிற்பார். உள்ளத்திலும் மேவுவார். இதைவிட வேறு என்ன வேண்டும்!

3. **எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்**
   **நம்பிரானை தண்டாமரைக் கண்ணனை**
   **கொம்பராவு நுண்ணே ரிடை மார்வனை**
   **எம்பிரானைத் தொழாய் மட நெஞ்சமே.**

**தெளிவுரை:**

அறியாமை கொண்ட நெஞ்சமே! எமது தலைவராகிய ஸ்ரீமந் நாராயணன், என் தந்தையாவார். என் தந்தைக்கும் அவருடைய தந்தைக்கும் தலைவராவார். செந்தாமரைக் கண்ணுடையவர். மெல்லிய இடையுடைய திருமகளைத் திருமார்பில் கொண்டுள்ளவர். அப்பரமனைத் தொழுது ஏத்துக.

**4. நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப் பெற்றால்**
**என் செய்யோம்? இனி யென்ன குறைவினம்?**
**மைந்தனை மலராள் மணவாளனை**
**துஞ்சம் போதும் விடாது தொடர் கண்டாய்.**

**தெளிவுரை:**

நெஞ்சமே! நீ நற்குணப் பாங்கினை உடையை, உன்னைக் கொண்டு எத்தகைய செயல்தான் ஆற்ற முடியாது? இனி எந்தக் குறையும் இல்லை. வளம் மிக்கவரும், திருமகளின் மணவாளருமான ஸ்ரீமந் நாராயணனை நான் மறப்பினும் நீ மறவாது தொடர்ந்து பற்றி இரு.

**5. கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்று ஓர்**
**எண்தாலும் இன்றியே வந்தியலுமாறு**
**உண்டானை உலகேழுமோர் மூவடி**
**கொண்டானை கண்டு கொண்டனை நீயுமே.**

**தெளிவுரை:**

மணமே! நாம் எதனையும் எண்ணாத நிலையில் நடைபெறும் நிகழ்ச்சியைக் காண்குவையோ! ஸ்ரீமந்நாராயணன், ஏழு உலகங்களையும் உண்டுப் பாதுகாத்தலும், மூன்று அடிகளால் அளந்து அனுக்கிரகித்தும் விளங்குபவர்.

மன்னுயிரானது துன்புறாதவாறு மேவும் இறைவனின் அருளிச் செயலானது இவண் சுட்டப்பெற்றது.

**6. நீயும் நானும் இந்நேர் நிற்கில் மேல் மற்றோர்**
**நோயுஞ் சாட்கொடான் நெஞ்சமே! சொன்னேன்**
**தாயும் தந்தையுமாய் இவ் வுலகினில்**
**வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே.**

**தெளிவுரை:**

மனமே! நீயும் நானும் இத்தன்மையில் இவ்வுலகில் தாயும் தந்தையுமாய் மேவும் மணிவண்ணனாகிய சா்வேஸ்வரனைச் சரணடைந்து மேவினால், எத்தகைய நோயும் நம்மைச் சாராதவாறு பாதுகாப்பார்.

7. **எந்தையே! யென்றும் எம்பெருமான்! என்றும்**
   **சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்**
   **எந்தைஎம் பெருமான்! என்று வானவர்**
   **சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே.**

**தெளிவுரை:**

நித்திய சூரியா்களாய் விளங்கும் பிரமன் முதலான தேவா்கள் முதலானோர்,'எந்தை பெருமானே!' என்று ஏத்த விளங்குகின்ற ஸ்ரீமந் நாராயணனைப் பாவியேனாகிய அடியவனும்,'எந்தையே' என்றும்,'எம்பெருமானே' என்றும் என் சிந்தையுள் வைத்து ஏத்தித் திருநாமங்களைச் சொல்லுதலானேன்.

8. **செல்வ நாரணன் என்ற சொல் கேட்டலும்**
   **மல்கும் கண்பனி நாடுவன் மாயமே**
   **அல்லும் நன் பகலும் இடைவீடின்றி**
   **நல்கி என்னை விடான் நம்பி நம்பியே.**

**தெளிவுரை:**

பெருஞ்செல்வமாய் விளங்கும் ஸ்ரீமந்நாராயணன் என்கின்ற சொல்லை நான் செவி மடுத்ததும் என் கண்ணில் ஆனந்தப் பெருக்குடன் நீா் ததும்பும், அப்பெருமான் எங்குளன் என் நாடுவேன். இது விநோதமே யாகும். அப்பெருமானும், இரவும் பகலும் இடைவெளியின்றி கருணை விளங்கும்படி பற்றியவராகி மேவி, என்னை விட மாட்டார்.

9. **நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்**
   **செம்பொனே திகழும் திருமூர்த்தியை**
   **உம்பா் வானவா் ஆதியஞ் சோதியை**
   **எம்பிரான என்சொல்லி மறப்பனோ?**

**தெளிவுரை:**

திருக்குறுங்குடி என்னும் பாண்டி நாட்டுத் திருத்தலத்தில் செம்பொன் எனத் திகழும் ஸ்ரீமந்நாராயணன், தேவர்களால் ஏத்தப்பெறும் சோதி சொரூபமானவர். அப்பரமாத்வாவை நான் மறப்பனோ!

**10. மறப்பும் ஞானமும் நானொன்றுணர்ந்திலன்**
**மறக்கும் என்று செந்தாமரைக் கண்ணொடு**
**மறப்பற என்னுள்ளே மன்னினான் தன்னை**
**மறப்பனோ? இனியானென் மணியையே.**

**தெளிவுரை:**

மறத்தலும் அறிதலும் ஆகிய நிலைகளை நான் உணர்ந்திலன். ஆயினும் இவன் தன்னை மறந்து விடுவேனோ என எண்ணிச் செந்தாமரைக் கண்ணுடைய ஸ்ரீமந் நாராயணன், மறப்பானது அறுமாறு என்னுள்ளத்தில் எழுந்தருளியுள்ளார். இத்தன்மையில் என் கண்மணி போன்ற அப்பெருமானை இனி யான் மறப்பேனோ?

**11. மணியை வானவர் கண்ணனைத் தன்னதோர்**
**அணியை தென்குருகூர்ச் சடகோபன் சொல்**
**பணிசொல் ஆயிரத்துள்ளிவை பத்துடன்**
**தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே.**

**தெளிவுரை:**

தேவர்களுக்குக் கண்போன்று திகழும் பேரொளி வண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனைக் குருகூர்ச் சடகோபன் திருவாய்மொழியாக அருளிச் செய்த ஓராயிரத்துள் மேவும் இப்பத்துத் திருப்பாசுரங்களைத் தனியாத அன்புடன் கற்பவர்களுக்கு, ஞானத்தின் மேன்மையானது வாய்க்கும்.

**பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து**
**தருமாறோரே துவறத்தன்னை நிரமாகப்**
**பார்த்துரைசெய்மாறன் பதம்பணிக என் சென்னி**
**வாழ்த்திடுக வென்னுடையவாய்.**

## சிவவாக்கியார் - சிவவாக்கியார் பாடல் (முதல் 20 பாடல்கள்)

**1. அரியதோர் நமசிவாயம் ஆதியந்தம் ஆனதும்**
**ஆரிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்**
**சூரியதோர் எழுத்தைஉன்னி சொல்லுவேன் சிவவாக்கியம்**
**தோஷ தோஷ பாவ மாயை தூர தூர ஓடவே.**

**உரை:**

மிகவும் அரியதான நமசிவாய என்ற அஞ்செழுத்தே ஆதியும் அந்தமுமாக ஆகியுள்ளது. அடுத்து எண்சாண் உடம்பைப் பெற்ற அரிய பிறவியை அடைந்த மனிதர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும் அன்றும் இன்றும் என்றும் ஓதி வருவதும் அனைவருக்கும் எடுத்துரைத்த மந்திரம் 'ஓம்நமசிவாய' என்பதே. அதுவே அனைத்தும் அடங்கிய ஓரெழுத்தானதையும் என் உயிரில் வாலையாக விளங்குவதையும் உணர்ந்து அந்த ஓர் எழுத்தைத் தியானித்து அதன் உள்ளிருக்கும் சிவனை அறிந்து இதனை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே ஈசனைத் தியானித்து இந்த சிவவாக்கியம் என்ற நூலைச் சொல்லுகின்றன. இதனைப் படித்து உணர்பவர்களுக்கு எல்லா தோஷங்களும் பற்றிய பாவவினைகளும் தொடரும் மாயைகள் யாவும் விலகி தானே வெகுதூரம் ஓடிவிடும்.

**2. கரியதோர் முகத்தையுற்ற கற்பகத்தைக் கைதொழக்**
**கலைகள் நூற்கண் ஞானமும் கருத்தில் வந்துதிக்கவே**
**பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்**
**பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே.**

**உரை:**

'கரியதோர் முகத்தையுற்ற கற்பகம்' இது உபதேசத்தினால் உணர்ந்து அறிந்து கொள்ளவேண்டிய மெய்ப்பொருள். இந்த ஒரு பொருளைப் பற்றி உலகோர் உணர்வதற்கே இந்த சிவவாக்கியம் முழுவதும் சொல்லி இருக்கின்றனர் சிவவாக்கியர்.

கரிய நிறமுடைய தும்பிக்கையை முகத்தில் உடையவரும் கேட்ட வரங்கள் யாவையும் கற்பகத்தருவைப் போல் வழங்கும் கருணை உடையவரான கணபதியைக் கைகள் தொழுது வேண்டுகிறேன். ஆய கலைகள் அறுபத்தி நான்கும், வேத ஆகம புராண காவிய சாஸ்திர நூல்களில் உள்ள உண்மைகளும், முக்கண் ஞான அறிவும் என் கருத்தில் தோன்றி இந்நூலில் உதிக்க வேண்டும். அறிஞர் பெருமக்களும், வயதில் சிறியவராயினும் ஞானம் பெற்றவர்களும், யோக ஞானம் அனைத்தையும் கற்று உணர்ந்தவர்களும் மற்றும் யாவரும் தவறுகளைப் பொறுத்து அருள வேண்டும்.

3. **ஆன அஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்**
**ஆன அஞ்செழுத்துளே ஆதியான மூவரும்**
**ஆன அஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்**
**ஆன அஞ்செழுத்துளெ அடங்கலாவ லுற்றதே.**

**உரை:**

நமசிவய என்ற அஞ்செழுத்துக்குள்ளே அண்டமாகிய இவ்வுலகம் அகண்டமாகிய ஆகாய வெளியும் அமைந்துள்ளது. ஆதிபராசக்தியினால் ஆன அஞ்செழுத்தே ஆதியாகி அதிலேயே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் அமர்ந்திருக்கின்றனர். அந்த அஞ்செழுத்தின் உள்ளேயே அகாரமாகவும், மகாரமாகவும் அமைந்துள்ளது. ஆதலின் இந்த அஞ்செழுத்தை அறிந்துணர்ந்து ஓதுங்கள். இந்த அஞ்செழுத்துக்குள்தான் அனைத்து தத்துவங்களும் அடங்கி அது நமக்குள்ளேயே பஞ்சாட்சரமாகி உற்ற பொருளாய் உட்கலந்து இருக்கின்றது.

4. **ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே.**

**உரை:**

அருட்பெருஞ் சோதியான ஆண்டவனாகிய ஈசனை அங்கும் இங்கும் ஓடி ஓடி தேடுகின்றீர்கள். அவன் உங்கள் உடம்பின் உள்ளே கலந்து சோதியாக ஓடி உலாவுவதை காணாது, அவனையே நாடி பற்பல இடங்களுக்கும் ஓடி ஓடி தேடியும் அலைந்தும் காண முடியாமல் உங்கள் ஆயுள் நாட்கள் கழிந்துபோய் கொண்டிருக்கிறது. அவனை ஞான நாட்டத்துடன் நாடி அச்சோதியாக ஈசன் நம் உடலிலேயே உட்கலந்து நிற்பதை உணர்ந்து கொள்ளாமல் இவ்வுலக மாயையில் சிக்கி வாட்டமுற்று மாண்டு போகும் மனிதர்கள் எண்ணற்ற கோடி பெறற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்ற இவர்கள் என்றுதான் சோதியாக இறைவன் தம்முள்ளே கலந்து நிற்பதை உணர்ந்து கொள்வார்களோ! தம்முளே உறையும் உயிரை அறியாமல் அவ்வுயிரை ஈசனிடம் சேர்த்து பிறவா நிலை பெற முயலாமல் அவனை அகிலமெங்கும் தேடி ஓடி நாடி வாடி இறந்து போகின்றனரே.

5. **உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள் தரித்த நாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே.**

**உரை:**

நம் உடம்பில் சுழு முனை நாடியில் மூலாதாரத்தில் தனஞ்செயன் எனும் பத்தாவது வாயு ஒடுங்கி பாம்பைப் போல் சுருண்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. இதையே யோகிகள் குண்டலினி சக்தி என்பர். தாயின் கர்ப்பத்திலிருந்து முழு உருவமாய் வெளிவரும்போது தனஞ்செயன் என்ற இக்காற்றின் செயலால்தான் பிண்டம் பிறக்கின்றது. அதன் பிறகு எச்செயலும் இன்றி மூலாதாரத்திலேயே ஒடுங்கியுள்ளது. உயிர் உடம்பை விட்டுப்போன மூன்று நாட்கள் இருந்து இவ்வுடம்பை அழுகச் செய்தபின் கபாலத்தைப் பிளந்து வெளியேறும். ஆதலால் இதனை நன்கு அறிந்து வாசியோகம் எனும் யோக தந்திரத்தால் கருத்தோடு இருத்தி எழுப்பி சுழுமுனையினால் முதுகுத் தண்டின் வழியாக மேலே ஏற்றி கபாலம் எனும் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் கொண்டு சேர்த்து தியானம் செய்து தொடர்ச்சியாக தியானத்தில் இருந்து வருபவர்கள் கிழவனாக இருந்தாலும் இளமை பெற்று மெய் பரவசத்தால் குழந்தையைப் போல் மாறுவர். அவர்கள் உடல் பொன் நிறமாக மாறும். இந்த யோக தந்திரத்தை முறையாக அனுசரித்து செய்து வந்தால் இறையருள் கிடைக்கப் பெற்று இன்புறலாம். உடம்பிலேயே சிவசக்தி திருவடியான பாதம் மெய்ப்பெருள் என்பது உண்மையே.

6. **வடிவுகண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனை முன்னர் வெட்ட வேண்டாம் என்பனே
நடுவன் வந்து அழைத்தபோது நாறும் இந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டு போய்த் தோட்டி கைக்கொடுப்பரே.**

**உரை:**

அழகிய பெண்ணைக் கண்டு மணமுடித்துக் கொண்டவன் அப்பெண்ணை வேறு ஒருவன் தொட்டுவிட்டால், விடாதே அவனைப் பிடித்துக் கட்டுங்கள். முதலில் அவனை வெட்ட வேண்டும் என்று அரிவாளை எடுப்பான். அந்த அழகிய பெண்ணை விதி வசத்தால் எமன் வந்து உயிரை எடுத்துப் போய்விட்டால் என்ன செய்வாய். மிக அழகிய பெண்ணாயிற்றே என்று அந்தப் பிணத்தை அப்படியே வைத்திருக்க முடியுமா? அவ்வுடம்பில் பிணவாடை வீசி நாற்றமடிக்கும் அல்லவா. ஆகவே அதனைச் சுடுகாட்டிற்கு எடுத்துச்சென்று தோட்டியின் கையில் கொடுத்து அவன் அவ்வுடலைத்

தொட்டு எரிக்கவோ, புதைக்கவோ சொல்லுவார்கள். அப்போது கோபம் வருவதில்லையே! அது ஏன்? அந்த அழகு எங்கு போயிற்று என்பதை யோசியுங்கள்.

**7. என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லிரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே.**

**உரை:**

எனக்குளே ஒன்றான மெய்ப்பொருளாக இறைவன் இருக்கின்றான் என்பதை நான் முன்பு அறிந்து கொள்ளவில்லை. அப்பரம் பொருளைப் பல இடங்களிலும் தேடியும், நல்ல நூல்களைப் படித்தும், நல்லோரிடம் பழகியும், நல்ல குருநாதர் மூலம் அது என்னிடையே இருப்பதை யான் அறிந்துகொண்டேன். தனக்குள் இருந்த உயிரை அறிந்து அதனுள் இருக்கும் ஈசனை யார் காண வல்லவர்கள். என்னிலே இருந்த அந்த மெய்ப்பொருளை அறிந்து அதையே என் உள்ளத்தில் இருத்தி தியானத்தில் இருந்து அந்த உண்மையை யான் உணர்ந்துகொண்டேன்.

**8. நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை**
**நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாயை மாயையே**
**அனைத்துமாய் அகண்டமாய் அனாதி முன் அனாதியாய்**
**எனக்குள் நீ உனக்குள் நான் நினைக்கு மாற தெங்கனே.**

**உரை:**

நான் தியானத்திலிருந்து நினைப்பது ஒன்றான மெய்ப்பொருளே அது நீயேயன்றி வேறு ஒன்றையும் நான் கண்டது இல்லை. நான் தியானத்தில் அமர்ந்து என் நினைவை புருவ மத்தியில் நிறுத்திப் பார்க்கும்போது அங்கு உன் நினைவைத் தவிர வேறு நினைவு இல்லை. நான் நினைப்பதாகவும்,மறப்பதாகவும் நின்ற மனம் ஒரு மாயையே, இவ்வுலகில் உள்ள அனைத்துமாகவும் முன் உள்ள அனாதியாகவும் உள்ளவன் நீயே. எனக்குள் நீ இருப்பதுவும் உனக்கள் நான் இருப்பதையும் உணர்ந்து பிறகு எல்லாம் உன் செயல் என்று அறிந்த பிறகு உன்னை நினைப்பது எவ்விதம் என் ஈசனே. உன்னை மறந்தால் தானே நினைக்க முடியும். உன்னை மறவேன்.

**9. மண்ணும் நீ விண்ணும் நீ மறிகடல்கள் ஏழும் நீ**
**எண்ணும் நீ எழுத்தும் நீ இசைந்த பண் எழுத்தும் நீ**
**கண்ணும் நீ மணியும் நீ கண்ணுளாடும் பாவை நீ**

**நண்ணும் நீர்மை நின்ற பாதம் நண்ணுமாறு அருளிடாய்.**

**உரை:**

பூமியாகவும் ஆகாயமாகவும் ஏழு கடல் நீராகவும், கடல் நெருப்பு என பஞ்ச பூதங்களாகவும் இருப்பவன் நீயே. எட்டிரண்டு என்ற எண்ணாகவும், அகார உகார எழுத்தாகவும் ஆகி இசையுடன் கூடிய தேவாரப் பண்ணாகவும், ஏழு ஸ்வரங்களான சரிகமபதநி என்ற ராக எழுத்தாகவும் உள்ளவன் நீயே. கண்ணாகவும், கண்மணியாகவும் கண்ணுள் ஆடும் பாப்பாவாகவும் ஆனவனும் நீயே. இப்படி அனைத்துமாய் உள்ள உண்மையான பிரம்ம ஞானத்தை எனக்கு வழங்கி என்னுள் நீராகி நின்ற நினது திருவடிப் பாதத்தை என்றும் என் தியானத்தில் வைக்க அருள் செய் ஈசா.

**10. அரியும் அல்ல அயனும் அல்ல அப்புறத்தில் அப்புறம்**
**கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்**
**பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்**
**துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.**

**உரை:**

மெய்ப்பொருள் விஷ்ணுவும் அல்ல. பிரம்மாவும் அல்ல. விஷ்ணுவாலும் பிரம்மாவாலும் அடி முடி காண முடியாமல் அப்பாலுக்கப்பாலாய் நின்றவன் ஈசன். அவன் அதுவாகி அப்புறத்தில் அப்புறமாய் கருமை செம்மை வெண்மை நிறங்களை கடந்து நின்று சோதியாகி காரணப் பொருளாய் நமக்குள்ளே இருக்கின்றான். அச்சிவனே சீவனாக கருமையிலும் சிகப்பு வெள்ளை அணுக்களிலும் கலந்து நின்று உயிரும் உடலும் இயங்க காரணமாய் இருக்கிறான். அவனுடைய திருவடி நமக்குள் இருப்பதை உணருங்கள். அது பெரியதும் இல்லை சிறியதும் இல்லை யாவிலும் நடுவாய் இருப்பது. அப்பாதத்தையேப் பற்றி நின்று தியானியுங்கள். அது துரியமாகிய ஆஞ்ஞா கமலத்தில் ஆகாயத் தத்துவத்தையும் கடந்து நிற்பதால் வெகுதூரமாய் தோன்றுகின்றது. இதனை தனக்குள்ளேயே அறிவை அறிந்து உண்மையை உணர்ந்து தியானியுங்கள்.

**11. அந்திமாலை உச்சி மூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்**
**சந்தி தர்ப்பணங்களும் தபங்களும் செபங்களும்**
**சிந்தை மேவு ஞானமும் தினம் செபிக்கு மந்திரம்**
**எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.**

**உரை:**

அதிகாலை, மதியம், மாலை என்று மூன்று நேரங்களிலும் நீராடி குளித்துவிட்டு இயம நியமங்களுடன் இருந்து சந்தியா வந்தனம் தர்ப்பணங்கள் போன்றவைகளைச் செய்வதும்,பெறற்கரிய தவங்கள் புரிந்து காயத்ரி செபம் செய்வதும், இதனால் வரும் பலன்களால் சிந்தையில் எப்போதும் ஞானம் ஒன்றையே வைத்து தியானம் செய்வதினால் வரும் பலன்களும் எந்தையாகிய ஸ்ரீ இராமனின் ராம மந்திர செபத்தை செய்வதினாலே கிடைக்கும். ஆதலால் குருநாதரின் ராம நாமத்தை தினமும் செபித்து தியானித்திருங்கள்.

**12. கதாவு பஞ்ச பாதகங்களைத் துரந்த மந்திரம்**
**இதாம் இதயம் இதல்ல வைத்துழலும் ஏழைகாள்**
**சதாவிடாமல் ஓதுவார் தமக்கு நல்ல மந்திரம்**
**இதாம் இதாம் இராம ராம ராம என்னும் நாமமே.**

**உரை:**

செய்த பாவங்கள் யாவும் அகலவும்,பஞ்சமா பாதங்களைச் செய்யா வண்ணம் காப்பதற்கும் ஓதுவதற்குரிய அரிய மந்திரம் இதுவாக இருக்குமோ அல்லது அதுவாக இருக்குமோ என்று பற்பல மந்திரங்களை ஓதி உச்சரித்து வையகத்தில் வாழ்ந்து உழன்று வரும் ஏழை பக்தர்களே! இதோ சர்வ காலங்களிலும் எந்த நேரத்திலும் உச்சரித்து ஓதுவதற்குரிய அரிய நல்ல மந்திரம் இதுதான் என்பதை உணர்ந்து எப்போதும் இராம ராம ராம என்னும் நாமத்தை என்னும் மறவாது ஓதி உயர்வடையுங்கள்.

**13. நான தேது? நீய தேது? நடுவில் நின்றது ஏதடா?**
**கோனதேது? குருவதேது? கூறிடும் குலாமரே**
**ஆனதேது? அழிவதேது? அப்புறத்தில் அப்புறம்**
**ஈனதேது? ராம ராம ராம என்ற நாமமே.**

**உரை:**

நான் என்று ஆனது எது? நீ என்பது எது? ஞானமாகிய நமக்குள் நடுவாக நின்றது என்ன? கோனாகி இவ்வுடலை ஆட்சி செய்வது எது? குருவாக அமைந்திருப்பது எது? அது என்பதை எதுவென்று கூறிடுங்கள் எம் குல மக்களே! ஆதியாக ஆனது எது? அழியும் உடம்பில் அழியாத பொருளாய் நின்றது எது? அது

நம் உடம்பிலேயே அப்புறத்திற்கு அப்புறமாய் வெளியாக நின்று உடல் அழிந்த பிறகும்கூட வருவது எது என்பதை நன்கு சிந்தித்து அறிந்து கூறுங்கள். இவை யாவும் ஒன்றே என அறிவை அறிய வைத்து நம் பிறவியை ஈடேற்ற துணையாவது இராம நாமமே என்பதை உணர்ந்து இராம மந்திரத்தை ஓதுங்கள்.

**14. சாத்திரங்க்ள ஓதுகின்ற சட்டநாதப் பட்டரே**
**வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ**
**மாத்திரைப் போதும்முளே யறிந்து தொக்க வல்லிரேல்**
**சாத்திரப்பை நோய்கள் ஏது சத்தி முத்தி சித்தியே.**

**உரை:**

சாஸ்திரங்கள் வேத பாராயணங்கள் போன்றவைகளை தினமும் ஓதுகின்ற சட்டநாதப்பட்டரே! உங்களுக்கு நோய் வந்து மாரடைப்பு ஏற்பட்டு வேர்த்து இரைத்து உயிர் ஊசலாடும் போது நீங்கள் சொல்லி வந்த வேதம் அந்நேரம் வந்து உதவுமோ? உதவாது. ஆதலால் ஒரு நொடி நேரமாவது உங்களுக்குள்ளே உள்ள மெய்ப்பொருளை அறிந்து வாசியோகம் செய்து அதையே தொக்கியிருந்து தியானம் செய்து வந்தீர்களானால் சோற்றுப்பையான இவ்வுடம்பிற்கு நோய் என்பது வராது. மரண காலத்திலும் ஈசன் கருணையினால் சக்தியும், முத்தியும், சித்தியும் கிடைக்க மெய்ப்பொருளை அறிந்து தியானியுங்கள். தாங்கள் தினம் தினம் சொல்லி வந்த வேத சாஸ்திரங்களுக்கும் அதனால் சக்தி கிட்டி முத்தி பெற்று சித்தி அடைவீர்கள்.

**15.தூரம் தூரம் தூரம் என்று சொல்லுவார்கள் சோம்பர்கள்**
**பாரும் விண்ணும் எங்குமாய் பிறந்து அப்பராபரம்**
**ஊரு நாடு காடு தேடி உழன்று தேடும் ஊமைகள்**
**நேரதாக உம்முள்ளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.**

**உரை:**

இறைவன் வெகுதூரத்தில் இருக்கின்றான் என்றும் அவனை ஆன்மிக நாட்டம் கொண்டு அடையும் வழி வெகுதூரம் என்றும் சொல்லுபவர்கள் சோம்பேறிகள். அவன் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து மண்ணாகவும், விண்ணாகவும் எங்கும் பரந்து இருக்கின்றான். அவனைப் பல ஊர்களிலும் பல தேசங்களிலும் பற்பல காடு மலைகளிலும் உழன்று அலைந்து தேடும் ஊமைகளே! அவ்வீசன் உனக்குள் உள்ளதை உணர்ந்து முதுகுத் தண்டு வளையாமல் நேராக பத்மாசனத்தில் அமர்ந்து தியானித்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

16. **நாலு வேதம் ஓதுவீா் ஞான பாதம் அறிகிலீா்**
**பாலுள் நெய் கலந்தவாறு பாவிகாள் அறிகிலீா்**
**ஆலம் உண்டகண்டனாா் அகத்துளே இருக்கவே**
**காலன் என்ற சொல்லுவீா் கனவிலும் ம.்.து இல்லையே.**

**உரை:**

ரிக், யஜுா், சாம, அதா்வணம் என்ற நான்கு வேதங்களையும் நன்றாக மனப்பாடம் செய்து ஓதுவீா்கள். ஆனால் அந்த நான்கு வேதங்களும் சொல்லும் ஞான பாதம் எது என்பதை அறிவீா்களா? அமுதம் வேண்டி திருப்பாற் கடலைக் கடையும் போது ஆதிசேஷன் கக்கிய ஆலகால விஷத்தை உண்டு அவனியைக் காத்த நீலகண்டன் நம் உள்ளத்தில் இருப்பதையும் ஞானபாதம் எனும் மெய்ப்பொருளை அறிந்தவா்க்கும் காலன் என்ற எம பயம் கிடையாது. அதை அறிந்து அதையே எண்ணி தியானிப்பவா்களுக்குக் கனவில் கூட எம பயமோ எம வேதனையோ இருக்கவே இருக்காது.

17. **வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை**
**தச்சிலாது மாளிகை சமைந்தவாற தெங்ஙனே**
**பெற்ற தாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்**
**சித்திலாத போது சிவனில்லை இல்லை இல்லையே.**

**உரை:**

பரம்பொருளே அனைத்திற்கும் வித்தாக இருக்கின்றது. அதனாலேயே எல்லா சம்பிரதாயங்களும் மேலுலகிலும், பூலோகத்திலும் அமைந்துள்ளது. அவனன்றி ஓரணுவும் அசையாது. தச்சன் இல்லாது மாளிகை அமையுமா? அஸ்திவாரம் இல்லாத கட்டிடம் எழும்புமா? நம் உடம்பில் உயிராகி வித்தாக இருப்பன் ஈசன். மானிடப் பிறவிகள் சிவனை வித்தாகக் கொண்டே நடமாடும் கோயிலாக உடம்பு அமைந்துள்ளது. பெற்ற தாயை மறந்துவிட்டு பெண்களிடம் அடிமை கொள்ளும் பேதை மக்களே! பெற்ற ஞானத்தை விற்று சிவன் உறையும் சீவா்களை அடிமைகளாக மாற்றுகின்ற பேதை ஞானிகளே! சிவன் இல்லாது போனால் இந்த சிவனும் இல்லை இந்த உடம்பு இல்லையென ஆகிவிடும் என்பதை உணா்ந்து அச்சிவனையே தியானித்திருங்கள்.

18. **அஞ்சும் மூன்றும் எட்டதாம் அநாதியான மந்திரம்**
**நெஞ்சிலே நினைந்து கொண்டு நீருருச் செபிப்பிரேல்**
**பஞ்சமான பாதகங்கள் நூறு கோடி செய்யினும்**
**பஞ்சு போல் பறக்கும் என்று நான் மறைகள் பன்னுமே.**

**உரை:**

'நம சிவய என்ற அஞ்செழுத்தும்' அ, உ, ம் என்ற மூன்றெழுத்தும் சேர்ந்த 'ஓம் நமசிவய' என்ற எட்டெழுத்து மந்திரமே அனாதியாக விளங்கும் ஈசனின் மந்திரம். இதுவே அனாதியான மந்திரம். இதனை நன்கு அறிந்து கொண்டு நம் உள்ளமாகிய கோவிலிலே இருத்தி நினைந்து நீங்கள் கண்ணீர் சிந்தி அழுது உருக்கொடுத்து செபித்து தியானியுங்கள். எந்த ஜென்மத்திலும் செய்த பஞ்சமா பாதகங்களும் பாவங்களும் நம்மைவிட்டுப் பறந்துவிடும். எவ்வித பழிபாவங்களையும் செய்யாவண்ணம் நம்மை நன்னெறியில் நடக்கச் செய்யும் என்று நான்கு மறைகளும் சொல்கின்றன. ஓம் நமசிவய.

19. **அண்டவாசல் ஆயிரம் ப்ரசண்டவாசல் ஆயிரம்**
**ஆறிரண்டு நூறு கோடியான வாசல் ஆயிரம்**
**இந்த வாசல் ஏழை வாசல் ஏக போகமான வாசல்**
**எம்பிரான் இருக்கும் வாசல் யாவர் காணவல்லரோ?**

**உரை:**

இவ்வுலகத்திற்கும் பிற உலகங்களுக்கும் ஆயிரமாயிரம் வழிகள் வாசல்களாக அமைந்திருக்கின்றன. எண் சாண் உடம்பு கொண்ட மானிடப் பிறப்பில் ஒன்பது வாசல்களாக அமைந்து எண்ணாயிரம் கோடி உயிர்களிலும் கோடிக்கணக்கான வாசல்கள் கொண்டு இப்பூமியில் இலங்கி வருகின்றது. இதிலே இறைவன் நம் உடம்பில் பத்தாவது வாசலில் இருந்து உலவுகின்றான். இந்த வாசல் ஏழை வாசலாகவும், ஏகமாகி நின்று இறைவன் இன்பம் கிட்டும் வாசலாகவும் எளிமையாக எல்லோரிடமும் மறைவாக இருக்கின்றது. இந்த பத்தாவது வாசலை அறிந்து யோக ஞானத்தால் அவ்வாசலின் பூட்டை திறந்து எம்பிரானாகிய ஈசன் இருக்கும் வாசலை யாவர் காணவல்லவர்கள்.

20. **சாம நாலு வேதமும் சகல சாத்திரங்களும்**
**சேமமாக ஓதிலும் சிவனை நீர் அறிகிலீர்**
**காம நோயை விட்டு நீர் கருத்துளே உணர்ந்த பின்**
**ஊமையான காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே.**

**உரை:**

காலம் தவறாது நான்கு வேதங்களையும், சகல சாஸ்திரங்களையும் வெகு நேர்த்தியாகவும், ஒழுங்காகவும், மிக அழகாகவும் நன்றாக ஓதி வந்தாலும் சிவன் நீராக உள்ளதை அறியார்கள். தன் உடம்பில் உயிர் இருப்பதையும் அதற்குள் சிவன் இருப்பதையும் அறிந்துணரமாட்டார்கள். தனக்குள் உட்பகையாக இருக்கும் காமம் என்ற நோயை அகற்றிவிட்டு, அதே காமம் தோன்றும் இடத்தில் கருத்துடன் எண்ணத்தை வைத்து ஈசனை உணர்ந்து தியானித்தால் நம்மில் ஊமையெழுத்தாகி சூட்சம உடம்பில் இருப்பான் எங்கள் ஈசன் என்பதை அறிந்து நீங்களும் உணர்ந்து தியானியுங்கள்.

## திருமூலர் - அன்புடைமை (முதல் பத்து மட்டும்)

1. அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

2. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.

3. என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே.

4. ஆர்வம் உடையவர் காண்பா அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே.

5. என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்த
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.

6. தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே.

7. முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்தன் அகலிடைத் தானே.

8. கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவஎன் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

9. நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான்என்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே.

10. அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே.

## சிற்றிலக்கியம்

## சயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி

தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று பரணி. இந்நூலில் ஆயிரம் களிறுகளைப் போரில் வென்ற ஆண்மை வாய்ந்த தலைவனொருவனைச் சிறப்பித்துப் பாடுதல் மரபாம். இதனைச் சிற்றிலக்கியம் என்பர் செந்தமிழ்ப் புலவர். ஆனால். கலிங்கத்துப்பரணி பேரிலக்கியம் போர் இலக்கியம்! தமிழ்ப் பரணி நூல்களில் எல்லாம் தலையாயது - தனித்தன்மை கொண்டது. செயங்கொண்டார் பாடிய 'கலிங்கத்துப்பரணி'.

கவிவேந்தர் ஒட்டக்கூத்தர் தாம் பாடிய "தக்கயாகப் பரணி"யில்,"தென்தமிழ் தெய்வப்பரணி" என்று கலிங்கத்துப்பரணியைப் போற்றியப் புகழ்த்திருப்பது ஒன்றே,"பரணிக்கோர் செயங்கொண்டார்" என்ற பாட்டுடைச் சிறப்புக்கு முற்றிலும் பொருத்தமானது என்பதை மெய்ப்பிக்கும்.

**பரணி இலக்கணம்**

பரணி என்பது,'பரணி' நட்சத்திரம் வருகிற நாளில் பேய்கள் கூடி, நிணச்சோறு ஆக்கி மகிழுவதைக் கூறுவது என்பர் சிலர்.

சிலர், போக்களத்திலே ஒரு பரண் அமைத்துக்கொண்டு, அதன்மீது அமர்ந்து, போர்க்களக் காட்சிகளைக் கண்டது கண்டபடி பாடுவது பரணி நூலின் சிறப்பு என்பர்.

இன்னும் சிலர், ஆயிரம் யானைகளைப் போரில் கொன்ற வெற்றி வீரனைப் போற்றிப் பாடுவதே பரணி என்பர். எப்படியானாலும்,'கலிங்கத்துப் பரணி'யின் பாடல்கள் சந்தச்சுவை மிக்கவை.

சங்கத் தமிழ்ப்பாடல்களுக்கு ஈடான கவிச்சுவையும், கற்பனை நயமும், வருணனை வளமும் கை கோத்துக் களிநடம் புரியும் வசீகரத்தை வனப்புத் தூரிகை கொண்டு வரைந்த வரலாற்றுச் சித்திரம்.

**"சுரி குழல் அசைவுற அசைவுறத்**
**துயில் எழும் மயிலென, மயிலென…**
**……………………………………**
**……………………………………"**
**"கலவிக் களியின் மயக்கத்தால்**
**கலைபோய் அகலக் கலை மதியின்**
**நிலவைத் துயில் என்று எடுத்துடுப்பீர்…**
**……………………………………"**

**“முருகிற் சிவந்த கழுநீரும்**

**முதிரா இளைஞர் ஆருயிரும்**

**திருகிச் செருகும் குழல் மடவீர்**

**செம்பொற் கபாடம் திறமினோ...”**

என்பன போன்ற கற்கண்டு அடிகள் மட்டுமல்ல.

**“வளை கலிப்பவும் முரசொ லிப்பவும்**

**மரமிரட்டவும் வயிரமாத்**

**தொளை இசைப்பவும்...**

**..............................”**

**“குடை நிரைத்தலின் தழை நெருக்கலின்**

**கொடி விரித்தலின் குளிர் சதுக்கம் ஒத்து**

**இடை நிரைத்தலின் பகல் கரப்ப உய்த்து**

**இருநிலப் பரப்பு இருள் பரக்கவே!”**

**“பார் சிறுத்தலின் படை பெருத்ததோ**

**படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?**

**.............................................**

**.............................................”**

என்பன போன்ற வீர நெருப்புச்சுடர் நிமிர்த்தும் வைர வரிகளும் செயங்கொண்டாரின் செந்தமிழ்ப் புலமைக்கும், கலிங்கத்துப்பரணியின் கவிநடைச் சிறப்புக்கும் சிம்மாசனச் சிறப்பளிப்பவை.

**சயங்கொண்டார் பிறப்பும் சமயமும்**

கலிங்கத்துப்பரணியென்னும் இந்நூலுக்கு ஆசிரியர் சயங்கொண்டார் என்னும் புலவராவார். இவர் சோழநாட்டில் நன்னிலத்தையடுத்த தீபங்குடியில் தோன்றினார். இவர் தம்மிளமையிலேயே தமிழ் இலக்கண விலக்கியங்களை நன்கு கற்றுத்தேர்ந்தார். இவர் ஒருநாள் குலோத்துங்கனைக் காண விழைந்து அவன் அவைக்களமணுகினர். அப்போது அவ்வரையன் இவரை நோக்கி,‘நும்முர் யாது?’ என வினவினான். உடனே அவர்,

**“செய்யும் வினையு மிருளுண் பதுவும்**

**தேனும் நறவு மூனுங் களவும்**

**பொய்யுங் கொலையு மறமுந் தவிரப்**

**பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்**

**கையும் முகமு மிதழும் விழியும்**

**காதலும் நிறமும் போலுங் கமலம்**

**கொய்யும் மடவார் கனிவா யுதரம்**

**கோபங் கமழுந் தீபங் குடியே’’**

எனச் செய்யுளால் விடையிறுத்தனர். அதனைக் கேட்ட அக்காவலன் இவர் கல்விப் பெருக்கைக் கண்டு வியந்து, இவரைத் தன் அவைக்களப் புலவராய் அமர்த்திக்கொண்டான். இவர் கூறிய செய்யுளில் இரவிலுண்ணாமை, உயிர்க்கொலை புரியாமை முதலிய சமண சமயக்கோட்பாடுகளை நன்கு விளக்கியிருத்தலால், அப்போது இவர் சமணரா யிருந்தனரென்பது தெள்ளிதிற் புலனாம். ஆனால், இவரியற்றிய கலிங்கத்துப்பரணியில் முதலில் சிவபெருமானையும், பின்னர்த் திருமால் முதலிய தேவர்களையும் வழிப்பட்டிருக்கின்றனர். இதனால், இவர் முதலில் சமணராயிருந்து குலோத்துங்க வேந்தனை யடைந்தபின், சைவராய் மாறியிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

**கலிங்கத்துப்பரணியைப் பாடினமைக்குக் காரணம்**

கலிங்கப்போர் நிகழ்ந்தபின், ஒரு நாள் சயங்கொண்டாரும் குலோத்துங்க வேந்தனும் பேசிக்கொண்டிருந்தனர். அதுகாலை அவ்விறையவன்,‘‘செந்தமிழ்ப்புலவர், கலிங்க நாட்டைச் சயங்கொண்டமையால், நானுந் தங்களைப் போல் சயங்கொண்டான் ஆயினேன்’’ என வேடிக்கையாய் விளம்பினான். அதனை செவியுற்ற அப்புலவர் அங்ஙனமாயின்,‘சயங்கொண்டானைச் சயங்கொண்டால் பாடுதல் சாலத் தகவுடைத்தாம்’ என வியம்பி, உடனே கலிங்கத்துப்பரணியை விரைந்து பாடி முடித்தனரென்ப.

## பரணியின் பரண்கள்

1. கடவுள் வாழ்த்து
2. கடை திறப்பு
3. காடு பாடியது
4. கோயில் பாடியது
5. தேவியைப் பாடியது
6. பேய்களைப் பாடியது
7. இந்திரசாலம்
8. இராச பாரம்பரியம்
9. பேய் முறைப்பாடு
10. அவதாரம்
11. காளிக்குக் கூளி கூறியது
12. போர் பாடியது
13. களம் பாடியது

## கலிங்கத்துப் பரணியின் கதை

போரில் வென்ற வீரனின் வெற்றிப் பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடுவது பரணி.

கலிங்கத்துப் பரணி – கலிங்கம் வென்று புகழ்க்கொடி நாட்டிய வீரன் கருணாகரனையும், அவனுடைய அரசன் முதலாம் குலோத்துங்கனையும் போற்றிப் புகழ்ந்து கவிமன்னன் செயங்கொண்டார் பாட்டில் தீட்டிய கவி ஓவியம்.

கலிங்கம், இன்றைய ஒரிசாவின் ஒரு பகுதி. இதை ஆண்டவன் ''அனந்தவர்மன்'.

**"எந்நகரங்களும் நாடும்**
**எமக்கு அருள் செய்தனை எம்மைஇடச்**
**சொன்ன தனங்கள் கொணர்ந்தனம்**
**……………………………………."**

என்று எல்லா நாட்டு அரசர்களும் கப்பப்பொருள்களுடன் வந்து குலோத்துங்க மாமன்னன் தாள்பணிந்து நிற்க,

**"வடகலிங்கர் பகுதி அவன் இரண்டு விசை**
**வருகிலன் திறைகொடு…………………."**

என்று சேதியை மந்திர ஓலை சொன்னதுதான் தாமதம்,

குலோத்துங்கள் முகம் கோபக் குறி காட்டாமல் புன்னகை பூத்ததாம்.

**"……………………………………….**
**……………………………………….**
**அளி அலம்பு மத வலைகள் கொண்டு**
**அணையின் அவனையும் கொணர்மின்…"**

என்று மன்னன் வாய்மலர் வார்த்தைகள் உதித்ததுதான் தாமதம்.

**"வளை கலிப்பவும் முரசு ஒலிப்பவும்**
**மரம் இரட்டவும் வயிர மாத்**
**தொளை இசைப்பவும் திசை இபச்செவித்**
**தொளை அடைத்தலைத் தொடரவே"**

வண்டையம்பதிக்கு அரசன் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் வடகலிங்கம் நோக்கிக் கடல் போலப் படை வரிசை புறப்பட்டது. 'கங்காநதி ஒருபுறமாகப்' படைக்கடல் மறுபக்கமாகக் கலிங்கத்தைச் சுற்றி வளைத்தது கருணாகரன் படை.

**"கான் அரணும் மலை அரணும் கடல் அரணும்**
**சூழ் கிடந்த கலிங்கர் பூமி**
**தான் அரணம் உடைத்து என்று கருதாது**
**வருவதும் அத்தண்டு போலும்"**

என்று அனந்தவர்மன், காடும் மலையும் கடலும் சூழ்ந்து, பாதுகாப்புப் பெட்டகமாக உள்ள கலிங்க நாட்டை எளிதில் வென்றுவிட வந்ததோ சோழர் படை என்று கொதித்தெழுந்து போருக்குப் புறப்படுகிறான்.

**"விடவிகள் மொடு மொடு விசைபட**
**முறிபட எறிபட நெறிபடவே!**
**அடவிகள் பொடிபட அருவிகள்**
**அனல்பட அருவரை துகள் படவே!"**

போர் நடக்கிறது என்றாலும், அனந்தவர்மன் தோற்றோடிப் போகக் கருணாகரத் தொண்டைமான் சிறைப் பிடித்த பகையோடும், செல்வநதிக் குவியல்களோடும், யானை குதிரைகளோடும் வெற்றிப் புகழோடும், வீரர் துணையோடும் தலைநகர் திரும்புகிறான்.

போர் வென்று வீடு திரும்பும் வீரர்களின் வீட்டுக்கதவுகள் அடைத்துக் கிடக்கின்றன. வெற்றி வீரராகத் திரும்பும் தன் கணவனை வீட்டு வாசலில் நின்று வரவேற்க வேண்டிய தலைவி ஏன் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறாள். கதவைத் தாழிட்டுக்கொண்டு?

காரணம், ஊடல்!

போருக்குப் போகிறேன். போர் முடிந்து விரைவில் வருவேன் என்று கூறிப் போன வீரர்கள் நீண்ட நாளாகியும் திரும்பவில்லையே என்ற பொய்க்கோபம். அந்தப் பூவிழிப் பெண்களுக்கு, இத்துணை நாள் காக்க வைத்துத் தம்மைத் தவிக்கவிட்ட தலைவரைத் தாமும் காக்கவைத்துக் கலங்க வைக்கலாமே என்ற ஆசை! கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே படுத்திருக்கின்றனர்.

பாவம், இந்த வீரர்கள்! பாவம், இந்தப் பெண்களுக்குத் தாம் என்று பரிதாபப்பட்ட கவி செயங்கொண்டார் பள்ளி எழுச்சி பாடுகின்றார். பாவையரே, வீரா பவனி வரப்போகிறது. விரைந்து வாருங்கள், வந்து கதவைத் திறவுங்கள் என்று வந்துவிட்டார் கணவர் என்று பல நாள் பல முறை கதவைத் திறந்து திறந்து பார்த்தாலும் மூடியும் கதவின் கொண்டிகூடத் தேய்ந்துவிட்டதாம்!

**"வருவார் கொழுநர் எனத் திறந்தும்**
**வாரார் கொழுநர் என அடைத்தும்**
**திருகும் குடுமி விடி அளவும்**
**தேயும் கபாடம் திறமினோ!"**

என்று வாசல் கதவு திறக்கும் வஞ்சியரை வீரர் சார்பாகக் கெஞ்சும் கவிக் கூற்றாக அமைந்த ‘கடை திறப்பு’ நூலின் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக உள்ள கவிச்சோலை சொற்சிலம்ப நாடக மேடையின் முதல் திரைச் சீலை தமிழ்மணம் கமழும் தனி இசைச் சித்திரம்.

பிற்காலப் புலவர்கள் நூல் அமைப்பு முறையைப் பின்பற்றிச் செயங்கொண்டாரும் **‘கடவுள் வாழ்த்து’**டன் நூலைத் தொடங்குகிறார். செயங்கொண்டார் சைனமதச் சார்புடையவர் என்றொரு கருத்து உண்டென்றாலும் கடவுள் வாழ்த்துப் பகுதியில் சிவன், திருமால், நான்முகன், ஞாயிறு, விநாயகர், முருகன், நாமகள், உமை, தேவியர் எனப் பல தெய்வ வணக்கப்பாடல்களை அருமையாகப் படைத்துவிட்டு, சோழனை, சுடர்விடும் அவன் புலிக்கொடியை, கொடை கொடுக்கக் கவிந்த கையை,“நிதிபொழி கவிகையும் வளர்கவே” என்று வாழ்த்திக் கடை திறக்கக் காரிகையர்க்குக் கட்டளையும் வேண்டுகோளும் விடுத்துப் பின் யுத்தகளம் பாடுகிற பகுதி **‘காடு பாடியது’.**

**“பொரிந்த காரை கரிந்த சூரை**
**புகைந்த வீரை எரிந்த வேய்”**

என்று, காட்டின் தன்மையைக் கவிபாடுவதைப் படிக்கும் போதே கனலின் வெப்பம், கவிநாயத்தின் குளிர்ச்சியையும் தாண்டி வந்து நம்மைத் தாக்குவதை உணரலாம்.

காட்டில் வனம் உறை தெய்வமாக வாழ்பவள், காளி. இவளுடைய கோயிலின் அருமையைப் பாடுகிற பகுதி **‘கோயில் பாடியது’**. சோழனிம் தோற்ற பகை மன்னர் பட்டத்தரசிகள் அணிந்திருந்த பெரிய இரத்தின மணிக்கற்களே காளிகோவிலின் கடைகால் கற்களாகப் போடப்பட்டனவாம்.

**“பட்ட மன்னர்தம் பட்ட மங்கையர்**
**பருமணிக் கருத்திரு இருத்தியே!”**

என்பது பாடல்.

கோவிலே இப்படி என்றால், கோவிலுக்குள்ளிருக்கும் தேவியின் பெருமை என்ன சாதாரணமாகவா இருக்கும்? பெரிய மலைகளைக் காதோலையாத் தேவி அணிந்திருந்தாளாம். தேவியின் திருப்புகழ் **‘தேவி பாடியது’**.

**“அண்டம் உறுகுலகிரிகள்**
**அவள் ஒருகால் இரு காதில்**
**கொண்டு அணியின் குதம்பையும்”**

என்று பாடுகிறார், கவி. காடு பாடி, கோயில் பாடி, தேவி பாடிய கவி பேய்களைப் பாடுகிறார்.

**“தட்டி வானைத் தகர்க்கும் தலையின**

**தாழ்ந்து மார்பினைத் தட்டும் உதட்டின”**

என்று, பேய்களைப் பாடும்,**‘பேய் பாடியது’** கவிநயம் கூத்தாடுவது.

பேய்கள் என்றாலே, பிரமிக்கத்தக்க செயல்கள் இல்லாமலிருக்குமா? கலிங்கத்தில் இருந்து வந்த முதுபேய் ஒன்று, காளிமுன் பல **‘இந்திர சாலம்**’ மாய வித்தைகள் செய்து காட்டுகிறது. குலோத்துங்கனுடைய குலப்புகழ், பரம்பரைப் பெருமை, அவனுடைய **‘இராச பாரம்பரியம்**’ ஆகியவற்றையெல்லாம் இமயத்தில் இருந்து வந்து முதுபேய் கூறக் கேட்டு மகிழ்ந்த காளி தேவியிடம் பேய்கள் தங்கள் குறைகளைச் சொல்லி அழுதன. இந்தப் **‘பேய் முறைப்பாடு**’ கேட்ட காளி,“கவலைப்படாதீர்கள். முன்பு நிகழ்ந்த இராம இராவண யுத்தத்தைவிடப் பெரியதான ஒரு போர் விரைவில் வடக்கே கலிங்கத்தில் நடைபெற உள்ளது. அப்போது உங்கள் வயிறாரப் பசி தீர உணவு கிடைக்கும், கவலை விடுங்கள்” என்று கூறி அருளப் பேய்கள் அப்போதே பெருவிருந்து கிடைத்துவிட்டதைப் போல நாக்கைச் சப்பிக்கொட்டின.

அந்தப் பேய்களுக்குக் காளிதேவி, குலோத்துங்கள் குலவழிச் சிறப்பை, அவன் திருமாலின் ஓர் **‘அவதாரம்**’ என்பதைக் கூறிக்கொண்டிருக்கும் போதே கலிங்கப்பேய் எழுந்து,“என் செயப் பாவிகாள் இங்கு இருப்பது? இன்னும் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? அங்கே கலிங்கத்தில் விழும் பிணத்தைத் தின்ன நரிகளும், கழுகுகளும் காத்திருக்கின்றன. நீங்கள் இங்கே சும்மா இருக்கலாமா? ஓடுங்கள், கலிங்கம் நோக்கி!” என்று அவசரப்படுத்திவிட்டுக் கலிங்கப்போர் நிகழ்வுகளைக் காளிக்கு எடுத்துக்கூறியது,**‘காளிக்குக் கூளி கூறியது’**,**‘போர் பாடியது’** ஆகிய இரண்டும் போரின் கொடுமைகளை, அவலங்களைச் சொல்லில் வடித்த சோகத்தின் ஆழமும் அகலமும்!

தேவாசுர யுத்தம், பாரதப்போர், இராம இராவண யுத்தம் ஆகியற்றையெல்லாம்விட மிகப் பெரியதொரு போர் கலிங்கப்போர். இந்தப் போரில் மடிந்த வீரர்களும், யானைகளும், குதிரைகளும் எண்ணில் அடங்கா. போரின் கொடுமைகள் பற்றிய நேரடி வருணனை **‘களம் பாடியது’**.

“ஆழ்ந்த குருதி மடுநீத்தி” குருதி ஆற்றில் குதித்து விளையாடுகின்ற பேய்கள், போர்க்களத்தில் பரணிக் கூழ் சமைத்து, எல்லாப் பேய்களும் விருந்து வைத்து,

**“முடி சூடும் முடி ஒன்றே**

**முதல் அபயன் எம் கோமான்”**

என்று ஆனந்தக் கூத்தாடுகின்றன. கலிங்கத்துப் பரணியின் நிறைவு, கூழ்அடுதல்.

கருணாகரன், கலிங்கம் வென்ற கதை வீரத்தின் வெற்றிவாகை, தொண்டை நாட்டை ஆண்டவன் என்பதால் இவன் கருணாகரத் தொண்டைமான் என்று அழைக்கப்பட்டான். வண்டை என்னும் ஊரினன் இவன். எனவே வண்டையார் கோன் எனவும் புகழப்பட்டான். தொண்டைமான் ஒரு பட்டப்பெயர் எனவும் சொல்லுவர். நாச்சியார் கோவிலுக்கு அருகில் உள்ள இன்று வண்டுவாஞ்சேரி என வழங்கப்படும் வண்டாழஞ்சேரியே இவன் ஊர். வண்டை என்பர். இவன் குலோத்துங்க சோழன் படைத்தலைவனாகவும் தலைமை அமைச்சனாகவும் இருந்தவன்.

கலிங்கப்போரில் இவன் பெற்றுவந்து வெற்றி, சோழ மன்னனின் புகழ் மகுடத்தில் மேலும் ஒரு புது வைரமாகியது. இதனைப் போற்றிப் பாடிய கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார். முதல் குலோத்துங்கச் சோழன் அவைக்களப் புலவராக இருந்து அரசவைக்கும் புகழ் சேர்த்த பெருமைக்குரியவர். குடந்தைக்கருகில் உள்ள தீபங்குடி இவர் ஊர் என்பர். “இசை ஆயிரம்” என்னும் ஒரு நூல் இவர் இயற்றியது. இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு முற்பகுதி அல்லது பதினோராம் நூற்றாண்டின் கடைசி.

குலோத்துங்கன் இவன் இராசேந்திரன் பெயரன் இராசராசன் மகன். கங்கை கொண்ட சோழன் மகள் அம்மங்கை இவனுடைய தாய். தந்தைவழியில் சாளுக்கியன். தாய்வழி சோழர் மரபினன். இவனுடைய பட்டத்தரசி மதுராந்தகி. இவளோடு தியாகவல்லி, ஏழிசை வல்லபி என இரு மனைவியரும் இருந்தாக வரலாறு கூறும். மதுராந்தகி பெற்ற பிள்ளைகள் எழுவர். ஒரே மகள் அம்மங்கை.

குலோத்துங்கன் பலகலை கற்ற மேதை. சிறந்த வாள் வீரன். செம்மாந்த புலமையாளன். அபயன், கரிகாலன், ஜயதரன், அநபாயன் என்னும் பெயர்களும் இவனுக்கு உண்டு. “ஆனசீர் அநபாயன்” என்று இவனைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் சிறப்பிக்கிறார்.

கலிங்கத்தை வென்று தன்னாட்டோடு அதையும் சேர்த்துக்கொண்டதால் திரிபுவனச் சக்கரவர்த்தி எனவும், நாட்டு மக்கள் நலத்தின் பொருட்டு, நாட்டில் சுங்க வரியை நீக்கியதால் சுங்கம் தவிர்த்த சோழன் எனவும், தில்லை அம்பலத்துக்குப் பொன் வேய்ந்ததால் பொன்வேய்ந்த சோழன் எனவும் புகழப்பட்டான்.

திருநீற்றுச் சோழன் என்ற ஒரு பெயரும் இருந்ததாகத் தெரிகிறது. இவன் பெயரால் உள்ளதே தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருநீற்றுச் சோழ நல்லூர். இவனுடைய காலம் (கி.பி.1070-1118) பதினோராம் நூற்றாண்டு. கலிங்கப்போர் நிகழ்ந்த காலம் கி.பி.1112 என்பது வரலாறு கூறும் செய்தி.

ஒரு பொன் விழாக் கால அளவு வடக்கும் தெற்கும் தனதாகக் கிழக்கும் மேற்கும் தாள் பணிய ஒப்பற்ற ஒரு பெருவீரனாக, விவேகியாக வாழ்ந்த முதல் குலோத்துங்கச் சோழன். கலிங்கத்துப்பரணியின் கவிநயப் பாங்கில், உடல் என்றால், அதன் உயிரும் மூச்சும், கருணாகரத் தொண்டைமான் பெருவீரமும்,

செயங்கொண்டாரின் செந்தமிழ்ப் புலமையுமே என்பதைப் படிப்பவர் உணரலாம். பைந்தமிழ்ச் சோலையின் பால் நிலவு, பூமணத் தென்றல், செந்தேன் சிந்தும் சிற்றருவி-மலைச்சாரல், செயங்கொண்டார் செந்தமிழ்ப் பாட்டு – கலிங்கத்துப்பரணி.

## 2. கடை திறப்பு

**கண்ணே, கதவைத் திற!**

**சூதளவு அளவெனும் இளமுலைத்**

**துடி அளவு அளவெனும் நுண்இடைக்**

**காதளவு அளவெனும் மதில் விழிக்**

**கடலமுது அனையவர் திறமினோ!**

**புடைபட இளமுலை வளர்தொறும்**

**பொறை அறிவுடையரும் நிலை தளர்ந்து**

**இடைபடுவது பட அருளுவீர்**

**இடுகதவு உயர்கடை திறமினோ!**

**கரிகுழல் அசைவுற அசைவுறத்**

**துயில் எழும ̇மயில் என மயில்எனப்**

**பரிபுரம் ஒலிஎழ ஒலிஎழப்**

**பனி மொழியவர் கடை திறமினோ!**

போர் நிமித்தம் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் வந்துவிடுவதாகச் சொல்லிப் போன காலத்திற்குள் வராதுபோனதால், தலைவி, வரட்டும் அவர், வந்து கிடக்கட்டும் வாசலில் என்று, வீட்டின் வெளிக்கதவைத் தாழிட்டு அடைத்துக்கொண்டு, உள்ளே கோபமாக இருப்பது போல இருப்பாள். தலைவன் வந்து கண்ணே மணிணே கதவைத் திற என்று கெஞ்சுவான். இதில் தலைவிக்கு ஒரு சுகம். இலக்கியத்தில் இப்படிக் கதவு திறக்கத் தலைவன், தலைவி வீட்டு முன் தவம் கிடப்பதைக் கூறும் பகுதி கடைத்திறப்பு எனப்படும். கலிங்கப்போரில் வென்று வந்த குலோத்துங்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, கருணாகரத் தொண்டைமான் புகழ்வீரம் பாடிய சயங்கொண்டார் இந்தக் கலிங்கத்துப்பரணி கடைதிறப்பில் போரிடப் போன வீரர்கள் வந்துவிட்டனர் வாருங்கள் வந்து திறவுங்கள் என்று பள்ளி எழுச்சி பாடுவது போல, பெண்களின் அழகு நலங்களை எழிலான கற்பனை வளத்தோடும் கவிநயத்தோடும் கலந்து கவிவிருந்து படைக்கிறார்.

**பிடி..... பிடி.... விடு.... விடு...!**

**கூடிய இன் கனவு அதனிலே**

**கொடை நரதுங்கனொடு அணைவுறாது**

**ஊடிய நெஞ்சினொடு ஊடுவீர்**

**உமது நெடுங்கடை திறமினோ!**

**விடுமின் எங்கள் துகில் விடுமின் என்றுமுனி**

**வெகுளி மென்குதலை துகிலினைப்**

**பிடிமின் என்ற பொருள் விளைய நின்று அருள்செய்**

**பெடை நலீர் கடைகள் திறமினோ!**

**எனது அடங்க இனி வளவர் துங்கன் அருள்**

**என மகிழ்ந்து இரவு கனவிடைத்**

**தன தடங்கள் மிசை நகம் நடந்த குறி**

**தடவுவீர் கடைகள் திறமினோ!**

ஊடல், அதாவது பொய்க்கோபம் கொண்டு வாய்ப்வை வீணாக்கி விட்டோமே என்று உங்கள் புத்தி கெட்ட நெஞ்சத்தோடு ஏன் இப்படிச் செய்தாய் என்று கோபம் கொள்ளும் பெண்களே இப்போது கதவைத் திறவுங்கள்.

தலைவி, தலைவனிடம் கோபம் கொள்வது போல பாசாங்கு காட்டினாலே தவிர, அவளுடைய செய்கை பிடியுங்கள் பிடியுங்கள் என்பது போல இருந்ததாம். தலைவி, தலைவனொடு கனவில் கூடி இன்புற்றதையும், கனவ முடிந்து, நகக்குறி உள்ளதா என்று மார்பைத் தடவிப் பார்க்கும் மங்கை நல்லீர் கதவைத் திறவுங்களேன்!

**கனவிலும் நினைவிலும் அவனே!**

**முனிபவர் ஒத்து இலராய் முறுவல் கிளைத்தலுமே**

**முகிழ்நக பெற்றம் எனா மகிழ்நர் மணித்துவர்வாய்**

**கனி பவளத்து அருகே வருதலும் முத்து உதிரும்**

**கயல்கள் இரண்டு உடையீர் கடைதிறமின் திறமின்!**

**இத்துயில் மெய்த்துயிலே என்று குறித்து இளைஞோர்**

**இதுபுலவிக்கு மருந்து என மனம்வைத்து அடியில்**

**கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில் கூர் நயனக்**

**கடை திறவா மடவீர் கடைதிறமின் திறமின்!**

**இகல் இழந்து அரசர் தொழவரும் பவனி**

**இரவு உகந்து அருளும் கனவினில்**

**பகல் இழந்த நிறை பெறமுயன்று மொழி**

**பதறுவீர் கடைகள் திறமினோ!**

கோபம் கொண்ட பெண்களின் கண்கள் கெண்டை மீன் போன்ற கண்களும் மகிழ்ச்சியால் கண்ணீராகிய முத்துக்களை உதிர்க்கும். அழகிய கண்ணுடைய பெண்களே கதவைத் திறவுங்கள். தூங்குவது போல பாசாங்கு செய்யும் பெண்களே கதவைத் திறவுங்கள்! பகலில் வீதியில் பவனி வந்த சோழனே இரவில் கனவிலும் வந்துவிட்டான். எனவே, மொழி தடுமாறி உளறிக் கொட்டினீர்களே! பெண்களே! கதவைத் திறவுங்கள்!

**முத்த மழையில்....**

**முத்துமாலையில் பவழமாலை!**

**முத்து வடம்சேர் முகிழ் முலைமேல்**

**முயங்கும் கொழுநர் மணிச்செவ்வாய்**

**வைத்த பழவ வடம் புனைவீர்**

**மணிப் பொன் கபாடம் திறமினோ!**

**தண்கொடை மானதன் மார்புதோய்**

**தாதகி மாலையின் மேல்விழும்**

**கண் கொடு போம் வழி தேடுவீர்**

**கனக நெடும் கடை திறமினோ!**

**அஞ்சியே கயல் கெடக் கூடலில் பொருது சென்று**

**அணி கடைக் குழையிலே விழ அடர்த்து எறிதலால்**

**வஞ்சி மானதன் விடும் படையினில் கொடியகண்**

**மடநலீர்! இடுமணிக் கடை திறந்திடுமினோ!**

பவழ மாலை புனைவீர்! நீங்கள் அணிந்து கொள்ளலாம்! மணிப்பொன் குமிழ் பதித்த கதவின் தாழ் திறவுங்கள். சோழ மன்னன் பவனி போன வழியையே இன்னும் பார்த்துக்கொண்டிருக்கிற பெண்களே! பொன்னால் செய்த பூண் உடைய நெடுங்கதவைப் பெரிய கதவைத் திறவுங்கள். சோழ மன்னன் கூரிய வேல் படையின் கூர் முனைபோல் கண்ணுடைய பெண்களே! மணிகள் இழைத்த வாசல் கதவைத் திறந்துவிடுங்கள்.

**வாய்வெளுக்கக் கண் சிவக்க...**

**அவசம் உற்று உளம் நெகத் துயில்நெகப் பவளவாய்**

**அணி சிவப்பு அறவிழிக் கடை சிவப்புஉற நிறைக்**

**கவசம் அற்று இளநகை களிவரக் களிவரும்**

**கணவரைப் புணருவீர்! கடை திறந்திடமோ!**

**கலவிக் களியின் மயக்கத்தால்**

**கலைபோய் அகலக் கலைமதியின்**

**நிலவைத் துகில் என்ற எடுத்து உடுப்பீர்**

**நீள் பொன் கபாடம் திறமினோ!**

**நனவினில் சயதரன் புணரவே பெறினும் நீர்**

**நனவு எனத் தெளிவுறாது அதனையும் பழைய அக்**

**கனவுஎனனக் கூறுவீர்! தோழிமார் நகைமுகம்**

**கண்டபின் தேறுவீர்! கடை திறந்திடுமினோ!**

மகிழ்ச்சியைத் தரும் கூடல் இன்பத்தைக் கணவரோடு சேர்ந்து பெறப் பெண்களே! கதவைத் திறந்துவிடுங்கள். உங்கள் கணவர் வந்து வாசலில் காத்திருக்கிறார். மெல்லிய ஆடை என நினைத்து எடுத்து உடுத்திக்கொள்ள, நிலவைப் பிடிக்க எழுகின்ற பேதைப் பெண்களே! கதவைத் திறவுங்கள். கனவை நனவாகவும், நனவை கனவாகவும் நினைக்கும் சஞ்சலமுடைய பெண்களே கதவைத் திறவுங்கள்.

**பார்த்துச் சலித்தன கண்கள்**

**நடந்து தளர்ந்தன கால்கள்!**

**மெய்யே கொழுநர் பிழைநலிய**

**வேட்கை நலிய விடியளவும்**

**பொய்யே உறங்கும் மடநல்லீர்**

**புனை பொன் கபாடம் திறமினோ!**

**போக அமளிக் களி மயக்கில்**

**புலர்ந்தது அறியாதே கொழுநர்**

**ஆக அமளி மிசைத் துயில்வீர்**

**அம்பொன் கபாடம் திறமினோ!**

**ஆளும் கொழுநர் வரவு பார்த்து**

**அவர்தம் வரவு காணாமல்**

**தாளும் மனமும் புறம்பாகச்**

**சாத்தும் கபாடம் திறமினோ!**

வீணே தூங்குவது போல படுத்திருக்கும் பெண்களே கதவுத் திறவுங்கள். மார்பையே மலர் மெத்தையாக்கிக் கொண்டு துயில்கின்ற மங்கையரே! கதவைத் திறவுங்கள். எதிர்பார்த்து வீதிக்கும், வீட்டுக்குள்ளும் நடந்து நடந்து சலித்துப் போய், சாத்தி மூடிய கதவைச் சற்றே திறவுங்களேன்!

**தாமரை பூத்த தடாகம்....!**

**உந்திச் சுழியில் முளைத்து எழுந்த**

**உரோமப் பகந்தாள் ஒன்றில் இரண்டு**

**அந்திக் கமலம் கொடு வருவீர்**

**அம் பொன் கபாடம் திறமினோ!**

**மீனம் புகு கொடி மீனவர்**

**விழி அம்பு உக ஓடிக்**

**கானம் புக வேளம் புகு**

**மடவீர் கடை திறமின்!**

**அலை நாடிய புனல் நாடுஉடை**

**அபயர்க்கு இடு திறையாம்**

**மலை நாடியார் துளு நாடியர்**

**மனையின் கடை திறமின்**

தாமலை மொட்டுகள் போன்ற பூமார்பு சுமந்து வரும் பெண்களே! அழகிய பூண் பூட்டிய கதவைத் திறவுங்கள். தனி மாளிகையில் தங்கியுள்ள பெண்களே, கதவைத் திறவுங்கள். மலைநாட்டு மகளிரே! கதவைத் திறவுங்கள்.

**தோள் தழுவும் தோகை மயில்**

**விலை இலாத வடம் முலையில் ஆட விழி**

**குழையில் ஆட விழைகணவர் தோள்**

**மலையில் ஆடிவரும் மயில்கள் போலவரும்**

**மடநலீர் கடைகள் திறமினோ!**

**மழலைத் திருமொழியில் சில**

**வடுகும் சில தமிழும்**

**குழறித் தரு கரு நாடியர்**

**குறுகிக் கடை திறமின்!**

**தழுவும் கொழுநர் பிழை நலியத்**

**தழுவேல் என்னத் தழுவிய**

**வழுவ உடனே மயங்கிடுவீர்**

**மணிப்பொன் கபாடம் திறமினோ!**

தோகை விரித்தாடும் மயில்கள் போல மகிழ்ந்துலாவும் பெண்களே! வீட்டுக் கதவைத் திறவுங்களேன்! குறுகி-விரைந்து வந்து கடைவீதிக்கதவைத் திறந்துவிடுங்கள்! மணிகள் இழைத்த பொன் பூண் பதித்த கதவுகளைத் திறவுங்களேன். வழுவ- இங்கே நழுவிச் சோர்வதைக் குறித்தது.

**உறங்கும் போதும்**

**மனம் கிறங்க வைக்கும் அழகு**

**வேகம் விளைய வரும் கொழுநர்**

**மேனி சிவந்த படி நோக்கிகப்**

**போகம் விளைய நகை செய்வீர்**

**புனை பொன் கபாடம் திறமினோ!**

**சொருகு கொந்து அளகம் ஒருகை மேல் அலைய**

**ஒரு கை கீழ்அலை செய் துகிலொடே**

**திரு அளந்தலினும் முகம் மலர்ந்து வரு**

**தெரிவைமீர் கடைகள் திறமினோ!**

**முலைமீது கொழுநர் கை நகம் மேவு குறியை**

**முன் செல்வம் இல்லாத அவர்பெற்ற பொருள் போல்**

**கலை நீவி யாரேனும் இல்லா இடத்தே**

**கண்ணுற்று நெஞ்சம் களிப்பீர்கள் திறமின்!**

இந்தப் புன்னகையே போதும் அவர்கள் உங்களுடன் கூடி மகிழ, எனவே பெண்களே! பொன் இழைத்து அழகுசெய்த கதவுகளைத் திறவுங்கள். பார்ப்பவர்களைப் பரவசம் அடையச் செய்யும் முகப்பொலிவு உடைய பெண்களே! வாசல் கதவைத் திறவுங்களேன்! யாரும் இல்லாத மறைவிடத்தில் அந்த நகக்குறி கண்டு மகிழ்வார்களாகம். இப்படிப்பட்ட பெண்களே கதவைத் திறவுங்கள்.

**அள்ளிச் செருகிய கூந்தலிலே**

**ஆடும் இளைஞர் ஆருயிரே!**

**கடலில் விடம் என அமுது என மதனவேள்**

**கருதி வழிபடு படையொடு கருதுவார்**

**உடலின் உயிரையும் உணர்வையும் நடுவுபோய்**

**உருவும் மதர்விழி உடையவர் திறமினோ!**

**முறுவல் மாலையொடு தரளமாலை முக**

**மலரின் மீதும் முலை முகிழினும்**

**சிறு நிலாவும் அதின் மிகு நிலாவும் என**

**வரு நலீர்! கடைகள் திறமினோ!**

**முருகிற் சிவந்த கழுநீரும்**

**முதிரா இளைஞர் ஆருயிரு**

**திருகிச் செருகும் குழல் மடவீர்**

**செம்பொன் கபாடம் திறமினோ!**

உடலையும் உயிரையும் உணர்வையும் படைக்கலமாகவும் இருக்கின்றன. இத்தகைய விழிப்பார்வை கொண்டவர்களே வாசல் கதவைத் திறவுங்கள். மிகுநிலா முழுநிலாப் போலவும் தெரியக் காண்பவர் கண்களுக்கு விருந்தாகும் காரிகையீர்! கதவைத் திறவுங்கள்! வாலிப வயதினர் உயிரையும் அள்ளி எடுத்துக்கொள்ளும் அழகிய பெண்களே! கதவைத் திறவுங்கள்!

**கூந்தல் அசையக் கொள்ளை அழகசைய...!**

**மெய்யில் அணைத்து உருகிப் பைய அகன்றவர் தாம்**

**மீள்வர் எனக் கருதிக் கூடல் விளைத்து அறவே**

**கையில் அணைத்த மணல் கண்பனி சோர் புனலில்**

**கரைய விழுந்து அழுவீர் கடை திறமின் திறமின்!**

**செரு இளநீர் பட வெம்முலைக்**

**செவ்விள நீர் படு சேஅரிக்**

**கருவிளம் நீர்பட ஊடுவீர்**

**கனக நெடுங்கடை திறமினோ!**

**அளக பாரம் மிசை அசைய மேகலைகள்**

**அவிழ ஆபரணம் இவை எலாம்**

**இளக மாமுலைகள் இணை அறாமல் வரும்**

**இயல் நலீர்! கடைகள் திறமினோ!**

கணவர் வந்து வாசலில் காத்திருந்தும் கதவை அடைத்துக்கொண்டு கிடக்கிறீர்களே கதவைத் திறந்துவிடுங்களேன்! கணவனோடு கொண்ட ஊடல் பொய்க்கோபம் இதைமறந்து இப்படி உடல் வனப்பொழிய ஊடல் கொண்ட பெண்களே! கதவைத் திறங்களேன்! அடியெடுத்து நடைபயிலும் அழகிய பெண்களே, கதவைத் திறவுங்களேன்.

**கண்செய்த புண்ணுக்குக்**

**கனிவாய் மருந்தூட்டும்**

**மதுரமான மொழி பதற வாள்விழி**

**சிவப்ப வாய் இதழ் வெளுப்பவே**

**அதர பானம் மதுபானம் ஆக அறிவு**

**அழியும் மாதர் கடை திறமினோ!**

**தங்கு கண் வேல் செய்த புண்களைத்**

**தடமுலை வேது கொண்டு ஒற்றியும்**

**செங்கனி வாய் மருந்து ஊட்டுவீர்**

**செம்பொன் நெடுங்கடை திறமினோ!**

**பொரும் கண்வேல் இளைஞர் மார்பில் ஊடுருவி**

**புண்கள் தீரு இரு கொங்கையின்**

**கரும் கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு**

**கட்டும் மாதர் கடை திறமினோ!**

மதுபானம் உண்டது போன்ற மயக்கத்தை உண்டாக்க, அறிவு தடுமாறும் பெண்களே கதவைத் திறவுங்களேன்! கனிவாய் முத்தம் தந்து அவர் காதல் நோய்க்கும் மருந்தும் ஊட்டுவீர்! பெண்கள் நீங்கள்! பொன் வாசல் கதவைத் திறவுங்களேன். மெல்லிய இருகைகளாலும் கட்டித் தழுவிக்கொள்ளும் காரிகையீர்! கதவைத் திறவுங்களேன்.

**ஒடியும் இடை! ஒழிக நடை!**

**இடையின் நிலைஅரிது! இறும் இறும் எனஎழா**

**எமது புகலிடம் இனிஇலை என விழா**

**அடைய மதுகரம் எழுவது விழுவதாம்**

**அளக வனிதையர் அணிகடை திறமினோ!**

**உபயதனம் அசைவில் ஒடியும்இடை நடையை**

**ஒழியும் ஒழியும் என ஒண்சிலம்பு**

**அபயம் அபயம் என அலற நடைபயிலும்**

**அரிவையீர் கடைகள் திறமினோ!**

**பூவிரி மதுகரம் நுகரவும்**

**பொரு கயல் இருகரை புரளவும்**

**காவிரி எனவரும் நடநலீர்**

**கனக நெடுங்கடை திறமினோ!**

வண்டுகள் அமர்வதற்குரிய அழகிய கூந்தலையுடைய பெண்களே கதவைத் திறந்திடுங்களேன். கால்களில் அணிந்துள்ள சிலம்புகள் ஒலிக்க, நடக்கும் பெண்களே! கதவைத் திறந்து விடுங்களேன். ஆடி வரும் காவிரி ஆறு போலக் களிநடம் புரிய வரும் காதல் பெண்களே! கதவைத் திறவுங்களேன்!

**வெளுத்தது வாய், வியர்த்தது மதிமுகம்!**

**களபம் வண்டல் இடு கலச கொங்கைகளில்**

**மதி எழுந்து கனல் சொரியும் என்று**

**அளக பந்திமிசை அளிகள் பந்தர்இடும்**

**அரிவையீர் கடைகள் திறமினோ!**

**வாயின் சிவப்பை விழி வாங்க**

**மலர்க்கண் வெளுப்பை வாய் வாங்கத்**

**தோயம் கலவி அமுது அளிப்பீர்**

**துங்கக் கபாடம் திறமினோ!**

**கூடும் இளம்பிறையில் குறுவெயர் முத்து உருளக்**

**கொங்கை வடம்புரளச் செங்கழுநீர் அளகக்**

**காடு குலைந்து அலையக் கைவளை பூசல்இடக்**

**கலவி விடா மடவீர்! கடை திறமின் திறமின்!**

வண்டுகள் பந்தல் போடுவது போலச் சூழ்ந்த மொய்க்கும். இத்தகைய கூந்தலையுடைய பெண்களே கதவுகளைத் திறவுங்களேன்! கடல்போலக் கலவி இன்பம் நுகரும் மங்கையரே! துங்கக் கபாடம் வாயிலின் உயர்ந்த கதவுகளைத் திறவுங்களேன்! கைவளையல்கள் பூசலிட ஆரவாரம் செய்யவிடாது இன்பம் நுகரும் பெண்களே! கதவைத் திறவுங்கள்.

**வீண் கோபம் எதற்கு?**

**வீதக் கதவைத் திறவுங்கள்!**

**காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த**

**கலவி மடவீர் கழல் சென்னி**

**காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த**

**களப்போர் பாடத் திறமினோ!**

**இலங்கை எறிந்த கருணாகரன் தன்**

**இகல் வெம் சிலையின் வலி கேட்பீர்!**

**கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்**

**களப்போர் பாடத் திறமினோ!**

**பேணும் கொழுநர் பிழைகள் எலாம்**

**பிரிந்த பொழுது நினைந்து அவரைக்**

**காணும் பொழுது மறந்திருப்பீர்**

**கனப்பொன் கபாடம் திறமினோ!**

கலிங்கப்போர் வெற்றிச் சிறப்புகள் பற்றியெல்லாம் பாடப் போகிறேன் அதுகேட்க நீங்கள் கதவைத் திறந்துவிடுங்கள். கலிங்க நாட்டைப் போரிட்டு வென்ற சோழர் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் போர்க்களத்தில் நிகழ்த்திய வீரப்பெருமைகளைப் பாடக்கேட்பீர்! கதவைத் திறப்பீர்! பெண்களே! உங்கள் கோபம் தெரியாதா? வீணாய் எதற்கு வெறும் கோபம் வந்து கதவைத் திறவுங்கள்!

**நிலவும் நெருப்பாய்ச் சுடும் தனிமை**

**வாசம் ஆர்முலைகள் மார்பில் ஆடமது**

**மாலை தாழ்குழலில் வண்டு எழுந்து**

**ஊசல்ஆட விழி பூசல் ஆட உறவு**

**ஆடுவீர் கடைகள் திறமினோ!**

**நேயக் கலவி மயக்கத்தே**

**நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப**

**வாயைப் புதைக்கும் மட நல்லீர்**

**மணிப்பொன் கபாடம் திறமினோ!**

**பொங்கும் மதிக்கே தினம் நடுங்கிப்**

**புகுந்த அறையை சில அறை என்று**

**அங்கும் இருக்கப் பயப்படுவீர்**

**அம்பொன் கபாடம் திறமினோ!**

விழிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது போல ஆசைக் கணவனுடன் இன்ப உறவாடும் பெண்களே! கதவைத் திறவுங்கள். தனிமையில் தலைவி இன்பமாக பேசியதைக் கேட்ட கிளி, அதனை பலரும் அறியச் சொல்லத் தொடங்கியபோது அதன் வாயை அடைக்க ஓடும் பேதைப் பெண்களே! வாசல் கதவைத் திறவுங்கள்! கணவனின் நினைவும் பிரிவின் துயரும் பெரிதாகி வருத்த, அங்கேயும் தங்கியிருக்கப் பயப்படும் அபலைப் பெண்களே! அழகிய பொன்னிழைத்த கதவைத் திறவுங்களேன்!

**கதவு தேய்ந்தது காலும் ஓய்ந்தது**

**கணவர் வரவில்லையே!**

**வருவார் கொழுநர் எனத் திறந்தும்**

**வாரார் கொழுநர் என அடைத்தும்**

**திருகும் குடுமி விடி அளவும்**

**தேயும் கபாடம் திறமினோ!**

**ஊடுவீர் கொழுநர் தங்கள்பால் முனிவு**

**ஒழிந்து கூடுதலின் உங்களைத்**

**தேடுவீர் கடைகள் திறமினோ இனிய**

**தெரிவையீர்! கடைகள் திறமினோ!**

**பண்படு கிளவியை அமுது எனப்**

**பரவிய கொழுநனை செறிசெயக்**

**கண்கொடு கொலை செய அருளுவீர்**

**கனக நெடுங்கடை திறமினோ!**

கால் கடுக்க கண் விழித்துக் கவலைப்படும் பெண்களே! கணவனோடு வீணாகப் பொய்க்கோபம் கொண்டு, ஊடல் செய்வீர்! அதனை மறந்து பெண்களே கதவைத் திறவுங்கள்! கதவைத் திறவுங்களேன்! கண்காட்டும் காதல் பார்வையாலேயே

தலைவனை வாழ வைக்கவும் செய்வீர்! பெண்களே! ஏன் வீண் கோபம்! போய்க் கதவைத் திறவுங்கள்!

**கண்ணீர் மழை பொழியக்**

**கால்விரல் தரை கீற...!**

**பிழை நினைந்து உருகி அணைவுறா மகிழ்நர்**

**பிரிதல் அஞ்சி விடுகண்கள் நீர்**

**மழை ததும்ப விரல் தரையிலே எழுதும்**

**மடநலீர் கடைகள் திறமினோ!**

**நக்காஞ்சிக்கும் வட மலைக்கும்**

**நடுவில் வெளிக்கே வேடனை விட்டு**

**அக்கானகத்தே உயிர் பறிப்பீர்**

**அம்பொற்கபாடம் திறமினோ!**

**செக்கச் சிவந்த கழுநீரும்**

**செகத்தில் இளைஞர் ஆர்உயிரும்**

**ஒக்கச் செருகும் குழல் மடவீர்**

**உம்பொற் கபாடம் திறமினோ!**

கணவன், போர்நிமித்தம் பிரிந்து போய்விட்ட, கண்ணில் கண்ணீர் மழைபோல் பெருகி ஓட, கால் பெருவிரலால் தரையில் எழுதுவது போலக் கீறிக்கொண்டிருக்கும், காதல் இளம் பெண்களே! கதவைத் திறவுங்களேன்! ஆடவர் உயிரை அள்ளிக்கொள்ளுகிற கொல்லுகிற அழகிய பெண்களே! அழகிய பொன்பூண் பூட்டிய, வீதி வாசல் கதவுகளைத் திறவுங்களேன்! கூந்தலிலே பூவை மட்டுமா செருகுகிறீர்கள் இளைஞர்களின் உயிரையும் கூட அல்லவா சேர்த்து அள்ளிக் கூந்தலிலே செருகிக் கொள்கிறீர்கள்! கூந்தல் அழகிகளே! கண்வர்தான் வந்துவிட்டாரே! இன்னும் ஏன் தாமதம்? வந்து கதவைத் திறவுங்கள்.

# பகழிக்கூத்தர் - திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

**திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்:** இஃது திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் என விரியும். திருச்செந்தூர் ஆறுபடை வீடுகளில் ஒன்று. பிரபாகரன் மகன் சூரபன்மனை ஆறுமுகவடிவில் அமர்ந்து, உமையம்மை உதவிய சக்திவேல் கொடு அழித்தொழிந்த இடம், இது தலம், தீர்த்தம், மூர்த்தியாகி மூன்றாலும் சிறந்தது. இப்பிள்ளைத்தமிழ் பாடியவர் பகழிக்கூத்தர் என்பவர்.

**பகழிக்கூத்தர்:** இவர் சேதுமன்னர் அரசாட்சிக்குள்ளாகிய செம்பி நாட்டைச் சேர்ந்த சன்னாசிக் கிராமத்தில் பிறந்தவர். இது சதுர்வேத மங்கலம் என்றும் அழைக்கப்படும காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்துள்ளது. இவர் வைணவப் பார்ப்பன மரபினர். இவர் தந்தையார் தர்ப்பாதனர். இவர் வேதாகமங்களையுணர்ந்து மெய்ப்பொருளை யறிந்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கசடறக் கற்ற பெரும்புலவர். இவர் தமக்கு ஏற்பட்ட வயிறுவலிக் கொடுமை பொறுக்காலாற்றாது வருந்தினர். பின், தெய்வத்திருவருளால் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானைப் பாடித் தம் நோயைத் தீர்த்துக்கொள்வதாக உறுதிகொண்டு இப்பிள்ளைத்தமிழ் நூலைப் பாடி முடித்தனர். முருகன் அருளால் நோயும் நீங்கிற்று. திருச்செந்தூர் சென்று முருகனை வழிபட்டு அவர் சந்நிதியிலே, புலவர்கள், அடியார்கள், திரிசுதந்தரர்கள் குழுமியிருக்க அரங்கேற்றி மகிழ்ந்தனர்.

**பிள்ளைத்தமிழ்:** ஆண்பாலானால் ஆண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும், பெண்பாலானால் பெண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும் இனிய கொஞ்சு தமிழ்ச்சொற்களால் பாடுகின்ற நூலே பிள்ளைத்தமிழாகும். அவ்வகை வந்த பிள்ளைத்தமிழ் நூல்களுள் இத்திருச்செந்தூர் பிள்ளைத்தமிழும் ஒன்று. இது காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப் பருவம்,சிற்றிற் பருவம்,சிறுதேர்ப்பருவம் ஆகிய பருவங்களும் அமையப் பாடுவது.

## திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

சிறப்புப்பாயிரம்

நேரிசை வெண்பா

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக கவிசெய்தான் - அந்தோ
திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன்.

அவையடக்கம்

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்தர்
எத்தனையுங் கண்டுமகிழ் தெய்துவார் - முத்தி
புரக்குமரன் தந்தகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக்கவி

நூற்பயன்

மருநாள் மலர்ப்பொழில் உடுத்தகட மெங்கும் அலை
வாய்கொழித் தெறியுமுகத்தை
வண்டலிடும் எக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுளெங்

குருநாதன் ஒருதெய்வ யானை தன் பாகன்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறும்பறை முடிக்கும்பிரான்

இருநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமும்
எங்குமுட் டாதளக்கும்
இறைவிதிரு முலையமுத முண்டுஞா னம்பெருகும்
எம்பிரான் இனிய பிள்ளைத்

திருநாமம் எழுதுவார் கற்பார் படிப்பார்
செம்பொது அறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதத் தெய்துவாரே.

## 1. காப்புப்பருவம்

### திருமால்

1.பூமா திருக்கும் பசுங்களபப்
        புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
        புத்தேள் பரவப் பொதிகைமலைக்

கோமா முனிக்குந் தமிழுரைத்த
        குருதே சிகனைக் குரைகடற்குக்
குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற்
        குமரப் பெருமான் தனைக்காக்க

தேமா மலர்ப்பொற் செழும்பொகுட்டுச்
        செந்தா மரையில் வீற்றிருக்கும்
தேவைப் படைத்துப் படைக்குமுதல்
        சேரப் படைத்துப் படைக்கும்உயிர்

ஆமா றளவுக் களவாகி
        அனைத்துந் தழைக்கும் படிகருதி
அளிக்கும் படிக்குத் தனியேசங்
        காழி படைத்த பெருமாளே.

### சிவபெருமான்

2.உடல்வளை குழவி மதியமும் நதியும்
        உரகமும் ஒழுகு செஞ்சடைக் காட்டினர்
உமைமுலை குழைய மருவிய புனிதர்
        உரைகொடு பரவு தொண்டரைக் காத்தவர்
உமிழ்திரை மகர சலதியில் விளையும்
        உறுவிட வடவை கண்டமட் டேற்றினர்
உடைமணி கனக பரிபுர முரல
        ஒருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்
வடவரை முதுகு நெளிநெளி நெளிய
        வரிசிலை யெனவெர் அம்பினைக் கோத்தவர்
மறுவறு முழுவெண் நிலவெழு முறுவல்

வளரொளி இருள்வ ணங்கெடப் பூத்தவர்
மருவிய சகள வடிவினர் அரிய
வடகலை தமிழ்வ ளம்பெறச் சேர்ந்தவர்
மதுரையில் இறவைர் இரசத பொதுவர்
மணமலி பதயு கங்களைப் போற்றுதும்
இடவிய மதுர வரியளி குமுறி
இடறிய களப குங்குமத் தூட்பொதி
இமசலம் ஒழுகு கனதன விரகம்
எழுகுற வனிதை சிந்தையிற் சேர்ப்பனை
இடிபடு முரச முழவுடன் அதிர
எதிர்பொரு நிருதர் தம்படைப் போர்க்களம்
இடமற முதிய கழுதுகள் நடனம்
இடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய
கடதட வழுவை முகமுள கடவுள்
கருணையின் முதிய தம்பியைப் பார்ப்பதி
கரமலர் அணையில் விழிதுயில் மருவி
களிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில்
கடிகமழ் தருவின் இறைமகள் புதிய
கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய்
கலைமகள் பரவு குமரனை மதுர
கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே.

**உமையம்மை**

3.அரிபிரமர் சந்த தம்பு கழ்ந்திடு
பரசுடைய நம்பர் பங்கின் மென்கொடி
அகிலலோகமும் ஆதரத் தாற்ப டைத்தவன்
அரிவைமட மங்கை மென்க ணங்கழை
திரிபுரை அணங்கு கங்கை அம்பிகை
அகளமாய்அனு பூதியிற் பூத்த பொற்கொடி
அபினவை முகுந்தர் தங்கை சுந்தரி
உரகபண பந்திகொண்ட கங்கணி
அமுதமூறிய பாடலுக் கேற்ற சொற்குயில்
அறுசமய முங்க லந்து நின்றவன்
மறலிபர வும்பர சண்ட சங்கரி
அழகெலாமிது தானெனப் போற்று சித்திர

முரிபுருவ வஞ்சி திங்கள் திங்கிய
திருமுகம் லர்ந்த பைங்க ருங்கிளி
முதல்விபூரணி ஞானவித் தாய்க்கி ளைத்தவன்
முருகுவிரி கொந்த ளம்பி றங்கிய
மணிமவுலி மண்ட லங்கொள் செஞ்சடை
முடிமனோன்மணி வாலைவற் றாக்கு கணக்கடல்
முகில்மலை சுமந்து நொந்த சைந்திறும்
இருமென மருங்கி ரங்க இன்புறு
முறுவலாடிய கோமளத் தாற்பெ ருத்தவன்
முறைமுறை முழங்கு கின்ற கிண்கிணி
பரிபுரம் அலம்பு செம்ப தம்புரை
முளரிநாண்மலர் வாழ்வெனப் போற்றி நிற்குதும்
உரியபதி னெண்க ணங்க ளுஞ்சது
மறைமுனிவ ரும்ப ரிந்து நின்கழல்
உறுதிதானென நாவெடுத் தேத்தி நித்தலும்
உளமிக மகிழ்ந்து செங்க ரங்களின்
மலர்கொடு வணங்கி யஞ்சல் என்றமை
உடைமையாயருள் நீயெனக் காத்தக நட்பனை
உடுமுக டதிர்ந்து விண் தலங்களும்
அரியபகி ரண்ட மும்பி ளந்திட
உதறுதோசை மயூரனைத் தோற்ற முற்றெழும்
உபநிடத மந்த்ர தந்தி ரந்தனில்
அசபையி லடங்கும் ஐம்பு லன்களில்
உவகைகூறும் னேகரக் கூத்த னைப்பொரு
தரியலர் நெருங்கு செங்க ளம்புகு
நிசிசரர் துணிந்த வெம்ப றத்தலை
தழுவுபாடல் விசாகனைப் பாற்க டற்றரு
தரளநகை செங்க ருங்கண் இந்திரை
குறமகள் மணம்பு ணர்ந்த இந்திரை
சயிலமோகன மார்பனைத் தோட்டி தழ்ப்பொதி
தழைமுகை யுடைந்து விண்ட ரும்பிய
புதுநறவு சிந்து பைங்க டம்பணி
தருணசீதள வாகனைக் கோட்ட கத்துயர்
சரவண மிலங்க வந்த கந்தனை
முருகனை விளங்கு செந்தில் வந்திடு

சமரமோகன வேலனைக் காத்த ளிக்கவே.

**பிள்ளையார்**

4.கருணையின் வழிபடு முதியவன் தனையுயர்
கயிலையி னொருமுறை உய்த்த விதத்தினர்
கனவட கிரிமிசை குருகுல மரபினர்
கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர்
கலைமதி யினை இருபிளவு செய்த தொருபுடை
கதிழெ நிறுவிய ஒற்றை மருப்பினர்
கடுநுகர் பாமனை வலமுறை கொடுநிறை
கணிகவா விரகுள புத்தி மிகுத்தவர்

பொருவரும் இமகிரி மருவிய பிடிபெறு
பொருகளி றெனமிகு பொற்பு விளைத்தவர்
பொதிஅவிழ் நறுமர் அணைமிசை தமதுடல்
புளகம தெழவொரு சத்தி தரித்தவர்
பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு
பொலிவெழு பவளம தித்த நிறத்தினர்
புகர்முகம் உடையவர் குடவயி றுடையவர்
புகழிரு செவியில்நி றுத்தி வழுத்ததும்

இருமையும் உதவிய சிவபர சமயமும்
இமையவர் உலகும ளித்த களிப்பினை
இசைமுரல் மதுசுர முறைமுறை பெடையுடன்
இடறிய முகைவிரி செச்சை வனப்பினை
இளகிய புளகித மலைமுகிலை யாமகள்
இகலிய புலவிய சுற்று மழுப்பினை
இகல்புரி பாநிதி சரர்குல கலைகளை
எனைவழி யடிமையப டைத்திடு நட்பனை

அருமறை யுரைதரு பிரமனை அமரரும்
அடிதொழ விடுசிறை விட்ட திறத்தினை
அடியவர் கொடுவினை துகள்பட நடமிடும்
அழகிய சரணம் அளித்த வரத்தனை
அளவறு கல்வியின் முழுகிய குறமகள்

அழகினில் ஒழுகிய ருக்கு மயக்கனை
அலையெறி திருநகர் மருவிய குமரனை
அறுமுக முருகனை நித்தல் புரக்கவே.

**கலைமகள்**

5.அவனி பருகிய மால்திரு உந்தியில்
அமரு மொருபிர மாவெனும் அந்தணன்
அரிய சதுமறை நாவிலி ருந்தவள்
அளவில் பல்கலை யோதியு ணர்ந்தவன்
தவள முளரியில் வாழ்புபு ரிந்தவன்
தவள மணிவட மாலைபு ளைந்தள்
தவள வடிவுள் வாணிசு மங்கலி
தனது பரிபுர பாதம் இறைஞ்சுதும்
உவரி முதுதிடர் பாயவி டம்பொதி
உரகன் மணிமுடி தூள்பட மந்தரம்
உலைய எறிசுழல் மாருதம் எங்கணும்
உதறு சிறைமயில் வாகனன் இன்புறு
கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய
கமட முதுகினில் ஏறநெடு ந்திரை
கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை தருகவி மாலைவி ளங்கவே.

**அரிகரபுத்திரன்**

6.வரியு நீள்சடி லத்திடை மகுட ராசித ரித்தவர்
வளையு நீடுக ருப்புவில் மதுர வாளிதொ டுத்தவர்
அரிய பூரணை புட்கலை அரிவை மார்இரு பக்கமும்
அழகு கூரும கிழ்ச்சியர் அடிவி டாமல்வ முத்ததும்
உரிய நான்மறை நித்தலும் உறுதி யாவக ழுத்திய
உவமை யாசுக வித்துறை உதவு நாவலன் முற்றிய
பரிய வாளைகு தித்தெழு பரவை சூழுந கர்க்கிறை
பழநிவேல வனைப்புகழ் பனுவல் மாலைத ழைக்கவே.

**பகவதி**

7.விளையுஞ் செழுந்தேன் உடைந்துமுகை விண்டொழுகு
வெண்டா மரைப் பொருட்டு

வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியன்
வெங்கொலை மடங்கலேறி

வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கண்நெடு
மயிடாசு ரன்சிரத்தில்
வலியநடம் இடுகுமரி பகவதிச ரோருக
மலர்த்தாள் வணக்கமுறுவாம்

உளையுந் தடந்திரைத் திமிரதம ரக்குழி
உவர்ப்பறா மகரவேலை
ஒலியிடுங் குண்டகழி சுவறிமே டாகவேல்
உள்ளுறை கழித்துநிருதக்

களையுங் களைந்துகலன் அணிபுலோ மசைதன்மங்
கலநாண் அளித்தபெருமாள்
கடியமயில் வாகனப் பெருமாள் உவந்தென்பது
கவிமாலை கொண்டருளவே.

**காளி**

8.காயுங் கொடும்பகைத் தாருக விநாசனி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணிஎண் தோளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி

பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
பண்ணம் பணத்திமோடி
பரசுதரன் உடன்நடனம் இடுசூலி சாமுண்டி
பாதார விந்தநினைவாம்

ஆயும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி
அரியசித் திரகவிதைவித்
தாரகவி இடுமுடிப் புக்குள மயங்காமல்
அடியவர்க் கருள்குருபரன்

தேயும் பனிப்பிறைத் திருநுதற் கடல்மகளிர்

தெள்நித் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு
சேவகன் புகழ்பாடவே.

## ஆதித்தா்

9.வெள்ளப் பெருந்துளி இறைக்கும் பெருங்காற்று
வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி ஒற்றையா ழித்திடந் தேரேறி
வேதபா ரகா்இறைஞ்சப்

பள்ளக் கடல்திரை கலக்கியு ழியின்இருட்
படலமுழு துந்துடைத்துப்
படா்சுடா் விரித்துவரு பன்னிரு பதங்கா்பொற்
பாதமலா் சென்னிவைப்பாம்

உள்ளக் களிப்பறா வரிவண்டு பண்பாட
ஓதிம நடிக்கமுள்வாய்
உட்குடக் கூன்வலம் புரிமுத்தம் உமிழ்நீா்
ஓடையிற் குருகுகாணக்

கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக்
கடைசியா் நுறைச்சியருளங்
களிகூரும் அலைவாய் உகந்தவே லனையெங்கன்
கந்தனைக் காக்கவென்றே.

## முப்பத்து முக்கோடி தேவா்கள்

10.போதுவி லாடு மத்தற்கு நீடு
பொருளை யோதி ஒப்பித்த சிலா்
புணரி தோய்ந கா்க்குச்ச காயா்
புலமை நீதி யொப்பற்ற கேள்வா்

குதலை வாய்மொ ழிச்சத்தி பாலா்
குருதி பாய்க திா்க்கொற்ற வேலா்
குறவா் பாவை சொற்கத்தின் மோகா்
குமரா் காவ லுக்கொத்த காவல்

மதுர கீத விற்பத்தி வாணர்
மகுட வேணி முத்துத்த ரீகர்
மவுன போன பத்திக்க லாபர்
மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்

முதுமையான சொற்பெற்ற நாவர்
முனிவர் வேள்வி இச்சிக்கும் ஊணர்
முடிவிலாத கற்பத்தின் ஊழி
முதல்வர் தேவர் முப்பத்து மூவரே.

## 2. செங்கீரைப் பருவம்

1.வெங்காள கூடவிடம் ஒழுகுபற் பகுவாய்
விரித்துமா சுணம் உமிழ்ந்த
வெங்கதிர் மணிக்கற்றை ஊழியிரு ளைப்பருக
வேய்முத் துதிர்ந்து சொரியக்

கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர்
கடுப்பக் குறுங்க வைக்காற்
கவரியின் பருமுலைக் கண்திறந் தொழுகுபால்
கதிர்வெயிற் படமு ரிந்து

மங்காமல் இரசதத் தகடெனச் சுடர்விட
மலைக்குறவர் கண்டெடுத்து
வண்தினைக் கெருவிடுஞ் சாரலிற் கரியகுற
மகளிருளம் ஊச லாடச்

செங்காவி விழிபருகு பன்னிருகை மேகமே
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே.

2.கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற்
கட்செவிப் ப.்.ற லைநெடுங்
காகோ தரச்சிர நெளிக்கவட பூதரங்
கால்சாய மகரம் எறியுந்

துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ்
சுறுக்கெழ முறுக்கெ யிற்றுச்
சூரன் பயங்கொளச் சந்த்ரரு ரியர்கள்செந்
தூளியின் மறைந்தி டத்திண்

பொறைகொண்ட சுர்மருவும் அண்டகோ ளகைமுகடு
பொதிரெறிய நிருதர் உட்கப்
பூச்சக்கர வாளகிரி கிடுகிடென வச்சிரப்
புருகூதன் வெருவி வேண்டுந்

திறைகொண்ட ளக்கவரு மயிலேறு சேவகா
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை பாடி யருளே.

3.ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலைகீழ் விழின்ப றவையாம்
இதுநிற்க நீர்விழின் கயலாமி தன்றறியோர்
இலையங்கு மிங்கு மாகப்

பார்கொண்ட பாதியும் பறவைதா னாகஅப்
பாதியுஞ் சேலதாகப்
பார்பொண் டிழுக்கஅது நீர்கொண் டிழுக்கவிப்
படிகண்ட ததிச யமென

நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நேடும்பூதம் அதுகொண் டுபோய்
நீள்வரை யெடுத்ததன் கீழ்வைக்கும் அதுகண்டு
நீதிநூல் மங்கா மலே

சீர்கொண்ட நக்கீர னைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடி யருளே

திரையேறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே.

4.கந்தமலி யெட்டிதழக் குறுமுகைப் பாசடைக்
கமலமல ரைக்க றித்துக்
கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தன்குழக்
கன்றுக் கிரங்கி யோடிக்

கொந்தவிழ் கருங்குவளை ஒடைத் தடாகக்
குரம்பைக் கடந்து செந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்து மீளப்

பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலாம் இடறி வெள்ளைப்
பணிலஞ் செரிந்தநித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலு டைந்து

சிந்தமக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

5.வீறாட வெங்கதிர்ப் புகர்முகக் கூரிலே
மிகுத்தவே லுறை கழித்து
வெவ்வாய் பிளந்துசிறு கட்பேர் இடாகினிகள்
விளையாட வெங்க வந்த

மாறாட முதுபகட் டுயர்பிடர்க் கரியநிற
மறலிஇரு கைச லித்து
மன்றாட உடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு
மாகநக டிடைவெ ளியறப்

பாறாட அம்பொற் கிரீடம் பரித்தலகை
பந்தாட விந்தா டவிப்
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம்
பசுங்கொழுங் குருதி வெள்ளச்

சேறாட வென்றுசிறு முறுவலா டுங்குமா
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

6.மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி
வைத்தமணி முத்துமாலை
வடபூ தரத்தில்விழும் அருவியென உத்தரிக
மார்பிலூ டாட மன்னுந்

தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத்
தமனியச் சுட்டி ஆடத்
தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத்
தரளவெயர் வாட முழுதும்

பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமு லைப்பால்
பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டையும்
பாதமும் புழுதி யாடச்

சிகரவரை அரமகளிர் சிறுமுறுவ லாடநீ
செங்கீரை யாடி யருளே.
செந்நிறக் குடுமிவெண் சேவற பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

**வேறு**

7.இந்திர னாஞ்சசி யும்பா வும்படி
யிங்கே வந்தார்காண்
இந்திரை யுங்கர சங்கமு குந்தனும்
இந்தா வந்தார் பார்

அந்தண னுங்கலை மங்கையு நின்சர
ணஞ்சேர் கிவிறார்போய்
அண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தனர்
அஞ்சே லென்றாளாய்

முந்துத டந்திசை யுந்துவ லம்புரி
மொண்டே கொண்டேக
முன்றில்தொ றுந்தா ளங்கள் உமிழ்ந்திட
முந்தூர் நந்தூருஞ்

செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக
செங்கோ செங்கீரை
தென்றலம மணங்கமழ் குன்றுபு ரந்தவ
செங்கோ செங்கீரை

8.வரைபொரு புளகித மலைமுலை அரிவையர்
வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவநணி வடமது
வண்டார் தண் தார்பார்

உரைபொரு கவிஞரு முனிவரும் அமரரும்
உண்போ லுண்டோதான்
உரையெமர் வழிவழி யடிமையி துளதென்
உன்பா லன்பானார்

கரைபொரு கடறிட ரெழமயில் மிசைவரு
கந்தா செந்தூரா
கழிமட அனமொடு முதுகுரு கொருபுடை
கண்சாய் தண்கானல்

திரைபொரு திருநகர் மருவிய குருபா
செங்கோ செங்கீரை

செருவினில் எதிர்பொரு நிசிசரர் தினகர
செங்கோ செங்கீரை.

**வேறு**

9.உரைசெய் வரையர மகளிர் முறைமுறை
உன்பேர் கொண்டாட

உலகும் இமையவர் உலகும் அரசுர
உய்ந்தோம் என்றாட

வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும்
வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ
வந்தார் கண்டாயே

கரையின் மணலிடு கழியில் நெடியக
லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபனை அடியில் வலைஞர்க
ணஞ்சூழ் மென்கானில்

திரையில் வளைதவழ நகரில் வருகுக
செங்கோ செங்கீரை
செருவில் நிசிசர திமிர தினகர
செங்கோ செங்கீரை.

**வேறு**

10.குறுமுகை விண்ட நெட்டிலைத் தாழை
அடியில்வி ளைந்த முட்குடக் காயில்
இனிய குவளை யோடையில் விண்தோ யுந்தேவர்
குணலைபு ரிந்த கற்பகச் சோலை

நிழலிடு பந்த ரிட்ட பொற்றூணில்
அளவர் குடிலில் வாசலில் நின்றேடுந் தோணி
குழுவொடு வந்து விட்டிளைப் பாறு
துறைமணல் வண்ட லிட்டுவற் றாத

பழைய குமிழி வாவியில் வண்டா னந்தாவுங்
குரவுநெ ருங்கும் எக்கரிற் கானல்
உழுநர்ப ரம்பின் நெற்குலைத் தாளில்
இளைய குமரர் ஊர்சிறு திண்டேர் மென்காவில்

இறுகுகு ரும்பை யொத்தபொற் பார
நகலரி ருந்து வைத்தவைப் பூசல்
அருகில் இளைஞர் ஊடலில் வண்டார் தண்டாரில்
எவரும கிழ்ந்த சித்திரச் சாலை

நிழன்மணி துன்று தெற்றியில் தேவர்
மகுடம் இடறு பூமியில் வங்கா ளஞ்சீனம்
எனமொழி தங்கும் அற்புதத் தீவில்
வணிகரின் வந்த மிக்கபட் டாடை

வகையி லெறியும் ஆரவ டம்பூ ணும்பூணில்
இரைகவர் ஞெண்டு முக்குளித் தூறும்
அளறுகி டங்கில் வித்துவித் தாரத்
துரவில் இடுமுள் வேலியில் வெங்கா மன்காண

முறுகவி ஊந்து முற்றி முத்தேறு
கரியக ரும்பு சுற்றுசிற் றாலை
நிலையின் முதிய தாழியில் வெந்தா றும்பாகின்
முடியைவி ளம்பி வைத்துமுட் டாது

கடைசிதரு கின்ற கட்குடப் பானை
முதுகின் முளைகொள் சாலியின் மென்பூ
முதுகுது ளும்பு கொத்துடைப் பாளை
சிதறியு திர்ந்த பித்திசைப் பீட

மறுகின் முதல்வர் தேவியர் பந்தாடுங் காவின்
முனிவர்வி ரும்பு கற்புடைப் பான்மை
மகளிர்கள் மொண்டே டுத்தகைச் சாலின்
மடுவில்முழுகு மேதியில்வம்பே செஞ்சேல்பாய்

செறுவில்வி ளைந்த நெற்குலைக் காயில்
உழவிலு டைந்த கட்டியிற் பார
மதகு செறியும் ஏரியின் மண்டு கம்பனால்
செருமிகு ழங்கு கற்பிளப் பான
புடையின்வி ழும்பு னற்பெருக் கான

தமர திமிர வாவியி லெங்கே யுந்தாவுந்
திரையில் வலம்பு ரிக்கணத் தோடு
பணிலமு ழங்கு பட்டினக் காவல்
திகிரி முருக வேலக செங்கோ செங்கீரை
தினகரர் அஞ்ச விட்புலத் தேவர்
மகபதி முன்கு வித்த வித்தார
மவுலி திறைகொள் சேவக செங்கோ செங்கீரை

## 3. தாலப்பருவம்

1.அடரும் பருநவ மணிமுடி அமரரும்
அமரர்க் கிறைவனுநீ
டளகைந ராதியும் ஈரோன் பதின்மரும்
அருமறை முனிவோருஞ்

சுடருந் தருமிரு சுடரும் பரவிய
தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளும் அவரவர் தங்குறை
சொல்லித் துதிசெய்தார்

படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர்
பாயும் பகிரண்டம்
பழுமரம் என்னப் பனையென நிமிரும்
பாழிக் கைந்நீட்டித்

தடவும் புகர்முக தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்நிற் பதியாய்
தாலோ தாலேலோ

2.கங்குல் பொருந்திய குவளைக் குழியில்
கழியில் பழனத்தில்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த
கவைக்கால் வரிஅலவன்

பொங்கு குறுந்துளி வாடையின் நொந்து
        பொறாதே வெயில் காயும்
புளினத் திடரில் கவரில் துரவில்
        புன்னை நறுந்தாதில்

கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
        குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக்கா யில்புயல்
        கொழுதுளு செய்குன்றிற்

சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
        தாலோ தாலேலோ
சமய விரோதிகள் திமிர திவாகர
        தாலோ தாலேலோ.

**வேறு**

3.தண்தே னொழுகு மொழிடவார்
        தாமங் கொளுதிச் சுருண்டிருண்டு
தமரக் களிவண் டடைகிடந்து
        தழைத்து நெறித்த குழற்பாரங்

கொண்டே மெலிந்த தல்லாது
        குரும்பைக் களப முலைசுமந்து
கொடிபோல் மருங்குல் குடிவாங்கக்
        குழையிற குதித்த விழிக்கயலைக்

கண்டே வெருவிக் கயல்மறுகக்
        கனக வெயில்மா ளிகையுடுத்துக்
ககனம் தடவுங் கோபுரத்தைக்
        கருதி வடவெற் பெனக்கதிரோன்

திண்தேர் மறுகுந் திருச்செந்தூர்ச்
        செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
        சிறுவா தாலே தாலேலோ.

4.பாம்பால் உததி தனைக்கடைந்து

படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்

பரிய வரையைக் குடைகவித்துப்

பசுக்கள் வெருவிப் பதறாமற்

காம்பால் இசையின் தொனியழைத்துக்

கதறுந் தமரக் காளிந்திக்

கரையில் கிரைப்பின் னேகடந்த

கண்ணன் மருகா முகையுடைக்கும்

பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்

புனிற்றுக்கவரி முலைநெரித்துப்

பொழியும் அமுதந் தனைக்கண்டு

புனலைப் பிரித்துப் பெட்டெனகினந்

தீம்பால் பருகுந் திருச்செந்தூர்

செல்வா தாலே தாலேலோ

தெய்வக் களிற்நை மணம் புணர்ந்த

சிறுவா தாலே தாலேலோ.

**வேறு**

5.மங்கல மங்கலநூல் எங்குமொ ழிந்தனர்காண்

வானோர் ஏனோர்போய்

வந்துவ ணங்கினர்மேல் அந்தா துந்திபிகேள்

வாரு டாடாதே

கொங்கை மந்திடைநு லஞ்சும் அணைங்கனையார்

கூடா கூடாரோ

கொண்டவ ரந்தருவாய் அண்டர்பெ ருந்தவமே

கோமான் ஆமாநீ

செங்கம லந்தன்னிலே பைங்குமு தங்களிலே

சேல்பாய் வானாடா

தென்றலு டன்றமிழ்தேர் தென்பொதி யம்பயில்

தேனார் தார்மார்ப

சங்குவ லம்புரிசூழ் செந்தில்வ ளம்பதியாய்

தாலோ தாலேலோ

சங்கரி தனகுமரா மங்கையர் தங்கணவா

தாலோ தாலேலோ.

**வேறு**

6.மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்

வாகாய வாடாதோ

மதிமுக முகுந் தணிதுணி தாவே

வார்வேர் சோராதோ

கரமலர் அணைதந் தின்புறு மடவார்

காணா தேபோமோ

கனமணி குலவுங் குண்டலம் அரைஞா

ணேடே போனால்வார்

பொருமிய முலையுந் தந்திட வுடனே

தாய்மார் தேடாரோ

புரவலர் எவருங் கண்டடி தொழுவார்

போதாய் போதாநீள்

சரவண மருவுந் தண்டமிழ் முருகா

தாலோ தாலேலோ

சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்

தாலோ தாலேலோ.

**வேறு**

7.கூருமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா

கூறுமியல் பார்த்துண் மேலே யாரார் பாடாதார்

மேருவரை நாட்டு வாழ்வார் வானா டாளவார்போல்

வேளையென மீட்டுன் மேலே வீழ்வார் சூழ்வார்பார்

ஆருமிரை பார்த்து நீளநீ ரூடே தாராமே
யானகழி நீக்கி மேலே நாவா யோடேசேல்

சேருமலை வாய்க்கு நாதா தாலே தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ.

**வேறு**

8.அரைவடமுந் தண்டையும் மின்புரை யரைமணியுஞ்
கிண்கிணி யுங்கல னணியு மாறா வீறார்சீர்
அறுமுகமுந் தொங்கல் சுமந்தபன் னிருகரமும்
குண்டல முங்குழை யழகும் ஆரார் பாராதார்

விரைபொரு மென்குஞ்சி அலம்பிய புழுதியுமங்
கங்குழை பண்டியு மேலியு மேலே வீழ்வார்பார்
வெகுவி தமுங்கொண்டு தவழ்ந்திடில் அவரவர்தம்
கண்கள் படும்பிழை விளையு மேதே னேகாதே

வரைமணியுந் தங்கமும் ஒன்றிய கனபரியங்
கந்தனில் இன்றுகண் வளர வாராய் வாழ்வேநீ
மணிநகையுங் கொண்டு துயின்றிலை விரலமுதல்
கொண்டுகி டந்தனை மதுரமாய்நீ பேசாயோ

திரைபொருதென் செந்தில் வளம்பதி வளரவருங்
கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ
திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையும் இறைஞ்
சும்பரை அம்பிகை சிறுவா தாலே தாலேலோ

**வேறு**

9.அரவுசிறு பிழைஇதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதேர்
அருணவெயில் இரவிசுழல் இமகிரியில் அரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே

குரவருள மகிழஉர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா

குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியுவரை
கூறாய் மாறாதே

இரவலரும் முனிவர்களும் இமையவரும் உனதடிமை
ஆமே ஆமேநீ
எமைமுனியில் ஒருதுணையும் இலையடிமை யடிமை
வீழ்வார் சூழ்வார்பார்

பரசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலம்உமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ.

**வேறு**

10.பங்கயன் முதலோர் இந்திரன் இமையோர்
பாரோர் ஏனோர்பார்
பண்புடன் உனையே சிந்தையின் இனைவார்
பால்நீ மால்கூறாய

வெங்கட கரிசூ ழெண்திசை நிறைவார்
விணாள் காணாதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிமேல்
வேய்வார் வீறாலே

செங்கனி மணிவாய் தங்கிய நகைதா
தேவா சீறாதே
திண்திறல் முருகா தண்டமிழ் விரகா
சேரார் போரேறே

சங்கரி மருகா சங்கரி சிறுவா
தாலோ தாலேலோ
சந்ததம் இயல்தேர் செந்திலை உடையாய்
தாலோ தாலேலோ.

## 3. சப்பாணிப் பருவம்

1.பரவரிய நவமணி அழுத்துகல னுக்கழகு
பாலித்து வீறு பெற்ற
பன்னிரு புயங்குலுங் கால்நீள் குழைதொறும்
பருவயிர குண்ட லங்கள்

இரவியொளி மட்கநின் றசையாமல் அமுதொழுகு
இந்துமுக மண்ட லத்தில்
எழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர்
விறைக்கச் சிதைந்தி டாமல்

கரகமல மலர்விரல் சிவப்பறா மல்கடக
கங்கணம் ஒலித்தி டாமல்
கழிவண் டலம்புங் குருங்குவளை ஓடைசூழ்
கழிதொறுங் கானல் தோறுந்

தரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே.

2.அண்டர் தந் துயரொழித் தன்மென்று கொண்டாடி
ஆவலங் கொட்ட மன்னும்
அயிராணி கலவியமு துண்டனம் எனத் தேவர்
அரசிரு கரங்கள் கொட்டத்

துண்டவெண் பிறைபுரை எயிற்றுவெஞ் சூருளந்
துண்ணெனப் பறைகொட்ட டநீள்
சுருதியந் தணர்இடந் தொறுமங் கலப்பெருந்
தூரியங் கொட்ட மூட்டப்

பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட் டவெம்

பகைநிசா சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
        பறைகொட்ட வெள்வளை தருந்

தண்தரள மலைமொண்டு கொட்டுநக ராதிபா
        சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
        சப்பாணி கொட்டி யருளே.

3.பௌவமேறி கடலாடை உலகிலொரு வேடுவன்
        பறவைக்கு நிறைபு குந்த
பார்த்திவன் பாவையும் இயற்குலச் சிறையும்
        பணித்தருள் மதுரை புக்குந்

தெவ்வரிடு திருமடத் தெரிசேழிய னுடலுறச்
        சென்றுபற் றலும் எவர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனுந்
        திருத்தியொரு வாது வென்று

வெவ்வழலில் எழுதியிடும் ஏடும் பெருக்காற்று
        விட்டதமி ழேடும் ஒக்க
வேகாம லெதிலே குடக்கேற்ற வெங்கழுவில்
        வெய்யசமண் மூகர் ஏறச்

சைவநெறி ஈடேற வருகவுணி யக்குழவி
        சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
        சப்பாணி கொட்டி யருளே.

4.பைந்தாள தழைச்சிறைக் கானவா ரணமருவு
        பந்தரிடு முல்லை வேலி
பாயுமட் பணைமருப் பேறுதமு வியுமுடைப்
        பாலறா மேனி மடவார்

கொந்தார் குரும்பை இள வனமுலை முகக்கோடு
        குத்தக் குருந்தொ சித்துங்

குறுங்கழைத் துண்டந் தணில்சிறு துளைக்கருவி
குன்றுருக நின்ற ழைக்குஞ்

செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் துஞ்சுருதி
தெரியவிரல் முறையில் விட்டுத்
தேனுவின் பிறகே திரிந்துங் கவுட்குழி
திறந்துமத மாரி சிந்துந்

தந்தா வளந்தனக் குதவுதிரு மால்மருக
சப்பாணி கொட்டி யருளே
தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே.

5.கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுகி
கற்பிக்கு மந்த்ர சாலை
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை
கட்டவளர் நந்தன வனஞ்

சீர்கொண்ட புருகூத னுந்தேவர் குழுவுநின்
திருநாம மறவாத பேர்
சிகரகன காசலமும் உன்துதிரு வாபரண
சேர்வைசேர் பேழை கடல்நீர்

பேர்கொண்ட வேலின் புலால்கழிவு நீரேழு
பொழிலுமத் தனைதீ வுமோர்
பொலிவுனுட னேநின் கலாபமயில் வையாளி
போய்மீளும் வீதி யெனவே

தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடி வேலனே
சப்பாணி கொட்டி யருளே
தாளமெறி கரையில்வளை தவழசெந்தில் வேலவா
சப்பாணி கொட்டிய யருளே.

6.கவளமத வெற்புநிலை உலகுபர வபரபைகொள்
கைத்தா மரைக் கடகபூண்

கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை
கட்டாணி முத்தொ ளிரவே.

பவளஇதழ் புத்தமுதம் ஒழுகும் தலைக்குதலை
பற்பாதி சொற்றெ ரியவே
பரிபுரம் ஒலிக்கவரு குறுநகை யெழுப்பியிடு
பைச்சேடன் உச்சி குழிபாய்

உவளகம் அனைத்தின வரிவளை முழக்கவெடி
யுற்றேபெ ருத்த கயல்போய்
ஒருபுடை குதிக்கவரி யலவனனை யிற்புகுத
உப்பூறு நெட்ட கழிதோய்

தவளமணி முத்தையலை எறியுநக ருக்கதிப
சப்பாணி கொட்டி யருளே
சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக
சப்பாணி கொட்டி யருளே

**வேறு**

8.கருதிய தமனிய மணியரை வடமிடு
கட்டுவ டத்தோடுங்
கழலிடு பரிபுரம் ஒலியெழ மணியுமிழ்
கைக்கட கப்பூணும்

இருசுட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
எழுமதி புரைதிரு முகமலர் குறுவெயர்
இட்டுவ ரத்தாமஞ்

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றாழத்

தொழுதுனை வழிபடும் அடியவர் இளையவர்
சொற்படி தப்பாமற்

குருமணி யிலைநெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி.

**வேறு**

8.வரைபுரை புயமிசை இடுதொடி அணிகலன்
மற்றுள முத்தார
மணிமுடி குழையிடும் இருசிகை யழகெழ
மைக்குவ ளைப்போதின்

விரைசெறி குழலியர் செவிலியர் அவரவர்
மிக்கவி ருப்பானார்
வீபுதரு முனிவரும் உனதடி பரவியுன்
வெற்றியு ரைப்பார்சீர்

அரைமணி யுடைமணி கணகண கணவென
அத்திமு கந்தோனும்
அரிபிர முனுமுமை கணவனும் மனமகிழ்
அற்புவி ளைத்தார்பார்

சூரைகடல் அலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி

**வேறு**

9.கந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள
கற்பா யெனச்சுருதி நூல்
கண்டித் துரைந்திடவும் இந்தக் கரத்திலுள்ள
கற்பா லுரைத்தி யெனவே

அந்தப் பொருட்பருதி அந்தத் தினைப்பகரும்
அப்போ வெறுத்து முனிவாய்
அஞ்சத் திருக்குமயன் அஞ்சச் சிறைக்குளிடும்
அப்பா சிறக்கும் அமலா

பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமலர்
        பற்றாக நிற்கு முதல்வா
பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி
        பற்றாசை யுற்று மிகவாழ்

கந்தப் பொறுப்பிறைவ செந்நிற் பதிக்குமா
        சப்பாணி கொட்டி யருளே
சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமா
        சப்பாணி கொட்டி யருளே.

10.முதுமொழி நினைவுதெ ரிந்த நாவலர்
        முட்டா துனைப்பு கழவெ
முளரியில் மருவியி ருந்த நான்முகன்
        முக்கா லுமிச்சை சொலவே

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர்
        பொற்றா வினைப்ப ரவுவே
புகலரும் இசைதெரி தும்பு ராதியர்
        பக்கா தரித்து வரவே

மதுகரம் இடறிய தொங்கல் மாலிகை
        மற்பூர ரத்த சையவே
மணியொளி வயிரம் அலம்பு தோள்வளை
        மட்டாய் நெருக்கம் உறவே

சதுமறை முனிவர்கள் தங்கள் நாயக
        சப்பாணி கொட்டி யருளே
சரவண பவகுக செந்தில் வேலவ
        சப்பாணி கொட்டி யருளே.

**5. முத்தப் பருவம்**

1.கந்துந் தரங்கம் எடுத்தெறியக்
        கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்

கான்ற மணிக்கு விலையுண்டு

தத்துங் காட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தாளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலைஇல்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

2.வளைக்குந் தமரக் கருங்கடலின்
வளைவாய் உகுத்த மணிமுத்துன்
வடிவேற் கறைபட் டுடல்கறுத்து
மாசு படைத்த மணிமுத்தம்

துளைக்குங் கழையிற் பருமுத்தம்
துளபத் தொடைமால் இதழ்பருகத்
தூற்றும் திவலை தெறித்தமுத்தம்
சுரக்கும் புயலிற் சொரிமுத்தம்

முளைக்குங் குமுதக் கனிவாயான்
முருகா முத்தந் தருகவே

முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

3.கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங்
கடவுள் உடலின் விளைபோகங்
கனலி கரத்தில் அளிக்க அந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்

மலைப்பால் விளங்குஞ் சரவணத்தில்
வந்து புகுத ஓராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்தர் அறுவர்ப் பயந்தெடுப்பக்

கொலைப்பால் விளங்கும் பரசுதான்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி அணைத்துச் சேரவொரு
கோலம் ஆக்கிக் கவுரிதிரு

முலைப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தம் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தம் தருகவே.

4.கத்துங் கடலில் நெடும் படவில்
கழியில் சுழியில் கழுநீரில்
கானற் கரையில் கரைதிகழுங்
கைதைப் பொதும்பில் சுரும்பினங்கள்

தத்துங் கமலப் பசும்பொகுட்டிற்
சாலிக் குலையில் சாலடியில்
தழைக்குங் கதலி அடிமடலில்
தழைவைத் துழுத முதுகுரம்பைக்

குத்துந் தரங்கப் புனற்சுவரில்
குவளைத் தடத்தின் மடைவாயில்
குடக்கூன் சிறுமுட் ணிலமொரு
கோடி கோடி யிற்றுளைந்து

முத்தஞ் சொரியுங் கடலலைவாய்

முருகா முத்தந் தருகவே

மொழியஞ் சமயம் அனைத்தினுக்கு

முதல்வா முத்தந் தருகவே

5.வயலும் செறிந்த கதலிவன

மாடம் செறிந்த கதலிவன

மலர்க்கா வெங்குந் தேனினரை

மாலை தொறுந் தேனினரை

புயலுஞ் செறிந்த ககைவெயிற்

புடையே பரந்த கனகவெயில்

பொதும்பர் தோறு மோதியமென்

புளினந் தோறு மோதிமஞ்செங்

கயலுஞ் செறிந்த கட்கடையார்

கலவி தரும்போர் கட்கடையா

கருணை புரியும் அடியாருள்

காதல் புரியும் அடியாச்சீர்

முயலும் படிவாழ் திருச்செந்தூர்

முருகா முத்தந் தருகவே

மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு

முதல்வா முத்தந் தருகவே

6.தொழுதுந் துதித்துந் துயரகற்றிச்

சுரருக் கிறையுஞ் சுரருமுடன்

சூழ்ந்த கடம்பா டவியிலுறை

சொக்கக் கடவுள் தனைமூன்று

பொழுதும் பரவி எழுத்துச்சொற்

போலப் பொருளும் புகறியெனப்

புகலு மாறஞ் சிரட்டிதிணைப்

பொருட்சூத் திரத்தின் பொருள்மயங்கா

தெழுதும் பனுவற் பாணன்முதல்
ஏழேழ் பெருமைக் கவிப்புலவர்
இதயங் களிக்க விருப்பமுடன்
இறையோன் பொருட்டுப் பொருள்விரித்து

முழுதும் பகர்ந்த கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே

**வேறு**

7.கடுக டைச்சிந் துரம ருப்பின்
கதிர்கொள் முத்துஞ் சரவைநீள்
கடல ளிக்கும் பணில முத்தும்
கழையின் முத்தும் காடுவான்

உடுமு கட்டம் புயல்க ருக்கொண்
டுமிழு முத்தம் கருகல்தேன்
ஒழுகு பொற்பங் கயம டல்தந்
தொளிரு முத்தந் திருகல்காண்

படுக ரைக்குண் டகழி நத்தின்
பரிய முத்தந் தெரியவே
பாவை யெற்றுந் திரைகொ ழிக்கும்
படியில் முத்தஞ் சிறுமகார்

கொடுப ரப்பும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே.

8.பருவ முற்றுங் குடவ யிற்றெண்
பணிலம் மொய்க்குந் துறையெலாம்
பரும ரட்செங் கயல்கு திக்கும்
பலப டத்தெண் திரைமுநீர்

பொருது குத்துந் திடரனைத்தும்
புறவு மொய்க்கும் புறவுசேர்
புளின வெற்பெங் கணுநி ரைக்கும்
புளின மொய்க்கும் குவளைவாய்

அரும டற்கண் டினமே னச்சென்
றளிகள் மொய்க்கும் புதியசூல்
அலவன் மொய்க்குங் குழிவ ழிச்சென்
றலைகொ ழிக்குங் கரையெலாங்

குருகு மொய்க்கும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே.

9.பையரவின் உச்சிகுழி யப்பொருங் குண்டகட்
படுகடற் பணில முத்தம்
பார்வையா ணுஞ்சிறிது பாரோம் இதன்றிப்
பசுங்கழை வெடித்த முத்தஞ்

செய்யுந் தையினுமிது வேணுமென் றொருபொழுது
சிந்தியோ முத்தி வட்டத்
திரைமுழங் கக்கொழுந் திங்கள்ட் டக்குடைச்
செழுநிழற் சம்ப ராரி

எய்யுமலர் வாளியை எடுத்துத் தெரிந்து நாண்
இறுகப் பிணித்த வல்வில்

ஈன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றணுகோம்
இதழ்க் கமல முகையு டைக்குந்

துய்யமணி முத்தந் தனைத்தொடேம் உன்னுடைய
துகிரில்விளை முத்த மருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயனது
துகிரில்விளை முத்த மருளே.

10.இறுகல்கரு குதல்முரிவி லட்சுமி புடாயமுள்
ளேறல்புகை யேறல் செம்மண்
ஏறல்வெச் சந்திருகல் மத்தகக் குழிவன்றி
இரவியொளி யிற்க ரத்தல்

மறுவ்று தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளைக விர்ப்பூ
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகைய ளிப்பேர்

முறுகல்வளி யேறல்கல் வேறல்சிப் பிப்பித்து
முரிதல்திரு குதல்சிவப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
மூரிகுதை வடிவொ துக்கல்
துறுமுகுங் கக்கலொளி மட்கல்கா டென்னாத
துகிரில்விளை முத்தம் அருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தம் அருளே.

11.கோதிவரி வண்டுமது உண்டுகுடி கொள்ளுமென்
குழலுக் குடைந்து விண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குருந்துளியின் நித்திலக்
கோவையொரு கால்வி ரும்பேம்
காதிலுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங்
கண்ணுக்குடைந்து தொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்தரள மென்னிலொரு
காலமுங் கருதி நயவேம்
போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம்
பொருந்துமெங் கந்தரத்தைப்
பொருவுறா வேள்வலம் புரியாரம் இன்புறேம்
பொற்றேள் தனக்கு டைந்த
சோதிவேய் முத்தந் தனைத்தொடேம் நின்னுடைய
துகிரில்விளை முத்தம் அருளே

தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்வினை முத்தம் அருளே.

### 6. வாரானைப் பருவம்

1.மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச் செந்நெல்

சேரிக் கருங்கை மள்ளர்குயந்
தீட்டி அரிந்த கொத்தினுக்குத்
தெண்முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோய் அவர் குவிப்ப

வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்கள் ஈற்றுளைந்து
மேட்டில் உகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென

வாரிக் குவிக்கும் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

2.புள்ளி மரிந்த கதிர்ச்செந்நெற்
போரிற் பகடு தனைநெருங்கப்
பூட்டி அடித்து வைகளைந்து
போகக் குவித்த போலிக்குவையை

விள்ள அரிய குடகாற்று
வீசப் பதடி தனைநீக்கி
வெள்ளிக் கிரீபோற் கனகவட
மேரு கிரிபோல் மிகத்தூற்றிக்

கள்ளம் எறியுங் கருங்கடைக்கட்
கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய அம்முத்தைக்
கண்டுகுடித்த கட்குவிலை

மள்ளர் அளக்குந்த திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

.தேட அரிய மணியரைஞாண்
சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலதநுதல்
தீட்ட வருக மறுகில்விளை

யாட வருக மடியிலெடுத்
தணைக்க வருக புதுப்பனிநீர்
ஆட்ட வருக நெறித்தமுலை
அமுதம் பருகவருக முத்தஞ்

சூட வருக உடற்புழுதி
துடைக்க வருக ஒருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை
தோன்ற வருக சோதிமணி

மாட நெருங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவர் வருகவே.

4.இறுகும் அரைஞாண் இனிப்பூட்டேன்
இலங்கு மகா குண்டலத்தை
யெடுத்துக் குழையின் மீதணியேன்
இனியுன் முகத்துக் கேற்கஒரு
சிறுகுந் திலதந் தனைத்தீட்டேன்

திருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சீறடிக்குச்
சிலம்பு திருத்தேன் நெறித்துவிம்மி
முறுகு முலைப்பால் இனி தூட்டேன்
முகம்பார்த் திருந்து மொழிபகரேன்
முருவா வருக சிவசமய
முதல்வா வருக திரைகொழித்து
மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

5.எள்ளத் தனைவந் துறுபசிக்கும்
இரங்கிப் பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது

துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ

மெள்ளத் தவழ்ந்து குறுமுசல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை

வள்ளத் தமுதுண் டகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

6.வெண்மைச் சிறைப்புள் ஓதிமங்கள்
விரைக்கே தகையின் மடலெடுத்து
விரும்புங் குழவி யெனமடியின்

மீதே இருத்திக் கோதாட்டித்

திண்மைச் சுரிசங் கினிற்குவளைத்
தேறல் முகந்து பாலூட்டிச்
செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச
சேர்த்துத் துயிற்றித் தாலாட்டப்

பெண்மைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகு தன்வாயிற்
பெய்யும் இரையைக் கூரலகு
பிளந்து பெட்பின் இனி தளிக்கும்

வண்மைப் புதுமைத் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

7.ஓடைக்குளிர்தண் துளிப்பனியால்
உடைந்து திரையில் தவழ்ந்தேறி
ஒளிரும் புளினத் திடையொதுங்கி
உறங்குங் கமடம் தனைக்கடந்து

கோடைக் குளிர்காற் றடிக்கஉடல்
கொடுகி நடுங்கி ஊன்கழிந்த
முடக்கூன் பணிலத் துட்புகுந்து
குஞ்சுக் கிரங்கி இரைகொடுக்கும்

பேடைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகின் சிறைப்புறத்துப்
பிள்ளைக் குருகுதனை யணைத்துப்
பிரச மடற்கே தகைப்பொ தும்பின்

வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை

வள்ளி கணவா வருகவே.

8.விண்டு மாவின் கனிதடத்தின்
மீதேவீழக் குருகினங்கள்
வெருவி இரியக் கயல்வெகுண்டு
வெடிபோய் மீள மண்டுகம்

கண்டு பாய வரிவாளை
கழிக்கே பாயக் கழிக்கானற்
கம்புள் வெகுண்டு துண்ணெனக்கட்
கடைதான் விழித்துத் தன்பார்ப்பைக்

கொண்டு போய்க் கருவாளைக்
குலைக்கே பாயக் குடக்கனியின்
குறுங்காற் பலவு வேர்சாய்ந்த
குழிக்கே கோடி கோடிவரி

வண்டு பாயுந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

9.பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா

சேரா நிருதர் குலகாலா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றுப்

பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

**வேறு**

10.கலைதெரி புகலி வளமுற மருவு
கவுணிய வருக வருகவே
கருணையின் உரிமை அடியவர் கொடிய
கலிகெட வருக வருகவே

சிலைபொரு புருவ வனிதையர் அறுவர்
திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள உனது
திருமுக மலர வருகவே

கொலைபுரி விகட மணிமுடி நிருதர்
குலமற வருக வருகவே
குருமணி வயிரம் இருசிகை நெடிய
குழைபொரு வருக வருகவே

மலைமகள் கவுரி திருமுலை பருகு
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தாளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

11.அணிநெடு மவுலி எறிசிறு புழுதி
அழகுடன் ஒழுக வருகவே
அடியிடு மளவில் அரைமணி முரலும்
அடியொலி பெருக வருகவே
பணிவிடை புரிய வருமட மகிளிர்
பாவினர் புகழ வருகவே
பலபல முனிவர் அனைவரும் உனது

பதமலர் பாவ வருகவே
பிணிமுகு முதுகில் அரியணை யழகு
பெறவரு முருக வருகவே
பிறைபொரு சடிலர் தமதிட மருவு
பிடிபெறு களிறு வருகவே
மணியிதழ் ஒழுகும் அமுதுகு குதலை
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

## 7. அம்புலிப் பருவம்

1.கலையால் நிரம்பாத கலையுண் டுனக்குநிறை
கலையுண் டிவன் தனக்குக்
களங்கமரு குறமான் உனக்குண்டு குறமான்
கருத்துண் டிவன் தனக்குத்

தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத்
தொகையுண் டிவன் தனக்குத்
துளியமுத முண்டுனச் சிவனுக்கு மாறாத
சொல்லமுதம் உண்டுனக்குக்

கொலையா டாரவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கட்செவிக்
கோளர வைக்கொத்தி யெறியுமே காரமிக்
குமரனுக் குண்டுகண்டாய்

அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே.

2.மாமோக மண்டலம் அகற்றிஅறி வென்னுமுழு
மண்டலத் தைத்தொடுத்து
வடவைமுக மண்டலத் தழலா லுருக்கியினன்

மண்டலத் தூடுபுக்குச்

சோமோத யக்கிரண மண்டலத் தமுதத்
துளித்திவலை பருகியுடலைச்
சோதிமண் டலமென விளக்குமவா் இவனுடைய
துய்யமுக மண்டலத்தை

ஏமோ கருத்துற இருத்திப் பெரும்பரத்
தெல்லைமண் டலமெய்தலாம்
என்றுகொண் டிவன்மண் டலச்சக்ர நிலையா
றெழுத்திலீ டேறுவருணக்

காமோ பெருக்கமென் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி யாடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே.

3.முதிரும்இசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்ச்சிமிரு நாலிதழ்க்குள்
முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குள்மலா்
முகமண் டலத்துவெயிலால்

எதிருமிருள் அந்தகா ரப்படலை தள்ளிவந்த
தெழும்இரவி மண்டலத்தில்
இன்புற்று நீவந் தொளிக்குமிடம் அந்தவான்
இரவிமண் டலமுடுக்கள்

உதிருமடு செருவிலிவன் வேலேறு பட்டவா்
உகந்தபெரு வெளியாகையால்
ஒள்ளமு துகுத்தபதி னாறுகலை கொள்ளுமுன்
உடலினுங் குறைபடாதோ

அதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுடன்
அம்பி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்

அம்புலி ஆடவாவே.

4.வெறியார் இலைத்தொடைத் தக்கனழல் வேள்வியை
    வெகுண்டு பகல் பல்லுகுத்து
வெள்ளிவிழி யைக்கெடுத் தயிரா வதப்பாகன்
    வேறுருக் கொடுபறக்கச்

செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன்
    சென்னியைத் திருகிவாணி
செய்யதுண் டம்துண்டம் ஆக்கியத் தக்கன்
    சிரத்தையொரு வழிப்படுத்திப்

பொறியார் அழற்கடவுள் கைத்தலம் அறுத்துவிண்
    புலவர்முப் பத்துமூவர்
போனவழி ஒருவர்போ காமலுன் னுடலையும்
    புழுதியில் தேய்த்ததெல்லாம்

அறியாத தல்லநீ செந்தில்வடி வேலனுடன்
    அம்புலீ ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
    அம்புலீ ஆடவாவே.

5.விடமொழுகு துளைமுள் எயிற்றுவன் கட்செவி
    விரிக்கும் பணாடவியறா
மென்பொறி உடற்பெரும் பகுவாய் அராவடிவை
    வெம்பசி எடுத்து வெம்பிக்

குடதிசைக் கோடையைப் பருகிக் குணக்கெழுங்
    கொண்டலை அருந்திவாடைக்
கொழுந்தையுந் தென்றலையும் அள்ளிக்குடித்துக்
    கொழுங்கதிரை உண்ட தினியுன்

இடமொழிய வேறோர் இலக்கில்லை நீயதற்
    கெதிர்நிற்க வல்லையல்லை
இவனுடன் கூடிவிளை யாடிநீ யிங்கே

இருக்கலாம் இங்கு வந்தால்
அடல்புனையு மயிலுண் டுனக்குதவி ஆகையால்
அம்புலீ ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலீ ஆடவாவே.

6.பண்டுபோல் இன்னமுதம் இன்னங் கடைந்திடப்
பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி அளறாக வற்றியிப்
பாரினில் திடரானதோ

விணடலத் தமரர்களும் அமரேச னுஞ்சேர
வீடிநீ டந்தகார
மேவியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ
விடமொழுகு நெட்டெயிற்று

மண்டுவா சுகிதுண்ட மானதோ இன்னமொரு
வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே இவன்நினைந் தாலெந்த
வகைசெலா தாகையானீ

அண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

7.வட்டமா கத்துள்வெளி வடிவுகொள லாலென்று
மானைத் தரித்திடுகையில்
மந்தா கினித்தரங் கத்துவளம் எய்தலால்
மன்னுங் கணஞ்சூழ் தலால்

இட்டமொடு பேரிரவில் வீடுபெற லாலுகில்
எவருந் துதித்திடுதலால்
இரவிகண் ணுறுதலால் இடபத்தி லேறலால்
ஏமமால் வரையெ் தலால்

முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்வெய்ய
 மூரியா வுக்குடை தலால்
முக்கண்ணுமை பங்கனா ரொக்குநீ யென்றுதிரு
 முகமலர்ந் துனையழைத்தால்

அட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுடன்
 அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
 அம்புலீ ஆடவாவே.

9.காதலால் எறிதிரைக் கடல்மகளிர் சிறுமகார்
 கரையிற் குவித்துமுத்தும்
கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமட்
 கண்டல்மடல் விண்டசுண்ணத்

தாதலர இளவாடை கொடுவருங் கானல்வெண்
 சங்குநொந் தீற்றுளைந்து
தனியே உகுத்தபரு முத்தமுந் தன்னிலே
 சதகோடி நிலவெறிக்கும்

ஈதலா லொரு சிறிதும் இரவில்லை எவருக்கும்
 இரவில்லை நீயும் இங்கே
எகினா லுனதுடற் கறைதுடைத் திடுதலாம்
 என்பதற் கையமில்லை

ஆதலால் நீதிபுனை செந்தில்வடி வேலனுடன்
 அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
 அம்புலீ ஆடவாவே.

10.கடியவளி எறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
 கருடவா கனனும் இகல்கூர்
கட்டைமுள் அரைநாள நெட்டிதழ் உடுத்தபொற்
 கமலயோ னியுமெழுந்து

கொடியவெங் கொலைபுரி வராகமென் ஒருவனெழு
குவலயம் இடந்துதேடக்
குறித்தொருவன் எகினமாய் அண்டபசி சண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட

முடியஇது காறுமவர் அறிவுறா வகைநின்ற
முழுமுதற் கடவுள் அடியும்
முடியுநீ கண்டனை எனக் கருதி இன்றுதிரு
முகமலர்ந் துனை அழைத்தால்

அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

11.பெரியமா கத்துள்நீ வருவைஇவன் வஞ்சகம்
பேசுமா கத்துள்வாரான்
பெருகநீ வேலையிற் புகுவாய் இவன்பார்
பிளக்கவோ வேலைவிட்டான்

உரியமா குணவரையில் உறுவைநீ இவனன்
புறாதகுண வரையேயுறான்

உடலிலே முழுமறு உனக்குண் டிவன்தனக்
கொருமறுவும் இல்லைமீளக்

கரியமா முகிலிலே மறைவைநீ இவன்நெடுங்
கரியமா முகிலின் மறையான்
கருதிநீ இவையெலாம் உணரிவன் பெருமையைக்
கண்டுநீ அங்கிராதே

அரியமா தவன்எங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

12.பரியநிழல் தன்னைச் சுளித்துவெயி லொடுபொருது
பாதசங் கிலியைநூறிப்
பாரிசா தத்தருவை இடுகுள கெனக்கவுட்
பகுவாய் புகக்குதட்டித்

தரியலர் நகர்ப்புறத் தெயிலிடு கபாடந்
தனைத்தூள் படுத்தியவர்பொன்
தருணமணி முடியிடறி முறைமுறை அழைக்குந்
தழைசெவிப் பிறைமருப்புச்

சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொலைத்
துடியடிப் புகரொருத்தல்
துங்கவேள் இவனுடைய முன்றிற் புறத்தில்
துறைக்கர நிமிர்ந்து நிற்கும்

அரியகரு நாகமென ரெவவல்கொல் இவனுடன்
அம்புலீ ஆடவாவே

அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

## 8. சிறுபறைப் பருவம்

1.பொருவாகை சூடுமா வக்கொடிக் குருகுலப்
பூபாலர் ஏறும் அந்தப்
பூபால னுக்கிளைய துணைவர்நூற் றுவரும்
பொருபதினெட் டக்குரோணி

ஒருவாய்மை சொற்றபடை வீரருஞ் செருவினில்
உருத்தெழலும் நீதிவையர்
உடனாக நின்றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசா ரதியாகியம்

மருவார்கள் தானையிற் பட்டவர்த் தனர்மகுட
வர்த்தனர் அடங்கலும்போய்

மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக
மண்ணேழும் உண்முமிழ்ந்த

திருவாய் வலம்புரி முழக்குதிரு மால்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவில்எதிர் பொருதபா நிருதர்பல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

2.முருந்தாரு மணிமுறுவல் நெய்தல்நில மகளிரின
முகில்முலை தனக்குடைந்து
முளரிமுகை நீரிற் குளித்திநின் றொருதாளின்
முற்றிய தவம் புரியவெங்

கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருள்
கட்கடைக் குள்ளுடைந்து
காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு
கரியமுகில் உடல்வெளுத்துப்

பொருந்தாமல் ஒடியந் தரசாரி யாயொரு
பொருப்பேற வளமை யேறும்
புகழேற வாழுந் திருச்செந்தி லாயனது
பொற்றாள் வணக்கமுற்றுத்

திருந்தார்கள் நெஞ்சம் பெரும்பறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபா நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

3.கங்கையணி யுஞ்சடையில் வைத்தகுழ விப்பிறைக்
கடவுளா லயமனைத் துங்
கங்குற் கருங்கடல் கழிந்தவை கறையிற்
கலித்தவால் வளைமுழக்கும்

பங்கய மலர்ப்பொகுட் டிதழ்வாய் துளிக்கும்
பசுந்தேறல் உண்டுமெள்ளப்

பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு
படிந்துபல கால்முழக்கும்

வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்துவெளி
மேகநீ ரைக்குடித்து
வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும்வெறி
வெண்திரைக் குண்டகழியிற்

செங்கயல் முழக்குந் திருச்செந்தில் வேலனை
சிறுபறை முழக்கியருளே
செருவிலேதிர் பொருதபா நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

4.காவான பாரிசா தத்தருக் குலநிழற்
கடவுள் தெரு வீதிதோறுங்
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை
கட்டவிழ்த் திகழுடைக்கும்

பூவாரி லைத்தொடையல் அளகா புரேசன்
புரந்தொறுஞ் குளிறு முரசம்
பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப்
பொங்குதெண் திரைமுழக்கப்

பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்கப்
பரவரிய திருவிழா என்றுபல பல்லியம்
பட்டினந் தொறுமுழக்கத்

தேவாதி தேவருயர் சதுமறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

5.வரைவாய் முழக்குங் கடாயானை வெங்கூன்
மருப்பில்விளை முத்துமிளவேய்

மணிமுத்து மடுபாலை வனகரத் திற்குரு
வராகத்தின் முத்துமண்டர்

உரைவாய் முழக்கும் பெரும்புறவி லுந்திநத்
துமிழுமணி முத்துமள்ளர்
ஒளியறா மருதவே லிச்செந்நெல் கன்னல்தரும
ஒளிமுத்தும் ஓங்குநெய்தற்

கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலம்
கடுஞ்சூல் உளைந்துகான்ற
கதிர்முத்தும் ஒக்கக் கொழித்துவரு பொருநைபாய்
கழிதொறுங் கயல்குதிக்கத்

திரைவாய் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே

செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

6.முனைவாளை வடிவேலை வடுவைவெங் கடுவையிதழ்
முளரியைப் பிணையை மதவேள்
மோகவா ளியையடு சகோதரத்தை வென் றுகுழை
முட்டிமீ ளுங்கண்மடவார்

நினைவாளை வாள்முறுவ லாடியிள முலையானை
நேர்நேர் நிறுத்திநெய்தல்
நீடுமள காடவி வனத்திற் பிணித்துவெண்
நித்தில வடந்தெரிந்து

புனைவளை நாள்முடி விளம்பிநடு வாளைமென்
போதிலுறை வாளை யொப்புப்
பொலிவாளை நின்றுகளை களைவாளை நாடிவிளை
போங்கழி கடந்துமெள்ளச்

சினைவாளை பரயுந் திருச்செந்தில் வேலனை

சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

7.அறந்தரு புரந்தரா தியருலகில் அரமகளிர்
ஆடுமணி யூசல்சிற்றில்
அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்
அருவிபாய் பரங்கிரியுமுட்

புறந்தரு புனிற்றுவெள் வளைகடல் திரைதொறும்
பொருதசீ ரலைவாயுமென்
போதுகமழ் திருவாவி ணன்குடியும் அரியமறை
புகலுமே ரகமுமினிமைக்

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாடலுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட
குஞ்சரம் பிளிறுமரவம்
சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

8.எழுமிரவி மட்கஒளி தருமணி யழுத்துமுடி
இமையவர் மகிழ்ச்சிபெறவே
இருகுழை பிடித்தவிழி அரமகளிர் சுற்றிநடம்
இதுவென நடித்துவரவே

வழுவறு தமிழ்ப்பனுவல் முறைமுறை யுரைத்துவெகு
வரகவிஞர் உட்குழையவே
மகபதியு மிக்கமுனி உட்குழையவே
வழியடிமை செப்பியிவே

பொழுதுதொறும் ஒக்கவிதி முறையுனை அருச்சனை
புனிதசிவ விப்ரருடனே

புகலரிய பத்தசனம் அரகர வெனக்குலவு
புரவலர் விருப்பமுறவே

செழுமறை முழக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

9.தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு
தருணவட வெற்பசையவே
தமரதிமிரத்துமிதம் எறியுமக ரப்பெரிய
சலதியொலி யற்றவியவே

புவணமுழு தொக்கமணி முடிமிசை இருத்துபல
பொறியுரகன் அச்சமுறவே
புணரியிடை வற்றமொகுமொகுமொகுவெ னப்பருகு
புயலுரமு வெட்கியிடவே

பலனனு மிகுத்தகடை யுகமுடி வெனப்பெருமை
பரவியடி யிற்பணியிவே
படகநிபி டத்துழனி அசுரர்வெரு விக்கரிய
பரியவரை யிற்புகுதவே

சிவனருள் மதிக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

10.சகரமக ரச்சலதி உலகுதனில் இப்பொழுது
சருவிய புறச்சமயநூல்
தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு
தவநெறி தழைத்துவரவே

அகரஉக ரத்தில்விளை பொருளடைவு பத்தியுறும்
அடியவர் தமக்கருளவே

அமரலுள கத்தவரும் எவருமரு விப்பரவி
அடியிணை தனைப்பணியவே

பகரவு நினைத்திடவும் அரிதுனது சொற்பெருமை
பரகதி அளிக்குமெனவே
பலபல முனித்தலைவர் அனைவரும் உனக்கினிய
பணிவிடை தனைப்புரியவே

சிகரபர வெற்பில்வரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திருளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

### 9. சிற்றிற்பருவம்

1.பொன்னின் மணக்கும் புதுப்புனலிற்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமமைத்துக்

கன்னி மணக்குங் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு உலையேற்றிக்
கக்குஞ் செழுந்தேன் உலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்

பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாராய் அயிரா வதப்பாகன்

சென்னி மணக்குஞ் சேவடியால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியும் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

2.தையல் மடவார் இழைத்தவண்டல்
    தன்னை அழிக்கும் அதுக்கல்ல
தரளம் உறுத்தி உனது பொற்பூந்த
    தன்டைத் திருத்தாள் தடியாதோ

துய்ய தவளப் பிறைமுடிக்குஞ்
    சோதி யெடுத்து முகத்தணைத்துத்
தோளில் இருத்தும் பொழுதுகணித்
    தோளிற் புழுதி தோயாதோ

வையம் அனைத்தும் ஈன்றெடுத்தும்
    வயது முதிரா மடப்பாவை
மடியில் இருத்தி முலையூட்டி
    வதனத் தணைக்கில் உன்கழற்காற்

செய்ய சிறுதுஸள் செறியாதோ
    சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
    செல்வா சிற்றில் சிதையேலே.

3.தௌவுங் கரட மடையுடைக்குந்
    தந்திப் பகடு பிடிபட்டுந்
தருவும் அமுதம் இருநிதியுங்
    தனியே கொள்ளை போகாமல்

எவ்வம் உறவிட் புலத்தமரர்
    ஏக்கம் உறாமல் அயிராணி
இருமங் கலநாண் அழியாமல்
    இமையோர் இறைஞ்சும் அரமகளிர்

பௌவம் எறியுந் துயராழிப்
    பழுவத் தழுந்தி முழுகாமல்
பரக்குஞ் சுருதித் துறைவேள்வி
    பழுதா காமல் பரவரிய

தெவ்வர் புரத்தை அடுஞ்சிறுவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

4.ஆடுங் கொடித்தேர் எழுபுரவி
அருணன் நடத்தும் அகலிடத்தை
அடைவே படைத்தும் படைத்தபடி
அளித்துந் துடைத்தும் முத்தொழிலுங்

கூடும் பெருமை உனக்குளது
கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக்
கொள்ளுஞ் கருத்து நின்கருத்துக்
கொங்கை சுமந்து கொடி மருங்குல்

வாடுங் கலக விழிமடவார்
மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து
வண்டல் இழைத்த மனையழிக்கை
வன்போ சுரரும் மகவானும்

தேடுங் கமலத் திருத்தாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமூத் தெறியுங் திருச்செந்தூர்
செல்வா சிற்றில் சிதையேலே.

5.புற்றில் அரசந் தனைப்புனைந்த
புனித ருடனே வீற்றிருக்கப்
பொலியுந் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்

சுவற்றில் வளர்ந்த வரையனைத்துஞ்
சுவர்க்கால் ஆக்கிச் சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுந்தோ ரணக்கால் எனநாட்டி

மற்றில் உவமை யெனுக்கனக
வரையைத் துளைத்து வழியாக்கி
மாக முகிலை விதானமென
வகுத்து மடாவ ருடன்கூடிச்

சிற்றில் இழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் சிதையேலே
திரைமுத் தெரியும் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

6.மிஞ்சுங் கனக மணித்தொட்டில்
மீதே இருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக் கேட்டு

நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவாய் எனப்புகன்று
நித்தல் உனது பணிவிடையின்
நிலைமைய குலையேம் நீயறிவாய்

பிஞ்சு மதியின் ஒருமருப்புப்
பிறங்கும் இருதாட் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகும்

அஞ்சு கரக்கஞ் சரத்துணையே
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

7.துன்று திரைக்குண் டகழ்மடுவில்
சூரன் ஒளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியும் அவரிருந்து
துய்த்த வளமுந் தூளாக்கி

வென்று செருவிற் பொருதழித்தாய்
வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெகுண்டு மீண்டளித்தாய்
வேண்டும் அடியார் வினையொழித்தாய்

கன்றும் அமணர் கழுவேறக்
காழிப்பதியில் வந்துதித்துக்
கள்ளப் பரச மயக்குறும்பர்
கலகம் ஒழித்துக் கட்டழித்தாய்

அன்று தொடுத்துன் வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

8.களிப்பார் உனைக்கண் டவரவசே
கண்ணு மனமும் வேறாகிக்
கள்ளன் இவனை நம்முடைய
காதல் வலையிற் கட்டுமென

விளிப்பார் விரகம் அங்குரித்த
வேடப் பலிப்பைப் பாரென்று
மெள்ள நகைப்பார் இவருடனே
விளையா டாமல் வேறாகித்

துளிப்பார் திரைக்குண் டகமுடுத்த
தொல்லைப் பதியும் பகிரண்டத்
தொகையுந் தொகையில் பல்லுயிருந்
தோற்றம் ஒடுக்கந் துணையாய்நின்

றளிப்பாய் அழிக்கை கடனலகாண்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

9.கூவிப் பரிந்து முலைத்தாயர்
கூட்டி யெடுத்து முலையூட்டிக்
குடுமி திருத்தி மலர்சொருகிக்
கோலம் புனைந்து கொண்டாடிப்

பூவிற் பொலிந்த திருமேனிப்
புனிதா வண்டற் புறத்தெயிலில்

புகுந்தால இனியுன் னுடலேறப்
புழுதி இறைத்துப் போகாமல்

காவிக் குறுந்தோட் டிதழ்நெருக்குங்
கண்ணி தனைக்கொண் டோச்சிவனைக்
கானல் தரளத் தொடையாலுன்
கைத்தா மரையைக் கட்டிவிடோம்

ஆவித் துணையே வழியடிமை
அடியேம் சிற்றல் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

10.பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி எடுத்து முலையூட்டி

மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் அவரை வெறாமலுனை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்

கையால் இழைத்த சிற்றலைநின்
காலால் அழிக்கை கடனலகாண்
காப்பான் அழிக்கத் தொடங்கிலெங்கள்

கவலை எவரோ டினியுரைப்போம்

ஐயா உனது வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

## 10. சிறுதேர்ப்பருவம்

1.தண்டே னுடைந்தொழுகு மருமாலை நீள்முடி
தரிக்குஞ் சதக்கிருதசெந்
தருணமணி ஆசனத் தேறமா தலிசெழுந்
தமனியத் தேருருட்டப்

பண்டே பழம்பகை நிசரசரர்கள் உட்கப்
பரப்புநிலை கெட்டதென்று
பரவுங்கு பேரன்வட பூதரம் பொருபுட்
பகத்தேர் உருட்டவீறு

கொண்டே உதித்தசெங் கதிரா யிரக்கடவுள
குண்டலந் திருவில்வீசக்
கோலப்ர பாமண் டலச்சுடர் துலக்கமுட்
கோலெடுத் தருண அருணன்

திண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

2.வாராரும் இளமுலை முடைத்துகிற் பொதுவியர்
மனைக்குட் புகுந்து மெல்ல
வைத்துவெண் தயிருண்டு குடமுருட் டிப்பெருக
வாரிவெண் ணெயை யுருட்டிப்

பாராமல் உண்டுசெங் கனிவாய் துடைத்துப
பருஞ்சகடு தன்னையன்று
பரிபுரத் தாளால் உருட்டிவிளை யாடுமொரு
பச்சைமால் மருக பத்தி

ஆராமை கூருமடி யவர்பழ வினைக்குறும்
பறவே உருட்டி மேலை

அண்டபகி ரண்டமும் அனைத்துலக முஞ்செல்லும்
ஆணையா ழியையு ருட்டிச்

சேராகி சாசரர் சிரக்குவ டுருட்டநீ
சிறுதேர் உருட்டி யருளே.
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

3.கொந்தவிழ் தடஞ்சாரல் மலயமால் வசைநெடுங்
குடுமியில் வள்ர்நத தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்றும் ஆடகப் பசுநிறங்
கொண்டுவிளை யும்ப குவரைச்

சந்தன நெடுந்தறா மலர்ப்பொதும் பருமியல்
தண்பொருநை மாந தியுமத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச்
சாலிநெற் குலைப் படர்ந்து

முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு
முளிக்கரும் பைக்க றித்து
முலைநெறிக் கும்புனிற் றெருமைவா யுஞ்சிறுவர்
மொழியும் பரந்த வழியுஞ்

செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

4.பெருமையுடன் நீள்தலத் திருவர்பா சமயமுந்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப் புக்கரும் பகடுமுந் நீரிற்
பிழைத்துநீள் கரையி லேறப்

பொருவருஞ் சந்நிதியி லெய்துவது போல்மணி
புடைக்குமிள நீரி ரண்டு
புணரியின் மிதந்துசந் நிதியேற விந்நாட்
பொருந்தவிளை யாடி முன்னாள்

இருதிரையி னிற்சந் தனக்கொடி மரத்தினை
இழுத்துவரும் எருமை ஏற்றை
எப்பொழுது முதியகற் பகடாக உலகத்தில்
யாவருங்காண வென்று

திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டநீ
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

5.ஆதிநூல் மரபாகி அதனுறும் பொருள்ஆகி
அல்லவை யனைத்தும் ஆகி
அளவினுக் களவாகி அணுவினுக் கணுவாய்
அனைத்துயிரும் ஆகி அதனின்

சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்கள்
தானாகி நானா கிமெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலை யாகி

ஓதிய தனைத்தினும் அடங்காமல் வேறாகி
உள்ளும் புறம்பும் ஆகி
ஒளியிலொளி யாகிமற் நிரவுபக லற்றவிடம்

ஒப்புவித் தெனையி ருத்தித்

தீதினை அகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

6.புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூ டணசூரன்
சலமொழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாட்சர காங்கேய
குலவுகொற்றவ குமாரகண் டீரவ
குருபா புரு கூதன்
உலக ளித்தவா செந்தில்வாழ் கந்தனே
உருட்டுச் சிறுதேரே
உரக நாயகன் ப∴றலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

7.வீதி மங்கல விழாவணி விரும்பிய
விண்ணவர் அரமாதர்
சோதி மங்கல கலசகுங் குமமுலை
தோய்ந்தகங் களிகூரச்
சாதி மங்கல வலம்புரி இனமெனத்
தழைச்சிறை யொடுபுல்லி
ஓதி மம்துயில் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் ப∴றலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

8.விரைத்த டம்பொழில் வரைமணி ஆசனத்
திருந்துவிண் ணவர்போற்றி
வரைத்த டம்புரை மழவிடை எம்பிரான்
மனமகிழ்ந் திடவாக்கால்
இரைத்த பல்கலைப் பரம்பெலாந் திரட்டிமற்
றிதுபொரு ளெனமேனாள்

உரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனை
        உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் ப∴றலை பொடிபட
        உருட்டுக சிறுதேரே.

9.மாதுநாயகம் எனவடி வுடையசீர்
        வள்ளிநா யகமண்ணில்
ஈது நாயகம் எனவுனை யன்றிவே
        றெண்ணநா யகம்உண்டோ
பொது நாயகன் புணரியின் நாயகன்
        பொருப்புநா யகன்போற்றி
ஓது நாயக செந்தில்வாழ் கந்தனை
        உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் ப∴றலை பொடிபட
        உருட்டுக சிறுதேரே.
10.தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந்
        தானநா யகர்தம்பேர்
திக்க ளைத்தினம் எண் முதல் இமையோர்
        தேவர்தந் திருமேனி
மிக்க மாலிகை தருபவர் அடியவர்
        மின்னனர் சமயத்தோர்
ஒக்க வாழ்கெனச் செந்தில்வாழ் கந்தனே
        உருட்டுக சிறுதேரே
உரக நாயகன் ப∴றலை பொடிபட
        உருட்டுக சிறுதேர.

**திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்**
**முற்றிற்று.**

# முக்கூடற்பள்ளு

சிற்றிலக்கியங்களுள் குறவஞ்சி, பள்ளு போன்றவை குறிப்பிடத்தக்கவை.

முக்கூடற்பள்ளு என்னும் இந்நூல் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒன்றாகும். இயற்றியவர் என்னாயினாப் புலவர். இடைக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் விரிவாக வளர்ந்தன. தமிழகத்தை ஆண்ட அனைவரும் விதிவிலக்கில்லாமல் நிலங்களைக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் கொடையாகக் கொடுத்தனர். இதனால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாகக் காணப்பெற்றன. பொருள் முதல்வாதக் கோட்பாட்டு அடிப்படையில் ஆராயும்போது இந்நூல் எழுந்த காலத்தில் உழைக்கும் மக்கள் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதை இந்நூல்வழி அறியலாம்.

உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லை என்பதுபோல, உழவர் பெருமக்களையே நாயக நாயகிராகக் கொண்டு எழுந்துள்ள இந்தப் பள்ளு நூலும் தன் நலத்தால் ஒப்பற்றது ஆகும்.

இதனை முதன்முதலாக அச்சேற்றிக் கண்டவர்கள் விருத்தாச்சலம் தியாகராசக் கவிராயர் அவர்கள். பின்னர் பேராசிரியர் மு.அருணாசலம் அவர்களின் சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவந்தது. அடுத்து ஆசிரியர் வித்துவான் ந.சேதுரகுநாதனாரின் பதிப்புத் தோன்றியது.

## பொருளடக்கம்

1. காப்புச் செய்யுள்கள்
2. குடிமை! பெருமை!
3. வளமை! செழுமை!
4. குமுறல்! கொடுமை!
5. விடுதலை! விளக்கம்!
6. விளைவு! மகிழ்வு!
7. கலங்கல்! தெளிவு!

# 1. காப்புச் செய்யுள்கள்

பக்திமை செறிந்த தமிழ்ச்சான்றோர்கள் அவர்கள், தம் நூலினை இயற்றத் தொடங்கும்போது, முதலிலே விநாயகப் பெருமானைப் போற்றுவதைப் பெரும்பாலும் தம்முடைய மரபாகக் கொள்வார்கள். விநாயகப் பெருமான் விக்கினங்களைப் போக்கி அருள்பவன். அதனால் தம்முடைய நூலும் எவ்வகையான விக்கினமும் இல்லாமல் இனிதே நிறைவெய்தும் என்பது அவர்கள் எண்ணம்.

இந்தப் பொதுமரபிற்கு மாறாகத் தனிமரபுகள் பேணுபவராகவும் சிலர் விளங்குவர். தாம் வழிபடுங்கடவுளை முதற்கண் வாழ்த்துபவர் எனவும், நூலுக்குப் பொருத்தமான கடவுளை வாழ்த்துபவர் எனவும் அவர்கள் வேறுபடுவர். இந்த வகையிலே முக்கூடல் அழகராகிய அமைந்த இந்தப் பள்ளுநூலின் ஆசிரியர், நூலுக்குப் பொருத்தமான வகையிலேயே தம் காப்புச் செய்யுளைத் தொடங்குகின்றார்.

**“பூமேவு நீலவெற்பில் பொன்னிறமும் உண்டெனப்பூ**
**மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே**
**பாமேவு சொற்புரப்பார் பாவலரென் றெட்டெழுத்து**
**நாமேவு பத்தர்பத்து நாவலரும் காப்பாமே”**

மக்களுக்கு எக்குறையும் நேர்தல் இன்றிக் காத்துப் பேணுபர் நாடு காவலர் ஆவர். சொற்குற்றம் பொருட்குற்றம் நேராது பாக்களை இனிதாகச் செழுமையுடன் காத்துப் பேணுபவரே நற்பாவலர். தம் பாசுரங்களால் அஷ்டாட்சர ரூபியாகிய திருமாலைப் பாடிப் பரவிய தமிழ் நாவலர்கள் அவர்களாவர்.

முக்கூடல் -மூன்று நதிகள் கூடும் இடம். இவ்வகையிலே, கங்கை, யமுனை, சரசுவதி ஆகியவை கூடுவதாகச் சொல்லப்படும் திரிவேணி சங்கமம் ஒன்று அலகாபாத் நகரருகே உள்ளது. இதற்கண் கூறப்படும் முக்கூடல் திருநெல்வேலிச் சீமையிலே உள்ளது. பொருநையாறும், சிற்றாரும், கோதண்டராம நதியும் ஒன்றுகலக்கும் இடம். இந்நாளிலே, பழைய முக்கூடல் நகரம் ‘சீவலப்பேரி’ என்ற பேரோடு வழங்கி வருகிறது. இன்றைய முக்கூடல் நகரம் அன்று அது.

## 2. குடிமை! பெருமை!

### பள்ளியரின் வரவு

முதலாவதாகப் பண்ணைகளிலே வேலை செய்யும் படியாகத் தம் ஆண்டையின் ஏவலைப் பெற்றிருக்கும் பள்ளியர்கள் வந்து, அவ்வயல்களை அடைந்ததைப் பற்றிச் சொல்லத் தொடங்குகின்றேன்.

**காவலராந் தேவரைமுன் கைதொழுது பின்னரும்என்**
**ஆவலினாலே அழகர் ஆசூர் வளநாடும்**
**சீவலநன் நாடும்இசை தேர்ந்து உரைக்கப் பண்ணைதனில்**
**ஏவலுறு பள்ளியர்வந் தெய்தியது சொல்வனே!**

### முக்கூடற் பள்ளி

நெற்றியிலே மஞ்சளைப் பொட்டு விளங்கியது. அதன் மேலாக மற்றொரு திருநாமப் பொட்டும் இலங்கியது. நெகிழ்ந்த கருங்கொண்டையாகக் கூந்தல் முடியிடப்பட்டுப் பின்புறம் தொங்கியது. உச்சியிலே தலைமயிலை இரண்டாக வகிர்ந்த வகுப்பும் தோன்றியது.

ஆடவரைத் தம் பார்வையால் ஊடுருவி வெற்றி கொள்ளும் ஆற்றல் படைத்தன அவளுடைய விழிகள். ஒடுக்கமான இடையும்,'எடைக்கு எடை செம்பொன்' பெறும் என்று போற்றத்தகுந்த பட்டுச்சேலையும் அவ்விடையிலே இலங்கத் திருமுக்கூடலிலே பிறந்த அந்த மூத்த பள்ளியானவள் வந்து தோன்றினாள்.

**நெற்றியில் இடும் மஞ்சளைப் பொட்டும்**
**மற்றொரு திருநாமப் பொட்டும்**
**நெகிழ்ந்த கருங் கொண்டையும் ரெண்டாய்**
**வகிர்ந்த வகுப்பும்....**

### பார்க்க முடியாதே

காண்பவர்களின் உள்ளத்திலே ஊசலிட்டுக் கொண்டேயிருக்கின்ற அவள் விழிகளிலே தோன்றுகின்ற கள்ளத்தினாலே, இரும்பும் கல்லும் கரைந்து விடாவோ? கருமேனி அழகராகிய திருமாலுக்கு உரியதான முக்கூடல் நகரிலே பிறந்தவளான, அந்தப் பள்ளத்தியாரின் அழகினைப் போல, வேறு எங்குமே பார்க்க முடியாது. அத்துணை அழகுடையவள் அவள்!

**உள்ளத்தி லூசலிடும் உல்லாசப் பார்வைவிழிக்**
**களைத்தி னாலிரும்பும் கல்லும் கரையாதோ**
**வெள்ளத்தி லேதுயில்கார் மெய்யழகர் முக்கூடல்**
**பள்ளத்தி யார்அழகு பார்க்க முடியாதே.**

**மருதூர் பள்ளி!**

சிவந்த பாதங்களிலே கொச்சி மஞ்சளை அழகாகப் பூசியிருந்தாள் கூந்தலிலே சூடிய அழகிய மருக்கொழுந்தின் மணம் கமழும். பசுமை வண்ணம் பூசிக்கொண்ட கெண்டை மீன்களைப் போல அஞ்சன மை தீற்றிய அவளுடைய கண்கள் இரண்டும் மற்றொரு பக்கத்துக்காதின் குழையினும் தைக்கப் போவன போலக் குதித்தாடிக் கொண்டிருந்தன.

கொடி போன்ற அவளுடைய ஒடுக்கமான இடையிலே அதற்கு அழகுதரும் பட்டும், அதன்மேல் அவள் அணிந்துள்ள பஞ்சவர்ணம் என்னும் அணியின் அழகும் ஒளிவீச, மருதூர்க்குச் சிறப்பாக வந்து வாய்த்த பள்ளியானவள் பண்ணையிலே வந்து தோன்றினாள்.

**செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்**
**மஞ்சபளும்பூ பச்சையும் மணக்கச்**
**சிறியநுதற் பிறைவெண் ணீற்றுக்**
**குறி யொளி வீசப்...**

**ஐந்து போகம் பயிராகும்!**

மருதூர்பள்ளி இப்போது பாதியிலே முக்கூடல் அழகருக்கு அடிமைப்படுவாளோ? இந்த மருதூரளாகிய இளமை உடையவள், தன்னுடைய ஒளியுடைய முகம் மள்ளருக்கு மட்டுமே தோன்ற, வயலிலே இறங்கி நாற்றினை நட்டாளானால், அந்த ஒரு போகத்திலேயே ஐந்துபோக விளைச்சலுக்குரிய கண்டு முதலும் காணுமே! அவ்வளவு கைராசிக்காரியல்லவோ இவள்!

**ஆதிமரு தீசருக்கும் ஆட்பட்டு அழகருக்கும்**
**பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிகையாள்**
**சோதிமுகம் மள்ளருக்கே தோன்றவாய னுற்றுநட்ட**
**போதிலொரு பூவில்ஐந்து பூவும் பயிராமே.**

**குடும்பன் வந்தான்**

சீற்றங்கொண்டு பாயும் செம்மறி ஆட்டுக்கிடாயின் கொம்புகளைக் போல விளங்கும். முறுக்கிவிட்டிருக்கும் மீசையும், குறுக்கிலே வளைதடி சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கும் இடுப்புக்கச்சையும், மெல்ல மெல்ல அடி எடுத்து வைப்பதும் தன் நினைவை மறுதலைப்படுத்தும் கள் வெறி கொண்டு அதனால் காண்பவருக்கு அச்சமுண்டாக்கும் சிரிப்புத்தோன்ற நடப்பதுமாக நல்ல வடிவழகனாகிய அழகக் குடும்பனும் அங்கே வந்து தோன்றினான்.

**கறுக்கும் கடாய் மருப்பின்**
**முறுக்கு மீசையும் சித்ரக்**

**கத்தரிகை இட்ட வன்னக்**

**கன்னப் பனிகம்...**

**பள்ளன் பெருமை**

ஆண்டையே! ஒரு பொழுதாகிலும் முக்கூடல் அழகரின் பாதாரவிந்தங்களைக் கருதாக மனத்தை எல்லாம், முரம்பு நிலமாகப் பார்க்கும் தரிசுகள் என்று எண்ணி, அவற்றை அவ்வாறு போகவிடாமல், கொழுப்பாய்ச்சி உழுவேன். அந்தப் பள்ளன் நான்.

பெருமாளுடைய நூற்று எட்டுத் திருப்பதிகளையும் உள்ளங்களிலே கொண்டு, வலங்செய்து வணங்காதவர்களுடைய பேய்த் தன்மையுடைய கால்களை, வடத்தால் பிணித்து ஏர்க்காலிலே சேர்த்துக்காட்டுவேன்.

திருவாய்மொழிப் பாசுரங்களைக் கல்லாதவர்களை எல்லாம் இருகால் மாடுகளாக்கி, ஏரிலே பூட்டித் ‘தீத்தீ’ என்று உழக்கோலால் சாத்தி ஓட்டுவேன். அத்தகைய பள்ளன் நான்!

**ஒருபோ தழகர் தாளைக்**

**கருதார் மனத்தை வன்பால்**

**உழப் பாக்குந் தரிசென்**

**கொழுப் பாய்ச்சு வேன்...**

**பள்ளியின் குடித்தரம்**

மள்ளர்களாகிய உழவர்களுடைய குடியிலே வந்தவரானாலும், இரண்டு பள்ளியர்களுக்கு ஒரு பள்ளக்கணவன் என்றால், அவர்களுக்குள் மன இயல்புகள் வேறுபடாமலா போகும்? கள்ளத்தனமாகக் கம்சனால் ஏவுதல் பெற்றுப் புள்ளுருவாக வந்த பகாசுரன் என்னும் கொக்கின் வாயைக் கிழித்தவர் கருமேனி வண்ணனாகிய முக்கூடல் அழகர். அவருடைய முக்கூடல் ஊர் முழுவதும் நிறைவு கொள்ளுமாறு, அவர்கள் இருவரும் தம்முடைய குடிப்பெருமைகளைக் கூறுகிறார்கள்.

**மள்ளர் குலத்தில் வரினுமிரு பள்ளியர்க்கோர்**

**பள்ளக் கணவனெனின் பாவனைவே றாகாதோ**

**கள்ளப்புள் வாய்கிழித்த காரழகர் முக்கூடல்**

**கொள்ளத் தமது குடித்தரங்கள் கூறினரே**

**மூத்த பள்ளி நானே!**

முக்கூடலிலே கூடும்போதே, அதிலிருந்து, பின்வந்து கொண்டிருக்கிற இத்துணைக் காலமும் கண்டு, அடியடி வாழையாய்த் தோன்றி, நிலவி வரும் மிகப்பழமையான குடும்பத்திலே நான் பிறந்தேன்.

குடும்பன் முதன்முதலாகவே, என்னை மாங்கல்யச் சரடு கட்டி மணந்து, உரிமையுடன் மனைவியாக்கிக் கொண்டான். முத்தமிழ் செழுமையுடன் வழங்கும், தென் பாண்டித் திருநாட்டிலே விளங்கும் அழகர் பெருமானுக்கு வழிவழி அடிமையாளனாகிய என் குடும்பத்துக்கு வந்து வாய்ந்த மூத்த பள்ளி நானேயாவேன், ஆண்டையே!

**உத்தர பாக மான**
**சித்திர நதிக்குத் தென்பால்**
**ஓடும் பொருநையுடன்**
**கூடும் போதே...**

**இளைய பள்ளி நானே!**

தம் நெஞ்சிலே உலகுக்கு உபகாரமாக வெட்டுதல் வேண்டும் என நினைத்த ஐந்து குளத்திற்கும் சக்கரக்கால் நிலைநிறுத்திய அந்த நாளிலேயே, நான் இந்தப் பண்ணையிலே வந்து சேர்ந்தவர்கள்.

கஞ்சிக்கு வழியில்லாமல் கெஞ்சிக்கேட்டு நான் குடும்பனை வந்து கட்டிக்கொண்டவள் அல்லள். அவன், என் அழகைக் கண்டு ஆசைப்பட்டு விரும்ப அதன்மேல் அவன் என்னை வந்து மணந்துகொள்ள அவனுடைய மனைவியானவள் நான்.

மேகத்தைப் போன்ற கருமை நிறத்தினை உடையவர் அழகர். அவருக்குத் தஞ்சமாக அடிமைத் தொழில் செய்யும் பள்ளனுக்குப் பொருத்தமான மருதூராளாகிய இளைய பள்ளி நான்தான் ஆண்டையே!

**செஞ்சிக்கும் கூடலுக்குந்த**
**தஞ்சைக்கும் ஆணை செலுத்தும்**
**செங்கோல் வடம லேந்திரன்**
**எங்கள் ஊரே...**

**வடிவழகக் குடும்பன் நானே!**

பள்ளியர்கள் இருவரும் தத்தம் குடிப்பெருமையையும் உரிமையும் கூறவே, பள்ளன் தன்னுடைய குடியின் சிறப்பினையும் கூறுகின்றான். முக்கூடலிலே வந்து திருவடி வைத்த அந்நாளிலே இருந்து, அவருடைய அடியவராகவரும் பழைய குடியிலே வந்து பிறந்தவன் அடியேன். அந்த உண்மையினை அறியாத சிலர் என்னைத் தூர விலகிப் போடா என்பார்கள். அப்படி அவர்கள் பக்கமிருந்து நான் தூரமாக விலகிப் போனாலும், அவர்களுக்குத் தகுதியான சோறாக அமைவது என்னுடைய வெள்ளாண்மையினால் வருவதுதான். இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தாம் என்னைப் பள்ளா பள்ளா! என்பார்கள்.

**சுக்கிரத் தேவர் தாயைச்**
**சக்கரத் தாழ்வார் கொன்ற**
**துட்டுப் பிரம கத்தி**
**விட்டுப் போக....**

**வளம் சொல்வர்**

மலைவளத்திற்கு ஒப்பாகக் கூறிச் சிறப்பிக்கப் பெறுபவர் முக்கூடல் அழகர். அவருடைய திருநாட்டின் வளமையினைப் பேசுவதற்காகப் பள்ளியர்கள் தம்முடைய நாவினை அசைத்தனர். பாட்டின் வளம் அனைத்தும் ஒருங்கே அமையச் சிறந்த பக்தர்களாகிய பத்து அடியார்களும் சூட்டிய பாசுரங்களாகிய பாமாலைகளான அழகிய காட்டுவளம் அனைத்தையும் யாமும் காட்டுவோம் என்பவரே போல, அந்தக் களமர்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

**கோட்டுவளம் கூறியமுக் கூடல் அலங் காரர்திரு**
**நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள்**
**பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனார் மாலிகைப்பூங்**
**காட்டுவள மெல்லாம் களமருரை செய்வாரே**

**வடகரை வளம்**

வசந்தகாலம் தொடங்கிவிட்டது. அந்தக் களிப்பிலே மேட்டின்மீது ஏறி நின்று தன் கால்களைப் பவிசுடன் எடுத்து வைத்துத், தன் தோகைகளை விரித்துக்கொண்டு, மயிலானது வானத்தை நிமிர்ந்து நோக்கிக் களிப்புடன் நடனமாடத் தொடங்கியது. வசந்த காலம் தொடங்கியதோ? எனக் குரலெடுத்துக் கூவிக்கேட்க நினைத்த, மாமரத்திலே இருந்த பெட்டைக்குயில் ஒன்று, அந்த மயிலின் காட்சியைக் கண்டு உண்மையறிந்து தன் பிளந்த வாயினைப் பேசாமல் அப்படியே மூடிக் கொண்டது. கோடை காலம் போய்விட்டதனால் ஏற்படும் மங்கல அடையாளங்களைக் கொண்டனவாக, மேகங்கள் மழைத்துளிகளை இயங்கத் தொடங்கினா. அதனால், நாட்டு மக்கள் அனைவரும், உள்ளத்திலே மகிழ்ச்சி கொள்பவராயினர். இத்தகைய இளவேனிலின் செழிப்பான தன்மையினை உடையது ஆசூர் வடகரை நாடு என்று கூறப்படும் எனது நாடு, மூத்த பள்ளி இப்படித் தன்நாட்டு வளமையினைக் கூறினாள்.

**மேடை ஏறித்தன் காலைப் பவுசு**
**விரித்த பீலி**
**மயிலெட்டிப் பார்க்க**
**பேடை மாங்குயில் வாய்கொண்டு உசாவப்**
**பிளந்த வாய்தனைப்**
**பேசாமல் மூடக்**

**வாடை யோடி வரக்களி சூரும்**

**வளமை யாசூர்**

**வடக்கரை நாடே!**

**தென்கரை வளம்!**

வானகத்திலே தோன்றி வெண்குடை விரித்தாற் போல எழுந்த நிலவாகிய பகையினை, வெற்றி கொண்டல்லவோ விடுவேன், என்ற செருக்குடன், இரண்டு யானைகள் கூடி அந்தமதிக்குடையின்மீது தாவிச் செல்வதுபோல, வானிலே இருண்ட மேகங்கள் திரண்டு நிலவை மறைத்தன. இளவேனில் காலத்தில் புறாக்களும் குயில்களும் மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைக்கும். இப்படித் தன் நாட்டின் வளமையினைக் கூறுகிறாள் இளைய பள்ளி.

**வென்றல் லோவிடு வேனென வேயிரு**

**வேழங் கூடி**

**மதிக்குடி தாவக்**

**குன்றே லாந்தர மில்லையென் றாடவர்**

**கொம்ப னார்முலைக்**

**குன்றிற் பதுங்க...**

**முக்கூடலின் சிறப்பு**

முக்கூடல் அழகர் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயிலின் கோபுரம் மிகவும் உயரமானது. மேகத்திரள்கள் அந்தக் கோபுரத்திலே வந்து குழுமியிருக்கக் காணலாம். பொன்மயமான அந்தத் திருக்கோயிலின் முற்றத்திலே பெருகியிருக்கும் மழைநீரில் அன்னங்கள் விளையாடிக் கொண்டிருக்கும். மலர்களிலிருந்து வீழ்ந்தத் தேனை வண்டு எடுக்கும். தேவர்களுக்குத் தலைவர் அழகர், அவர் கோயில் கொண்டிருக்கிற முக்கூடல் என்னும் ஊரே எங்கள் ஊராகும் என்கிறாள் மூத்த பள்ளி.

**கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்**

**கொடிகள் வானம்**

**படிதர மூடும்**

**கண்ட பேரண்டம் தண்டலை நாடும்**

**கனக முன்றில்**

**அனம்விளை யாடும்...**

**மருதூர் வளம்**

மேட்டுநிலப் பகுதிகள் அனைத்தும் நீருள் அமிழ அங்கே சங்கினம் உலவிக்கொண்டிருக்கும், பொன்மயமான அரங்கங்களிலே அலைகளால் ஒதுக்கப்பட்ட மீன்கள் துள்ளி விளையாடும். நாகணவாய்ப் புட்களும், புறாவினங்களும் தத்தம் துணைகளை விரும்பிக்கூடிக் கொண்டிருக்கும். மரக்கலங்கள் செல்லும் கடலிலே அந்நாள் தோன்றிய கொடிய நஞ்சினை உண்டவரான மருதீசர் கோயில் கொண்டிருக்கும் மருதூரே எங்கள் ஊராகும்.

**சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்**
**தரங்க மீன்பொன்**
**அரங்கிடை தாவும்**

**திங்கள் சோலை மரங்கள ராவும்**
**தெருக்கள் தோறும்**
**மருக்கனைத் தூவும்...**

**ஆசூர் நாட்டு வளமை!**

மக்கள் உள்ளங்களிலே எவ்வித்க கறையுமே காணப்படுவதில்லை. கம்பத்திலே கட்டியிருக்கும் யானைகள் கடமாகிய மதம்பட்டு நிற்குமேயல்லாமல் அவ்வூர் மக்கள் கடன்பட்டு வாழ்வதில்லை. மக்கள் எவரும் சிறை பட்டிருப்பதே கிடையாது. வயல்களுள் விளையும் விளைச்சலுள் எவ்விதமான ஒளிவு மறைவுமே காணப்படுவதில்லை. இப்படித் தன் நாட்டைப் போற்றிக் கூறினாள் மூத்தப்பள்ளி.

**கறைப்பட்டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டுள்ளது**
**கம்பத்து வேழம்...**

**மறைபட்டுள்ளது அரும்பெருட் செய்யுள்**
**வளமை ஆசூர்**
**வடகரை நாடே...**

**தென்கரை நாட்டு வளமை!**

தன் வடகரை நாட்டை மூத்த பள்ளி இப்படிப் புகழ்ந்தும் இளைய பள்ளிக்கு உற்சாகம் கரைபுரண்டு எழுகிறது. அவள், தான் பிறந்த சீவலமங்கைத் தென்கரை நாட்டின் புகழைக் கூறத் தொடங்கி விடுகிறாள்.

மக்களின் வயிறு காய்வதை எங்குமே காணமுடியாது. மக்கள் பசியால் மாய்தலை என்றும் காணமுடியாது. மக்கள் தலைசாய்ந்து நடக்கும் நிலையினைக்

காணவே முடியாது. உரைத்திடும் சந்தனம் தேயக் காணலாமே அல்லாமல் உரைத்திடும் செய்யுட்களில் பொருள் தேய்வு காணப்படுவதே கிடையாது. இப்படிப்பட்ட வளமைகள் எல்லாம் உடையது எங்கள் சீவலமங்கைத் தென்கரை நாடு.

**காயக் கண்டது சூரிய காந்தி**
**கலங்கக் கண்டது**
**வெண்தயிர்க் கண்டம்**

**மாயக் கண்டது நாழிகை வாரம்**
**மறுகக் கண்டது**
**வான்சுழி வெள்ளம்...**

**முக்கூடல் வளம்**

ஒளிவீசும் சிறந்த மணி வகைகள் பதித்த மாளிகைகளை உடைய வீதிகளின் நெருக்கம் அதிகமாயிருக்கும். மலர்ச்சோலைகளிலே திரியும் வண்டினங்கள் தம் இரீங்காரப் பண்ணினைப் பாடி உள்ளங்களை உருகச் செய்யும். சாதியினரான மாந்தர்களும், அந்தப் பேதங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, ஒன்றே குலம் என்ற வளமான அறத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள். மேட்டு நிலங்களில் எல்லாம் குளிர்ந்த மலர்கள் இதழ் விரிந்திருக்கும். அழகருக்கு சொந்மான முக்கூடல் என்னும் ஊரே எங்கள் ஊராகும்.

**சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி**
**இரும்பும் உருக்கும்**

**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை**
**குடத்தை நெருக்கும்**

**ஆதி நாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல்**
**ஊரெங்கள் ஊரே!**

**மருதூர் வளம்!**

பாய்கால்களின் இடையிடையே உள்ள அடைப்புக்களிலே தத்திச் செல்லும் நீரானது முத்துக்களால் இடைமறித்து அடைக்கப்படும். நாள்தோறும் விழாக்கள் கொண்டாடுவார்போல எங்கும் அழகுடன் விளங்கும். எல்லாச்செல்வங்களும் அந்த

ஊரிலேயெ கிடைக்கும். எளிய ஊமத்தைப் பூவையும் விரும்பிச் சூடுபவரான மதோன்மத்தர் மருதீசர். அவருக்கு உரியதான எங்கள் மருதூர் அப்படிப்பட்டதாகும்.

**தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்**
**சாலைவாய்க் கன்னல்**
**ஆலை யுடைக்கும்**

**கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்**
**கலிப்பு வேலை**
**ஒலிப்பை துடைக்கும்**

**மத்தம் சூடும் மதோனமத்த ரான**
**மருதீசர் மருதூர்**
**எங்கள் ஊரே.**

**வடகரை நாடே!**

வளர்ந்த தென்னை மரங்கள் இளநீர்களை தாங்கிக்கொண்டு, தம் காய்களைத் தம்மருகே மாமரங்கள் ஒன்றி வளர்ந்து சுமந்து கொண்டிருக்கக் கொடுத்துக் கொண்டிருக்கும். மாதுளங்கொம்பு வாழைக் குலையைத் தாங்கிக் கொள்ளும். இப்படி மரங்கள் பலவும் ஒன்றிற்கொன்று உதவியாக வளமுடன் வாய்த்திருக்கும் நாடே எங்கள் ஆசூர் வடகரை நாடாகும். இப்படிப் பெருமிதத்துடன் கூறியவள் மூத்தப்பள்ளி.

**மீது யாந்திடும் தெங்கிள நீரை**
**மிடைந்த பூகஞ்**
**சுமந்துதன் காயை**

**குதமொன்றிச் சுமக்கக் கொடுக்கும்**
**சூதந் தன்கனி**
**தூங்கும் பலாவில்**

**மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்**
**வளமை ஆசூர்**
**வடகரை நாடே…**

**தென்கரை நாடே!**

இளையப்பள்ளி தன் சீவலமங்கை நாட்டின் பெருமைகளைக் கூறுகிறாள்.

தாமரை மலரானது தன் தலையை நீட்டி வரப்பிலே வளர்ந்திருக்கும் இஞ்சியின் பச்சை இலையான பெரிய சடையினைத் தடவிவிடும். இஞ்சியோ, மஞ்சளை தழுவும். மஞ்சளோ, செந்நெற்பயிரைத் தழுவும். செந்நெல்லோ, செங்கரும்மைபைக் கைகொடுத்து நிற்கும். இத்தகைய செழுமையுடைய நாடு என்கிறாள்.

**பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்**
**பச்சை இஞ்சியின்**
**பார்சடை தீண்டும்**

**தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்**
**தடவி மெள்ளத்**
**தொடுமந்த மஞ்சள்**

**அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்**
**அளாவி நிற்குமச்**
**செந்நெலு மப்பால்**

**செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே..**

**குயில் கூவி அழைத்தல்**

பெண்கள் தம் பாடல் மரபுகளினுள் குயில் பயிலுதல் என்பதும் ஒன்று. இதனைத் திருவாசகத்துள் மணிவாசகப் பெருமானும் மிக்க நயமுடன் கையாண்டிருத்தலைக் கற்று இன்புற வேண்டும்.

**தேவாதி தேவர்திரு முக்கூட லின்பெருமை**
**நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்…**

**குயிலே கூவாய்!**

செந்தாமரை மலரின் வண்ணத்தினை உடையவர் முக்கூடல் அழகர். அவருடைய புகழை குயிலே கூவுவாயாக. உலகெங்கும் சிறப்பினையுடைய வைணவச் சமயத்தவர்களும் வாழும்படியாகக் குயிலே நீ கூவுவாயாக! நாட்டின் செங்கோன்மை ஓங்கும்படியாக கூவுவாயாக குயிலே!

**கார்பூத்த வண்ணனார் கண்ணனார் அழகர்படிக்**
**கட்டளைகள் உயரவே**
**கூவாய் குயிலே**

**பேர்பூத்த முக்கூடல் மிக்கரா மானுசப்**

**பீடர்மிக விளங்கவே**

**கூவாய் குயிலே...**

இயல், இசை, நாடக ஆகிய மூவகைப் பாகுபாடுகளுடன் விளங்கும் தமிழ்க் கல்வியும் செல்வமும் சீவலப்பேரியிலே பெருகவேண்டுமெனக் கூவாய் குயிலே! குடும்பத்துப் பலப்பல கிளையினரும் தழைக்கும்படியாகக் கூவுவாயாக குயிலே!

**சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்**

**செல்வமும் பெருகவே**

**கூவாய் குயிலே**

**மாவளத் துடனழகர் தாவளக் குடிவாழ**

**மருதூரை வாழ்த்தியே**

**கூவாய் குயிலே...**

பொருளை நதியின் பக்கமுள்ள விளைநிலங்களும், பூஞ்சாலிநெல் விளையவேண்டுமெனக் குயிலே கூவுவாயாக! மாதம் மும்மாரி பெய்ய மழையினை வேண்டிக் கூவுவாயாக! திருக்கோயிலின் சந்நிதியானது கற்ப காலங்கள் எல்லாம் விளங்கவென்று குயிலே நீ கூவுவாயாக!

**பொருநையந் திருநதியின் இருகரையும் இருபூவும்**

**பூஞ்சாலி விளையவே**

**கூவாய குயிலே**

**அருள்பெருந் தருமநிதி சாத்தூரிற் பெரியநம்பி**

**அய்யங்கார் வாழவே**

**கூவாய் குயிலே**

**கருநெடும் புயலழகர் மருவுசந் நிதிகற்ப**

**காலங்கள் விளங்கவே**

**கூவாய் குயிலே.**

## 3. வளமை! செழுமை!

### தெய்வ வழிபாடு

காரிமாறனாரின் புதல்வர் நம்மாழ்வார். வேதசாரங்களை எல்லாம் கல்விச் செழுமையினையுடைய தமிழ்ப் பாசுரங்களாக அருளியவர் அவர். அந்தத் திருவாய் மொழியானது பரவியிருக்கும் அழகருடைய நல்ல நாட்டிலே மழை வளம் சிறக்க வெண்டும் என்னும் பொருட்டாக வரம் பெறுதலை நோக்கமாகக் கொண்டு மள்ளர்கள் எல்லோரும் தம் சேரியிலே குரவை ஒலியானது எழுந்து ஓங்கத் தெய்வநிலை போற்றினார்கள்.

**காரிப் பிரான்புதல்வர் கல்வித் தமிழ்வேதம்**
**பாரித்த முக்கூடற் பண்ணவனாம் நன்னாட்டில்**
**மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்**
**சேரிக் குரவையெழுந் தெய்வநிலை போற்றினரே.**

உலகமெல்லாம் மாதம் மும்மாரியாக மழைபெய்வதற்குத் தெய்வங்களை நாம் முறையாகப் போற்றி வந்தோமானால் கட்டாயம் அவை நமக்குக் கை கொடுத்து உதவிசெய்யும்.

**திங்கள்மும் மாரியுல கெங்கும் பெய்யவே**
**தெய்வத்தைப் போற்றி வந்தாற்**
**கைதருங் காண்...**

பள்ளர்கள் எல்லோரும் வாருங்கள். தோத்திரம் பண்ணுங்கள். பண்பாடிப் போற்றுங்கள். கூத்தாடித் தொழுது தொழுது வேண்டுங்கள். மழைபெய்யுமாறு அருள் செய்ய வேண்டி அழகரின் திருநாமங்களை வாழ்த்தி வாழ்த்தி அனைவரும் வேண்டுங்கள்.

**பூத்தலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே**
**புலியூ ருடையார்**
**கொள்ளப் பலிதானிடும்...**

### மழைக்குறி

உயிர்களுக்கு முத்தி தரவேண்டும் என்ற பெருங்கருணைப் பெருக்கினால் எழுந்தருளி வந்து முக்கூடலிலே கோயில் கொண்டிருப்பவர் மாதவராகிய முக்கூடல் அழகர். அவருடைய திருவடிகளின்பால் பக்திகொண்ட பள்ளச்சேரியிலுள்ள பள்ளர்கள் எல்லாம் புத்திசாலித்தனத்துடனே மேற்கண்டவாறு தெய்வநிலை போற்றினர். அதன்பின், வானத்து மேகங்கள் எல்லாத் திசைகளிலும் பெய்வதற்கு உரிய மழையின் குறியும் உண்டாயிற்று.

**முத்தித்தர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாட்**
**பத்திமற வாதபண்ணைப் பட்சேரிப் பள்ளரெல்லாம்**
**புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வானமுகில்**
**எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே.**

நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் வரப்போகிறதென்பதற்கு உரிய குறிகள் தோன்றுகின்றன. தென்மேற்குத் திசையிலே மின்னல் மின்னிக்கொண்டிருக்கின்றன. பறவைகள் வானத்திலே பறந்து ஆடிக் கொண்டிருக்கின்றன. முக்கூடலின் அழகருக்கு ஏற்றவரான பெரிய பண்ணையைச் சார்ந்த சேரியிலுள்ள பள்ளர் வகையினரெல்லாம் மழையினை வரவேற்று ஆடிப்பாடித் துள்ளிக்கொள்வோம். வாருங்கள்!

**ஆற்றுவெள்ளம் நாளைவரத்**
**தோற்று தேகுறி – மலை**
**யான மின்னல் ஈழ மின்னல்**
**சூழ மின்னுதே!...**

**போற்றுதிரு மாலழகர்க்**
**கேற்ற மாம்பண்ணைச் சேரிப்**
**புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்**
**துள்ளிக் கொள்வோமே...**

பொருநை நதியின் இந்தக் கரைக் கால்வாய் அந்தக் காரைக்கால்வாய் என்று ஏமமென்றும் சாமமென்றும் பாராமல் மழைபெய்ததும் நாமல்லவோ ஓடிப்போவோம். முக்கூடல் அழகரின் பண்ணையாட்டின் மிகுந்துள்ள சேரியிலே பள்ளர்கள் அனைவரும் குரவையிட்டு எழுவதற்குரிய நாள் இது. எல்லோரும் ஆடிப்பாடி எழுந்து வாருங்கள்.

**இக்கரைக்கா லிற்பொருநை**
**அக்கரைக் காலின் மழைக்**
**கேம மென்றும் சாமமென்றும்**
**நாமல்லோ போவோம்...**

**முக்கூடல் அழகர் பண்ணை**
**மிக்க சேரியில் - பள்ளர்**
**முழுதுங் குரவை யிட்டே**
**எழுதின மாடீர்...**

**பெய்த பெருமழை!**

நாட்டிலே மழை உறுதியாகப் பெய்யும் அல்லவோ? கருக்கொண்ட மேகமும், அங்ஙனம் காலூன்றிப் பெய்யத் தொடங்கி, அந்தக் கார் காலத்தின் தன்மையைக் காட்டியது.

**சூலா னதுமுதிர்ந்தால் தோன்றாகோ பேறுசெங்கண்**
**மாலாசூர் நன்னாட்டில் மழையுமந்த வண்ணமன்றோ**
**வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்**
**காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே…**

**வெளிறிய வானம்!**

கற்பக மரங்கள் செறிந்த பூங்காவிற்கு இறைவனாக விளங்குபவன் இந்திரன். அவனுடைய ஏவலினால் தம் பணியினை மேற்கொண்டு எழுந்தன கார்மேகங்கள், அவை கடலிலே படிந்து, அழகிய வானவில்லை வளைவாக வானிலே இட்டு விளங்கும். அதனால், கடலிலே துயின்றவரும், சிவதனுசை வளைத்தவனுமாகிய முக்கூடலுக்கு இறைவனாகிய அரியைப் போல் விளங்கும். போர் யானைகளைக் காட்டிலும் சினந்து மழைபொழிந்த பின்னர் உலகம் எங்கும் குளிர்ச்சி பெறுகின்றது. வானமோ, அதன்பின், தன் தலைவனின் களிறாகிய வெள்ளை யானையைப் போலத் தானும் வெளிறுவதாயிற்று.

**காவுக்கு இறைவ னாகும் இந்திரன்**
**ஏவற் பணிகொண் டெழுந்தகார்**
**கடலிற் படிந்து திருவிற் கோட்டி**
**அடல்முக் கூடல் அரியுமாய்ப்…**
**குளிருகின்றது கோன் களிற்றினில்**
**வெளிரு கின்றது வானமே!…**

**குளிரக் குளிர!**

அலையலையாக வரும் மேகங்கூட்டங்கள் அமுதத் தாரைகளாக மழையினைக் குளிரக் குளிரப்பொழியும். அந்த அமுதத் தாரையிலே மூழ்கிவரும் தலைவருடைய உடைதான் ஈரமாயிருக்கிறதே தவிர, அவருள்ளத்திலே கொஞ்சமும் ஈரம் ஏற்படவில்லையே?

**பாயுங் கருடப் பரியார்முக் கூடலிலே**
**காயும் பொருப்பென் களபத் தனிப்பொருப்பே**
**சாயும் புயலமுத தாரைகுளி ரக்குளிரத்**
**தோயும் பொருப்பர்கலை தோய்ந்தீரந் தோயாரே..**

**மலைச்சாரலில் மழை!**

வானத்திலிருந்து பெய்கின்ற மழையானது மலையின் மேல் வளங்களையும் கொள்ளையிட்டுப் கைப்பற்றிக் காட்டிற்கு வழங்கும் வள்ளல் போலப் பொழிந்தது என்கிறார் கவிஞர். தழைத்தலையுடைய சந்தனமரக் கொம்புகளை மோதித் தள்ளிக்கொண்டு மூங்கில்களின் முத்துக்களை உதிர்த்து அள்ளிக்கொண்டு வெள்ளம் வந்தது.

குறச்சாதியினர் வாழும் மேட்டுப்புறங்களில் அமைந்த ஊர்களிலும் வெள்ளம் புகுந்தது. பாலை நிலத்தைப் போன்று பாழாகிக் கிடந்த காட்டுப் பகுதியை அடைந்தது வெள்ளம்.

**வானக் கருவில் வள்ளலாய் வரைக்**
**கோனைப் பரிசு கொள்ளலாய்...**

**தழையின் ஆரம் உந்தியும் - பசுங்**
**கழையின் ஆரம் சிந்தியும்...**

**தினையை வனத்தில் உதிர்த்துப் பாலை**
**யனைய வனத்தை எதிர்ந்ததே...**

**இரவே வராதே!**

பால்போலப் பொங்கி வரும் ஆற்றினை உடைய அழகரின் முக்கூடல் இது. கால்வாய்களையும் ஆறுகளையும் கரை மறைத்துக்கொண்டு செல்லும் வெள்ளத்திலே ஒதுங்குவதற்குக் கரைகளைக் கண்டோமானாலும், காம மயக்கமாகிய பொங்கி எழும் வெள்ளத்திற்குத் தப்புவதற்குக் கரைகாணாமல் வாடுகின்றோமே? இரவே! நீ வருதலையாவது இனி விட்டு விடுவாயாக!

**பால்வெள்ளத் தாருடைப் பண்ணவர்முக் கூடலின்கண்**
**வேல்வெள்ளத் தாறெமது மின்னிறைக்குங் கார்காலம்...**

**பாலையிலே வெள்ளம்!**

பெருகிவரும் மழைவெள்ளமானது குறிஞ்சியாகிய மலைப்பகுதிகளைக் கடந்து கோடையின் வெம்மையினால் பாலைப்பட்டுப் போய்க் கிடந்த காட்டுநிலப் பகுதியைச் சேர்ந்தது. குன்றுகளையும் தள்ளிக்கொண்டு ஓடியது. பெருகிவரும் வெள்ளம், பாலையைக் கடந்து, விரைவாக முல்லை நிலத்திலே பரவியது.

**எதிரும் பாலை மரவமும் - திரள்**
**வெதிரும் பாலை குரவமும்...**

**கன்னி முலையிற் சுரந்தபால் என**

**முன்னி முலையிற் பரந்ததே...**

**சொல்லுங்கள்**

நன்னீர்ப் பெருக்கமுடைய மருதநிலத்தைப் போன்று நால்வகை வளங்களும் இங்கே உண்டாகிவிட்டனவே? அவற்றின் உண்மையை உணர்ந்து உவப்புடன் எனக்கு மெல்லச் சொல்ல மாட்டீர்களோ? தோழியரே!

**முந்நீர் அடுங்கணையார் முக்கூடல் மால்வரைபின்**

**மின்னீர் வரக்கான் விளங்கிநின்ற வாறேயோ...**

**முல்லைக்கு வந்த வெள்ளம்**

மலையிலே பிறந்த வெள்ளம் முல்லை நிலத்துப் பகுதியை வந்து சேர்ந்துவிட்டது. மதங்கொண்ட களிற்றுயானையைப் போல இப்படித் தன் போக்கிலே எதிர்பட்டதை எல்லாம் சாடிக் கொண்டு கடைசியாக மீன்கள் துள்ளிக் கொண்டிருக்கும் மருத நிலத்துக் குளங்களிலே சென்று வெள்ளம் பாய்ந்தது.

**முல்லைக் கோடி யடுக்கையின் - மலி**

**கொல்லைக் கோடி கடுக்கையின்...**

**தோழியின் வருத்தம்**

தலைவியின் வருத்தத்தைக் கண்டு, இவள் படும் வேதனையைத் தணிவித்துத் தேற்றுவா் யாவரோ? எனத் தோழி கலங்கினாள்.

**குன்றைக் குடைகவித்த கோவலா்முக் கூடலிலே**

**இன்றைக் கிரவில் இவளைஎவா் தேற்றுவரே...**

**மருதத்திலே வந்த வெள்ளம்!**

தான் வந்து பாயும் மருத நிலமெல்லாம் செழிப்பு அடையவும், பணைத்து வளர்த்து வானத்தைத் தடவுவது போல உயர்ந்திருக்கும் மருதமரங்கள் தவிர்க்கவும், எருமைக்கடாக்கள் பூட்டிக் கமலை இறைத்து நீர் பாய்ச்சும் மேட்டு நிலப்பகுதிகளிலும், நீர்ப் பெருக்கினையுடைய வெள்ளம் குட்டங்களிலும் பாய்ந்தது.

மருதநிலத்துக் குடிசைகளையெல்லாம் பெயர்த்துக் கூட்டித் தன்னுடன் வாரிக்கொண்டு மழை வெள்ளமானது நெய்தல் குடிசைகளை நோக்கிச் சென்றது.

**பாயும் மருதஞ் செழிக்கவே – பணை**

**தோயும் மருதம் தளிர்க்கவே...**

**காயும் தவள வாரணம் - எதிர்**

**ஆயந் தவள வாரணம்**

**கழனிக் குடிலைத் தொகுத்து – நெய்தல்ந்**

**துழனிக் குடிலுற் புகுத்ததே…**

**அன்றிற் குலங்காள்!**

பொருநை நதிக்கரையிலே துணையை விட்டுப்பிரியாத அன்றிற் பறவைக் கூட்டங்களே! கடவுளும் கைவிட்ட என் நிலைமையினை நீவிராவது எம் காதலனிடஞ் சென்று சொல்ல மாட்டீர்களா?

**மூன்றிற் குடவளையூர் முக்கூடல் ஊரர்செய்த**

**நன்றிக்கு இணையில்லை நான்நெடுமால் ஆனேனே!...**

**நெய்தலிற் புகுந்த வெள்ளம்!**

நெய்தல் நிலப்பகுதிகளை எல்லாம் நிலைகலங்கி மயங்கிப் போகுமாறு செய்தது ஆற்றுப் புதுவெள்ளம். மக்கள் தமக்கோர் புகலிடம் கிடைத்திடாமல் உழன்று வெள்ளத்தை இகழ்ந்தனர்.

**புகுந்த நெய்தலை மயக்கியே – மலர்**

**மிகுந்த நெய்தலைக் கயக்கியே…**

**சங்கம் தாங்கேனே!**

தலைவன் வரக் காணாது அவனை எதிர்நோக்கிக் கடற்கரையிலே கண்பூத்துக் கலங்கி நின்றாள். எதிரே தோன்றும் மரக்கலமும், சங்கமும் அவள்பால் வேறு நினைவுகளை எழுப்புகின்றன. அவற்றை நோக்கி அவள் ஏக்கத்தைக் கூறுகிறாள்.

**கங்கமே யூரும் கடவுள்முக் கூடலிலே**

**தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே…**

**பொருநை வெள்ளம்**

பலவகை மீன்களை அடி மணலிலே புதைத்தும் மணல் மேடுகளில் ஒதுக்கியும் கடல் போன்ற நம் முக்கூடல் அழகரின் பெருங்கருணையானது பெருக்கெடுத்து வருவதுபோலப் பொருநையாறு பெருகி வருகின்ற புதுமையான காட்சியைப் பாருங்களடீ, பள்ளியர்களே!

**உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலில்**

**உதரங் கீறியதிரும் நீர்**

**உதய வரைக்கும் பொதிய வரைக்கும்**

**ஒத்துப் போகும்படி முற்றும் போய்…**

**சித்திரா நதியில் வெள்ளம்!**

சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். அந்தச் சித்திராநதி பெருகி வருகின்ற அழகினைப் பாருங்களடி பள்ளியர்களே!

**குற்றாலத் திரிகூட மால்வரை**

**யுற்றே மேகம் பொழிந்தநீர்...**

**சித்தி ராநதி பெருகி வர**

**சித்திரம் பாரும் பள்ளீரே...**

## 4. குமுறல்! கொடுமை!

**பண்ணை விசாரிப்பான்!**

ஆறு கரைபுரண்டு பரவிச் சென்றது. அதற்கப்பாலும் பெருகி ஓடிற்று. முக்கூடலழகரின் சிறந்த விளைவுகளைத் தரும் பண்ணையை விசாரிப்பவனும் ஆற்றைக் கடந்து வந்து சேர்ந்தான்.

**ஆறுபரந் தப்பாலும் அந்நிலத்தார் இந்நிலத்திற்**

**பேறுடனே மற்றநிலப் பேறும் பெறநினைந்தே...**

**பண்ணைக்காரன்!**

மாறுகண்கள், வழுக்கைத்தலை, தாறுமாறான மீசை, கடாவைப் போன்ற நடை இப்படியாகச் சக்கரப்படை வீரரான முக்கூடலழகரின் பண்ணைக்காரன் வந்தான்.

**மாறு கண்ணும் பருத்திடைப்பைக்**

**கூறு வயிறும் - கீரை**

**மத்துப்போல் தலையும் சுரை**

**வித்துப் போல் பல்லும்...**

**வீரனார்முக் கூடற்பண்ணைக்**

**காரனார்வந் தார்...**

மூத்தப்பள்ளியைப் பார்ப்பார். அவர் பேச பதில் சொல்லுவாள். அவர் எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டே இருப்பார். தாம் வருவதை எதிர்நோக்கிக் காத்திராத பள்ளனைப் பரமார்த்தி என்று சொல்லிச் சீறுவார். சிறுபொழுது குச்சிலே சென்று கண்ணைச் சாய்ப்பார். இவர்தான் முக்கூடல் பண்ணைக்காரனார்.

**மூத்த பள்ளி முகம் பார்த்து**

**வார்த்தை சொல்வாராம் - பெரு...**

**கண்ணைச் சாய்ப்பாராம் முக்கூடற்**

**பண்ணக்காரனார்...**

**மூத்த பள்ளி முறையிடுகிறாள்!**

தயிலத்தைப் பூசிய கூந்தலையுடையவள் மூத்தபள்ளி. அவள், பண்ணையாரோடு பள்ளன் மனத்திலேயும் கள்ளத்தனங்கள் எல்லாவற்றையும் சொன்னாள். என்னை ஏமாற்றி ஊர்ப்பெண்களுடன் திரிகிறானே இவன்? அந்தப் பெண்களின் வாழ்வு என்னவாகும்? நீங்களே சொல்லுங்கள். இப்படி நியாயம் பேசுகிறாள் மூத்தவள்.

**வெண்ணையார் வாயினிசை வேயழகர் மாயமிதோ**

**பெண்ணையார் கையிற் பிடிப்பார் பிடிப்பாரே!**

**மெய்தான் ஆண்டே**

சின்னத் தனங்கொண்ட இந்தப் பள்ளன் எல்லோரையும் ஏய்த்து ஆடுகின்ற வெளியாட்டத்தைக் கொஞ்சங்கேளுங்கள். எதற்கெடுத்தாலும் கோபம். என் புத்திமதிகளையும் கேட்கமாட்டேன் என்கிறான். என்னை வந்து திட்டினாலும் திட்டுவான். ஆனால் ஆண்டையே! இவையெல்லாம் உண்மையே தான்.

**தூக்குணிப் பள்ளன் - ஏய்க்கிற ஆட்டத்தைத்**

**துக்கிணிக் கேளும் - முக்காலும் சொன்னேன்...**

**வாக்கு வாதமுண் - டாக்கினாள் என்றென்னை**

**வைதாலும் வையும் - மெய்தானி தாண்டே...**

மாட்டைத் தொட்டு அவிழ்த்துவிடக்கூட மாட்டான். ஊரெல்லாம் திரிவான். அவன் ஏதாவது சொன்னால் சட்டியை எடுத்து ஓங்குவாளெ அவள். அவளை இந்த வீட்டிலே அதிகாரம் பண்ணை வைத்து விட்டான். நெல்லை எல்லாம் தண்ணீராகிய கள்ளுத் தண்ணீருக்கு விலையாகப் போட்டு அழித்துவிட்டான். ஆண்டையே!

**கட்டின மாட்டைத் - தொட்டவிழான் ஒருக்**

**காலுந் தானுழக் - கோலுங்கை தீண்டான்...**

**இளைய பள்ளி கூறுகிறான்**

தன் மாற்றாள் சொன்னதைக் கேட்டாள் மருதூர்ப் பள்ளி. பண்ணையாளர் பள்ளன் இருவருடைய தொடர்பும் இரண்டுபட யார்தான் பொறுப்பார்கள்? தம் கணவருக்கு ஒரு சிறுமை வராமல் பெருமை வரும்படி செய்யும் பெண்கள் திருமகளைப் போன்றவர்கள் அல்லரோ? அவர்களின் பெருமையைக் கூறி உணர்வதும் நமக்கெல்லாம் அரிதாகும் அல்லவோ?

**மாற்றவள் தன்சொற்கேளா மருதூரிற் பள்ளியுந்தான்**

**ஏற்றபடி சொன்னாள் இரண்டுபடில் யார்பொறுப்பார்...**

**அழகர் அறிவார்!**

படுத்துக்கிடந்த பள்ளனை முக்கூடற்பள்ளி எழுப்பி, வேலைக்குப்போ என்றாள். வேலைக்குப் போனவன் வரவில்லை. இன்றோடு மூன்றாவது நாளாயிற்று. இந்த உண்மையை எல்லாம் அழகர் அறிவார் ஆண்டையே!

**குடிலிற் கிடந்த பள்ளனை முக்கூடற்பள்ளி**

**கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்...**

நீர் மூன்று வேளையும் சோறு உண்பதற்காக அவனை இப்படியெல்லாம் நடத்திக்கொண்டு விட்டீர். நீர்தான் சேதம் அடைந்தவராரீர் இந்த அடியாளுக்கு என்ன?

பெரிய கலுங்கிலே வீழ்கின்ற தண்ணீர் மறுகால் நிலையாதென்று பார்த்தவர்களை சொன்னார்கள். இன்னதென்று யான் அறியேன். நான் என்ன செய்வேன் ஆண்டையே!

**முப்பாலுஞ் சோறும் உண்ணவே – நடத்திக் கொண்டீர்**

**மூப்படியா னும் புறப்பட்டான்...**

**கண் சிவந்தான்!**

தென் மருதூர்ப் பள்ளியே! பள்ளனை உன் குடிசைக்கு உள்ளேயே வைத்துக்கொண்டு என்னுடன் பொருத்தமற்ற பொய்வார்த்தைகளை எல்லாம் சொன்னாய். கண்கள் சிவக்க, இல்லாவிட்டால் உன்னைக் கசையால் அடிப்பேன் என்று சீறினான் பண்ணைக்காரன்.

**திசைபோன சூதுகற்ற**

**தென்மருதூர் பள்ளிக்கள்ளி...**

**கசையால் அடிப்பனென்று**

**கண்சிவந்து கூறினனே...**

**பள்ளன் வந்தான்!**

பண்ணைக்காரன் சொன்ன கடுமையான வார்த்தையால் பள்ளன் வெளியே வந்து நின்றான். வீணாகத் துள்ளாட்டம் போடாதடா! பண்ணை பற்றிய செய்திகளைக் கூறடா என்றான்.

**கடின உரையைக் கேட்டு**

**வடிவழகக் குடும்பன்...**

**துள்ளாதே பண்ணைச் சோதி**

**விள்ளடா என்றான்...**

**பள்ளனின் பதில்**

பத்து அவதாரங்களை எடுத்தவர் முக்கூடல் அழகர். சொத்துவகைகள் எல்லாம் கூட்டி, வரத்தும் செலவும், வைத்திருக்கும் இருப்பும் எல்லாம் குடும்பன் கொஞ்சமும் மாறுபாடில்லாமல் சொன்னான்.

**பத்துவுரு வத்தழகர் பண்ணையான் கேட்டபடி**

**வித்துவகை மாட்டுவகை மேழிஏர்க் கால்முதலாய்க்...**

பயிரிடாமல் சோம்பிக் கிடக்கும் கள்ளத்தனமுடைய பள்ளனல்லவே நான்? உழவுதான் என்றால், ஒரு பன்றி உழுந்தரையளவு ஒன்று மட்டுமேயல்லாமல், அடுத்து

இரண்டாவது தரைகூட எனக்குக் கிடையாதே. கதிர் முளைத்தாலும், அதற்காகப் பாடு படாமல் சோம்பிக் கிடக்க முடியுமோ? பண்ணை ஆண்டையே!

**பழகி னீர் அறி வீரென் சமர்த்துப்**

**பயிரி டாக்களப் பள்ளல்ல வேநான்…**

**வித்து வகை?**

நானும் பலபல வெள்ளாண்மை இட்டேன் என்ன பயன்? நெல்லையும் கண்ட லங்காரருடைய தொண்டர் கூட்டத்திற்குப் பொங்கிப் போட்டு விட்டார்கள். மச்சுமுறித்தான் என்ற நெல்லைக் காட்டிச் சொல்லவொண்ணாத அழகுடைய தேவதாசிகளுக்கு, அவர் முன் அதுவும் தீர்ந்தமையால், சொறி குரும்பை நெல்லை விற்றவர் பலர் ஆண்டையே!

**பலவெள் ளாண்மையிட் டேன்மணல் வாரியைப்**

**பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்…**

பல் நெல்வகைகள் திருவிழாவிற்கு உணவாகி விட்டது. மறுவில்லி, நீலம், வில்லூன்றி முதலியவை எல்லாம் சற்றும் வெளியே தலைகாட்டாமல் மறைத்து போய்விட்டன. அங்குமிங்கும் இப்போது விதைத்துக் கொண்டிருப்பதெல்லாம் பாரக் கடுக்கன்தான் ஆண்டையே!

**எங்கும் போற்றும் பெருவெள்ளை முன்னம்**

**இராமர் சேனைக்குண் டாம்படி யாச்சு….**

எல்லாம் செலவிட்டு மிஞ்சியிருந்தது இராசவாணன் என்னும் நெல் ஒன்றுதான். மிதமிருந்த நெல்லையும் மகாராசர்கள் நமக்கு உரியதாக்கிக் கொள்வார்கள். இனிவரக்கூடிய வித்துக்களை குருகைமாறன் என்பவனிடத்திலே கேளுங்கள் ஆண்டையே!

**ஈடி லாவகைக் கின்னம் எழுதி**

**இராச வாணனை இரண்டுபங் கிட்டு**

**தேடி னாலவர் முன்னின்ற பாதியுஞ்**

**சேர்த்துக் கொகள்வார் மகாராசர் தாமே…**

**மாடுகள்? மாடுகள்?**

முக்கூடலழகரின் பண்ணைக்கு உழவு மாடு எங்கே இருக்கிறது? எதிரில்லாத மயிலையை ஒரு செட்டி பிடித்துக் கொண்டுபோய் விட்டான். அது வெறும் பெட்டை என்று வேறு பலரும் சொல்லுகிறார்கள். ஆண்டையே! நான் என்ன செய்வேன்?

**அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்**
**அழகர் பண்ணைக்கு உழவுமா டெங்கே?...**

ஒற்றைக் கொம்பனை தாண்டவராயன் கோயிலுக்கு உள்ளேயே அடைத்து வைத்துவிட்டான். மற்றைக் காளைகள் எல்லாம் நம் நயினார் வடமலையப்பர் இருக்கிறாரே அவர் பேரிட்டு எல்லாம் கோயிற்காளைகளாகத் திரியும். புற்றைக் காத்துக்கிடக்கும் பாம்பு அதைக் கடித்துவிட அது அந்த நஞ்சைப் பொறுக்கமாட்டார்கள். வானத்தை நோக்கிப் பறந்துக்கொண்டிருக்கும், ஆண்டையே!

**ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்**
**உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைந்தான்...**

**ஏர்க்கால்கள் இல்லை!**

மருதப்பர், நானூறு கொழுக்களையும் கொண்டுபோய்விட்டார். காமன் இருக்கிறானே, அவன், வந்து கேட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் உதவுதல் கருதி, இருந்த எல்லாக் கலப்பைகளையுமே கொடுத்துவிட்டான், ஆண்டையே! நான் என்ன செய்வேன்?

**திருமுக் கூடல் அழகர்க்கு இளைய**
**தெரிவை நீலியைத் தேவியாய்க் கொண்ட...**
**கருதிப் பெண்ணுக்கும் ஆணுக்குங் காமன்**
**கலப்பை முற்றுஞ் செலவிட்டா னாணடே...**

**நுகங்கள்! வடங்கள்!**

உழுவதற்கு ஒரு நுகத்தைக்கூடப் பகலெல்லாம் தேடியும் என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. இராத்திரி தேடினால் பூரான் வேறு என்னைக் கடிக்கப்பார்த்தது. என்ன செய்வேன் ஆண்டையே?

**அனக னாறை வருநயி னாத்தை**
**அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்...**

**இடையனைக் கூட்டி வாடா!**

என்னிடம் உழுவதற்கு எதுவுமே இல்லை என்று சொன்ன பள்ளனின் ஏமாற்றுப் பேச்சுக்களைக் கேட்டான் பேய்த்தனமுடைய அந்தப் பண்ணைக்காரன். முதலில், நீ போய்க் குற்றமற்றவனான அந்தச் சாதி இடையனைக் கூட்டிக்கொண்டுவா பள்ளா? என்று அந்தப் பள்ளனை ஏவினான்.

**ஏது செய்வேனென் றோதிய பள்ளன்றன்**
**ஏய்ப்புக் கேட்டந்தப் பேய்ப்பண்ணைக் காரன்...**

**தேடி நடந்தானே!**

முக்கூடல் அழகரின் பண்ணை வயல்களில் பண்ணைக்காரன் சொன்னபடியே ஒப்பில்லாத பள்ளனும் உள்ளத்திலே மகிழ்ச்சியுடையவனாகப் பண்ணைக்கார நயினார் சொன்னபடியே ஆயர்களின் வீடுகளை நோக்கி நடந்தான்.

**மைப்புயலே போலும் வடிவழகர் பண்ணைவயல்**

**அப்படியே தப்பாமல் ஆடுவைக்க வேணுமென்றே...**

**பள்ளன் விடைபெறுதல்!**

ஆண்டையே உம்மைத் தொழுது விடைபெற்றுக் கொண்டுபோய், ஆடுகளைத் திரட்டி வயலுக்குக் கிடைக்காகவும் புறப்படுவேன் என்றான். உழவுவயல் உள்ளதெல்லாம் ஆட்டுக்கிடைமறிந்து உரம் வைப்பேன் ஆண்டையே என்றான் பள்ளன்.

**வீறான முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற**

**மாறாமல் ஆடுகொண்டு வருவேன்காண் ஆண்டை...**

**கோனேரிக்கோன் வந்தான்!**

தன் கையிலுள்ள தடியைச் சுழற்றிக் கொண்டு பள்ளன் சென்றான். சங்கத்தமிழின் வளம் நிறைந்திருக்கும் அழகருடைய முக்கூடல் ஆலயத்தை வழிபட்டுப் போற்றும் கோனேரிக் கோன் என்பவனும் வந்து தோன்றினான்.

**கண்டார் பயப்படத்தன் கையிற் சுழற்றுதடி**

**செண்டாடிக் கொண்டு பள்ளன் சென்றழைத்த சொற்படியே...**

கோலினை ஒரு கையிலே வைத்துக் கொண்டு, பால் கறக்கும் கடைக்காலையும் ஒரு கையிலே தூக்கிக்கொண்டு, கோனேரிக் கோன் ஆட்டுக்கிடைகளை ஓட்டிக்கொண்டு வந்தான்.

**பாலளையில் உற்ற மணம்**

**மேலளைய நெற்றி யுடல்...**

**கோலொருகைக் கொண்டகடைக்**
**காலுமொரு கைதூக்கிக்**
**கோனெரிக்கோள் ஆட்டுக்கிடை**
**கொண்டு வந்தான்...**

**கோனடா குடும்பா!**

கலிகாலத்தின் கோலம் என்பதை அறிவாய் குடும்பா! நாதக்கோன், முக்கூடலின் ஆதிக்கோன், அவனுடைய பண்ணை வயல்களிலெல்லாம் உரமேற்றும் கோன் நான் ஒருவனே தானடா குடும்பா!

**பூதக்கோன் பொதுவாட்டை**
**வாதுக்கே ஒரு பாம்பும்**
**புலிங்காத் திருக்குமது**
**கலிகண்டாய் குடும்பா!...**

நாதங்களுக்கெல்லாம் கோமானாக விளங்கும் நம் முக்கூடலின் இறைவர், ஆதியே தோன்றிய கோமான், அவருடைய பண்ணை வயல்களுக்கு உரமேற்றும் கோனார் நான் ஒருவனே தானடா!

**மூத்த பள்ளி முறையீடு**

பள்ளன், இளையாளின் வீட்டிலே தங்கிவிட்டான். அதனைக் கண்டதும் மூத்த பள்ளியினுடைய பொறாமை உள்ளம் குமுறிற்று. ஆவேசங்கொண்டாள். ஓடிச்சென்று பண்ணைக்காரனிடம் பள்ளனின் செயலைப் பற்றி முறையிடத் தொடங்கினாள்.

பள்ளன்மீது போர் தொடுத்தவளாகச் சென்று முக்கூடற் மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் முறையிட்டாள்.

**இடையரைக்கொண் டேவயலில்**
**ஏவிஇளை யாள் குடிலிற்**
**கிடைநமக்கு நல்ல**
**கிடையெனச்சென் றான்குடும்பன்...**

அழகரும் என்னைத் தடுத்தாட்கொள்ள மனமின்றி போய்விட்டார். இந்த நியாயத்தைக் கேளாமலும் இருக்கின்றார். இவனைக் கொண்டு போய்க் கொடிய சிறைச்சாலையிலே அடைத்துப்போட்டால்தான், இவன் வேலையிலே வளைவான் ஆண்டையே!

**அடுத்திடும் வீட்டார் சொல்லிக்**
**கொடுத்திட மாட்டார் - கிடைதான்**
**ஆட்டினிற் கிடையோ - இளையவன்**
**வீட்டினிற் கிடையோ?**

கரத்தோடு தொழுமரமும் புதிதாகத் துளைத்த மரத்தோடு கரமுமாகச் சேர்த்து இரண்டு கால்களிலும் விலங்கினையும் கொஞ்சம் பருமனாகவே பூட்டி வைப்பீர் ஆண்டையே!

**கரத்தொடு மரமும் - பசும்புரை**
**மரத்தொடு கரமும் - சேர்த்திரு**
**காலினில் விலங்கும் பருக்கவே**
**கோலுவீ ராண்டே.**

ஊனுக்குள்ளே கலந்திருக்கும் உயிராகவும், பூமிக்கும் வானுக்குமாக வளர்ந்தோங்கும் பயிராகவும், அவருக்குத் தொண்டு செய்து உதவும் பள்ளன் வேண்டுமானால், அவன் இனிப்பத்திரம் ஆண்டையே! பத்திரம்!

**ஊனுக்கு முயிராம் - பூமிக்கு**
**வானுக்கும் பயிராம் - அழகருக்**
**குதவும் பள்வேண்டில் - அவனினிப்**
**பதனங் காண் ஆண்டே...**

எல்லாவற்றையும் இந்தப் பூமிக்குள் மறைத்துப் போட்டான் பணத்தைப் பலபேருக்கும் வாரி வாரி இறைத்துப் போட்டான். மிகவும் காதல் பைத்தியம் பிடித்து அலைகிறான். அவனைச் சவுக்கையிலே அடைத்து வைப்பீர்! ஆண்டையே!

**பாருக்குள் மறைத்தான் - பணம்புல**
**பேருக்கும் இறைத்தான் - மெத்தவும்**
**பைத்தியந் தொடுத்தான் - சவுக்கிளில்**
**வைத்திடீ ராண்டே!**

பூனைக்குட்டிப் போலப் பதுங்கிப் பதுங்கிப் பேசும் சொல்வரிசையாகிய மோனைக் கட்டுடன் அவன் தன்னுடன் முழுப்பொய்யான செய்திகளையே கொண்டு வருவான் அவனைப் பிடித்துச் சிக்கெனத் தொழுமரத்திலே அடித்துவையும் ஆண்டையே!

**பூனைக்குட்டிப் போல் - பதுங்கிச் சொல்**
**மோனைக் கட்டுடனே – அவன் முழுப்**
**பொய்கொண்டு வருவான் - சிக்கென**
**வையுங்கொண் ஆண்டே!**

அவனோடு நீரும் பேச்சுக் கொடுத்துப்பாரும். மரத்திலுள்ள கணு செதுக்குவாய்ச்சியால் செதுக்கினால் தான் போகும் இவன் பயப்பட வேண்டுமானால், பிடித்தது பிடியாய் இவனைக் குட்டையில் மாட்டி அடித்துவையும் ஆண்டையே!

**பேச்சிட்டுப் பாரும் - மரக்கணு**

**வாச்சிக்குத் தீரும் - பயப்படப்**

**பிடித்தது பிடியாய்க் - குட்டையில்**

**அடித்திடும் ஆண்டே!**

**பள்ளன் வந்தான்**

பண்ணைக்காரரிடம் பழிசொல்லிவிட்டு மூத்தபள்ளி போய்விட்டாள். முதலில் பொய் பேசிய பள்ளன், மீண்டும் வயலுக்கு எருவைத்துவிட்டு, அந்த வயலிலிருந்து வருபவனைப் போல, வந்துகொண்டிருந்தான்.

**பள்ளன் மீண்டுமெரு**

**வைத்துவய லுற்று**

**வருவதுபோல் வந்தானே...**

**பள்ளன் சொல்லுதல்**

வெவ்வேறு பேரிட்டுச் சொல்லப்படும் வயல்களாக உள்ளவெல்லாம், ஆட்டுக்கிடைகளை மறித்து எருவைத்துவிட்டு இன்றுதான் திரும்பினேன். இன்னுந் தேவரீர் கட்டளையை விரும்பி வந்திருக்கிறேன். ஆண்டையே!

**சேரச் செய்பல**

**பேரிட்டுள்ள தெல்லாம் - எருவைத் தேயின்று**

**திரும்பி னேனின்னந் தேவரீர் ஏவல்**

**விரும்பி னேனாண்டே!**

**மரக்கட்டை சேர்த்தான்**

பண்ணைக்காரன் சினத்தால் தன் கண்கள் சிவந்தவனாக அங்கே வந்த பள்ளினின் காலிலே மரக்கட்டையைச் சேர்த்து, அவனைக் காவலில் வைத்தான்.

**சிந்தைதொட்டுப் பாரெனக்கண்**

**சிவந்துபண்ணைக் காரனங்கே**

**வந்தபள்ள ன்தன்காலில்**

**மரக்கட்டை சேர்த்தானே...**

## 5. விடுதலை! விளக்கம்!

### இளைய பள்ளியின் வருத்தம்

அந்த முக்கூடற் பள்ளி, அவள் ஒரு பழிகாரி, தன்னைத் தாலி கட்டின பள்ளனென்று கூட, முகத்தைப் பார்த்து இரக்கம் கொள்ளாமல், எங்கோ எந்த வழியாகவோ போகும் களவுகளையெல்லாம், உன் தலையின்மேல் அழுத்திக் கட்டிவிட்டு, உன்மேல் தான் கொண்ட ஆசையைக் காட்டிவிட்டாளே?

**பழிகாரி முக்கூடற்பள்ளி – சரடுசெய்த**

**பள்ளனென்றும் முகம் பாராமல்...**

### பள்ளன் தேற்றுதல்

மூத்தப்பள்ளி இங்கே வருவாள். ஏதோ நம் உறவுக்கு நடுவே தெய்வம் புகுந்து நம்மை இப்படிச் சோதித்துவிட்டது. ஐயோ! நம் பண்ணை நயினார்க்குச் செவிகூடக் கண்ணாயிற்றே! நீ விரைந்து இங்கிருந்து போய்விடு. சும்மா, சேற்றிலே கல்லெறிந்த கதைபோல அவளிடம் ஏதும் பேச்சுக் கொடுத்து வாங்கிக்கட்டாதே, வருவதெல்லாம் எப்படியும் வந்தே தீருமடீ, என் மருதூர் பள்ளி!

**நடுவே தெய்வஞ் சோதிச்சுதையா – பண்ணை**

**நயினார்க்குஞ்செவி கண்ணாச்சே**

**வடுவந்தால் மறைக்கப்படுமோ – வருவதெல்லாம்**

**வந்துதீரும் மருதூர்பள்ளி...**

### உண்பானோ ஆண்டே!

முக்கூடற் பள்ளி இளையாள்மீது பள்ளன் மோகங் கொண்டு தன்னை வெறுத்தான் என்ற ஆத்திரத்தினால், அவனைப் பழிவாங்க அப்படியெல்லாம் சொன்னானேயல்லாமல், அவளுக்கும் அவன் மீது அன்பில்லாமல் இல்லை. அவன் சிறைப்பட்டுக் கிடப்பதறிந்த அவள், கறியுஞ் சோறும் சமைத்து எடுத்துக்கொண்டு, அவனுக்குக் கொடுக்க வருகிறாள். அதற்காகப் பண்ணைக்காரனிடம் பொய் சொல்லவும் அவள் தயங்கவில்லை.

**எங்கே கிடக்கிறான் பள்ளன் - நயினாரே**

**ஏறா விண்ணப்பம் ஒன்றுண்டு**

**செங்காள் எனக்கு மூத்தவன் - ஏதுக்கோ**

**தெய்வத்துக் காக்கி வைத்தானாம்...**

**சோறு கொணர்ந்தாள்!**

தன்னுடைய கணவனுக்குத் தாரம் இரண்டு ஆனாலும் அவனைத் தேடி உணவுடன் வந்தாள். பண்ணைக்காரனுக்கு அவளே பள்ளன் மீது சினம் ஊட்டியவள் ஆகையால் வேறொரு காரணம் சொல்லி, பள்ளனுக்குச் சோறு கொண்டு வந்தாள்.

**தாரமிரண் டானாலுந்**

**தன் கணவன் வாஞ்சையினால்**

**வாரமுடன் முக்கூடல்**

**வந்தபள்ள தந்திரமாய்க்...**

**பள்ளனிடம் சென்றாள்!**

மருதூர்ப்பள்ளி, நான் பேசின பேச்சுக்களையும் கேளாமற் போய்விட்டாய், தான் செய்த தீவினையானது மீண்டும் தன்னையே வந்து பொருந்தச் சுற்றிக்கொண்டேயிருக்கும் என்ற விதிதான் பொய்யாகப் போமோ? முக்கூடற்பள்ளா, சொல்வாயாக!

**மருந்துக் கள்ளி மருதூரிற் பள்ளி**

**வடகரைவிட்டு வந்த பிறகு**

**திருந்தப் பேசின வார்த்தையுங் கேளாய் நான்**

**தெற்கே பார்த்தால் வடக்கே நீ பார்ப்பாய்...**

**பள்ளன் சொன்னாள்!**

கடந்துபோன செய்திகளைப் பற்றியெல்லாம் எதற்காக இப்போது சொல்லவேண்டும்? ஒருவருக்கு விருந்து வைத்த பின் அவருடைய தலையை வெட்டினவர் யாராவது உண்டோ? கிண்டலாகக் கொஞ்சத்தனமான பேச்சுக்களைச் சொல்லாதே வாயிலேயுள்ள தண்ணீரைக் குடித்தாலும் குடிக்கலாம். பண்ணை நயினாரைக் கெஞ்சி, என்னை மன்னிக்கும்படி கேட்டுப் பாரடீ முக்கூடற்பள்ளி!

**மிஞ்சிப் போனதை ஏன்சொல்ல வேணும்**

**விருந்து விட்டபின் வெட்டினர் உண்டோ...**

**அவள் சொன்னாள்!**

மனம் பேதவித்துப் பொய் நிலைவாசலிலே முட்டுவிட்டுப் பின்னர்க் குனியும் பழைய கதையினை இப்போது நீ மெய்ப்பிக்கிறாய். அரண்மனைக் காரியம் எல்லாம் என்னுடைய கைக்குள்ளேயேவா இருக்கிறது? வடிவழகரின் திருநாமத்தையுடைய பள்ளனே! அவள் வட்டிலுக்குள் வாய் வைத்ததெல்லாம் அன்று சரியாயிருந்தல்லவா? அவளையே போய்க் கேட்டுச் சொல்வாயாக.

**முட்டிவிட்டு குனியும் பழங்கதை**

**மூத லிக்கிறாய் பேதலித்துப்போய்...**

**மீண்டும் வேண்டுகிறான்**

உனக்குப் பக்குவம் இப்படி என்று நான் சொல்லித் தருவதற்கு ஒரு நீதியுண்டோ? நீ வார்த்த கஞ்சியைக் குடித்துவிட்டு, நீ கிட என்ற இடத்திலே விழுந்து கிடப்பேன். அந்த விக்கல் வாய்ப்பண்ணை ஆண்டவரைக் கேட்டு, என்னை நீயே மீட்டுக்கொள்ளடீ. முக்கூடற்பள்ளி!

**பக்குவஞ் சொல்ல நீதியோ நானிந்தப்**

**பாடுபட்டும் இனியறி யேனோ...**

**ஆண்டவர்முன் சென்றாள்**

ஆணைகளிட்டுச் சத்தியமாகச் சொன்ன பள்ளன் சற்றும் மனங்கோணாமல் இருக்கும்பொருட்டு, அவனுக்குப் பலபல புத்திகளையும் சொல்லி, நான் போய் உன்னைச் சிறைமீட்பேன் என்று எழுந்தாள் மூத்தபள்ளி. பண்ணைக்கார நயினாரின் முன்பாகச் சென்றாள்.

**சத்தியமாய்ச் சொன்ன பள்ளன்**

**சற்றுமனங் கோணாமல்**

**அத்திசையில் நின்றுபண்ணை**

**ஆண்டவர்முன் சென்றாளே...**

**வேண்டினாள்!**

ஆண்டையே! கையாளக் கண்ட களவெல்லாம் பொறுத்துக் கொள்வீரே, பள்ளன் கிடக்கும் காவலைக் கண்ணாலே பார்க்கப்படாது. அவ்வளவு பரிதாபமாயிருக்கிறது ஆண்டையே!

**ஐயா பராக்குப் பராக்கும்மைக்**

**கும்பிட்டே னாண்டே – உம்மை**

**காவலைக் கண்ணாலே**

**பார்க்கப் படாதுகாண் ஆண்டே...**

**அவளால் வந்தது!**

ஏதோ தர்மத்துக்காகவாவது இந்தப் பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். வன்மத்தைக் கொண்டு பார்த்தால் அதற்கு இவன் ஓர் இலக்காக ஆவானா? எல்லாம் அந்தத் தென்மருதூர்ப் பள்ளியினால் வந்த பொல்லாப்புப் பாருங்கள் நயினாரே?

**தன்மத்துக்கிந்த பிழையைப் பொறும்**

**எங்கள் ஆண்டே – முலை...**

**மருதூரிற் பள்ளியால் வந்தபொல்**

**லாப்புக்காண் ஆண்டே!**

**தேவரீர் சித்தம்**

பள்ளன் இல்லாமற் போனால் பயிரிடுபவர் யாரோதான் பண்ணை ஆண்டையே? உணவுப்பொருள்களைத் தன் உழைப்பினாலே தேடிக்கொண்டு தரும் பள்ளன் நீங்கள் பெற்ற பிள்ளைக்குச் சமமானவன் ஆண்டே!

**ஆடிக்கா லாவதி வெள்ளாமை நாளாச்சே**

**ஆண்டே – பள்ளன்...**

**விடுவிக்க வேண்டும்!**

கட்டளைபடியே புத்திமதிகளைக் கேட்டு அவன் நடப்பான். பள்ளனுடைய கால் மரத்தை நீக்கி அவளை விடுவிக்க வேண்டும் ஆண்டையே!

**சட்டமேல் சட்டம் பிழைத்தாலும்**

**பெண்பிள்ளை ஆண்டே – பொல்லா...**

**வகை சொன்னான்**

பண்ணையானும் மூத்தபள்ளியின் வேண்டுதலுக்கு இணங்கினான். பள்ளனைக் கால்சேர்த்து மாட்டி வைத்திருந்த மரத்தையும் சுழற்றிவிடச் செய்தான். வாய்ப்பான வித்து வகைகளை அவற்றின் பிரிவுகளுடனும், பின் மாட்டு வகைகளையும் எடுத்துக் கூறினான்.

**மூத்தபள்ளி சொற்படியே**

**முக்கூடற் பள்ளனைக் கால்...**

**வித்து வகைகள்**

சிறை மீட்டான், மணல்வாரி, பொற்பாளை, கடைக்கழுத்தன், புத்தன், வெள்ளை, கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் தொகுத்துப் போட்டிருக்கிறேன் ஆண்டையே!

**சித்திரக் காவிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி**

**செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா...**

**மாட்டு வகைகள்**

குடைக்கொம்பன், செம்மறையன், கழற்சிக் கண்ணன், கொட்டைப் பாக்கன், மட்டைக் கொம்பன், கருமறையன், அணிற்காலன் போன்ற பல ஆயிரம் மாடுகள் உண்மையாகவே இருக்கின்றன ஆண்டையே!

**குடைக்கொம்பன் செம்மறையன்**
**குத்துக் குளம்பன் மோழை**
**குடைச் செவியன் குற்றாலன்**
**கூடுகொம்பன்...**

**ஏர்க்கால் முதலியன**

கயமரம் ஒன்று, வளைக்கை ஒன்று, நுகம் ஒன்று, கழுந்தமைந்த ஏர்க்கால் ஒன்று, வயலை உழும் குத்தி ஒன்று அத்தனையும் என்னிடம் உள்ளன. அவற்றின் பெருமைகளை எண்ணி அறிய வல்லமை உடையவர்கள் எவர் இருக்கிறார்கள் ஆண்டையே!

**தயரத ராமரான தாமரைக் கண்ணழகர்**
**தனுவாங்கி மரமேழும் சாய்ந்த நகரில்...**

**நாளேரிட வாரும்**

கூர்மையான வாள்களையும் சேர்த்துக் காய்ச்சி அடித்த கொழுக்கள் ஆயிரம் உள்ளன. உழவுக்கு மயக்கமில்லாமல் இந்தப்படி உழவுக் கருவி வகையெல்லாம் தேடி வைத்திருக்கிறேன். இனி வயலிலே நாளேர் பூட்டி உழுவதற்கு நீரும் வருவீர் ஆண்டையே!

**இலங்கா புரியில் முன்னாள் எங்கள் அழகருடன்**
**எதிர்த்த ராவணன்மகன் இந்திர சித்து...**

## 6. விளைவு! மகிழ்வு!

**நாள் பார்த்தல்**

அழகருடைய பண்ணைக்காரனானவன் கல்வி கேள்விகளிலே சிறந்த சோதிடன் தனக்கு வகுத்துக் கூறியிருந்த, நாளேர் பூட்டி ஓட்டுவதற்கான நல்ல வேளையைக் குடும்பனிடம் சொன்னான்.

**ஏரும் பலவிதையும் ஏர்க்காலம் முதலான**

**கூரும் முகிழ்த்தம் குடும்பனுடன் சொன்னானே…**

**உழச்சென்றான்**

பக்தர்கள் பணியும் முக்கூடற் பரமனார் ஆகிய அழகருடைய பண்ணைக்கு இன்றைக்கு நாள் ஏரிட வேண்டும். பள்ளா! ஏர்பூட்டுவதற்கு உரியவற்றுடன் வயலை நோக்கி உழுவதற்குச் சென்றான்.

**பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர்தம்**

**பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே…**

**கூடி உழுதார்**

சாத்தன், பெரியான், உடையான், பூலான், மருதன், வெருகன், முருகன், கண்டன், பள்ளர் எல்லாம் கூடிக் குரவைவிட்டு ஏர்மங்கலம் பாடி நாளேர் பூட்டி உழவைத் தொடங்கினார்கள்.

**சாத்தன் பெரியான் கொன்னைத்**

**தாண்டி அரியான்…**

**மாடு குத்துதல்**

காளை மாடுகளைச் சிலர் ஏரிலே பூட்டும்பொழுது, அது ஆட்களை எல்லாம் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தது. அது கொம்பு முனையினாலே அவனைக் குத்தித் தள்ளிற்று. குடும்பனும் சிறிது மயக்கங் கொண்டு விழுந்துவிட்டான்.

**பூட்டுங்கா ளையைவிட்டுப் பூட்டாக் காளையைப்**

**பூட்டும் பொழுதிலொரு புல்லைக் காளை…**

**பள்ளியர் வந்தனர்**

முக்கூடல் அழகரின் முக்கூடற் பள்ளி வந்தாள், அப்படியே தென்மருதூர்ப் பள்ளியும் அங்கே ஓடி வந்தாள்.

**துள்ளி யெழுங்காளை தொடர்ந்துபள்ள னைப்பாய்ந்து**

**தள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றும் தரியாமல்…**

**மூத்தாள் புலப்பம்**

மலைபோன்ற யானைகளை அழித்து முறித்தாயே! அவை எல்லாம் பழங்கதையா? சதுர்வேதனாகய பிரமன் விதித்த தலை எழுத்தோ? அல்லது, மருதூர்ச் சக்களத்தி விதித்த தலை எழுத்தோ? முக்கூடல் அழகரின் பண்ணைக் குடும்பா! இது யார் விளைத்த இடும்போ தெரிந்திலேனே?

**மதயானை முதற்பிடிக்க வல்லாய் - இந்த**

**மாட்டுக்கு மாட்டாமல் போனதென்ன சொல்லாய்...**

**இளையாள் புலப்பம்**

எதற்காக அந்த மாட்டைத் தடுத்துத் தொடர்ந்து ஓடினாய்! இந்த முக்கூடற் சதுரி இருக்கிறாளே இவள் பார்த்து இப்படிச் சிரிப்பதற்காகவோ நீ வீழ்ந்து கிடந்தாய்? மலையின் மேலே இருக்கின்ற ஐயனாரான பூலாவுடையாரின் குறையோ? படுத்த கிடையிலிருந்து எழுந்து இருந்து கொள்வாய்!

**வடுப்படா மேனிவடுப் படுமோ – நன்று நன்றென்**

**வல்லாளன் சமர்த்தும் போய்விடுமோ...**

**எழுந்தான் அவன்!**

தான்பட்ட துயரமெல்லாம் நீங்கத் தலையை அசைத்துத் தோள்களைக் குலுக்கி, ஏதும் நடவாதவொரு பாவனையோடு முக்கூடற்பள்ளனும் எழுந்துவிட்டான்.

**ஏங்கியிரு பள்ளியரும் இவ்வா றிரங்கிநிற்குந்**

**தேங்குதலை வார்த்தை செவியிற் புகுதலுமே...**

**விதை தெளித்தான்!**

பள்ளன் எழுந்த தன் பழைய நிலையினை அடைந்தான். பள்ளியர்களின் முகத்தைப் பார்த்து சிரித்தான். ஏர் பூட்டி உழத்தொடங்கினான். தொளியிலே விதைகளை எடுத்துத் தெளிக்கத் தொடங்கினான்.

**பள்ளன் எழுந்துநிலை தரித்தான் - நின்று**

**பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்...**

**தொழுது தெய்வக்கடன் கழித்தான் அந்தத்**

**தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான்...**

**நாற்றுமுகங் கண்டான்**

வளர்ந்து கொண்டிருந்த நாற்று முகத்தைக் கண்டதும், அளவிட முடியாத மகிழ்ச்சி கொண்டான்.

**முளைக்குத் தண்ணீரை அடைத்திட்டான் - கொல்லை**

**முழுதும் மறுநாள் வெட்டி விட்டான்...**

**அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் - பண்ணை**

**ஆண்டையைப் போய் அந்தச் செய்தி விண்டான்...**

**நாள் நடவு அறிவிப்பு**

பண்ணையார் இட்ட கட்டளைகளையும் தலைமேற் கொண்டவனாகப் பள்ளன் வயல்களை நோக்கி வந்து சேர்ந்தான்.

**நாறுந் துழாயழகர் நாட்டிற் பழனமெல்லாம்**

**ஏறும் பயிர்தருநாற் றின்றுநட வேணுமென்றே...**

**நாற்றுப் பிடுங்குதல்**

படுபவர்களைப் பந்திப் படுத்திப் பகுத்து நிற்க வைத்து, அவரவர்க்கு உரிய நிரையை வகுத்துப் பரவையொலி போலக் குரவை ஒலியினை எழுப்பிப் பயிர் நெருங்காமல் தொளியிலே பதியுங்கள். பள்ளியர்களே! என்று குடும்பன் ஆணையிட்டான்.

**பந்தி பகுத்து நிரையை வகுத்துப்**

**பரவை யொலிபோல் குரவை எழுப்பிப்**

**பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்**

**பதியும் பள்ளீரே!**

**சமர்த்தைக் காட்டுங்கள்!**

சின்னி, குருந்தி, அருதி மருதி, அழகி, நூவி, நாச்சி, புலிச்சி ஆகிய பள்ளியர்களே எல்லோரும் ஒருவருக்கொருவர் கலந்து கைவிரைவாக உங்கள் நடுகைச் சமர்த்துக்களைக் காட்டுங்கள் என ஏவினான் பள்ளன்.

**சின்னி குருந்தி அருதி மருதி**

**செல்லி இருவி எல்லி கலிச்சி...**

**நடுகைச் சிறப்பு**

பள்ளியர்களின் மனத்திலே ஊடலாகிய ஆட்டம் எழுந்த காலத்தே, வயல்களிலே நடவெல்லாம் நாற்றுக் காலைவிட்டு நடுகைக் காலில் ஏற மாட்டாதாகி விடுமே!

**தாற்றுக்கால் பூந்துளவத் தாரழகர் முக்கூடற்**

**சேற்றுக்கால் மள்ளருக்குத் தென்றற்கா லென்னாமோ...**

**குருந்தி திருந்தினாள்!**

இடை என்றாலோ வஞ்சிக்கொடியைப் போலத் தோன்றுகிறது. நடந்து நடையென்றாலோ இளைய பிடியானையின் நடையைப் போலிருக்கும். முன்பு இருந்த சாயலுக்கு இப்பால் அந்தக் குருந்தி மிகவும் ஆள் திருந்தி விட்டாளடீ பள்ளியரே!

**இடையென் றால்வஞ்சிக் கொடியைப் போல – வரும்**

**நடையென் றாலிளம் பிடியைப் போல...**

**கிடையும் பாரும்!**

வயல்களிலே ஆடிப்பாடி நாற்று முடியை அலைத்துக் குலைத்துப் பள்ளியர்களே நடச்செய்தே, பதனாக வடிக்கும் மதுரைக் குடிப்பதிலே உண்டாகிய ஆசை காரணமாக வந்த மயக்கமும், அதனைக் குடித்ததனால் உண்டான பெரும் எக்களிப்பும் கொண்டு வரப்பிலே ஏறுவதற்குப் பாய்ந்து, பரம்பு மரத்திலே காய்ந்து கிடக்கிறவனுடைய வாட்டத்தையும், அவன் முகம் கோணுகிற கோணல்களையும் அவன் கிடந்த கிடையையும் பாருங்களடீ, பள்ளியர்களே!

**துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்**

**சோர்ந்து விரிந்த கூந்தலும்**

**தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த**

**கிடையும் பாரும் பள்ளிரே...**

**கும்மி பாரும்!**

சிவந்த உள்ளங்கைகளை பெரியாளுமாகக் கும்மியடித்துக் கொண்டிருப்பதைப் பாருங்களடி, பள்ளியர்களே!

**அரியாளும் கட்டைப் பெரியாளும் - கும்மி**

**அடிப்பதைப் பாரும் பள்ளீரே...**

**கோப்பைப் பாருங்கள்**

கள்ளால் உற்ற வெறியானது கட்டுமீறிப் போக, தடுமாறிக்கொண்டு உன் காப்பைக் காட்டு பார்க்கலாம் என்று சொல்லி, அவளுடைய கையைப் பிடிக்கிறான். அந்தக் கட்டுக்கோப்பைப் பாருங்களடீ!

**கள்ளால் உற்றது மீறி – யேநிலை**

**கொள்ளா மல்தடு மாறியே**

**காப்பைக் காட்டென்று கையைப் பிடிக்கும்**

**கோப்பைப் பாரும் பள்ளீரே!**

**தாங்குகிறான் பாரும்!**

குடும்பன், அவளுடைய தலையைத் தாங்குகிறவனைப் போலவே காட்டிக்கொண்டு, அவளுடைய குவிந்த கொங்கைகளைப் பற்றித் தாங்குகிறான் பாருங்களடீ! பள்ளியரே?

**தலையைத் தாங்குறாப் போலே – குத்து**

**முலையைத் தாங்குகிறான் பள்ளீரே!...**

**அடுக்கிறான் பாரும்!**

குடும்பன் அவளை அதட்டிக்கொண்டே, அவள் முன்பாக ஏர்க்காலைச் செல்லவிட்டு, நோக்காலை ஒதுக்கி எடுக்கிறவனைப் போலப் பாவனை காட்டிக்கொண்டே கிட்டக்கிட்டப் போய் அவளை நெருங்குகிறான். அவனைப் பாருங்களடீ, பள்ளியர்களே!

**எடுக்கி றாப்போலே கிட்டக் கிட்டப்போய்**

**அடுக்கிறான் பாரும் பள்ளீரே...**

**சண்டையைப் பாரும்!**

குடம்பனுடைய மருமகன் ஈச்சக் குடம்பனின் பாய்ச்சற்காலை எட்டி முட்டித் தட்டிவிட்டான். அப்படித் தட்டிவிடும்போது அவனுடைய கொழுந்தியின் பக்கத்திலே போய்விழுந்தான். அவனுடைய கொண்டையைப் பற்றி இழுக்கிறான். அந்த வம்புச் சண்டையைப் பாருங்களடி பள்ளியரே!

**கொண்டை யைப்பிடித் திழுக்கி றான்வம்புச்**

**சண்டை யைப்பாரும் பள்ளீரே!...**

**ஓங்கியது பயிர்!**

அழகரின் வயல்களிலே நட்ட நாற்றுகள் முதலில் தலைதாழ்ந்து நிலையின்றிக் கிடந்தாலும், பின்னர் நடப்பெற்ற வயல்களிலே நிலைபெற்று ஓங்கி வளரலாயின!

**சீரினடு நாற்றுநடச்**

**செய்யினின் றோங்கியதே...**

**விளைவுத் தோற்றம்**

ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கதிர்களாக முனைத்து இடையிடையே நெல்லும் பழுத்த ஏற்றமான விளைவுவந்து கூடும் காட்சியை தோற்றிக் கொண்டு காணப்பட்டன.

**எதிர்ந்த கதிர்முளைத்தே இடைப ழுத்து**

**ஏற்ற விளைவு தோற்றந் தோற்றியதே!**

**அரிகள் பரப்பினார்!**

பள்ளர்கள் ஒருவரோடருவர் அணுக்கமாக நின்று நெற்கதிரை அரிந்தார்கள். அரிகளை எல்லாம் வயலெங்கும் நிரம்பியிருக்குமாறு பரப்பிப் போட்டனர்.

**நிறுவி நிரைதெரிந்தார் நெருங்கி அரிந்தார்**

**நிரப்பி அரிகளெங்கும் பரப்பி னாரே!...**

அரிந்த நெற்கதிர்களை போர்க்கடித்த பின்பு நெல்மணிகளைக் குவித்துப் பொலி பொலி என்ற மங்கல ஒலியோடு அளந்து கட்டுவார்கள்.

**பொடிவைக்கோ லைத்தவிர்ப்பார் பொலியைக் குவிப்பார்**

**பொலிதூற்றி ஆற்றிப்பொலி பொலியென்றளப்பார்...**

**அளந்தார்கள்**

குவித்த நெல்மணிகளை மரக்காலைக் கைகளாற் தட்டிக் கட்டி அளப்பார்கள்.

**கனக்குஞ் சிறப்பமையக் கட்டி யளப்பார்**

**கங்காணிப் படி பண்ணைக்**

**காரனார் முன்னே...**

**உள்ளபடி சொன்னான்!**

பண்ணைக்காரனனுடன் வடிவழகக் குடும்பன், அவன் மனந்தடுமாறாத வகையிலே, உள்ளபடி எல்லாவற்றையும் சொன்னான்.

**களந்தனிலே நின்றுபண்ணைக் காரனுட னேகுடும்பன்**

**உளந்தடுமா றாதவகை உள்ளபடி சொன்னானே...**

**அளந்தேன்! அளந்தேன்!**

பண்ணையிலே பெற்றாக் குடும்பன் புள்ளியிற் கண்ட பெரு வெள்ளை நெல்லிலே அளந்து கொடுத்தேன்.

**பெற்றாக் குடும்பன் புள்ளியிற்கண்ட**

**பெருவெள்ளைநெல் அளந்தேன்...**

சேரிலே மற்ற நெல்லும் விதையும் கட்டி வைத்திருக்கிறேன் பண்ணை ஆண்டையாரே!

**மற்ற நெல்லும் விதையுங்கட்டி**

**வைத்தேன் பண்ணை ஆண்டே!**

## 7. கலங்கல்! தெளிவு!

**மூத்த பள்ளியின் நிட்டூரம்?**

எல்லாக் கணக்குகளையும் சொன்னவன் என் பேரையும், என் கணக்கையும் சொல்லாது விட்டுவிட்டான். அந்தப் பள்ளனுடைய சூதான எண்ணத்தை இனிக்கேளும் என்று வில்லாண்மை உடையவரான முக்கூடல் அழகருடைய மூத்தப்பள்ளியானவள் தன் பொருமல் தணியாமல், பிற பள்ளியர்களின் முன்பாகத் தன்னுடைய பள்ளன் மீதிலேயே கொடுமை சொல்லத் தொடங்கினாள்.

**எல்லாக் கணக்குரைத்தும்**
**என்பேரும் என் கணக்கும்...**
**நில்லாமல் பள்ளியர்முன்**
**நிட்டூரஞ் சொன்னாளே...**

**வஞ்சகம் பாரும்!**

இரண்டு பேர்களை வைத்துக் கொண்டிருக்கும் குடும்பன் மிகவும் கெட்டிக்காரன்! அவன் செய்த கர்வமிகுச் செயல்களையும் வஞ்சகமான செயல்களையும் நீங்களே கேளுங்கடி பள்ளியர்களே!

**கெட்டிகெட்டி பெண்டு ரெண்டு**
**வைத்த குடும்பன் - செய்த**
**கெருவமும் வஞ்சகமும்**
**கேளும் பள்ளீரே!...**

**இம்மட்டுந் தந்தாள்!**

தள்ளும் மண்ணும் கல்லும், அதனோடு சற்று நெல்லுங் கலந்து எனக்கும் பங்கு தந்தோமென்ற பேருக்கு இதை மட்டுமே தந்தானடீ பள்ளியரே!

**தள்ளுமண்ணுங் கல்லுஞ்சற்றே**
**நெல்லுக்கலந்தே – பங்கு**
**தந்தோ மென்றெனக் கிம்மட்டும்**
**தந்தான் பள்ளீரே!**

**பள்ளியர் ஏசல்!**

தொண்டை கட்டிப்போகும்படி கூவாதேடி, என்னைக் கூப்பிட்டு வைத்து நீ சொன்ன பேச்சை எல்லாம் பண்ணையாரிடம் போய்ச் சொல்லி விடுவேனடீ!

**சொன்ன பேச்சைப் பண்ணையார்க்குச்**
**சொல்லு வேனடி...**

மூத்தப்பள்ளி இளையவளுக்கு சவால் விடுகிறாள். என்னாலே ஆகாதது உண்டோ முக்கூடற் பள்ளி! பள்ளன் இங்கே வந்தால், உன்சலுகை எல்லாம் தெரியமடி! என்கிறாள் இளையவள்.

**சொன்னாலெனக் கென்ன பயம்**

**மருதூர்ப் பள்ளி – சென்று...**

**இங்கு வந்தால் உன் சலுகை**

**எல்லாந் தெரியும்...**

இல்லாத வலுச்சலுகை எல்லாம் பேசாதே முக்கூடற் பள்ளி! உன்னைப்போல வழக்கிட்டும் கணக்கிட்டும் நான் வந்தேனோடி? போடி!

**வலுச்சலுகை பேசாதேநீ முக்கூடற்பள்ளி – உன்போல்**

**வழக்கிட்டுக் கணக்கிட்டு வந்தேனோ போடி?....**

உழக்குக்குள் கிழக்கு மேற்கோ முக்கூடற்பள்ளி? உன்னை மறித்துக் கட்டிக்கொண்டான். என்னைக் கண்டதும் என் பேரில் ஆசையினால் என்ன ஊருக்கே வந்து கட்டிக்கொண்டான்.

**உழக்கிற் கிழக்கு மேற்கோ**

**முக்கூடற் பள்ளி – மறித்து**

**உன்னைக் கொண்டாள் என்னைக் கண்டென்**

**ஊரிலே வந்தான்...**

எங்கே வந்தாலும் என்னடி முக்கூடற்பள்ளி? வீட்டுக்குள் வந்துவிட்டதனால் காட்டுக் கஸ்தூரிப் பூனையும் வீட்டுப்பூனைக்கு ஒப்பாகப் போய்விடுமோடீ?

**எங்கே வந்தாலுமென்ன முக்கூடற் பள்ளி –வீட்டில்**

**எய்திற் காட்டு நாவி பூனைக் கிணை யாமோடி?**

சாகத் துடிப்பவள் மாதிரி ஆட்டம்போட வேணடாம் முக்கூடற் பள்ளி. பேச்சிலே மிதமிஞ்சி ஏதாவது பேசினால் உன் நெஞ்சை அறுத்துவிடுவேன். அதற்குப் பயந்து பேசடி.

**வீவியாட்டம் ஆடவேண்டாம் முக்கூடற்பள்ளி – பேச்சில்**

**மிஞ்சிப் பேசில் நெஞ்சறுப்பேன் அஞ்சிப் பேசடி...**

உன்னைப்போலச் சிறுமைத்தனம் உடையவளுக்கு நான் பயப்படுவேனோ முக்கூடற்பள்ளி! உனக்கு அவன் கும்பிட்டு அஞ்சிக் கிடப்பான்.

**கொஞ்சக் காரிக்கு அஞ்சுவேனோ**

**முக்கூடற் பள்ளி - இன்னம்...**

**குட்டையிற் போடுனக்கவன்**

**கும்பிட் டஞ்சுவான்...**

புருஷன் என்றுகூடச் சட்டை பண்ணாமல், ஏசிக்காட்டிக் கொடடி முக்கூடற்பள்ளி! குட்டையிலே அடித்து வைப்பாய். கழற்றுவாய் எல்லாம் உன் தந்திரமடி.

**சட்டைபண்ணா தேசிக்காட்டு**

**முக்கூடற் பள்ளி குட்டை**

**சாத்துவாய் கழற்றுவாயுள்**

**தந்திர மடி...**

சந்தியில் கிடக்கும் மாங்கொட்டையடி நீ முக்கூடற்பள்ளி! உன்னைப் போலச் சாரங்கெட்ட மருதூர்க்காரி என்றோ என்னையும் சாதித்துக் காட்டுவதற்கு வருகிறாய்?

**சந்தியில்மாங் கொட்டைபோடி முக்கூடற் பள்ளி நீயும்**

**சாரங்கெட்ட மருதென்றோ சாதிக்க வாராய்!...**

சாதிக்கிற தந்திரமெல்லாம் உனக்குந்தான் வரும் மருதூர்ப்பள்ளி! நரிகளையே மாற்றிச் சாதித்தவன் உங்கள் கண்ணன் அல்லவோடீ?

**பேதிக்கச்சா திக்க வாராய் முக்கூடற்பள்ளி – கல்லைப்**

**பெண்ணாகச் சாதித்தானுங்கள் கண்ணன் அல்லோடி!**

மாமனென்றும் பாராமல் முன்னாளிலே கஞ்சனைக் கொன்றே கண்களில் என்றும் மாறாத பூ விழப்பெற்றவள் உங்கள் மாயவன் அல்லவோடி?

**கண்ணிலே! பட்டானுங்கள்**

**கர்க்கன் அல்லோடி?**

**மாறாதேபூப் பட்டானுங்கள்**

**மாயன் அல்லோடி?**

காதல் கொண்டு தம்பியோடு சீதை பொருட்டாக, அந்நாளிலே கடல்கடந்து போனேனே, அவன் உங்கள் கண்ணன் அல்லவோடி?

**கடலேறிப் போனா னுங்கள்**

**கண்ண னல்லோடி?**

பெரிய பழிக்கு உள்ளாகித் தவவலிமையுடையவன் போல மறைந்தே நின்று வாலியைக் கொன்றானே, அவன் உங்கள் மாயன் அல்லவோடி?

**தன்மகனைக் கொன்றா னுங்கள்**

**தானு வல்லோடி?....**

சிசுபாலன் புலிபோல எழுந்து வையவே, சபை நடுவிலே ஏழைபோல ஒடுங்கி நின்றானே. அவன் உங்கள் நீலவண்ணன் அல்லவோடி?

**புலிபோல் எழுந்து சிசு பாலன் வையவே – ஏழை**

**போலநின்றான் உங்கள் நெடுநீலன் அல்லோடி?**

முடியுஞ் சூடாமல், கைகேசி தள்ளிவிடவே, காட்டில் முன்பு நெடுந்தொலைவு போய்க் கிடந்து வாடினானே, அவன் உங்கள் திருமாமல்லவோடி?

**முன்புதள்ளிப் போனாலுங்கள்**

**மூர்த்தியல் லோடி?...**

கற்றையாகச் சட்டையையும் கட்டி மரவுரியையும் இடுப்பிலே முன்காலத்திலே கட்டிக்கொண்டானே அவன் உங்கள் சங்குக் கையனாகிய திருமால் அல்லவோடி?

**கற்றைச்சடை கட்டிமர வுரியுஞ் சேலைதான் - பண்டு**

**கட்டிக்கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடி?**

மாட்டு மந்தைக்குப் பின்னாகவே திரிந்துங்கூடச் சோற்றுக்கு வழியில்லாமல் வெறும் மண்ணைத்தின்றானே, அவன் உங்கள் மேகவண்ணன் அல்லவோடி?

**மாட்டுப்பிற கேதிரிந்தும் சோற்றுக் கில்லாமல் - வெறும்**

**மண்ணையுண்டான் உங்கள்முகில் வண்ணனல் லோடி?...**

வீறாப்பான பேச்சு என்னடி? அந்த மாடுகூட இல்லாமற் போனதால்தான் பறவை மீதிலேறிக் கொண்டான் உங்கள் கீதன், இது உண்மை அல்லவோடீ?...

**வீறு சொன்ன தென்னமாடு தானுமில்லாமல் - பட்சி**

**மீதிலேறிக் கொண்டானுங்கள் கீதன் அல்லோடி?...**

**பள்ளியர் சமாதானம்**

எவரும் பசி எடுத்தால் தின்னாது என ஒன்று இருக்கிறதோ? அதேபோலச் சினம் வந்தால் சொல்லாதது உண்டோ?

**திருமால் அடிமையென்றாய் சாலப் பசித்தால் - ஆருந்**

**தின்னாததுண்டோ சினந்தால் சொல்லாத துண்டோ?**

எனக்குக் கோபம் வராதோ முக்கூடற்பள்ளி? முதலிலே வைதவரை வாழ்த்தினவர் இதுவரை எவராவது இந்த உலகத்தில்தான் உண்டோ?

**வாராதோ எனக்குக் கோபம் முக்கூடற்பள்ளி – முந்த**
**வைதவரை வாழ்த்தினவர் வையகத் துண்டோ?**

ஒருவர் வைதால் நானும் வைவேன் என்றாயே மருதூர்ப்பள்ளி! முதலிலேயே சொல்லியிருந்தால் முக்கூடற்பள்ளி! சண்டை இத்தனையும் உண்டாகுமோ? எனக்குத்தான் அறிவில்லையோ? அப்பொழுதே பேசாமல் போயிருப்பேனே?

**இந்த வார்த்தை முந்தச்சொன்னால் முக்கூடற்பள்ளி – சண்டை**
**இத்தனையுண் டோவெனக்குப் புத்தியில் லையோ?**

**பாடுவோமே!**

நம் உறவு முறையார் எல்லோரும் சூழ்ந்திருக்க நாம் இருவருமே ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்திருக்கலாம். முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வாழ்த்தி ஆடிப்பாடுவோம் வா!

**பன்னகத்தி வாடியமுக் கூடலழகர் - திருப்**
**பாதமலர் வாழ்த்தி யாடிப் பாடுவோமே!...**

**வாழிய வாழியவே!**

சீவலமங்கைத் தாயார் வாழ்க! கஜேந்திரன் என்று அழைத்த திருப்பெயராகிய ஆதிமூலம் என்பதும் வாழ்க! அழகருடைய திருப்பாதங்கள் வாழ்க! முக்கூடல் நகரம் வாழ்க! முக்கூடல் வைணவன் வாழ்க! வாழ்கவே!

**வீதியிதழ்ச் செங்கமலம் மேவுமனை வாழி! நெடுஞ்**
**சூழிமுக வேழமென்று சொன்னதிருப் பேர் வாழி!**
**ஆழியரு ளாளர் அழகர்திருத் தாள் வாழி!**
**வாழிதிரு முக்கூடல் வைணவர்கள் வாழியவே...**

**-முற்றும்-**

## நந்திக்கலம்பகம்

நந்திக்கலம்பகம், சுவையான தமிழ் சிற்றிலக்கிய நூல்களுள் ஒன்று.

**கலம்பகம்**

பல பூக்களைக் கலந்து, மாலையைத் தொடுத்தல் போல, பல வகையான செய்யுட்களையும், உறுப்புகளையும், அகப்பொருள் புறப்பொருளையும் கலந்து இயற்றப்படும் இலக்கியத்தைக் கலம்பகம் என்பர்.

**நந்திக் கலம்பகம்**

'நந்தி' என்பது பல்லவ மன்னனின் பெயர். 'கலம்பகம்' என்பது தமிழ்நூலின் பெயர். நந்திக்கலம்பகம் என்னும் தொடர் 'நந்தியினது கலம்பகம்' என விரியும். 'நந்தியைப் புகழும் கலம்பகம்','நந்தியின்மேற்பட்ட பாடப்பட்ட கலம்பகம்' எனவும் கூறுவதுண்டு.

மக்களைப் பற்றிய இலக்கியமாக விளங்கும் நந்திக்கலம்பகம் தனியாகக் கூறும் சிறப்புடையது. கலம்பகங்களுள் காலத்தாற் பழைமையானது இதுவேயாகும். தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் பெருமையினையுடைது இந்நூல். இந்நூல் நந்திவர்மன் மீது அறம் வைத்துப் பாடப்பெற்றதென்றும், அந்நூல் முழுவதையும் அரசன் எரியும் பந்தரின் கீழ் இருந்து கேட்டு உயிர்துறந்தான் எனவும் கதை கூறுவர். 'நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற பாடலையும் 'கலம்பகமே கொண்டு காயம் விட்ட தெள்ளாறை நந்தி' என்னும் சதகப் பாடலையும், இதற்குச் சான்றாகக் காட்டுவர். இந்நூலில் கலம்பக உறுப்புகள் சிலவே வந்துள்ளன. இதில் பலவகைச் செய்யுள் விகற்பங்களும், அகப்பொருள், புறப்பொருள் துறைகளும் கலந்து வருகின்றன. இந்நூல் அமைந்த பாக்கள் கற்பனைத் திறமும், கவிதைச் சுவையும் வாய்ந்தவையாகும்.

**நந்திப் பல்லவன் வரலாறு**

நந்தி என்னும் மன்னவன் பல்லவர் குலத்தைச் சார்ந்தவன். தமிழ்நாட்டிலே கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் பல்லவர்கள் அரசாட்சி செய்தனர். பல்லவர்கள் காஞ்சிபுரம் முதலிய இடங்களைத் தலைநகராகக் கொண்டு சிற்றரசர்களாகவும் பேரரசர்களாகவும் வாழ்ந்தனர். பல்லவர்கள் சமண மதத்தினராகவும், சைவ மதத்தினராகவும், வைணவ மதத்தினராகவும் காணப்படுகின்றனர். திருநாவுக்கரசரைத் துன்புறுத்திய பல்லவன் சைவ மதத்தினனாக இருந்து, பின்பு அந்த அடிகளால் சைவ மதத்தவனானான் என்பது பெரிய புராணத்தில் உள்ளது. காஞ்சிபுரத்தில் சிவபெருமானுக்குத் திருக்கோயில் கட்டிய காடவர்கோமான் சைவ மதத்தின். காடவர்கோமான் சைவ மதத்தினன். நந்திப்பல்லவன் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்ட சைவப்பல்லவர் குலத்தினன். இவன் கி.பி.847 முதல் 872 வரையில் அரசாட்சி செய்தான். இவன் தமிழ்நாடு முழுவதையும் தன்னடிப்படுத்தி

ஆண்டதோடு,வடநாட்டையும் ஆண்டதாக இக்கலம்பகப் பாடல்களில் காணப்படுகிறது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவர் வலிமை குறைந்தனர். பல்லவர்க்குத் திறைகட்டிய மன்னர்கள் திறை கொடுக்க மறுத்தனர். இக்கலம்பகத்தின் பன்னிரண்டாவது செய்யுளில் ஒரு படை வீரன் அரசர்களைப் பார்த்து,‘இடுதிர் கொல்லோ பண்டு இறுக்கும் திறை’ எனக் கூறுதலும், கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்கண்ணே இருந்த சுந்தரமூர்த்தி, தமது கோயில் பதிகத்தில்,‘மண்ணுலகம் காவல் பூண்ட உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும், பெருமையார் புலியூர்ச் சிற்றம் பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே’ எனக் கூறுதலும் அதனை விளக்கும்.

சரித்திர ஆசிரியர்கள், பாண்டிய மன்னனான வரகுண பாண்டியன் பல்லவர்மேற் படையெடுத்து நந்திவர்ம பல்லவனை வென்று, மீண்டுஞ் சிதம்பரக் கோயிலைப் புதுக்கிக் கோபுரமும் கட்டினான் என்பர். அந்த வரகுண பாண்டியனோடு போரிட்டவன் தந்திவர்மன் என்றும், அவனது மகனே இந்த நந்திவர்மன் எனவும் சொல்கின்றனர். இவன் நந்திப்போத்தரையன் எனவும் பெயர் பெற்றான் என்பர். இவன் பெரும்படை கொண்டு எழுந்து, தெள்ளாறு என்னும் இடத்தில் முதற்கண் போர்செய்து பகைவரைத் துரத்திக் கொண்டே சென்று, வெள்ளாறு முதலிய இடங்களில் பகைவரை வென்றான். பாண்டிய நாட்டை அடைந்து, வாட்போர் செய்து பாண்டியனை வென்றான். பாண்டியனது தொண்டி நகரத்தையும் கைப்பற்றினான். தமிழ்நாட்டு மூவேந்தரையும் வடநாட்டரசரையும் வென்றான்.

இவன் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டிருந்தான். இவன் மயிலாப்பூர், மாமல்லபுரம் என்னும் இரண்டிடங்களையும் தான் சென்று தங்குமிடமாகக் கொண்டான். ஆதலால், மல்லைவேந்தன். மயிலைகாவலன் என்று அழைக்கப்பட்டான். பல்லவர்கள் சிவபக்தியிலும் கல்வியிலும் மேம்பட்டிருந்தனர். அவ்வண்ணமே நந்தியும் கல்வியிற் சிறந்து விளங்கினான். அதனால் ‘தொல்லைநூல் வரம்புகண்டான்’ எனவும்,‘நூற்கடற்புலவன்’ எனவும் புகழப்பட்டான். நந்தி தெள்ளாற்றுப் போரை வென்றதைப் புகழ்ந்துபாடும் பெருந்தேவனார்,‘நந்தியின் கல்விக்கு எதிராக ஒருவருமே இல்லை’ என்கிறார்.

நந்தி, புலவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து வள்ளலாக விளங்கினான். நந்தியைப் பாடிய புலவர்கள், குதிரைகளைப் பெற்று யானைமீதேறிப் பிச்சக் குடைநிழலில் வருவர் எனவும், சிற்றரசர்கள் நந்திக்குத் திறையாகக் கட்டிய யானையையும் குதிரையையும் இரவலர் பெற்றனர் எனவும், அவனைப் பாடிய பாணன் யானையின்மேல் பட்டாடையணிந்து வந்தான் எனவும் இந்நூலாசிரியர் கூறுகின்றார். கொடைச்சிறப்புக் கருதி நந்தியைக் கடைவள்ளலுள் ஒருவனான பாரியாகக் கூறினார் புலவர்.

நந்தியின் யானைக்கு ‘ஐராவதம்’ என்று பெயர். அவன் யானையின் மீது ஏறிவருதலை விரும்பினான். அதனால் அவனது கால்களில் யானையின் பிடர்பட்ட தழும்பு இருந்தது. அவன் பாதத்தில் யானையின் பிடர்பட்ட தழும்பும் அதன் கீழே அரசர்கள் முடிகள்பட்ட தழும்பும் இருந்தன என்பதால், அவனை மற்ற அரசர்கள் வணங்கினர் என்பதும் புலனாகிறது. அவன் நீதி தவறிய அரசரது நாட்டை கைப்பற்றிச் செங்கோல் செலுத்தினான் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

நந்தியின் கொடி விடைக்கொடி. அவனது முத்திரை விடை முத்திரை. அவனது பறைக்குக் கடுவாய் என்று பெயர். நந்தியின் காலத்திலே வானநூலை ஆராய்பவர் இருந்தனர். அது ‘பயில் காவிரி நன்னாடா’ என்பதால் தெரிகின்றது. நந்தி, காஞ்சியில் ‘அரசர்புகும் வளவு கண்டான்’ என்பதால், புதிதாக அரண்மனை கட்டினான். அவனது அரண்மனையின் முற்றத்திலே அரசர் காத்துக் கொண்டிருந்தனர். அவனுக்குத் தமிழ்நாட்டு மன்னர்களும் வடநாட்டரசரும் திறைதந்தனர்.

நந்தி, தெள்ளாறு, வெள்ளாறு, பழையாறு, கடம்பூர், வெறியலூர், அஞ்சி, தொண்டி,பாண்டிநாடு, குருக்கோட்டை முதலிய இடங்களில் போர் செய்து பகைவரை வென்றான். அவனது தம்பியர்கள் அவனைக் கொல்வதற்கு அல்லது வெல்வதற்குச் சூழ்ச்சி செய்தனர் எனவும், நந்தி அவர்கள் எண்ணம் பழுதாக அவர்களை வென்றான் எனவும் எண்பத்தோராவது செய்யுளால் தெரிகின்றது.

**கலம்பகத்தின் ஆசிரியர் வரலாறு**

நந்திக்கலம்பகத்தை இயற்றிய ஆசிரியர் ஊர் குலம் முதலியன விளங்கவில்லை. இக்கலம்பகத்தால் அவரது கல்வித்திறமை மட்டுமே நன்கு விளங்குகின்றது. அவரது செய்யுள்கள் நல்ல சந்த அமைப்போடும் பொருள் அமைதியோடும் உள்ளன.

**இந்தக் கலம்பகம் தோன்றிய வரலாறு**

நந்தியின் சகோதரர்கள் அவனை வெல்லுவதற்குப் பலவிதமான சூழ்ச்சிகள் செய்தும் முடியாமற்போகவே, அவருள் ஒருவன்,தான் நந்திமேல் நச்செழுத்தும் தீமையும் அமையப் பாடல்பாடி அவனை அழிப்பதாக எண்ணி, இக்கலம்பகத்தை இயற்றினான். (திரு.கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நந்திவர்மனது தாசியின் மகனான குலமகன் தனக்கு அரசாட்சி கிடைக்காமல் தீய எண்ணங்கொண்டு இதனைப் பாடினான் என்று எழுதியிருக்கிறார்.)

**அறியும் செய்திகள்**

இந்நந்தி மன்னன், இக்கலம்பகத்திலே, பல்லவர்கோன் அவனிநாரணன், மல்லைவேந்தன், குருக்கோட்டை வென்றான், தென்னவர்கோன், சோணாடன், தொண்டை வேந்தன், முந்நீரும் கொண்ட வேந்தர்கோன், விடேல் விடுகு,கண்டன், காவிநாடன், குமரிக்கொண்கன், கங்கை மணாளன், ஆங்கநாடன், உத்ரம கோபன், காடவர்க்கு முன்

தோன்றல்,சந்திரகுலப் பிரகாசன், உறந்தையர் கோன், வடநாடுடை மன்னர்பிரான், தேசபண்டாரி என்று எல்லாம் அழைக்கப்பட்டுள்ளான்.

## நந்திக் கலம்பகம்

**1.மண்ட லமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்**
**ஒண்சுடராய் ஒளியென்னும் ஒருருவ மென்றுருவம்,**
**மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ**
**செல்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் திருமேனி**

ஒண்சுடர் ஆய் என்பதற்கு, ஒளியுள்ள சூரிய சந்திரர்கள் ஆகி எனவும், பொருள் கொள்ளலாம். பஞ்சபூதம், சூரியன் சந்திரன், யாகத்தலைவன் என்னும் எட்டும் சிவபெருமானது எண்வகை வடிவம் ஆகும்.

**அருவரையி னகங்குழைய வனலம்பு தெரிந்தவுணர்**
**பொருமதில்க ளவைமூன்றும் பொன்றுவித்த புனிதற்கும்**
**குருமணிசே ரணிமுறுவர் குலக்கங்கை நதிபாயத்**
**திருமுடியைக் கொடுத்தாற்கஞ் செம்பாகந் திறம்பிற்றே.**

இதில் கூறப்பட்ட வரலாறுகள் மூன்று. ஒன்று திரிபுரம் எரித்தது. இரண்டு சிவபெருமான் கங்கையை அணிந்தது. மூன்று சிவபெருமான் சக்திக்கு உடம்பில் பாதியைக் கொடுத்தது.

**2.எனதே கலைவளையும் என்னதே மன்னர்**
**சினவேறு செந்தனிக்கோ னந்தி – யினவேழங்**
**கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்**
**பூமறுகிற போகாப் பொழுது**

நந்திமன்னன் தனது யானைப்படையால் குருக்கோட்டையை வென்று, அவ்வெற்றியைத் தன்னூர் வீதியில் கொண்டாடினான். அவ்விழாவைக் காணச்சென்ற ஒருத்தி அவனைக் கண்டு காதலுற்று உடல் மெலிந்து ஆடை நெகிழ்ந்து கைவளை கழலப்பெற்றாள். அதனால், அவள் வருந்தி, நந்தியின் வெற்றிவிழாவைக் காண்பதற்கு முன்னே ஆடையும் கைவளையும் தன்னுடையனவாக இருந்தன. நந்தியின் வெற்றிவிழாவைக் கண்டபின்பு ஆடை நெகிழ்ந்து கோயது. கைவளையும் கழன்றுவிட்டது எனக் கூறினாள்.

3. **பொழுதுகண் டாயதிர் கின்றது**
**போகநம் பொய்யற்கென்றுந்**
**தொழுதுகொண் டேனென்று சொல்லுகண்**
**டாய்தொல்லை நூல்வரம்பு**
**முழுதுகண் டானந்தி மல்லையங்**
**கானல் முதல்வனுக்குப்**
**பழுதுகண் டாயிதைப் போய்ப்பகர்**
**வாய்சிறைப் பைங்குருகே.**

இது தலைவி கூற்று, நாரைவிடுதூது. தலைவி பிரிந்திருக்கும்போது தலைவனிடத்துத் தனது ஆற்றாமையைத் தெரிவிக்கும்படி, நெஞ்சு, கிளி, வண்டு, நாரை முதலியவற்றைத் தூது அனுப்புவதாகப் பாடுவது நூன்மரபு. அவ்வியற்படி ஈண்டுத் தலைவி தலைவனிடத்துத் தன் குறையைக் கூறும்படி நாரையைத் தூதாக விடுத்தாள்.

4. **குருகுதிர்முன் பனிக்கொதுங்கிக் கூகங் கங்குற்**
**குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண் வாடை**
**யருகுபனி சிதறவர வஞ்சு வாளை**
**அஞ்சலஞ்ச லென்றுரைத்தா லழிவதுண்டோ?**
**திருகுசினக் கடக்களிற்றுச் செங்கோ னந்தி**
**தென்னவர்கோன் தன்குறும்பிற் சென்று சூழ்ந்த**
**சுரிகைவினைப் பகைஞருட றுண்ட மாகத்**
**துயிலுணர்ந்த வல்லாண்மைத் தொண்டை வேந்தே.**

இது, வாடைக்காற்றைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தோழி தலைவனுக்குக் கூறி, அவளுக்கு அருள் செய்யும்படி வேண்டுதல். இதில் தொண்டை வேந்தே எனச் சுட்டி ஒருவர் பெயர் கொளப்பட்டமையால், இது 'அகப்புறம்' ஆகும்.

5. **தொண்டை வேந்தன் சோணாடன்**
**தொன்னீ ரலங்கன் முந்நீருங்**
**கொண்ட வேந்தர் கோனந்தி**
**கொற்ற வாயின் முற்றத்தே**
**விண்ட வேந்தர் தந்நாடும்**
**வீரத் திருவு மெங்கோனைக்**

**கண்ட வேந்தர் கொண்மின்கள்**
**என்னும் கன்னிக் கடுவாயே.**

திணை-பாடாண். அ.்.தாவது ஓர் ஆண்மகனது புகழையும், ஆற்றலையும், கொடையையும், அருளையும் புகழ்ந்து பாடுதலாகும். இச்செய்யுள் நந்தியினது ஆற்றலையும் கொடையையும் புகழ்ந்து கூறிற்று.

**6. கடுவா யிரட்ட வளைவிம்ம மன்னர்**
**கழல்சூட வங்கண் மறுகே**
**அடுவார் மருப்பி னயிரா வதத்தின்**
**அடுபோர் செய் நந்தி வருமே**
**கொடுவா புனத்து நகுவார் படைக்கண்**
**மடவா ரிடைக்குண் மனமே**
**வடுவா யிருக்கு மகளேயிம் முன்றின்**
**மணியூச லாடன் மறவே.**

இதில், நந்தி யானை மேல் ஏறி வருதல் கூறப்பட்டுள்ளது. நந்தியின் யானைக்கு ஐராவதம் என்பது பெயராக இருக்க வேண்டும்.

**7. மறமத கரிதிசை நிறுவின**
**மணிநகை யவர்மன நகுவன**
**விறலர சர்கண்மன நெகிழ்வன**
**விரைமலர் களிமுலை பொருவன**
**திறலுடை யனதொடை புகழ்வன**
**திகழொளி யனபுகழ் ததைவன**
**நறுமல ரணியணி முடியன**
**நயபர நினதிரு புயமதே**

பாடாண் பாட்டாவது, ஒருவரது புகழ் வீரம் கொடை முதலியவற்றைப் புகழ்ந்துப் பாடும்பாட்டு. அரசன், தோளின் வலிமையாலே பகைவரை வென்று மன்னனாக முடி அணிவான் ஆதலால், அரசன் தலையில் அணியும் முடியைத் தோளில் ஏற்றிக் கூறினார்.

**8. புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கையின்**
**நலங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சிசூழ்**

**கயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்**
**பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே.**

‘காமுகர் அஞ்சும்படி வாடை வந்தது. இனி நம் தலைவி இவ்வாடைக்கு என்ன செய்வாளோ’ என்று, தோழி எண்ணினாள் என்பது குறிப்பு. வாடை, கூடியவர்க்கு இன்பத்தையும் பிரிந்தவர்க்குத் துன்பத்தையும் தரும் ஆதலால்,‘காமுகர் பயங்கொள்ளப் பருவவாடை புகுந்தது’ என்றாள்.

**9. வாடை நோக க வீசு மால**
**மாரன் வாளி தூவுமா**
**லாட லோத மார்க்கு மாலெ**
**னாவி காக்க வல்லனோ**
**வேடு லாவு மாலை சேதி**
**ராசன் மல்லை நந்திதோள்**
**கூடினால லா்வ ராது**
**கொங்கு விம்மு கோதையே.**

இது ஒரு தலைவி நந்திமன்னனைக் கண்டு காமுற்றுக் கூறுதலாக இருப்பதால், பாடாண்திணைக் கைக்கிளை.

**10. கோதை சோரிற் சோர் கொங்கை**
**விம்மில் விம்மு குறுமுறுவற்**
**சோதி வெளுக்கில் வெளுமருங்குல்**
**துவளி னீயுந் துவள்கண்டாய்**
**காது நெடுவேற் படைநந்தி**
**கண்டன் கச்சி வளநாட்டு**
**மாத ரிவரோ டுறுகின்றாய்**
**வாழி மற்றென் மடநெஞ்சே.**

களவொழுக்கத்திலே தலைவியைக் கூடவிரும்பி இரந்த பின்னிற்கும் தலைவனைக் குறித்துத் தலைவி இடத்துத் தோன்றும் புன்னகையே அவளது அன்பை அவனுக்கு உணர்த்தும். வறது நகை தோற்றல், முறுவற் குறிப்புணர்தல், என்னும் துறைகள் இதனை வலியுறுத்தும். தம் மனம் அத்தலைவியின்மேல் தீராக்காதல்

கொள்ளலான் ‘மடநெஞ்சே’ எனக் கூறினாள். இது, தலைவன் நெஞ்சோடு புலந்து உரைத்தல்.

11. **நெஞ்சாகுல முற்றிங னேமெலிய**
**நிலவின்கதிர் நீளெரி யாய்விரியத்**
**துஞ்சாநய னத்தொடு சோருமிவட்**
**கருளாதொழி கின்றது தொண்டைகொலோ**
**செஞ்சாலி வயற்படர் காவிரிசூழ்**
**திருநாடுடை நந்தி சினக்கலியின்**
**வெஞ்சாயன் மறைத்த தனிக்குடையான்**
**விடைமண்பொறி யோலை விடேல்விடுகே.**

நந்தி சோழநாட்டையும் கைப்பற்றி ஆண்டான் ஆதலால், காவிரிசூழ் நாட்டையுடையான் என்றும், அவன் குடிகள் துன்பமுறாமல் காத்தான் ஆதால், அவனது குடை சினக்கலியின் கொடிய நிழலை மறைத்தது என்றும், அவன் ஓலை மண்மேல் விடைப்பொறி பொறித்தான் என்றும் கூறினார்.

இதில், நந்தி கிளவித் தலைவனும் பாட்டுடைத்தலைவனும் ஆதலாலும், நந்தியின் மாலையை வேண்டனாலும், இது பாடாண்திணைக் கைக்கிளை ஆகும்.

12. **விடுதிர்கொல் லோவள நாடுடை வீரசற்கு முன்னின்**
**றிடுதிர்கொல் லோபண்டிறுக்குந் திறையெறி கானத் தும்மை**
**யடுதிர்கொல் லோதிற னந்தியெங் கோனயி ராவதத்திற்**
**படுதிர்கொல் லோபடை மன்னீரென் னாமுங்கள் பாவனையே.**

பகையரசர்களைப் பார்த்துப் ‘பண்டு இறுக்கும் திறை இடுதிர் கொல்லோ’ என்றிருப்பது, முன்னே பல்லவருக்குத் திறைகட்டிய மன்னர்கள் அப்பொழுது திறைகட்டட மறுத்தனர் என்பதைக் காட்டுகின்றது.

13. **வனைவார்குழல் வேணியும் வாடைகணீர்**
**நனைவார் துகி லும்மிவை நாளுமிரா**
**வினைவார்கழ னந்திவி டேல்விடுகின்**
**கனைவார்முர சொத்தது காரதிர்வே.**

மகளிர் அழகுற அலங்கரிக்கும் கூந்தல், தலைவனது பிரிவால் எண்ணெய் பெறாது சடையாயத் திரண்டது. வாடைக்காற்றுக் காரணமாகத் தலைவனை நினைத்து

உண்டான கண்ணீரால் அவள் ஆடை எப்பொழுதும் நனைந்திருந்தது. அப்பொழுது, தலைவன் மீண்டு வருவதாகக் குறித்த கார்காலம் வந்துவிட்டதை, மேகத்தின் முழக்கத்தால் அறிந்த தோழி தலைமகட்கு அதனைக் கூறி, அவளது துயரை ஆற்றினாள். இது, கார்ப்பருவங் கண்டு தோழி அறிவித்தல்.

**14. அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ரணன்களிற்றின்**
**கதிரொளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்தான்**
**மதுரை வடுபுலிக்கோ னகரிகொலோ மாளிகை சாய்ந்**
**தெதிரெதிரே கெடநின்ற னகரிகொலோ**

யானையின் தந்தத்திற்குப் பூண் கட்டினால் அது போர்க்குரிய குறிப்பு ஆகும். ஆதலால், தந்தி யானையின் தந்தத்திற்குப் பூண் அணிந்ததைக் கண்டு கூறிய கூற்று இது. களிற்றுக்கு மருப்பு இரண்டாக இருக்க,'மருப்புச் செறிந்தது' என ஒருமையிற் கூறியது. சாதி ஒருமை பற்றியது ஆகும். இச்செய்யுள் யானை மறத்தைச் சேர்ந்தது.

**15. ஓம மறைவாண ரொண்பாற் கழல்வேந்தர்**
**தாம முடிக்கணிந்த தாளிப்புற் - கோமறுகிற்**
**பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்க்கோ னந்திதன்**
**சேவடிக்கீழ்க் காணலாஞ் சென்று**

முடிசூட்டு விழாவிலே அந்தணர் அரசரது முடியில் சூட்டிய தாளிப்புல்லை, நந்தியின் காலின் கீழும், அவன் வீதியில் நடக்கும்போது பட்ட காற்சுட்டின் கீழும் காணலாம் என்றதால், நந்தியை மற்றைய அரசர்கள் வணங்கியது விளங்கிற்று. அரசர்கள் முடிசூடிய உடனே வந்து நந்தியை வணங்குதலால், அப்புல் நந்தியின் காலில் விழுந்தது.

**16. சென்றஞ்சி மேற்செங்கண் வேழஞ் சிவப்பச் சிலர்திகைப்ப**
**வன்றுஞ் சினத்தா ரினமறுந் தார்போலு ம.்.த.்.தே**
**குன்றஞ்செய் தோணந்தி நாட்டங் குறிகுருக் கோட்டையின்மேற்**
**சென்றஞ்செப் பட்டதெல் லாம்படு மாற்றலர் திண்பதியே**

இது அரசனது புகழைச் சொல்லப் பகைவரது நாட்டின் அழிவைக் குறித்து இரங்கியது. அஞ்சி என்பது சேரநாட்டுத் திருவஞ்சைக் களமும், குருக்கோட்டை என்பது அங்கிருந்த கோட்டையின் பெயரும் எனத் தெரிகின்றன.

**17. பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு**
**பருமணி பகராநெற்**
**கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு**
**காவிரி வளநாடா**
**நிதிதரு கவிதையு நிலமக ளுரிமையு**
**மிவையிவை யுடைநந்தி**
**மதியிலி யரசர்நின் மலரடி பணிகிலர்**
**வானக மாள்வாரே.**

காவிரி ஆறு வியாபாரம் செய்பவரைப் போல மேகத்தின் உண்டான முத்தையும், மூங்கிலில் உண்டான முத்தையும் ஊர்தோறும் கொடுத்து, அவ்வூர்களில் உள்ள நெற்கதிர்களைக் கொண்டு வந்து முத்துக்கள் பிறக்கும் இடங்களில் மேகமும் ஒன்று. மூங்கிலும் ஒன்று. இவை இவை என்னும் அடுக்கு நந்தியின் செல்வத்தையும் அரசுரிமையையும் குறித்தது. மிகுதிப்பொருள் பற்றியது.

நந்தியின் வீரச்செயலைப் புகழ்ந்தது ஆகையால், பாடாண்திணைப் பாட்டு.

**18. ஆட்குலாங் கடற்படை யவனி நாரணன்**
**றோட்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்**
**வாட்குலாங் கண்ணினால் வளைத்த மம்மர்நோய்**
**மீட்கலா மடல் கையில் விரவு மாயினே.**

தோழியினிடத்துத் தலைவியை இரந்து குறைபெறாது வருந்திய தலைமகன், இனி இவனைப் பெறுதற்கு மடலே பொருளென மதித்தல். மடலேறுதலாவது, தலைவன், தான் விரும்பிய மங்கையை வேறு எவ்வகையினும் அடைய முடியாதென அறிந்தபோது, பனைமடலினால் செய்த குதிரையில் அத்தலைவியின் உருவத்தை எழுதிய படத்தைச்சுட்டி, அக்குதிரையின்மேல் ஏறி ஊர்நடுவே நிற்றலாகும். அதனை அரசன் அறிந்து, அவளை அவனுக்கு மணஞ்செய்து வைப்பான் என்பது நூன்மரபு.

**19. விரவாத மன்னரெல்லாம் விண்ணேற**
**வெள்ளாற்று வெகுண்டோன் றொண்டைக்**
**கிரவாத பரிசெல்லா மிரந்தேற்றும்**
**பாவைமா ரெல்லீர் வாடை**
**வரவாதை யுற்றிருந்து வருந்துவார்**
**பலரென்றும் வாழி வாழி**
**பரவாதை நந்திசெங்கோ லுதுவாகி**

**லதுபார்க்கும் பரிசு நன்றோ.**

நந்தியினது செங்கோலில், அவனது மாலையை வேண்டி வருந்தும் மகளிர் பலர் ஆனால், நாம் அவனது தொண்டை மலர் மாலையை எதிர்நோக்கி இருக்கும் தன்மை நன்றன்று என்பதாம்.

**20. நன்றுந்நெடி தாயவிர் கின்றதிரா**
**நலிகின்றது மாருத சாலமெனக்**
**கென்றின்னில வென்னு மிளம்பிறையு**
**மெரியேசொரி கின்றதி யாதுசெய்கோ**
**அன்றிந்நில மேழு மளந்தபிரான்**
**அடலுக்ரம கோப னடங்கலர்போல்**
**இன்றென்னுயி ரன்னவன் கொங்கையைவிட்**
**டெங்ஙன்றுயில் கின்றன னேழையனே.**

தலைவியை விட்டுப் பொருள்வயிற் பிரிந்த தலைவன், வினை முற்றிய பின்பு தலைவியை நினைந்து இரங்கினான். ஆதலால், இது கற்புத்திணையில், தலைவன் பொருள்வயிற் பிரிந்து இரங்கல் துறை. பிரிந்திருப்பாருக்கு ஒரு நொடிப்பொழுது ஓர் ஊழிக்காலம் போற்றோன்றுமாதலால்,'இரா நன்றும் நெடிதாய் அவிர்கின்றது' என்றான்.

**21. ஏழை மார்துணை, வாழ நந்திதண்**
**நீழல் வெண்குடை, யூழி நிற்கவே.**

குடைநிழலாவது, அரசனது தண்ணளியே ஆம். வலியோர் வருத்தாமல் எளியவரை நந்தி காத்தலால் 'ஏழைமார் துணை' என்றார்.

**22. நிற்க மன்னவர் நிரந்த வெண்குடை**
**மிடைந்த நீள்கடை நெடுந்தகை**
**விற்கொ ணன்னுதன் மடந்தை மார்மிக**
**முயங்கு தோளவனி நாரணன்**
**கற்கொள் வார்மதிற் கச்சி நந்தி**
**நலங்கொ ளன்னவ னலங்கன்மே**
**லொற்க மென்மக ளுரைசெய் தோவுல**
**களிப்ப னித்திற னுரைத்திடே.**

அரசர்கள் காத்து நிற்கும் வாயிலான் என்றது. நந்திமன்னர் மன்னன் என்பதைக் காட்டிற்று. முற்காலத்திலே பல மகளிரொடு கூடிவாழ்தலை அரசர்க்குச் சிறப்பாகக் கொண்டனர். ஆதலால்,'மடந்தைமார் மிக முயங்குதோள் அவனி நாரணன்' என்றார் காஞ்சிபுரம் கல்லாலான மதிலையுடையது. அதனாற் 'கற்கொள்வார் மதில்' என்றனர். ஒருவர் தமது குறையைச் சொல்லிக் கேட்பதற்கு முன்னே குறிப்பறிந்து கொடுப்பவர் வள்ளல் ஆதலால், நந்தி என் மகள் தன் குறையைக் குறிப்பாலறிந்து அருள் செய்யாது அவள் தன் குறையைச் சொன்னபின்போ அவளுக்கு அரசைக் கொடுப்பான் என்று செவிலி கூறினாள்.

**23. உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் பல்லவன்**
**அரசர் கோமா னடுபோர் நந்தி**
**மாவென் ளாற்று மேவலர்க் கடந்த**
**செருவே லுயர்வு பாடினன் கொல்லோ**
**நெருநற் றுணியரைச் சுற்றிப்**
**பாடு திறப்பத் தன்னாற் பல்கடை**
**திரிந்த பாண னறுந்தார் பெற்றுக்**
**காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்**
**புதுப்பூப் பொலன்கல னணிந்து**
**விளங்கொளி யானன னிப்போ**
**திடங்களி யானை யெருத்தமிசை யன்னே.**

பாணன் ஆடையின் துண்ட ஒன்றை இடையிலே சுற்றிக்கொண்டு, அந்த ஆடை அகலம் இன்மையால் காலின் பரடு ஆடையால் மறையாது வெளிப்படத் தன் காலாலே நடந்து வீடுவீடாகத் திரிந்தவன். அவன் நந்தி மன்னவனைப் பாடிப் பரிசுபெற்று, மாலையும் பொற்கலமும் அணிந்து, இளயானையின் மேலேறி அழகான தோற்றத்தோடு வருதலைக் கண்டவர் இச்சிறப்பு இவனுக்கு எப்படிக் கிடைத்தது? நந்திமன்னவனைப் பாடிப் பெற்றான் போலும்? என வியந்து கூறினர்.

**24. அன்ன மடமயிலை யாளி மதயானை**
**நந்தி வறியோர்**
**சொன்ன பொருணல்கு வள்ள றொகுநீர்**
**தொண்டை வளநாட்**
**டன்ன நடையாளை யல்குல் பெரியாளை**
**யங்கை யகல்வான்**
**மின்னை மெலிவாளை நூலி னிடையாளை**

**நேர்வ மயிலே.**

தலைவன், பாங்கற் கூட்டத்திலே தோழனுக்குத் தான் கண்ட மங்கையின் இயல்பையும், அவளிருக்கும் இடத்தையும் கூறல் ஆகும்.

**25. மயில்கண்டால் மயிலுக்கே வருந்தி யாங்கே**
**மான்கண்டால் மானுக்கே வாடி மாதர்**
**குயில்கண்டாற் குயிலுக்கே குழைதி யாகிற்**
**கொடுஞ்சுரம்போக் கொழிநெஞ்சே கூடாமன்னர்**
**எயில்கொண்டான் மல்லையங்கோ னந்திவேந்த**
**னிகல் கொண்டார் ிருங்கடம்பூர் விசும்புக் கேற்றி**
**அயில் கொண்டான் காவிரிநாட் டன்னப்பேடை**
**யதிசயிக்கு நடையாரை யலக நூற்றேன்.**

பொருள்வயிற் பிரியத் தொடங்கிய தலைமகள், நெஞ்சோடு கூறிச் செலவழுங்குதல். பொருள் தேடப் பிரிந்து செல்பவன், செல்லும் வழியிடையிலே குயில் மயில் மான் முதலியவற்றைக் காணக்கூடும். அவற்றைக் கண்டதும் அவைபோன்ற தலைவியை எண்ணி மனம் கலங்கினால் பொருள்தேட முடியாது. ஆதலால்,'நெஞ்சே கொடுஞ்சுரம் போக்கு ஒழிதி' எனக் கூறினான். மயில் மகளிரின் சாயலுக்கும், மான் கண் மகளிர் கண்ணுக்கும், குயிலின் குரல் மகளிரின் குரலுக்கும் ஒப்பு ஆகும்.

**26. நூற்க டற்புல வன்னுரை வெண்டிரை**
**நாற்க டற்கொரு நாயக னந்திதன்**
**கோற்க டைப்புரு வந்துடிக் குந்துணை**
**வேற்க டற்படை வேந்தர்தம் வீரமே.**

பகைவேந்தரது ஆண்மை, நந்தியின் கடைப்புருவம் துடிக்கும் அளவினது ஆகாது என்பது. 'நூற்கடற் புலவன்' என்றது, நந்தியின் கல்வியை உணர்த்திற்று. நாற்கடலுக்குத் தலைவன் என்றது. அவனது ஆட்சி நாற்றிசைக் கடல் வரையில் பரவியுள்ளது என்பதை விளக்கிற்று.

**27. வீர தீரநல் விறலவிர் கஞ்சுகன்**
**வெறியலூர்ச் செருவென்யறோன்**
**ஆர்வ மாவுள நின்றவ ரன்றிமற்**

**றவன்பெருங் கடைநின்ற**
**சேர சோழருந் தென்னரும் வடபுலத்**
**தரசருந் திறைதந்த**
**வீர மாமத கரியிவை பரியிவை**
**இரவலா் கவா்வாரே.**

இதில் ‘நந்தி வெறியலூரை வென்றது கூறப்பட்டது. நந்தியினது வெற்றிக் கஞ்சகமணிந்த கோலம் வியந்து கூறப்பட்டுள்ளது. அவனுக்கு நட்பானவா் திறைதந்திலா். அவனைப் பகைத்த சேரா், சோழா், பாண்டியா், வடநாட்டரசா் திறை தந்தனா் என்பதால், தந்தி தமிழ்நாட்டை மட்டுமின்றி வடநாட்டையும் வென்று ஆட்சிபுரிந்தான் என்பது தெரிகின்றது. இது வெற்றிச் சிறப்பு. நந்திக்கு அரசா்கள் திறையாகக் கட்டிய யானைகளையும் குதிரைகளையும் இரவலா் கொள்வா் என்பதனால், அவனது கொடைச்சிறப்பும் விளங்குகின்றது.

**28. சுவரிச் செந்நெற் காடணி சோலைக்**
**காவிரி வளநாடன்**
**குமரிக் கொண்கன் கங்கை மணாளன்**
**குரைகழல் விறனந்தி**
**அடியிற் றெள்ளாற் றஞ்சிய நெஞ்சத்**
**தரசா்கள் திரள்போகும்**
**இவரிக் கானத் தேகிய வாறென்**
**னெழினகை யிவனோடே?**

தலைவி, தலைவனோடு உடன்போக்காகச் சென்ற பின்பு, அதனை அறிந்த செவிலித்தாய், இந்தக் கொடிய வனத்திலே என் மகள் இவனோடு எப்படிச் சென்றாள் என இரங்கினாள். இது செவிலி இரங்கல்.

**29. ஓடரிக்கண் மடநல்லீா் ஆடாமோ வூசல்**
**உத்தரியப் பட்டாட வாடாமோ வூசல்**
**ஆடகப்பூண் மின்னாட வாடாமோ வூசல்**
**அம்மென்மலா்க் குழல்சரிய வாடாமோ வூசல்**
**கூடலா்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த**
**கோமுற்றுப் படைநந்தி குவலயமாா்த் தாண்டன்**
**காடவா்க்கு முன்றோன்றல் கைவேலைப் பாடிக்**
**காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ வூசல்.**

இச்செய்யுள், மகளிர் ஊசலாடுதலைக் கூறியது. இது நந்திக்குக் காடவர் தம்பி எனத் தெரிகின்றது.

**30. ஊசல் மறந்தாலு மொண்கழ லம்மானை**
**வீசன் மறந்தாலு மெல்லிய வென்பேதை**
**பூச விலங்கிலைவேற் பொற்கழ னந்திநின**
**பாசிலை யந்தொண்டை யல்லது பாடாளே.**

மங்கையர்கள் ஊசல் ஆடும்போதும், அம்மானை ஆடும்போதும் பாடிக்கொண்டு ஆடுவர். அதில் தம் தலைவனைப் புகழ்வர். அப்படிப்பட்ட பாட்டையும் விளையாட்டையும் மறந்தாலும், தன் மகள் நந்திமன்னனது தொண்டைமாலையைப் புகழந்து பாடுதலை மறக்கமாட்டாள் என்று செவிலி கூறினாள். இது காதற்மிகுதியைக் காட்டிற்று.

**31. பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்**
**பீடியன் மாகளிற்றார் பிச்சத்தார் - கூடார்**
**படையாறு சாயப் பழையாறு வென்றான்**
**கடையாறு போந்தார் கலந்து.**

நந்தியைப் பாடிய புலவர்கள் யானை குதிரை முதலியன பரிசுபெற்றுக் குடைநிழலில் வருதலை உணர்த்திற்று. யானைமீது ஏறிக் குடைநிழலில் வருபவர் அரசர். ஆனால், நந்தியின் அரண்மனை வாயிலிலே அரசர்கள் யானையும் குடையும் இன்றி அடங்கிச் செல்வர். புலவர்கள் நந்தியைப் பாடிப் பரிசுபெற்று யானைமீது ஏறிக் குடை நிழலில் செல்வர். இதில் நந்தியினது கொற்றமும் குடையும் கூறப்பட்டன.

**32. கலங்கொ ளலங்கல் வேனந்தி**
**கச்சி நாட்டோ னவன்கழல்**
**புலங்கொ ளொளிய நல்லோர்க்கும்**
**புகல்கின் றோர்க்கும் பொன்னாரம்**
**நலங்கொண் முறுவன் முகஞ்சாய்த்து**
**நாணா நின்று மெல்லவே**
**விலங்கல் வைத்த மின்னோக்கின்**
**மேலுமுண்டோ வினையேற்கு**

வேட்டையாடுதலை மேற்கொண்டு சென்ற தலைவன், அங்கே ஓர் இளமங்கை நிற்றலை கண்டு, காதலிப்பாளோ என எண்ணியபோது, அத்தலைமகளும் அவனைக் கண்டு விரும்பி, நாணத்தால் அவனைக் குறிக்கொண்டு நோக்காமல் சிறக்கணித்து நோக்கினாள்.

**33. வினையன் சிலம்பன் பரிசு மிவடன் மெலிவு மென்பூக்**
**தினையும் விளைந்தது வாழிதன் மீறுதென் ளாற்றுநள்ளார்**
**முனையுமென் றேக முனிந்தபி ரான்முனை யிற்பெருந்தென்**
**வனையும் வடவேங் கடத்தார்தண் சாரலின் வார்புனமே.**

தெள்ளாற்று பகைவரது போர் வெல்வதற்கு மிக அரிதாக இருந்தது. ஆதலினாலே, முனையும் என்றார். உம்மை உயர்வுச் சிறப்பு. வேங்கடமும் இப்பல்லவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால்,'வேங்கடத்தார் சாரல்' எனக் குறித்தார். திணைப்புனத்து வேலிப்புறத்தே இருந்த தலைமகனுக்கு 'இனிக் களவொழுக்கத்தால் இவளை அடைய முடியாது. திணை விளைந்துவிட்டால் இனித் தலைவியைத் தயார் இற்செறித்து விடுவர். ஆகையால் நீ இவளை விரைவில் வரைந்து கொள்வாயாக' எனக் கூறியது ஆம்.

**34. புனத்து நின்ற வேங்கைமேற்**
**புகைந்தெ ழுந்து வானையின்**
**சினத்தை யன்றொ ழித்தகைச்**
**சிலைக்கை வீரர் தீருமோ**
**மனத்து ணின்ற வெஞ்சினம்**
**மலைத்தல் கண்ட திர்ந்தமான்**
**வனத்த கன்ற திர்ந்ததோ**
**நந்திமல்லை யார்ப்பதே**

தலைவி தலைவனோடு உடன்போகிய பின்பு, ஊரார்கூறும் அலரைக் கேட்டுச் செவிலித்தாய் தோழியை வினவியபோது, தோழி, செவிலிக்குக் களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

அறத்தொடு நிற்றலாவது, தான் ஒரு தலைவனைக் காதலித்தற்கு உரிய காரணங்களைத் தோழியின் வழியாகக் கூறித் தன் கற்புக்கெடாமல் காத்துக் கொள்வது ஆகும்.

35. ஆர்க்கின்ற கடலோத மார்க்கு மாறும்
அசைகின்ற விளந்தென்ற லசையுமாறும்
கூர்க்கின்ற விளமதியங் கூர்க்குமாறும்
காணலாங் குறுக்கோட்டைக் குறுகாமன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்
பார்க்கொன்று செந்தனிக்கோற் பைந்தார் நந்தி
பல்லவர்கோள் றன்னருள்யாம் படைத்த ஞான்றே.

நந்தியின் அருளைப் பெறாத தலைவி, கடலொளியும் தென்றலும் இளமதியும் தன்னை வருத்துதல் கண்டு, நந்தி மன்னனது அருளைப் பெற்றபோது அவை வருந்தாது இன்பம் தருதலைக் காணலாம் என்றாள். இது தலைவி இரங்கல்.

36. ஞான்ற வெள்ளருவி யிருவி யெங்கள்பொற்
றோன்றல் வந்திடிற் சொல்லுமி றொண்சுடர்
போன்ற மன்னவ னந்திதன் பூதரத்
தீன்ற வேங்கை யிருங்கணிச் சூழ்ச்சியே.

தலைவி, தினைப்புனைக் காவலை விட்டு வீட்டை அடைந்து விட்டாள். வேங்கை மரமானது பூத்து மணநாளை உணர்த்திவிட்டது. இனி அவளது தாய் தந்தையர் அவளை வேறொருவர்க்கு மணம் பேசுதற்கு முன்பே நீ அவளை வரைந்துகொள். இனிக் களவொழுக்கத்தால் அவளைக் காணமுடியாது என்பது இதன் குறிப்பு ஆகும்.

நந்தி, சூரியன் நாடோறும் தோன்றி மறைதலில் தவறாதது போலத் தவறாது நீதியையுடையவன் என்பதும், சந்திரன்போலக் குளிர்ந்த அருளையுடையவன் என்பதும் ‘ஒண்சுடர் போன்றவன்’ என்பதன் பொருளாகும்.

37. சூழிவன்மத யனையின் பிடர்படு
சுவடிவை சுட்டின்கீழ்
வாழி யிந்நில மன்னவர்வந் தனுதினம்
இறைஞ்சிய வடுக்கண்டோம்
ஆழி மன்னவ வன்னைய ராய்ச்சியர்
அடுங்கயிற் றடிபட்ட
பாழி மன்னெடுந் தோள்வடுக் கண்டிலம்
பல்லவ பகர்வாயே.

நந்தி மன்னனைத் திருமாலாகக் கருதிக் கூறுகின்றனர். ஆதலால், திருமாலின் அவதாரமான கண்ணன் இளமையிற் குறும்பு செய்ததால், அவனது தாயான இடைச்சி அவனை அடித்தான். அதனை உட்கொண்டு,'பல்லவனே நீ கண்ணபிரனானால், உன் மேல் ஆய்ச்சியர் கயிற்றால் அடித்த தோள் வடுக் காணவில்லையா? அதன் காரணத்தைச் சொல்லுவாயா' என்றார்.

**38. பகரங்கொ ணெடுந்திவலை பனிவிசும்பிற்**
**பறித்தெறியப் பண்டு முந்நீர்**
**மகரங்கொள் நெடுங்கூல வரைதிரித்த**
**மாலென்பர் மன்னர் யானை**
**சிகரங்கள் போன்மடியத் தெள்ளாற்றுக்**
**கண்சிவந்தான் றென்னன் தொண்டி**
**நகரங்கைப் படுத்தபிரா னந்திநர**
**பதிபணிகோ நங்கள் கோவே.**

இதில், நந்தியைத் திருமாலாகக் கூறுவர் என்றார். நந்தி பாண்டியனது தொண்டிநகரை வென்றது கூறப்பட்டுள்ளது.

**39. நங்கள்கோத் தொண்டை வேந்தன்**
**நாமவேன் மன்னர்க் கெல்லாந்**
**தங்கள்கோ னங்க நாடன்**
**சந்திர குலப்ர காசன்**
**திங்கள்போற் குடையி னீழற்**
**செய்யகோல் செலுத்து மென்பர்**
**எங்கள்கோல் வளைக ணில்லா**
**விபரித மிருந்த வாறே.**

இது, நந்தியைக் கண்டு காமுற்ற மகளிர் கூறிய கூற்று. உலகில் எல்லோரையும் இனிதே காக்கின்ற நந்தி, நாங்கள் மட்டும் அவன்மேற் கொண்ட காதலால் கைவளையல்கள் கழன்று வருந்தும்படி செய்கின்றேனே! அவனது அருளில் இப்படிப்பட்ட ஒரு மாறுபாடு இருந்தது என்னே? என இரங்கி, மகளிர் நிற்கின்றனர்.

**40. ஆறா விறலடு போர்வன்மை யாலம ராடியப்பாற்**
**பாறார் களிற்றுயர் பல்லவர் கோனந்தி மல்லையன்றிக்**
**கூறாளிவளினங் கொங்கை யவன்வளர் தொண்டையல்லால்**
**நாறா திவடிரு மேனியு நாமென்கோ னாணுவதே.**

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனைக் கூடிவந்த தலைவியைக் கண்ட தோழி, அவளது தோற்றத்தையும், அவள் மேற் கமழும் மணத்தையும், அவள் ஒழுக்கத்தையும் கண்டு ஐயுற்று, அவற்றினாலேயே ஐயம் நீங்கினாள். இச்செய்யுளில், தலைவி நந்தியினது நகரமான மாமல்லையைப் புகழ்தலையும், அவள் கொங்கைமீதும் உடல்மேலும் அவனது தொண்டைமலர் மணங்கமழ்தலையும் கண்டு, தோழி ஐயம் நீங்கி,'இவன் நந்தியைக் கூடி வந்தவள். நாம் ஏன் நாண வேண்டும்' என்று தன்னுள்ளே கூறினாள்.

**41. நாணா தித்திரு மடவார் முன்புநி**
**னன்பொற் கழலிணை தொழுதாரிற்**
**பூணா கத்தொளிர் பொனா கச்செய்த**
**புதுமென் றொண்டைய தருளாயே**
**வாணா ளைச்சுளி களியா னைப்படை**
**வயவே லடையலர் குலகாலா**
**கோணா மைக்கொரு குறையுண் டோவுரை**
**கொங்கா நின்னது செங்கோலே.**

நந்தி மன்னனே! இம்மகளிர்க்கு முன்னே நாணமுறாது, உனது தொண்டை மலர்மாலையை எனக்குத் தருவாய். நீ அவ்வாறு தராவிட்டால்,உனது நீதி தவறாமைக்கு ஒரு குறை உண்டோ இல்லையோ நீ சொல்வாய் என்று தலைவி சொன்னாள். நின் செங்கோல் கோணாமைக்கு ஒரு குறை உண்டு எனக் கொண்டு, ஒகாரத்தை அசை ஆக்கலும் ஆம். 'குறை இன்றே' என்றிருப்பின் சிறந்திருக்கும். நந்தியைக் 'கொங்கன்' என்றது. நாட்டை ஆளுதல் பற்றியது.

**42. செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு**
**செறி மாமை வாட வெழிலார்**
**அங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப**
**அரசாள்வ தென்ன வகையோ**
**தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர்**
**தமிழ் மன்னர் நின்ற நிலமேல்**
**வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த**
**விறனந்தி மென்மோ ழிவையே.**

நந்தியே. நீதி தவறிய மன்னர்களைக் கோபித்து நீதி செலுத்திய நீ, இம்மங்கையர் வாட அரசாள்வது நீதி ஆகுமோ? ஆகாது ஆதலால், அவர்களுக்கு விரைந்து அருள் செய்வாயாக என்பது கருத்து.

இதில், தமிழ்நாட்டு மூவேந்தரையும் நந்தி வென்றது கூறப்பட்டது.

**43. மொழியார் தொண்டைப் பன்மலர் முற்றுந் தெருவந்து**
**விழியா ளென்றும் மேனி வெளுத்துற மெலிவாளே**
**ஒழியா வண்கைத் தண்ணரு ணந்தித னூர்மட்டோ**
**வழியாம் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே.**

இது, வினைமுற்றி மீளும் தலைவன் மேகத்தோடு கூறுதல்.

தான் சென்ற போரை முடித்து மீளும் தலைமகன், மீண்டுவரும் போது, தலைவியிடத்துத் தான் வருவதாகக் குறித்த கார்காலத்திற்குரிய மேகம் தனக்கு முன்னே வானத்தில் செல்லுதலைக் கண்டு வருந்தி,'மேகமே நீ செல்வது என் தலைவியின் ஊர்வரையிலுமோ இடைவழிமட்டுமோ சொல்! நீ எனக்கு முன்னே என்னூர்க்குச் சென்றர், தலைவி கார்காலம் வந்துவிட்டது. தலைவர் வந்திலர் என எண்ணி உடம்பு வெளுத்து வாடுவாள்' என்பான். இவ்வாறு மேகத்தைக் கண்டு கூறினும், அது விரைவில் தேரைச் செலுத்து எனப் பாகனுக்கு அறிவித்தது ஆகும்.

**44. ஒருகோமக னந்தி யுறந்தையர் கோ**
**னுயர்நீள்வல யத்துயர் வாளைவளை**
**குருகோடு வயற்படர் காவிரியிற்**
**குலவும்புயல் கண்டு புகார்மணலிற்**
**பெருகோடு நெடுங்கழி சூழ்மயிலைப்**
**பெருமானது பேரணி நீண்முடிமேல்**
**தருகோதை நினைந்தயர் வேன்மெலியத்**
**தழல்வீசுவ தோகுளிர் மாமதியே.**

காவிரியில் விளங்கும் மேகத்தைக் காணலாவது, கார் காலத்தைக் கண்டு நந்தியின் தொண்டைமாலையை நினைத்துச் சோர்கின்ற நான் வருந்தும்படி, மதியமே நீ தீயை வீசுவது தக்கதாகுமோ என்றாள். வாட்டமுற்றவருக்கு நன்மை செய்யாது மேலும் தீமை செய்தல் மதியே உனக்குத் தக்கதோ வென்றாள். அறிவுடையவளே, நீ இப்படி செய்யலாமோ என்றுமாம்.

**45. மதிய மெரிசொரியு மாலையம் மாலை**
**மறந்தும் புலராது கங்குலாங் கங்குல்**
**கதிர்செய் யணிவண்டு காந்தாரம் பாடக்**
**களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்**
**பதியின் வளர்ந்தநறுந் தொண்டையங்கோ னந்தி**
**பல்லவர்க்கு நேராத பாவையர்தம் பாவை**
**விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்**
**வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே.**

பெண்வண்டு காந்தாரம் பாட ஆண்வண்டு புகுந்து உலாவும் வசந்த காலத்திலே, விடியாத இரவில் நெருப்பான மதியால் வருந்தும் தலைவியைக் கண்டு, தோழி கூறியது. 'நந்திப் பல்லவனுக்கு மகளைக் கொடுக்க மனம் நேராத மாதர்களது மகளிர் படுந்துன்பத்தைப் பார்த்து, நாம் இவளைப் பல்லவனுக்குக் கொடுக்கச் சம்மதித்து விட்டோம்! இனி, நாம் அவளுக்காகச் செய்ய வேண்டுவது என்ன? அவன் அவளை மணந்து கொள்வான் என எண்ணிக் கூறினாள்.

**46. மாட்டாதே யித்தனைநாண் மானந்தி வான்வரைத்தோள்**
**பாட்டாதே மல்லையர்கோள் பரியானைப் பருச்சுவடு**
**காட்டாதே கைதைப் பொழிலுலவுங் காவிரிநீர்**
**ஆட்டாதே வைத்தென்னை யாயிரமுஞ் செய்தீரே.**

இது, தலைவி தோழியரிடத்துத் தன் துயரம் கூறி இரங்கியது. இதில் தலைவி தன் துயரம் தீர்வதற்கு வழி கூறினாள்.

**47. செய்ய வாய்மிகக் கரியகண் வனமுலை**
**செறிந்திறு மருங்குற்கொம்**
**பைய சாலவு மவிரிழை யல்குலம்**
**மதுமலர்க் குழலென்றால்**
**வெய்ய வெப்பவி யாதகுஞ் சரநந்தி**
**வீரவ னிவளைப் போய்**
**நைய நாமிவ னகரிகை தொழுநிலம்**
**நம்முயி ரளவன்றே.**

இது, தலைவன் தன்னை வருந்திய தலைவியின் இயல்பைக் கூறக்கேட்டுப் பாங்கன் தன் மனத்திலே வருந்திக்கூறுதல்.

**48. அளவுகண் டாற்குடங் கைத்துணைபோலு மரசர்புகும்**
**வளவுகண் டானந்தி மானோதயன்வையந் தன்னின்மகிழ்**
**தளவுகண் டாலன்ன வெண்ணகை யாற்றமி யேனதுள்ளங்**
**களவுகண் டார்முகத் துக்கண்க ளாய கயற்குலமே.**

பெண்களின் கண்களுக்குக் குடங்கையை அளவாகக் கூறுதல்,'குடங்கையின் அகன்ற விழி' என்பதனால் அறியப்படும். 'அரசர் புகும் வளவு கண்டான்' என்பதனால் நந்தி ஒரு பெரிய அரண்மனை கட்டினான் எனத் தெரிகின்றது.

**49. குலமரபு மொவ்வாது பயின்றுவந்த**
**குடித்தொழிலுங் கொள்படையின் குறையுங் கொற்றச்**
**சிலவளவுஞ் சிந்தியாத் தெவ்வர் தேயத்**
**தெள்ளாற்றிற் செருவென்ற சேங்கோ னந்தி**
**புலவரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே**
**பூவலயந் தனிற்கரியாய் நின்ற மன்னா**
**சொலவரிய திருநாம முனக்கே யல்லாற்**
**சொல்லொருவற் கிசையுமோ தொண்டைக் கோவே.**

இச்செய்யுள், நந்தியினது வெற்றியையும் புகழையும் கூறுகிறது.

**50. கோவே மாலை மாலையாக் கோவே வண்டு நீலவொண்கண்**
**கோவோ மாலை மாலையாக் கொண்டால் கூறு மாறறியேன்**
**கோவோ மாலை நீண்முடியார் கொற்ற நந்தி கச்சியுளார்**
**கோவே மாலை யுள்ளுமெங்கள் கோவே கொம்ப ரானாரே.**

இது, தோழி தலைவனுக்குத் தலைவியின் துயரம் கூறி வரைவு கடாயது.

**51. ஆகிடுக மாமை யணிகெடுக மேனி**
**யலரிடுக வாரு மயலோர்**
**போகிடுக சங்கு புறகிடுக சேரி**
**பொருபுணரி சங்கு வளைமென்**
**னாகிடறு கானல் வளமயிலை யாளி**
**நயபரனு மெங்க ளளவே**
**யேகொடியனாக விவையியையும் வஞ்சி**
**யினி யுலகில் வாழ்வ துளதோ?**

தலைவன் அருள் செய்யாமையால், தலைவியுற்ற துன்பத்தைக் கண்ட தோழி வருந்தி,‘எல்லோர்க்கும் நீதி வழங்கும் நந்திவர்மன் எங்கள் அளவிலே நீதியின்றி யிருந்தான். ஆதலால், இனி இவள் உலகில் வாழ்வது இல்லை. அதனால் இனி அவள் உடலும் பசலை பூத்தாலென்ன, அயலோர் அலர் தூற்றினாலென்ன! கைவளையல் கழன்று விழுந்தாலென்ன, ஊரவர் புறங்கூறினால் என்ன? என்றாள்.

**52. உளமே கொடிமருங் குண்டில்லை யென்னில்**
**இளமுலைக ளெவ்வா றிருக்குங் கிளரொளிய**
**தென்னிலைவேற் கண்ணினா டெள்ளாற்றில் வென்றகோன்**
**தன்மயிலை யன்னாள் தனக்கு.**

இது, இயற்கைப்புணர்ச்சியல் தலைவியைக் கூடிய தலைவன், புணர்ச்சியின் பின்பு தலைவியின் நலம்பாராட்டல், தலைவிக்கு இடை உண்டு என்பதைத் தருக்கம் கூறி நிலைநாட்டினான். ‘இவட்கு இடை இல்லையென்று கூறினார்கள். இடை இல்லை என்றால், இல்லாதவன் மேல் எதுவுமில்லை என்றபடி,இல்லாத இடையின் மேல் எதுவும் இருத்தல் இயலாது. இவட்கு இடை தெரியாவிட்டாலும், அதன் மேலே இவ்விளங்கொங்கைகள் இருக்கின்றன. ஆதலால் இவளுக்கு இடை உண்டு’ எனத் துணிந்து கூறினாள்.

**53. தனக்குரிய வென்கொங்கை தான்பயந்த**
**மழகளிற்றுக் காக்கித் தன்பால்**
**எனக்குரிய வரைமார்ப மெங்கையர்க்கே**
**யாக்கினா னிகல்வேன் மன்னர்**
**சினக்கரியும் பாய்மாவுந் தெள்ளாற்றிற்**
**சிந்துவித்த செங்கோ னந்தி**
**மனக்கினியா னவனிட்ட வழக்கன்றோ**
**வழக்கிந்த வையத் தார்க்கே.**

தலைவியின் வேறுபாட்டைக் கண்டு வினவிய தோழிக்குத் தலைவி தலைவனது புறத்தொழுக்கத்தினை உணர்த்தினாள்.

**54. தார்வட் டக்கிளி மருவுஞ் சொற்பகர்**
**தளரிடை தையல் வஞ்சிக்கின்**
**றோர்வட் டத்தனி மதிவெள் ளிக்குடை**
**கொடிதென் றாலது பழுதன்றோ**

**போர்வட் டச்சிலை யுடைவாள் பற்றிய**
**பொருகடன் மல்லைப் புரவலனே**
**பார்வட் டத்தனி மதயா னைப்படை**
**யுடையாய் பல்லவ ரடலேறே.**

'நந்தியே! எல்லோருக்கும் இன்னிழல் தரும் நின் வெண்குடை, இவட்குமட்டும் துன்பம் தரும் என்றால், அது குற்றமன்றோ? ஆகையால், இவட்கு அருள்செய்து இவளை மணஞ்செய்து கொள்வாயாக' எனத் தோழி வரைவுகடாயது ஆகும்.

**55. அடலேறு வலத்துயர் வைத்தபிரான்**
**அடலுக்ரம கோப னடங்கலர்தாம்**
**மடலேறிட வாகை புனைந்தபிரான்**
**வடவேங்கட நாடுடை மன்னர்பிரான்**
**பெடையேறு நெடுங்கழி சூழ்மயிலைப்**
**பெருமானது பேரணி நீண்முடிமேல்**
**மிடலேறிய கோதை நினைந்தயர்வான்**
**மெலியத்தழல்வீசுமிம் மாமதியே.**

தலைவி நிலவால் வருந்துதல் கண்டு தோழி கூறியது. பகைவர் மடலேறுதலாவது, நந்திமன்னனது அருளைப் பெறத் தவம்செய்தல், அல்லது தோற்ற ஓடதல். நந்தி விடைக்கொடி உடையவன்என்பதை,'அடல் ஏறுவலத் துயர் வைத்த பிரான்' என்பது விளக்கியது.

**56. மலர்ச்சூழ லமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்**
**வரிக்குயில்கள் மாவிலிளந் தளிர்கோதுங் காலம்**
**சிலர்க்கெல்லாஞ் செழுந்தென்ற லமுதளிக்குங் காலந்**
**தீவினையேற் கத்தென்றல் தீவிசுஞ் காலம்**
**பலர்க்கெல்லாங் கோனந்திப ன்மாடக் கச்சிப்**
**பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் காலம்**
**அலர்க்கெல்லா மையங்கணைவே ளலர்தூற்றுங் காலம்**
**அகன்றுபோ னவர்நம்மை அயர்த்துவிட்ட காலம்.**

மாமரம் தளிர்ப்பதும் மலர்கள் மிகமலர்வதும் இளவேனிற் காலத்தே உண்டாகும். ஆதலால், தலைவி குறித்த காலம் இளவேனிற் காலம் எனக் கொள்ளப்பட்டது. பலர்க்கும் இன்பந்தரும் இளவேனிற்காலம், தலைவனைது பிரிவால்

தனக்குத் துன்பம்தரும் காலமாகவும், தன்னைத் தலைவர் மறந்துவிட்ட காலமாகவும் ஆயிற்று எனத் தலைவி பொழுது கண்டு இரங்கினாள்.

**57. காலவினை வாணர்பயில் காவிரிந னாடா**
**ஞாலமொரு கோலினி னடாவுபுகழ் நந்தி**
**நீலமயில் கோதையிவன் நின்னருள்பெ றாளேற்**
**கோலவளை கோடலிது மன்னர்புக ழன்றே.**

தலைவி நந்திமேற் கொண்ட காதலால் கைவளையல் கழன்றுவிழப் பெற்றாள். தோழி அதனைத் தலைவனை நந்திமேல் ஏற்றி, அவளுக்கு அருள்செய்யாது அவள் வளையலைக் கைக்கொள்வது தக்கது அன்று எனக் கூறினாள். மன்னருக்குப் புகழன்று என்பது நீ அவளுக்கு அருள்புரிவாய் என வேண்டியதாகும்.

**58. புரவல னந்தி யெங்கள் பொன்னிநன் னாட்டு மன்னும்**
**வரமயில் போற்று சாயல் வாணுதற் சேடி காணங்**
**குரவலர் பொழிலிற் கோலக் கோட்டிடை யில்லை யாகில்**
**இரவலர் மலர்க ளெங்கு மில்லையோ நல்கு வேனே.**

இது, தலைவன் தோழிக்கு இரவில் மலரும் மலரைத் தருவேன் என்று கூறியதால், தலைவன் இரவுக்குறி விரும்பிக்கூறியதாகும். தலைவன் கையுறை புகழ்ந்தது என்றுக் கூறுவர்.

**59. நல்கு நந்தியிந் நானிலங் காவலன்**
**மாரவே ணளிர்முத்தம்**
**மல்கு வெண்குடைப் பல்லவர் கோளரி**
**மல்லலந் திண்டோண் மேன்**
**மெல்கு தொண்டைநய் தந்தருள் கிலன்விடை**
**மணியொடும் விடியாத**
**அல்லி னோடும்வேண் டிங்களி னொடுமுளன்**
**உய்வகை யறியேனே.**

இச்செய்யுள், தலைவியிரங்கல். பிரிந்திருப்பார்க்கு இரவும் சந்திரனும் துன்பம்தரும் என்பதோடு, விடைமணியும் துன்பந்தரும்.

60. **அறம்பெருகுந் தனிச்செங்கோள் மாயன் றொண்டை**
**யங்கனிபோற் சிவந்துதிரு முகத்துப் பூத்து**
**மறிந்துளதே பவளவாய் மருங்கி லாடும்**
**வல்லியிடை மணிமுறுவன் முத்துச்சால**
**நெறிந்துளதே கருங்குழலங் குவளை கண்க**
**ணெடியவேய் தொடியதோ ணேர்ந்து வெம்மை**
**செறிந்துளவேமுலைசிலையே புருவ மாகி**
**யவர்நம்மைச் சிந்தைநோய் திருத்தினரே.**

இது, தலைவன் தனது வேறுபாடு கண்டு வினவிய பாங்கனுக்குத் தன்னை வருந்திய தலைவியின் இயல்பைக் கூறியது.

61. **திருவின் செம்மையு நிலமக ளுரிமையும்**
**பொதுவின்றி யாண்ட பொலம்பூட் பல்லவ!**
**தோடுணை யாக மாவெள் ளாற்று**
**மேவலர்க் கடந்த வண்ணா னந்திநின்**
**றிருவரு நெடுங்கண் சிவக்கு மாகிற்**
**செருநர் சேரும் பதிசிவக் கும்மே**
**நிறங்கிளர் புருவந் துடிக்கி னின்கழ**
**லிறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே**
**மையில் வாளுறை கழிக்கு மாகி**
**னடங்கார் பெண்டிர்**
**பூண்முலை முத்துப் பூண்கழிக் கும்மே**
**கடுவாய் போல்வளை யதிர நின்னொடு**
**மருவா மன்னர் மனந்துடிக் கும்மே**
**மாமத யானை பண்ணி**
**னுதிர மன்னுநின் னெதிர்மலைந் தோர்க்கே.**

நந்தியினது வீரத்தை வியந்து கூறியது எனின், பாடாண்டிணைச் செய்யுளாகும். கண்சிவத்தல், புருவந்துடித்தல், கோபக்குறிப்பாகும். செருநர் சேரும் பதி சிவத்தலாவது, பகைவர் ஊரைத் தீயிட்டுக் கொளுத்துதல், பகைவர் பெண்டிர் பூண் கழித்தலாவது, அவர் கணவர் போரில் இறந்துவிட, அவர்கள் அணிகலன்களை நீக்கிவிட்டு விதவை நோன்பு இயற்றல். சங்கொலி, கடுவாய்ப் பிறையொலிபோலக் கேட்குமாயின், அதனைப் போர்ப்பறை ஒலி என எண்ணிப் பகைவர் மனம் துடிக்கப்பெறுவர். மத யானையை

அலங்கரித்தல் கேட்டவளவிலே, பகைவர் பயந்தால் இரத்தல் கக்குர் என, நந்தியினது வீரத்தை வியந்து கூறினார்.

**62. ஓராதே யென்மகளைச் சொன்னீரே தொண்டைமேற்**
**பேராசை வைக்கும் பிராயமோ – நேராதார்**
**ஆள்வலியாற் கொண்ட வகன்ஞால மத்தனையுந்**
**தோள்வலியாற் கொண்ட துயக்கு.**

‘நந்தி மன்னவனை வருத்தியவள் இவள்’ என அயலார் கூறியபோது, செவிலி,‘இவள் இளம் பருவத்தினள். காதற்குறிப்பை அறியாள் எனக் கூறி மறுத்தாள். இ.்.து, இளமை கூற மறுத்தல் என்னுந்துறை அகப்புற மாதலால், என் மகள் என்பது கொண்டு, செவிலி கூறியதாக ஆயிற்று.

**63. துயக்குவித் தான்றுயில் வாங்குவித் தான்றுயில் வித்திவளை**
**வயக்குவித் தானுள்ளம் வஞ்சனை யான்மலர்க் காவகத்து**
**முயக்குவித் தான்றுகில் வாங்குவித் தான்முன நின்றிவளை**
**மயக்குவித் தானந்தி மானோ தயனென்று வட்டிப்பனே.**

இச்செய்யுள். தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல். தலைவி தன் கற்புகெடாமல் தான் கொண்ட காதலை தோழியிடம் கூறுவாள். செவிலி, தலைவியின் வேறுபாடு கண்டு வினவியபோது, தோழி அதனை, அவட்குக் கூறி அறத்தொடு நிற்பாள்.

**64. வட்டன்றே நீரிதனை மிகவுங் காண்மின்**
**மற்றைக்கை கொட்டினேன் மாவின்வித்தொன்**
**றிட்டன்றே பழம்பழுப்பித் துண்ணக் காண்மின்**
**இவையல்ல சம்பிரத மிகலிற் றெள்ளாற்**
**றட்டன்றே பொன்றும்வகை முனிந்த நந்தி**
**யவனிநா ராயணன்பா ராளுங் கோமான்**
**குட்டன்றே மழைநீரைக் குடங்கை கொண்டு**
**குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின்றேனே.**

உள்ளங்கையைக் கொண்டு எனவும், குடத்தைக் கையில் கொண்டு எனவும் பொருள்படும். நான் ஒரு சிறுகட்டை அளவான நீரைக் குடிக்கவில்லை. கடல்நீரையோ குடிக்கின்றேன் என்றான் சித்தன். மழைநீர் கடலிலிருந்து வந்த நீர். ஒரு கையில்

வைத்த பொருளை மற்றொரு கையிற் போகச் செய்தலும், மாமரத்தின் விதையை நட்டு அன்றே முளைத்து வளர்ந்து பழம்பழுக்கச் செய்தலும், குடந்தண்ணீரைக் குடித்துக்காட்டலும், சித்தர்கள் செய்யும் கண்கட்டு வித்தையாகும்.

**65. குடக்குடை வேந்தன்றென் னாடுடைமன்னன் குணக்கினொடு**
**வடக்குடை யானந்தி மானோ தயனிந்த வையமெல்லாம்**
**படக்குடை யேந்திய பல்லவன் றன்னோடும் பாரறியத்**
**துடக்குடை யாரையல் லாற்சுடு மோவிச் சுடர்ப்பிறையே.**

இது, தோழி தலைவியின் வேறுபாடு கண்டு, பிறை ஆனது நந்தியோடு தொடர்புடையாரை அல்லாமல் மற்றையோரைச் சுடாது. நீ அவனோடு தொடர்புடைய, ஆதலால் பிறை உன்னைச் சுட்டது என்று கூறி, அவரது ஒழுக்கத்தால் ஐயந்தீர்ந்தான். இது தோழி ஐயந்தீர்ந்தது.

**66. பிறைதவழ் நெஞ்சடைப் பிறங்க னாரணன்**
**அறைகழன் முடித்தவ னவனி நாரணன்**
**நறைகொழு தொண்டையோன் றொண்டை கண்டபின்**
**இறைகெழு சங்குயி ரிவளுக் கீந்ததே.**

சிவபெருமானது கழலை முடித்தவன் நந்தி எனக் கூறியதால், நந்தி சைவமதத்தினன் என்பது புலனாகிறது. இச்செய்யுள், தலைவியின் வேறுபாடு கண்டு வினவிய தலைவிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தோடு நின்றது.

**67. ஈகின்றது புனமுந்தினை யாமும்பதி புகுநா**
**னாகின்றது பருவம்மினி யாகும்வகை யறியேன்**
**வாழ்கின்றதோர் புகழ்நந்திதன் வடவேங்கட மலைவாய்த்**
**தேய்கின்றதோ ருருவத்தொடு திரிவாரது திறமே.**

தலைவன் சிறைப் புறத்தானாகத் தோழி, திணை விளைந்துவிட்டது. தலைவி இனி இல்லிலே செறிக்கப்படுவாள் எனக் கூறி வரைவுகடாயது.

**68. திறையிடுமி னன்றி மதில்விடுமி னுங்கள்**
**செருவொழிய வெங்கண் முரச**
**மறைவிடுமி னித்த வவனிதனி லெங்கு**
**மவனுடைய தொண்டை யரசே**

**நிறைவிடுமி னந்தி கழல்புகுமி னுங்க**
**ணெடுமுடிகள் வந்து நிகழத்**
**துறைவிடுமி னன்றி யுறைபதிய கன்று**
**தொழுமினல துய்ந்த லரிதே.**

இச்செய்யுள், ஒரு வீரன், பகையரசனிடத்துத் தன் தலைவனது வீரத்தை எடுத்துக் கூறி,'அவனுக்குத் திறை செலுத்தி வணங்குங்கள்! இல்லாவிடில் நீங்கள் பிழைத்தல் அரிது' என்றால், இது புறத்திணையில் பாடாண்டினைச் செய்யுளாகும்.

**69. அரிபயி னெடுநாட்டத் தஞ்சன முழுதூட்டிப்**
**புரிகுழன் மடமானைப் போதர விட்டாரார்**
**நரபதி யெனுநந்தி நன்மயி லாபுரியில்**
**உருவுடை மிவடாயர்க் குலகொடு பகையுண்டோ?**

சுருண்ட அல்லது புரியான கூந்தலையும், இளமான் போன்ற பார்வையையும் உடைய இம்மங்கை, கண்டார் விரும்பும் கட்டழகினன். அத்தகையாளுக்கு மேலும் அழகு செய்து கண்ணிற் மை பூசி விட்டதால், இவளது இயற்கையழகோடு செயற்கையழகும் கண்டால், மயங்காதவர் உளரோ?

**70. பகையின்றிப் பார்காக்கும் பல்லவர்நோன் செங்கோலி**
**னகையும்வாண் மையும்பாடி நன்றாடு மதங்கிக்குத்**
**தகையுநுண் ணிடையதிரத் தனபார மவற்றோடு**
**மிகையொடுங்கா முன்னிக்கூத் தினைவிலக்க வேண்டாவோ.**

மதங்கியின் கூத்தினைக் கண்டோர் கூறியது. அவளது ஆட்டத்தினால் அவளது உடல் அதிர்தலால், அவளது நுட்பமான இடை கொங்கைகளின் பாரந்தாங்காமல் முறிந்துவிடும். அக்குற்றம் உண்டாகுமுன்னே நாம் இக்கூத்தை விலக்கவேண்டுமென்று கண்டோர் கூறினர். இது கலம்பக உறுப்பினுள் ஒன்று, இதனால் அக்காலத்தில் ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களும் போர்ப்பயிற்சி பெற்றிருப்பதை அறியலாம்.

**71. வேண்டா ரெண்ணும வேந்தர் பிராற்கே மெய்யன்பு**
**பூண்டா ணங்கா யன்றிவ ளென்றாற் பொல்லாதோ**
**மூண்டார் தெள்ளாற் றுள்ளே மூழ்க முனிவாறி**
**மீண்டா னந்திக் கென்மக டோற்கும் வெண்சங்கே.**

செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நின்றது. தலைவியின் கைவளையல் கழுலுதல் முதலிய வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி, அந்நாளிலே நந்தியைக் கண்டு தலைவி காதல் கொண்டமையைக் கூறி அறத்தொடு நின்றாள்.

**72. வெண்சங் குறங்கும் வியனமாதர் முற்றத்து விடியவேவான்**
**வண்சங் கொலிப்ப மடவார்கள் விளையாடு மல்லை வேந்தன்**
**தண்செங்கோ னந்தி தனிக்கு டைக்கீழ் வாழாரிற்**
**கண்சிம் புளியாரோ யாமோ கடவோமே.**

இது, தலைவனது பிரிவிலே தலைவி இரங்கிக்கூறியது. நந்தியின் குடை நிழலில் வாழாதவர் உறக்கமின்றி வருந்தியிருத்தலைப் போல, நாமும் தலைவனது பிரிவினால் கண்ணுறக்கமின்றி வருந்துகின்றோம். நாம் இந்நோய் அடையத் தக்கவர்களா? என எண்ணித் தலைவி இரங்கினாள்.

**73. கடற்கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை**
**மடற்கூறு தோறு மலிமல்லை கங்குல்**
**அடற்கூடு சாவே யாமையா தவர்வை**
**திடற்கூறு வேனுக் கேதாவி யுண்டோ?**

இது, தலைமகன் பரத்தையிற் பிரிந்துழித் தலைவி இரவுகண்டு வருந்திக்கூறியது. கடற்குளிரால் நாரைகள் பனைமடற்பகுதிகள் தோறும் தங்கியிருத்தல் போல, பரத்தைமகளிர் தலைவன் மேலுள்ள விருப்பினால் ஊரிலெங்கும் நிறைந்துள்ளனர் என்பது உள்ளுறைபொருள்.

**74. உண்டிரையிற் செங்கழுநீ ரிலஞ்சி மாடே**
**யொண் பொழிலிற் சண்பகத்தார் தடவியோடித்**
**தண்டளையிற் பூங்கமுகம் பாளைதாவித்**
**தமிழ்த்தென்றல் புகுந்துலவுந் தண்சோணாடா**
**விண்டொதுதிண் கிரியளவும் வீரஞ்செல்லும்**
**விடேல்விடுகு நீகடவும் வீதிதோறுந்**
**திண்டறுகண் மாத்தொழுத பாவை மார்க்குச்**
**செங்கோல னல்லையோ நீசெப் பட்டே.**

‘விடேல் விடுகு’ நந்தியின் சிறப்புப் பெயருள் ஒன்று. நந்தி யானை மேல் வருதலைக் கண்ட மகளிர், காதல்கொண்டு வருந்துதலால், அவர்கள் வருந்தும்படி நீ

செய்கின்றாயே, எல்லாரையம் வருந்தாமற் காக்கும் நீ, அவர்கள் வருந்தாமற் செய்யாதிருக்கின்றாய். நீ அவர்களிடத்தில் மட்டும் நீதியுடையாயல்லையோ சொல்லுவாயாக' என்று, தோழி தலைமகனிடத்துக் கேட்டாள்.

**75. பட்ட வேந்தாதம் பூணொடும் பாவைமார்**
**நாணெடுந் தெள்ளாற்றில்**
**வட்ட வெஞ்சிலை நாணிடக் கழித்தவன்**
**மல்லையின் மயிலன்னாள்**
**விட்ட கூந்தலும் விழியுநன் முறுவது**
**நுதன்மிசை யிடுகோல**
**மிட்ட பொட்டினொ டிளமுலைப் போகமு**
**மெழுதவு மாகாதே.**

நந்தி, தனது வில்லில் நாணைப் பூட்டிப் பகையரசரது மகளிரின் கழுத்திலுள்ள மங்களநாணைக் களைந்தான் என்பதாம்.

**76. ஆகாதுபோக மயில்விளைத் தகன்ற லவன்கை**
**போகாத சங்கு மருளான ரென்ற போதுவண்டோ**
**………………………………………………….**
**…………………………………………………..**
இச்செய்யுள் முழுவதும் இல்லை.

**77. அம்பொன்று வில்லொடித னாணறுத**
**னான்கிழவ னசைந்தே னென்றோ**
**வம்பொன்று குழலாளை மணம்பேசி**
**வரவிடுத்தார் மன்னர் தூதா**
**செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றி**
**னந்திபதஞ் சேரா ரானைக்**
**கொம்பன்றோ நஞ்குழலிற் குறுங்காலு**
**நெடுவளையுங் குனிந்து பாரே.**

மறம், மறவரது வீரச்செயலைக் கூறுவது. மறவனது மகளை விரும்பி வேற்றரசன் அனுப்பிய தூதுவனைக் கண்டு, அவனுக்குத் தன் மகளைக் கொடுக்க மனமிசையாத மறவன், தனது வீரச் செயலைக் கூறி, மகட்கொடேன் என மறுத்து, அத்தூதுவனை அனுப்புதல் ஆகும்.

78. **பாவையர் பரிந்து தாங்கும் பனிமலர் செறிந்த செந்திற்**
**கோவைபேய் நந்தி காக்கும் குளிர்பொழிற் கச்சி யன்னாள்**
**பூவையும் பந்துந் தந்து புல்லினா ளென்னை யென்னே**
**மாவியல் கானம் போந்த தறிகிலேன் மதியி லேனே.**

தலைமகள், தலைவனுடன் செல்வதற்கு முதனாள், தான் வளர்த்த பூவையையும் பந்தையும் கொடுத்துச் செவிலியைத் தழுவிக்கொண்டாள். மறுநாள், தலைவனுடன் தலைவி சென்றதை அறிந்து, அவள் முதனாளில் தன்னைத் தழுவியதன் குறிப்பை அறியாமற் போனதைக் குறித்துச் செவிலி தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

79. **நீண்டதாங் கங்கு லெங்கு நிறைந்ததாம் வாடை பொங்கி**
**மூண்டதா மதியி னோடே முயங்குதார் வழங்கு தெள்ளாற்**
**றீண்டினார் பரியுந் தேரு மிருகை வென் றொருகை வேழந்**
**தூண்டினா னந்தி யிந்தத் தொண்டைநா டுடைய கோவே.**

இது, வாடைக் காற்றாலும் இரவாலும் மதியாலும் தலைவிபடும் துன்பத்தைத் தலைவனாகிய நந்திக்கு எடுத்துக் கூறி, தோழி வரைவுகடாயது.

80. **கோலக்கொடி யன்னவர் நீள்செறுவிற்**
**குறுந்தேன்வழி கொண்ட லருங்குவளை**
**காலைப்பொழு தின்னெழு கன்னியர்தங்**
**கண்ணின்படி காட்டிடு கச்சியின்வாய்**
**மாலத்தெள் ளாறெறிந்த மானோதயன் குடைக்கீழ்**
**ஞாலத்தோ டொத்ததே நான்பெற்ற நறுங்கொம்பே!**

இது, தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாலறிந்த நற்றாய், தலைவியைக் கடிந்து, இது உலக ஒழுக்கத்துக்குத் தகாதெனக் கூறியது.

81. **கொம்புயர் வாமை நாக மெதிர்வந்த நந்தி**
**குலவீர ராக மழியத்**
**தம்பியரெண்ண மெல்லாம் பழுதாக வென்ற**
**தலைமான வீர துவசன்**
**செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து மாயச்**
**செருவென்ற பாரி முடிமேல்**

**வம்புயர் தொண்டை காணு மடமாதர் தங்கை**
**வளைகொண்ட தென்ன வலமே?**

கொம்புயர்வாம் மைநாகம் எதிர்வந்த நந்தி என்பதற்கு, கஜேந்திரன் ஆதிமூலமே என்று அழைத்தபோது அதன் எதிரே வந்த திருமாலாகிய நந்தி என்றும் கூறுவர். இது, தோழி தலைமகளின் துயரங்கூறி வரைவு கடாயது.

**82. வலம்வரு திகிரியு மிடம்வரு பணிலமு**
**மழைதவழ் கொடிபோலக்**
**குலமயில் பாவையு மெறிகடல் வடிவமு**
**மிவையிவை கொண்டாயே.**

திருவுடை மன்னரைத் திருமாலாகக் கூறுதல் முறைமையாதலால், இதில் நந்தியைத் திருமாலாகக் கூறினார். நந்தி திருமாலின் அவதாரம் என்பதற்கு ஏற்ப, வலக்கரத்தே ஆணைச்சக்கரத்தையும், இடக்கரத்திலே வெற்றிச்சங்கையும் திருமகள் போன்ற மனைவியையும், மேகம் போன்ற கரிய உருவத்தையும் கொண்டுள்ளான் என்பதாம்.

**83. கொண்ட லுறும்பொழில் வண்டின மாமணி**
**வண்ட லிடுங்கடன் மல்லைகா வலனே!**
**பண்டை மராமா மெய்தபல் லவனே!**
**தொண்டை யொற்றுவ ளிவடோள் வளையே.**

இது, தலைவியின் துயரம் கூறித் தோழி தலைவனிடத்து வரைவுகடாயது.

**84. தோளான் மெலியாமே யாழ்கடலாற் சோராமே**
**வாளா பெறலாமே வாயற்றீர் - கேளாதார்**
**குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை யத்தனையும்**
**அஞ்சரங்க ளார்த்தா னருள்.**

இது, தலைவி தோழியர்களை நோக்கிக்கூறியது,'தோழியர்களே! நீங்கள் நந்திமன்னனிடம் என் துயரை எடுத்துச்சொன்னால், அவனது அருளை யாதொரு துன்பமும் இன்றி எளிதிலே பெற்றுவிடலாமே? அவ்வாறு செய்யாது இருந்தீர்களே! என்று கூறினாள்.

**85. அருளான தெங்கையர்க்கே யன்னாயென்**
**றியம்பிடுமெங் கன்னி செஞ்சொற்**
**றெருளாமே னல்குநந்தி தெள்ளாற்றிற்**
**பொருதபோர் தன்னி லந்நாள்**
**இருளான மதகரியும் பாய்மாவு**
**மிரதமுங்கொண் டெதிர்ந்தார் தம்முன்**
**மருளாமே நன்கடம்பூர் வானேற**
**வளைந்துவென்ற மன்ன ரேறே.**

இச்செய்யுள், தோழி, தலைவியின் ஊடலின் காரணங்கூறித் தலைவனை அருள்செய்யுமாறு வேண்டுதல்.

**86. ஏறுபாய விளைவித்த தெல்லாம் வார்க்குங் குமக்கொங்கை**
**வீறுபாயக் கொடுக்கின்ற விடலை யார்க்கோ வென்கின்றீர்**
**மாறு பாயப் படைமன்னர் மாவுந்தேருந் தெள்ளாற்றி**
**லாறு பாயச் சிவந்ததோ ளிணைகா விரிநா டாள்வானே.**

இது, நந்திவர்மனின் கொடைச்சிறப்பைக் கூறிற்று.

**87. ஆயர் வாய்க்குழற் காற்றுறு கின்றிலள்**
**ஏயு மாங்குயிற் கென்னைகொ லாவதே**
**தேய மார்புகழ்த் தேசபண் டாரிதன்**
**பாயன் மேல்வரல் பார்த்துநின் றாளுக்கே.**

தலைவனை பிரிந்திருப்பார்க்கு, ஆயர்குழலோசையும் குயிலின் குரலும் துன்பம் செய்யும். தலைவியின் துயரைக் கண்டு தோழி கூறினாள்.

**88. துளவுகண் டாய்பெறு கின்றிலஞ் சென்றினிச் சொல்லவல்ல**
**வளவுகண் டாய்வந்த தாதிகண் டாயடல் வேழமுண்ட**
**வளைவுகண் டாலன்ன மேனிகண் டாய்விறன் மாரன்செய்த**
**களவுகண் டாய்நந்தி மல்லையங் கானற் கழிக்கம்புளே.**

நந்தி மன்னனைத் திருமாலாகக் கொண்டு, அவர் மாலையினது துளசியைப் பெற்றிலோம் எனத் தலைவி கூறினாள் என்றும், திருமால் பிருந்தையைப் பிரிந்து வருந்திய சோகத்தைப் போக்கியது துளசி, அதுபோலத் தனது பிரிவுத் துன்பத்தைப்

போக்கத் துளசிபோன்ற மருந்தைப் பெற்றிலேம் என்றாள் என்றும், பொருள் கொள்ளலாம்.

# தமிழ் விடுதூது

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான தூது இலக்கியம் சிற்றிலக்கியக் காலத்திலும் பிற்காலத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்த இலக்கிய வகையாகும். சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே தூது இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. ஒருவர் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிப்பதற்காக அனுப்பப்படுவது தூதாகும்.

அன்னம், மயில், கிள்ளை, மேகம், தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களும் தூதுக்கு உரியவை. சங்க இலக்கியத்தில் நெய்தல் திணையில் இடம்பெறும் பாடல்கள் தூது குறித்த செய்திகளை மிகுதியாகப் பெற்றுள்ளன. தொல்காப்பியரால் கூறப்பட்ட காமம் மிக்க கழிபடர் கிளவி என்னும் துறையே பிற்காலத்தில் தூது இலக்கியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

தூது, தனி இலக்கிய வகையாக முகிழ்ந்த காலத்தில் முதன்முதலாகத் தோன்றியது உமாபதி சிவாச்சாரியாரால் பதினாம்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நெஞ்சுவிடுதூதாகும். காலவளர்ச்சியில் ஞானப்பிரகாசர் நெஞ்சுவிடுதூது, கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூது, கிளிவிடு தூது, தமிழ்விடுதூது முதலான தூது நூல்கள் தோற்றம் பெற்றன.

தூது இலக்கிய நூல்களுள் செறிவும் இனிமையும் மிக்கதாய்த் தனித்தன்மையுடன் திகழ்வது தமிழ்விடுதூது. மதுரையில் கோயில்கொண்டிருக்கும் சிவபெருமானின் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன்னுடைய காதலைச் சிவபெருமானிடம் கூறிவருமாறு தமிழைத் தூதனுப்பிய பொருளில் பாடப்பட்டது. கலிவெண்பாவால் இயன்ற 268 கண்ணிகளை உடையது. இந்நூலைப் படைத்த ஆசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை. இந்நூலைப் படைத்த ஆசிரியர் தன் மனத்தில் இருந்த தமிழின் உயர்வைப் பன்முகமாகப் போற்றிச் சிறப்பித்திருக்கிறார்.

இலக்கியத்தின் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை தமிழின் சிறப்பு எடுத்துக் கூறப்படுகிறது. தமிழ்மொழியின் சிறப்பினையும், தெளிவையும், இனிமையினையும், செறிவினையும், திண்மையினையும் ஆசிரியர் நுட்பமாகக் கூறியிருக்கிறார்.

## தமிழ்விடு தூது

1. **சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்**
   **தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்**

**தெளிவுரை:**

சிறப்புமிக்க மதுரை என்னும் சைவ சமயத்தின் தலைநகரைக் காத்து அழகு பொருந்திய தமிழ்ச்சங்கத்தில் புலவராக வீற்றிருந்தவரும்,

2. **டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு**
   **விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே**

**தெளிவுரை:**

தமிழழரசி என்று பலரும் வாழ்த்தி வணங்குமாறு பலதிசைகளிலும் சென்று போர்புரிந்து வெற்றி பெற்ற பெண்களின் தலைவியாகிய மீனாட்சியும்,

3. **செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு**
   **கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்**

**தெளிவுரை:**

விருப்பம் கொள்ளும்படி செம்மையாகச் செய்யப்பட்ட சிவஞான போதத்தின் சுவடிகளில் ஒன்றைக் கையில் எடுத்த கணபதியும்,

4. **கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்**
   **பாடலறி வித்த படைவேளும் - வீடகலா**

**தெளிவுரை:**

உண்மையான அருளால் மதுரை நகலை ஆட்சி செய்து ஒரு காலத்தில் புலவர்களின் எதிரே அமர்ந்திருந்து பாடலின் சிறப்பை எடுத்துக்கூறிய வேலினைக் கையில் ஏந்திய முருகக்கடவுளும்,

5. **மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்**
   **அன்னை முலைப் பாலி னறிந்தோரும் - முன்னரே**

**தெளிவுரை:**

இல்லத்தை விட்டு நீங்காத நிலைபெற்ற இளமைப் பருவமான மூன்று வயதில் வடமொழி நூல்களையும் தென்மொழி நூல்களையும் அன்னையாகிய உமையம்மை ஊட்டிய பாலால் அறிந்தவரும்,

**6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்**
**ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்**

**தெளிவுரை:**

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மூன்று கண்களை உடைய சிவபெருமான் முன்பு முதலை உண்ட பாலகனை மீட்டுத் தருமாறு கூறிய இனிய தமிழ்மொழியினால் பாடல் இசைத்தவரும்,

**7. தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்**
**பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி**

**தெளிவுரை:**

திருமாலும் பிரம்மனும் தேடியும் காண இயலாத திருப்பாதங்களைத் தேடாமலேயே நல்லூர் என்னும் தலத்தில் பாடி அவனுடைய திருப்பாதங்களைத் தன் தலையில் சூடிக் கொண்டவரும்,

**8. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்ந்தெழுதிப**
**பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே**

**தெளிவுரை:**

ஆராய்ந்து தன்னுடைய முடியில் மணம் நிரம்பிய தாழம்பூவைச் சூடிக்கொள்ளாதவராகிய சிவபெருமான் ஓலைகளை வாரிச்சேர்த்து தம்முடைய பட்டோலையில் எழுதிக்கொள்ளுமாறு கூறியவரும்,

**9. ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்**
**தொல்காப் பியமொழிந்த தொன்மொழியும் - மல்காச்சொற்**

**தெளிவுரை:**

தடை ஏற்படாமல் குறையாத பெருமை உடைய இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் எடுத்துக் கூறியவராகிய அகத்திய முனிவரும், தமிழின் தொன்மையான இலக்கணத்தை எடுத்துக்கூறிய தொல்காப்பியனும்,

**10. பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு**
**சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்**

**தெளிவுரை:**

குறையில்லாத சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பாடிய பாக்களால் இறைவனை நாடிச் செல்லும் உயிர்களைப் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு கட்டிய தூயவரும்,

**11. தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்**
**ஆதி முனிவ ரனவோருஞ் - சாதியுறும்**

**தெளிவுரை:**

இரண்டு கண்களாகிய தீமை இல்லாத கவிதைகளைப் படைத்தளித்த திருமாளிகைத் தேவரை முதலாகக் கொண்ட முனிவர்கள் அனைவரும்,

**12. தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு**
**மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழ்**

**தெளிவுரை:**

பிறந்த குலத்தானும் செய்யக்கூடிய சூழ்ச்சி மிக்க செயல்களாலும் அழியாக உயிரைச் சேரும் வினைகளை, எடுத்துக்கூறிய திருமந்திரம் என்னும் மறைநூலால் ஒழித்த வலிமை உடையவராகிய திருமூலரும்,

**13. பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்**
**மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐடிகள்**

**தெளிவுரை:**

சிறப்புடைய தமிழ்மொழியில் பொய்கூறும் தன்மை இல்லாத புலவர் என்று புலவர்களால் சொல்லப்பட்ட உண்மைத்தன்மை உடையவர்களாகிய சங்கப்புலவர்களும்,

**14. காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்**
**பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாடவரங்**

**தெளிவுரை:**

ஐயடிகள் காடவர் கோனும் தூய்மையான சொல்லை உடைய கழறிற்றறிவார் என்னும் இறையடியாரும் பாடுவதற்கு அரிதான தெய்வமொழிப் புலவராகிய திருவள்ளுவரும்,

15. **கல்லாதார் சிங்கமெனக் கல்விகோள் விக்குரியர்**
**எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்**

**தெளிவுரை:**

ஆராய்ச்சி செய்வதற்கு அரிதான கல்வி கற்காத அறிவற்றவர்களுக்குச் சிங்கம் போன்று கல்வி கேள்விகளில் சிறந்த அனைவரும் நீயாக இருந்ததனால்,

16. **என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்**
**பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென்**

**தெளிவுரை:**

புகழ்நிறைந்த, எனக்குக் கிடைத்த தெய்வமே! உன்னைக் கண்டு வணங்கித் துதித்தால் துன்பங்கள் தீரும் என்று உன்னுடைய பொன்போன்ற மேன்மைமிக்க திருவடிகளை அடைக்கலமாகக் கொண்டு போற்றுகின்றேன்,

17. **பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்**
**டெஞ்சியழுக் கேறா வியற்கலையே- விஞ்சுநிறக்**

**தெளிவுரை:**

நெருக்கமான மென்மைத் தன்மை உடைய பஞ்சினால், நூற்கப்படாத நூலே, பலரால் நெருடப்படாத பாவே, கிழிந்தும் குறைந்தும் அழுக்குப்படாத தன்மையுள்ள ஆடையே.

18. **தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்**
**தீயாது சொல்விளையுஞ் செய்யுளே – வீயா**

**தெளிவுரை:**

மிஞ்சிய நிறம் தோயாத செந்தமிழே, சொல்லை ஏராகக் கொண்டு புலவர்களின் மனம் கருகாமல் சொல்லை விளைவிக்கும் செய்யுளே,

19. தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
   வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

**தெளிவுரை:**

எந்தக் குலத்திலும் பிறக்காமல் இறக்காமல் உயிருக்குள் உயிராய் நின்றாய், பிறப்பும் இறப்பும் இல்லை எனினும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து குலமாக வளர்ந்தாய்.

20. புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளதரித்துக்
   கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணிக்

**தெளிவுரை:**

பெருமை நிலைபெற்ற பூவுலகில் புண்ணியம் வாய்ந்த தொப்புளில் காற்றுத்தங்கி வாக்காகச் சூல் கொண்டு,

21. தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திகழ்நாத் தந்தம்
   உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி

**தெளிவுரை:**

தலை, கழுத்து, மூக்கு, நெஞ்சு ஆகிய நான்கு இடங்களைச் சார்ந்து உதடும் நாக்கும் பல்லும் கெடாத மேல்வாயும் ஆகிய கருவிகளால்,

22. ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
   நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே

**தெளிவுரை:**

தலையில் இருந்து மீண்டு ஏற்குமாறு உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு மெய்யெழுத்துக்கள் பதினெட்டு என முதல் எழுத்துக்கள் முப்பதாகுவும், உயிர்மெய் (216), உயிரளபெடை (7), ஒற்றளபெடை (11), குற்றியலுகரம் (1), குற்றியலிகரம் (1), ஆய்தம் (1), ஐகாரக்குறுக்கம் (1), ஔகாரக் குறுக்கம் (1), மகரக்குறுக்கம் (1) எனச் சார்பெழுத்துக்கள் இருநூற்று நாற்பதாக நன்றாக் பிறந்தாய்,

23. எண்முதலா கப்பகரு மீரா றெனும் பருவம்
   மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணியோற்

**தெளிவுரை:**

முதல் சார்பு எழுத்துக்களாய்ப் பிறந்தபின் மேலும் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை,முதல்,ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ச்சி எனப் பன்னிரண்டு பருவங்களாக மண்ணுலகில் வாழும் கல்வியில் முதன்மை உடையோர் வளர்த்து வரும் காலத்தில்,

**24. பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்**
**தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி – உள்ளிலகு**

**தெளிவுரை:**

ஆசிரியர்களுக்குக் கண்மணிபோல் விளங்கி பள்ளிக்கூடத்தில் அசையாம் பலப்பல தொட்டிகளில் இட்டு சிறுவர்கள் தள்ளித் தாலாட்டி,

**25. மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
**மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் மஞ்சரையே**

**தெளிவுரை:**

உள் இடம் விளங்குமாறு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டி கழுவி மை இட்டு அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பால்களையும் மிகுதியாக அருந்த வைத்தமையால் மிகுதியாக வளர்ந்தாய்,

**26. பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீ வளர்ந்தாய்**
**உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ – முன்னே**

**தெளிவுரை:**

புதல்வர்களையே காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, (சிற்றில் சிறுபறை சிறுதேர்) (கழங்கு அம்மானை ஊசல்) என்னும் பத்துப் பருவங்களாக்கி நீ வளர்த்தாய், அத்தகைய சிறப்புடைய உன்னை யாரால் வளர்க்க இயலும்?

**27. நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்போர்**
**உனையும் படிப்பிப்பா ருண்டோ – புனைதருநற்**

**தெளிவுரை:**

முதலில் நினைக்கும் கல்வி எல்லாம் உன்னிடம் உள்ளது என உணர்ந்து உன்னைப் படிப்பவரே மனிதர் என எண்ணப்படுவார். அது அவ்வாறு இருக்க, உனக்குக் கற்றுக்கொடுப்பவர் எவரும் உண்டோ? இல்லை,

**28. செய்யுட்சொன் னான்குமுயர் செந்தமிழ்ச்சொல் லோர்நான்கும்**
**மெய்யுட் பொருளேழ் விதத்தினையும் - மையிலெழுத்**

**தெளிவுரை:**

செய்யுளை அழகு செய்கின்ற இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் சொற்கள் நான்கும், உயர்வு பொருந்திய பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு சொற்களும், மெய்யாகிய உட்பொருளில் கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய ஏழு திணைகளும்,

**29. தாதியாய் பெட்டு மலங்கார மேழைந்தும்**
**பேதியாப் பேரெழின்மாப் பிள்ளையாய் சீ – சாதியிலே**

**தெளிவுரை:**

குற்றம் இல்லாத எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை, இன்பம் என்னும் யாப்பின் உறுப்புகள் எட்டும், தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வரு நிலையணி, முன்னயிலக்கணி, வேற்றுப்பொருள் வைப்பணி, வேற்றுமை, விபாவணை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுடம்பம், இலேசம், நிரல் நிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாகிதம், உதாத்தம், அரிதுணர், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதர்சனம், புணர்நிலை, பரிவர்த்தனம், வாழ்த்து, சங்கிரணம், பாவிகம் என்னும் அணிகள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டு பேரழகு வாய்ந்த மாப்பிள்ளையாகி,

**30. ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் டுள்ளற்பண்**
**தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா – ஓங்கு மனத்**

**தெளிவுரை:**

குலமாகிய பாவில் செப்பலோசை அகவலோசை துள்ளல் ஓசை தூங்கல் ஓசை ஆகிய பண்கள் பட்டத்து அரசிகளாகவும்,

31. **தெண்கருவி யைந்தீன் றிருநூற்று மூன்றான**
**பண்களும்பின் கல்யாணப் பாவையரா – யெண்களும்**

**தெளிவுரை:**

உயர்ந்த மனத்தினால் ஆராய்ந்த தோல் கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி என்பவை இயைந்து உருவான நூற்று மூன்று பண்களும் திருமணத்திற்குப் பின் ஏற்றுக்கொண்ட காமக்கிழத்தியராக விளங்கவும்,

32. **நற்றா ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்**
**பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே – உற்றகலாப்**

**தெளிவுரை:**

கொண்டு மதிக்கப்படும் நல்லாதரவினால் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம் என்னும் ஒன்பது சுவைகளாகிய குழந்தைகளைப் பெற்றெடுத்துப் பெருமை கொள்ளத்தக்க வாழ்வினைப் பெற்றாய்,

33. **பண்கள்முதற் பெண்களொடும் பாலரொடு நாடகமாம்**
**பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே – மண்புகழத்**

**தெளிவுரை:**

பொருத்தமாக இருந்து உன்னை விட்டு நிற்காத பண்கள் முதலாகிடப் பெண்களோடும் பிள்ளைகளோடும் நாடகமாகிய பெண்கள் கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாய்,

34. **தாழ்விலா வட்டா தசவன் னனைகளெனும்**
**வாழ்வெலாங் கண்டு மகிழ்ந்தாயே – ஆழ**

**தெளிவுரை:**

மண்ணுலகில் உள்ளவர்கள் புகழும் பல குறைவில்லாமல் மலை, கடல், நாடு, நகர், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம், ஆறு, கதிரவன், நிலவு ஆகிய வர்ணனைகள் பதினெட்டனை பெற்று மகிழ்ந்திருந்தாய்,

35. **நெடுங்கோல வையையிலென் னேசர்மேற்பட்ட**
**கொடுங்கோல்செங் கோலாகக் கொண்டாய் - அடங்காத**

**தெளிவுரை:**

ஆழமானதும் நீண்டதும் அழகுள்ளதுமாகிய வைகையாற்றின் கரையை அடைக்கச் சென்ற என் அன்புக்கு உரியவரான சிவபெருமான் பட்ட பிரம்பின் அடியைச் செங்கோல் போல ஏற்றுக்கொண்டாய்,

**36. எங்கோவே பத்தென் றியம்புதிசைக் குள்ளேநின்**
**செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேயுன்**

**தெளிவுரை:**

அடங்காத வலிமை உடைய என் மன்னனே! கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு, மேல்த்திசை, கீழ்த்திசை என்னும் பத்துத் திசைகளுக்குள் உன்னுடைய ஆட்சி செல்லாத திசை இருக்கிறதோ,

**37. தேசமைம்பத் தாறிற் றிசைச்சொற் பதினேழும்**
**மாசறநீ வைத்தகுறு மன்னியரோ – வீசு**

**தெளிவுரை:**

மண்ணுலகில் உள்ள ஐம்பத்தாறு தேசங்களிலும் வழங்கப்படும் திசைச்சொற்கள் பதினேழும் குற்றமில்லாமல் அரசாட்சி செய்வதற்காக நீ அரசான நியமித்த குறுநில மன்னர்களோ,

**38. குடகடலுங் கீழ்கடலுங் கோக்குமரி யாறும்**
**வடவரையு மெல்லை வகுத்தாய் - இடையிருந்த**

**தெளிவுரை:**

அலைவீசும் மேற்குக்கடலும் கிழக்கே உள்ள வங்கக் கடலும், தென்குமரி ஆறும், வடக்கில் வேங்கடமலையினையும் எல்லையாகக் கொண்டாய்,

**39. முன்னுறுந்தென் பாண்டிய முதுற்புனனா டீறான**
**பன்னிரண்டு நாடுமப் பானாடோ – அந்நாட்டுள்**

**தெளிவுரை:**

இவற்றின் இடையில் இருந்த தென்பாண்டி நாடு முதலாகப் புன்னாடு இறுதியாக உள்ள பன்னிரண்டு நாடுகளும் தமிழ்நாட்டின் எல்லைக்கு உட்பட்ட

நாடுகளோ,வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடதலை நாடு, சீத நாடு, மலாடு ஆகிய நாடுகள் தமிழ்நாட்டிற்கு உட்பட்ட நாடுகளாகும்.

**40. வையை கருவைமரு தாறுமரு வூர்நடுவே**
**ஐயநீ வாழு மரண்மனையோ – செய்யபுகழ்**

**தெளிவுரை:**

அந்நாட்டுக்குள் வையை கருவை மருதாறு, மருவூர் என்னும் இவ்வூர்களின் நடுவே அரசே! நீ வீற்றிருக்கும் அரண்மனை இருக்கிறதோ!

**41. மூவேந்தர் வாகனமா மூவுலகும் போய்வளைந்த**
**பாவேந்த நீபெரிய பார்வேந்தோ – காவேந்து**

**தெளிவுரை:**

மிகுந்த புகழை உடைய சேரர் சோழர் பாண்டியர் என்னும் மூவேந்தர்களை வாகனமாகக் கொண்டு மேல்உலகம் மண்ணுலகம் கீழுலகம் மூன்றையும் சுற்றிவந்த பாக்களின் தலைவனே! நீ பெரிய நாட்டின் மன்னனோ!

**42. விண்ணவருங் காணரிய வேதா கமங்களெலாம்**
**புண்ணியனே யுன்றன் புரோகிதரோ – எண்ணரிய**

**தெளிவுரை:**

கற்பகமரத்தைக் கொண்டிருக்கிற தேவர்களும், காண்பதற்கு அரிதான வேதங்களும் ஆகமங்களும், புண்ணியம் நிறைந்தவனே! அவை உன்னுடைய புரோகிதர்களோ!

**43. நல்லபெருங் காப்பியங்க ணாடகா லங்கார்ஞ்**
**சொல்லரசே யுன்னுடைய தோழலோ – தொல்லுலகிற்**

**தெளிவுரை:**

எண்ணிக்கையை அறிய இயலாத சிறப்புடைய பெருங்காப்பியங்களும், நாடக நூல்களும், அணி நூல்களும் சொல்வன்மையில் சிறந்தவனே! அவையெல்லாம் உன்னுடைய நண்பர்களோ!

44. சார்புரக்குங் கோவேநற் சாத்திரங்க ளெல்லாமுன்
 பார்புரக்குஞ் சேனா பதிகளோ – வீரரதிர்

**தெளிவுரை:**

பழமையான உலகில் வாழ்கின்ற மக்களைக் காக்கும் மன்னவனே! நன்மையான கருத்துக்களைக் கூறக்கூடிய சாத்திரங்கள் எல்லாம் உன்னுடைய நாட்டைக் காக்கும் படைத்தலைவர்களோ!

45. போர்ப்பா ரதமும் புராணம் பதினெட்டுஞ்
 சீர்ப்பாவே யுன்னுடைய சேனைகளோ – பார்ப்பார்கள்

**தெளிவுரை:**

படைவீரர்கள் நடுக்கம் கொள்ளத்தக்க போர் நிகழ்ச்சிகளைக் கொண்ட மகாபாரதமும் பதினெட்டுப் புராணங்களும், சிறப்புமிக்க பாடலே! உன்னுடைய படைகளோ!

46. சக்கர வர்த்தியென லாமென்பார் பூலோக
 சக்கரவர்த்தியும் நீதானன்றோ – சக்கரமுன்

**தெளிவுரை:**

உன்னைப் பார்ப்பவர்கள் சொல்லணிக் கவிவடிவானவன் என்று கூறுவார்கள். பூவுலகை ஆட்சி செய்யக்கூடிய மன்னவனும் நீயே ஆவாய்,

47. பேந்தி நெடுந்தேர்மே லேறிச் சுழிகுளம்
 நீந்தியோர் கூட நிறைசதுக்கம் - போந்து

**தெளிவுரை:**

சக்கரத்தை முன்பு ஏந்திக்கொண்டு உயர்ந்த தேரில் ஏறி நீர்ச்சுழியினை உடைய குளத்தில் இறங்கி நீந்தியவர்களோடு நாற்சந்திக்கு வந்து அமர்ந்து,

48. முரசங் கற்க முடிவேந்தர் சூழ
 வரசங்க மீதிருந்து வாழ்ந்தே – அருள் வடிவாய்

**தெளிவுரை:**

நன்மையை உடையவனாக முரசு ஒலி எழுப்பவும் முடிபுனைந்த மன்னர்கள் சூழ்ந்திருக்கவும் உயர்வு பொருந்திய சங்கப் பலகையின் மேல் இருந்து வாழ்ந்தாய்,

**50. ஓங்குபுகழ் மூவரொருபா வொருப.்.தும்
ஆங்கவைசொல் வாதவூ ராளிசொல்லும் - ஓங்குமவன்**

**தெளிவுரை:**

இறையருள் பெற்றவர்களாய் உயர்ந்த புகழை உடைய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய ஒருபா ஒருப.்.தும், அப்பாக்களைக் கூறிய திருவாதவூரை ஆளக்கூடிய மாணிக்கவாசகரின் பாடலும்,

**51. கூற்றா யரனெழுதுங் கோவையுங் கோதிறாய்
மாற்றா விரட்டைமணி மாலையும் - தேற்றமுறப்**

**தெளிவுரை:**

உயர்ந்த புகழை உடைய மாணிக்கவாசகர் கூற அதனைச் சிவபெருமான் எழுதி ஆக்கிய திருக்கோவையாரும், குற்றமற்ற சிறப்புடையவராகிய காரைக்கால் அம்மையார் படைத்த சொல்லோவியமாகிய இரட்டை மணிமாலையும்,

**52. பற்றா மிலக்கணநூற் பாவநூற் பாவறிந்து
கற்றார் வழங்கபஞ்ச காப்பியமுங் - கொற்றவருக்**

**தெளிவுரை:**

தெளிவு மிக எல்லோரும் விரும்பக்கூடிய இலக்கணச் சூத்திரங்களும், அவ்விலக்கண நூல்களைக் கற்றறிந்து அதன்படி புலவர்கள் பாடிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்களும்,

**53. கெண்ணிய வன்னனைகளீரோன் பதுமறியக்
கண்ணிய மிக்கபெருங் காப்பியமும் - நண்ணியே**

**தெளிவுரை:**

மன்னர்களுக்குக் கூறப்பட்ட மலை, கடல், நாடு, நகர், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம்,

பின்பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம், சந்திரோதயம், சூரியோதயம் என்னும் பதினெட்டு வர்ணனைகளையும் அறியப் பாடப்பட்ட பெருமைமிக்க பெருங்காப்பியமும்,

**54. இன்புறு சேரனரங் கேற்றமகிழ்ந் தம்பலத்தான்**
**அன்புறுபொன் வண்ணத்தந் தாதியும் - முன்பவர்சொல்**

**தெளிவுரை:**

தில்லையை அடைந்து இன்பம் எய்திய சேரமான் பெருமாள் நாயனார் அரங்கேற்றம் செய்ய, சிவபெருமான் மகிழ்ந்து கேட்ட பொன்வண்ணத் தந்தாதியும்,

**55. மாத்தமிழா மும்மணி மாலையும் பட்டினத்தார்**
**கோத்தணிந்த முன்மணிக் கோவையும் - மூத்தோர்கள்**

**தெளிவுரை:**

முன்னரே சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பெருந்தமிழ் நூலாகிய மும்மணி மாலையும், பட்டினத்தார் பாக்களால் கோர்த்துச் சிவபெருமானுக்கு அணிவித்த மும்மணிக் கோவையும்,

**56. பாடியருள் பத்துப் பாட்டுமெட் டுத்தொகையும்**
**கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடகமா**

**தெளிவுரை:**

பண்டைய புலவர்கள் பாடியருளிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துப்பாட்டும், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டும்,

**57. வெற்பனையார் மாதை விமலரிடத் தேயிருவர்**
**கற்பனையாற் சொன்ன கலம்பகமும் - முற்படையோ**

**தெளிவுரை:**

பெரிய தங்க மலை போன்ற திருவுடம்பை உடையவராகிய திருவாமத்தூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் சன்னதியில் இரட்டைப்புலவர்களான இளஞ்சூரியரும் முதுசூரியரும் கற்பனையால் பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகமும்,

**58. டாடற் கலிங்கமழித் தாயிர மானைகொன்ற**
**பாடற் கரிய பரணியுங் - கூடல்**

**தெளிவுரை:**

முன்னணிப் படையுடன் சென்று கலிங்க நாட்டை அழித்து ஆயிரம் யானைகளைக் கொன்ற, பாடுவதற்கு அரிதான கலிங்கத்துப்பரணியும்,

**59. நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்**
**கொராயிரம்பொ னீந்த வுலாவும் - பராவுமவன்**

**தெளிவுரை:**

காவிரிப்பூம்பட்டின மன்னன் ராஜராஜ சோழன் ஒட்டக்கூத்தனின் எதிரே அமர்ந்து ஒரு கண்ணிக்கு ஓராயிரம் பொன் கொடுத்த மூவர் உலா என்னும் நூலும்,

**60. பிள்ளைத் தமிழுமுன்னாம் பேராத பல்குரவர்**
**வெள்ளத் தினுமிகுத்தோர் மெய்காப்ப- வுள்ளத்து**

**தெளிவுரை:**

அனைவரும் போற்றித் துதிக்கும் ஒட்டக்கூத்தன் பாடியருளிய குலோத்துங்க சோழனின் பிள்ளைத்தமிழும், எந்நாளும் நீங்காத புலவர் பெருமக்கள், வெள்ளம் என்னும் எண்ணிக்கையிலும் மிகுதியானவர்கள் மெய்க்காப்பாளர்களாக இருக்க,

**61. வீரியஞ் செய்து வினையொழிய வேராச**
**காரியஞ் செய்யுங் கவிதையே – பாரில்**

**தெளிவுரை:**

மனத்துக்குள் வீரம் நிறையத் தீவினை ஒழியுமாறு முதன்மையான செயலைச் செய்யும் கவிதை என்னும் மன்னனே!

62. அரிய சனமுனக்கே யானா லுனக்குச்
சரியாரு முண்டோ தமிழே – விரிவார்

**தெளிவுரை:**

உலகில் சிங்க ஆசனம் உனக்கே உரியது. உனக்கு நிகரானவர்கள் உலகில் யாராவது இருக்கிறார்களா தமிழே!

63. திகழ்பா வொருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கண்மடைப் போக்கா – நிகழவே

**தெளிவுரை:**

விரித்து நிறைந்த வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாவகைகளும் பாக்களுக்கு எல்லையாக வரப்பாக அமையப் பெருமைமிகு தாழிசை, துறை, விருத்தம் ஆகிய இனங்கள் மடைப்போக்காகவும்,

64. நல்லேறி னாற் செய்யு ணாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லே குழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி

**தெளிவுரை:**

நிகழ நல்ல அழகுடன் மணம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவற்றை ஏராக் கொண்டு புலவர்கள் நெருங்கி நின்று,

65. நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் - மேலோரிற்

**தெளிவுரை:**

நன்நெறிகளான வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் ஆகிய நான்கு பாநெறிகளையும் விதையாக நன்கு விதைத்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் தொடர்ந்து பயன்பெறுமாறு விளைவிக்கும் நாளில்,

66. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லியொட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளுஞ் - சீர்தையரைக்

**தெளிவுரை:**

உயர்வு மிக்க புலவர்களுள் பாடுவதனைத் தன்னுடைய குணமாகக் கொண்ட அதிவீரராம பாண்டியன், வில்லிப்புத்தூரார், ஒட்டக்கூத்தர் ஆகியோர் கல்வி கற்காமல் அவையில் புலவர்களைப் போல அமரும் கீழ்மக்களை,

67. **குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்**
**வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி**

**தெளிவுரை:**

தலையில் குட்டியும், காதுகளை அறுத்தும் தலைவனை எல்லாம் கூட்டி வெட்டியும் கீழ்மக்களாகிய களைகளைப் பறிக்க நீமேலாகத் தூர்கட்டி வளர்த்தாய்.

68. **வளர்த்தனைபான் முந்திரிகை வாழைக் கனியாய்க்**
**கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத் - திளங்கனியாய்த்**

**தெளிவுரை:**

பால், முந்திரிப்பழம், வாழைக்கனி, கிளர்ச்சி ஊட்டும் கரும்பு, தென்னையின் இளம்கனியாக,

69. **தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான**
**முத்திக் கனியேயென் முத்தமிழே – புத்திக்குள்**

**தெளிவுரை:**

இனிமை தரும் அமுதமாய், தெளிவான அமுதத்திற்கும் உயர்வான முக்தியைத் தரக்கூடிய கனி போன்ற தமிழே!

70. **உண்ணப் படுந்தேனே யுன்னோ டுவந்துரைக்கும்**
**விண்ணப்ப முண்டு விளம்பக்கேள் - மண்ணிற்**

**தெளிவுரை:**

அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் மகிழ்ந்து கூறும் வேண்டுகோள் ஒன்று இருக்கிறது. அதனை நீ நான் கூறக் கேட்பாயாக,

71. **குறமென்று பள்ளென்று கொள்வார் கொடுப்பாய்க்**
**குறவென்று மூன்றினத்து முண்டோ – திறமெல்லாம்**

**தெளிவுரை:**

புலவர்கள் உன்னிடம் இருந்து பள்ளு குறவஞ்சி என இலக்கியங்களைப் பெற்றுக்கொண்டாலும் அவற்றைக் கொடுக்கும் உனக்கு பாடல் வெளிப்படுத்தும் தாழிசை, துறை விருத்தம் ஆகியவற்றுடன் உறவு உண்டோ!

**72. வந்தென்றுஞ் சிந்தா மணியா யிருந்தவுனைச்**
**சிந்தென்று சொல்லியநாச் சிந்துமே – அந்தரமெல்**

**தெளிவுரை:**

பாக்களின் வலிமை பொருந்தி எந்நாளும் சீவக சிந்தாமணியாக இருந்த உன்னை, சிந்து என்ற ஒரு பாவகையாகக் கூறிய நாவானது கெடுமே! வானத்தின் மேல் உள்ள,

**73. முற்றுணர்ந்த தேவர்களு முக்குணமே பெற்றார் நீ**
**குற்றமிலாப் பத்துக் குணம்பெற்றாய் - மற்றொருவர்**

**தெளிவுரை:**

எல்லாவற்றையும் உணர்ந்த வானுலகத் தேவர்களும் இராசதம், தாமதம், சாத்துவிகம் என்னும் மூன்று குணங்களையே பெற்றிருக்கின்றனர். ஆனால் நீயோ தீமைகள் இல்லா, செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை-உதாரம் உய்த்தலில், பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றாய்,

**74. ஆக்கிய வண்ணங்க ளைந்தின்மே லுண்டோ நீ**
**நோக்கிய வண்ணங்க னூறுடையாய் - நாக்குலவும்**

**தெளிவுரை:**

ஒருவரால் உண்டாக்கப்பட்ட வெண்மை, செம்மை, கருமை, பொன், பசுமை என்னும் வண்ணங்களாக நீ இருக்கிறாயா? இல்லை நீ பார்த்ததால் உண்டான வண்ணங்கள்,

**75. ஊனரச மாறல்லா லுண்டோ செவிகளுண**
**வான நவரசமுண் டாயினாய் - ஏனோர்க்**

**தெளிவுரை:**

நாவானது பெற்ற சுவைகள் இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என ஆறேயாகும். அதைவிட வேறு சுவைகள் இல்லை. ஆனால் நீயோ செவிகளுக்கு உணவாக அமையும் நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், கோபம், மகிழ்ச்சி, சாந்தம் ஆகிய ஒன்பது சுவைகளைக் கொண்டிருக்கிறாய்,

**76. கழியா வனப்பொன் றலததிக முண்டோ**
**ஒழியா வனப்பெட் டுடையாய் - மொழிவேந்தர்**

**தெளிவுரை:**

ஏனோர்க்கு அழியா வனப்பு ஒன்று அலகு அதிகம் உண்டோ – உலகில் வாழ்பவர்களுக்கு அழகு ஒன்றுதான் அதைவிட அதிகம் இல்லை, நீயோ, வனப்பு எட்டு உடையாய் - இலக்கிய வனப்புகளான அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எட்டனைப் பெற்றிருக்கிறாய்.

**77. வாங்கு பொருள்கோள் வகைமூன்று பெற்றார்நீ**
**ஓங்குபொருள் கோள்வகையெட் டுள்ளாயே – பாங்குபெற**

**தெளிவுரை:**

உரிமை உடையவர்கள் இல்லாமல் தானாய் வரும் பொருள், ஏற்றுமதி இறக்குமதி வரியாகிய சுங்கவரியால் வரும் பொருள், பகைவரை வெற்றிகொண்டு கவர்ந்த பொருள் ஆகிய மூன்று பொருள்கள் மட்டுமே நாடாளும் மன்னனுக்குக் கிடைக்கக்கூடிய பொருட்கள் ஆனால் நீயோ உயர்ந்த பொருள்கோள்களான ஆற்றுநீர், மொழிமாற்று, நிரல்நிறை, பூட்டுவில், தாப்பிசை, அளைமறிப்பாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று என எட்டனைப் பெற்றிருக்கிறாய்,

**78. ஓர்முப்பா லன்றியயைம்பா லுள்ளா யுனைப்போலச்**
**சீர்முப்ப தும்படைத்த செல்வரார் - சேரமான்**

**தெளிவுரை:**

அழகு பொருந்திய அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களைக் கொண்டிருப்பதோடு அன்றி, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்களையும் பெற்ற உன்னைப்போல நாள், மலர் தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி, தேமாந்தண்ணிழல்,

புளிமாந்தண்ணிழல், கருவிளந்தண்ணிழல், கூவிந்தண்ணிழல், தேமா நறுநிழல், தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, கருவிளந்தன்பூ, கூவிளந்தண்பூ, தேமாநறும்பூ, புளிமாநறும்பூ, கருவிளநறும்பூ, கூவிளந்நறும்பூ என்னும் முப்பது சீர்களைப் பெற்ற செல்வர்கள் யார்?

**79. தன்னடிக் கண்டு தளைவிடுத்தா யேழ்தளையுண்**
**பொன்னடிக்குண் டென்பதென்னை புத்தியோ – என்னரசே**

**தெளிவுரை:**

சேரமான் கணைக்கால் இரும்பொறை சிறையில் விலங்கிடப்பட்டுக் கிடந்தபோது பொய்கையார் களவழி நாற்பது பாட விலங்கினை அகற்றி விடுவித்தாய். அப்படிப்பட்ட உன்பாதங்களை நேர்ஒன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை என்னும் ஏழு தளைகள் பிணித்திருக்கின்றன என்று கூறுவது எத்தகைய அறிவுடைய செயலோ!

**80. திண்பா லவர்க்கறிவாஞ் செந்தமிழாய் நின்றவுன்னை**
**வெண்பாவென் றோதுவது மெய்தானோ – பண்பேர்**

**தெளிவுரை:**

என்னுடைய தலைவனே! வலிமை பொருந்திய புலவர்களுக்கு அறிவாகவும், செந்தமிழாகவும் இருக்கின்ற உன்னை வெண்பா என்று கூறுவது உண்மையா?

**81. ஒலிப்பாகவே சங்கத் துகமுன் றிருந்தாய்**
**கலிப்பாவென் றோதல் கணக்கோ – உலப்பில்**

**தெளிவுரை:**

சிறந்த பண்பும் அழகும் உடைய ஓசைமிக்க பாடலே, கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் சங்கத்தில் வீற்றிருந்தாய், அப்படிப் பட்ட உன்னைக் கலிப்பா பா என்று கூறுவது முறையோ?

**82. இருட்பா மருண்மாற்றி யீடேற்று முன்னை**
**மருட்பாவென் றோதல் வழக்கோ தெருட்பாய்**

**தெளிவுரை:**

தொலையாத இருள்போன்ற மனமயக்கத்தை மாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் தமிழே! உன்னை மருட்பா என்று கூறுதல் நல்ல வழக்காகுமோ,

**83. பொருத்தமொரு பத்துப் பொருந்துமுனைத் தானே**
**விருத்தமென்று சொல்லல் விதியோ - இருட்குவைய**

**தெளிவுரை:**

தெளிந்த இலக்கணமுடைய பாடலில் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் என்னும் பத்துப்பொருத்தங்களும் பொருந்தியிருக்கின்ற உன்னை வேறுபாடு உடையாய் என்று கூறுவது முறையாகுமா?

**84. முந்தியொளி யால்விலக்கு முச்சுடரென் பாருனைப்போல்**
**வந்தென் மனத்திருளை மாற்றுமோ – சிந்தா**

**தெளிவுரை:**

செறிந்த இருளை சூரியன் நிலவு நெருப்பு மூன்றும் விலக்கும் என்று கூறுவார்கள். ஆனால் உன்னைப் போல் முந்தி வந்து என்னுடைய மனத்தில் நிறைந்த இருளை மாற்றுமோ?

**85. மணிகொடையின் மிக்கதென்பார் வண்கொடையு முன்பேர்**
**அணிவும் பெருமையினா லன்னோ – தணியும்**

**தெளிவுரை:**

வானுலகில் உள்ள சிந்தாமணி கொடைத்திறத்தில் சிறந்து விளங்குவது என்று கூறுவார்கள். அதற்கு மிகுந்த கொடைச்சிறப்பு சீவக சிந்தாமணி என்னும் உன் நூலின் பெயரைக் கொண்டுள்ளதால் தானே வாய்த்தது,

**86. துலங்காரங் கண்டசரந் தோள்வளைமற் றெல்லாம்**
**அலங்கார மேயுனைப்போ லாமோ – புலங்காணும்**

**தெளிவுரை:**

தாழ்ந்து விளங்கும் பொன் முத்து ஆகியவற்றால் செய்யப்பட்ட மாலைகளும், கழுத்தில் அணியும் அணிகலன்களும், தோள் அணிகளும், மற்ற அணிகலன்கள் அனைத்தும் அலங்காரம் என்னும் நூலாகிய உன்னைப் போல் சிறப்பானதாகுமோ?

**87. உன்னைப் பொருளென் றுரைக்குந் தொறும் வளர்வாய்**
**பொன்னைப் பொருளென்னப் போதுமோ – கன்னமிட்டு**

**தெளிவுரை:**

அறிவைத் தரக்கூடிய உன்னைப் பொருள் என்று சொல்லும்போதெல்லாம் பெருகுவாய், அது அவ்வாறு இருக்க, தங்கத்தைப் பொருள் என்று கூறுவது பொருந்துமோ?

**88. மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்**
**என்ன பொருளுனைப்போ லெய்தாவே – நன்னெறியின்**

**தெளிவுரை:**

கள்வர்களால் கன்னம் இட்டுக் கவரப்படவும், மன்னர்கள் வரியாகப் பெறவும் வளர்கின்ற பொருட்செல்வமே! மக்களின் கையில் உள்ள பொருட் செல்வம் எல்லாம் உன்னைப் போல் உறுதுணையாக வந்து உதவுபவை அல்ல,

**89. மண்ணிற் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர்**
**விண்ணிற் போய்த் தேவுருவாய் மேவுதற்கும் - எண்ணியுனைக்**

**தெளிவுரை:**

நல்ல வழியில் மண்ணுலகில் புகழ்பெற்று வாழ்வதற்கும், அவ்வாறு பூவுலகில் வாழ்பவர்கள் வானுலகிற்குச் சென்று வீடுபேற்று உலகைப் பெறுவதற்கும்,

**90. கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத**
**தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண்டமிழே.**

**தெளிவுரை:**

ஆராய்ந்து உன்னையே துணையாகக் கொண்டு புகழ்பெற்றவர்களுக்கே கிடைக்கும். உன்னைச் சேராத தொண்டர்களுக்குத் தென்திசையில் உள்ள இயமனின் உலகே கிடைக்கும்.

**91. ஈங்குனது சங்கத்தா லீச ரயர்ந்தாரோ**
**ஓங்குமவ ரானீ யுயர்ந்தாயோ – பூங்கமல**

**தெளிவுரை:**

குளிர்ந்த தமிழ்மொழியே! இங்கு அமைந்த தமிழ்ச்சங்கத்தால் சிவபெருமான் உயர்ந்தாரோ? உயர்வு பெற்ற சிவபெருமானால் நீ உயர்வு பெற்றாயோ?

**92. வீடாளும் வாணியமங்கை மேலே யிருந்தாயோ**
**ஏடாக வுன்மே லிருந்தாளே – ஆடவரத்**

**தெளிவுரை:**

தாமரை மலரை வீடாக் கொண்டு வாழும் கலைமகளின் உள்ளங்கையின் மேலே நீ இருந்தாயோ? அல்லது உன்னை ஏடாக்கிக் கலைமகள் அதன்மேல் அமர்ந்திருந்தாளோ!

**93. தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ**
**குழம்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ – வாழ்வேயென்**

**தெளிவுரை:**

ஆடும் பாம்பாகிய தாழ்ந்த பாயினை உடைய திருமாலை நீ தானாகத் தொடர்ந்து சென்றாயோ? அல்லது திருமாள் பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு உன்னைத் தொடர்ந்து சென்றாரோ?

**94. றோதிமுனி கேட்க வுனைமுருகார் சொன்னாரே**
**சோதி யவரைநீ சொற்றனையோ – பேதியா**

**தெளிவுரை:**

என்னுடைய வாழ்வே தமிழ்மொழி என்று அகத்திய முனிவன் அதனைக் கற்றுக்கொடுக்குமாறு முருகனை வேண்ட, உன்னை முருகக்கடவுள் அகத்திய முனிவருக்குக் கற்றுக்கொடுத்தாரே! ஒளியின் வடிவமே! நீதான் அகத்தியரைத் தமிழ் கற்குமாறு கேட்டாயோ?

**95. நேசருனக் கேபொருளாய் நின்றாரோ நீண்மதுரை**
**வாசருக்கு நீபொருளாய் வந்தாயோ – பாசமுறும்**

**தெளிவுரை:**

வேறுபாடற்ற சிவபெருமான் உனக்குப் பொருளாக உன் முன்பு நின்றாரோ? பெரிய நகரமான மதுரையில் வாழும் சிவபெருமானுக்கு நீ பொருளாக வந்தாயோ?

**96. என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்**
**உன்செய்தி நானோ வுரைசெய்வேன் - இன்சொல்லாய்**

**தெளிவுரை:**

இனிய சொற்களை உடைய தமிழே! உன்மேல் அன்புகொண்டு நான் கேட்ட ஐயங்களுக்கு நீ என்னிடம் இரங்கி அருள்வது நீதியாகும். அதுவல்லாமல் உன்னுடைய சிறப்புகள் அனைத்தையும் சொல்லும் தகுதி எனக்கு எங்கே இருக்கிறது?

**97. கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தகவென்ற – சொற்குள்ளே**

**தெளிவுரை:**

கற்க வேண்டிய நூல்களைக் குற்றமில்லாமல் கற்றபின்பு அந்நூல் கூறிய நெறிப்படி நிற்க வேண்டும் என்ற மேன்மை மிக்க சொற்களுக்குள்,

**98. எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற**
**வல்லா யுனக்குரைக்க வல்லேனோ – சொல்லியவுன்**

**தெளிவுரை:**

உலகில் உள்ளவர்களுக்கு அறிவுரை கூறி நல்வழியில் சேர்க்கும் இயல்புடையவனே! உனக்கு நான் அறிவுரை கூறும் உடையவனோ!

**99. ஈரடிக்குள் ளேயுலக மெல்லா மடங்குமெனின்**
**நேரடிக்கு வேறே நிலனுண்டோ – ஓரடிக்கோர்**

**தெளிவுரை:**

நீ கூறியிருக்கின்ற இரண்டு அடிகளுக்குள் உலகம் அடங்கும் என்றால் அளவடிக்கு வேறு உலகம் உள்ளதோ?

**100. ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே**
**போயிரந்து தூதுசொல்லப் போக்கினோ – யாயிருந்தும்**

**தெளிவுரை:**

ஓர் அடிக்கு ஓராயிரம் பொன்னை கொடுத்தவராகிய சிவபெருமானை வீதியில் சென்று கெஞ்சிப் பரவையிடம் தூதாகச் செல்லுமாறு விடுத்தாய்,

**101. மாண்பாயோர் தூதுசொல்லி வாவென்பே – னென்வருத்தம்**
**காண்பாயென் பெண்மதிநீ காணாதே – ஆண்பனைநற்**

**தெளிவுரை:**

அவ்வாறு இருந்தும் பெருமையாகத் தூது ஒன்று சொல்லிவா என்பேன். என்னுடைய பெண்மைக்கு எட்டிய அறிவு இது. இதனைக் குறித்து ஆராய்ச்சி செய்யாமல் என் துன்பம் குறித்து மட்டும் ஆராய்வாயாக,

**102. பெண்பனையா யாக்கினையாற் பெண்களிலே காரைக்கால்**
**வண்பதியா ரௌவையென வந்துதித்தாய் - நண்பார்.**

**தெளிவுரை:**

நீ ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினாய், பெண்களுக்குள் காரைக்கால் என்னும் வளம் பொருந்திய தலத்தில் காரைக்கால் அம்மையாரையும், ஔவையாராகவும் வந்து பிறந்தாய்,

**103. திலகவதி யாருடனே சென்மித்தாய் மாடக்**
**குலதவதி யானத்தார் கூடல – பலதவஞ்சேர்**

**தெளிவுரை:**

நற்பண்புகள் உடைய திலகவதியாருடன் பிறந்தாய், தவம் தியானம் உடையவர்கள் வாழும் மதுரையில்,

**104. மேனியார் கண்டிகையும் வெண்ணீறுங் கண்டுருகும்**
**மானியார் தேசிகனா வந்துதித்தாய் - ஞானியார்.**

**தெளிவுரை:**

உடலை உடையவர்களின் தவ அடக்கத்தையும் திருநீற்றையும் கண்டு உள்ளம் உருகும் மங்கையார்க்கரசியார்க்கு ஆசிரியனாக வந்து தோன்றினாய்,

**105. துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்குஞ்**
**சிங்கடிக்குந் தாதையாய்ச் சீர்செய்தாய் - இங்குநீ**

**தெளிவுரை:**

இசைஞானியாரின் உயர்ந்த மகவாகத் தோன்றி சிங்கடிக்குத் தந்தையாகிப் புகழ்வளர்த்தாய்,

**106. பெண்ணெல்லாம் வாழப் பிறந்தமையா லென்மனத்திற்**
**புண்களெல்லா மாறப் புரிகண்டாய் - ஒண்கமலத்**

**தெளிவுரை:**

மண்ணுலகில் பெண்கள் எல்லாம் நல்வாழ்வு வாழ நீ பிறந்தமையால் பெண்ணாகிய என் மனதில் உள்ள துன்பங்களையெல்லாம் தீரச் செய்வாய்,

**107. தன்னந் தனைவிடுப்பே னன்னந்தா னங்கவரை**
**இன்னந்தான் கண்டறியா தென்பரே – மன்னெந்தாய்**

ஒளி பொருந்திய தாமரை மலரில் வாழும் அன்னப்பறவையைத் தூதாக விடுப்பேன். ஆனால் அன்னைப் பறவை அங்கு உள்ள சொக்கநாதரை இன்னும் கண்டறிந்தது இல்லை என்று சொல்கிறார்களே!

**108. அப்பாலோர் வண்டை யனுப்பி னவர்காமம்**
**செப்பாதே யென்றாற் றிகைக்குமே – தப்பாது**

**தெளிவுரை:**

நிலைபெற்ற என் தந்தையே! அவ்விடத்திற்கு ஓர் வண்டைத் தூதாக அனுப்பி சிவபெருமான் காமம் குறித்துப் பேசாதே என்றால் அது திகைத்து நிற்குமே!

**109. மானைப்போயத் தூதுசொல்லி வாவென்பேன் வல்லியப்பூந்**
**தானைப் பரமர்பாற் சாராதே – ஏனைப்பூங்**

**தெளிவுரை:**

தவறாமல் மானைப் போய் சிவபெருமானிடம் தூது சொல்லிவா என்று அனுப்புவேன். அவ்வாறு அனுப்பினால் புலித்தோல் உடுத்திய அவரைக் கண்டு அச்சம் கொண்டு அவரிடம் செல்லாமல் வந்துவிடும்.

**110. கோகிலத்தை நான்விடுப்பேன் கோகிலமுங் காக்கையினம்**
**ஆகி வலியானுக் கஞ்சுமே – ஆகையினால்**

**தெளிவுரை:**

மற்றும் அழகு பொருந்திய குயிலை, நான் தூதாக அனுப்புவேன் அக்குயிலும் காக்கையின் இனம் சார்ந்தது. அதனால் வாலியான் என்னும் கரிக்குருவிக்கு அச்சம் கொண்டு அவர் அருகில் செல்லாதே, அதனால்,

**111. இந்தமனத் தைத்தூதா யேகேன்பே னின்மனமும்**
**அந்தமனோ தீதர்பா லண்டாதே – எந்தவிதம்**

**தெளிவுரை:**

என் மனத்தையே தூதாக விடுக்கலாய, என்றால் என்னுடைய மனமும் மனத்திற்கு எட்டாத அவரைக் கண்டு எவ்வாறு தூது செல்லும்?

**112. என்றென் றிரங்கினே னென்கவலை யெல்லாம்பொற்**
**குன்றனையா யுன்னுடனே கூறுகேன் - சென்றாலும்**

**தெளிவுரை:**

பின் எவ்வாறு யாரைத் தூதாய் அனுப்புவது என்று நினைத்துத் துன்பம் கொண்டேன். என் கவலை எல்லாம், தங்க மலையை ஒத்து விளங்கும் தமிழே! உன்னிடம் கூறுகிறேன். நீ கேட்பாயாக,

**113. பண்ணிய பத்தொன் பதினா யிரத்திருநூற்**
**றெண்ணியதொண் ணூற்றொன் றெனுந்தொடையாய் - நண்ணி**

**தெளிவுரை:**

நீ தூதாகச் சென்றாலும் முன்னோர்கள் படைத்த பத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்று என்னும் எண்ணிக்கையிலான தொடைகளுக்கு உரிமை பெற்றுள்ளோம்.

**114. ஒருதொடை வாங்கி யுதவாயோ வோர்சே**
**விருதுடை யார்க்குநி வேறோ – தருமிக்கே**

**தெளிவுரை:**

சென்று எனக்காக ஒரு மாலை வாங்கிவந்து என் துன்பத்தைத் தீர்க்க மாட்டாயோ? ஒரு காளைக்கொடியை ஏந்தியிருக்கும் சிவனுக்கு நீ வேறில்லையே! ஒற்றுமை பெற்றுள்ளாயே!

**115. ஓர்வாழ்க்கை வேண்டி யுயர்கிழிகொள் வான்கொங்கு**
**தேர்வாழ்க்கை யென்றெடுத்த செய்தியும் - கீரன்**

**தெளிவுரை:**

முன்னாளில் சிவபெருமான் தருமிக்காக இரக்கம் கொண்டு அவனுக்கு வாழ்க்கை கொடுப்பதற்காக எண்ணம் கொண்டு உயர்வு பொருந்திய பொன்கிழியைப் பெறும் பொருட்டுக் கொங்குதேர் வாழ்க்கை எனப் பாடிய பாடலும்,

**116. இசையா வகையி னியம்பினா னென்றே**
**வசையாடித் தர்க்கித்த வாக்கும் - இசையான**

**தெளிவுரை:**

நக்கீரன் பொருத்தம் இல்லாத வகையில் சொல்போர் செய்தான் என்று அவனை இகழ்ந்து சொல்போர் செய்த சொல் வன்மையும்,

**117. பாட்டுக் கிரங்கியொரு பாணனுக்குச் சேரலன்மேற்**
**சீட்டுக் கவிவிடுத்த சீராட்டும் - பாட்டியலில்**

**தெளிவுரை:**

இசையோடு பொருந்திய பாடலுக்காக மனம் உருகி ஒரு பாணபத்திரனுக்குச் சேரமன்னனிடம் சேர்ப்பிக்குமாறு சீட்டுக்கவி எழுதிக் கொடுத்த சிறப்பான செயலும்,

**118. நாத்திரமா மேவுபொரு ணன்றா வறுபதெனும்**
**சூத்திரமாப் பாடியரு டோற்றமும் - மாத்திரமோ**

**தெளிவுரை:**

பாட்டு இலக்கணத்தில் நாவால் உறுதியாகக் கூறப்படும் பொருள் இலக்கணத்தை அறுபது நூற்பாக்களாய் பாடித் தந்த காட்சியும்,

**119. உன்னோ டவர்விளையாட் டொன்றோ வடமதுரைக்**
**கந்நேர முன்பிறகே யார்வந்தார் - மன்னவன்மேற்**

**தெளிவுரை:**

ஆகிய இவை மட்டுமா? உன்னோடு அவர் கூடி விளையாடியது ஒன்றுதானோ! வட மதுரைக்கு உனக்குப் பிறகு அந்நாளில் யார் வந்தார்? இடைக்காடரின் பின் சென்றவர் சொக்கநாதர் தானே!

**120. காரியார் நாரியார் கண்டகவி யைப்பகிர**
**வாரியிலாக் கானகத்தில் வந்தவரார் - நாரினொடும்**

**தெளிவுரை:**

காரியார், நாரியார் என்னும் இருபுலவர்கள் படைத்த கவிதையைப் பாதியாகப் பகிர்ந்து கொள்ளவழி இல்லாத காட்டில் இடையனாக வந்தவர் யார்?

**121. போற்றியுறும் பத்திரற்காப் போந்து கிழவுருவில்**
**தோற்றி விறகு சுமந்தவரார் - தேற்றியவற்**

**தெளிவுரை:**

அன்போடு உன்னைப் போற்றி வழிபடும் பாணபத்திரருக்காக முதியவர் வடிவில் தோன்றி விறகு சுமந்து வந்தவர் யார்?

**122. நீயரிய பொற்பலகை யிட்டவரார் மற்றவன்றன்**
**நேயமனை விக்கெதிரா நேர்ந்தவளைப் - போயவையில்**

**தெளிவுரை:**

பாணபத்திரரைத் தேற்றி ஒருவராலும் கொடுப்பதற்கு அரிதான பொன்னாலாகிய சங்கப் பலகையைக் கொடுத்தவர் யார்? மேலும், பாணபத்திரனின் அன்புடைய மனையாளுக்குப் பகையாக வந்த விறலியை,

**123. தள்ளியிசை தாபிக்கத் தக்கவரார் தென்மதுரைக்**
**குள்ளிருந்த சொக்கருனக் குள்ளன்றோ – எள்ளி**

**தெளிவுரை:**

அவைக்குச் சென்று இசைபாடி வென்று பாணபத்திரனின் மனைவிக்கு வெற்றியை நிலைக்கச் செய்தவர் யார்? தென்மதுரையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானான சொக்கர் தானே? அவர் உனக்குள் இருக்கிறார்,

**124. வடமொழியில் வேத வசனமே யீசர்**
**திடமொழியா மென்பார் சிலரே – அடரும்**

**தெளிவுரை:**

தாய் மொழியை இகழ்வாகப் பேசி வடமொழியில் உள்ள வேதக் கருத்துக்களே இறைவனுக்கு உகந்தவை என்று சிலர் கூறுவார்கள்,

**125. பரசமய கோளரியாய்ப் பாண்டிநா டெங்கும்**
**அரசமய நீநிறுத்து மந்நாள் - விரசுநீ**

**தெளிவுரை:**

பிற மதங்களை அழிக்கின்ற சிங்கமாக நீ பிறந்து பாண்டிய நாடு முழுவதும் சைவ சமயத்தை நிலை நிறுத்திய அந்நாளில்,

**126. ஆதிக்கண் வையையில்வே தாகமத்தைத் தாபித்தாய்**
**சோதிக்கி னேடகமே சொல்லாதோ – வேதத்தே**

**தெளிவுரை:**

விரைவாக வந்து நீ அந்நாளில் வைகை ஆற்றில் வேதமாகிய சைவ ஆகமத்தை நிலைபெறச் செய்தாய், ஆராய்ந்து பார்த்தால் அதனை ஆகமம் எழுதிய ஏடுகள் சொல்லாதோ?

**127. வாதவனங் கண்டா தடைத்தகத வந்திறந்தாய்**
**வேதவனங் கண்டால் விளம்பாதோ – வேதம்**

**தெளிவுரை:**

வேதமாகிய தெய்வம் சூரியஒளியும் புக இயலாமல் அடைத்த கதவினைத் திறந்தாய் அதனைத் திருமறைக்காட்டுத் திருக்கோயிலைக் கண்டால் அது கூறாதோ?

**128. அமிழ்தினுமிக் கென்னுமினிக் கன்பருனைச் சொன்னார்**
**தமிழ்முனியென் னும்பேர்தா ராதோ – தமிழால்**

**தெளிவுரை:**

வேதம் அமுதத்தைவிட இனிமை மிக்கது என்று வடமொழியைக் கற்ற அகத்திய முனிவருக்கு அன்புக்கு உரியவரான சிவபெருமான் உன்னைக் கற்பித்தார். இதனைத் தமிழ் முனி என்னும் பெயரே அறிவிக்காதோ,

**129. அறம்பொரு ளின்பம்வீ டாரணர்சொன் னாரத்**
**திறம்பரமர் வாக்கேசெப் பாதோ – மறந்திடலில்**

**தெளிவுரை:**

தமிழ்மொழியால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பொருள்களாகப் பிரம்மன் வள்ளுவனாகப்

பிறந்து கூறினார். அதனை வள்ளுவமாலையில் இறையனார் பாடிய பாடல் சொல்லாதோ,

**130. கற்பலகை யோதுமறை காணார்கீழ் நிற்கவுநீ**
**பொற்பலகை மேலிருந்தாய் போதாயோ – தற்பரரோ**

**தெளிவுரை:**

மறக்க இயலாத கல்வியின் எல்லையைக் கூறும் வேதங்களால் காண்பதற்கு அரிதானவராகிய சிவபெருமான் கீழே நிற்கவும் தமிழே! நீ சங்கப் பலகையின் மேல் இருந்தாய். உன் உயர்க்கு இது ஒன்றே போதாதோ?

**131. டெண்ணிறந்த வாசியழைத் திட்டாய் சதுர்வேதப்**
**பண்ணிறைந்த வாசி பகராதோ – அண்ணலார்**

**தெளிவுரை:**

இறைவனுடன் எண்ணற்ற நரிகளாகிய குதிரைகளை மாணிக்கவாசகருக்காக வரவழைத்தாய். இதனை, சிவபெருமான் ஏறிவந்த நான்கு வேதங்களால் ஆகிய குதிரை சான்றாகக் கூறாதோ?

**132. தென்பா லுகந்தாடுஞ் செய்தியெல்லா முன்னிடத்தில்**
**அன்பாலென் றப்பாலு மாரறியார் - உன்பேர்**

**தெளிவுரை:**

சிவபெருமான் தென்திசையில் விரும்பி நடனம் ஆடும் செயல்கள் எல்லாம் அவன் உன்மேல் வைத்த அன்பினால் தான் என்பதைப் பாண்டி நாட்டிற்கு வெளியில் உள்ள நாட்டார்களும் அறிவார்கள்,

**133. பழியார் திசைச்சொல்லார் பன்னார் திருவாய்**
**மொழியார் குழறி மொழிவார் - அழியா**

**தெளிவுரை:**

உன்னுடைய பெயரைத் தீவினைகள் நிறைந்த பிற திசைகளில் வாழும் பிறமொழி பேசும் இசை நிறைந்த திருவாய் மொழியினை உடைய மக்கள் தமிழ் என்று கூற இயலாமல் குழறிப் பேசுவார்கள்.

134. உருவால வாயிருக்கு மோதரிய முத்தித்
 திருவால வாயிருக்குஞ் செல்வர் - ஒருமால்

**தெளிவுரை:**

தீமை அணுகாத வடிவத்தால் விருப்பம் கொண்டு வேதங்களும் எடுத்துக் கூறுவதற்கு அரிதான வீடுபேறு அருளும் மதுரையில் எழுந்தருளியிருக்கும் செல்வமானவரும்,

135. வடமதுரை யேறுமுன்னே வந்தவடி வென்னத்
 தடமதுரை மீனுயர்த்த – படர்தீர்க்குஞ்

**தெளிவுரை:**

ஒப்புமை கூற இயலாத திருமால் வடமதுரைக்கு வரும் முன்பு வந்த வடிவம் இதுதான் என்று மீன்கொடி உயர்த்திப் பிடித்து ஆட்சிபுரிந்த சுந்தரபாண்டியனாகிய சிவனும்,

136. சத்திபுரத் தோர்பாற் றழைத்து மகிழ்ந் தோர்சீவன்
 முத்திபுரத் தோர்பான் முளைத்தெழுந்தோர் - அத்திசைபோல்

**தெளிவுரை:**

துன்பத்தை அழிக்கும் உமையம்மையின் ஒரு பாகத்தில் வீற்றிருந்து மகிழ்ச்சி கொண்டு உயிர்களுக்கும் வீடுபேறு அருளும் வீடுபேற்று ஊரான மதுரையில் சுயம்பு இலிங்கமாகத் தோன்றியவரும்,

137. ஆங்கோ ரிருநான் கயிரா வதஞ்சுமக்கும்
 பூங்கோயிற் குள்ளுறைந்த புண்ணியனார் - பாங்காம்

**தெளிவுரை:**

உலகினை எட்டுத்திசை யானைகள் காப்பதைப் போல் எட்டு யானைகள் சுமந்து கொண்டிருக்கும் அழகிய கோயிலுக்குள் வீற்றிருக்கும் புண்ணியம் நிறைந்தவனும்,

138. இடம்பவன மீதாக விந்திரன்வந் தேத்துங்
 கடம்பவன மீதிலுறை காந்தர் - அடும்போர்

**தெளிவுரை:**

இறைவன் எழுந்தருளியிருக்கும் பொருத்தமான இடமும் கோயிலும் இதுவே என்னும் படியாக, இந்திரன் வந்து வணங்கும் கடம்வனத்தில் எழுந்தருளியிருக்கும் ஒளியுடையவரும்,

**139. அலகம் பரிக்கு மரியார் முடிவேய்ந்**
**துலகம் பரிக்குமுறை யுள்ளார் - பலநாளும்**

**தெளிவுரை:**

கொல்லும் தன்மையான நுனியினை உடைய பெரிய அம்பாக விளங்கும் திருமாலுக்கும் காண அரிதாக விளங்குபவர். மணிமுடி அணிந்து உலகை வழி நடத்தும் அரசாட்சி செய்தவராகிய சிவபெருமான்,

**140. நின்றவூர்ப் பூசலார் நீரடிவெ லாநினைந்து**
**குன்றுபோ லேசமைந்த கோயிலும் - நன்றிதரும்**

**தெளிவுரை:**

திருநின்றவூரைச் சேர்ந்த பூசலார் நாயனார் என்பவர் பலநாள் நீண்ட இரவுப் பொழுதுகளில் உன்னை நினைத்துத் தன் உள்ளத்தில் குன்றினைப் போல் உருவாக்கிய கோயிலும்,

**141. தாயான கங்கைமுடி தாள்குளிரக் கண்ணப்பர்**
**வாயா லுமிழ்ந்ததிரு மஞ்சனமுந் - தூயமழைத்**

**தெளிவுரை:**

அனைவருக்கும் நல்லருள் வழங்கும் அன்னையாகிய கங்கையை முடியில் அணிந்துள்ள சிவனின் திருமுடி குளிரும் வண்ணம் கண்ணப்பநாயனார் வாயில் கொண்டு வந்து உமிழ்ந்த திருமஞ்சள நீரும்,

**142. துன்பார் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்**
**வன்பா யளித்தபரி வட்டமும் - இன்பாத்**

**தெளிவுரை:**

தூய்மையான மழை பெய்ததனால் துன்பமடைந்த திருக்குறிப்புத் தொண்டர் துணிகளைத் தோய்க்குமிடத்தில் அன்போடு கொடுத்த உடையும்,

143. **தணிவரிய மானக்கஞ் சாறனார் சாத்தும்**
**மணிமுடிசூழ் பஞ்ச வடியும் - அணிவிடையார்**

**தெளிவுரை:**

மனத்தில் என்றும் அன்பு குறையாத மானக்கஞ்சாறனார் அணிவிக்கும் அழகிய மயிர்களைக் கொண்டு சுற்றிய பஞ்சவடியும்,

144. **காமன்பான் முன்சேந்த கண்போல மூர்த்தியார்**
**தாமன்பான் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போற்**

**தெளிவுரை:**

அழகிய காளை வாகனத்தை உடையவனாகிய சிவபெருமான் மன்மதனிடம் முன்பு கோபம் கொண்டு சிவந்த கண்ணைப்போல, மூர்த்தியார் தான் சிவன்மீது கொண்ட அன்பினால் முழங்கையைத் தேய்த்துச் சேர்த்துக் கொடுத்த சிவந்த நிறமுடைய சந்தனமும்,

145. **காக்குமரி புனைந்த கண்மலருங் காதலொடு**
**சாக்கியர்தாஞ் சாத்தியபூந் தண்மலரும் - போக்கியமா**

**தெளிவுரை:**

பூவுலகைக் காக்கும் மன்னன் போன்று காக்கும் திருமால் பூசை செய்து இறைவனுக்கு அணிவித்த கண்ணாகிய மலரும், உள்ளன்போடு சாக்கிய நாயனார் அணிவித்த கல்லால் ஆகிய குளுமையான மலரும்,

146. **ஆக்கிய மாற னமுதுஞ் சிறுத்தொண்டர்**
**மாக்கறியுந் தாயர்தரு மாவடுவும் - நீக்கரிய**

**தெளிவுரை:**

உண்ணத்தக்க வகையில் இளையான்குடி மாறனார் இறைவனுக்குச் சமைத்த உணவும், சிறுத்தொண்டர் படைத்த பெருமைமிக்க பிள்ளைக்கறியும், அரிவாட்டாய நாயனார் இந்த மாவடுவும்,

147. **காரா ரிரவிற் கணம்புல்வர் தம்முடிமேற்**
**சீராக வேற்றியசெந் தீபமும் - ஆரால்**

**தெளிவுரை:**

விலக்குவதற்கு அரிதான கரிய இருள் சூழ்ந்த நள்ளிரவில் கணம்புல்வர் தன் முடியையே திரியாகக் கொண்டு சிறப்பாக ஏற்றிய செம்மை நிறமுடைய தீபமும்,

**148. அமைத்து வணங்கலுறு மங்கணர்க்குப் பூசை**
**சமைத்து வணங்கத் தகுமோ – உமைக்கன்பர்**

**தெளிவுரை:**

இவ்வாறான பூசைப் பொருள்களைக் கொண்டு யாரால் அவனை வணங்க இயலும்? நெற்றியில் கண்கொண்டு விளங்கும் சிவனுக்கு இவற்றைவிடச் சிறந்த பூசைப்பொருள்கள் உள்ளனவோ?

**149. அர்சனைபாட் டேயாமென் றாரூரர்க் காதியிலே**
**சொற்றமிழ் பாடுகெனச் சொன்னமையாற் - சொற்படியே**

**தெளிவுரை:**

உமையம்மையின் தலைவராகிய சிவபெருமான் முன்னாளில் ஆரூராருக்கு நீ பாடும் பாட்டே எனக்கு அர்ச்சனைப் பாட்டாகும் என்று தமிழ்ப்பாடல் பாடக் கூறியமையினால்,

**150. செய்தாய்நால் வேதந் திகைத்தொதுங்கப் பித்தனென்று**
**வைதாய்நீ வைதாலும் வாழ்த்தாமே – மெய்தான்**

**தெளிவுரை:**

அவர் சொல்லின் படியே நீ செய்தாய், நான்கு வேதங்களும் மறைந்து விலகிச் செல்லுமாறு பித்தன் என்று வைதாய். நீ வைதாலும் அது அவர்களுக்கு வாழ்த்தாகும் போலும்,

**151. இருந்தமிழே யுன்னா லிருந்தே னிமையோர்**
**விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன் - வருந்தினன்மால்**

**தெளிவுரை:**

நான் இதுவரை கூறியது உண்மைதான் பெருமைபெற்ற தமிழ் மொழியே! நான் உன்னால்தான் இவ்வுலகில் வாழ்கிறேன். கண்களை இமைக்காத தேவர்கள் கண்ணும் அமுதம் கிடைத்தாலும் அதனை விரும்பமாட்டேன்.

**152. வெல்லானை தின்ற விளங்கனியா னேன்விரகக்**
**கல்லானை தின்ற கரும்பானேன் - நல்லவரை**

**தெளிவுரை:**

உன்மேல் கொண்ட காதலால் துன்புறுகிறேன். போரில் வல்ல யானையை விளங்கனி நோய் தாக்கியது போல் செயலற்றுப் போனேன். காமமாகிய மலை போன்ற யானை தின்ற கரும்புபோலானேன்,

**153. தேடுநிழற் சிந்தனையிற் றேம்பினேன் வெம்பனியால்**
**வாடிய செந்தா மரையொத்தேன் - ஓடமிசைக்**

**தெளிவுரை:**

நல்ல ஆசிரியரைத் தேடி அலையும் உள்ளம்போல வாட்டம் கொண்டேன். கொடுமையான பனியால் வாட்டமுற்ற செந்தாமரை மலரைப்போல வாட்டமுற்றேன்,

**154. கொள்ளம்பூ தூரவெள்ளக் கொள்ளைகடந் தாயென்மால்**
**வெள்ளங் கடத்திவிட வேண்டாவோ – தள்ளென்று**

**தெளிவுரை:**

ஓடத்தில் ஏறிக் கொள்ளம் பூதூரில் வெள்ளப்பெருக்கைக் கடந்து சென்றாய். என்னுடைய காமமாகிய வெள்ளத்தைக் கடத்திவிட வேண்டாமோ?

**155. மாறிட்ட சாக்கியரை வன்கழுவே றச்செய்தாய்**
**சீறிட்ட வேளையது செய்யாயோ – நீறிட்டே**

**தெளிவுரை:**

தமிழைத் தள்ளு என்று மாறுபாடு கொண்டு போரிட்ட சமணர்களை வலிமையான கழுமரத்தில் ஏற்றும்படிச் செய்தாய். என்மேல் கோபம் கொண்டு காமனையும் கழுவேற்ற மாட்டாயோ?

**156. அருங்கரும்பின் கூனொழித்தா யன்றுவழு திக்குமதன்**
**செங்கரும்பின் கூனொழியச் செய்யாயோ – அங்கமுறு**

**தெளிவுரை:**

திருநீற்றை மட்டும் பூசி அந்நாளில் கூன்பாண்டியனின் வளைந்த முதுகை நிமிர்த்தினாய். இப்போது காமன் வளைக்கும் கரும்பு வில்லின் வள்ளவை நீக்க மாட்டாயோ?

**157. வெப்புநோய் தீர்த்தாயவ் வேந்தனுக்கென் வெவ்விரசு**
**வெப்புநோய் தீர்க்க விரும்பாயோ – தப்பலவே**

**தெளிவுரை:**

கூன்பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு என்னும் நோயைத் தீர்த்தாய். கொடுமையான என் காம நோயைத் தீர்க்க விருப்பம் இல்லையோ?

**158. சாக்கிய ரிட்டநஞ்சு தன்னையமு தாக்கினையின்**
**றாக்கிய நஞ்சையமு தாக்காயோ – நீக்கரிய**

**தெளிவுரை:**

நீ எனக்கு உதவுவதில் தவறு ஏதும் இல்லையே! சமணர்கள் ஊட்டிய நஞ்சினை அமுதாக்கினாய். இன்று எனக்கு விடமாக இருக்கும் உணவை அமுதாக்க மாட்டாயோ!

**159. வெந்தீக்குள் ளேகிடந்தும் வேவாயென் பார்காமச்**
**செந்தீச் சுடாதிருக்கச் செய்யாயோ – வந்துகொங்கில்**

**தெளிவுரை:**

எவராலும் விலக்குவதற்கு அரிதான செந்நிறமுடைய நீக்குள் கிடந்தும் வெந்து போகாமல் உயிருடன் இருந்தாய் என்பார்கள். என்னைக் காமமாகிய செம்மை நிறமுடைய தீ சுடாமல் இருக்குமாறு செய்யமாட்டாயோ?

**160. அப்பனியால் வாடாதே யார்க்குந் துயரொழித்தாய்**
**இப்பனியால் வாடா திரங்காயோ – அப்பரை**

**தெளிவுரை:**

கொங்கு நாட்டில் எழுந்தருளிய பனியினால் எல்லோரும் துயருறாமல் இருக்க வழிசெய்தாய், இப்போது பனியினால் வாடும் எனக்காக மனம் இரங்க மாட்டாயோ?

**161. மைக்கடல்கொல் லாதபடி வன்கன் மிதப்பித்தாய்**
**அக்கடல்கொல் லாமலுற வாக்காயோ – மிக்குயர்ந்த**

**தெளிவுரை:**

திருநாவுக்கரசரைக் கரிய நிறமுடைய கடல் கொல்லாதவாறு வலிமை பொருந்திய தூணுடன் மிதக்கச் செய்தாய். அக்கடல் காதல் நினைவால் என்னைக் கொல்லாதபடி உறவாக்கிக் கொள்ளமாட்டாயோ?

**162. மன்றிற் பனைவடிவ மாற்றினா யப்பனைமேல்**
**அன்றிற்புள் வேறொருபுள் ளாக்காயோ – தொன்றுதொட்டுத்**

**தெளிவுரை:**

மிக உயர்ந்து வளர்ந்த, மன்றத்தில் உள்ள பனைமரத்தின் வடிவத்தை மாற்றினாய். அப்பனை மரத்தின் மேல் இருந்து நான் காதலால் துயருறுமாறு குரல் எழுப்பும் அன்றில் பறவையை, வேறொரு பறவையாக மாற்ற மாட்டாயோ?

**163. தென்பொதியிற் சாந்தினொடு தென்றலுற வாய்வந்தாய்**
**அன்புறவென் னோடுமுற வாக்காயோ – முன்பிருந்து**

**தெளிவுரை:**

பழங்காலம் முதலாகத் தெற்கே உள்ள பொதிகை மலைச் சந்தனத்துடனும், தென்றல் காற்றுடனும் நட்புக்கொண்டு நீ வந்தாய். ஆனால் நான் காதல் துயரில் அவற்றால் மேலும் துன்புறுகிறேன். பொதிகைச் சந்தனத்தையும் தென்றலையும் நான் வெறுக்கா வண்ணம் எனக்கு நட்பாக்க மாட்டாயோ?

**164. பாடுமிசை யெல்லாமுன் பாவையராச் சேர்த்தாயென்**
**னோடுமுனி யாதிருக்க வோதாயோ – பாடலாற்**

**தெளிவுரை:**

உன் முன்பு இருந்து பாடும் இசை அனைத்தையும் உனக்குரிய பெண்களாகச் சேர்த்துக் கொண்டாய். அந்த இசை என்னோடு பகை கொள்ளாமல் இருக்குமாறு கூறமாட்டாயோ?

**165. சின்னமொடு காளஞ் சிவிகைபந்தர் முத்தடைத்தாய்**
**பொன்னே சுடாதணியப் பூட்டாயோ – முன்னிறந்தாள்**

**தெளிவுரை:**

தமிழே! நீ சம்பந்தர் பாக்களைப் பாடியதனால் சின்னம், காளம், பல்லக்கு, முத்துப்பந்தல் எல்லாமும் பெற்றாய். பொன்னை ஒத்த தமிழே! அம்முத்துகள் என்னைச் சுடாதிருக்குமாறு எனக்கு அணிவிக்க மாட்டாயோ?

**166. அங்கத்தைப் பூம்பாவை யாக்கினா யாதலினென்**
**அங்கத்தைப் பூம்பாவை யாக்காயோ – மங்கத்தான்**

**தெளிவுரை:**

முன்னாளில் இறந்த பூம்பாவையிற் எலும்பை அழகிய பெண்ணாக ஆக்கித் தந்தாய். நி காதல் நினைவுகளால் எலும்பான என் உடலையும் அழகிய பாவைபோல ஆக்கிக் கொடுக்க மாட்டாயோ?

**167. மாய்ந்தாலு மாமுதலை வாய்ப்பிள்ளை யைப்படைத்தாய்**
**மாய்ந்தாலும் பின்படைக்க வல்லையே – ஏய்ந்தவரை**

**தெளிவுரை:**

உடலால் அழிந்து போனாலும் பெரிய முதலை உண்டை பிள்ளையை அதன் வாயில் இருந்து மீட்டாய். அதனால் நான் இறந்தாலும் பின்பு என்னைப் படைக்கும் சக்தி உனக்கு உண்டு.

**168. செய்தாளென் றென்சொல் செவியோர்ந்து செல்வாயிங்**
**கெய்தாம லங்கிருக்க வெண்ணாதே – பொய்தீரத்**

**தெளிவுரை:**

இவள் பொருத்தமான பேச்சைப் பேசினாள் என்று நான் சொன்ன சொற்களை மனத்தில் கொண்டு தூது செல்வாய். இங்கு மீண்டு வராமல் அங்கேயே இருக்க நினைக்காதே.

**169. தேசிவருஞ் சொக்கருக்கே சென்றிருந் தாங்கவரைப்**
**பேசிவருந் தூது பிறிதுண்டோ – நேசமொடு**

**தெளிவுரை:**

பொய் விலகிச் செல்ல உண்மை ஒளி நிறைந்த சொக்கரான சிவபெருமானிடம் சென்று அவரிடம் தங்கி இருந்து அவருடைய மனம் இசையுமாறு செய்து இனிமையாகப் பேசிவரும் தூது வேறு இருக்கிறதோ?

**170. தைவரினுங் காட்டத் தகாதாரைத் தாதையர்க்குக்**
**கைவிரலாற் காட்டியருள் காளையும் - தெய்வ வெள்ளிப்**

**தெளிவுரை:**

அன்பு கொண்டு மனத்தால் தடவினாலும் ஒருவராலும் சுட்டிக்காட்ட இயலாதவரான சிவபெருமானைத் தந்தையாருக்கு விரலால் சுட்டிக் காட்டிய ஞானசம்பந்தரும்,

**171. பூதர வானவரைப் போற்றமுயன் றையாற்றில்**
**ஆதரவாய்க் கண்ட வரசரும் நாதர்**

**தெளிவுரை:**

தெய்வத் தன்மை பொருந்திய வெள்ளிமலையில் எழுந்தருளி இருக்கும் இறைவனைக் கண்டு வழிபட முயன்று அவரைத் திருவையாற்றில் தனக்கு ஆதரவாகக் கண்டு போற்றிய திருநாவுக்கரசரும்,

**172. அளந்தருள்செம் பொன்னைமணி யாற்றிலிட் டாருக்**
**குளந்தனிலே தேடியருள் கோவும் - வளந்திகழும்**

**தெளிவுரை:**

சிவபெருமான் அளந்துகொடுத்த செம்மை திறமுடைய பொன்னை மணிமுத்தாற்றில் இட்டு திருவாரூர்க் குளத்தில் தேடி எடுத்துக் கொண்ட கந்தரும்,

**173. காளத்தியில் வந்த காட்சிகயி லாயத்து**
**நீளத்தான் சொற்றவனு நீயன்றோ – கேளப்பால்**

**தெளிவுரை:**

வளமோடு விளங்கும் திருக்காளத்தியில் தோன்றிய காட்சி கயிலாயக் காட்சியை ஒத்தது என்று பெருமை நீடிக்கப்பாடிய நக்கீரன் நீயல்லவா!

**174. அம்மைதமக் கில்லாதா ரம்மைதா மாவிருந்தார்**
**அம்மையென்று முன்னுரைத்த வம்மையாய்த் - தம்மெதிரே**

**தெளிவுரை:**

இன்னும் கேட்பாயாக, தனக்கு அன்னை இல்லாதவராகிய சிவபெருமான் ஓர் ஏழைப்பெண்ணுக்குத் தானே தாயாக இருந்து பேறுகாலத்தில் உதவியவராவார். அம்மையே என்று முன்பு அழைத்த காரைக்கால் அம்மையாராகவும்,

**175. வெள்ளானை மேற்கொண்ட வேந்தர் வரவிடுத்த**
**வெள்ளானை மேற்கொண்ட வித்தகராய்த் - தள்ளாது**

**தெளிவுரை:**

தமக்கு எதிராக வெண்ணிறமான காளையை ஊர்தியாகக் கொண்ட தலைவராகிய சிவபெருமான் இறைவன் அனுப்பிய வெள்ளை யானை மீது ஏறிச்சென்ற சுந்தரர் ஆகவும்,

**176. விஞ்சுவரால் வண்ணானை வெண்ணீற்ற ரென்றுபணிந்**
**தஞ்சலிசெய் தாட்செய்த வண்பராய்ச் - சஞ்சரியாத்**

**தெளிவுரை:**

உடல் முழுவதும் உர்மண் படிந்திருந்த வண்ணானை ஒதுக்காமல் அவர் திருநீறு பூசியிருக்கிறார் என நினைத்துத் தொழுது வணங்கித் தொண்டு செய்து போற்றிய சேரமான் பெருமாள் நாயனாரும் ஆகி,

**177. தென்கையி லாயவரைச் செல்வர்பாற் சென்றாயே**
**உன்கையி லாகாத தொன்றுண்டோ – என் கையால்**

**தெளிவுரை:**

எல்லா இடங்களிலும் சுற்றித் திரிந்து தென்கயிலாய மலையில் உறையும் செல்வனாகிய சிவனிடம் சென்றாயே! உன்னால் நடக்காத செயல் என்று ஒன்று இருக்கிறதோ!

**178. ஆயு மவள்பாகத் தன்பரு முக்கிரராம்**
**சேயும் புரந்திருக்குந் தென்மதுரை – வாயினிய**

**தெளிவுரை:**

எனவே, அன்னையாகிய உமையம்மையின் உடலில் ஒருபாகமாக அமர்ந்திருக்கும் விருப்பம் உடையவராகிய சிவனும், அவர் மகனாகிய உக்கிர குமார பாண்டியன் என்னும் முருகனும் ஆட்சிபுரியும் தென்மதுரைக்கு.

**179. செவ்வழியே செல்வாய் நீ செல்வழியி னல்வழிதான்**
**எவ்வழி யென்றா லியம்பக்கேன் - எவ்வழியும்**

**தெளிவுரை:**

இனிமையான திருத்தமான வழியில் நீ செல்வாயாக. நீ செல்லும் வழி நல்ல வழியாக இருக்க வேண்டும். அது எவ்வழி என்று கேட்டால், கூறுகிறேன் கேட்பாயாக.

**180. வெல்வா யுனைநினைந்து வேயுறு தோளியென்று**
**செல்வார்தங் காரியஞ்சித் திக்குமே – செல்வாய்**

**தெளிவுரை:**

நீ எவ்வழியில் சென்றாலும் வெற்றி பெறுவாய். உன்னை நினைத்து வேயுறு தோளி என்று பாடிக் கொண்டு செல்பவர்களுடைய செயல்கள் எல்லாம் வெற்றிபெறுமே!

**181. தடையுண்டோ வையாறு தன்னிலே பொன்னி**
**இடைவிலங்கச் சென்றதறி யேனோ - இடையிலே**

**தெளிவுரை:**

செல்வாயாக. இடையில் தடைகள் ஏற்படுமோ? திருவையாற்றிலே காவிரியாற்று வெள்ளம் தடுத்தும் அதனை விலக்கி நீ சென்ற செயல் நான் அறியாத ஒன்றோ!

**182. பாலைநில நெய்தலாப் பண்ணினா யின்னுமதைச்**
**சோலைநில மாக்குவைநான் சொல்லுவதென் - மேலானர்**

**தெளிவுரை:**

செல்லும் வழியில் ஓரிடத்தில் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கினாய். இனியும் அதைச் சோலையாகவும் மாற்றுவாய். உனக்கு நான் என்ன வழி சொல்லப்போகிறேன்.

**183. கூறும் பொதிசோறு கொண்டு வரினுனக்கு**
**வேறும் பொதிசோறு வேண்டுமோ – வீறாகக்**

**தெளிவுரை:**

எல்லோரினும் உயர்ந்தவராகிய சிவபெருமான் அனைவரும் வியந்து போற்றுமாறு கட்டுச்சோறு கொண்டு வந்தார் என்றால் உனக்கு வேறு ஒருவர் கட்டிக்கொடுக்கும் சோறு வேண்டுமோ? அதனால், செல்வாயாக.

**184. கற்பார் பொருள்காணார் காசுபணங் காணிலுனை**
**விற்பா ரவர்பானீ மேவாதே – கற்றாரை**

**தெளிவுரை:**

பெருமையாகக் கற்பவர்கள் பலர் நூலில் உள்ள ஒண்பொருளை அறியமாட்டார்கள். காசு பணம் கிடைக்கிறது என்றால் உன்னை விற்று விடுவார்கள். அவர்களை நீ போய்ச்சேராதே.

**185. எள்ளிடுவார் சொற்பொருள்கேட் டின்புறார் நாய்போலச்**
**சள்ளிடுவார் தம்மருகே சாராதே – தெள்ளுதமிழ்ப்**

**தெளிவுரை:**

கல்விக் கற்றவர்களைக் கண்டால் இகழ்ந்து பேசுவார்கள். அவர்கள் கூறும் பொருளைக் கேட்டு இன்பம் அடைய மாட்டார்கள். நாய்போலச் சள் என்று குரைத்துத் துரத்துவார்கள். அத்தகையவர்களை நாடிச் செல்லாதே.

**186. பாயிரமுன் சொன்ன படிபடியா மற்குழறி**
**ஆயிரமுஞ் சொல்வார்பா லண்டாதே – ஆய்தருநூல்**

**தெளிவுரை:**

தெளிவடையும்படியாகத் தமிழ்ப்பாயிரத்தில் கூறியுள்ளபடி அடக்கம் கொண்டிருக்காமல் அனைத்தையும் கற்றவர்களைப் போல் பேசுபவர்களைச் சென்று சேராதே.

**187. ஓதி யறியாத வொன்பே தையருடனே**
**நீதி முறையா நிகழ்த்துநூல் - பேதைமையாங்**

**தெளிவுரை:**

ஆராய்ச்சி செய்வதற்கு உரித்தான நூல்களைக் கற்றறியாத பெரிய மூடத்தனம். கொண்டவர்களுடன் நீதியின் முறைமையில் நின்று கூறும் அறிவுரைகள் பயனற்றவையாகும்.

**188. காணாதாற் காட்டுவான் றான்காணான் கண்ணெதிரே**

**நாணா திராதே நவிலாதே – வீணாக**

**தெளிவுரை:**

அறிவற்ற ஒருவனுக்குச் சிறந்த நூல் கூறும் பொருள்களைக் கூறுபவன் பேதையால் ஏதும் அற்றவனாக இணைக்கப்படுவான். அதனால் அறிவற்றவர்களின்முன் நாணம் கொண்டு வாய் திறவாமல் இருப்பாயாக.

**189. ஆற்றி னளவறிந்து கல்லா தவையஞ்சுங்**

**கூற்றினர்பா லேகாதே கூடாதே – போற்றாரை**

**தெளிவுரை:**

பயன் இல்லாமல் கற்க வேண்டிய முறையினை அறிந்து கற்காமல் அவைக்கு அஞ்சும் வீண்பேச்சு உடையவர்களைச் சென்று சேராதே. அவர்களிடம் நட்புக் கொள்ளாதே!

**190. வேண்டாதே கேடில் விழுச்செல்வங் கல்வியென்று**

**பூண்டாய்நீ தானே பொருளன்றே – ஆண்ட**

**தெளிவுரை:**

உன் அருமையினை அறிந்து உன்னைப் போற்றாதவர்களை நாடிச் செல்லாதே! கேடு இல்லாத சிறந்த செல்வம் கல்வி என்று நீ மனத்துள் நினைத்தாய் அதனால் உன்னைவிடச் சிறந்த பொருள் ஏதும் இல்லை.

**191. வலவா நலவா வடுதுறையி லுன்போல்**

**உலவாக் கிழிபெற்றா ருண்டோ – நலவிருப்ப**

**தெளிவுரை:**

என்னை ஆட்கொண்ட வல்லவனே! சிறந்த திருவாவடுதுறையில் உன்னைப் போல் உலவாக்கிழி பெற்றவர் யாராவது ஒருவர் இருக்கிறார்களா?

**192. தாக்கவரு செங்கலைப்பொன் னாக்கினாய் மண்முழுதும்**

**மாக்கனக மாக்கிவிட வல்லையே – நோக்குபுகா**

**தெளிவுரை:**

சிறந்த ஒரு கோயில் கட்டுவதற்கான செங்கலை சுந்தருக்காகத் திருப்புகலூரில் பொன்னாக்கினால் மண்ணுலகம் முழுவதையும் உயர்வு பொருந்ததிய பொன் வாக்கும் வலிமை உனக்கு உண்டு.

**193. பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு**
**கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே – தேடியருள்**

**தெளிவுரை:**

அனைரும் விருப்பமுடன் பார்க்கும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப் பாடிய வஞ்சிநெடும் பாட்டாம் பட்டினப்பாலைக்குப் பதினாறு கோடிப் பொன் பெற்றது உன்னுடைய வெற்றியாகும்.

**194. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே**
**கல்லார்கட் பட்டதிருக் கண்டாயே – கல்லார்பால்**

**தெளிவுரை:**

பொருளை முயன்று தேடி அதனை அனைவருக்கும் கொடுத்து உதவும் நற்குணம் உடையவர்களுக்கு வந்த வறுமையைவிட, கல்வி கற்காதவர்களிடம் சேர்ந்த செல்வம் மிக்க துன்பத்தை விளைவிக்கக்கூடியது என்பதை நீ உணர்ந்தாய்.

**195. ஏகாதே யன்பிலா ரிந்திரன்போல் வாழ்ந்தாலும்**
**போகாதே யங்கே புசியாதே – மாகவிஞர்**

**தெளிவுரை:**

கல்வி கற்காதவர்களிடம் செல்லாதே. மனத்தில் அன்பில்லாதவர்கள் இந்திரன்போல் வளமையுடன் வாழ்ந்தாலும் அவர்களை நாடிச் செல்லாதே. உணவும் உண்ணாதே.

**196. தாமின் புறுவு துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தாரென்றும் - மாமகிமை**

**தெளிவுரை:**

கல்வி அறிவு பெற்றவர்கள் என்றும் தம் கல்வியால் இன்பமடைவதுபோல உலகோர் கற்று இன்பமுறுவது கண்டு கல்வியின்மீது விருப்பம் கொள்வார்கள் என்பார் வள்ளுவர்.

**197. சேர்ந்ததுன்பா லன்றோ திருப்பாற் கடலமுதம்**
**ஆர்ந்தவர்க்கல் லாதுபசி யாறுமோ – சேர்ந்துன்னை**

**தெளிவுரை:**

பெரும் சிறப்பு உன்னிடம் அல்லவா சேர்ந்திருக்கிறது. திருப்பாற்கடலில் உண்டான அமுதம் அதனை உண்டவர்க்கு அல்லாமல் பிறருக்குப் பசியை விலக்குமோ,

**198. நம்பாதார் வீதி நணுகாதே நல்லார்கள்**
**தம்பா லிருந்து தரித்தேகி – வம்பாகப்**

**தெளிவுரை:**

உன்னிடம் சேர்ந்திருந்து உன்னை நம்பாதவர்களின் வீதியைச் சென்று சேராதே. நல்ல குணம் உடையவர்களிடத்தில் தங்கிச் செல்வாயாக. அவ்வாறு சென்று,

**199. பின்போ யமனோடப் போர்ந்தோடும் வையையிலே**
**முன்போ யெதிர்போய் முழுகியோ – அன்போடே**

**தெளிவுரை:**

இயமன் அச்சம் கொண்டு ஓடுமாறு பெருகி ஓடும் வையை ஆற்றின் முன் சென்று நீரை எதிர்த்து நின்று முழுகி நீராடி,

**200. தாழ்ந்துநீள் சத்தந் தனைக்கற்றா ருள்ளம்போல்**
**ஆழ்ந்த வகழி யகன்றுபோய்ச் - சூழ்ந்துலகில்**

**தெளிவுரை:**

அன்புடனே வணங்கி நெடிய இலக்கண நூல்களைக் கற்றவர்களின் உள்ளத்தைப்போல ஆழமான அகழியைக் கடந்து சென்று,

**201. மேன்மை லுயர்ந்தோங்கு வேதம்பொன் மேலாக**
**வான்மே லுயர்ந்த மதில்கடந்து – போனால்,**

**தெளிவுரை:**

உலகை வளைத்து மேலும் உயர்ந்து விளங்கும் வேதங்களைப் போல வான்வரை உயர்ந்து நிற்கும் சுவற்றைக் கடந்து,

**202.மிருதிபுரா ணங்கலைபோல் வேறுவே றாக**
**வருதிரு வீதிசூழ் வந்தே - இருவினையை**

**தெளிவுரை:**

அவ்வாறு சென்றால் மிருதி, புராணம் கலைகள் போல வேறுபட்டனவா வரும் மேன்மைமிக்க திருவீதிகளை வலப்புறமாகச் சுற்றிவந்து,

**203. மோதுஞ் சிவாகமம்போன் முத்திக்கு வித்தாக**
**ஓதுந் திருக்கோயி லுட்புகுந்து – நீதென்பால்**

**தெளிவுரை:**

நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளையும் அழிக்கும் சிவாகமங்களைப்போல வீடுபேற்று உலகம் செல்ல நல்ல விதையாக வேதம் ஓதும் திருக்கோயிலுக்குள் சென்று,

**204. முன்னே வணங்கி முறையினபி டேகமுனி**
**தன்னேயம் போலாந் தளவிசையும் - தன்னடைந்து**

**தெளிவுரை:**

நீ முதலில் தென்திசையில் நின்று வணக்கம் செய்து முறையாக அபிடேக முனிவரின் அன்புபோல அமைந்த தளத்தின் பொருத்தமும்,

**205. தேறும் படிவர் சிவலோகஞ் சேர்ந்திருக்க**
**ஏறும் படிநிறுத்து மேணிபோல் - வீறுயர்ந்த**

**தெளிவுரை:**

இறைவனைச் சென்று சேர்ந்து தெளிவடையும் தவத்தினர் சிவலோகத்தைச் சென்றடைந்து அங்கு தங்கி இருக்க ஏறக்கூடிய படிகள் நிறைந்து விளங்கும் ஏணிபோல்,

**206. கோமேவு கோபுரமுங் கூடலின்மேன் முன்னொருநாள்**
**மாமேகஞ் சேர்ந்ததுபோன் மண்டபமும் - பூமேவும்**

**தெளிவுரை:**

பெருமை பெற்றிருக்கும் உயர்ந்த கோபுரங்களும் மதுரை நகரின்மேல் முற்காலத்தில் காளமேகங்கள் நான்கும் சேர்ந்தது போன்ற மண்டபமும்,

**207. மட்டளையும் வண்டெனப்போய் மாளிகைப் பத்தியறைக்**
**கட்டளையுங் கண்டு களிகூர்ந்தே - இட்டமணிச்**

**தெளிவுரை:**

மலர்களில் நிறைந்துள்ள தேனை உண்ணச் செல்லும் வண்டினைப் போலச் சென்று மாளிகைகளில் அமைந்திருக்கும் கட்டமைப்பினைக் கண்டுமிகுந்த மகிழ்ச்சிகொண்டு,

**208. சிங்கா தனத்திற் சிறந்ததிரு வோலக்கம்**
**எங்கா கிலுமொருவர்க கெய்துமோ – பைங்குழல்சூழ்**

**தெளிவுரை:**

தேவர்களின் தலைவனால் மணிகள் பதித்துச் செய்யப்பட்ட சிங்காசனமாகிய சிறப்புடைய அரச இருக்கை, சொக்கனே! உன்னைப் போல எவ்வுலகிலாவது ஒருவருக்குக் கிடைக்குமோ?

**209. தேங்கமலத் தேசு தெரிசனஞ் செய்தவர்க்கே**
**பூங்கமலக் கண்கொடுத்த புத்தேளும் - ஓங்கமல**

**தெளிவுரை:**

ஒளிவீசும் வீரக்கழல் அணிந்த இனிமை பொருந்திய தாமரை மலர் போன்ற சிவபெருமானின் திருவடிகளை வணங்கி அவருக்குச் செம்மையான நிறமுடைய தாமரைப் பூவினைப் போன்ற கண்களைப் பறித்துச் சார்த்திய திருமாலும்,

**210. மையி லடியில் வணங்காத் தலையொன்றைக்**
**கையி லளித்த கடவுளும் - மொய்யிழந்த**

**தெளிவுரை:**

உயர்வு பொருந்திய குற்றமில்லாத குறைகளற்ற இறைவனின் திருவடியில் வணங்காத பிரம்மனின் தலை ஒன்றைக் கொய்தபோது கையில் ஒட்டிக் கொண்ட கபாலம் கொடுத்த இறைவனாகிய பிரம்மனும்,

**211. மானந் தனக்கு வகுத்தகடம் பாடவிக்கு**
**மானந் தனைவகுத்த வானவனந் - தேனங்**

**தெளிவுரை:**

இழந்து போன வலிமையினையும் பெருமையினையும், தனக்கு மீட்டுக்கொடுத்த கடம்பாடவிக்கு விமானம் அமைத்துக் கொடுத்த இந்திரனும்,

**212. கணிமலர்த்தா ணெஞ்சூ டழுத்தியழுத் தாதே**
**மணிமுடீகு ணீக்கி வணங்கக் - கணநாதர்**

**தெளிவுரை:**

அவ்விடத்தில் தேன் துளிர்க்கும் அழகு பொருந்திய மலா் போன்ற பாதத்தை மனத்தில் பதித்து வயிரக் கற்கள் பதிக்கப்பட்ட மணிமுடிகள் ஒன்றுடன் ஒன்று அழுத்தாமல் நீக்கி வணங்கும் பொருட்டு நெறிப்படுத்தும் கணநாதரும்,

**213. ஓதுதுணி யோடுசின முற்றபகை செற்றமுரட்**
**போத முனிவா் புடைசூழத் - தீதில்**

**தெளிவுரை:**

சொல்லப்படுகின்ற வெறுப்பு கோபம் ஆகியவற்றால் விளைந்த மனப்பகையை அழித்த வலிமை உடைய தெளிந்த அறிவாகிய ஞானம் பெற்ற முனிவா்கள் சோ்நது வரவும்,

**214. அரிய திசைப்பால ரத்தமுறை றாங்கித்**
**தெரிசனக்கண் பாா்த்தேவல் செய்யப் - பரவியே**

**தெளிவுரை:**

தீமை இல்லாத திறம்மிக்க திசைக்காவலா்கள் கண்ணாடி முதலியவற்றை ஏந்தி, உன் பாா்வைக் குறிப்புணா்ந்து உன் பணியை ஏற்றுச்செய்யவும்,

**215. முன்னிருவ ரெண்மரொடு மொய்த்த பதினொருவா்**
**பன்னிருவா் நின்று பணிசெய்ய – முன்னே**

**தெளிவுரை:**

வணங்கியபடியே அசுவினி தேவா் மருத்துவா், திசைக்காவலா்கள் எட்டுப்போ்களுடன் சிவன் போலும் தோற்றமுடைய உருத்திரா்கள் பதினொருவரும், பன்னிரண்டு சூரியா்களும் என முப்பத்து முக்கோடி தேவா்களும் உனக்குப் பணிசெய்ய,

**216. நதிக ளெனக்கண்டு நந்திபிரம் போங்க**
**உதகவிரு பாலி னொதுங்கிப் - பதினெண்**

**தெளிவுரை:**

நந்திதேவன் தனக்கு முன் நிற்கும் பெருகிய கூட்டத்தைக் கண்டு வெள்ளம் என எண்ணிப் பிரம்பினை எடுத்து அடிக்க ஓங்கியபோது வெள்ளம் இருபுறமும் ஒதுங்குவதால்,

**217. குலத்தோர் தம்மகுட கோடிபதி னெட்டு**
**நிலத்தோர் முடியா னெரிய – நிலத்தே**

**தெளிவுரை:**

கந்தருவர் கின்னரர் முதலிய பதினெட்டுக் குலத்தவர்கள் அணிந்துள்ள கோடிக்கணக்கான மணிமுடிகள் பதினெட்டு வேறுபட்ட மொழிபேசும் நாடுகளைச் சேர்ந்த மன்னர்கள் சூடியுள்ள முடிகளுடன் மோதிக் கொண்டு நெரியவும்,

**218. செருக்குஞ் சினேகமுற்ற தேவி யுடனே**
**இருக்குஞ் சினகரத்து ளெய்திப்பொருக்கெனப்போய்**

**தெளிவுரை:**

உலகில் செருக்கும் நட்புணர்வும் கொண்ட உமையுடன் வீற்றிருக்கும் கோயிலுக்குள்,

**219. எந்தாயென் றேத்து மிடைக்காடன் பின்போன**
**செந்தா மரைபோற் றிருத்தாளும் - வந்துமனந்**

**தெளிவுரை:**

விரைவாகச் சென்று என் தந்தையே என்று போற்றி வழிப்பட்ட இடைக்காடரின் பின் நடந்து சென்ற செந்தாமரை மலர் போன்ற திருவடிகளையும்,

**220. தேறிக் கழுத்தரியத் தென்பாண்டி – நாடனுக்கு**
**மாறித் திரும்பு மணிக்குரங்குஞ் - சீறிப்**

**தெளிவுரை:**

கால் மாறி ஆடியருள வேண்டும் என வேண்டிக் கொண்ட இராஜசேகர பாண்டியன் தன் ஆசை நிறைவேறாமையினால் தன் கழுத்தை அறுத்துக் கொள்ள முயன்றபோது அவனுக்காக இடதுகால் வலது காலாகத் திரும்பிய அழகிய துடையும்,

**221. பணிக்கற்கு மாறாப் படையுடைவாள் சேர்த்து**
**மணிக்கச் சுடுத்த மருங்கும் - துணிக்கமையத்**

**தெளிவுரை:**

போர்க்கலை கற்பிக்கும் ஒரு பணிக்கனிடம் பகைகொண்டு போர்செய்யச் சென்றபோது ஆயுதங்களும் உடைவாளும் சேர்த்து மணியால் செய்யப்பட்ட கச்சணியை இறுக்கிக் கட்டிய இடையும்,

**222. தொண்டுபடு வந்தி சொரிந்திடும்பிட் டள்ளிபள்ளி**
**உண்டுபசி தீர்ந்த வுதரமும் - அண்டுமொரு**

**தெளிவுரை:**

வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்தபோது அதனை அடைப்பதற்காக, சிவபெருமானை வணங்கித் தொண்டுபுரியும் வந்தி என்னும் கிழவி துணி நிறையக் கொடுத்த பிட்டை அள்ளித்தின்று பசி தீர்த்த வயிறும்,

**223. தாய்முலைப்பா லுண்டறியாத் தாம்பன்றிக் குட்டிகளின்**
**வாய்முலைப்பா லூட்டியபூண் மார்பமுந் - தூயமுடி**

**தெளிவுரை:**

தாம் தாயினை நெருங்கி முலைப்பாலை உண்டு அறியாத பன்றிக் குட்டிகளுக்கு வாயில் முலைப்பாலை ஊற்றிய மார்பும்,

**224. ஆணிக் கனகத் தழுத்த வழுதிக்கு**
**மாணிக்கம் விற்ற மலர்க்கையும் - காணிக்காப்**

**தெளிவுரை:**

தூய்மை உடைய தங்கத்தால் செய்யப்பட்ட மணிமுடியில் பதிப்பதற்காகப் பாண்டிய மன்னனுக்கு மாணிக்கக் கல் விற்பனை செய்த மலர் போன்ற கையும்,

225. **பூம்படலை யாத்திப் புனைமலரைப் பூணாமல்**
**வேம்பலரைப் பூண்ட வியன்புயமும் - ஓம்புகொடி**

**தெளிவுரை:**

தனக்கு உரிமை உடைய தழைகள் நிறைந்து விளங்கும் ஆத்திமலரை அணிந்து கொள்ளாமல் பாண்டிய மன்னனாக வந்து மதுரையை ஆண்டமையினால் வேம்பு மலரை அணிந்து கொண்ட பரந்த தோள்களும்,

226. **வாதிற் கரிக்குருவி வாழ்தற் குபதேசம்**
**காதிற் புகன்ற கனிவாயும் - தீதில்சொல்**

**தெளிவுரை:**

காக்கை செய்த போரினால் வருத்தம் கொண்ட கரிக்குருவி வாழ்வதற்கு அதனுடைய காதில் நற்கருத்துக்களைக் கூறிய கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயும்,

227. **வாயிலா நீயிருந்த வாழும் படியுனக்குக்**
**கோயிலாத் தந்த குழைக்காதும் - போய்வணிகப்**

**தெளிவுரை:**

தீமை இல்லாத சொற்களின் தொகுப்பாக உள்ள தமிழே! நீ தங்கி இருந்து வாழும்படி உனக்கும் கோயிலாக் கொடுத்த சங்குக் குழை அணி அமைந்த காதினையும்,

228. **பெண்ணீராள் கண்ணீர் பெருகத் தழுவித்தம்**
**கண்ணீரா லாற்றியருள் கண்களும் - தெண்ணீரார்**

**தெளிவுரை:**

வாணியர் குலப்பெண்ணின் பொருட்டாகச் சென்று அவளுடைய பெருகிய கண்ணீரைக் கண்டு அவளைத் தழுவிக் கொண்டு தம்முடைய கண்ணீரால் அவனுடைய துன்பத்தைத் தீர்த்த அருள் வழங்கும் கண்களும்,

229. **பண்சுமந்த பாட்டினுக்கும் பாவை தந்த பிட்டினுக்கும்**
**மண்சுமந்த சோதி மணிமுடியும் - கண்சுமந்து**

**தெளிவுரை:**

தெளிவான நல்ல குணங்களை உடைய மாணிக்கவாசகர் பாடிய இசைப்பாடலுக்கும் வந்தி கொடுத்த பிட்டுக்கும் வைகை வெள்ளத்தை அடைப்பதற்காக மண்சுமந்த ஒளியுடைய திருமுடியும்,

**230. கண்டுகளி கூர்ந்து கசிந்துகசிந் துள்ளுருகித்**
**தொண்டுசெய்து தாண்முடிமேற் சூடியே – மண்டும்**

**தெளிவுரை:**

கண்களால் கண்டு மகிழ்ச்சி கொண்டு மனம் கசிந்து பணிபுரிந்து திருவடி மலர்களை முடிமேல் அணிந்து கொண்டு,

**231. உடுக்குலந்தங் கோக்குலமென் றுற்றறிந்தா லென்ன**
**அடுக்கிலங்கு தீபமெதி ராகக் - கடுத்திடேல்**

**தெளிவுரை:**

நெருக்கமான விண்மீன் கூட்டங்கள் தம்முடைய தலைமையான குலத்தைச் சேர்ந்தவை என்று மனத்தால் அறிந்து வந்து நின்றதுபோல அடுக்கு அடுக்காக எரியும் விளக்குகள் எதிரில் தோற்றமளிக்கவும்,

**232. வெண்கதிருண் டுன்குலத்து வெண்மதியுண் டென்னல்போல்**
**தங்கவா ரத்தீபந் தாமசையத் - துங்கவிடை**

**தெளிவுரை:**

என்மேல் வெறுப்புக் கொள்ளாதே இறைவா! வெம்மையான கதிர்களை உடைய சூரியனும் உண்டு, உன்னுடைய குலத்தைச் சேர்ந்த வெண்ணிலவும் உண்டு என்பதைப்போல் தங்கத்தாலான விளக்கும் ஆரவிளக்கும் அசைந்து எரிந்து கொண்டிருக்கவும்,

**233. ஏங்குமொரு மீனுயர்த்தி னெங்கிருப்பே னென்பதுபோல்**
**ஆங்கிடப் மழன்றாட – நீங்கா**

**தெளிவுரை:**

மீன் கொடியைப் பிடித்திருந்தால் நான் எங்கிருப்பேன் என்பதுபோல் இடப விளக்கு செந்நிறமாகத் தோற்றம் கொண்டு அசைந்து கொண்டிருக்கவும்,

234. தருடா ம்ருகத்துரு வானார்க் குவந்தே
புருடா மருகத்தீபம் போற்ற – மருவார்

**தெளிவுரை:**

விலகாத அருள் நிறைந்த பன்றி உருமாகத் தாமே வந்ததால் மகிழ்ச்சியுடன் மனிதத்தலையும் மிருக உடலும் கொண்ட மிருக தீபம் நின்ற எரிந்து போற்றிக் கொண்டிருக்கவும்,

235. வருகுலத்தார் பானு வரனடுக்குற் றென்ன
அருகுலவுந் தட்ட தசைய - இருசுடர்க்கும்

**தெளிவுரை:**

பகைவராகத் தொடர்ந்து வந்த சூரிய குலத்தினர் வருவது கண்டு நடுக்கம் கொள்வதுபோல அருகில் உள்ள தட்டுகள் அசையவும்,

236. சொக்கருனைத் தானே சுடரென்று காட்டுதல்போல்
அக்கரா லத்தியொளி யாய்விளங்கத் - தக்கவளோ

**தெளிவுரை:**

சூரியன் சந்திரன் என்னும் இரு சுடர்களிலும் சிறந்த சுடர் என்று சொக்கரே உன்னைக் காட்டுவதுபோல் அக்கராலத்தி ஒளியுடன் எரிந்து கொண்டிருக்கவும்,

237. டெற்கும் பயந்தொளித்தா ரென்றுகங்கை தேடுதல்போற்
பொற்கும்ப தீபமெதிர் போய்வளையச் - சொற்குருகும்

**தெளிவுரை:**

தன்னுடைய மனைவியாகிய உமையம்மையுடன் எனக்கு அச்சம் கொண்டு மறைந்து கொண்டார் என்று கங்கை தேடிக் கொண்டிருப்பதுபோல அழகிய பொன் கும்பத்தில் ஏற்றிவைத்த விளக்கு எதிரே சென்று சூழ்ந்திருக்கவும்,

238. அற்பூரத் தொண்டர்க் கருண்முத்தி யீதெனல்போற்
கற்பூரத் தட்டிற் கனல்வாய்ப்பப் - பொற்பாக,

**தெளிவுரை:**

தமிழ்ச்சொற்களுக்காக மனம் மகிழ்வு கொள்ளும் அன்புகொண்ட அடியார்களுக்கு அருள் வடிவான வீடு பேறு இதுதான் என்பதுபோல் கற்பூரத் தட்டில் தீபம் எரியவும்,

**239. நங்குலத்தும் வந்துதித்தார் நாதரென்று பானுமகிழ்ந்**
**தங்குறல்போற் கண்ணாடி யங்கணுற - இங்கரசர்**

**தெளிவுரை:**

அழகு பொருந்த நம்முடைய குலத்தில் வந்து தோன்றினார் சிவபெருமான் என்று சூரியன் மகிழ்ந்து அங்கு வந்ததைப் போலக் கண்ணாடி அங்கு பொருந்தி இருக்கவும்,

**240. எங்குலத்தா ராயினா ரென்றுபிறை தோற்றுதல்போல்**
**தூங்கமுடி மேற்குடைவெண் சோதிவிடப் - பொங்கியெழும்**

**தெளிவுரை:**

இவ்விடத்தில் சிவபெருமான் எம்முடைய குலத்தவர் ஆனார் என்று பிறை கூறுவதுபோல உயர்ந்த முடியின்மே வெண்கொற்றக் குடை ஒளிவீச,

**241. முந்துகடல் வெண்டிரைகண் முன்னேமா மிக்காக**
**வந்தனபோல் வெண்சா மரையிட்ட – விந்தைசெயும்**

**தெளிவுரை:**

முன்பு பொங்கி எழுந்து வருகின்ற கடலின் வெண்மை நிறமான அலைகள் முற்காலத்தில், சிவபெருமான் தன் மாமி காஞ்சனமாலைக்காக அழைத்த அளவில் எழுந்து வந்ததுபோல வெண்சாமரைகள் வீசவும்,

**242. ஆடரவச் சித்தரிவ ராதலினா லாலவட்டம்**
**நீடரவம் போலவெதிர் நின்றாட – நாடகலா**

**தெளிவுரை:**

பாம்பைக் கொண்டு விளையாடல் செய்யும் சித்தர் இவராகையால் நீண்ட பாம்புகள் படம் எடுத்து ஆடுவதுபோல ஆலவட்டம் எதிரில் நின்று காற்று வீசவும்,

**243. வாலநறுந் தென்றனம் மன்னரென்று காண்பதுபோற்**
**கொல விசிறி குளிர்ந்தணுகக் - காலைத்**

**தெளிவுரை:**

நாட்டை விட்டுச் செல்லாத நன்மை பொருந்திய இனிய தென்றல் காற்று நம்முடைய மன்னர் இவர் என்று வந்திருந்து காண்பதுபோல அழகிய விசிறிகள் குளிர்ந்த தேவ ருடனே – மருவியெதிர்

**244. திருவனந்தன் முன்னாகச் சேவிக்குங் காலத்**
**துருவனந்த தேவ ருடனே- மருவியெதிர்**

**தெளிவுரை:**

காலை வேளையில் திருப்பள்ளி எழுச்சி முதல் உன் அடியார்கள் வந்து வணங்கும் காலத்தில் பல வடிவங்களுடன் விளங்கும் தேவர்களுடன்,

**245. போற்றுவாய் நீயும் புரோகிதரை முன்னனுப்பித்**
**தோற்றரவு செய்து துதித்ததற்பின் - ஆற்றல்**

**தெளிவுரை:**

எதிராக நின்று நீயும் இறைவனைப் போற்றி வணங்குவாய். புரோகிதர்களை முதலில் அனுப்பிவிட்டு உன் வருகையை அறிவித்து வணங்கிய பின்னால்,

**246. அரிய சிவாகமத்தோ ராதிசைவர் தம்பால்**
**உரிய படையா வொதுக்கி – அருமையுடன்**

**தெளிவுரை:**

அறிவதற்கு அரிய ஆற்றலை உடைய சிவ ஆகமத்தை உணர்ந்தவர்களாகிய ஆதிசைவர்களை அடைந்து பூசைக்குரிய பொருள்களைக் கொடுத்து ஒதுங்கி நின்று,

**247. மூவர் கவியே முதலாங் கவியைந்தும்**
**மூவராய் நின்றார்தம் முன்னோதி – ஓவாதே**

**தெளிவுரை:**

சிறப்புப் பொருந்திய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பாக்களையும் பிறர் பாடிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா,

திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவற்றையும் ஆண் பெண் அலி என மூன்று வடிவாக நின்றவராகிய சிவபெருமான் முன்பு பாடி,

**248. சீ பாத மெண்ணாத தீயவினைப் பாவிசெய்த**
**மாபாத சுந்தீர்த்த மாமருந்தைத் - தீபமணிப்**

**தெளிவுரை:**

தீவினைகள் செய்வதை விட்டு இறைவனின் திருவடிகளை நினைக்காத தீய வினைகளைப் புரிந்த ஒருவனின் பெரிய தீவினைகளைத் தீர்த்த சிறந்த மருந்தானைவரான சிவபெருமானை,

**249. பைந்நாகஞ் சூழ்மதுரைப் பாண்டியனே பாரமணிக்**
**கைந்நாகஞ் சூழ்கோயிற் கண்மணியே – மன்னாக**

**தெளிவுரை:**

விளக்கு ஒளியினைப் போன்ற நாகமணியினைக் கொண்டிருக்கும் படத்தை உடைய பாம்பு சுற்றிக்கொண்டு எல்லை வகுத்த மதுரை நகரை ஆட்சி செய்யும் பாண்டியனே! அழகிய தும்பிக்கையினைக் கொண்டிருக்கும் யானைகள் சுமக்கும் விமானத்திற்குள் வீற்றிருக்கும் கண்ணின் மணி போன்றவனே!

**250. மைக்கட் கரும்பை மருவிப் பிரியாத**
**முக்கட் கனியே முழுமுதலே – மிக்கபுனற்**

**தெளிவுரை:**

மன்னனாக எழுந்தருளி மைதீட்டிய கண்களைக் கொண்ட கரும்பினைப் போல இனியவளான தடாதகைப் பிராட்டியைக் கூடி என்றும் பிரியாத மூன்று கண்களைக் கொண்டிருக்கும் கனியாகிய சிவனே! முழுமையானவனே! முதன்மையானவனே!

**251. கங்கா நதிக்கரையே கன்னித் துறைக்கரசே**
**சிங்கா தனத்துரையே செல்வமே – எங்கோவே**

**தெளிவுரை:**

அதிகமான நீர்ப்பெருக்குடைய கங்கை ஆற்றின் தலைவனே! கன்னியாகுமரியின் நீர்த்துறைக்கு அரசனே! சிங்க ஆசனத்தின்மேல் வீற்றிருக்கும் பாண்டிய நாட்டின் அரசனே! செல்வமானவனே!

**252. நாடவிளை யாடிவந்த நற்பாவை போலடியார்**
**கூடவிளை யாடிவந்த கோமானே – தேடரிய**

**தெளிவுரை:**

என் தலைவனே! உன் தொண்டர்கள் உன்னை நினைத்த அளவில் விளையாட வந்த பாவை போல, கூட விளையாடி வந்த இறைவனே!

**253. சிந்தைமகிழ்ந் தன்புடையார் தேடியநா ளோடியெதிர்**
**வந்தவிளை யாட்டினிமேல் வாராதோ – வந்தருளால்**

**தெளிவுரை:**

தேடுவதற்கு அரிதானவர்களான உன் அடியவர்கள் மன மகிழ்ச்சி கொண்டு உன்னைத் தேடிய நாளில் அவர்கள் முன்னால் எழுந்தருளிய திருவிளையாடல்கள் இனிமேல் நடைபெறலாமோ?

**254. பாவும் புகழ்சேர் பழிக்கஞ்சி யென்றுலகில்**
**மேவும் பெயரினிமேல் வேண்டாவோ – ஆவலினால்**

**தெளிவுரை:**

மேன்மை பொருந்திய அருளுடன் முன்னாளில் பழிக்கு அச்சம் கொண்டவர் என்று உலகில் நிலவும் பெயர் இனிமேல் நீ பெற வேண்டாமா?

**255. புக்குவந்தார் தம்மேற் பொடியோட் டுளமயக்கிற்**
**சொக்கலிங்க மென்றெவருஞ் சொல்லாரோ- இக்கணைத்த**

**தெளிவுரை:**

ஆசையினால் காண வந்தவரின்மேல் பொடி போட்டு மனத்தை மயக்கினார் சொக்கலிங்கம் என்று எவரும் சொல்லமாட்டார்களா?

**256. அங்கைவே டானே யரசாள வுஞ்சிறிய**
**மங்கைதனைக் கோட்டியகொளல் வல்லமையோ – கங்கையெலாம்**

**தெளிவுரை:**

கரும்பினை வில்லாகக் கொண்டிருக்கும் அழகிய கைகளை உயைட மன்மதன் தானாக வந்து அரசாளும்படி இளமை பொருந்திய மங்கையைக் காம உணர்வினால் நீ துன்புறச் செய்வது வலிமை உடைய செயலாகுமா?

**257. நல்லமைக்கண் ணூடுவர நல்குதியே னங்கையெல்லாம்**
**வல்லசித்த ரென்றழைக்க மாட்டாளோ – நல்லவர்போல்**

**தெளிவுரை:**

கங்கை ஆற்றின் நீர்ப்பெருக்கை நல்ல மை இட்ட கண்களில் இருந்து வழியும்படிச் செய்தால் இப்பெண்ணானவள் உன்னை எல்லாம் வல்ல சித்தர் என்று அழைக்க மாட்டாள்!

**258. மைக்குவளைக் கண்ணி வளைகவர்ந்து மங்கையர்தங்**
**கைக்குவளை விற்கக் கணக்குண்டோ – திக்குவளை**

**தெளிவுரை:**

நல்லவர் போல நடித்து மை இட்ட குவளை மலரைப் போன்ற அழகிய கண்களை உடைய பெண்ணின் கையில் உள்ள வளையல்களைக் காமநோய் கொடுத்துக் கவர்ந்து கொண்டு பெண்களின் கைகளுக்கு வளையல் விற்க வருவது எந்த வகையில் நியாயம்?

**259. தோட்டாரும் வேம்பாய்த் தொடர்ந்துதொடர்ந் தேயொருதார்**
**கேட்டாரும் வேம்பாகக் கேட்டோமே – நாட்டமுற**

**தெளிவுரை:**

எட்டுத்திசையாக வளைந்து உன் தோளில் விளங்கும் வேம்பு மாலையின்மீது விருப்பம் கொண்டு உன்னைத் தொடர்ந்து வந்து மீண்டும் மீண்டும் முயற்சித்து அது கிடைக்காமையினால் அவர்களின் உள்ளம் கசந்த நிலையை அவர்கள் சொல்லக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**260. வேளையெரித் தாய்க்கியல்போ மின்னார் கலைகவர்தல்**
**காளை யிடையிருந்து கற்றதோ – மீளாது**

**தெளிவுரை:**

உன்னுடைய கண் பார்வை பார்த்த அளவில் காமனை எரித்த உனக்குப் பெண்களைக் காமத்தால் மெலியச் செய்து அவர்களின் உடைகளைக் கவர்ந்து நியாயமா? நீ அதனை ஆயர்பாடிக் கண்ணனிடம் கற்றுக்கொண்டாயோ?

**261. சென்றிலகு நாரையென்று சென்றசிவ லோகத்தே**
**இன்றெனையங் கெய்தவிட லாகாதோ – அன்றியழற்**

**தெளிவுரை:**

என்றைக்கும் மீண்டு வராமல் சிவலோகத்தே இருக்குமாறு அன்று ஒரு நாரைக்கு அருளினாய். இன்று என்னையும் உன்னுடைய சிவலோகத்திற்குள் விடக்கூடாதோ?

**262. குன்றே விருத்த குமார ரிளம்பாலர்**
**என்றேயோர் பெண்வீட் டிருக்கலாஞ் - சென்றொருநாள்**

**தெளிவுரை:**

அதோடல்லாமல் நெருப்பு மலையாய் நின்றவனே! விருத்தர், குமாரர், இளமையான பாலன் என்று உருமாறி ஒரு பெண்ணின் இல்லத்தில் இருந்தாய்,

**263. பொன்னையாள் வீடும் புகுந்திருக்க மெனினென்**
**பொன்னையாள் வீடும் பொருந்தாதோ – என்னும் மொழி**

**தெளிவுரை:**

ஒருநாள் பொன்னையாள் என்னும் பெண்ணின் வீட்டிற்குச் சென்று அங்குத் தங்கி இருந்தாய். அது அவ்வாறு என்றால் என் பொன் போன்றவளின் இல்லத்திற்கு வருவது பொருத்தம் உடைய செயல் ஆகாதோ?

**264. எல்லாந் திருச்செவியி லேறும் படியுரைக்க**
**வல்லாயுன் போலெவர்க்கு வாய்க்குமே – நல்லாள்**

**தெளிவுரை:**

நான் உன்னிடம் கூறியவற்றை எல்லாம் இறைவனின் காதில் புரியம்படிக் கூறுவதற்கு உன்னால் மட்டுமே முடியும். உன்னையன்றி வேறு யாருக்கு இவ்வாறான சொல்லாற்றல் இருக்கிறது?

**265. கருணைவிழி யாளங் கயற்கண்ணி தன்னோ**
**டருள்புரிய வாழ்ந்திருக்கு மையர் - திருமதுரை**

**தெளிவுரை:**

நற்குணமும் கருணைபொழியும் விழியும் உடைய அங்கயற்கண்ணியுடன் அருள்வழங்குவதற்காக எழுந்தருளியிருக்கும் இறைவன்,

**266. தானே சிவராச தானியென்று வீற்றிருந்தால்**
**தேனேநம் பாக்கியத்தின் செய்தியே – ஆனமையால்**

**தெளிவுரை:**

மேன்மை பொருந்திய மதுரையே சைவ மதத்தின் தலைநகரம் என்று எழுந்தருளியிருக்கும் அது நாம் செய்த புண்ணியத்தின் பலனாகும்.

**267. அந்தரலோ கத்தின்மே லானதிரு வாலவாய்ச்**
**சுந்தர மீனவனின் சொற்படியே – வந்து**

**தெளிவுரை:**

வானுலகைவிட மேலான சிறப்புகளை உடைய திருவாவவாய் என்னும் மதுரையில் உறையும் சுந்தரபாண்டியனாகிய இறைவனின் சொல்லின்படியே,

**268. துறவாதே சேர்ந்து சுகாநந்த நல்க**
**மறவாதே தூதுசொல்லி வா**

**தெளிவுரை:**

வந்து என்னைவிட்டுப் பிரியாமல் இருந்து கூடி இன்புற்று நல்ல இன்பத்தைக் கொடுக்குமாறு என்னை மறந்துவிடாமல் தூதுசொல்லி மீண்டு வருவாயாக.

**- முற்றும் -**

***

# வினா வங்கி

# பக்தி இலக்கியம்

## I. பத்திவினா

1. குறிப்பு தருக – திருஞானசம்பந்தர், ஆண்டாள்.
2. சிவபெருமானின் உருவ வர்ணனையாக சம்பந்தர் கூறுவன யாவை?
3. மாணிக்கவாசகர் இறைவனை எவ்வாறு துயிலுணர்த்துகிறார்?
4. சிறுமியர் திருமாலிடம் தம் சிற்றில்லை சிதைக்காமல் இருக்குமாறு வேண்டுவன என்னென்ன?
5. பிரிவாற்றாமையால் ஆண்டாள் வருந்திக் கூறியவை யாவை?
6. பெரியாழ்வார் கூறும் கண்ணனின் அவதாரச் சிறப்பைக் கூறுக.
7. நம்மாழ்வார் பரம்பொருளின் தன்மைகளாகக் கூறுவன யாவை?
8. திருமூலரின் அன்புடைமையை அவரது பாடல்கள் மூலம் விளக்குக.
9. குறிப்பு வரைக - சுந்தரர், மாணிக்கவாசகர்
10. பக்தி இலக்கியத்தின் தோற்றம் குறித்து விளக்குக.

## II. கட்டுரை வினா

1. ஏழாம் திருமுறை செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. கண்ணனைச் சேரும்படி ஆண்டாள் காமனிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்து கட்டுரை தருக.
3. முதலாம் திருமுறையில் திருஞான சம்பந்தர் கருத்துக்களைத் தொகுக்க.
4. ஆண்டாள் கண்ட கனவை விரித்துரைக்க.
5. தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை விளக்கி வரைக.
6. நாலாம் திருமுறையில் திருநாவுக்கரசர் கருத்துக்களைத் தொகுக்க.
7. பெரியாழ்வார் அருளிச்செய்த இறுதி ஐந்து திருமொழிகளை நும் பாடப்பகுதி கொண்டு ஆராய்க.
8. சிவவாக்கியார் பாடல்களின் அணிநயத்தை எடுத்துரைக்க.
9. நாச்சியார் திருமொழி பாடல்களின் கருத்துக்களை விவரிக்க.
10. ‘கூற்றாயினவாறு…’ எனத் தொடங்கும் பதிகத்தை விரித்து எழுதுக.